பன்னாட்டு வாணிபம்

(பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்

எம். கே. சுப்பிரமணியம், எம். ஏ.,

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்–827

பன்னாட்டு வாணிபம்

(பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்

எம். கே. சுப்பிரமணியம், எம். ஏ.,

பொருளியல் பேராசிரியர்,

சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—November, 1978

Number of Copies—2000

T.N.T.B.S. (C. P.) No. 827

© Government of Tamilnadu

INTERNATIONAL TRADE

M. K. SUBRAMANIAM

Price Rs. 7-85

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture) New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by:

Sri Aiyanar Industries,

Aminjikarai, Madras-600029.

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1969ஆம் ஆண்டி லிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன் வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறை வும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவை யான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றில், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணித வியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளி யியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்ருன பன்ஞட்டு வாணிபம் என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 827 ஆவது வெளி யீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளி யான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 862 நூல்கள் வெளி வந்துள்ளன. இந்நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச் சகத்தின் ‘மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளி யிடும் திட்ட’த்தின் கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங் களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள் அவற்றைத் தமிழில் பயிலவேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம் தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பது தான். ‘எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்’ என்னும் குறிக்கோளை நிறைவேற்றவேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெரு மக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப் புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக!

செ. அரங்கநாயகம்

முன்னுரை

'பன்னாட்டு வாணிபம்' எனும் மூலநூல் ஒன்றினை ஆக்கிடும் பணியினைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் எனக்கு அளித்தது. நானும் இப் பணியினைப் பெரு மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு, இதனைச் சிறப்பான முறையில் நிறைவேற்றிடும் நோக்குடன் முனைந்தேன்; முயன்றேன்; வேலையில் மூழ்கினேன். இளங்கலைப் பட்டப் படிப்பின் பாடத் திட்டத்திற்கு ஏற்பவும், ஒருபடி அதற்கு மேற்சென்று முதுகலைப் பட்டப் படிப்பிற்குப் பயன்படும் வகையிலும் இம் மூலநூல் அமைந்திடவேண்டும் என்ற குறிக்கோளுடன் உழைத்தேன்; பலனும் கண்டுள்ளேன்.

இந் நூல் பதினேழு அத்தியாயங்களைக் கொண்டு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் இடம் பெறும் கலைச் சொற்களனைத்தும் தொகுக்கப்பெற்று நூலின் இறுதியில் தனியே இணைக்கப்பட்டுள்ளது. ஒரு புத்தகத்திற்கு இரு முக்கிய அம்சங்கள் அமைந்திட வேண்டும். ஏதேனும் ஒரு பிரச்சினை குறித்து உடனேயே ஐயம் தீர்த்துக்கொள்ள விரும்பும் வாசகர்கள் குறிப்பிட்ட நூலைக் கையிலெடுத்தவுடன் புத்தக இறுதியில் உள்ள பொருட்குறிப்பு அகராதியைத்தான் பார்வையிடுவர். இது ஓர் அம்சம். மற்றொன்று அடிக்குறிப்பாகும். குறிப்பிட்ட பிரச்சினையைப்பற்றி ஆழமாகப் பயிலுவதற்கும், கட்டுரை ஓட்டத்தில் விவரிக்கப்பெற்ற செய்தியினைப் பற்றி மேலும் தெளிவுப்படுத்திக் கொள்வதற்கும் வாசகர்களுக்கு அடிக்குறிப்பு பெரிதும் உதவும். இவ்விரு அம்சங்களும் இப் புத்தகத்தில் உண்டு. இந் நூலைத் தொடர்பாகக் கொண்டு பயிலுவதற்கும் ஆராய்ச்சிக் கண்ணோடு மேலும் பயிலுவதற்கும் உதவிடும் மேலைநாட்டு ஆசிரியர்கள், நமது நாட்டு ஆசிரியர்கள் யாத்துள்ள நூல்களின் வரிசையை இறுதியில் தந்துள்ளேன். வரிசை சிறிதுதான், எனவே அச்சமூட்டும் நோக்கில்லை. அந் நூல் வரிசையைத் தொடர்ந்து, அதற்கு மேலும் தொடர்ந்திடும் ஆர்வமுள்ள பொருளாதாரம் பயிலும் இளைஞர்களை இந் நூல் தூண்டினால் நூலின் பயனே அதுதான் எனலாம்.

மேற்கத்திய நாடுகளிலிருந்து கிடைத்த புதிய பாடங்களையும், புதிய சிந்தனை ஓட்டங்களையும் தமிழில் படைத்திடுவதற்கு வலுவான சொல்லாட்சியும் பொருத்தமான சொல்லாக்கமும் தேவை; எளிய நடை, ஆற்றொழுக்கான நடை தேவை. சிலவேளைகளில், தமிழுக்கு முற்றிலும் புதிய—தமிழ்ச் சிந்தனை ஓட்டத்தில் எங்கும் தட்டுப்படாத—தமிழ் மொழியில் திளைத்திடாத வெளிநாட்டுச் சிந்தனைகள், செறிவுமிக்க சித்தாந்தங்கள், ஆழமான கோட்பாடுகள் ஆகியவற்றைத் தமிழ்ச் சிந்தனை ஓட்டத்தில் மூழ்கடிக்கும்பொழுது, நடையோட்டத்தில் முண்டும் முடிச்சும் ஏற்பட்டுச் சரள நடையில் தேக்கமும் பிறழ்ச்சியும் ஏற்படலாம். இவ்வாறு அமைகின்ற சொற்களும் சொற்றொடர்களும், ஏன் வாக்கியங்களும்கூடப் பழக்கத்தில் சரளமடைந்துவிடும் என்பது ஆசிரியரின் நம்பிக்கை.

இந் நூலில் இடம்பெறுகின்ற வரைபடங்களை ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரியில் எனது பொருளியல் துறையில் பணிபுரியும் துணைப் பேராசிரியர் திரு. கே. ரவீந்தரன், எம். ஏ. அவர்கள் கலையுணர்வோடும் திறனோடும் வரைந்து படைத்திட்டமைக்கு இதயங்கனிந்த நன்றி. இந்நூலைப் படைத்திட பணித்தமைக்குத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தாருக்கு எனது உளங்கனிந்த நன்றி. நியாயமான விமரிசனத்தின் அடிப்படையில் எடுத்துக்காட்டப்பெறும் குறைபாடுகளைக் களைந்திடும் பொறுப்பு எனக்கு உண்டு என்று கூறி இம் முன்னுரையை முடிக்கிறேன்.

எம். கே. சுப்பிரமணியம்
ஈரோடு

பொருளடக்கம்

பக்கம்

— பகுதி ஒன்று —

வாணிபக் கோட்பாடு

1. நாட்டு வாணிபமும் பன்னாட்டு வாணிபமும் 1
2. ஒப்புமைச் செலவுக் கோட்பாடு 8
3. பிறவாய்ப்புப் பெறுமானக் கோட்பாடும் பன்னாட்டு வாணிபமும் 29
4. ஹெக்ஷர்—ஓலின் பன்னாட்டு வாணிபப் பொருளாதாரக் கட்டமைவுக் கோட்பாடு 42
5. 'மில்' தந்த பன்னாட்டு மதிப்புக் கோட்பாடு 76

— பகுதி இரண்டு —

வாணிபக் கைகோள்

6. தடையிலா வாணிபமும் காப்பு வாணிபமும் (1) 113
7. தடையிலா வாணிபமும் காப்பு வாணிபமும் (2) 136
8. சுங்க வரிகளும் அவற்றின் விளைவுகளும் 154
9. கிடைப்புப் பங்குகள் 175
10. சந்தையில் பண்டங்களின் திணிப்பு 194
11. நாணயமாற்றுக் கட்டுப்பாடு 205

— பகுதி மூன்று —

அயல்நாட்டுச் செலுத்துநிலை

12. அயல்நாட்டுச் செலுத்துநிலை—பொருளும், கட்டமைவும், சமனாக்கலும் 227
13. அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமநிலையின்மை 245
14. நாணய மாற்றுவீத நிர்ணயம் 259

பக்கம்

— பகுதி நான்கு —

பன்னாட்டு அமைப்புகள்

15. பன்னாட்டுச் செலாவணி நிதி 283

16. உலக பாங்கு 300

17. பன்னாட்டு நீர்மை 312

மேற்கோள் நூற்பட்டியல் 322

கலைச்சொற்கள் 323

பொருட்குறிப்பகராதி 331

பகுதி ஒன்று

வாணிபக் கோட்பாடு

1. நாட்டு வாணிபமும் பன்னாட்டு வாணிபமும்

பன்னாட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகள்

ஒரு நாட்டிற்குள்ளாகவே நடைபெறும் வர்த்தகத்தை நாட்டு வாணிபம் என்றும், பல்வேறு நாடுகளுக்கு இடையே நடைபெறும் வர்த்தகத்தைப் பன்னாட்டு வாணிபம் என்றும் கூறுவர். அவ்வப்பொழுது எழுகின்ற அனைத்துலகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியிருப்பதாலும், உள்நாட்டு வர்த்தகத்திற்கு உரிய விதிமுறைகளுக்கு மாறான விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் குறித்தும், பொருளியலையே முழுதும் தெள்ளத் தெளியப் புரிந்து கொள்ள உதவுவதாலும் பன்னாட்டு வாணிபத்தை ஒரு தனி இயலாக அமைத்திடும் நிலை உருவாயிற்று.

பணம், பாங்குமுறை இவை குறித்த பிரச்சினைகளாக இருப்பினும் சரி, அல்லது கூலி, விலைவாசி இவை தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகளாக இருப்பினும் சரி, அனைத்துலகக் கண்ணோட்டத்திலிருந்து நோக்குகின்ற பொழுது, இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது மிகவும் சிக்கல் நிறைந்ததாகும். எடுத்துக்காட்டாக, பொருளாதார ரீதியாக வளர்ந்து வரும் நாடுகளில் கொடுமையான அன்னியச் செலாவணி நெருக்கடி நிலைமைகள் உருவாயின. பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்ட ஐரோப்பிய நாடுகளில், அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் (balance of payments) உபரியும் துண்டு விழுதலும் மாறி மாறி நிகழ்ந்து வருகின்றன. இவ்வாறே, ஒரே நாட்டிற்குள்ளாகக் கூலி குறித்து எழும் பிரச்சினைகள் அனைத்தும் கூலி உயர்வு சார்ந்தவை; அல்லது ஒரே மாதிரியான வேலைகளுக்கு ஒரே அளவு கூலி கொடுத்திட வேண்டும் என்ற இலட்சியத்தினைச் சார்ந்தவை எனலாம். ஆனால், பன்னாட்டு வாணிபத்தில், சார்லஸ் பி. கிண்டில்பெர்கர் (Charles P. Kindleberger) குறிப்பிடுவது போல, அயல்நாடுகளில், வக்கற்ற தொழிலாளர்களின் போட்டி நிகழ்கின்றன.

மேலும், குறிப்பிட்ட ஏதேனும் ஒரு நாட்டினை எடுத்துக் கொண்டால், விலை சார்ந்த பிரச்சினை அடிக்கடி ஏற்படுகிறது. விவசாயிகள், நகரில் வாழ்வோர், ஏனையோர் விலைவாசி ஏற்ற இறக்கங்களைக் கூர்ந்து கவனிக்கின்றனர். விவசாயிகள் முட்டுழிச் செலவினை முன்னிறுத்திச் சகாயவிலை கோருவர்; நகர் வாழ் மக்கள் வாழ்க்கைச் செலவு உயருவதைக் கண்டு பொருமுவர்; நெருக்கடிக் காலங்களில் அரசு விலைக் கட்டுப்பாடு கொண்டு வரும். பன்னாட்டு வாணிபத்தை எடுத்துக்கொண்டால், பொருளாதார வளர்ச்சி குறைந்த நாடுகள் தாங்கள் ஏற்றுமதி செய்திடும் கச்சாப் பொருள்களுக்கும், ஆதாரப் பண்டங்களுக்கும் போதுமான விலை கிடைத்திடவேண்டும் என்று கோருகின்றன. தங்களுடைய வாணிபமாற்று விகித (**terms of trade**) வீழ்ச்சி கண்டு இந் நாடுகள் கவலை கொண்டுள்ளன.

பன்னாட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகள் சிக்கல் நிறைந்து இருப்பதோடு அன்றி, அவை காலப்போக்கில் மாறிக்கொண்டும் போகின்றன. 1920ஆம் ஆண்டைத் தொடர்ந்த பத்தாண்டுகளில், போர்க்கடன்களை எவ்வாறு தீர்ப்பது என்ற பிரச்சினை எழுந்தது. 1930-களில், ஒரு நாட்டிலே நிலவும் வேலையின்மை மற்ற நாடுகளுக்குப் பரவாமல் தடுப்பது எப்படி என்ற பிரச்சினையில் நிபுணர்கள் ஈடுபட்டனர். 1940ஆம் ஆண்டிற்குப் பின்னர் வர்த்தக வளர்ச்சியில் நாட்டம் சென்றது. மேலும், அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் ஏற்பட்ட பற்றுக்குறையும், ஐரோப்பியப் பொருளாதார ஒருமைப்பாடும், வளர்ச்சியுற்ற நாடுகளுக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கும் இடையில் வாணிபத் தொடர்பு ஏற்படுத்துதலும், பன்னாட்டுப் பண அமைப்பு முறையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றமும் அனைத்துலகப் பொருளாதாரம் கவனித்திடவேண்டிய பிரச்சினைகளாயின.

பன்னாட்டு வாணிபத்தைத் தனி இயலாகக் காண்பதற்கும், அதற்கெனத் தனிக் கோட்பாடு உருவாக்குவதற்கும் அதற்கும் நாட்டு வாணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகளே காரணம் ஆகும்.

உற்பத்திச் சாதனங்களின் இடப்பெயர்ச்சி

நாட்டு வாணிபத்திலிருந்து பன்னாட்டு வாணிபம் வேறுபட்டது என்பதனை விளக்கிடும் வகையில், உற்பத்திச் சாதனங்களின் போக்கினைத் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் எடுத்தியம்புவர். உற்பத்திக் காரணிகள் உள்நாட்டிற்குள்

ளாகவே இடம்விட்டு இடம்பெயரும் வாய்ப்புடையன. ஆனால், நாடு விட்டு நாடு பெயர்ந்து செல்லும் வாய்ப்பினைப் பெறவில்லை. உள்நாட்டிற்குள்ளாகவே உற்பத்திச் சாதனங்களின் இடப்பெயர்ச்சி எளிதாக நடைபெறும் காரணத்தினால் அவற்றின் விலைகளில் ஏற்றத் தாழ்வு ஏற்படுவதில்லை. அவ் விலைகள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. ஆனால், நாடுகளுக்கு இடையே, உற்பத்திச் சாதன இடப் பெயர்ச்சியின்மை காரணமாக, அவற்றின் விலைகள் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன.

தொன்மைப் பொருளியலார் எடுத்துரைத்த இவ் வேறு பாடு இன்றைய சூழலில் எந்த அளவிற்குப் பொருத்த முடையது என்று எண்ணிப் பார்த்திடவேண்டும். உள்நாட்டிற்குள்ளாகவே, மொழி, பழக்கவழக்கங்கள், நடை உடை பாவனை, சம்பிரதாயம், மதம் ஆகியவற்றைப் பொறுத்து இடத்திற்கிடம் வேறுபாடுகள் நிலவுகின்ற காரணத்தினால் உற்பத்திக் காரணிகள், குறிப்பாகத் தொழிலாளர், மூலதனம் ஆகிய காரணிகள், இடம்விட்டு இடம் பெயரப் பெருமளவில் இயல வில்லை. இதற்கு மாறாக, நாடு விட்டு நாடு பெயருதல் ஓரள விற்கு நிகழ்கின்றன. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவிற்கும், ஆஸ்திரேலியா, அர்ஜென்டைனா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் பொருளாதார வாழ்க்கைக்கும் தொழிலாளர் இடப் பெயர்ச்சி, அதாவது தொழிலாளர்கள் குடியேறுவது தேவைப் படுகிறது. இவ்வாறே, அயல்நாட்டு மூலதனத்தைப் பெற்று, பயன்படுத்திப் பின்தங்கிய நாடுகள் வளர்ச்சிப் பாதையில் நடைபோடத் தொடங்கியுள்ளன.

உற்பத்திக் காரணிகள் உள்நாட்டிற்குள்ளாகவே இடம் விட்டு இடம் பெயர்தல் முழு அளவில் நிகழ்வதில்லை என்பதும், நாடு விட்டு நாடு பெயர்தல் ஓரளவிற்கு நிகழும் என்பதும் தெளிவு. உற்பத்திக் காரணிகளின் இடப்பெயர்ச்சி உள் நாட்டைப் பொறுத்தவரையில் அதிகமான வாய்ப்பினைப் பெற்றுள்ளது என்றும், பன்னாட்டுச் சூழலைப் பொறுத்தவரையில் குறைந்த வாய்ப்பினைக் கொண்டுள்ளது என்றும் கூறலாம். இக்காரணிகளின் இடப்பெயர்ச்சியை மையமாகக் கொண்டு பார்க்கும் பொழுது, நாட்டு வாணிபத்திற்கும் பன்னாட்டு வாணிபத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு, அளவினைச் சார்ந்த தேயன்றி, எந்தவிதமான அடிப்படையான அம்சங்களையும் சார்ந்தது அன்று என்பது தெள்ளத் தெளிவு.

வெவ்வேறான நாணயங்கள்

பன்னாட்டுப் பேரங்களில் வெவ்வேறு நாணயங்களும், உள்நாட்டுப் பேரங்களில் உள்நாட்டு நாணயங்களும் பயன் படுத்தப்படுகின்றன. எல்லா நாடுகளும் பொன் திட்டத்தின் கீழ் இயங்கி, அவற்றின் நாணயங்களின் மாற்று வீதங்கள் (exchange rates) நிரந்தரமாகவே மாறாதிருந்து, அந்த நாண யங்கள் மாற்றுரிமை (convertibility) பெற்று இயங்குகின்ற பொழுது, அந் நாணயங்களுக்கு இடையே வேறுபாடு இருக்க முடியாது. எனவே, பன்னாட்டு வாணிபத்தில் சிக்கல்கள் ஏற் படுவதற்கு வழியில்லை. பன்னாட்டுப் பேரங்களில் குழப்பமும் தொல்லையும் உருவாவதற்குக் காரணம், வெவ்வேறு நாண யங்களில் பேரங்கள் நடைபெறுகின்றன என்பதன்று; இந்த நாணயங்களின் மாற்று வீதங்கள் மாறும் தன்மை உள்ளவை என்பதுதான்.

உண்மையில், பல நாடுகள், நிருவகிக்கப்பெறும் நாணய அமைப்பினை (Managed Currency System) ஏற்படுத்திக் கொண் டுள்ளன. நாணயங்களின் மாற்று வீதங்களை அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் நிருணயிக்கின்றன. ஒவ்வோர் அரசும் தன்னுடைய நாட்டு நாணயத்தின் மாற்று வீதத்தை அவ்வப் பொழுது தேவையை அனுசரித்து மாற்றிக்கொண்டு இருக்கு மேயானால், உற்பத்திச் சாதனங்கள் நாடு விட்டு நாடு செல்வது தடையுறும்; குறிப்பாக மூலதனம் இடம் பெயராது; தன்னுடைய நாட்டிலேயே தங்கிவிடும்.

மேலும், ஒவ்வொரு நாட்டின் நாணயத்தினையும் அந்த அந்த நாட்டு மைய பாங்கே நிருவகிக்கிறது. மைய பாங்குகள் தங்களுடைய நாடுகளின் பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்பப் பணச் சார்புத் திட்டத்தினை (monetary policy) வகுத்துக் கொள்கின்றன. எனவே, நாட்டிற்கு நாடு மைய பாங்குகள் பின்பற்றுகின்ற பணச் சார்புத் திட்டங்கள் வேறுபடுகின்றன. ஆனால், குறிப்பிட்ட ஒரே நாட்டிற்குள்ளாக அதன் மைய பாங்கு பின்பற்றுகின்ற பணச் சார்புத் திட்டம் அந்த நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாகவே அமையும். இதன் காரணமாக, ஒரே நாட்டிற்குள்ளாக வாங்கும் சக்தியை ஒரு பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்கு மாற்றுகின்றபொழுது, நூற்றுக்கு நூறு வருமான விளைவும் (income effect), விலை விளைவும் (price effect) ஏற்படுகின்றன. ஆனால், நாடுகளுக் கிடையே வாங்கும் சக்தியை மாற்றும் பொழுது இத்தகைய விளைவுகள் முழு அளவில் ஏற்படுவதில்லை. இதற்குக் காரணம்,

ஒவ்வொரு நாட்டிலும் மைய பாங்குகள் பின்பற்றுகின்ற பணக் கொள்கையிலும் திட்டத்திலும் மாறுபாடுகள் ஏற்படுவதுதான் எனலாம்.

மேலே தந்துள்ள விளக்கங்களின் அடிப்படையில் பார்த்தால், பல்வேறு நாணயங்கள் பல்வேறு நாடுகளில் புழக்கத்தில் இருந்தாலும்கூட, அந் நாடுகள் பின்பற்றுகின்ற அன்னியச் செலாவணித் திட்டங்களில் (**foreign exchange policies**) வேற்றுமைகள் நிலவுகின்ற காரணத்தினுல்தான், பன்னுட்டு வாணிபம் உள்நாட்டு வாணிபகத்தினின்றும் வேறுபட்டு நிற்கிறது.

வெவ்வேருன தேசியத் திட்டங்கள்

ஒவ்வொரு நாடும் தன்னுடைய பொருளாதார, சமூக, அரசியல் தேவைகளுக்கு ஏற்பச் சில கொள்கைகளை வகுத்துத் திட்டங்களைத் தீட்டிக்கொள்கின்றன. அன்னியச் செலாவணிக் கொள்கையைக் கடைப்பிடிப்பதில் ஒவ்வொரு நாடும் தனக்கெனத் தனிவழி அமைத்துக் கொண்டுள்ள நிலையை மேலே விளக்கினேம். ஒரு நாணயத்தின் அயல்நாட்டு மதிப்பைப் போலவே, உள்நாட்டு மதிப்பும் அதற்கு உண்டு. பணம், பாங்கு முறை, அரசாங்கக் கடன் நிருவகிப்பு, அரசாங்கச் செலவு, வரிபோடுதல் ஆகிய துறைகளில் பின்பற்றப்படும் கொள்கைகள் நாணயத்தின் உள்நாட்டு மதிப்பைப் பாதிக்கும். மேலும், ஒவ்வோர் அரசும் பின்பற்றுகின்ற சுங்கவரிக் கொள்கை, கிடைப்புப் பங்குகள் அல்லது கோட்டாக்கள் (**quotas**), உதவிக் கொடைகள் (subsidies) ஏனைய வர்த்தகக் கட்டுப்பாடுகள் முதலியன பன்னுட்டு வாணிபத்தின் போக்கினைப் பாதிக்கும் வகையில் அமைந்துவிடுகின்றன. அதாவது, நாடுகளுக்கிடையே நடைபெறும் வர்த்தகத்தில் அரசாங்கத் தலையீடுகள் ஏற்பட்டுவிடுகின்றன.

இத்தகைய அரசாங்கக் குறுக்கீடுகள் உள்நாட்டு வாணிபத்திலும், உள்நாட்டுப் பொருளாதார வாழ்விலும் நிகழ்கின்றன என்பது உண்மைதான். சில பொதுக் கொள்கைகளின் அடிப்படையில், தனி நபர்கள் பாதிக்கப்படுகின்ற வகையில் உள்நாட்டில் அரசாங்கக் குறுக்கீடுகள் ஏற்பட்டுவிடுகின்றன. தற்செயலாக, நாட்டின் சில பகுதிகளும் இக் குறுக்கீடுகளால் பாதிக்கப்படுகின்றன. ஆனல், பன்னுட்டு வாணிபத்தைப் பொறுத்தவரையில், சுங்கத்தீர்வை, கோட்டாமுறை, உதவிக் கொடைகள் வழங்குதல், வர்த்தகக் கட்டுப்பாடுகள் அமைத்தல் போன்ற அரசாங்கத் தலையீட்டுக் கொள்கைகள்

பல்வேறு நாடுகளிலுள்ள தனி நபர்களைப் பாதிப்பதற்கல்ல; மாருக, பூகோள ரீதியான விளைவினை ஏற்படுத்துவதற்கு எனலாம். அதாவது, சில நாடுகளின்மீது சில விளைவுகளை உண்டாக்குவதற்கு எனலாம்.

தனிச் சந்தைகள்

மொழி, பழக்கவழக்கங்கள், சுவைகள், பண்டங்களை நிறுத்துப்பார்த்தல், அவற்றை அளந்து பார்த்தல், விற்பனை விதிமுறைகள், நாணய அலகுகள் (currency units) முதலானவை நாட்டுக்கு நாடு வேறுபட்டு இருக்கின்ற காரணத்தினுல், அவற்றின் சந்தைகளும் வேறுபட்டு உள்ளன. இத்தகைய வேற்றுமைகள் ஒரே நாட்டிற்குள்ளாகவே வெவ்வேறு பகுதிகளில் நிலவுவது உண்டு. என்ருலும், நாட்டுக்கு நாடு சந்தைகள் பெருமளவிற்கு வேறுபட்டு இருக்கின்ற காரணத்தினுல், பன்னுட்டு வாணிபம் நாட்டு வாணிபத்தினின்று வேறுபட்டுள்ளது.

அரசியல் வேறுபாடுகள்

ஒவ்வொரு நாடும் தனக்கென ஓர் அரசியல் அமைப்பினையும் முறையையும் உண்டாக்கிக் கொள்கிறது. இவ்வாறு மைய அரசியல் அமைப்பினை ஏற்படுத்திக்கொண்ட பின்னர், ஒவ்வொரு நாடும் தனது மக்களிடத்திலே தேசிய உணர்வூட்டும் நடத்தையினை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு தனி நபரும் சமூகம் முழுதும் விரவியுள்ள பல்வேறு குழுக்களைச் சார்ந்தவர்களாக இருப்பர். குடும்பம், சாதி, கிராமம் அல்லது நகரம், மதம், அரசியல் கட்சி, உத்தியோகம், கல்லூரி, மாநிலம், மொழி ஆகியவை பல்வேறு குழுக்களாக உருவெடுக்கின்றன என்ருல், இக் குழுக்களில் தனி நபர்கள் இடம் பெற்றிருப்பர். என்ருலும், அவர்கள் நாட்டுப் பற்றுடன் நாட்டிற்கே முதன்மை இடம் அளிப்பர்.

இவ்வாறு மேலே குறிப்பிட்ட வண்ணம் அமைகின்ற தேசிய உணர்வின் அடிப்படையிலே மக்கள் ஒன்றிணைகின்ற காரணத்தினுல், நாடுகளுக்கிடையில் பழக்கவழக்கங்களிலும், விருப்புவெறுப்புகளிலும், சுவையுணர்விலும் வேற்றுமைகள் இயல்பாகவே எழுகின்றன. இவ் வேற்றுமைகளின் அடிப்படையில் நாட்டுச் சந்தைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டு நிற்கின்றன. நாடுகள் பின்பற்றுகின்ற பொருளாதாரக் கைகோள்கள் நாட்டுக்கு நாடு முரண்பட்டு நிலவுவதற்கும் இதுவே காரணமாகும். இந்த அடிப்படையில்தான் பிரடிரிச் லிஸ்ட்

(**Friedrich List**) என்பாரும், 'உள்நாட்டு வர்த்தகம் நமக்கிடையில்; பன்னுட்டு வர்த்தகம் நமக்கும் பிறருக்கும் இடையில்' என்று குறிப்பிட்டார்.

முடிவுரை

(பொதுவாகவே, நாடுகளுக்கிடையில் பண்டங்கள், பணிகள், உற்பத்திச் சாதனங்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் நடைபெறும் பேரங்கள் வர்த்தகத் தடைகள் காரணமாகவும், அன்னியச் செலாவணிக் கட்டுப்பாட்டின் காரணமாகவும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இறுதியாக உரைப்பின், பணம் சார்ந்த அமைப்புகளில் உள்ள வேறுபாடுகளினுலும், வர்த்தகத் தடைக் கொள்கை, அன்னியச் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கொள்கை ஆகியவற்றைப் பொறுத்த வரையில் நாடுகளுக்கிடையே வேறுபாடுகள் நிலவுகின்ற காரணத்திஞலுமே பன்னுட்டு வாணிபம் நாட்டு வாணிபத்தினின்றும் மாறுபட்டுக் காணப்படுகிறது.) ஏனைய வேற்றுமைகள் அனைத்தும் அளவினைப் பொறுத்தனவேன்றி அடிப்படை அம்சங்களைச் சார்ந்தன அல்ல.

2. ஒப்புமைச் செலவுக் கோட்பாடு

(The Doctrine of Comparative Cost)

பன்னாட்டு வேலைப் பகுப்பு

ஒவ்வொரு நாடும் பலப்பல பண்டங்களை உற்பத்தி செய்கின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யும் பண்டங்களை ஒவ்வொரு நாடும் தனது தேவைக்கேற்பத் துய்த்து, எஞ்சியுள்ளவற்றை ஏனைய நாடுகளின் துய்ப்புத் தேவைக்கு ஏற்ற அளவிற்குப் பேரம் பேசி விற்றுவிடுதலும் ஏனைய நாடுகளிடமிருந்து தனக்குத் தேவையான பண்டங்களை விலைபேசி வாங்கிக் கொள்ளுதலும் பன்னாட்டு வாணிபம் என்று குறிப்பிடப்பெறும். இன்னும் விளக்கமாகக் கூறுவதெனில், ஒவ்வொரு நாடும் வெவ்வேறு நாடுகளிடமிருந்து தனக்குத் தேவையான பண்டங்களை இறக்குமதி செய்துகொண்டு, மற்ற நாடுகளுக்குத் தேவையான பண்டங்களை ஏற்றுமதி செய்வதனை வாணிபம் என்றும், பல்வேறு நாடுகளுக்கிடையே இது நடைபெறுவதால் பன்னாட்டு வாணிபம் என்றும் இதை விளக்கமாகக் குறிப்பிடலாம்.

பொதுவாகவே, உலகின் பல்வேறு நாடுகளில் உற்பத்தியாகும் பண்டங்கள் அனைத்துமே, ஏறத்தாழ எல்லா நாடுகளுக்குமே தேவைப்படும் என்றால் அது மிகையாகாது. இந்த அடிப்படையில் ஒவ்வொரு நாடும் தனக்குத் தேவையான பண்டங்கள் அனைத்தையும்—புதிய தேவைகள் தோன்றினால் அவற்றைப் பூர்த்தி செய்யக் கூடிய புதிய பண்டங்கள் அனைத்தையும்—தானே உற்பத்தி செய்யத் தொடங்கினால், ஒவ்வொரு நாடும் தனித்தே இயங்கித் தன்னிறைவு பெற்றுவிடும்; பன்னாட்டு வாணிபம் தேவையற்றதாகிவிடும்.

ஆனால், ஒவ்வொரு நாடும் தனக்குத் தேவையான பண்டங்கள் அனைத்தையும் தானே உற்பத்தி செய்துகொள்ளும் வாய்ப்பினைப் பெறவில்லை. அமைந்திருக்கின்ற வசதிகளைப் பொறுத்துத்தான் ஒவ்வொரு நாடும் சில பல பண்டங்களை உற்பத்தி செய்திடும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது. எந்த எந்த நாடுகள் எந்த எந்தப் பண்டங்களை உற்பத்தி செய்திடும் நல்

வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றன? ஒரு நாடு இறக்குமதி செய்திடும் பண்டங்கள் எவை? ஏற்றுமதி செய்திடும் பண்டங்கள் எவை? இத்தகைய வினுக்களுக்கு விடைகாணும் நோக்குடன் தொன்மைப் பொருளியலார் (classical economists) உற்பத்திச் செலவுகளில் எழும் வேறுபாடுகளின் அடிப்படையில் அமைந்த பன்னுட்டு வேலைப் பகுப்பு (International division of labour) கோட்பாட்டினை எடுத்துக்காட்டினர்.

ஒரு நாட்டில் கிடைத்திடும் இயற்கை வளங்கள், அமைந்திடும் தட்பவெப்ப நிலை, மக்கள் பெற்றுள்ள உள்ளார்ந்த திறமை, பயிற்சியின் மூலம் அடைந்துள்ள திறமை, நிலவிடும் மூலதனம், போக்குவரத்துச் சாதன வசதிகள், இன்னோரன்ன வாய்ப்புகளுக்கேற்ப எத்தகைய பண்டங்களைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்வது என்பது எளிதாக அமைகிறதோ, அத்தகைய பண்டங்களை உற்பத்தி செய்வதில் அந்த நாடு முனைப்புடன் ஈடுபடும். இவ்வாறு உற்பத்தி செய்த பண்டங்களைத் தனது சொந்தத் தேவையைப் பூர்த்திசெய்யப் பயன்படுத்திய பிறகு, எஞ்சியவற்றைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு, அந்த நாடுகளிலிருந்து தனக்கு வேண்டிய— ஆனல், தன்னல் ஆதாயமான முறையில் உற்பத்தி செய்ய இயலாத—பண்டங்களை அவை உற்பத்தி செய்திருப்பின், குறிப்பிட்டநாடு இறக்குமதி செய்து கொள்ளும். இவ்வாறு அமைந்திடும் நிலையைத்தான் பன்னுட்டு வேலைப் பகுப்பு என்று கூறுவர்.

கோட்பாட்டினை விளக்குதல்

இந்தப் பின்னணியில் ஒப்புமைச் செலவுக் கோட்பாடு எதனைக் குறிக்கிறது? தடையிலா வாணிகச் சூழல் (free trade) நிலவும் வேளையில், குறிப்பிட்ட சில பண்டங்களை வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி செய்வதற்காகும் உண்மைச் செலவுகளை (real costs) ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, குறிப்பிட்ட ஒரு நாடு அப்பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஒப்புமைத் தகுதியினைப் (comparative advantage) பெற்றிருப்பின், அவற்றை உற்பத்தி செய்வதில் அந்த நாடு சிறப்புத் தேர்ச்சி (specialisation) பெற்று, அப் பண்டங்களை ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடும். அதுபோலவே, உண்மைச் செலவுகளைப் பொறுத்தவரையில், வேறு சில பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஒப்புமைத் தகுதியினைப் பெறவில்லை என்ருல், அந் நாடு அப் பண்டங்களை வேறு சில நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்து கொள்ளும். இதனைத்தான் ஒப்புமைச் செலவுக் கோட்பாடு

அல்லது தராதரச் செலவுக் கோட்பாடு (**Doctrin of comparative Cost**) குறிக்கின்றது. இக் கோட்பாட்டின் அடிப்படையில் பன்னாட்டு வாணிபம் நடைபெறுவதால், உலக உற்பத்தி பெருகுவதுடன், நாடுகளனைத்தும் பயனடைகின்றன.

தொன்மைப் பொருளியலார் செலவு எனும் கருத்தியலைப் பயன்படுத்தும் பொழுதெல்லாம் உண்மைச் செலவினையே குறிப்பிடுவர். எனவே, அவர்கள் உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாட்டினைப் (**labour theory of value**) பயன்படுத்தி ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விளக்குகின்றனர். பண்டங்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படும் உழைப்பு அலகுகளைக் (**labour units**) கொண்டு தொன்மைப் பொருளியல் நிபுணர்கள் செலவுகளை, அதாவது உண்மைச் செலவுகளைச் கணக்கிட்டனர். பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஒரு நாடு கொண்டுள்ள ஒப்புமைத் தகுதியினை அளந்திட, அப்பண்டங்களை உற்பத்தி செய்திடப் பயன்படுத்திய ஒரே மாதிரியான உழைப்பு அலகுகளையும் உழைப்புச் செலவுகளையும் கணக்கிட்டனர். வாணிபத்திற்கு வந்துற்ற பண்டங்களின் தராதர மதிப்புகளைக் கணக்கிடவும் உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாட்டினை அவர்கள் பயன்படுத்தினர். வாணிபத்திற்கு வந்துற்ற பண்டங்களின் மாற்று மதிப்பு அவற்றை உற்பத்தி செய்யப் பயன்பட்ட உழைப்பின் அளவினைப் பொறுத்தது என்றும், ஒரேயளவு உழைப்பினை உள்ளடக்கிய பண்டங்களின் மதிப்பு சமம் என்றும் உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாடு விளக்குகிறது.

மேலே குறிப்பிட்ட முறையில், ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விளக்குவதற்கு உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாட்டினைப் பயன்படுத்துவது முறையானதுதான் என்று நிரூபிக்கச் சில எடுகோள்கள் (**assumptions**) இட்டுக் கொள்ள வேண்டும். அவை யாவை?

(அ) தொழிலாளர் உழைப்பு ஒன்றே உற்பத்திக் காரணியாக உள்ளது.

(ஆ) உழைப்பின் தன்மை, உழைப்பினுல் ஏற்படும் சோர்வு ஆகிய இவற்றைப் பொறுத்த வரையில், மனித உழைப்பு ஒரே மாதிரியாக அமைந்து விடுதல்.

(இ) உழைப்பு முழுமையான இடப் பெயர்ச்சி கொண்டது.

(ஈ) தொழிலாளரிடையே நிறைவுப் போட்டி நிகழ்தல்.

உலகில் உள்ளபடியே இத்தகு எடுகோள்கள் நடைமுறையில் இல்லை எனலாம். உழைப்புடன் மூலதனம் போன்ற வேறு உற்பத்திக் காரணிகளும் செயல்படுகின்றன. உழைப்பில் தர வேறுபாடும் உண்டு; அதன் தன்மையும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. தொழிலாளர்கள் எளிதாக இடம் பெயர்வதும் கிடையாது. நிறைவுப் போட்டியும் ஏட்டளவில்தான். போட்டி சாராத் தொழிலாளர் குழுக்களும் (**non-competing groups of labour**) பல உள்ளன.

எனினும், பன்னாட்டு வாணிபத்தில், வெவ்வேறு நாடுகள் பொருள் உற்பத்தியில் ஈடுபடும்பொழுது, உற்பத்திச் செலவில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. அவ் வேறுபாடுகள் முழு அளவினைச் (**absolute**) சார்ந்தோ, ஒப்புமையைச் (**comparative**) சார்ந்தோ, அல்லது சமநிலையினைச் (**equal**) சார்ந்தோ அமையும் என்பதனைத் தொன்மைப் பொருளியலார் விளக்கியுள்ளனர்.

உற்பத்திச் செலவில் முழு அளவு வேறுபாடு (Absolute difference in cost of production)

ஒரு நாட்டிற்குள்ளாகவே, வெவ்வேறு பகுதிகளுடன் ஒத்திட்டுப் பார்க்கும்பொழுது, ஒரு பகுதியில் பண்டங்களை மலிவாக உற்பத்தி செய்திடும் வாய்ப்பு மிகுதியாக இருந்திடக் கூடும். இப் பண்டங்களின் மதிப்பு, இவற்றை உற்பத்தி செய்திட உள்நாட்டிலேயே பயன்பட்ட உழைப்பின் அளவினைப் பொறுத்ததாகும். ஒரு குறிப்பிட்ட தொழில் துறையிலிருந்து வெளிவரும் பண்டத்தினை, இதனை உற்பத்தி செய்யத் தேவைப்பட்ட உழைப்பின் மதிப்பைவிடக் கூடுதலான விலையில் விற்றிடக்கூடும் எனில், வேறு துறைகளில் வேலை பார்த்திடும் தொழிலாளர்கள் அவற்றை விட்டு விலகி மேலே குறிப்பிட்ட துறைக்கு வந்துவிடுவர். இதனைத் தொடர்ந்து, பண்டத்தின் அளிப்பு (**supply**) பெருகி, இப் பண்டத்தின் உற்பத்திக்கான உழைப்பின் மதிப்பளவிற்கு விலை சரிந்துவிடும். இவ்வாறே, உழைப்பின் மதிப்பளவிற்கும் குறைந்த விலையில் பண்டம் விற்குமேயானால், தொழிலாளர் வேறு துறைகளுக்குச் சென்றுவிடுவர். இதனால் அளிப்புக் குறைந்து, உற்பத்தி உள்ளடக்கிய உழைப்பின் மதிப்பளவிற்குப் பண்டத்தின் விலை உயர்ந்துவிடும். இவ்வாறு உள்நாட்டு வாணிபத்தில் பண்டத்தின் விலையும் இது உள்ளடக்கியுள்ள உழைப்பின் மதிப்பும் எல்லாப் பகுதிகளிலும் சமமாகிவிடும். மேலும், வெவ்வேறு பகுதிகளில் தொழிலாளர் பெற்றிடும் கூலியும் ஒரே மாதிரியாக

அமைந்துவிடும். இதனைத் தொடர்ந்து, ஒவ்வொரு பகுதியும் தான் மிகவும் மலிவாக உற்பத்தி செய்த பண்டத்தை மற்றப் பகுதிகளுக்கு விற்கத் தொடங்கும். நாட்டிலுள்ள ஏனைய பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சிலபல பண்டங்களை உற்பத்திசெய்து விற்பதில், ஒரு பகுதிக்கு முழுமையான அளவிற்குத் தகுதியும் வாய்ப்பும் அமைந்திருக்கும். இதனை முழுமைத் தகுதிக் கோட்பாடு (**Theory of absolute advantage**) என்று சார்லஸ் பி. கிண்டல்பெர்கர் (**Charles P. Kindleberger**) குறிப்பிடுகிறார்.[1] உள்நாட்டு வாணிகத்துடன் இக் கோட்பாடு பொருந்தி வருகிறது. இதற்குக் காரணம், உள்நாட்டிற்குள்ளாகவே தொழிலாளர் எளிதாக ஒரு பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்குச் செல்கின்றனர் என்பதுதான்.

ஒரே நாட்டிற்குள்ளாகவே நடைபெறும் வாணிபத்திற்கு உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாடு பொருந்தி வருகிறது; ஆனால் பல்வேறு நாடுகளுக்கிடையே நடைபெறும் வாணிபத்திற்குப் பொருந்திவராது என்று தொன்மைப் பொருளியலார் கருதுவதற்குக் காரணம், தொழிலாளர்கள் வேலை தேடி நாடு விட்டு நாடு இடம் பெயர்வது அருமை என்பதுதான். எடுத்துக்காட்டாக, தொழிலாளர் கூலி, இங்கிலாந்தைவிட அமெரிக்காவில் அதிகமாக இருப்பினும், தொழிலாளர்கள் இங்கிலாந்தைவிட்டு அமெரிக்கா சென்றுவிட இயலாது. எனவே, இவ்விரு நாடுகளுக்கிடையே கூலி வேறுபாடு நிலவியே தீரும். இத்தகைய சூழ்நிலைகள் நிலவும்பொழுது, அமெரிக்காவும் இங்கிலாந்தும் எவ்வாறு ஒன்றுக்கொன்று வாணிபம் செய்துகொள்ளும் என்ற கேள்வியைத் தொன்மைப் பொருளியலார் எழுப்பினர்.

பன்னாட்டு வாணிபத்தில் இரு நாடுகள், இரு பண்டங்கள் மட்டுமே இருப்பதாகக் கொள்வோம். ஒவ்வொரு நாடும் மற்றொரு நாட்டைவிடக் குறைந்த செலவில், அதாவது, குறைந்த அளவு உழைப்பைக்கொண்டு ஒரு பண்டத்தைத் தயாரிப்பதாகக் கொள்வோம். அதாவது ஒவ்வொரு நாடும் ஒரு பண்டத்தைத் தயாரிப்பதில் அதிகத் தகுதியும் வாய்ப்பும் பெற்றுள்ளது என்றும், மற்றொரு பண்டத்தைத் தயாரிப்பதில் அவ்வளவு தகுதியோ வாய்ப்போ பெறவில்லை என்றும் கருதுவோம். எனவே, ஒவ்வொரு நாடும் உற்பத்தி செய்வதில் தகுதியும் வாய்ப்பும் உள்ள பண்டத்தை ஏற்றுமதி செய்து, தகுதியோ வாய்ப்போ குறைந்த பண்டத்தை இறக்குமதி

[1] Charles P. Kindleberger: 'International Economics'. Fourth Edition, 1968, Chap. 2, p. 20.

செய்யத் தொடங்கும். இதனைக் கீழே வரும் அட்டவணை விளக்கும்.

செலவில் முழு அளவு வேறுபாடு

பண்டத்தின் ஓர் அலகு உற்பத்திக்காகும் உழைப்புச் செலவு

நாடு	கோதுமை	ஆடை
அமெரிக்கா	4	8
இங்கிலாந்து	8	4

அமெரிக்கா கோதுமை விளைச்சலிலும், இங்கிலாந்து ஆடை நெய்வதிலும் முழுத் தகுதி பெற்றுள்ளன. எனவே, அமெரிக்கா இங்கிலாந்திற்குக் கோதுமையை ஏற்றுமதி செய்து விட்டு, இங்கிலாந்திடமிருந்து ஆடையை இறக்குமதி செய்து கொள்ளும். ஓர் அலகு கோதுமைக்கு ஓர் அலகு ஆடை சமம் என்ற மாற்று விகிதத்தில் (exchange ratio) இவ்விரு நாடுகளும் வாணிபம் அமைத்துக்கொள்ள முடியும். ஒவ்வொரு நாடும் தனித்தனியே கோதுமை ஓரலகும், ஆடை ஓரலகும் உற்பத்தி செய்ய 12 நாள் உழைப்புச் செலவு தேவைப்படும். ஆனால் முழுமைத் தகுதிக் கோட்பாட்டின் அடிப்படையில், ஒவ்வொரு நாடும் 8 நாள் உழைப்புச் செலவு மட்டும் செய்தே பரிவர்த்தனை மூலம் அதேயளவு கோதுமையையும் ஆடையையும் பெற முடியும்.

உற்பத்திச் செலவில் ஒப்புமைசார் வேறுபாடு (Comparative difference in costs)

உற்பத்திக்காகும் உண்மைச் செலவில் எழும் வேறுபாடு ஒப்புமையைச் சார்ந்தும் அமையலாம். எடுத்துக்காட்டாக, கோதுமைச் சாகுபடியிலும் ஆடை நெய்தலிலும் அமெரிக்காவில் உழைப்பு உட்கிடை (labour content) இங்கிலாந்தை விடக் குறைந்து இருப்பதாக அனுமானித்துக் கொள்வோம்.

இங்கிலாந்தைவிட அமெரிக்காவில் உழைப்புத்திறன் அதிகம் என்பது பின் உள்ள அட்டவணையிலிருந்து புலனாகிறது. இரண்டு பண்டங்களின் உற்பத்தியிலும் அமெரிக்கா

செலவில் ஒப்புமைசார் வேறுபாடு

பண்டத்தின் ஓரலகு உற்பத்திக்காகும் உழைப்புச் செலவு

நாடு	கோதுமை	ஆடை
அமெரிக்கா	8	9
இங்கிலாந்து	12	10

விற்கே முழு அளவுத் தகுதியும் வாய்ப்பும் உள்ளன. இத் தகைய சூழ்நிலையில் முழுமைத் தகுதிக் கோட்பாட்டின் அடிப் படையில் பன்னாட்டு வாணிபம் நிகழ வாய்ப்பில்லை. எனவே புதியதோர் கோட்பாடு தேவைப்பட்டது. நூற்றைம்பது ஆண்டு களுக்கு முன்னர் டேவிட் ரிக்கார்டோ (David Ricardo) ஒப் புமைத் தகுதிக் கோட்பாட்டினை (Law of comparative advantage) புதிதாக வழங்கினர்.[2]

இப் புதிய கோட்பாட்டின்படி, கோதுமையிலும் ஆடை யிலும் அமெரிக்கா முழுமையான உற்பத்தித் தகுதி பெற்றிருந்த போதிலும், ஆடையைவிடக் கோதுமைச் சாகுபடியிலேதான் மிகுதியான தகுதியினை–வாய்ப்பினைப் (greater advantage) பெற் றுள்ளது; அதாவது, ஒப்புமைத் திறனைப் (comparative advantage) பெற்றுள்ளது. எனவே, அமெரிக்கா கோதுமையை ஏற்றுமதி செய்துவிட்டு, உற்பத்தி செய்திடும் தகுதி குறை வாக உள்ள— அதாவது, ஒப்புமைசார் தகுதி குறைவாக (comparative disadvantage) உள்ள ஆடையை இங்கிலாந்தி லிருந்து இறக்குமதி செய்துகொள்ளும். இவ்வாறு நடைபெறும் வாணிபத்தினல் இவ்விரு நாடுகளுக்கும் என்ன நன்மை கிடைக்கும் ?

ஓரலகு கோதுமைக்கு ஓரலகு ஆடை சம மதிப்புள்ளது எனக்கொள்வோம். அமெரிக்கா இரு பண்டங்களையும் தானே உற்பத்தி செய்தால், ஓரலகு ஆடையை உற்பத்தி செய்ய உழைப்புச் செலவு 9 உழைப்பு (மனித) நாள்கள் தேவைப்

[2] டேவிட் ரிக்கார்டோ (David Ricardo) 'அரசியல் பொருளாதாரம், வரிவிதிப்புப் பற்றிய கோட்பாடுகள்' (Principles of Political Economy and Taxation.) ஈ. சி. கே. கோன்னர் (E. C. K. Gonner) பதிப்பித்தது. பக்கம் 108–130.

படும்;[3] ஆனால், 8 உழைப்பு நாள்களைக் கொண்டு ஓரலகு கோதுமையை உற்பத்தி செய்தால், அக் கோதுமையை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்துவிட்டு, அங்கிருந்து ஓரலகு ஆடையை இறக்குமதி செய்து கொள்ளலாம். இதனால் அமெரிக்காவிற்கு ஓர் உழைப்பு நாள் மீதமாகிறது. அவ்வாறே, இங்கிலாந்து ஆடையை மட்டும் உற்பத்தி செய்து அமெரிக்கக் கோதுமையுடன் மாற்றிக்கொண்டால், அந் நாட்டிற்கு இரண்டு உழைப்பு நாள்கள் மீதமாகும்.

எனவே, உயர்ந்தபட்ச அளவிற்கு உற்பத்தி செய்வதில் ஒப்புமைத் தகுதியினைப் (greatest comparative advantage) பெற்றுள்ள பண்டத்தையோ அல்லது குறைந்தபட்ச அளவிற்கு ஒப்புமைத் தகுதியின்மையினைப் (least comparative disadvantage) பெற்றுள்ள பண்டத்தையோ உற்பத்தி செய்வதில்தான் ஒரு நாடு தனது வளன்களைப் பயன்படுத்த வேண்டும். இறுதியாகக் கூறின், தடையிலா வாணிகச் சூழலில் ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதில், மிகவும் குறைந்த உற்பத்திச் செலவு நிலவும் நாட்டிலேயே அப் பண்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்பதில்லை என்ற உண்மையை ரிக்கார்டோவின் ஒப்புமைச் செலவுக் கோட்பாடு நிலைநிறுத்தியுள்ளது.[4]

உற்பத்திச் செலவில் சம அளவு வேறுபாடு (Equal difference in costs)

கீழே வரும் அட்டவணையைக் காண்க.

செலவில் சம அளவு வேறுபாடு

நாடு	பண்டத்தின் ஓரலகு உற்பத்திக்காகும் உழைப்புச் செலவு	
	கோதுமை	ஆடை
அமெரிக்கா	4	2
இங்கிலாந்து	8	4

[3] உழைப்புச் செலவினை நாட்கணக்கில் காட்டிடும் வகையில், உழைப்புச் செலவு 8 என்பது 8 உழைப்பு (மனித) நாள்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

[4] மாக்ஸ் ஜே. வாசர்மேன் (Max J Wasserman)- சார்லஸ் டபிள்யு. ஹல்ட்மேன் (Charles W. Hultman): *'நவீன பன்னாட்டுப் பொருளாதாரம்—அயல்நாட்டுச் செலுத்து நிலையினின்று நோக்குதல்'* (Modern International Economics — A Balance of Payments Approach, 1962), பக்கம் 259.

அமெரிக்கா இரண்டு பண்டங்களையும் இங்கிலாந்தைவிட மலிவாக உற்பத்தி செய்திடும். என்றாலும், அவ்விரு நாடு களிலும் அவற்றை உற்பத்தி செய்திடவாகும் செலவு விகிதம் **(ratio of costs)** சமமாக இருத்தலின் காரணமாக, பண்டங்களை மாற்றிக் கொள்வதில் பயனிராது. சிறப்புத் தேர்ச்சி மூலமாகக் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு பண்டத்தை ஒவ்வொரு நாடும் தயாரித்து வாணிபம் செய்திடல் பலனளிக்காது.

இதுவரையில், ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விளக்கிடும் வகையில் சில எடுகோள்களை **(assumptions)** இட்டுக் கொண்டோம். அவை பின்வருமாறு :

(அ) பணப்புழக்கம் இல்லை.

(ஆ) இரு பண்டங்கள், இரு நாடுகள் மட்டுமே உள்ளன.

(இ) கடத்துச் செலவு **(transport cost)** இல்லை.

(ஈ) இரு நாடுகளிலும் உற்பத்தி மாறா விளைவு விதிக்குக் **(Law of constant returns)** கட்டுப்பட்டு இயங்கு கிறது.

(உ) பண்டங்களின் விலைகளை அப் பண்டங்களை உற் பத்தி செய்திடவாகும் உண்மைச் செலவுகளே நிர்ணயிக்கின்றன.

(ஊ) உற்பத்திக் காரணிகள் **(factors of production)** அனைத்திலும் வேலை நிறைவு **(full employment)** நிலவுகிறது.

(எ) சந்தையில் முழுப் போட்டி நிலவுகிறது. மேலே குறிப்பிட்டுள்ள எடுகோள்களை ஒவ்வொன்றாக விடுவித்து, ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை அணுகுவோம்.

பணச் செலவில் கணக்கிடல்

பண்ட மாற்று மூலம் நடைபெறும் வாணிபத்தைச் சற்றே ஒதுக்கி வைத்துவிட்டு, பணச் சாதனம் மூலம் உள்ளபடியே நடைபெறுகின்ற வாணிபத்தை ஈண்டுக் காண்போம். பொது வாகவே, இறக்குமதி–ஏற்றுமதியாளர்கள் வாணிபத்தில் பண்டங்களின் விலையைத்தான் கருதுவார்களே தவிர, அவற்றின் மாற்றுவிகிதத்தை **(ratio of exchange)** அன்று.

பணத்தின் மூலம் பண்டங்களின் விலையைக் கணக்கிட்டுப் பேரம் பேசிடுகையில் பன்னாட்டு வாணிபத்தில் தராதர (ஒப்புமை) வேறுபாடுகள் இடம் பெறுவதில்லை; மாறாக, தனி முழு அளவு (முழுமையான) வேறுபாடுகளே (absolute diffrences) இடம் பெற்று அவ் வாணிபத்திற்கு விளக்கமாக அமைகின்றன. தராதர வேறுபாடுகள் கொண்ட உழைப்புச் செலவுகளைத் (compartive differences in labour costs) தனி முழு அளவு வேறுபாடுபாடுகளுடைய பணச் செலவுகளாக (விலைகளாக) (absolute differences in money costs) மாற்றியுள்ளதைக் கீழே வரும் அட்டவணையில் காண்க :-

நாடுகள்	பண்டத்தின் ஓரலகு உற்பத்திக்காகும் உழைப்பு அலகுகள்		ஓர் உழைப்பு அலகிற்கு ஆகும் கூலி (ரூபாயில்)	ஓரலகு பண்டத்தின் விலை (ரூபாயில்)	
	கோதுமை	ஆடை		கோதுமை	ஆடை
அமெரிக்கா	8	9	ரூ. $1\frac{1}{4}$	ரூ. 10	ரூ. $11\frac{1}{4}$
இங்கிலாந்து	12	10	ரூ. 1	ரூ. 12	ரூ. 10

அட்டவணையில் கண்டுள்ளது போல அமெரிக்காவில் கோதுமையின் தனி முழுவிலை (absolute price) குறைந்தும், இங்கிலாந்தில் ஆடையின் தனி முழு விலை குறைந்தும் உள்ளன. எனவே, உழைப்புச் செலவுகளின் ஒப்புமை வேறுபாடுகள் அடிப்படையில் முடிவெடுத்தது போலவே, இங்கும் அதே முடிவினை எடுத்திட இயலும். அதாவது, அமெரிக்கா கோதுமை வேளாண்மையிலும் இங்கிலாந்து ஆடை நெய்தலிலும் முழு நாட்டம் செலுத்திடலாம் என்பதே அம் முடிவு.

இரு நாடுகளிலும் பண்டங்களின் விலைகளை நிர்ணயிக்க அந்தந்த நாட்டில் நிலவும் பணக்கூலி வீதங்களையே (money wage rates) எவ்வித விதிக்கட்டுமின்றி தேர்ந்தெடுத்துள்ளோம். அவ்விரு நாடுகளிலும் அவ்விரு பண்டங்களின் உற்பத்திக்காகும் ஒப்புமைச் சார்பு உழைப்புச் செலவுகளால் (relative labour costs) நிர்ணயிக்கப்பெறும் உயர்ந்த பட்ச, குறைந்த

பட்ச எல்லைகளுக்குள்ளேயே அந் நாடுகளில் நிலவும் பணக் கூலி வீதங்கள் அமையும் வரையில், மேலே நாம் இயல்பாக எடுத்த முடிவுகள் பாதிக்கப்படமாட்டா.

கோதுமையை எடுத்துக் கொண்டால், உற்பத்தியில் ஈடு படுத்தப் பெறும் உழைப்பு அலகுகளைப் பொறுத்த வரையில், அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையில் உழைப்புச் செலவு விகிதம் 8:12 (அ—து) 2:3 என்றிருப்பதால், இங்கிலாந்தில் கூலி வீதம் ரூ 1-50 யை மீறி இருக்க முடியாது. மாறாக, கூலி வீதம் ரூ 1-50 யை மீறி இருப்பின், அமெரிக்காவில் கோதுமை பயிரிடுதலில் பணச் செலவும் அதன் காரணமாக விலையும் இங்கிலாந்தில் நிலவுவதைவிட உயர்ந்துவிடும். இதன் விளைவாக, அமெரிக்கா ஆடையை மாத்திரமன்றி, கோதுமையையும் சேர்த்து இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்திட வேண்டிய கட்டாயநிலை வந்துவிடும். இதனால் இங்கிலாந்தின் அயல் நாட்டுச் செலுத்துநிலை சாதகமாகி, அமெரிக்காவின் பொன் இங்கிலாந்தில் இறக்குமதியாகி, விலைவாசியும் கூலி வீதமும் முந்திய நாட்டில் இறங்கியும் பிந்திய நாட்டில் ஏறியும், மீண்டும் இந்தப் படிமுறை (process) இரு நாடுகளுக்கிடையே பணக்கூலி 2:3 என்ற விகிதத்திற்கு வந்து முடியும்.[5] இவ்வாறே இங்கிலாந்திலும் கூலி வீதம் ரூ $1\frac{1}{9}$-க்குக் கீழிறங்க முடியாது; ஏனெனில், இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையில், ஆடை உற்பத்தியில் உழைப்புச் செலவு விகிதம் 10:9 என்றிருப்பதுதான்.

கோட்பாடு குறித்து இதுவரையில் தந்துள்ள பகுத்தாய்விலிருந்து, சில முடிவுகள் கிடைக்கின்றன. பிறநாடுகளுடன் ஒத்திட்டுப் பார்க்கும்பொழுது, சாதகமான உற்பத்திச் சூழலைப் பெற்றிருக்கும் நாட்டில் தொழிலாளர் பெறும் கூலி வீதம் உயர்ந்தே இருக்கும். சாதகமாக உற்பத்தி வாய்ப்புகளே முன்னேறிய நாடுகள் அனுபவிக்கும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்குக் காரணங்களாகின்றன. சுரண்டப் பெற்ற, மலிவான தொழிலாளர் உழைப்பினைக் கொண்டு வளர்ச்சி குறைந்த நாடுகள் உற்பத்தி செய்த பொறிவழிப் பண்டங்களை (manufactured goods) இறக்குமதி செய்யும் பொழுது, அவை தம்முடைய உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்குத் தடையாக அமைந்து விடுமோ என்ற அச்சத்தினால் முன்னேறிய நாடுகள்

[5] இரு நாடுகளும் பொன் திட்டத்தை ஏற்று இயக்குகின்றன என்ற எடுகோளின் அடிப்படையில் இந்தப் படிமுறை விளக்கப்பட்டுள்ளது. பொன்திட்டம் நடைமுறையில் இல்லையெனினும், இவ் விளக்கம் பொருந்தும்.

அப் பண்டங்கள் மீது இறக்குமதி வரிகள் விதிக்கின்றன. உயரிய நுட்பவினை முறையினையும் (superior technique) பெருமளவு மூலதனப் பெருக்கத்தினையும் பெற்றுள்ளதால் வளர்ச்சியுற்ற நாடுகள் சிலபண்டங்களிலே தராதரச் செலவு நன்மையினைப் (comparative cost advantage) பெற்றுள்ளன. அதுபோலவே மலிவாகக் கிடைத்திடும் தொழிலாளர்தம் உழைப்பைப் பயன்படுத்துதலினால் வளர்ச்சி குறைந்த நாடுகள் வேறு சில பண்டங்களிலே தராதரச் செலவு நன்மையினைப் பெற்றுள்ளன. இத்தகு ஒப்புமைச் செலவு வேறுபாடுகளின் அடிப்படையில் பன்னாட்டு வாணிபம் இயங்க வேண்டுமே யன்றி, உயரிய வாழ்க்கைத்தர பாதுகாப்பு என்ற கருத்தில் இறக்குமதி வரிகள் விதிக்கப்பெறின், வாணிபம் தடையுறும்.

மேலும், இக் கோட்டின் அடிப்படையில் ஒவ்வொரு நாடும் தனித்தனியே ஒவ்வொரு பண்டத்தை உற்பத்தி செய்வதில் மட்டுமே சிறப்புத் தேர்ச்சி பெற்று ஈடுபடவேண்டும் என்பது கொள்கையன்று. வேறு பண்டங்களையும் உற்பத்தி செய்திடலாம். உதாரணமாகப், பெரிய நாடொன்றுக்கு குறிப்பிட்ட ஒரு பண்டம் உற்பத்தி செய்திடும் தராதர வாய்ப்புள்ள சிறியதோர் நாடு அப் பண்டத்தைப் பெருமளவு உற்பத்தி செய்து பெரிய நாட்டிற்குத் தேவையான அளவிற்கு ஏற்றுமதி செய்ய இயலவில்லையெனில், அப் பெரும் நாடு பற்றாக் குறையை நீக்குமளவிற்கேனும் அப் பண்டத்தினை உற்பத்தி செய்திடுதல்நலமே. எனவே, தேவையை அனுசரித்தும், நாட்டுச் சந்தையின் கொள்ளளவினையும், பண்டத்தின் இன்றியமை யாத்தன்மையையும், அதுபோலவே உற்பத்தி செய்திடும் வாய்ப்புள்ள நாட்டின் உற்பத்தி வல்லமையையும் அனுசரித்து, நாடுகள் தராதர வாய்ப்பினைக் குறைவாகப் பெற்றிருப்பினும், சில வேளைகளில் சில பல பண்டங்களை உற்பத்தி செய்திடலாம்.

வாணிபத்தில் இரண்டிற்கு மேற்பட்ட பண்டங்கள் இடம்பெறுதலும் ஒப்புமைச் செலவுக் கோட்பாடும்

பல்வேறு பண்டங்கள் பன்னாட்டு வாணிபத்தில் இடம் பெறுகின்றன என்பதே உண்மை நிலையாகும். இரு நாடுகளுக் கிடையே இரண்டிற்கு மேற்பட்ட பண்டங்கள் பரிவர்த்தனை யாகின்றன என்பது கோட்பாட்டின் உறுபொருளினைப் (substance) பாதிக்காது. இரண்டிற்கு மேற்பட்ட பண்டங்கள் வாணிபத்தில் இடம் பெறுகின்ற நிலையை இரண்டு தொகுப்பு களாகப் பிரித்துக் காட்டிடலாம். ஒவ்வொரு பண்டத் தொகுப் பிலும் பலபண்டங்கள் இடம் பெறுவதாகக் கொள்ளலாம்.

ஒவ்வொரு தொகுப்பின் உற்பத்திச் செலவினை மொத்தமாகக் கணக்கிட்டு, அதிலிருந்து சராசரி செலவினைக் கணக்கிட்டு, விடலாம். இவ்வாருக, உற்பத்தி செய்வதில் தராதர நன்மை மிக்கிருக்கும் பண்டங்கள் அனைத்தையும் அவ் வாய்ப்பினைப் பெற்றுள்ள நாடு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்துவிட்டு, தராதர நன்மையோ, தகுதியோ குறைந்த பண்டங்களை இறக்குமதி செய்து கொள்ளலாம். எனவே, ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தி செய்வதில் ஏற்படுகின்ற தராதரச் செலவு வேறு பாட்டிற்கியைந்து, ஏற்றுமதிப் பண்டங்கள் எனும் தொகுப்பும் இறக்குமதிப் பண்டங்கள் எனும் தொகுப்பும் அமையும் எனலாம். பின்னர், ஏற்றுமதி மதிப்பும் இறக்குமதி மதிப்பும் சமம் என்ற நிலை ஏற்பட்டவுடன், இருநாடுகளுக் கிடையில் வாணிபத் தொடர்பில் சமநிலை (equilibrium) ஏற்படு கிறது எனலாம்.

எனினும், உற்பத்திச் செலவில் தராதர வேறுபாடு புறக் கணிக்க வேண்டிய அளவிற்கு மிகக்குறைவாக இருப்பின், அதாவது உற்பத்தி செய்திடும் வாய்ப்பு எந்த நாட்டிற்கு உண்டு என உறுதியாகச் சொல்லமுடியாத அளவிற்கு இருப்பின், அவ்வாறு அமைந்த இடைநிலைப் பண்டங்களை (intermediate products) எந்த நாடு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யக் கூடும் என்பது பரஸ்பரத் தேவையைப் (Reciprocal demand) பொறுத்ததாகும். கீழே காணும் அட்டவணை மூலம் இதனைப் புரிந்து கொள்ளலாம்.

நாடு	ஓரலகு பண்ட உற்பத்திக்குத் தேவைப்படும் உழைப்பு அலகுகள்							
	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	......
இந்தியா	10	10	10	10	10	10	10	......
பாகிஸ்தான்	18	16	13	10	8	6	4	......

இந்தியாவில் உற்பத்திக்காகும் உழைப்புச் செலவு எல்லாப் பண்டங்களுக்கும் ஒரேமாதிரியாக 10 அலகுகளாகவும் பாகிஸ்தானில் 18, 16, 13, ... என வேறுபட்டும் உள்ளன. இந்தியா அ, ஆ, இ, ஆகிய பண்டங்களைக் குறைந்த செல விலும், பாகிஸ்தான் உ, ஊ, எ, ஆகிய பண்டங்களைக்

குறைந்த செலவிலும் உற்பத்தி செய்வதில் சிறப்புத்தேர்ச்சி (specialisation) பெற்றுள்ளன. இந்திய நாடு அ, ஆ, இ பண்டங்களைப் பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்து, பாகிஸ் தானிடமிருந்து உ, ஊ, எ பண்டங்களை இறக்குமதி செய்து கொண்டு, இவ்விருநாடுகளும் தங்கள் வாணிபத் தொடர்பில் ஏற்றுமதி, இறக்குமதிகளில் சம மதிப்பு அடைந்து, சம நிலையைக் காணமுடியும்.

"ஈ" எனும் பண்டத்தைப் பொறுத்தவரையில், இரு நாடுகளிலும் உற்பத்திச் செலவு ஒரே அளவினதாகவோ அல்லது புறக்கணிக்கத்தக்க அளவிற்கு வேறுபாடு குறைந்தோ இருப்பதால் எந்த நாடு அதனை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வது என்பது அவ்விரு நாடுகளுக்கிடையே நிலவும் பரஸ்பரத் தேவை நிலையைப் பொருத்ததாகும்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கூலி வீதங்கள் ஒரே அளவினதாக உள்ளன எனக் கொள்வோம்,. இந்த அடிப் படையில் "ஈ" எனும் பண்டத்தின் விலையும், இரு நாடுகளிலும் ஒன்ருகவே இருக்கும் எனலாம். பாகிஸ்தானுடன் ஒத்திட்டுப் பார்க்கும் பொழுது, இந்தியாவின் இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக உள்ளது எனக்கொண்டால், இந்தியாவின் அயல் நாட்டு வாணிகக் கொடுப்பல் நிலை (balamce of trade) பாதகமாகி (unfavourable) விடும். எனவே, இந்தியாவை விட்டு பாகிஸ்தானுக்குப் பொன் செல்லத் தொடங்கும். இதனைத் தொடர்ந்து இந்தியாவில் பணப்புழக்கம் குறைந்து, விலைவாசிகள் வீழ்ந்து, ."ஈ" எனும் பண்ட உற்பத்தியில் இந்திய நாடு விலையிறக்கத்தைப்பெறும். இந்தப் படிமுறையின் படி, இந்திய ஏற்றுமதிகள் உயர்ந்து, இறக்குமதிகள் குறைந்து மீண்டும் இந்திய —பாகிஸ்தான் வாணிபத் தொடர்பில் சமநிலை உருவாகும்.

முடிவாகச் சொல்வதெனில், இரு நாடுகளுக்கிடையே இரண்டிற்கு மேற்பட்ட பண்டங்களிலே நடைபெறும் வாணி பத்தில், ஒப்புமை வாய்ப்பிற்கு அல்லது தகுதிக்குத் தக்கவாறு, ஒவ்வொரு நாடும் மற்றொரு நாட்டிற்குப் பல்வேறு பண்டங்களை ஏற்றுமதி செய்திடுதல் நிகழும்.

பல நாடுகளுக்கிடையே வாணிபமும் ஒப்புமைச் செலவு கோட்பாடும்

தராதரச் செலவு குறைவாக உள்ள பண்டங்களை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்தும், வெளிநாடுகளில் தராதரச்

செலவு குறைவாக உள்ள பண்டங்களை இறக்குமதி செய்தும் ஒரு நாடு வாணிபம் செய்திடும். ஆனால், தராதரச் செலவு குறித்த விவரத்தை மட்டும் கொண்டே ஒரு நாட்டின் ஏற்றுமதி இறக்குமதிகளை நிர்ணயித்துவிட முடியாது. நாடுகளுக்கிடையே எழும் பரஸ்பரத் தேவைகளை அனுசரித்தும்தான் ஒவ்வொரு நாடும் தனக்குரிய ஏற்றுமதி, இறக்குமதிகளை நிர்ணயிக்க வேண்டும்.

பண்டம்	ஓரலகு பண்ட உற்பத்திச் செலவு (உழைப்பு அலகுகளில்)		
	இந்தியா	பாகிஸ்தான்	பர்மா
ஆடை	10	10	10
கோதுமை	20	30	40

மேலுள்ள அட்டவணையில் கண்டுள்ளபடி, கோதுமை உற்பத்தியில் பாகிஸ்தானும், பர்மாவும் அடையாத தராதரச் செலவுசார் நன்மையினை (comparative cost advantage) இந்தியா பெற்றிருக்கிறது. இந்தியாவும், பாகிஸ்தானும் அடையாத ஒப்புமை சார் வாய்ப்பினை ஆடை உற்பத்தியில் பர்மா பெற்றிருக்கிறது. ஆக, கோதுமை பயிரிடுவதில் இந்தியாவும், ஆடை நெய்வதில் பர்மாவும் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதால், அவற்றை உற்பத்தி செய்வதில் அந் நாடுகள் முழுதும் ஈடுபடும்.

ஆனால், பாகிஸ்தான் நிலையென்ன? கோதுமை உற்பத்தியில் பர்மாவைக் காட்டிலும் அதிக தகுதியும், ஆடை உற்பத்தியில் இந்தியாவைக் காட்டிலும் அதிக தகுதியும் பாகிஸ்தான் பெற்றுள்ளது எனலாம். கோதுமை, ஆடை பரிவர்த்தனைக்குரிய மாற்றுவீதம் (rate of exchange) தெளிவாகின்ற வரையில், எப் பண்டத்தினை உற்பத்தி செய்வதில் பாகிஸ்தான் முழுதும் ஈடுபடும் என்பது குறித்து முடிவெடுக்கவியலாது. மேலே குறித்துள்ள மூன்று நாடுகளுடைய பரஸ்பரத் தேவைக்குரிய பட்டியல்களைத் தெரிந்துக்கொண்ட பின்னரே, கோதுமைக்கும் ஆடைக்குமிடையில் உள்ள மாற்று வீதத்தை நிர்ணயிக்க முடியும். வாணிபத் தொடர்பு சம நிலையில் இந்தியாவைப் போலவே, பாகிஸ்தான் பர்மாவிற்குக் கோதுமை ஏற்றுமதி

செய்திடலாம்; அல்லது பர்மாவைப் போலவே, ஆடையை இந்திய நாட்டிற்கு ஏற்றுமதி செய்திடலாம்; அல்லது எப் பண்டத்திலும் வாணிபம் மேற்கொள்ளாது இருந்திடலாம். கோதுமை, ஆடை இவற்றிற்கு இடையே மாற்றுவீதம் 1:2-இல் இருந்து 1 : 3 முடிய அமையுமேயானல், பர்மாவைப்போல ஆடையை உற்பத்தி செய்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்து, கோதுமையை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளும். மாருக, மாற்றுவீதம் 1 : 3 முதல் 1 : 4 முடிய அமையுமேயானல், இந்தியாவைப்போல பாகிஸ்தான் கோதுமையை ஏற்றுமதி செய்துவிட்டு, பர்மாவிலிருந்து ஆடையை இறக்குமதி செய்துக்கொள்ளும். மாற்றுவீதம் 1:3 எனில், அவ்விரு பண்டங்களையும் பாகிஸ்தான் அதே விகிதத்தில் உள் நாட்டிலேயே உற்பத்தி செய்துக்கொள்ள முடியும். ஏனைய நாடுகளுடன் வாணிபம் நிகழாது.

இடமாற்றுச் செலவுகள் (Cost of transfer)

நாடுவிட்டு நாடு பண்டங்கள் இடம் மாறிச் செல்லும் பொழுது, கடத்துச் செலவுகள் (Transport costs), இன்சூரன்ஸ் முதலிய செலவுகள் ஏற்படுகின்றன. ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினில் இடமாற்றுச் செலவுகளின் பங்கினை ஆராய வேண்டும். இச் செலவுகளல்லாமல் வாணிபம் செய்திட நிபந்தனை $\frac{x_a}{x_b} < \frac{y_a}{y_b}$ என்பதாகும். x_a, y_a என்ற குறியீடுகள் A–நாட்டில் ஓரலகு உழைப்புச் செலவில் தயாரிக்கப்படும் x, y பண்டங்களின் அலகுகளையும்; x_b, y_b என்ற குறியீடுகள் B–நாட்டில் தயாரிக்கப்படும் x, y பண்டங்களின் அலகு களையும் குறிப்பன. இடமாற்றுச் செலவுகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ளும்பொழுது, மேலும் இரண்டு நிபந்தனைகளை விதித்துக்கொள்ள வேண்டும் :-

$$(1) \quad \frac{x_a}{x_b'} < \frac{y_a}{y_b}$$

$$(2) \quad \frac{x_a}{x_b} < \frac{y_a'}{y_b}$$

x_b' = B–நாட்டில் ஓரலகு உழைப்புச் செலவு செய்து, x–பண்ட அலகுகளை உற்பத்தி செய்து, A-நாட்டிற்கு ஏற்றுமதி செய்தல்.

y'_a = A-நாட்டில் ஓரலகு உழைப்புச் செலவு செய்து, y-பண்ட அலகுகளை உற்பத்தி செய்து, B-நாட்டிற்கு ஏற்றுமதி செய்தல்.

பணச் செலவுகளின் அடிப்படையில் விளக்கிட வேண்டுமெனில், இரு நாடுகளுக்கிடையில் நிலவிடும் தனி முழு அளவு உற்பத்திச் செலவு வேறுபாடுகள் (absolute differences in costs of production) இடமாற்றுச் செலவுகளைவிட கூடுதலாக இருந்தால்தான் குறிப்பிட்ட பண்டத்தினை ஏற்றுமதியோ, இறக்குமதியோ செய்திடல் நிகழும். மாறாக, இடமாற்றுச் செலவுகள் கூடுதலாக இருப்பின், குறிப்பிட்ட பண்டங்களில் வாணிபம் நடைபெறாது; சம்பந்தப்பட்ட நாடுகளுக்கிடையே வேலைப்பகுப்பும் விரிவடையாது; இதனால் பன்னாட்டு வாணிபம் பாதிக்கப்படலாம். பண்டங்களெல்லாம் தராதர வாய்ப்பும், தகுதியும் மிக்க நாடுகளில் உற்பத்தியாகி, நாடுகளுக்கிடையே கடத்துச் செலவே இல்லாது, பரிவர்த்தனையானால் எல்லா நாடுகளுடைய சமூக உற்பத்தி பலன் (social product) உச்ச நிலையில் இருக்கும். என்றாலும், ஹேபர்லர் (Haberler) குறிப்பிடுவதுபோல, கடத்துச் செலவினைப் பற்றியே கருதாமல் பன்னாட்டு வாணிபம் நடைபெற்றாலும் அது நன்மையே பயக்கும்; ஏனெனில், கடத்துச் செலவினால் ஏற்படும் இழப்பைவிட பன்னாட்டு வேலைப்பகுப்பினால் விளையும் நன்மை மிகுதியாக இருக்கும் என்பது திண்ணம்.

மாறும் உற்பத்திச் செலவுகளின் (Variable costs of production) பங்கு.

மாறா உற்பத்திச் செலவு (constant cost of production) நிலவும் பொழுது, இறுதிநிலைச் செலவும் (marginal cost) சராசரிச் செலவும் (average cost) சமமாக இருக்கும். எனவே, தராதரச் செலவு வேறுபாட்டினைக் கொண்டே எந்த நாடு எப்பண்டத்தில் தராதரத் தகுதி பெற்றுள்ளது என்பதைக் கணக்கிட இயலும். ஆனால், உற்பத்தியானது மாறும் செலவுகளினால் (variable costs) கட்டுண்டு இருக்கும்பொழுது, தராதர இறுதிநிலைச் செலவு, வேறுபாட்டினைக் (difference in comparative marginal cost) கொண்டுதான் பண்டங்களை உற்பத்தி செய்வதில் நாடுகளுக்கிடையே நிலவும் உற்பத்தித் தகுதியை நிர்ணயிக்க வேண்டும். வளர்ந்துசெல் செலவுவிதி (law of increasing cost) செயல்படும் பொழுது, பன்னாட்டு வாணிபத்தில் நிலவியல் சார்ந்த வேலைப்பகுப்பின் எல்லை நோக்கு (scope) குறைந்துவிடும். எடுத்துக் காட்டாக, அமெரிக்கா கோதுமைச்

சாகுபடியிலும் இங்கிலாந்து ஆடைநெய்தலிலும் தேர்ச்சித் திறன் (**specialisation**) பெற்றுள்ளன என்றும், வளர்ந்து செல் செலவு விதிப்படி உற்பத்தி நிகழ்கிறது என்றும் எடுகோள் இட்டுக் கொள்வோம். அமெரிக்காவில் கோதுமை உற்பத்தியைப் பெருக்குவதில் உற்பத்திச் செலவு ஏறும். உற்பத்தி குறையக் குறைய செலவு இறங்கும். ஆனால், நேர்மாறாக இங்கிலாந்தில் கோதுமை உற்பத்திச் செலவு குறையும். ஆடை உற்பத்திச் செலவு அதிகரிக்கும். அதன் காரணமாக, தராதரச் செலவு வேறுபாடு குறுகிக் கொண்டே வந்து, இறுதியில் அவ்விரு நாடுகளுக்கிடையில் தராதரச் செலவுகள் சமனாகி விடும். இந்தநிலை வந்தபிறகு, அந் நாடுகள் தேர்ச்சித்திறனை வளர்த்திட முடியாது. இதற்குக் காரணம் மாறும் உற்பத்திச் செலவு, அதாவது வளர்ந்துசெல் செலவு விதி செயல்படுவதுதான் எனலாம். ஆனால், குறைந்துசெல் உற்பத்திச் செலவு நிலவினால், தராதரச் செலவு வேறுபாடு மேலும் மேலும் பெருகி, பன்னாட்டு வாணிபம் இன்னும் வளர்ந்தோங்கும். முடிவு என்னவெனில், நாடுகளுக்கிடையே சிறப்புத்தேர்ச்சியும் பன்னாட்டு வாணிபமும் குறைந்துசெல் செலவு விதி இயங்கும் பொழுது பெருமளவிற்கும், மாறா செலவு விதி செயல்படும் பொழுது கணிசமான அளவிற்கும், வளர்ந்துசெல் செலவு விதி நிலவிடும்பொழுது குறைந்த அளவிற்குமே வளர்வன.

மேலும், கிரகாம் (Graham) அவர்கள் ஒரு கருத்தினை ஈண்டு வலியுறுத்துகிறார். வளர்ந்துசெல் செலவு விதிக்குக் கட்டுப்பட்ட தொழிற்றுறைகளில் ஒப்புமைத் தகுதியும், குறைந்துசெல் செலவு விதிக்கு அடங்கிய தொழிற்றுறைகளில் ஒப்புமைத் தகுதி குறைவும் உள்ள நாட்டில், ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டின் அடிப்படையில் எப் பண்டங்களில் சிறப்புத் தேர்ச்சியுறுவது என்பதைக் கணிக்க முடியாது. கோதுமை உற்பத்தியில் வளர்ந்துசெல் செலவும், ஆடை நெய்தலில் குறைந்துசெல் செலவும் நிகழ்வதாகக்கொள்வோம். அமெரிக்காவில் 50 அலகுகள் கொண்ட கோதுமையும், 45 அலகுகள் கொண்ட ஆடையும் நிகரென்றும், இங்கிலாந்தில் 50 அலகுகள் கொண்ட கோதுமையும், 50 அலகுகள் கொண்ட ஆடையும் நிகரென்றும் கொண்டால், அமெரிக்கா கோதுமையில் தராதரத் தகுதியும், இங்கிலாந்து ஆடை உற்பத்தியில் தராதரத் தகுதியும் பெற்றுள்ளன எனலாம். மேலும், இங்கிலாந்தில் கோதுமை, ஆடை ஆகிய பண்டங்களின் உற்பத்தியில் மாறாச் செலவும், அமெரிக்காவில் கோதுமை உற்பத்தியில் வளர்ந்துசெல் செலவும், ஆடையில்

குறைந்துசெல் செலவும் நிலவுவதாகக் கொள்வோம். இன்னும், பன்னாட்டு மாற்று விகிதம், கோதுமை 50 அலகுகள் = ஆடை 50 அலகுகள் எனக்கொள்வோம்.

கோதுமையில் தராதரத் தகுதி பெற்றிருப்பதால் அமெரிக்கா 4500 அலகுகள் ஆடை உற்பத்தியைக் குறைத்து, ஆடைத் தொழிலிருந்து கோதுமை உற்பத்திக்குச் சாதனங்களைத் திருப்பிவிட்டால், கோதுமை உற்பத்தி 5000 அலகுகள் அதிகரிக்கவேண்டும். ஆனால், கோதுமை உற்பத்தியில் வளர்ந்துசெல் செலவு நிலவுவதால், அவ்வுற்பத்தி 4550 அலகுகள் மட்டுமே உயரும் எனக்கொள்ளலாம். பன்னாட்டு மாற்று விகிதத்தின்படி, 4550 கோதுமை அலகுகளுக்கு 4550 ஆடை அலகுகள் கிடைத்திடும்.

இப்பொழுது ஆடை நெய்தலில் என்ன விளைவு ஏற்படும் என்பதை ஆராய்வோம். ஆடை நெசவில் குறைந்துசெல் செலவு நிலவுகிறது என்ற எடுகோளின் அடிப்படையில் நோக்கின், அமெரிக்காவில் ஆடை உற்பத்தி குறையக் குறைய, உற்பத்திச் செலவு உயர்ந்து செல்லும். அதனால், 4500 ஆடை அலகுகள் உற்பத்தி செய்ததற்கு மாறாக, முந்திய அளவு சாதனங்களையே பயன்படுத்தினாலும், 4300 ஆடை அலகுகளை மட்டுமே தற்பொழுது உற்பத்தி செய்திட இயலும். இந்த 4300 ஆடை அலகுகளின் உற்பத்தியை ஐக்கிய அமெரிக்கா குறைத்துவிட்டு, இரண்டாவது கட்டத்தில் விடுவிக்கப்பெற்ற உற்பத்திச் சாதனங்களைக் கோதுமை விளைச்சலுக்குத் திருப்பிவிட்டால், கோதுமை 4350 அலகுகள் உயரலாம். பன்னாட்டு வாணிப மாற்று விகிதத்தின்படி, 4350 அலகுகள் கொண்ட ஆடை கிடைத்திடும்.

இத்தகைய சிறப்புத் தேர்ச்சி முறையின் பொருள் என்ன? இரண்டு கட்டங்களிலும் திருப்பிவிடப்பெற்ற உற்பத்திச் சாதனங்களை ஆடை நெய்தலுக்கே பயன்படுத்தினால் 4500 + 4500 = 9000 அலகுகள் கொண்ட ஆடை கிடைத்திடும். கோதுமைச் சாகுபடிக்குத் திருப்பிவிட்டதன் விளைவாக, 4550 + 4350 = 8900 ஆடை அலகுகளே பன்னாட்டு வாணிப மாற்று விகிதத்தின்படி அமெரிக்காவிற்குக் கிடைக்கும். மொத்த இழப்பு 100 ஆடை அலகுகளாகும். எனவே, உற்பத்திச் செலவு விதிகளின் போக்கு, பன்னாட்டு வாணிப ரீதியாக ஒவ்வொரு நாடும் வெவ்வேறு பண்ட உற்பத்தியில் பெற்றுள்ள ஒப்புமைத் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில்,

ஒப்புமைச் செலவு விதியினைப் பயன்படுத்தி எந்தெந்த நாடு எந்தெந்த பண்டங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளது என்பதைக் கணிப்பது சிக்கல் நிறைந்ததாகிவிடுகிறது.

கிரகாம் வகுத்துள்ள எடுகோள்களின் அடிப்படை எந்த அளவிற்கு உண்மை நிலைக்குப் பொருந்தியுள்ளது என்பதைப் பொறுத்தே நாம் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலும். இங்கிலாந்திலே இரு தொழிற்துறைகளிலும் மாறு செலவு விதி நிலவுவதாகவும், அமெரிக்காவிலே ஒன்றில் வளர்ந்துசெல் செலவு விதியும், பிறிதொன்றில் குறைந்துசெல் செலவு விதியும் செயல்படுவதாகவும் கிரகாம் இட்டுக்கொண்ட எடுகோள்கள் உண்மைக்குப் புறம்பானவை எனலாம். பொதுவாகவே, விவசாயத்தில் வளர்ந்துசெல் செலவு விதியும், தொழில் நுட்பத் திறனைப் (technology) பயன்படுத்தும் வாய்ப்பினை மிகுதியாகப் பெற்றுள்ள தொழிற்றுறைகளில் குறைந்துசெல் செலவு விதியும் செயல்படுவதாகக் குறிப்பிடுவர். எனினும், அதனையே நிரந்தர உண்மையாகக் கொள்ளத் தேவையில்லை. கிரகாம் குறிப்பிட்ட எடுகோள்கள் விலக்கப்படின், நிலைமைக்கேற்ப அமெரிக்கா பன்னாட்டு வாணிபத்தில் பலனடையும் வாய்ப்பு உருவாகும். வளர்ந்துசெல் செலவு நிலவுகின்ற தொழில்களை மேற்கொண்டுள்ள அமெரிக்கா அத் தொழில்களிலேயே சிறப்புத் தேர்ச்சியுறும் வகையில் செயல்படும்பொழுது, பன்னாட்டு வாணிபத்தில் அந் நாடு எவ்வித இழப்பும் அடையாதவாறு காத்திடும் பல்வேறு சூழ்நிலைகளை (situations), நேர்வு வகைகளை (cases) நாம் எடுத்துக்காட்டிட முடியும். கிரகாம் ஆராய்ந்த நிகழ்வினம் (case) விதிவிலக்கென கருதலாமேயன்றி, இயல்பான பொது விதியெனக் கருதமுடியாது.[6]

தாம் எடுத்துக்கொண்ட நிகழ்வினத்தில், கிரகாம் சராசரி செலவினை ஆதாரமாகக் கொண்டு பகுத்தாய்ந்தே முடிவு எடுத்தார். ஆனால், இறுதிநிலைச் செலவு அடிப்படையில் தமது நேர்வு வகையினை (case) அணுகியிருப்பின், ஒன்று தெளிவாகும். அதாவது, ஐக்கிய அமெரிக்காவிற்கு இழப்பு ஏற்படுமுன் கோதுமையில் சிறப்புத் தேர்ச்சி மேலும் மேலும் பெற்று உற்பத்தியினைப் பெருக்கிடுதல் நின்றுவிடும். அகச்சிக்கனங்களின் காரணமாக, ஆடைத் தொழிலில் செலவினம் குறைந்துகொண்டே போகுமேயானல், இந் நிலையும், போட்டி நிலையும் இணைவொத்தியலக்கூடியன அல்ல

[6] கே. ஆர். குப்தா (K. R. Gupta) : ''பன்னாட்டுப் பொருளாதாரம்'' (International Economics) நான்காம் பதிப்பு, 1972 (ப. 12-13)

(incompatible); எனவே, ஆடை நெய்திடும் நிறுவனம் ஒன்றே சர்வாதீனத் தொழிலாக மாறிவிடும். இச் சர்வாதீனம் ஆடை நெய்தலிலிருந்து, நஷ்டம் ஏற்படக் கூடிய கோதுமை வேளாண்மைக்கு உற்பத்திச் சாதனங்களைத் திருப்பிவிடாது.

புறச்சிக்கனங்களின் காரணமாக ஆடைத்தொழிலில் செலவுகள் குறைந்து செல்லுமேயானுல், இதனை முன்னிறுத்தி உற்பத்திச் சாதனங்களைப் பகிர்வதில்லை. ஆடை உற்பத்தி பெருகுவதனுல் இறுதிநிலைச் செலவு குறைவதனையும், கோதுமை உற்பத்தி பெருகுவதனுல் இறுதிநிலைச் செலவு உயருவதனையும் உற்பத்தியாளன் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. இத் தகைய சூழ்நிலைகளில், இறுதிநிலைச் செலவுகளில் ஏற்படும் மாற்றங்கள் தொழிலில் **(industry)** உள்ள தனி நிறுவனங்களின் **(firms)** உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதில்லை. எனினும், புறச் சிக்கனங்கள் தொழில் நுண்ணியலைச் **(technological)** சார்ந் திருப்பின், கிரகாம் ஆய்ந்து விளக்கிய நிகழ்வினம் உண்மை யாகவே செயல்படலாம்.[7]

[7] மேல்வரும் புத்தகம், ப. 14.

3. பிறவாய்ப்புப் பெறுமானக் கோட்பாடும் பன்னாட்டு வாணிபமும்

(Theory of Opportunity Costs and International Trade)

சென்ற அத்தியாயத்தில் தொன்மைப் பொருளியலாரின் ஒப்புமைச் செலவு கோட்பாடு (தராதரச் செலவு கோட்பாடு) பன்னாட்டு வாணிபத்தில் வகித்திடும் பங்கினை ஆய்ந்தோம். பண்டங்களின் விலையை உண்மை உற்பத்திச் செலவே நிர்ணயிக்கிறது என்ற எடுகோளின் அடிப்படையில் அக் கோட்பாடு உருவாகியது என்றுங் கண்டோம். உண்மை உற்பத்திச் செலவு என்பது உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாட்டிலிருந்து பெறப் பட்டதாகும். ஆனால், உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாடு நடைமுறைக்குப் பொருந்தி வரவில்லை. தொழிலாளர்களனை வரும் ஒரே மாதிரியான திறமையோ, தரமோ, உழைப்புத் திறனோ உடையவரல்லர் ; ஒரே மாதிரியாக, ஒரேயளவு பயன் தரத்தக்கவண்ணம் உழைத்திடுவோருமல்லர். மேலும், ஒரே அளவு கூலிபெறும் ஒரே மாதிரியான தொழிலாளர் வர்க்கம் என்பதாக ஒன்றில்லை எனலாம். மாறாக, பல்வேறு துறைகளில் பல்வேறு வகைத்தாய தேர்ச்சியும் திறனும் பெற்று, போட்டி யிட்டுக்கொள்ளவியலாதத் தனித்தனிக் குழுக்களாகத் (non-competing groups) தொழிலாளர்கள் இயங்குகின்ற நிலையில், குறுங்காலத்தில்கூட அவர்களுடைய கூலிகளைச் சமன் படுத்திவிட முடியாது என்பது தெளிவு.

மேலும், உற்பத்திக்குக் காரணம் உழைப்பு மட்டுமன்று; முதலீடும் நிலமும், தொழில் துணிவும் தேவை. இரு பண்டங் களின் தராதர விலையை (relative prices) நிர்ணயிக்க அப் பண் டங்களின் உற்பத்திக்கான உழைப்பின் அளவைக் கணக் கிடுதல் தவறான விலை நிர்ணயமாகும். ஓரலகு உழைப்பினைப் பயன்படுத்தி உற்பத்தியாகும் பெட்ரோலுக்கு ஆகும் மூலதனம் ஆடை உற்பத்திக்காகும் மூலதனத்தைவிட அதிகமாகும்;

இறைச்சியுணவு உற்பத்திக்காகும் நிலம், செருப்பு உற்பத்திக்காகும் நிலத்தைவிட அதிகமாகும். சுருங்கக் கூறின், பல்வேறு பண்டங்களின் உற்பத்திக்குப் பல்வேறு வீதாச்சாரங்களில் உற்பத்திக் காரணிகள் இணையவேண்டியுள்ளன. எனவே, உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாடானது நடைமுறைக்கு ஒத்து வராது. உண்மை நிலைக்குப் பொருந்திவராத உழைப்புச் செலவு அல்லது உண்மைச் செலவு எனும் கருத்தின் அடிப்படையில் எழுந்த ஒப்புமைச் செலவு கோட்பாட்டினை ஒதுக்கி வைத்துவிட்டு, பேராசிரியர் காட்ஃபிரிட் ஹேபர்லர் (Gottfried Haberler) பன்னாட்டு வாணிகத்தினை விளக்கிட பிறவாய்ப்புப் பெருமானக் கோட்பாட்டினைத் (இழந்த வாய்ப்புக் கிரயக் கோட்பாடு) (Theory of opportunity costs) தந்துள்ளார்.[1]

மாறா பிறவாய்ப்புப் பெறுமானம்

ஹேபர்லர் தன் கோட்பாட்டினை விளக்கிட உற்பத்தி சாத்தியக் கோடுகளைப் (production possibilities curves) பயன்படுத்துகிறார்.[2] அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இருநாடுகளின் உற்பத்தி சாத்தியங்களை வரைபடம் (3.1) விளக்கிடும். அமெரிக்காவில் உற்பத்திக் காரணிகளனைத்தையும் பயன்படுத்தி 20 மீட்டர் துணியையோ அல்லது 12 கிலோகிராம் கோதுமையையோ உற்பத்தி செய்திடலாம் என்றும்; இங்கிலாந்தில் அதன் உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தி 12 மீட்டர் துணி அல்லது 4 கி.கி. கோதுமை உற்பத்தி செய்திடலாம் என்றும் கொள்வோம். வரை படத்தில் கிடைஅச்சு துணியையும், செங்குத்தச்சு கோதுமையையும் அளப்பதாகக் கொள்வோம். மாறா பிறவாய்ப்புப் பெறுமானம் (**constant opportunity costs**) நிலவுவதாக எடுகோள் இட்டுக்கொண்டுள்ளதால், அவ்விரு நாடுகளின் உற்பத்தி சாத்தியக் கோடுகள் நேர்கோடுகளாக அமைந்துள்ளன.

அமெரிக்காவைப் பொருத்த வரையில், உற்பத்திக் காரணிகள் 20 மீட்டர் துணி அல்லது 12 கி. கி. கோதுமையை உற்பத்தி செய்யுமெனில், அந் நாட்டில் 1 மீட்டர் துணியின் பிறவாய்ப்புப் பெறுமானம் $\frac{3}{5}$ கி.கி. (600 கிராம்) கோதுமை ஆகும். அதாவது, உற்பத்திக் காரணிகளைத் துணியிலிருந்து கோதுமை உற்பத்திக்குத் திருப்பிவிடும்பொழுது 600 கிராம்

[1] காட்ஃப்ரிட் ஹேபர்லர் : "பன்னாட்டு வாணிபக் கோட்பாடு" Gottfried Haberler: "The Theory of International Trade" 1936 (அதிகாரம் 12)

[2] உற்பத்தி சாத்தியக் கோடுகளை உற்பத்தி பதிலீட்டுக் கோடுகள் (production substitution curves) என்றும் குறிப்பிடுவர்; (Transformation curves) என்றும் குறிப்பிடுவர்.

கோதுமையைப்பெற 1 மீட்டர் துணியை விட்டுக்கொடுக்க நேரிடும் என்று பொருள். மேலும், உற்பத்தி சாத்தியக்கோடு நேர்கோடாக இருப்பதால் அதனையே விலைக் கோடாகவும் கொள்ளலாம். துணியும், கோதுமையும் 20 : 12 என்ற விலை விகிதத்தில் பரிவர்த்தனையாகும். இதேபோல, இங்கிலாந்தைப் பொறுத்தவரையில், 1 மீட்டர் துணியின் பிறவாய்ப்புப்



வரைபடம் 3 - 1

உற்பத்தி சாத்தியக் கோடுகள்,
மாறு பிறவாய்ப்புப் பெறுமானம்.

பெறுமானம் $\frac{1}{3}$ கி. கி. கோதுமைக்குச் சமமாகவும். இவ்விரு பண்டங்களின் விலை விகிதம் 12 : 4 என்பதாகவும் உள்ளன. உழைப்பினை மட்டும் உற்பத்திக்கு ஆதாரமாக்கி, உழைப்புச் செலவினையே பன்னாட்டு வாணிபத்தினை விளக்கிடப் பயன் படுத்திய தொன்மைப் பொருளியலாரின் போக்குக்கு மாறாக, உற்பத்திக்காரணிகள் அனைத்தும் உற்பத்தியில் ஈடுபடும்

என்ற உண்மை நிலைக்கு ஏற்ப, பிறவாய்ப்புப் பெறுமானத்தின் அடிப்படையில் மாற்று விகிதத்தினை நிர்ணயித்துப் பன்னாட்டு வாணிபத்தை விளக்கிடும் உத்தியை ஹேபர்லர் கையாண்டுள்ளார்.

இப்பொழுது அமெரிக்காவிற்கும், இங்கிலாந்திற்கும் இடையில் எவ்வாறு வாணிபம் அமையும் என்பதை ஆராய்வோம். வரைபடம் (3.2)-இல் அவ்விரு நாடுகளுடைய உற்பத்தி சாத்தியக் கோடுகள் இரண்டையும் ஒரே அளவுகோலுக்கு



வரைபடம் 3-2

மாறு பிறவாய்ப்புப் பெறுமானத்தில் பன்னாட்டு வாணிபம்

அமைத்துள்ளோம். அறுபது மீட்டர் துணியின் பிறவாய்ப்புப் பெறுமானம் அமெரிக்காவில் 36 கி. கி. கோதுமை எனில், இங்கிலாந்தில் 20 கி. கி. மட்டுமே என்றாகிறது.

இங்கிலாந்து 30 மீட்டர் துணியும், 10 கி.கி. கோதுமையும் நுகர்வதாக எடுகோள் இட்டுக்கொள்வோம். வரைபடம் (3.2)-இல் உற்பத்தி சாத்திய விலைக்கோட்டில் உள்ள 'R' எனும் புள்ளி இதனைக் குறிக்கும். அமெரிக்காவுடன் வாணிபத் தொடர்பு கொள்ளுமுன் உள்ள நிலை இது. ஆனால், வாணிபத்

தொடர்பு ஏற்பட்ட பின்னர், இங்கிலாந்து 60 : 20 எனும் தனது உள்நாட்டு விலை விகிதத்திலல்லாமல் 60 : 36 எனும் அமெரிக்க விலை விகிதத்திலேயே வாணிபம் செய்தால், இங்கிலாந்தின் துய்ப்பு 'R' எனும் புள்ளியிலிருந்து அமெரிக்க உற்பத்தி சாத்திய விலைக்கோட்டிலுள்ள 'S' எனும் புள்ளிக்கு உயர்ந்து விடும். இங்கிலாந்து துணி உற்பத்தியிலேயே முழுதும் ஈடுபட்டு 60 மீட்டர் உற்பத்தி செய்து, அதில் 20 மீட்டரை ஏற்றுமதி செய்துவிட்டு, அமெரிக்காவிலிருந்து 12 கி. கி. கோதுமையைப் பெறும். இங்கிலாந்தின் துய்ப்பு வாணிபத் தொடர்புக்கு முன்னர் (30 மீட்டர் துணி + 10 கி.கி. கோதுமை) ஆகவும், வாணிபத் தொடர்பு ஏற்பட்ட பின்னர் (40 மீட்டர் துணி + 12 கி.கி. கோதுமை) ஆகவும் உயர்ந்துள்ளன. வரை படத்தில் (3.2) இங்கிலாந்தின் 60 மீட்டர் துணி உற்பத்தியை அம்புக்குறியும், அதன் துய்ப்பினை 'S' எனும் புள்ளியும், அதன் ஏற்றுமதி, இறக்குமதிகளைப் புள்ளித் தொடராலான கிடைநிலை, செங்குத்துக் கோடுகளும் குறிப்பிடுவன. புள்ளித் தொடராலான கோடுகளால் உருவாகும் செங்கோண முக்கோணத்தின் நெடுங்கைவரையின் (hypotenuse) சரிவே (slope) அமெரிக்க விலைக்கோடாகவும், இங்கிலாந்தின் ஏற்றுமதி-இறக்குமதி விகிதத்தினைக் குறிப்பதாகவும் அமைந் துள்ளது. இவ் வாணிபப் பரிவர்த்தனையில் அமெரிக்காவிற்கு எவ்வித ஆதாயமும் இல்லை. அமெரிக்க உற்பத்தியில் மட்டும் மாற்றம் ஏற்பட்டது. அமெரிக்காவின் கோதுமை விளைச்சலில் 12 கி.கி. அதிகரித்தது; துணி நெசவில் 20 மீட்டர் குறைந்தது.

இரு நாடுகளுக்கும் பன்னாட்டு வாணிபத்தினால் ஆதாயம் ஏற்படும் வகையில், புதிய விலை விகிதம் அமைவதை வரை படம் (3.3) விளக்குகிறது. இங்கிலாந்து விலை விகிதம் 60 : 20-க்கும், அமெரிக்கா விலை விகிதம் 60 : 36-க்கும் இடைப் பட்ட விலை விகிதம் 60 : 28-இல் வாணிபம் நடைபெறுவதால் அவ்விரு நாடுகளுக்கும் ஆதாயமே.

வளர்ந்துசெல் பிறவாய்ப்புப் பெறுமானம்

சில உற்பத்திக் காரணிகளும், மூலவளன்களும் சில பண்டங்களின் உற்பத்தியில் சிறந்து விளங்குகின்றன; வேறு சில பண்டங்களின் உற்பத்தியில் அவை சிறந்து விளங்குவ தில்லை. எல்லா உற்பத்திக் காரணிகளும், மூலவளன்களும்

எல்லாவிதப் பண்டங்களின் உற்பத்தியிலும் சிறந்து விளங்குவதில்லை. இத்தகைய சூழ்நிலையில் வளர்ந்துசெல் செலவே உற்பத்தியில் நிலவும் எனலாம்.



வரைபடம் 3-3 மாறா சிறவைப்புப் பெறுமானத்தில் பன்னாட்டு வாணிபம்

வளர்ந்துசெல் செலவு நிலவுகையில், உற்பத்தி சாத்தியக் கோடு வரைபடம் (3.4)-இல் உள்ளதுபோல, மூலத்தை (origin) நோக்கிக் கவிந்திருக்கும் (concave).



வரைபடம் 3-4

வளர்ந்துசெல் சிறவாய்ப்புப் பெறுமானத்தில் உற்பத்தி சாத்தியக் கோடு

AB எனும் உற்பத்தி சாத்தியக் கோட்டில் L, T புள்ளிகளுக்கிடையிலுள்ள பகுதியில் கோதுமையும், துணியும் ஒன்றுக்கொன்று பதிலாக மாற்றிக்கொள்ளவியலும். ஆனல், L-க்கு இடப்புறம் துணிக்குப் பதிலாக கோதுமை புறக்கணிக்கத்தக்கவண்ணம் மிகக் குறைவாகவே கிடைத்திடும். இதற்குக் காரணம், துணி உற்பத்தியிலிருந்து அக் கட்டத்தில் விடுவிக்கப் பெறும் உற்பத்திக் காரணிகள் கோதுமைப் பயிரிடுதலுக்கு ஏற்றதாக இல்லாதிருத்தலே எனலாம். அதுபோலவே, T-க்கு வலப்புறம் கோதுமைக்குப் பதிலாக துணி மிகக் குறைவாகவே கிடைத்திடும் என்பதற்குக் காரணம், கோதுமை வேளாண்மையிலிருந்து விடுவிக்கப்பெறும் நிலம் போன்ற சாதனங்கள் துணி நெய்தலுக்குப் பொருந்தாமைதான் எனலாம்.

வளர்ந்துசெல் பிறவாய்ப்புப் பெறுமானம் நிலவுகையில், உற்பத்தி சாத்தியக்கோடு விலைக் கோடாகாது. எனவே, கோதுமை–துணி விலை விகிதத்தை உற்பத்தி சாத்தியக் கோட்டின் மூலம் காணவியலாது. வரைபடம் (3.5)-இல் PP எனும் விலைக் கோடு X, Y அச்சுகளுக்கிடையில் வரையப் பட்டுள்ளது.



வரைபடம் 3-5 வளர்ந்துசெல் பிறவாய்ப்புப் பெறுமானத்தில் உற்பத்தி

PP-எனும் இவ் விலைக் கோட்டின் சரிவு கோதுமை–துணி விலை விகிதத்தைக் குறிக்கும். இவ் விலைக்கோடு உற்பத்தி சாத்தியக் கோட்டினை (AB) எப் புள்ளியில் தொட்டுக்கொண்டு

(tangential) செல்கிறதோ அப் புள்ளியே (T) கோதுமை–துணி உற்பத்தியளவைக் குறிக்கும். உற்பத்தி சாத்தியக் கோட்டிலுள்ள m எனும் புள்ளி கோதுமை–துணி ஆகிய பண்டங்களின் உற்பத்தியளவைக் குறித்திடுமெனில், PP-எனும் விலைக்கோடு மூலம் தெரியவரும் விலை விகிதத்திற்கும் m மூலம் தெரியவரும் கோதுமை–துணி உற்பத்திக்கும் பொருந்திவரவில்லை எனலாம். எப்படியெனில், P-P விலை விகிதத்தின்படி ow-கோதுமையும், OC-துணியும் உற்பத்தியாகுமெனில், அதே விலை விகிதத்தையே m எனும் புள்ளி குறித்திடும் (OW^1 கோதுமை + OC^1 துணி) உற்பத்தியளவிற்குப் பொருத்திப் பார்த்தால் துணியுடன் ஒப்பிடும்பொழுது மிகப் பெருமளவு கோதுமையும், கோதுமையுடன் ஒப்பிடும்பொழுது மிகக் குறைந்த அளவு துணியும் உற்பத்தியாகியுள்ளன என்ற முடிவிற்கு நாம் வர நேரிடும். மேற்குறிப்பிட்ட விலையில், விற்கப்படாத கோதுமை ww^1 அளவும் தேவை பூர்த்தியுறுத துணி cc^1 அளவும் நிலவும். கோதுமையில் உபரி, துணியில் பற்றுக்குறை என்ற நிலை மாறிடும் வகையில், m-குறித்திடும் உற்பத்தி நிலைபெறும் வகையில், விலையில் மாற்றம் ஏற்பட்டிட வேண்டும். இந் நிலையில் கோதுமையைவிட துணியின் மதிப்பு கூடுதலாக உள்ளதால், உற்பத்திச் சாதனங்களும் மூல வளன்களும் கோதுமை பயிரிடுதலிலிருந்து விலகி துணி நெய்தலுக்கு வந்து சேர்ந்துவிடும். உற்பத்தியும் m-புள்ளியிலிருந்து நகர்ந்து T-புள்ளியினை வந்தடையும். T-புள்ளியில் மூலவளன்கள் அனைத்தும் கோதுமை வேளாண்மைக்கும், துணி நெசவிற்கும் தேவையான அளவிற்கு உத்தம அளவில் (optimum) பங்கிடப்பட்டும் பயன்படுத்தப்பெறும். அப் புள்ளியில், இறுதிநிலை உற்பத்தி மாற்று வீதமும் (marginal rate of transformation in production) இறுதிநிலை வாணிப மாற்று வீதமும் (marginal rate of transformation through trade) சமமாக இருக்கும்.

வளர்ந்துசெல் பிறவாய்ப்புப் பெறுமானம் நிலவுகையில்; பன்னாட்டு வாணிபம் எவ்வாறு நடைபெறும் என்பதை வரைபடம் (3.6) விளக்கிடும். வாணிபம் துவங்கிடு முன்னர் இங்கிலாந்தில் கோதுமை–துணி விலை விகிதம் P–P ஆகும், உற்பத்தியை Z-எனும் புள்ளி குறித்திடும். வாணிபம் துவங்கிய பின்னர், கோதுமையைப் பொருத்து துணியின் விலை உயர்ந்துவிட்டதாக அனுமானிக்கப்பெறுகிறது. துணி விலை உயர்ந்துவிட்டதை P^1–P^1 விலை விகிதம் குறித்திடும். அதாவது, P^1–P^1 விலை விகிதத்தின்படி, குறிப்பிட்ட அளவுள்ள துணிக்குத் தற்பொழுது கூடுதலான கோதுமை கிடைத்திடும் என்பது

எடுகோள். ஆகவே, இங்கிலாந்தில் உற்பத்திச் சாதனங்கள் கோதுமைச் சாகுபடி செய்வதைவிட்டு விலகி, துணி நெய்தலுக்கு வந்துசேரும். உற்பத்தி z-எனும் புள்ளியிலிருந்து



வரைபடம் 3-6

வளர்ந்துசெல் பிறவாய்ப்புப் பெறுமானத்தில் பன்னாட்டு வாணிகம்

நகர்ந்து T-எனும் புள்ளியினை வந்தடையும். இங்கிலாந்து துணியை ஏற்றுமதி செய்துவிட்டு, கோதுமையை இறக்குமதி செய்துக்கொள்ளும். இவ்வாறு, உற்பத்திச் சாதனங்கள் கோதுமை உற்பத்தியிலிருந்து துணி உற்பத்திக்கு மாறிச் சென்று, இறுதியில் உற்பத்தி சாத்தியக்கோட்டினை விலைக் கோடானது தொட்டுச் சென்றிடும் (tangential) புள்ளியில் (T) உற்பத்தி நிலைபெற்றுவிடும். அப் புள்ளியில் இறுதிநிலை உற்பத்தி மாற்று வீதமும், விலைக்கோடும் சமமாகிவிடும்.

T-எனும் புள்ளிக்கு இடப்புறமாக P^1–P^1 விலைக் கோட்டில் U-எனும் புள்ளியில் இங்கிலாந்தின் துய்ப்பு நிகழ்கிறது எனக்கொள்வோம். U-எனும் துய்ப்புப் புள்ளிக்கு இங்கிலாந்தின் தேவை நிலையே காரணம் எனக்கொள்வோம். T-எனும் புள்ளியில் இங்கிலாந்தின் கோதுமை உற்பத்தி OW_1 ஆகவும், துணி உற்பத்தி OC_1-ஆகவும் உள்ளன. C_2C_1 துணியை ஏற்றுமதி செய்துவிட்டு, W_1W_2 கோதுமையை இறக்குமதி செய்துகொண்டு, இங்கிலாந்து U-எனும் புள்ளி குறித்திடுவதுபோல, OW_2 கோதுமையையும் OC_2 துணியையும்

துய்க்கும். C_1C_2, W_1W_2 ஆகிய அளவுகள் முறையே QT, QU எனும் அளவுகளுக்குச் சமமாதலால், P^1P^1-விலை விகிதத்தில் இவை ஒன்றுக்கொன்று சமமாற்று கொண்டவை. இவ்வாருக, வாணிபத்திற்கு முன்னர் உற்பத்தி செய்த கோதுமை, துணி (OW_2+OC_3) ஆகியவற்றைவிட பன்னாட்டு வாணிபத்தின் விளைவால் அவற்றைக் கூடுதலாகவே $(OW_2^{\prime}+OC_2)$இங்கிலாந்து துய்க்கிறது.

வளர்ந்து செல் செலவு நிலவும் பொழுதும் பன்னாட்டு வாணிபம் நடைபெறும் என்பதை இதுகாறும் விளக்கினோம். வளர்ந்துசெல் செலவு செயல் படுதலின் காரணமாக ஒரு பண்டத்தினை உற்பத்தி செய்வதில் முழு ஈடுபாடு கொண்டு சிறப்புத் தேர்ச்சியுறல் இயலாது என்பதை முன்னரே விளக்கி யுள்ளோம். இதனை ஓர் உதாரணம் மூலம் ஈண்டு விவரிப் போம். இங்கிலாந்தில் துணி நெய்தலுக்குப் பொருந்தாத உற்பத்திச் சாதனங்கள் அத் தொழிலுக்கு ஈர்க்கப்பட்டமை யால் உற்பத்திச் செலவு உயர்ந்தது. அதுபோலவே, கோதுமை பயிரிடும் தொழிலுக்குப் பொருந்தாத சாதனங்கள் அத் தொழி லிருந்து விடுவிக்கப்பட்டமையால் அங்கும் உற்பத்திச் செலவு குறையலாயிற்று. இதற்கு நேர்மாருக அமெரிக்காவில் நிகழ்ந்தது; இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய இருநாடுகளில் ஏதேனும் ஒரு பண்டத்தில் சிறப்புத் தேர்ச்சியுறல் நிகழு முன்னர், அவ்விரு நாடுகளிலும் செலவு விகிதங்கள் சமமாகி விட்டன.

வளர்ந்துசெல் செலவு விதி நடைமுறையில் உள்ள இரண்டு நாடுகளுடைய உற்பத்தி சாத்தியக் கோடுகள் ஒரே மாதிரியாக இருந்த போதிலும் வாணிபம் நடைபெறும் என்பதை வரைபடம் (3.7) விளக்கிடும்.

X Y எனும் உற்பத்தி சாத்தியக்கோடு (production possiblity curve) A, B எனும் இரு நாடுகளுக்கும் ஒன்றே. ஆனால், துய்ப்பு சார்ந்த சம நோக்குக் கோடுகள் வேறுபடு கின்றன. துய்ப்புசார் சமநோக்குக் கோடுகள் A-நாட்டில் aa' 'ஆகவும் B-நாட்டில் bb' ஆகவும் உள்ளன. இவ்வாறே இரு நாடுகளிலும் விலைவிகிதக் கோடுகள் (AA^1, BB^1) வேறு படுகின்றன. X, Y பண்டங்களின் தராதர விலைகளை அந்தந்த நாட்டினுடைய விலைக்கோடுகளுடைய, அதாவது விலை விகிதக் கோடுகளுடைய சரிவுகள் குறிக்கின்றன. AA^1, BB^1

எனும் விலைக்கோடுகளுடைய சரிவுகள் வேறுபடுகின்ற காரணத்தினால், அவ்விரு நாடுகளுக்கிடையில் வாணிபம் நடைபெறும் என்பதுறுதி.



வரைபடம் 3-7

ஒரே மாதிரி உற்பத்தி சாத்தியக் கோடுகளில் வாணிக வாய்ப்பு

மற்றொரு நிகழ்வினத்தை ஈண்டுக் காண்போம். உற்பத்தி சாத்தியங்களும் துய்ப்புசார் சமநோக்குக் கோடுகளும் இரு நாடுகளுக்கிடையே வேறுபட்ட போதிலும், விலைக்கோடுகள் ஒரேயளவு சரிவு உடையனவாக இருப்பின், வாணிபம் நிகழாது. இதனை வரைபடம் (3.8) விளக்கிடும். உற்பத்தி சாத்தியக் கோடுகளை ஆராயும்பொழுது, A–நாட்டில் X–பண்ட உற்பத்தியிலும் B–நாட்டில் Y–பண்ட உற்பத்தியிலும் சிறப்புத் தேர்ச்சியுறல்கூடும் எனத் தெரிகிறது. ஆனால் சமநோக்குக் கோடுகளை நோக்கின், A–நாட்டில் X–பண்டம் பெருமளவும், Y–பண்டம் சிறு அளவும், B–நாட்டில் Y–பண்டம் பெருமளவும் X–பண்டம் சிறு அளவும் தேவைப்படுகின்றன. இதனால் A–நாட்டில் X–பண்டத்தின் உற்பத்திச் செலவும் B–நாட்டில் Y–பண்டத்தின் உற்பத்திச் செலவும் உயரத்தொடங்கி, இறுதியில் இரு நாடுகளிலும் உள்ள தேவையில் உள்ள வேறுபாடுகளின் காரணமாகவே உற்பத்திச் செலவுகளின் வேறுபாடுகளும் மறைந்து விலைக்கோடுகளின் சரிவுகளும் ஒரே மாதிரி சம அளவுடையனவாகி, வாணிபம் தடையுறும்.

மதிப்பீடு

பிறவாய்ப்புப் பெறுமான அணுகுமுறையில், உண்மைச் செலவு அணுகுமுறைக்கு உரிய குறைபாடுகளைக் களைந்த போதிலும், தேவை அணுகுமுறையை மேற்கொள்ளும். தேவை



வரைபடம் 3-8

ஒரே மாதிரி விலைக் கோடுகளில் பன்னாட்டு வாணிபம்

அணுகுமுறையை மேற்கொள்ளும் பொழுது சில புதிய குறை பாடுகள் தோன்றுகின்றன. தனிநபர் சார்ந்த சமநோக்குக் கோட்டினை வரைவதில் மாறு வருமான எடுகோள் இட்டுக் கொள்வதில் குறை ஏற்படுவதில்லை. ஆனால் சமூகத்தினையே பிணைத்துச் சமநோக்குக்கோடு வரையும்பொழுது, மாறு வருமான எடுகோள் இட்டுக் கொள்வதில் குறை ஏற்படுவதில்லை. ஆனல், சமூகத்தினையே பிணைத்துச்சமநோக்கும் கோடுவரையும் பொழுது, மாறு வருமான எடுகோள் இட்டுக்கொண்டாலும் சமூக முழுவதிற்கும் ஒரே சம நோக்குக்கோடு பொருந்திவராது. சமூகத்தின் மொத்த வருமானத்திலே மாற்றமோ பங்கிடுதலால் மாற்றமோ ஏற்படும்பொழுது தனி நபர்களின் விருப்பத் தரா தரங்களும் மாறுவன. எனவே, வெவ்வேறு சமநோக்குக் கோடுகள் சமூக முழுவதையும் பிரதிபலிக்கும் வகையில் வரைய நேரிடும். ஒன்றையொன்று அக் கோடுகள் ஊடறுத்துக் கொள்ள நேரிடும். சமநோக்குக் கோடுகள் ஒன்றை ஒன்று

வெட்டிக்கொள்வதாகக் கொண்டால், இக் கோடுகளில் எது உயர் துய்ப்பு நிலையைக் குறித்திடும் எனக் கண்டுபிடிப்பது இயலாது.

உற்பத்தி சார்ந்த சமநோக்கும் கோடுகளை வரையும் பொழுது, உற்பத்திக் காரணிகளின் அளிப்பு மாரு திருப் பதாக எடுகோள் இட்டுக் கொள்வது உண்மைக்குப் புறம் பானது. ஏனெனில், விலைகளைப் பொறுத்தே உற்பத்திக் காரணிகளின் அளிப்பு மாறும். பண்டங்களின் தேவை நிலையை அனுசரித்தும் பண்டங்களை உற்பத்தி செய்வதற்குச் சாதனங் களைத் தேர்ந்தெடுத்தலை அனுசரித்தும், இருவேறு பண்டங் களின் உற்பத்தியில் உற்பத்திக் காரணிகள் பங்குபெறும்.

மேலும், உற்பத்தி சார்ந்த சமநோக்குக் கோடுகளை வரைவதில் புறச் சிக்கனங்களோ, அகச் சிக்கனங்களோ கருத்தில் கொள்ளப்படவில்லை என்ற எடுகோளும் நடை முறைக்கு மாருனது. நிறைவுப்போட்டி (perfect competition) அனுமானமும் பிரத்தியட்ச உண்மையன்று.

உண்மை நிலைக்குப் புறம்பான எடுகோள்களின் அடிப் படைமீது பிறவாய்ப்புப் பெறுமான கோட்பாடு காட்டப் பட்டிருந்தாலும் உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாட்டினையும் அதிலிருந்து பெறப்பட்ட உண்மைச் செலவினையும் நடை முறைக்கு ஒத்துவராது என ஒதுக்கிவிட்டு, உற்பத்திக் காரணிகள் அனைத்தும் ஒரு நாட்டின் உற்பத்தி சாத்தியத்தில் (production possibility) இடம் பெறுதலைக் கணக்கில் எடுத்துக் கொண்ட உத்தி ஹேபர்லருடைய சிறப்பு எனலாம்.

4. ஹெக்ஷர்-ஓலின் பன்னாட்டு வாணிப பொருளாதாரக் கட்டமைவுக் கோட்பாடு

(Heckscher-Ohlin Theory of International Trade and Economic Structure)

முன் விளக்கம்

தராதரச் செலவுகளிலுள்ள வேறுபாடுகளின் காரணமாகவே, பன்னாட்டு வாணிபம் நடைபெறுவதாக ஒப்புமைச் செலவுக் கோட்பாடு கூறுகிறது. ஆனால், அக் கோட்பாடு தராதரச் செலவுகளில் வேறுபாடுகள் தோன்றக் காரணமென்ன என்பதனை ஆராயவில்லை. ஹெக்ஷரும், ஓலினும் ஒப்புமைச் செலவு வேறுபாடுகளுக்கான காரணங்களைத் தங்கள் கோட்பாடு மூலம் விளக்குகின்றனர். ஆனாலும், ஒப்புமைச் செலவு கோட்பாடும். ஹெக்ஷர்–ஓலின் பன்னாட்டு வாணிபக் கோட்பாடும் ஒன்றையொன்று தழுவி நிற்பனவேயன்றி, ஒன்றுக்குப்பதில் மற்றொன்றாகவோ, ஒன்றுக்கொன்று முரண்பாடு கொண்டதாகவோ இல்லை. உண்மையில், ஹெக்ஷர்-ஓலின் கோட்பாடு தராதரச் செலவுக் கோட்பாட்டின் துவக்கம் எனலாம்.

எனினும், தமது நூலில் பெர்டில் ஓலின் (Bertil Ohlin) தொன்மைப் பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டினைப் பன்மடங்குச் சந்தை விலை நிர்ணயக் கோட்பாட்டின் (multiple market theory of pricing) அடிப்படையில் அணுகுகிறார்.[1] உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாட்டின் பிடியிலிருந்து பன்னாட்டு வாணிபத்தை விடுவித்துவிட்டதாகவும் அவர் நம்புகிறார். எனினும், தொன்மைப் பொருளாதாரக் கோட்பாட்டின் விரிவாக, விளக்கமாகவே ஓலின் கோட்பாடு அமைந்துள்ளது

[1] பெர்டில் ஓலின் (Bertil Ohlin): "உள்நாட்டுப் பகுதிகளிடை வாணிபமும் பன்னாட்டு வாணிபம்" (Inter regional and International Trade).

என்றே டொனல்டுசன் (Donaldson) நம்புகிறார். மேலும், பாரிடோ (Pareto) தமது படைப்பில் ஓலின் கோட்பாட்டினைத் தொன்மைப் பொருளாதார நிபுணர் தம் கோட்பாட்டினின்று பிரித்துக்காட்டவில்லை.[2]

இன்னும், வைனர் (Vainer) குறிப்பிடும் கருத்தும் இங்குக் கருதத்தக்கது. உற்பத்தியில் ஒரு நாடு சிறப்புத் தேர்ச்சி யுறுதலை விளக்கிடும் ஓர் இயல்முறைக் கோட்பாடாகத் (positive theory) தராதரச் செலவுக்கோட்பாடு இல்லை என்பதனையும், மாறாக அக் கோட்பாடு இல்லை என்பதனையும், மாறாக அக் கோட்பாடு சேமநல அமைப்பினைச் சார்ந்த ஒன்று என்பதனை யும் ஓலின் உணரவில்லை என்பதாக வைனர் கருதுகிறார்.[3] உண்மை அல்லது உழைப்புச் செலவிற்குப் பதிலாகப் பணச் செலவு அடிப்படையில் ஒப்புமைச் செலவுக் கோட்பாடு ஆராயப்படுவதுதான் பிரச்சினை எனின், பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டு வரலாற்றில் ஓலின்-ஹெக்ஷர் படைப்பு, பத்தோடு பதினொன்றாகச் சேருமேயன்றி, பெரிய மாறுதலைச் சுட்டிக் காட்டுவதாகாது. ஏனெனில், தொன்மைப் பொருளாதார நிபுணர்களே வாணிபத்தின் போக்கினை விளக்கிடும் வகையில் உழைப்புச் செலவிற்குப் பதிலாக, உற்பத்தியின் பணச் செலவினைக் கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளனர். எனினும், ஓலின் – ஹெக்ஷர் படைப்பின் சிறப்பு என்னவெனில், பன்னாட்டு வாணிபம், உற்பத்திக் காரணிகளின் பகிர்வு, வருமானப் பகிர்வு ஆகிய இவற்றிற்கு இடையேயுள்ள தொடர் பினைத் தங்கள் கோட்பாட்டில் கையாண்டமைதான் எனலாம்.

எடுகோள்கள்

மேற்சுட்டிக்காட்டப்பெற்ற தொடர்பினை விளக்கிடும் வண்ணம் 1919–ஆம் ஆண்டு ஸ்வீடனில் ஹெக்ஷர் எழுதிய ஆய்வினைப் பின்பற்றி ஓலின் அவர்களும் தம்முடைய பகுத் தாய்வினை வழங்கினார். ஓலின் – ஹெக்ஷர் படைப்பு பல எடுகோள்களின்மேல் எழுப்பப்பட்டதாகும். மாறு விலைகள், உற்பத்திக் காரணிகளின் தன்மையிலோ, தரத்திலோ எவ்வித அழுத்தமான மாற்றங்களும் இல்லாமை, தற்காலிக மாற்றங்கள் நிகழும்பொழுது தடுமாற்றங்கள் ஏற்படாமை போன்ற எடு

[2] ரிச்சார்டு ஈ. கேவ்ஸ் (Richard E. Caves): "வாணிபமும் பொருளா தாரக் கட்டமைவும்-மாதிரியங்களும் முறைகளும்" ("Trade and Economic Structure-Models and Methods") ப. 23.

[3] வைனர் (Vainer): "பன்னாட்டு வாணிபக் கோட்பாடு குறித்த ஆய்வுகள்" ("Studies in the Theory of International Trade") ப. 501-507.

கோள்கள் இட்டுக்கொள்ளப்பட்டன. வெவ்வேறு உற்பத்தி படிமுறைகளில் வெவ்வேறு விகிதாச்சாரங்களில் உற்பத்திக் காரணிகள் வேலைக்கமர்த்தப்படுகின்றன. அவ்வாறு வேலைக் கமர்த்தப்படும் உற்பத்திக் காரணிகளின் விகிதாச்சாரங்களின் மீது உற்பத்தியளவின் (scale of production) விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை என்பதாகவும் எடுகோளிடப்பட்டுள்ளது. தன் வாணிபத்தின் அளவை மாற்றி உலகச் சந்தையில் நிலைப் பெற்றிருக்கும் விலைகளை ஒரு நாடு மாற்றிட இயலாது என்றும் எடுகோளிடப்பட்டுள்ளது. வெவ்வேறு பண்டங்களின் உற்பத்தி சார்புகள் (production functions) வேறுபட்டிருப்பினும் ஒவ்வொரு பண்டத்திற்கும் இரு நாடுகளிலும் அவை ஒரே மாதிரியாக இருப்பதாக அனுமானிக்கப்பட்டுள்ளது. மேலும், இடப்பட்டுள்ள எடுகோள்களில் நிறைவுப்போட்டி, இரு நாடுகளுக்கிடையில் மட்டும் வாணிபம், உள்நாட்டில் உற்பத்திச் சாதனங்களின் இடப்பெயர்ச்சி, நாடுகளுக்கிடையே அவற்றின் இடப்பெயர்ச்சியின்மை ஆகியவைகளும் இடம் பெற்றுள்ளன. கடத்துச் செலவும், இன்சூரன்சும், சுங்கத் தீர்வைகளும் இல்லையென்பதாகவும் பாவிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் மேலாக, உற்பத்திக் காரணிப்பேறு (factor endowments), தேவைநிலை (conditions of demand), உற்பத்தி நிலை (conditions of production) இவையெலாம் எல்லா நாடு களிலும் மாருதிருப்பன என்ற அனுமானமும் நிலவுகிறது.

இவ்வளவு எடுகோள்களிட்டுக் கொண்ட பின்னர், பன்னாட்டு வாணிபம் இரு நாடுகளுக்கிடையே நடைபெறு வதற்கான சாத்தியக் கூறுகளைச் சுருக்கமாகத் தெள்ளத் தெளிய படம் பிடித்திடக்கூடும். உற்பத்திக் காரணிப்பேறும் எல்லா உற்பத்தித் துறைகளிலும் பயன்படுத்தப்படும் நுட்ப வினை முறையும் இரு நாடுகளிலும் ஒரேமாதிரியாக இருந்து, கடத்துச் செலவும் (transport cost) இல்லையெனில், அந்த நாடுகளில் எல்லாப் பண்டங்களுக்கும் தராதரச் செலவுகள் ஒரேயளவினதாக இருக்கும். இக் காரணத்தினால், எந்த நாட்டிற்கும் வாணிபத்தில் ஆதாயமோ இழப்போ ஏற்படாது. தராதரச் செலவுகளில் பேதம் நிலவவேண்டுமெனில், இரண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும். ஒன்று, இரு நாடுகளின் உற்பத்திக் காரணிப்பேறு வேறுபடவேண்டும். இரண்டாவதாக, வெவ்வேறு பண்டங்களின் உற்பத்திப்படி முறைகளில் பயன்படுத்தப்பெறும் உற்பத்திக் காரணிகளின் செறிவுகள் (intensities) வேறுபடவேண்டும். இல்லையெனில்,

அவ்விரு நாடுகளிலும் அவற்றின் விலைகள் ஒரே விகிதாச் சாரத்தில் அமைந்துவிடும்; வாணிகம் தழைக்காது.

உற்பத்திக் கட்டமைவு (Structure of Production)

மேலே தந்துள்ள எடுகோள்களினை ஆதாரமாகக் கொண்டு, பன்னாட்டு வாணிப சாத்தியக் கூறுகளை ஆராய் வோம். அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளையே எடுத்துக் கொள்வோம். இங்கிலாந்தைவிட அமெரிக்காவில் சில உற்பத்திக் காரணிகள் நிறைய உள்ளன என அனுமானிப் போம். இவ்விரு நாடுகளுக்கிடையில் தேவை நிலையில் உள்ள வேறுபாடுகள், உற்பத்திக் காரணிகளைப் பொறுத்த வரையில் நிலவும் வேறுபாடுகளைப் பாதிக்கவில்லை எனக்கொள்வோம். எப்படியெனில், அமெரிக்காவில் சில உற்பத்திக் காரணிகள் நிறைய இருந்தும் அவற்றின் தேவை அந்த அளவிற்கு உயர்ந்து இல்லாததால், அக் காரணிகளின் விலைகள் இங்கிலாந்தில் உள்ளதைவிடக் குறைவாகவே உள்ளன. ஆகவே, தேவை நிலையையும் மீறி பெருமளவிற்குக் கிடைத் திடும் உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தி, அமெரிக்கா உற்பத்தி செய்திடும் பண்டங்களில் ஒப்புமைத் தகுதியினைப் பெறுகிறது. அதுபோலவே, இங்கிலாந்து நாடும் தான் பெருமளவு பெற்றுள்ள உற்பத்திக் காரணிகளைக் கொண்டு உற்பத்தி செய்திடும் பண்டங்களில் ஒப்புமைத் தகுதியினைப் பெறுகிறது. இத்தகைய சூழ்நிலையில் அவ்விரு நாடுகளுக் கிடையில் வாணிபம் நடைபெறுவது இயல்பே.

உற்பத்திக் காரணிகளின் விலையையோ (factor prices) அல்லது அவற்றின் வீதாச்சாரங்களையோ (factor proprtions) பொறுத்துதான் அக் காரணிகள் மிகுதியாக உள்ளனவா அல்லது அவற்றில் கிடைப்பருமை (scarcity) நிலவுகிறதா என்பதைக் கூறிடமுடியும். உற்பத்திக் காரணி வீதாச்சார அளவு முறையின்படிப் பார்த்தால், ஒரு நாடு குறிப்பிட்ட உற்பத்திக் காரணிகளை நிறையப் பெற்றிருப்பதாகக் கொள்ள லாம்; ஆனால், உற்பத்திக் காரணிகளின் விலை நிலையினைக் கணக்கிற்கு எடுத்துக் கொண்டு பார்த்தால், அந்த நாடு அக் காரணிகளைப் போதுமான அளவிற்குப் பெறவில்லை என்ற முடிவிற்கு வர நேரிடலாம்; ஏனெனில், அந்த நாட்டில் அக் காரணிகளின் தேவை மிகுதியாக இருக்கலாம் என்பதுதான். இவ்வாறே பிறிதொரு நாட்டில் உற்பத்திக் காரணி வீதாச்சார அளவுமுறையின்படிப் பார்த்தால், உற்பத்திக் காரணிகள் போதுமான அளவிற்கு இல்லை என்பது போலவும், உற்பத்திக்

காரணிகளின் விலைநிலையினைக் கணக்கிற்கு எடுத்துத் கொண்டு பார்த்தால், அக் காரணிகள் மிகுதியாக இருப்பது போலவும் தோன்றலாம். ஏனெனில், அந் நாட்டில் காரணிகளின் தேவை குறைந்திருப்பது தான் எனலாம். உற்பத்திக் காரணிகளின் விலைநிலையினைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும் பொழுது, ஒருநாடு பெற்றிருக்கும் உற்பத்திக் காரணிப் பேற்றினை (factor endowments) நாம் பெரிதும் கருதத் தேவை யில்லை; மாறாக, அக் காரணிகளுக்கு உள்ள தேவையைக் கணித்தால் போதுமானது. நிலவுகின்ற உற்பத்திக் காரணிப் பேற்றிற்கும் உற்பத்திக் காரணிகளுக்குள்ள தேவை நிலைக்கும் உள்ள தொடர்பினை ஆராய்வதன் மூலம், இருநாடுகளுக் கிடையே உற்பத்திக் காரணிகளின் விலைகளில் நிலவும் வேறு பாடு விளங்கும். ஒரு நாட்டில் உற்பத்திக் காரணிப்பேறு மிகுந்தும் தேவை நிலைகுறைந்தும் காணப்பட்டால் அங்கு உற்பத்திக் காரணிகளின் விலைகள் குறைந்து காணப்படும். மாறாக, பிறிதொரு நாட்டில் உற்பத்திக்காரணிப் பேறு குறைந்தும், தேவை நிலை உயர்ந்துமிருப்பின், அல்லது உற்பத்திக் காரணிப்பேற்றினைவிடத் தேவைநிலை உயர்ந்து காணப்படின், அங்கு உற்பத்திக் காரணிகளின் விலைகள் உயர்ந்தும் காணப்படும். இவ்வாறு, இரு நாடுகளுக்குமிடையில் உற்பத்திக் காரணிகளின் விலைகளில் வேறுபாடு நிலவும். காரணிப்பேறும் தேவைநிலையும் குறிப்பிட்ட இரு நாடுகளில் ஒரே மாதிரி அமைந்து விட்டால் அவ்விரு நாடுகளின் தராதரச் செலவுகளில் வேறுபாடு நிலவாது. என்றாலும், பொதுவாகவே காரணிப்பேற்றில் நாடுகளுக்கிடையே கணிசமான அளவிற்கு வேறுபாடு நிலவுமேயானால், அந் நாடுகளின் தேவை நிலைகள் அவ் வேறுபாட்டிற்கு ஈடுசெய்திட முடியாது, ஆகவே, நாடு களிடையே பண்டங்களின் விலைகளிலும் வேறுபாடு நிலவும்; வாணிபம் அதன் காரணமாக நடைபெறும். இதுகாறும் விளக்கம் பெற்றவற்றைப் பொறுத்த வரையில், இரு நாடு களிலும் உற்பத்தி மாறா செலவு விதிக்குக் கட்டுப்பட்டதாக எடுகோளிட்டுக் கொண்டுள்ளோம்.

குறைந்துசெல் செலவு விதியினையே எடுகோளாக எடுத் துக்கொண்டால் என்னநேரிடும்? காரணிப்பேறும் தேவை நிலையும் ஒரே மாதிரியாக இருந்தாலும் அல்லது காரணிப் பேற்றிலுள்ள வேறுபாடுகளுக்கு ஈடுகட்டும் வகையில் இரு நாடுகளுக்கிடையில் தேவை நிலை வேறுபாடுகள் நிலவினாலும் அந் நாடுகளில் குறைந்துசெல் செலவு விதி செயல்படுமே யானால், பன்னாட்டு வாணிக வாய்ப்பு உருவாகும்.

இப்பொழுது வேறொரு நிலையினையும் விளக்கலாம். ஒவ்வொரு தொழிலிலும் ஒரு குறிப்பிட்ட விகிதத்திலேயே பல்வேறு உற்பத்திக் காரணிகள் பயன்படுத்தப்படும். உதாரணமாக, ஆஸ்திரேலியா அதிக நிலத்தையும், குறைந்த அளவு மூலதனத்தையும் பயன்படுத்தி இறைச்சியுணவுத் தொழிலை வளர்த்து சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளது எனக் கொள்வோம். இங்கிலாந்து அதிக அளவு மூலதனத்தையும், குறைந்த அளவிற்கு நிலத்தினையும் பயன்படுத்தி ஆடை நெய்திடும் தொழிலில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளது எனக் கொள்வோம். ஆஸ்திரேலியாவின் நிலத்தின் தராதர விலை உயரும்; மூலதனத்தின் தராதர விலை குறையும். இதற்கு நேர் மாறான நிலை இங்கிலாந்தில் ஏற்படும். இதனால், இவ்விரு நாடுகளுக்கும் மேலும் வாணிப வாய்ப்பு ஏற்படும்.

ஹெக்ஷர்-ஓலின் கோட்பாட்டில் தேவை நிலைகள், உற்பத்திக் காரணிகளின் அளிப்பு, உற்பத்தி நிலைகள் ஆகிய மூன்றும் மாறாதிருத்தல் அனுமானிக்கப்பட்டுள்ளது. ஆனால், உண்மை உலகின் நிலைவேறு. ஒரு தடவை வாணிபம் நாடுகளுக்கிடையே தொடங்கிய பிறகு, காலப்போக்கில் பன்னாட்டு வாணிபமே மக்களுடைய வருமானத்திலேயும், வேட்கையிலும், நுகர்ச்சியிலும் மாற்றங்களை ஏற்படுத்தி, தேவை நிலையிலே ஓர் திருப்பத்தையே உண்டாக்கிவிடும். வாணிபம் ஏற்படுமுன்னர் தேவைப்படாத பண்டங்களெல்லாம் வாணிபம் துவங்கிய பின்னர் தேவைப்படும்; புதிய வேட்கையும், புதிய நுகர்ச்சியும் தோன்றும். ஓலின் குறிப்பிடுவதுபோல, "மக்கள் விரும்பும் பண்டங்களை அளித்திடும் வேலையோடு மட்டுமன்றி, தாங்கள் விற்றிட முனையும் பண்டங்களையே மக்கள் விரும்பி நாடிடச் செய்திடும் வேலையினையும் வணிகர் மேற்கொள்வர்."[4] உற்பத்திக் காரணிகளின் விலையிலே மாற்றத்தை உண்டாக்கி, வருமானங்களையே வாணிபம் மாற்றிவிடும். உழைப்பாற்றல் செறிந்த தொழிலில் (labour intensive industry) உற்பத்தியான பண்டத்தில் வாணிபம் நடைபெறும்பொழுது, உழைப்பிற்கு அந் நாட்டில் கிராக்கி ஏற்பட்டு, கூலி உயரும். கூலி உயர்வைத் தொடர்ந்து தொழிலாளர் எண்ணிக்கை பெருகலாம்; அல்லது வாழ்க்கைத்தர உயர்வில் உள்ள நாட்டத்தின் காரணமாகப் பிறப்பு வீதம் குறையலாம். மூலதனம் செறிந்த தொழிலை (capital intensive industry) மேற்கொண்ட நாட்டில்,

[4] ஓலின் (Ohlin): "உள்நாட்டுப் பகுதிகளிடை வாணிபமும், பன்னாட்டு வாணிபமும்" ("Inter regional and International Trade"), 1933 ப. 115.

வாணிபத்தின் விளைவால், வட்டி வீதம் உயர்ந்து, சேமிப்பு அதிகரித்து முதலாக்கம் (capital formation) வளர்ந்திடும். மேலும், உற்பத்திக் காரணிகளின் விலை மாற்றத்தினால் நுட்ப வினைத் தொழில் உற்பத்தி முறைகளிலும் மாற்றம் ஏற்படும். உற்பத்திக் காரணிகளும் தங்கள் விலைகளைப் பொறுத்தேதான் குறிப்பிட்ட விகிதத்திலே இணைகின்றன.

பொதுச் சமநிலைக் கோட்பாடு (General Equilibrium Theory)

"உள்நாட்டுப் பகுதிகளிடை வாணிபமும் பன்னாட்டு வாணிபமும்" எனும் நூலினை 1933-இல் வெளியிட்ட ஸ்வீடன் நாட்டுப் பொருளாதார நிபுணர் பெர்டில் ஓலின், பன்னாட்டு வாணிபத்தினைப் பொதுச் சமநிலைக் கோட்பாட்டின் மூலம்[5] விளக்குகிறார். ஒன்றுக்கொன்று சார்புடை மதிப்புக்கோட்பாடே (mutual interdependence theory of value) பொதுச் சமநிலைக் கோட்பாடாகும். ஒற்றைச் சந்தையில் விற்பனையாகும் பண்டங்களின் மதிப்புகளை நிர்ணயிக்கும் படிமுறையினை விளக்கிடும் இக் கோட்பாடு, ஒன்றுக்கொன்று தொடர்புள்ள பல்வேறு சந்தைகளில் பண்டங்களின் மதிப்பினை நிர்ணயிப்பதனையும் விளக்க உதவுகிறது. இக் கோட்பாடு, தொன்மைப் பொருளியலார் கோட்பாட்டினைப் போலல்லாமல், சிக்கல் நிறைந்த பல பிரச்சினைகளை ஆய்விற்கு எடுத்துக்கொண்டுள்ளமையால், பன்னாட்டு வாணிபத் தொடர்புகளைக் தக்க காரண–காரிய அடிப்படையில், உள்ளது உள்படி, விளக்குகிறது.

நிலவியல் சார்ந்த வேலைப்பகுப்பு, தனிநபர் வேலைப் பகுப்பு போன்றதுதான். இந்த அடிப்படையில் ஓலின் தம்து கோட்பாட்டினை விளக்க முற்படுகிறார். ஒவ்வொரு தனி மனிதனும் தன்னிடம் அமைந்திருக்கிற உள்ளார்ந்த திறன், மனப்பாங்கு, பயிற்சி, அனுபவம் ஆகியவற்றின் போக்கிற்கு ஏற்றாற்போல பொருத்தமான பணிகளிலும், பண்டங்களின் உற்பத்தியிலும் தேர்ச்சித் திறன் பெறுவர். அதுபோலவே, நாடுகளும் வெவ்வேறு பிராந்தியங்களும் தங்களிடம் அமைந்திருக்கிற காரணிப்பேறு, தட்ப வெப்பநிலை, மக்களின் திறன் இவற்றையெல்லாம் அனுசரித்தே பொருத்தமான பண்டங்களின் உற்பத்தியில் முழுதும் ஈடுபட்டுத் தேர்ச்சித் திறன் பெறுவன. மேலும், ஒரே நாட்டிற்குள்ளேயே பிராந்தியங்களுக்கிடையே நிலவிடும் வேலைப் பகுப்பும், உலகிலுள்ள பல்வேறு நாடுகளுக்கிடையே நிலவிடும் வேலைப் பகுப்பும் ஓரினத்தைச் சேர்ந்தவையே என்றும், அதன் காரணமாக

[5] கஸ்டவ் காசல் (Gustav Cassel) விளக்கிய கோட்பாடு அது.

உள்நாட்டுப் பகுதிகளிடை வாணிபம் என்பதன் சிறப்புநிலை தான் பன்னாட்டு வாணிபம் என்றும் ஓலின் கருதுகிறார். ஒற்றைச் சந்தையிலே விலை நிர்ணயம் செய்திட உதவும் கோட்பாடு, சந்தைகளுக்கிடையே பண்டங்கள் பரிவர்த்தனையாகும் பொழுது அதாவது, ஒரே நாட்டிற்குள்ளாகவே பல்வேறு பகுதிகளுக்கிடையே வாணிபம் நடைபெறும் பொழுது, விலை நிர்ணயம் செய்திட உதவும். இக் கோட்பாட்டினையே பன்னாட்டு வாணிபத்தை விளக்கிடவும், பண்டங்களை நாடுகளுக்கிடையே விற்பதிலும், வாங்குவதிலும் விலை நிர்ணயம் செய்திடவும் பயன்படுத்தலாம். இந்தப் பொது அடிப்படையில்தான் ஓலின் பொதுச் சமநிலை மதிப்புக் கோட்பாட்டினைக் கொண்டு பன்னாட்டு வாணிபத்தை விளக்க முனைந்துள்ளார். மேலும், நாடுகளுக்கிடையே பண்டங்களின் விலை நிலவுவதைப் பொறுத்தே பன்னாட்டு வாணிபம் நடைபெறும். நாடுகளுக்கிடையே வாணிபம் நடைபெறுவதற்குக் காரணம், அவை உற்பத்தி செய்யும் பண்டங்களின் விலைகளில் வேறுபாடுகள் நிலவுதல்தான் எனலாம். இவ் விலை வேறுபாடுகள் தேவை, அளிப்பு இவற்றைப் பொறுத்துள்ளது. தேவைச் சூழலும், அளிப்புச் சூழலும் மாறும்பொழுது விலை மாற்றம் ஏற்பட்டு, தேவைக்கும் அளிப்பிற்கும் இடையில் புதுச் சமநிலை உருவாகும்.

பண்டங்களின் தேவை தோன்றப் பல காரணங்கள் உண்டு. அக் காரணங்களில் அகப்பொருளானவை (subjective) சில; புறநிலைப்பொருள் சார்ந்தவை (objective) வேறு சில. துய்ப்போரின் சுவையுணர்வு, வேட்கை, தினுசு (fashion) நாடுதல் முதலான அகவியல் சார்ந்த மனித உணர்வுகள் தேவையினை உருவாக்குகின்றன. ஆனால், இவ் வுணர்வுகள் தனிமனிதர்களின் வருமானம், கல்வித்தரம், சமூக மதிப்பு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைச் சார்ந்துள்ளன. தேவையை உருவாக்குகின்ற புறநிலைப்பொருள் சார்ந்த காரணங்களில் தலையாயது, தனி மனிதர்களின் வருமான மட்டமாகும். உற்பத்திக் காரணிகள் தன்னுடைமையாதலில் உள்ள கட்டமைவு (structure of the ownership of productive factors) தனி மனிதர்களின் வருமான மட்டத்திற்குக் காரணமாகும். ஒவ்வொரு துய்ப்போனும் சில உற்பத்திக் காரணிகளை உடைமையாக உடையவனே. உதாரணமாக, நிலக்கிழாரின் வாரம் நிலவுடைமையிலிருந்தும், முதலாளியின் வருமானம் மூலதன உடைமையிலிருந்தும், தொழிலாளர் தம் கூலி அவர்தம் உழைப்பெனும் தனியுடைமையிலிருந்தும் பெறப்படு

கின்றன. எனவே, உற்பத்திச் சாதனங்கள் தன்னுடைமை யாதலில் உள்ள கட்டமைவும், அக் கட்டமைவில் ஏற்படும் மாற்றங்களும் துய்ப்போரின் வருமானத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி, பணிகள், பண்டங்கள் ஆகியவற்றின் தேவையில் மாற்றம் ஏற்படுத்தி விடுகின்றன.

நிலம், இயற்கை வளன்கள், உழைப்பு, திறன், முதற் கருவிகள் போன்ற உற்பத்திச் சாதனங்களின் அளவையும் அவற்றைப் பயன்படுத்துதலையும் பொறுத்தே பண்டங்களின் அளிப்பு அமைகிறது. உற்பத்திச் சாதனங்களின் விலைகளும் பண்டங்களின் அளப்பினைப் பருப்பொருள் சார் உற்பதித் நிலைகள் (physical conditions of production) பெருமளவு நிர்ணயிக்கின்றன. பொறித்துறையின் ஆதார விதிகள் (fundamental laws of mechanics) அணுக்கட்டமைவு (atomic structure) போன்றவை எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாக இருப்பது போலவே, பருப்பொருள் சார் உற்பத்தி முறைகளும் எல்லா விடங்கனிலும் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன என்று ஒலின் கருதுவதாகப் பேராசிரியர் எல்ஸ்வர்த் (Ellsworth) குறிப் பிடுகிறார். ஆனால், நுட்பவினைத் தொழில் உற்பத்தி முறைகள் (technical methods of production) பருப் பொருள் சார் உற்பத்தி முறைகள் அடங்குமேயானால், உற்பத்தி முறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுவன. ஏனெனில், தொழில் நுட்பவினையில் முன்னேற்றம் நாட்டுக்கு நாடு வேறுபடும். எனவே, பண்டங் களின் அளிப்பு நிலையும் நாட்டுக்கு நாடு வேறுபடும்.

பண்டங்களின் தேவை நிலையும், அளிப்பு நிலையும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. எனவே, பண்டங்களின் விலை விகிதங்களும் நாடுகளுக்கிடையே வேறுபடுகின்றன. பன்னாட்டு வாணிப வாய்ப்பிற்கு இச் சூழ்நிலைகளே காரணங் களான அமைகின்றன.

திறனாய்வும் புதுவிதியும்

குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் (Law of diminishing marginal utility) அடிப்படையில் நோக்கின், பண்டங்களின் விலை அப் பண்டங்கள் துய்ப்போருக்கு அளித் திடும் திருப்தியின் அளவைப் பொறுத்ததாகும். கச்சாப் பொருள்களின் விலையும் உழைப்பின் ஊதியமும் பண்டங் களின் விலையைச் சார்ந்து இருக்குமேயன்றி, அவை பண்டங் களின் விலையை நிர்ணயிக்கமாட்டா. உற்பத்திக் காரணிகளின் விலை பண்டங்களின் விலையை நிர்ணயிக்கும் என்ற ஒலின்

கருத்தை விஜனேல்ட்ஸ் (Wijanholds) ஏற்றுக்கொள்ளவில்லை. சில வேலைகளில் தொழிலாளர் உழைப்பு எனும் உற்பத்திக் காரணியில் கிடைப்பருமை (scarcity) நிலவினாலும், அதனை மதிப்பு குறைந்த பண்டங்களின் உற்பத்தியில் பயன்படுத்தும் பொழுது, உழைப்புக் கூலியும் குறைந்தே இருக்கும் என்று விஜனேல்ட்ஸ் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் பின்வருமாறு எழுதுகிறார்: 'துய்ப்போர் நல்ல விலை தந்து வாங்கக் கூடிய பண்டங்களை உற்பத்தி செய்திடும் சாத்தியமான சூழ் நிலையைப் பொறுத்த வரையில் கிராக்கி நிலை என்பது எப் பொழுதும் நிலவும். விலையுயர்ந்த பண்டங்களை உற்பத்தி செய்திடும் முனைப்பாற்றலோ, திறனோ தொழிலாளருக்கு இல்லாத காரணத்தினால், ஒரு நாட்டில் தொழிலாளர் தம் உழைப்பில் கிராக்கி இருக்கும் அதே வேலையில் கூலியும் குறைவாகவே இருக்கும்.' [6]

பண்டங்களின் உற்பத்திச் செலவிலுள்ள வேறுபாடுகளுக்குப் பதிலாக, அவற்றின் விலைகளிலுள்ள வேறுபாடுகளைக் கொண்டு பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டினை வகுத்திட வேண்டும் என்பது விஜனேல்ட்ஸ் கொள்கையாகும். விலை விவரமே ஆதாரமாகவும், ஏனையவையனைத்தும் அதனிலிருந்து பெறப்படுதல் வேண்டும் என்றும் அவர் கருதினர். பண்டங்களின் விலை, துய்ப்போர் திருப்தி நிலையை ஆதாரமாகக் கொண்டதாகும். உழைப்பு, மூலதனம், நிலம் முதலான உற்பத்திக் காரணிகளின் ஒவ்வோர் அலகும் பண்டங்களின் விலையைப் பொறுத்தே பயன்படுத்தப்படும். உற்பத்திச் சாதனங்களின் ஒவ்வோர் அலகும் உயர்ந்த பட்ச விலைப் பெற்றிடும் வகையில் பயன்படுத்தப்படும். அச் சாதனங்கள் பெற்றிடும் உயர்ந்தபட்ச விலை, உற்பத்தி செய்திடும் பண்டத்தின் அளவையும், துய்ப்போர் அவற்றிற்குத் தர விரும்பும் விலையையும் பொறுத்ததே.

மேலே கூறிய கருத்தின் அடிப்படையில்தான்-தொழிற்றுறையாயினும் பன்னாட்டு வாணிபமாயினும்-வேலைப் பகுப்பு ஏற்படுகிறது. திறமையிலுள்ள பேதம் வேலைப் பகுப்பிற்கு வழி வகுத்திடும் என்றாலும், அதுவே முடிந்த முடிவாகாது. தனக்கு எத் துறையில் பெருமளவு திறமையுள்ளதோ அத்

[6] விஜனேல்ட்ஸ், எச். டபிள்யூ. ஜே. (Wijanholds, H. W. J.) "பன்னாட்டு வாணிபக் கோட்பாடு—ஓர் புதிய விளக்கம்.," தென்னாப்பிரிக்க பொருளாதார சஞ்சிகை (செப்டம்பர் 1953) ப. 236 : "[The theory of International Trade-A New Approach", South African Journal of Economics (September 1953.) p. 236.]

துறையிலேயே ஒருவன் நுழைவதில்லை. இந்தியா போன்ற நாடுகளிலே, மருத்துவத் துறையிலே நுழைபவரெல்லாம் அத் துறையிலே தனித்திறமை பெற்றவர்களல்லர். மருத்துவத் துறைக்குத் தேவையுள்ளது; அத் துறையில் நிறைய வருமானம் கிட்டும்; எனவே, அதில் பலர் நுழையப் போட்டியிடுகின்றனர். எத் துறையில் உயர்ந்தபட்ச வருமானம் கிட்டுமோ, அத் துறை யிலேதான் ஒருவன் நுழைய முயல்வான். எனவே, விஜனேல்ட்ஸ் பன்னுட்டு வாணிபத்தை விளக்கிட ஒப்புமைச் செலவு விதிக்குப் பதிலாக ஒப்புமை விளைவு விதியினைத் **(Law of comparative returns)** தருகிறுர்.

பன்னுட்டு வாணிபக் கோட்பாட்டினை, குறிப்பாக ஹெக்ஷர்–ஓலின் கோட்பாட்டினைச் சில வரைபடங்கள் மூலம் நல்லவண்ணம் விளக்கிடலாம். உற்பத்திச் சார்புகள், பெட்டி வரைபடம், காரணி விலைகளைச் சமனுக்குதல் போன்றவற்றை விளக்கிடும் வரைபடங்கள், அவற்றிற்கான விளக்கங்கள் கீழே வருகின்றன.

உற்பத்திச் சார்புகள் (Production Functions)

உற்பத்திக் காரணிகள் ஒன்றிணைந்து செயல்படும் பொழுது, பண்டத்தின் உற்பத்தி நிகழ்கிறது. உற்பத்திக் காரணிகளின் உள்ளிடுகைகளில் (பருப்பொருள் சார்ந்த) அளவிற்கும் (physical quantities of inputs of factors) பண்டத் தின் உற்பத்தியாகிய (பருப்பொருள் சார்ந்த) வெளியிடு கைக்கும் (physical output of a commodity) உள்ள தொடர்பினை விளக்குவதே உற்பத்தி சார்பு (production function) எனப்படும். இதனை விளக்கிட நிலம், உழைப்பு எனும் இரு காரணிகளை எடுத்துக் கொள்வோம். குறிப்பிட்ட அளவிற்கு ஒரு பண்டத் தினை உற்பத்தி செய்திட நிலம், உழைப்பு ஆகிய காரணி களின் பல்வேறு வீதாச்சாரங்களில் அமையக்கூடிய கதம் பங்களைச் (combinations) சுட்டிடும் வகையில் சம உற்பத்தி கோடுகளை (isoquants) வரைந்திடலாம். வரைபடம் 4.1–இல், IQ எனும் சம உற்பத்தி கோட்டில் எப் புள்ளியினை எடுத்தாலும் அப் புள்ளி நிலம், உழைப்பு ஆகியவற்றின் குறிப்பிட்ட கதம்ப அளவினைச் சுட்டிக் காட்டும். செங்குத்துக் கோட்டின் அருகே IQ–வில் அமைகின்ற புள்ளிகளில் நிலத்தின் அளவு மிகுதி யாகவும், கிடைகோட்டின் அருகே, IQ–வில் அமையும் புள்ளி களில் உழைப்பின் அளவு மிகுதியாகவும் இருக்கும். ஆனல் பண்டத்தின் உற்பத்தியளவு மட்டும் சமமாக இருக்கும். சம உற்பத்தி கோடு மூலத்தைவிட்டு விலகி, I 'Q' போல மேலேறிச்

செல்லச் செல்ல பண்டத்தின் உற்பத்தியளவும் உயர்ந்து கொண்டே போகும்; மேலே செல்லச் செல்ல நிலம், உழைப்பு ஆகிய காரணிகளின் ஒவ்வொரு கதம்பத்திலும் கூடுதலான



வரைபடம்-4-1 உற்பத்தி சார்பு

உற்பத்தியே நிகழ்ந்திருக்கும். IQ, I'Q'-எனும் சம உற்பத்தி கோடுகளுக்கு முறையே T, T'-எனும் புள்ளிகளில் PP, P'P' எனும் தொடுகோடுகள் (tangents) அமைந்துள்ளன. நிலம், உழைப்பு எனும் இருகாணிகளின் விலைவிகிதமும் அவற்றின் இறுதிநிலை உற்பத்தியளவுகளின் விகிதமும் T, T' எனும் புள்ளிகளில் சமமாக இருக்கும். எனவே, அப் புள்ளிகளில் உற்பத்தியும் சமநிலையில் இருக்கும். ஏனெனில், அப் புள்ளிகளில்தாம் காரணிகளின் மிகக் குறைந்த செலவு கொண்ட கதம்பம் (least cost combination) அமையும். நில, உழைப்புக் காரணிகளின் விலைவிகிதம் PP, P' P' ஆகிய தொடுகோடுகளின் சரிவுக்குச் சமமாக இருந்திட, அவ்வுற்பத்திக் காரணிகளின் உள்ளிடுகைகள் (inputs) அதிகரிக்க, அதிகரிக்க OE-எனும் வளர்ச்சிப்பாதையில் (expansion path) ஒன்றுக்கொன்று மேலேறிச் செல்லும் சம உற்பத்தி கோடுகளைச் சென்றடையலாம். உற்பத்தி விளைவும் நிலையாகவிருந்து, காரணிகளின் விலையும் மாறாதிருந்தால் வளர்ச்சிப் பாதையானது மேலேறிச் செல்லும் நேர்கோடேயாகும்.

உற்பத்தி சார்பு, தொழில் நுட்பவியலால் (technology) எவ்வாறு பாதிக்கப்படுகிறது. என்பதை இப்பொழுது ஆராய்வோம். தொழில் நுண்ணியலில் (technology) முன்னேற்றம் ஏற்படும்பொழுது, காரணி உள்ளிடுகையின் இறுதிநிலை உற்பத்தி பெருகுகிறது. இதனால் சம உற்பத்தி கோடுகளின் சரிவுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. நிலத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனில் மாற்றம் ஏதேனும் ஏற்படாதிருப்பினும், ஏதேனும் புத்தாக்கத்தின் (innovation) காரணமாக, தொழிலாளர்தம் இறுதிநிலை உற்பத்தித் திறனில் மாற்றம் ஏற்பட்டால் சம உற்பத்திக் கோட்டின் சரிவு மேலும் செங்குத்து அடையும். மேலும், இது சமஉற்பத்திக் கோடுகளின் இடத்தையும் மாற்றி விடும். எப்படியெனில், இவ்விரு காரணிகளின் உள்ளிடுகைகளைக் குறைத்து முதலில் இருந்த அளவே பண்டத்தை உற்பத்தி செய்திட முடியுமெனில், 10 இடம் மாறித்தான் ஆக வேண்டும்.

வரைபடம் 4.2-ல் கோதுமை (w) ஆடை (c) ஆகியவற்றின் உற்பத்தி சார்புகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொன்றின்



வரைபடம் 4-2

உற்பத்தி சார்புகளும் நிலையான காரணி விதாச்சாரங்களும்

உற்பத்திக் காரணிகளின் விதாசாரங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டாலும், அவ் விதாசாரங்கள் இரண்டு பண்டத்

திற்குமே மாறு வீதாச்சாரங்களேயாகும். அப் பண்டங்களின் வளர்ச்சிப் பாதைகளாகிய OW, OC ஆகிய இரண்டுமே நேர்கோடுகள்தாம்.

காரணி வீதாசாரங்கள் மாறிடின் என்ன நேரிடும்? எடுத்துக்காட்டாக, தொழில் நுண்ணியலின் வளர்ச்சி காரணமாக, தொழிலாளர் தம் இறுதிநிலை உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளதாகக் கொள்வோம். எனவே, வரைபடம் 4.2-ல் OT சுட்டிடும் காரணி வீதாசாரங்களுக்குப் பதிலாக OR சுட்டிடும் காரணி வீதாச்சாரங்கள் IQ-வில் அமைந்துவிடுவதாகக் கொள்வோம். அதனால், நிலத்தின் இறுதிநிலை உற்பத்தி பூஜ்யமாகிவிடும். அதன் விலையும் பூஜ்யமாகிவிடும். மேலே உள்ள வரைபடத்தின்படி, ஆடை உற்பத்தித் தொழிலாளர் தம் உழைப்புச் செறிவு மிக்கது என்பதும், கோதுமை உற்பத்தி நிலத்தின் செறிவு மிக்கது என்பதும் வெளிப்படை.

எட்ஜ்வர்த்-பவ்லே பெட்டி வரைபடம்

எளிய பன்னாட்டு வாணிப மாதிரியம் (model) இரண்டு நாடுகள், இரண்டு பண்டங்கள் ஆகியவற்றையே கொண்டு உள்ளமையால், நான்கு உற்பத்தி சார்புகளைக் கணக்கிட



வரைபடம் 4-3 எட்ஜ்வர்த்-பவ்லே பெட்டி வரைபடம்

வேண்டும். எனினும், ஒவ்வொரு பண்டத்திற்கும் ஒரே உற்பத்திச் சார்பு இரு நாடுகளிலும் அமைந்திடின், இரண்டு

உற்பத்திச் சார்புகளே போதுமானவை எனலாம். எட்ஜ்வர்த்-பவ்லே பெட்டி வரைபடம் (Edgeworth-Bowlay Box Diagram) இரண்டு உற்பத்திச் சார்புகளை எளிதாகப் பயன்படுத்தும்.

முன்னுள்ள வரைபடம் 4.3-ல் எட்ஜ்வர்த்-பவ்லே பெட்டியினுடைய நீள, அகலங்கள் ஒரு நாடு பெற்றிருக்கும் காரணிப் பேற்றினை, அதாவது இவ் வரைபடத்தைப் பொறுத்தவரையில், நிலம், உழைப்பு ஆகியவற்றின் மொத்த அளவினைக் குறித்திடுவனவாகக்கொள்வோம். இக் காரணிகள் ஒரே மாதிரியானவை என்றும், அளவு மாறுதவை என்றும் பாவித்துக்கொள்வோம். இருக்கின்ற காரணிகளின் அளிப்பின் விகிதத்தைப் பெட்டியின் மூலைவிட்டங்களின் மூலம் தெரிந்துகொள்ளலாம். ஆடையின் சம உற்பத்திக் கோடுகள் O-மூலத்திலிருந்தும் கோதுமையின் சம உற்பத்திக் கோடுகள் O'-மூலத்திலிருந்தும் துவங்குகின்றன.

ஏதேனும் K-எனும் புள்ளியினை எடுத்துக்கொண்டால், அது ஆடைக்குரிய ஏதேனுமொரு சம உற்பத்திக் கோட்டின் மீதும், கோதுமைக்குரிய ஏதேனும் ஒரு சம உற்பத்திக் கோட்டின்மீதும் அமையும். மூலத்திலிருந்து அப் புள்ளி அமைந்திருக்கும் தூரம், குறிப்பிட்ட பண்டத்தினைக் குறிப்பிட்ட அளவில் உற்பத்தி செய்திட, பயன்படுத்தப்பெறும் காரணிகளின் வீதாசாரத்தினைச் சுட்டிக்காட்டிடும். ஆடை, கோதுமை ஆகியவற்றின் உற்பத்திக்குத் தனித்தனியாகத் தேவைப்படுகின்ற நிலம், உழைப்பு ஆகியவற்றின் வீதாச்சாரங்களைப் பெட்டிக்குள் இடப்படுகின்ற எந்தப் புள்ளியும் சுட்டிக் காட்டிடும். ஆனால் ஆடை, கோதுமை இவற்றின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பெறும் நிலம், உழைப்பு ஆகிய காரணிகளின் இறுதிநிலை உற்பத்தித் திறன்கள் எந்தப் புள்ளியில் சமமாக உள்ளனவோ, அப் புள்ளியே பண்டங்களின் உற்பத்தியைப் பொறுத்தவரையிலும், காரணிகளை உற்பத்திக்குப் பயன்படுத்தியமையைப் பொறுத்த வரையிலும் திறமை அடிப்படை உடையது எனலாம். K-எனும் புள்ளி அத்தகைய திறமையைக் குறித்திடும் புள்ளியன்று; ஏனெனில், அப் புள்ளியில் ஆடைக்குரிய சம உற்பத்திக் கோடும், கோதுமைக்குரிய சம உற்பத்திக் கோடும் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு சென்றிடாமல் ஊடறுத்துக்கொண்டு செல்கின்ற காரணத்தினால் அவற்றின் சரிவுகள் அப் புள்ளியில் சமமாக இல்லாமல் வேறுபடுகின்றன.

ஆடை உற்பத்திக்குப் பயன்படுத்தப்பெறும் நிலம், உழைப்பு ஆகிய காரணிகளின் இறுதிநிலை உற்பத்தித் திறன்

களின் விகிதமும், கோதுமை உற்பத்திக்கு உதவுகின்ற அவ்விரு காரணிகளின் இறுதிநிலை உற்பத்தித் திறன்களின் விகிதமும் சமமாக இருக்கும் வகையில், அவ்விரு தொழில்களிலும் காரணிகள் பகிர்ந்து பயன்படுத்தப்பெறும்பொழுது, அப் பண்டங்களின் உற்பத்தியில் சமநிலை உருவாகும். அவ்விரு பண்டங்களுக்குரிய சம உற்பத்தி கோடுகள் ஒன்றுக்கொன்று தொட்டுக்கொண்டு சென்றிடும் புள்ளிகள்தாம் உற்பத்தி சமநிலைப் புள்ளிகள் (production equilibrium points) எனப் படும்; அப் புள்ளிகளில் அமையும் சம உற்பத்தி கோடுகளின் சரிவுகளே பயன்படுத்தப்பெறும் காரணிகளின் விலை விகிதத் தின் சமநிலையைக் குறித்திடும். வரைபடம் 4.3–இல் கண்டுள்ளபடி, உற்பத்தி சமநிலைப் புள்ளிகளை இணைத் திட்டால், OTO' – எனும் காரணிப் பகிர்வுக்கோடு (factor allocation curve) கிடைத்திடும். இக் கோட்டினையே எட்ஜ்வர்த் அவர்கள் ஒப்பந்தக் கோடு (contract line) என்கிறார்.

ஒப்பந்தக் கோடு பெட்டியின் மூலைவிட்டத்திற்குக் கீழே செல்வதால், ஆடை உற்பத்தியில் உழைப்புச்செறிவு மிக்கிருப் பதாகக்கொள்ளலாம். ஒப்பந்தக்கோட்டில் T-எனும் புள்ளியில் ஆடை, கோதுமை ஆகியவற்றின் சம உற்பத்திக் கோடுகள் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு செல்கின்றன. OT தூரத்தில் ஆடை உற்பத்திக்குப் பயன்படும் நிலம், உழைப்பு ஆகிய காரணிகளின் விகிதத்தினையும், O'T தூரத்தில் கோதுமை உற்பத்திக்குப் பயன்படும் அக் காரணிகளின் விகிதத்தினையும் ஒத்திட்டுப் பார்க்கும்பொழுது, முன்னதில் நிலத்தைவிட உழைப்பின் வீதாசாரம் பின்னதில் உள்ளதைவிட கூடுதலாக அமைந்திருப்பது விளங்கும். மாறாக, ஆடை உற்பத்தியில் நிலத்தின் செறிவு மிக்கிருப்பதாகக்கொண்டால், ஒப்பந்தக் கோடு மூலைவிட்டத்திற்கு மேலே செல்லவேண்டும்.

விளக்கத்திற்கு எடுத்துக்கொண்ட இரு நாடுகளில் கிடைத்திடும் இரண்டு காரணிகளின் அளவுகள், அவ்விரு நாடுகளின் உற்பத்திச் சார்புகள் ஆகியவை பற்றிய விவரங் களிலிருந்து, OTO' ஆகிய ஒப்பந்தக் கோட்டின்மீது அமை கின்ற வாய்ப்புள்ள உற்பத்தி சமநிலைப் புள்ளிகளைக் கண்டு பிடிக்கலாம்; இப் புள்ளிகளில் அமையும் ஆடை, கோதுமை ஆகிய பண்டங்களுக்குரிய சம உற்பத்திக் கோடுகளின் சரிவுகளே அப் பண்டங்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தப் பெறும் காரணிகளின் விலை விகித சமநிலையைக் குறிப்பன. ஏனைய காரணி விலை விகிதங்களைக் குறித்திடத் தேவையில்லை. மூலை விட்டத்திற்குக் கீழே ஒப்பந்தக் கோடு அமைந்திருக்கும்

பொழுது, மூலை விட்டத்திற்கு மேலேயோ அல்லது ஒப்பந்தக் கோட்டிற்குக் கீழேயோ உள்ள புள்ளிகளில் அமைகின்ற சம உற்பத்திக் கோடுகளின் சரிவுகளுக்குச் சமமான விலை விகிதங்கள் நமக்குத் தேவையில்லை. ஏனெனில், அவை சம நிலையினைக் குறிப்பன அல்ல.



வரைபடம் 4-4
எட்ஜ்வர்த்-பவ்லே பெட்டி வரைபடத்திலிருந்து உற்பத்தி சாத்தியக் கோட்டினைப் பெறுதல்

மேலுள்ள வரைபடம் 4.4-ல் கண்டுள்ளதுபோல, ஒப்பந்தக் கோட்டிலிருந்து உற்பத்தி சாத்தியக் கோட்டினை வருவிக்க முடியும். நிலம், உழைப்பு ஆகிய காரணிகள் பண்ட உற்பத்தியில் எந்த வீதாச்சாரத்தில் இணைகின்றன என்பதனை ஒப்பந்தக் கோடு விளக்குகிறது. வரைபடத்தில் ஆடை, கோதுமை ஆகிய பண்டங்களின் கதம்ப அளவுகளை, அதாவது அவ்விரு பண்டங்களும் எந்த வீதாச்சாரத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதனைக் குறித்திடும் வகையில் உற்பத்தி சாத்தியக் கோட்டினை வருவிக்க, OTO'-எனும் ஒப்பந்தக் கோட்டின் வலப்புறத்து உச்சியை மேலேயே இடப் புறமாகத் திருப்பிவிட்டால் போதும். ஒப்பந்தக் கோட்டில்

உள்ள ஒவ்வொரு புள்ளிக்கும் ஈடாக உற்பத்தி சாத்தியக் கோட்டிலும் ஒரு புள்ளி இருக்கும். உற்பத்திக் காரணிகள் இரண்டும் இரு பண்டங்களின் உற்பத்தியில் எந்த வீதாச் சாரத்தில் ஒப்பந்தக்கோட்டில் பகிர்வு செய்யப்படுகின்றனவோ, அதே வீதாச்சாரத்தில் இரு பண்டங்களின் உற்பத்தியும் அமையும். ஒப்பந்தக் கோட்டிலும், உற்பத்தி சாத்தியக் கோட்டிலும் ஒன்றுக்கொன்று இணையாக உள்ள புள்ளிகள் அனைத்தும் தொழில் நுண்ணியல் ரீதியாகத் திறமைசார் உற்பத்தி வடிவமைவுகளையே (production patterns) குறிப்பன; ஒப்பந்தக் கோட்டில் அமையாத புள்ளிகள் அனைத்தும் தொழில் நுண்ணியலுக்கு மாறான, திறமை குறைவுள்ள உற்பத்தி வடிவமைவுகளையே குறிப்பன எனலாம்.

ஒரே மாதிரியாகவும் மாறுதும் உள்ள உற்பத்திக் காரணி வீதாச்சாரங்களின் அடிப்படையில் ஆடையும், கோதுமையும்



வரைபடம் 4-5 மாறு பிறவாய்ப்புப் பெறுமானம் : ஒரு மாதிரியான மாறு உற்பத்திக் காரணி வீதாச்சாரங்கள்

உற்பத்தி செய்யப்படுமேயானல், வரைபடம் 4.5-ல் உள்ளது போல அவ்விரு பண்டங்களின் வளர்ச்சிப் பாதைகளும் ஒன்ருகிவிடும்.

இவ் வளர்ச்சிப் பாதையிலிருந்து தருவிக்கப்படுகின்ற உற்பத்தி சாத்தியக் கோடும் வரைபடம் 4.6-ல் உள்ளது போல நேர்கோடாகிவிடும். இரு வளர்ச்சிப் பாதைகளும் ஒன்றாகிவிடும் என்றால், அதன் பொருள் நிலமும், உழைப்பும்



வரைபடம் 4-6

வரைபடம் 4-5 லிருந்து வருவிக்கப் பெற்ற உற்பத்தி சாத்தியக் கோடு

எப்பொழுதும் ஒரே வீதாச்சாரத்தில் இணைக்கப்பெற்று பயன் படுத்தப்படும் என்பதாகும். அதாவது, அவ்விரு காரணிகளும் ஒன்றே என்று கருதப்படும். இது, உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாட்டினையும், அதன் விளைவாக, நேர்கோடாக அமை யும் உற்பத்தி சாத்தியக் கோட்டினையும் குறிக்கும். இரண்டு பண்டங்களின் உற்பத்தியில் மாறா செலவுகளும், ஒரே மாதிரி யான உற்பத்தி சார்புகளும் நிலவுகையில், மேலே குறுப்பிட்டு உள்ளதுபோல, நேர் கோடாக அமைகிற உற்பத்தி சாத்தியக் கோடு தோன்றும். எனினும், மாறாச் செலவுகளுக்கும், மாறா பிற வாய்ப்புப் பெறுமானத்திற்கும் வேறுபாடு உண்டு. நேர் கோடாக அமைந்துள்ள உற்பத்தி சாத்தியக் கோடு, மாறா பிற வாய்ப்புப் பெறுமானத்தைக் குறுத்திடும். இரண்டு பண்டங் களின் உற்பத்தியிலும் தனித்தனியே மாறாச் செலவுகளே நிலவினாலும், அவற்றின் உற்பத்தி சார்புகளில் பேதங்கள் இருப்பின், உற்பத்தி சாத்தியக் கோடு நேர் கோடாக இருக்காது; மாறாக வளைந்தே இருக்கும்.[7]

[7] சார்லஸ் பி. கிண்டல்பெர்கர்: 'பன்னாட்டுப் பொருளாதாரம்' Charles P. Kindleberger: "International Economics" 4th Edition, 1968 ப. 543.

ஹெக்ஷர்–ஓலின் கோட்பாடு–வரைபட விளக்கம் (1)

ஹெக்ஷர்–ஓலின் கோட்பாட்டிற்கு வரைபட விளக்கம் ஒன்று தருவோம். இந்தியா தொழிலாளர்களை நிரம்பப்பெற்றுள்ள நாடு; எனவே, குறைந்த கூலியில் வேலை செய்திடத் தொழிலாளர் நிறைய உள்ளனர். அமெரிக்காவில் மூலதனம் நிறைய உள்ளது; மூலதனம் அங்கு மலிவு என்று பொருள். தொழிலாளர் தம் உழைப்பினை மிகுதியாகப் பெற்றிருக்கும் நாடு உழைப்புச் செறிவுமிக்க பண்ட உற்பத்தியிலும், மூலதனப் பேற்றினைப் பெற்றிருக்கும் நாடு மூலதனச் செறிவுமிக்க பண்ட உற்பத்தியிலும் ஒப்புமை வாய்ப்பினை, தராதரத் தகுதியினைப் பெற்றிருக்கும் என்பது இதுகாறும் கோட்பாட்டினை விமர்சித்ததிலிருந்து எடுத்த முடிவாகும். இக் கோட்பாட்டினைப் பொதுவாக இரு முறைகளில் அணுகித் தெளிவு பெறலாம். ஒன்று, நாடுகளுக்கிடையே நிலவும் தராதரக் காரணி விலை விகிதங்களைப் (relative factor prices) பொறுத்து அந் நாடுகளிடம் உள்ள காரணிகளின் தராதரப் பேற்றினைக் (relative factor abundance) கணக்கிடும் விலைசார் விளக்கத்தினைத் (price definition) தந்திடலாம். மற்றொன்று, நாடுகளிடையே உள்ள காரணிகளின் அளவினைப் (factor quantities) பொறுத்து அந் நாடுகளிடம் உள்ள காரணிகளின் தராதரப் பேற்றினைக் (relative factor abundance) கணக்கிடும் பருப்பொருள்சார் விளக்கத்தினைத் (physical definition) தந்திடலாம். இந்தக் கோட்பாட்டினை அணுகும் முதல் முறையினை அடுத்து வரும் வரைபடம் 4.7 மூலம் விளக்கிடலாம்.

நாடுகளுக்கிடையே நிலவும் உற்பத்திக் காரணிகளின் தராதர விலையைப் பொறுத்து அவற்றின் தராதர அளவு அமைகிறது. இரு நாடுகளிலும் கிடைத்திடும் குறிப்பிட்ட இரு காரணிகளின் விலைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, எந்த நாட்டில் எந்தக் காரணி மிதமிஞ்சிக் காணப்படுகிறது, எந்தக் காரணியில் கிடைப்பருமை நிலவுகிறது என்பதனைக் கண்டு பிடிக்க முடியும். இதனை விளக்கிடும் வகையில், $\frac{PL_e}{PN_e} > \frac{PL_a}{PN_a}$ என எடுகோளிட்டுக் கொள்வோம். இத்துடன் முன்பு மேற்கொண்ட எடுகோள்களை அப்படியே கடைப்பிடிக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். PL_e, PN_e ஆகிய அடையாள எழுத்துக்கள் இங்கிலாந்தில் நிலம், உழைப்பு ஆகிய காரணிகளின் விலைகளையும்; PL_a, PN_a ஆகியவை ஆஸ்திரேலியாவில் அக் காரணிகளின் விலைகளையும் சுட்டிடுவதாகக்கொள்வோம். இங்கிலாந்தில் தொழிலாளர் தம்

கூலி குறைவாக உள்ளதால் அந் நாட்டில் உழைப்புப் பேறு மிகுந்துள்ளது எனவும்; ஆஸ்திரேலியாவில் நிலம் மலிவாகக் கிடைப்பதால் நிலப்பேறு மிகுந்துள்ளது எனவும், மேலே கொண்டுள்ள எடுகோளின் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.



வரைபடம் 4-7 ஹெக்ஷர்-ஓலின் கோட்பாடு

நாடுகளுக்கிடையே காரணிகளின் தராதர விலை விகிதங்கள்

எடுத்துக்கொண்டுள்ள பண்டங்கள் ஆடை, கோதுமை ஆகும். அவற்றின் சம உற்பத்திக் கோடுகள் CC, WW ஆகிய இரண்டும் ஒன்றையொன்று ஓரிடத்தில் மட்டும் ஊடறுத்துக் கொள்கின்றன. ON-எனும் கிடையச்சில் உழைப்பு அளக்கப் படுகிறது. அதற்கருகாமையில் ஆடையின் சம உற்பத்திக் கோடு (CC) அமைந்துள்ளது. எனவே, ஆடை உற்பத்தியில் உழைப்புச்செறிவு மிகுதி என ஊகிக்கலாம். அவ்வாறே OL எனும் செங்குத்தச்சு நிலத்தின் அளவினை அளத்தலின் காரணமாகவும், கோதுமையின் சம உற்பத்திக்கோடு செங்குத் தச்சிற்கு அருகாமையில் அமைந்துள்ளமையாலும், கோதுமை உற்பத்தி நிலச்செறிவுமிக்கது எனக்கொள்ளலாம். AA-எனும் கோட்டின் சரிவு, ஆஸ்திரேலியாவில் நிலவிடும் காரணி விலை விகிதங்களைக் குறிப்பதாகக் கொள்வோம். கோதுமை, ஆடை ஆகியவற்றின் சம உற்பத்திக் கோடுகள் முறையே WW, CC ஆகியவற்றினை முறையே T_1, T_2-எனும் புள்ளிகளில் தொட்டுச் செல்லும் தொடுகோடாக AA உள்ளது. இதற்கு மாறாக,

இங்கிலாந்தில் உழைப்புப்பேறு மிகுந்தும் நிலப்பேறு குறைவாக இருப்பதால், அந் நாட்டிற்குரிய காரணி விலை விகிதக் கோடு EE சரிவு குறைந்தே இருக்கும். அக் கோடு, ஆடைக்குரிய சம உற்பத்திக் கோட்டினை (cc) T_3 என்ற புள்ளியில் தொட்டுச் செல்கிறது. EE கோட்டிற்கு நேர் இணையாக E'E' எனும் இணைக்கோட்டினைக் கோதுமைக்குரிய சம உற்பத்தி கோட்டிற்குத் (ww) தொடுகோடாக வரைந்தால், அது T_4 எனும் புள்ளியினைத் தொட்டுக்கொண்டு செல்லும்.

வரைபடம் 4.7-லிருந்து தெரிவது என்ன? ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரையில், காரணிச் சமநிலை வீதாசாரங்கள் **(equilibrium factor proportions)** கோதுமை உற்பத்திக்கு OT_1; ஆடை உற்பத்திக்கு OT_2. இங்கிலாந்தில் காரணிச் சமநிலை வீதாசாரங்கள் ஆடை உற்பத்திக்கு OT_3; கோதுமை உற்பத்திக்கு OT_4.

அடுத்து, இரு நாடுகளிலும் அவ்விரு பண்டங்களைக் குறித்த அளவு உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவினை ஆராய்வோம். ஆஸ்திரேலியா உற்பத்தி செய்திடும் கோதுமைக்கு (ww) ஆகும் செலவு, அந் நாடு பயன்படுத்தும் காரணி வீதாசாரத்தினையும் (OT_1) அந் நாட்டில் நிலவிடும் காரணித் தராதர விலை விகிதத்தையும் (AA) பொறுத்தது. அதாவது, வேறு வகையில் சொல்ல வேண்டுமெனில், OA-நிலம் முழுவதையும் பயன்படுத்துவதற்காகும் செலவுதான் கோதுமை உற்பத்திக்காகும் செலவு எனலாம். அதுபோலவே, ஆஸ்திரேலியா உற்பத்தி செய்திடும் ஆடைக்கு (cc) ஆகும் செலவும் காரணி வீதாச்சாரம் (OT_2), காரணிகளின் தராதர விலை விகிதம் (AA) ஆகியவற்றைப் பொறுத்தது; அதாவது, OA-நிலம் முழுவதற்கும் ஆகும் செலவே அது. ஆக, ஆஸ்திரேலியா ஆடை, கோதுமை ஆகிய இரண்டு பண்டங்களையும் உற்பத்தி செய்திட ஆகும் செலவு (OA) ஒன்றே.

ஆஸ்திரேலியாவில் உற்பத்தியாகும் அதே அளவு கோதுமையை இங்கிலாந்தில் உற்பத்தி செய்திட ஆகும் செலவு, OE' நிலம் முழுவதையும் பயன்படுத்துவதற்காகும் செலவே ஆகும்; அதுபோலவே, ஒரேயளவு ஆடை உற்பத்திக்காகும் செலவும் OE நிலம் முழுவதையும் பயன்படுத்துதற்காகும் செலவே எனலாம். ஆக, இங்கிலாந்தில் கோதுமையைவிட ஆடை உற்பத்திக்குச் செலவு குறைவு எனலாம். ஒரேயளவு கோதுமை, ஆடை உற்பத்தி செய்வதில் இங்கிலாந்து ஆடை

உற்பத்தியில் தராதரத் தகுதிபெற்றிருக்கிறது என்றும், ஆஸ்திரேலியா கோதுமை உற்பத்தியில் தராதரத் தகுதிபெற்றிருக்கிறது என்றும் முடிவு கூறலாம். இதற்குக் காரணம். முதலில் குறிப்பிட்டுள்ளதுபோல, இங்கிலாந்தில் உழைப்பிற்குப் பஞ்சமில்லை; ஆஸ்திரேலியாவில் நிலத்திற்குப் பஞ்சமில்லை என்பதுதான்.

வரைபட விளக்கம் (2)

முந்திய பகுதியில் காரணிகளின் தராதர விலைகளைக் கொண்டு காரணிகளின் தராதரப் பேற்றினைக் கணித்தோம். இப் பகுதியில் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கின்ற காரணிகளின் அளவைப் பொறுத்து, நாடுகளுக்கிடையே காரணிகளில் ஏற்படக்கூடிய தராதரப் பேற்றினைக் கணிப்போம். ஹெக்ஷர்-ஓலின் மாதிரியத்தை (model) விளக்கும் வகையில், $\frac{L_a}{N_a} > \frac{L_e}{N_e}$ எனப் பாவித்துக்கொள்வோம். L_a, N_a-எனும் எழுத்துக்



வரைபடம் 4·8
காரணிகளின் அளவைப் பொறுத்து காரணிகளில் தராதர வேறுபாடு

குறிகள் முறையே ஆஸ்திரேலியாவில் கிடைத்திடும் நிலம், உழைப்பு ஆகியவற்றின் அளவுகளையும், L_e, N_e ஆகியவை முறையே இங்கிலாந்தில் கிடைத்திடும் நிலம், உழைப்பு முதலிய

பெரூர்.

வற்றின் அளவுகளேயும் குறிப்பன. ஆஸ்திரேலியா நிலத்தை நிறைய பெற்றிருக்கிறது. இங்கிலாந்து உழைப்பினை மிகுதியாகப் பெற்றிருக்கிறது. இந்த நிலையை வரைபடம் 4.8 வெவ்வேறு நீள, அகலங்களைக்கொண்ட இருவேறு பெட்டிகளை இணைத்து வரைந்து காட்டுகிறது.

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து நாடுகளின் உற்பத்திக் காரணி அளிப்புகளை முறையே OPQR, OP'Q'R' ஆகிய பெட்டிகள் குறிக்கின்றன. காரணி அளிப்புகளின் விகிதங்களை இரு நாடுகளின் மூலைவிட்டங்கள் OQ, OQ' முறையே காட்டு கின்றன. ஆடை உற்பத்தி உழைப்புச் செறிவுமிக்கது எனில், அதனுடைய சம உற்பத்திக் கோடுகள் இரு நாடுகளுக்கும் பொதுவாக O-மூலத்திலிருந்து துவங்குகின்றன. கோதுமையின் சம உற்பத்திக் கோடுகள் ஆஸ்திரேலியாவிற்கு Q-மூலத்தி



வரைபடம் 4-9 காரணி-விலை சமனாதல்

லிருந்தும், இங்கிலாந்து நாட்டிற்கு Q'-மூலத்திலிருந்தும் துவங்கு கின்றன. ஆடை உற்பத்தி உழைப்புச் செறிவுமிக்கது என்பதால், ஆஸ்திரேலியாவின் ஒப்பந்தக் கோடு OTQ, மூலை விட்டம் OQ–க்குக் கீழேயும், இங்கிலாந்தின் ஒப்பந்தக் கோடு

OT'Q', மூலை விட்டம் OQ'–க்குக் கீழேயும் உள்ளன. எடு கோளிட்டுக் கொண்டதுபடி, இரு நாடுகளுக்கிடையே உற்பத்திக்காரணிகளின் தராதர அளவில் (பேற்றில்) நிலவிடும் வேறுபாட்டின் (difference in relative factor endowments) காரணமாக உற்பத்தி சாத்தியங்களிலும் வேறுபாடு ஏற்படு கிறது. இம்மாதிரியான வேறுபாட்டின் தன்மை என்ன?

வரைபடம் 4.9-இல் இந்த நிலை விளக்கப்படுகிறது. OTQ, OT'Q' ஆகிய இரண்டும் ஒப்பந்தக் கோடுகள். இக் கோடு களில் எப் புள்ளிகள் இட்டாலும், அவை இரு பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபடும் இரு காரணிகளின் இறுதிநிலை உற்பத்தித் திறன்களின் விகிதங்கள் சமமாக இருத்தலையே குறிப்பன. அதாவது, சுருங்கக்கூறின், ஒப்பந்தக் கோட்டின்மீது இடப் படும் ஒவ்வொரு புள்ளியும் உற்பத்திச் சமநிலைப் புள்ளியே ஆகும். இரு நாடுகளுக்கிடையில் வாணிபம் துவங்கப்பெறின், வாணிபச் சமநிலைப்புள்ளிகளைக் குறித்திடவேண்டும்; இரு நாடுகளுக்கிடையே பண்டங்களின் தராதர விலைகள் சமமாய் இருக்கவேண்டும். ஆகவே, ஒப்பந்தக் கோடுகளிரண்டின் மீது, மேலே குறிப்பிட்ட முறைப்படி, இப் புள்ளிகளை ஒரு கோட்டிற்கு ஒரு புள்ளியாக இடவேண்டும்.

ஒப்பந்தக்கோடு OTQ–ல் குறிக்கப்பட்ட புள்ளி T ஆகும். QT, OT' Q'–ஐ T'–ல் சந்திக்கிறது. QT, Q'T' ஆகிய வற்றை இணைக்கவேண்டும். ஆடை உற்பத்தி சார்பு (OTT) இருநாடுகளிலும் ஒரே மாதிரியாக, நேர்கோடாக இருக்கின்ற காரணத்தினுல் இரு பெட்டிகளிலும் ஒரே மாதியான சம உற்பத்தி கோடுகளே பயன் படுத்தப்பகின்றன. OTT'–ல் இடும் எப் புள்ளியிலும் இருகாரணிகளின் இறுதிநிலை உற்பத்தித் திறன்கள் சமமாயிருத்தல் வேண்டும். இரு நாடுகளின் வெவ் வேறு ஒப்பந்தக் கோடுகளின்மீது T, T' எனும் புள்ளிகள் உள்ளமையால், இரண்டு பண்டங்களையும் உற்பத்தி செய் வதில் இரண்டு காரணிகளின் இறுதிநிலை உற்பத்தித் திறன் களின் விகிதங்கள் எப் புள்ளியிலும் ஒன்ருகவே இருக்க வேண்டும். இதிலிருந்து பெறப்படுவது என்னவெனில், இரண்டில் எந்தப் பண்டத்தை உற்பத்தி செய்தாலும் T, T' எனும் புள்ளிகள் இரண்டிலும் காரணிகளின் இறுதிநிலை உற்பத்தித் திறன்களின் விகிதங்கள் ஒரே மாதிரியாகவே இருக்கும். Q, Q' மூலங்களிலிருந்து வரையப்படும் கோதுமை யின் சம உற்பத்திக் கோடுகள் ஒரே மாதிரியாக இருப்பதால், QT, Q' T' ஒன்றுக் கொன்று இணைகோடுகளாக இருத்தல்

வேண்டும்; இல்லையெனில், T, T' புள்ளிகளில் கோதுமை உற்பத்தியில் இருகாரணிகளின் இறுதிநிலை உற்பத்தித் திறன்கள் சமமாக இருக்கமாட்டா.

புள்ளி T–ன் மீது நிலவிடும் பண்ட விலை விகிதமும் புள்ளி T_1–ன் மீது நிலவிடும் பண்ட விலை விகிதமும் சமமாக இருக்கின்ற காரணத்தினால் அப் புள்ளிகளிரண்டும் வாணிபச் சமநிலைப்புள்ளியாக இருந்திட சாத்தியமுண்டு, மாறு விளைவின் காரணமாக, எந்தக் காரணியாயினும் அதன் இறுதிநிலை உற்பத்தித்திறன் OTT'–எனும் கோட்டிலிடப்படுகின்ற எந்த புள்ளியிலும் ஒரே மாதிரியாகவே இருக்கும். ஆகவே, இங்கிலாந்து (E), ஆஸ்திரேலியா (A) ஆகிய நாடுகளில் ஆடை (C) உற்பத்தியில் உழைப்பின் (N) இறுதிநிலை உற்பத்தித் திறன்கள் $N'C_e$ $N'C_a$–ஆத இருப்பின், புள்ளி T–ல் நிலவிடும் $N'C_a$ T'–ல் நிலவிடும் $N'C_e$ ஆகிய இரண்டும் சமமாக இருக்கும். இதுபோலவே, கோதுமை உற்பத்தியில் இருநாடுகளிலும் உழைப்பின் இறுதிநிலை உற்பத்தித்திறன் (NW'), QT, Q'T' கோடுகளில் சமமாக இருக்கும்.

நிறைவுப்போட்டி (perfect competition) நிலவுகையில். காரணியின் விலை எப்படி அமையும்? குடுப்பிட்ட காரணியினால் தயாரிக்கப்படும் பண்டத்தின் விலையைக் காரணியின் இறுதிநிலை உற்பத்தித்திறனால் பெருக்கக் கிடைத்திடும் எல்லாவற்றிலும் காரணியின் விலை சமமாகவே இருக்கும். PC_e, PW_e ஆகிய எழுத்துக்குறிகள், இங்கிலாந்தில் முறையே ஆடை, கோதுமை ஆகியவற்றின் விலைகளைக் குறிக்கின்றனவெனில்,

$$PC_e \cdot N'C_e = PW_e \cdot L'W_e$$

$$\frac{PC_e}{PW_e} = \frac{L'W_e}{N'C_e}$$

இவ்வாறே, ஆஸ்திரேலியாவிற்கும் $\frac{PC_a}{PW_a} = \frac{L'W_a}{N'C_a}$ ஆனால் T, T' புள்ளிகளில் இரு நாடுகளிலும் $N'C_e = N'C_a$ ஆகவும், $N'W_e = N'W_a$ ஆகவும் உள்ளன. குறிப்பிட்ட இரண்டு நாடுகளில் பண்டங்களின் விலை விகிதங்கள் சமமாகவிருத்தல் வேண்டும். ஆக, வாணிபம் துவங்கிய பின்னர், இங்கிலாந்து தமது ஒப்பந்தக் கோட்டிலுள்ள T-எனும் புள்ளியில் அமைந்திடும் வகையில் பண்டத்தின் விலைகள் அமைந்திடின், அமெரிக்கா தமது ஒப்பந்தக் கோட்டிலுள்ள T'-இல் நிச்சயமாக அமையும். இவ்வாறே இரட்டை, இரட்டையாக வேறு புள்ளிகளையும் கண்டுபிடித்திடலாம். இப் புள்ளிகளில் ஒவ்வொரு

பண்டத்தினையும் உற்பத்தி செய்திட ஒரே மாதிரி காரணி வீதாசாரத்தினையே இரு நாடுகளும் பயன்படுத்தும்.

நாடுகள் பெற்றுள்ள காரணிப்பேற்றினைப் பொறுத்து உற்பத்தி அமையும் என்பதை இப்பொழுது காண்போம். இங்கிலாந்தில் உழைப்பு மிக்குள்ளதால், நிலத்தைவிட உழைப்பினை மிகுதியாகப் பயன்படுத்தி உழைப்புச்செறிவு மிகுந்துள்ள ஆடையினை அந் நாடு உற்பத்தி செய்திடும். அவ்வாறே நிலத்தில் பஞ்சமிலா ஆஸ்திரேலியா நிலத்தை அதிகமாகப் பயன்படுத்தி, நிலச்செறிவுமுக்குள்ள கோதுமையை உற்பத்தி செய்திடும். ஆக, இரு நாடுகலும் வெவ்வேறு வீதாசாரங்களில் காரணிகளைப் பயன்படுத்தும். வாணிபம் துவங்கிய பின்னர், T, T'–எனும் புள்ளிகளில் சமநிலை ஏற்படுவதாகக் கொள்வோம். இங்கிலாந்தில் ஆடை உற்பத்தி OT' தூரத்தைப் பொறுத்த வீதாசாரத்திலும், ஆஸ்திரேலியாவில் OT தூரத்தைப் பொருத்த வீதாசாரத்திலும் அமையும். அதாவது, இருநாடுகளிலும் ஆடை உற்பத்தியின் விகிதம் $\frac{OT}{OT'}$ ஆகும். இவ்வாறே Q, Q'– மூலங்களிலிருந்து இணைக்கதிர்களாக முறையே QT, Q'T' கிளம்புவதால் இருநாடுகளிலும் கோதுமை உற்பத்தி விகிதம் $\frac{QT}{Q'T'}$ ஆகும். OT, TO'–ஐவிடச் சிறியது. Q'T', QT–ஐவிடச் சிறியது. நிலப்பேறுமிக்க ஆஸ்திரேலியா நிலச்செறிவு மிக்க கோதுமையையும், உழைப்புப்பேறு மிக்க இங்கிலாந்து உழைப்புச் செறிவு மிக்க ஆடையையும் உற்பத்தி செய்திடல் இயல்பு என்பது நிருபணம்ஆகிறது. இரு ஒப்பந்தப் கோடுகளிலும் இணையாக அமைகின்ற வாணிகச் சமநிலைப் புள்ளிகள் அனைத்தும் இந்த உண்மையினை நிருபிக்கும் எனலாம்.

வரைபட விளக்கம் (3)

எனினும், இரு நாடுகளும் இரு பண்டங்களையுமே உற்பத்தி செய்ய வேண்டுமென்றோ, ஒவ்வொன்றிலும் சிறிதளவு உற்பத்தி செய்ய வேண்டுமென்றோ, கருத்துப்பட ஒப்பந்தக் கோடுகளில் வாணிபச் சமநிலைப்புள்ளிகளின் இணைகள் **(pairs)** அமையவில்லை. காரணிப்பேற்றில் இரு நாடுகளுக்கிடையே நிலவுகின்ற தராதரபேதம் எர்த அளவிற்கு உயர்ந்துள்ளதோ, அதேயளவிற்கு குறிப்பிட்ட பண்டங்களில் சிறப்புத் தேர்ச்சியும் உயர்ந்திருக்கும். உதாரணமாக மூலதனம் அபரிமிதமாக உள்ள நாட்டில் மூலதனச் செறிவுமிக்க

பண்டத்தினை உற்பத்தி செய்வதில் அந் நாடு சிறப்புத் தேர்ச்சி பெறும்; இரண்டாவது பண்டத்தை உற்பத்தி செய்தலை நிறுத்தி விடவும்கூடும். இன்னும், இரண்டு பண்டங்களின் உற்பத்திக்கு ஆகும் காரணிச் செறிவுகளிலுள்ள பேதம் குறையக் குறைய சிறப்புத்தேர்ச்சியுறல் அதிகரிக்கும். சுருங்கக்கூறின், இரு பண்டங்களின் உற்பத்திக்கு வேண்டிய காரணிச்செறிவுகளிலுள்ள வேறுபாடுகளைப் பொறுத்து, இரு நாடுகளின் காரணிப் பேற்றில் வேறுபாடு அமைகின்றது; ஏதேனுமொரு நாட்டில் சிறப்புத் தேர்ச்சி முழுமையுறுதல் இவ் வேறுபாட்டினைச் சார்ந்திருக்கும்.

இதுகாறும் விளக்கியதிலிருந்து தெரியவருவது என்னவெனில், உற்பத்தியில் ஒப்புமை வாய்ப்பிற்குக் காரணிப் பேற்றில் ஏற்படுகின்ற தராதர வேறுபாடே காரணியைக் கொண்டு, அதே காரணிச் செறிவுள்ள பண்டத்தையே உற்பத்தி செய்து, ஒரு நாடு ஏற்றுமதி செய்திடும் என்ற ஹெக்ஷர்–ஓலின் கோட்பாடு இதனாலேயே நிரூபிக்கப் படுவதில்லை. ஏன்? உற்பத்தியிலுள்ள ஒப்புமை வாய்ப்பின் அளவினைத் தேவை நிலைகள் (demand conditions), முழு அளவிற்குக் குறைத்துவிட்டாலோ அல்லது ஒப்புமை வாய்ப்பினையே முழுதும் நீக்கிவிட்டாலோ, ஹெக்ஷர்–ஓலின் கோட்பாடு செயல்படாது. ஆனால், வாணிகம் ஏற்படுவதாகக் கொண்டால், அது அக் கோட்பாட்டிற்கு மாறான முறையிலேதான் நிகழும் எப்படியெனில், கிடைப்பருமை (scarce) யுள்ள காரணியைக் கொண்டு, அதே காரணிச் செறிவுள்ள பண்டத்தை உற்பத்தி செய்து குறிப்பிட்ட நாடு ஏற்றுமதி செய்திடும்.

இரு நாடுகளிலும் முழு சிறப்புத் தேர்ச்சியுறல் ஏற்படும் வண்ணம் காரணிப்பேறுகள் அமைந்துள்ளதாகக் கொள்வோம். அப்படியெனில், உற்பத்தியில் கண்டிடும் ஒப்புமைத் தகுதி, பண்டங்களின் தராதர விலைகளின் மூலம் புலப்படும் இத்தகைய சூழ் நிலையில், தேவை நிலைகள் எப்படி இருப்பினும், குறிப்பிட்ட காரணியை மிதமிஞ்சிப் பெற்றிருக்கும் நாடு அக் காரணிச் செறிவுமிக்க பண்டத்தையே குறைந்த விலையில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்திடும் வாய்ப்பு குன்றாது. இதனை விளக்கிடும் வண்ணம் வரைபடம் 4.10 அமைந்துள்ளது.

இங்கிலாந்து உழைப்புக் காரணியை மிகுதியாகப் பெற்று, அக் காரணியின் செறிவு நிறைந்த ஆடையை நெய்திடும். உற்பத்தி சாத்தியக் கோடு RS ஆகும். நிலக்காரணியை

அபரிமிதமாகப் பெற்றுள்ள ஆஸ்திரேலியா அக் காரணிச் செறிவு நிறைந்த கோதுமை விளைச்சலைக் காட்டிடும். உற்பத்தி சாத்தியக் கோடு PQ ஆகும். P, P'-எனும் புள்ளிகளில் PQ கோட்டின் சரிவுகளும்; S', S-எனும் புள்ளிகளில் RS கோட்டின்



வரைபடம் 4-10

சரிவுகளும் சமமெனில், PQ கோட்டின் ஒரு பாகமாகிய PP[1]-இல் ஏதேனுமோர் புள்ளியும் (K) RS கோட்டின் ஒரு பாகமாகிய SS'–இல் ஏதேனுமோர் புள்ளியும் (K') சமமான சரிவுகளையே பெற்றிருக்கவேண்டும். சமநிலையில், உற்பத்தி சாத்தியக் கோட்டின் சரிவு காட்டிடும் இறுதிநிலைப் பதிலீட்டு வீதமும், (marginal rate of substitution) பண்ட விலை விகிதமும் சமமாக இருத்தல் வேண்டும். எனவே, வாணிபம் துவங்கிய பின்னர், பண்ட விலை விகிதம் PP' பாகத்திலுள்ள K'–எனும் புள்ளியில் அமையும் சரிவிற்கும் சமமாக இருத்தல் வேண்டும். இவ்வாறு இரட்டை, இரட்டையாக PP', S'S பாகங்களுக்குள்ளேயே அமைந்திடும் புள்ளிகளனைத்தும் வாணிபச் சமநிலை புள்ளிகளாகும். ஓரளவு சிறப்புத் தேர்ச்சியுறலே ஏற்பட்டிருக்கும். RS' அல்லது P'Q பாகத்தில் ஏதேனுமொரு புள்ளியில் அமைகிற

சரிவிற்குப் பண்ட விலை விகிதம் சமமானால், ஒரு நாட்டில் முழு அளவும் இன்னொரு நாட்டில் ஓரளவும் சிறப்புத் தேர்ச்சியுறல் ஏற்படும்.

காரணிப் பேற்றிலுள்ள பேதத்தால் உற்பத்தியில் ஒப்புமைத் தகுதி ஏற்படுவதையும் வரைபடம் 4.10 விளக்கும். இரு உற்பத்தி சாத்தியக் கோடுகளையும் ஊடறுத்திடும் வண்ணம் மூலத்திலிருந்து ஆரம் (radius) ஒன்றினை இழுத்திடின், அவ்வாறு ஊடறுத்திடும் புள்ளிகளில் இரு பண்டங்களின் உற்பத்தியும் இரு நாடுகளிலும் ஒரே வீதாசாரத்தில் இருக்கும். ஆனால், ஊடறுப்புப் புள்ளிகளில் RS கோட்டின் சரிவினைக் காட்டிலும் PQ கோட்டின் சரிவு செங்குத்தாகவிருக்கும். இதற்குப் பொருள் என்னவெனில், நிலம் மிகுதியாக உள்ள ஆஸ்திரேலியா, நிலச் செறிவுமிக்க கோதுமையை இங்கிலாந்தினைவிட குறைந்த பிறவாய்ப்புப் பெறுமானத்தில் விளைவிக்கிறது என்பதாகும்.

உற்பத்தியில் தராதரத் தகுதி இருந்தும்கூட, ஹெக்ஷர்-ஓலின் கோட்பாட்டின்படி வாணிபம் நடைபெறும் என்று கூற முடியாது. வாணிபம் துவங்குமுன்னர், நிலவும் தேவைநிலை காரணமாக, ஆஸ்திரேலியாவிலும் இங்கிலாந்திலும் சமநிலை முறையே K, L-எனும் புள்ளிகளில் ஏற்படுவதுடன், இங்கிலாந்தைவிட ஆஸ்திரேலியாவில் ஆடை மலிவாக உற்பத்தி செய்யப்படும். வாணிபம் துவங்கியவுடன், ஹெக்ஷர்-ஓலின் கோட்பாட்டிற்கு மாறாக, ஆஸ்திரேலியா ஆடையையும், இங்கிலாந்து கோதுமையையும் ஏற்றுமதி செய்யும். ஆனால், மிகுதியான நிலம் பெற்றுள்ள ஆஸ்திரேலியா நிலச்செறிவு மிக்க கோதுமையையும், மிகுதியான உழைப்புப் பேறுடைய இங்கிலாந்து உழைப்புச் செறிவுள்ள ஆடையையும் ஏற்றுமதி செய்திடும் சூழ்நிலை உருவானால்தான், ஹெக்ஷர்-ஓலின் கோட்பாட்டின்படி வாணிபம் நடைபெறுகிறது எனலாம். அத்தகைய சூழ்நிலை எவ்வாறு உருவாகும்? வாணிபம் துவங்குமுன்னர், இங்கிலாந்தைவிட ஆஸ்திரேலியாவில் கோதுமை மலிவாகக் கிடைத்திட வேண்டும்; வாணிபம் துவங்கு முன்னர், ஆஸ்திரேலியாவிற்குரிய சம உற்பத்திக் கோடு மீதுள்ள சம நிலைப் புள்ளியில் அமையும் PQ-வின் சரிவு இங்கிலாந்தின் கோடு RS மீதுள்ள சமநிலைப் புள்ளியில் அமையும் RS-ன் சரிவினைவிட செங்குத்தாக இருக்கும் வகையில் தேவை நிலைகள் அமைந்திருக்க வேண்டும். இரு நாடுகளிலும் துய்ப்புச்சுவை ஒரே மாதிரியாகவும், வருமானம் சார்ந்த தேவை நெகிழ்ச்சி

(income elasticity of demand) ஒருமை நெகிழ்ச்சியாகவும் (unitary elasticity) இருப்பின், இச் சூழ்நிலை அமையும்.

தேவை நிலைகளைச் சுட்டிடும்வண்ணம் சமநோக்குக் கோடுகளை (indifference curves) வரையலாம். இரு நாடுகளிலும் தேவை ஒரே மாதிரியாக உள்ளது என்ற எடுகோளிட்டுக் கொள்வோம். எனவே, I_1I_1, I_2I_2 ஆகிய சமநோக்குக் கோடுகள் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை; அவை RS, PQ என்ற உற்பத்தி சாத்தியக் கோடுகளை முறையே T_1, T_2 என்ற புள்ளிகளில் தொட்டுக்கொண்டு செல்கின்றன. வாணிபம் நிகழ்வதற்கு முன்னர், இங்கிலாந்தில் T_1–புள்ளியிலும் ஆஸ்திரேலியாவில் T_2–புள்ளியிலும் சமநிலை நிலவுகின்றது. வாணிபம் துவங்கிய வுடன், T_2–புள்ளியில் T_1–புள்ளியிலுள்ளதைவிட சரிவு செங்குத்தாக இருப்பின், ஹெக்ஷர்–ஓலின் கோட்பாடு செயல் படுகிறது என்று பொருள். ஆனால், I_2I_2 உயரத்திலிருப்பதால், அக் கோடு PQ–உற்பத்தி சாத்தியக் கோட்டினை P–க்கு வெகு அருகாமையில் தொட்டுச் சென்றிடும் வாய்ப்பு அதிகம்; அவ்வாறு தொட்டுச் செல்லும்பொழுது அப் புள்ளியின் அருகில் PQ–வின் சரிவு, T_1–ல் RS கோட்டின் சரிவினைவிடக் குறைவாக இருக்கும். இத்தகைய நிகழ்வினத்தில் கோட்பாடு செயல்படாது.

வருமானம் சார்ந்த தேவை நெகிழ்ச்சியில் ஒருமை நிலவுவதாகப் பாவித்துக்கொண்டால் மேற்குறிப்பிட்ட நிகழ் வினம் பொய்த்துவிடும்; கோட்பாடு உண்மையாகும். எவ்வாறு? தோற்றுவாயிலிருந்து (origin) வரையப்படும் வருமானம்–துய்ப்புக் கோடு (Income-consumption curve) ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சமநோக்குக் கோடுகளை ஊடறுத்துச் செல்லும் புள்ளிகளில் ஒரே மாதிரிச் சரிவுகளே அமைவன.[8] வரைபடம் 4.10–ல் உள்ளதுபோல, T_1, W, Z–எனும் புள்ளி களில் சம சரிவுகள் அமைந்துள்ளன. PQ, RS-ஐ மேலிருந்து வெட்டுவதால், W-எனும் புள்ளியில் PQ-வின் சரிவு, T_1–எனும் புள்ளியில் RS–ன் சரிவினைவிட அதிகமாக உள்ளது. இதன் பொருள், T_1, W, Z ஆகிய புள்ளிகளில் சம நோக்குக் கோடு களின் சரிவினைக் காட்டிலும் W-எனும் புள்ளியில் PQ–வின் சரிவு அதிகமாக உள்ளது என்பதுதான் இதன் பொருள், W–க்கு இடப்புறத்தில் சமநோக்குக் கோட்டினை PQ தொட்டுச் சென்றிடும் புள்ளி அமையும் என்பதுதான்; அப் புள்ளியில்,

[8] தோற்றுவாயிலிருந்து வரையப்படும் எந்த ஆரமும் ஒரே குடும்பத்தைச் சார்ந்த சமநோக்குக் கோடுகளை வெட்டிச் செல்லும் புள்ளி களிலெல்லாம் ஒரே மாதிரிச் சரிவுகளே உள்ளன.

Z-ல் உள்ளதைக் காட்டிலும் சமநோக்குக் கோட்டின் சரிவு அதிகமாக இருக்கும். வருமானம் சார்ந்த தேவை நெகிழ்ச்சி ஒருமையாக இருப்பதால்தான், PQ கோட்டிற்கும், சமநோக்குக் கோட்டிற்கும் உள்ள தொடுகொட்டினைவிட செங்குத்தாக இருக்கிறது. அதனால்தான் ஹெக்ஷர்-ஓலின் கோட்பாடு விளக்குகின்ற பாணியில் வாணிபம் தொடர்கிறது.

காரணி-விலை சமனுதல் (Factor-Price Equalisation)

இரு நாடு-இரு காரணி-இரு பண்டங்கள்-கொண்ட மாதிரியத்தில் (model) உற்பத்தி சார்புகள் இரு நாடுகளிலும் ஒரே மாதிரியாக இருப்பின், காரணிச் செறிவு அடிப்படையில் இரு பண்டங்களையும் பிரித்திடலாம். எந்த நாடும் ஒரே பண்ட உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியுறல் இல்லாதிருப்பின்,வாணிபத் துவக்கம் காரணி விலைகளைச் சமன் ஆக்கிவிடும். வரைபடம் 4.9–ல், T, T'–எனும் இணையான வாணிபப் புள்ளிகளில் (pairs of trade points), முழு அளவிற்குச் சிறப்புச் தேர்ச்சியுறல் இல்லையெனில், ஒவ்வொரு பண்ட உற்பத்தியிலும் ஒவ்வொரு காரணியின் இறுதிநிலை உற்பத்தித் திறனும் ஒரேயளவு இருக்கும்; அப் புள்ளிகளிலேயே பண்டங்களின் விலைகளும் சமமாகவே இருக்கும். இந்த விளைவிற்குக் காரணம், இரு நாடு களிலும் அப் புள்ளிகளிலேயே ஒவ்வொரு பண்ட உற்பத்தி யிலும், ஒரே வீதாசாரத்தில் காரணிகள் ஈடுபடுத்தப் பெற்றன என்பதுதான்.

இந்த காரணி-விலை சமனுதல் பற்றிய விளக்கத்தினை எட்ஜ்வர்த்-பவ்லே பெட்டி வரைபடம் மூலம் தந்துள்ளோம். இக் கருத்தினை விளக்கிட வேறிரண்டு முறைகளும் உண்டு. இரு பண்டங்களின் உற்பத்தி சார்புகளைச் சுட்டிடும் தனித்த சம உற்பத்தி கோடுகள் மூலம் எ. பி. லேனர் (A. P. Lerner) இக் கருத்தினை விளக்கிடுவார்.[9] காரணி வீதாசாரங்கள், பண்டங்களின் விலைகள், காரணி விலைகள் ஆகிய மூன்றையுமே வரைபடத்தில் படியச் செய்து, இக் கருத்தினை விளக்கிடும் பாங்கு மூன்றுவது முறைமையாகும்.[10]

மதிப்பீடு

பன்னாட்டு வாணிகம் பற்றிய தொன்மைப்பொருளியலார் கோட்பாடு, உழைப்புக் காரணியின் ஒப்புமைத்திறனை

[9] சார்லஸ். பி. கிண்டல்பெர்கர் : "பன்னாட்டுப் பொருளாதாரம்" Charles P. Kindleberger : "International Economics" ப. 548-550.

[10] மேலே உள்ள நூல். ப. 550-552.

மட்டும் கொண்டு நாடுகளிடையே எப் பண்டங்களில் வாணிகம் நடை பெறுகிறது என்பதனை விளக்குகிறது. உழைப்புக் காரணி ஏனைய காரணிகளுடன் இணைந்து செயல் படுவதில் உள்ள வேறுபாடுகளை அனுசரிந்து, உழைப்புத் திறனில் நாட்டுக்கு நாடு பேதம் ஏற்படுதலையோ இக் கோட் பாடு பரிசீலிக்கவில்லை. ஆனால், உழைப்புக் காரணியின் தன்மைமை மட்டும் கணக்கில் கொள்ளாமல், எல்லா காரணி களின் அளவினையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, ஹெக்ஷர் –ஓலின் கோட்பாடாகிய காரணி வீதாசாரக் கோட்பாடு (Factor proportions Theory) அனைத்துலக வாணிபத்தை விளக்கு கிறது. வெவ்வேறு வீதாசாரங்களில் இணைகின்ற காரணி கதம்பங்களைக் கொண்டு வெவ்வேறு பண்டங்கள் உற்பத்தி யாகின்றன என்ற உண்மையையும், வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு காரணிப்பேறுகள் நிலவுகின்றன என்ற உண்மை யையும் ஹெக்ஷர்-ஓலின் கோட்பாடு ஏற்றுக்கொண்டுள்ளது. குறுப்பிட்ட ஒரு பண்டத்தில் ஒப்புமைத் தகுதியினை, குறிப் பிட்ட சூழ்நிலையில் குறிப்பிட்ட காரணியின் முக்கியத்துவத்தின் காரணமாக குறிப்பிட்ட நாடு பெறுகிறது என்ற முடிவினை எடுப்பதற்கு மேலே குறித்துள்ள உண்மைகள் இக் கோட் பாட்டிற்குப் பயன்படுகின்றன.

என்றாலும், எளிய எடுகோள்களின் மூலம் காரணி வீதா சாரக் கோட்பாடும் எளிமையுற்றது என்பது உண்மைக்குப் புறம்பானது. நிறைவுப்போட்டி, காரணிகளின் தன்மைகளில் வேற்றுமை இல்லாதிருத்தல், பண்டங்களில் பேதமிலாதிருத்தல், வளர்ந்து செல் விளைவு செயல்படாமை, ஒரே மாதிரியான உற்பத்தி சார்புகள் ஆகிய எடுகோள்களனைத்தும் பிரத்தியட்ச உலகிற்குப் புறம்பானவை. எனினும், அதற்குரிய வரம்புகளுக் குள்ளாகவே ஹெக்ஷர்-ஓலின் மாதிரியம் பன்னாட்டு வாணிக விளக்கத்தைச் சிறப்புடன் தருகிறது எனப் பேராசிரியர் லங்காஸ்டர் (Lancaster) கூறுகிறார்.

நாடுகளுக்கிடையே, குறைந்தபட்ச வேற்றுமை நிலவுதலே வாணிபம் நிகழ்வதை விளக்கிடும் என்ற உண்மையை வருவிப்பதற்கு இத்தகைய எளிய ஹெக்ஷர்-ஓலின் மாதிரியம் தேவைப் படுகிறது. வாணிபம் நடைபெற தேவையான அளவிற்கு நாடுகளிடையே வேண்டிய குறைந்த பட்ச வேற்றுமை என்பது என்ன ? நாடுகளிடையே நிலவும் காரணிப் பேற்றிலுள்ள தராதர வேறுபாடே அது. மேலும், அறிவு, நுட்பவினைத்திறன் முதலியவற்றில் நாடுகளுக்கிடையே

உள்ள பேதத்தினை அகற்றிட, ஒரே மாதிரியான உற்பத்திச் சார்புகள் எனும் எடுகோள் பயன்படுகிறது. அதுபோல, அளவில் உள்ள வேற்றுமையினை நீக்கிட, மாறா விளைவு விதியினை எடுகோளாகக்கொண்டது பயன்படுகிறது. இறுதியில்ஒரே ஒரு வேற்றுமை மட்டும் நிலவுகிறது. ஒரே மாதிரியான தன்மையுள்ள காரணிகளின் வீதாசாரங்களில் உள்ள வேறுபாடு மட்டும் நிலவுகிறது. ஆக, இந்த மாதிரியம், இந்த அளவிற்கு எளிமையாக்கப்பட்டதற்குக் காரணமே, நாடுகளுக்கிடையே குறைந்த பட்ச வேற்றுமை நிலவுதலே வாணிபம் நிகழப் போதுமானது என்பதனை உணர்த்தவே எனலாம். இந்த மாதிரியத்தின் எளிமை, இக் கோட்பாட்டினுடைய முக்கியமான கூறுகளை உணருவதற்குப் பயன்படும். காரணிப்பேறுகளில் வேறுபாடு, காரணிகளில் ஏற்படும் தராதர வேறுபாடுகள், காரணிகளைத் தொழில் நுட்பமுறையில் வெவ்வேறு வகைகளில் இணைத்திடுதல் (அதாவது வெவ்வேறு உற்பத்திச் சார்புகள்) ஆகிய முக்கிய கூறுகளை நாம் பரிசீலிப்பதற்கு ஏற்ற முறையில் இக் கோட்பாடு எளிமையாக்கப்பட்டுள்ளது. முடிவாகக் கூறுவதெனில், ஒரு நாடு எதனை ஏற்றுமதி செய்வது, எதனை இறக்குமதி செய்வது என்பதனை நிர்ணயிப்பதற்கு, பண்ட விலைகளில் நிலவிடும் பன்னாட்டு வேறுபாடுகளைக் கணக்கிட வேண்டும். பண்ட விலைகளில் வேறுபாடுகள் ஏற்படுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவை காரணிப்பேற்றிலுள்ள வேறுபாடுகளும் வெவ்வேறு உற்பத்திச் சார்புகள் நிலவுதலும் ஆகும்.

5. மில் தந்த பன்னாட்டு மதிப்புக் கோட்பாடு

(Mill's Theory of International Values)

தேவையின் பங்கு

பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபடும் நாடு எப் பண்டங்களை இறக்குமதி செய்திடும் ? இக் கேள்விகளுக்குரிய விடையினைத் தராதரச் செலவுகளைக் கணக்கிடுதல்மூலம் பெற்றோம். ஆனால், இவ் விடை முழுமையானதன்று; ஏனெனில், இது தேவையின் பங்கினை அறவே ஒதுக்கிவிட்டு, அளிப்பினையே முழுதும் சார்ந்துள்ளது. தேவையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அயல் நாட்டு வாணிபத்தில் இடம்பெறும் பண்டங்கள் எந்த விலையின் அடிப்படையில் இடம்பெறும் என்பதை நாம் ஆராய வேண்டும்.

உண்மையில், ரிக்கார்டோவின் ஒப்புமைச் செலவு கோட்பாடே; நாடுகளுக்கிடையே வாணிபம் நடைபெறுவது நன்மையே பயக்கும் என்ற சேமநலத் தத்துவத்தை அனைத்துல கிலும் நிறைவேற்றப் பயன்படும். சிறந்த கருவியே அது. தொன்மைப்பொருளியலாரின் இக் கோட்பாட்டினை நன்கு புரிந்துகொண்டு மதிப்பீடு வழங்க, அதனுடைய சேமநலப் பகுத்தாய்வினைக் கருத்தில் கொள்ளவேண்டுமெனப் பேராசிரியர் வைனர் குறிப்பிடுகிறார்.[1] வாணிப வீதங்களை (terms of trade) விளக்குவதன் மூலம் தொன்மைப் பொருளிய லார் வாணிபத்தின் சேமநலக் கூறுகளை விளக்குகின்றனர். வாணிபத்திலிருந்து கிடைத்திடும் ஆதாயப்போக்கின் குறியீட் டெண்ணாக வாணிப வீதங்கள் உள்ளன. அப்படியெனில், வாணிப வீதங்கள் எவ்வாறு கணக்கிடப்படுகின்றன?

வாணிபத்தின் மூலம் நாடுகள் ஆதாயம் பெறுவது எவ்வாறு என்பதைத்தான் ரிக்கார்டோ (Ricardo) விளக்கினாரே

[1] ஜேகப் வைனர் : "பன்னாட்டு வாணிபக் கோட்பாட்டில் ஆய்வுகள்", Jacob Vainer : "Studies in the Theory of International Trade" ப. 437.

தவிர, வாணிபத்தின் மூலம் கிடைத்திடும் ஆதாயத்தை நாடுகள் எவ்வாறு பகிர்ந்து கொள்கின்றன என்பதைப் பற்றி விளக்க வில்லை. அதாவது, எந்த விகிதத்தில் பண்டங்கள் நாடுகளுக் கிடையே பரிவர்த்தனை ஆகின்றன என்பதனை ரிக்கார்டோ பரிசீலனை செய்யவில்லை. ஏனெனில், அவர் வாணிபத்தின் தரத்தைப் பற்றி சிந்தித்தாரேயன்றி, வாணிபத்தின் அளவினைப் பற்றி அல்ல. வாணிபத்தின் அளவினைப்பற்றிய சிந்தனையை ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill) மேற்கொண்டார். பன்னாட்டுத் தேவைச் சமன்பாட்டினைக் (equation of international demand) கொண்டு தான் இருநாடுகளுக்கிடையே பண்டமாற்று வாணிப வீதங்கள் (Barter terms of trade) நிர்ணயிக்கப்படுகின்றன என்பது மில்லின் கருத்து. பன்னாட்டுத் தேவைச் சமன்பாட்டினையே பரிமாற்றத் தேவைக் கோட்பாடு (doctrine of reciprocal demand) எனலாம்.

பண்டமாற்று வாணிப வீதங்கள் என்றால் என்ன? ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களின் மதிப்பளவிற்குச் சமமாக இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் அளவினைக் குறித்திடுவதே பண்ட மாற்று வாணிப வீதங்களாகும். பண்டங்கள் எந்த விகிதத்தில் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப் படுகின்றனவோ அவ் விகிதமே பண்டமாற்று வாணிப வீதமாகும் (Barter Terms of Trade) ஏற்றுமதி செய்யப்படும் பண்டத்தின் மொத்த மதிப்பும் இறக்குமதி செய்யப்படும் பண்டத்தின் மொத்த மதிப்பும் சமமாக இருப்பின், ஏற்றுமதி, இறக்குமதி விகிதத்திற்குச் சமமாக அவற்றின் விலை விகிதம் பரிமாற்று பெற்று, தலைகீழாக விழுவதுதான் பண்டமாற்று வாணிப வீதங்கள் எனப்படும். $\frac{W}{C} = \frac{P_c}{P_w}$ என்ற சமன் பாட்டின் மூலம் இதனைத் தெளிவு படுத்தலாம். ஒரேயளவு ஏற்றுமதி செய்திடும் பண்டங்களுக்கு இறக்குமதி மூலம் கூடுதலான பண்டங்கள் கிடைத்தாலோ, அல்லது ஒரேயளவு இறக்குமதி செய்திடும் பண்டங்களுக்குக் குறைந்த அளவு பண்டங்களை ஏற்றுமதி செய்தாலே போதுமென்றாலோ, குறிப் பிட்ட நாட்டிற்கு அயல் நாட்டு வாணிபம் சாதகமாக உள்ளது என்று பொருள். இதனையே வேறு முறையில் சொல்வதெனில், இறக்குமதியின் ஒவ்வோர் அலகிற்கும் தரப்படும் விலையைவிட ஏற்றுமதியின் ஒவ்வோர் அலகிற்கும் பெறும் விலை அதிக மெனில், அந் நாட்டின் பண்டமாற்று வாணிப வீதம் சாதகமாக அமைந்துள்ளது எனலாம். எந்தப் பண்டங்கள் பன்னாட்டு வாணிபத்தில் இடம் பெறுவன என்பதனை, உற்பத்திச் செலவு

களின் பங்கினை ஆதாரமாகக் கொண்டு ரிக்கார்டோ விளக்கம் தருகிறார் எனில், வாணிப விதத்தினை நிர்ணயிப்பதில் பன்னாட்டுத் தேவையின் பங்கு என்ன என்பதனை மில் பரிசீலனை செய்கிறார்.

பரிமாற்றத் தேவைக் கோட்பாடு

ரிக்கார்டோ போலவே, ஜான் ஸ்டூவர்ட் மில் அவர்களும் இரு நாடு–இரு பண்டங்கள் உடைய பன்னாட்டு வாணிப மாதிரியத்தையே கையாண்டுள்ளார். ஒரு நாட்டிற்கு மற்றொரு நாட்டின் பண்டம் தேவைப்படுகிறது என்றால், அந்தத் தேவையின் அளவும் உறுதிப்பாடும் நெகிழ்ச்சியுமே இரு நாடு களும் அந்த பண்டத்தில் எந்த விகிதத்தில் வாணிபம் செய்கிறதோ அந்த விகிதத்தை நிர்ணயம் செய்திடும். இதுவே, மில் தந்த கோட்பாடாகும்.

இக் கோட்பாட்டினை விளக்கிட, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து எனும் இரு நாடுகளை எடுத்துக்கொள்வோம். உழைப்பின் ஓரலகினை மட்டும் பயன்படுத்தினால் இங்கிலாந்து 6 கிலோ கிராம் கோதுமை அல்லது 18 மீட்டர் ஆடை உற்பத்தி செய்திட முடியும் என்று எடு கோளிட்டுக் கொள்வோம். அவ்வாறே, ஆஸ்திரேலியா ஓரலகு உழைம்பினை மட்டும் பயன்படுத்தி, 6 கிலோ கிராம் கோதுமை அல்லது 12 மீட்டர் ஆடை உற்பத்தி செய்திட முடியும் என எடுகோளிடுவோம். பன்னாட்டு வாணிபம் நடைபெறாதிருக்கும்பொழுது, அவ்விரு நாடுகளிலும் உள்நாட்டு வாணிபமே நடைபெறும். அப் பொழுது, உள்நாட்டு உற்பத்திச் செலவினை அனுசரித்தே பண்டத்தின் உள்நாட்டு மதிப்பு அல்லது அதன் உள்நாட்டு விலை நிர்ணயமாகும். உள்நாட்டு வாணிபம் மட்டும் நடக்கும் பொழுது, இங்கிலாந்தில் நிலவிடும் மாற்று விகிதம், 6 கி. கி. கோதுமைக்கு 18 மீட்டர் ஆடை என்றிருக்கும்; ஆஸ்திரேலியா வில் 6 கி.கி. கோதுமைக்கு 12 மீட்டர் ஆடை என்ற விகிதத்தில் இருக்கும்.

ஆடை நெய்தலில் இங்கிலாந்திற்கு ஒப்புமைத் தகுதியும், கோதுமை வேளாண்மையில் ஆஸ்திரேலியாவிற்கு ஒப்புமைத் தகுதியும் இருப்பதால், இரு நாடுகளுக்கிடையே வாணிபம் நடைபெற முடியும். இங்கிலாந்து தமது ஆடைக்கு ஈடாக உள்நாட்டில் கிடைத்திடும் கோதுமையைவிடக் கூடுதலாக ஆஸ்திரேலியாவிலிருந்து கிடைக்கப்பெற்றால், அந் நாடு தமது ஆடையை ஏற்றுமதி செய்து, ஆஸ்திரேலியாவிலிருந்து

கோதுமையை இறக்குமதி செய்துகொள்ளும். அதுபோலவே, ஆஸ்திரேலியாவும் தமது கோதுமைக்கு உள்நாட்டில் கிடைத்திடும் ஆடைடைவிட அதிகமாக இங்கிலாந்திலிருந்து கிடைக்கப்பெற்றால், தமது கோதுமையை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்துவிட்டு, அதனிடமிருந்து ஆடையினை இறக்குமதி செய்துகொள்ளும். இத்தகைய வாணிப நிகழ்வில் இரு நாடுகளுக்கும் ஆதாயம்தான்.

பன்னாட்டு வாணிபத்திற்கு முன்னர், கோதுமையும், ஆடையும் 6 ; 18 என்ற விகிதத்தில் இங்கிலாந்திற்குள்ளாகவே பரிவர்த்தனை ஆகுமெனில், 18 மீட்டர் ஆடைக்கு 6 கி.கி.-க்கு மேல் கோதுமையை ஆஸ்திரேலியா வழங்கினால்தான் வாணிபம் இரு நாடுகளுக்கிடையே நடைபெறும். அதுபோலவே, கோதுமையும், ஆடையும் ஆஸ்திரேலியாவிற்குள்ளாகவே 6 : 12 என்ற விகிதத்தில் பரிவர்த்தனை ஆகுமெனில், 6 கி. கி. கோதுமைக்கு 12 மீட்டருக்குமேல் ஆடையினை இங்கிலாந்து வழங்கினால்தான் வாணிபம் இரு நாடுகளுக்கிடையில் நடைபெறும். இரு நாடுகளிலும் நிலவிடும் இவ்விரு உள்நாட்டு மாற்று விகிதங்களின் எல்லைகளுக்குள்ளாகவே பன்னாட்டு விலை விகிதம் நிலவினால்தான் பன்னாட்டு வாணிபம் நடைபெறும்.

மேலே குறிப்பிட்ட இரு உள்நாட்டு மாற்று விகிதங்களாகிய, 6 கி.கி. கோதுமை : 18 மீ. ஆடை, 6 கி.கி. கோதுமை : 12 மீ. ஆடை ஆகியவற்றின் வரம்புகளுக்குள்ளாகவே, எவ்வாறு பன்னாட்டு வாணிப வீதம் நிர்ணயிக்கப்படுகிறது? இதற்கு, உற்பத்திச் செலவுகளோடல்லாமல், தேவை பற்றிய புள்ளி விவரங்களும் வேண்டும். இந்த நிர்ணயப்பிற்கு மில் வழங்கிடும் விதி, பன்னாட்டுத் தேவைச் சமன்பாட்டு விதியாகும். மில் தரும் வாசகம் பின்வருமாறு : "தான் இறக்குமதி செய்திடும் பண்டங்களுக்குச் சமமாகத்தான் உற்பத்தி செய்திடும் பண்டங்களை ஏற்றுமதி செய்கின்ற வகையில பண்டங்களின் மதிப்புகள் நிர்ணயிக்கப்படவேண்டும். அவ்வாறு, நிர்ணயமாகின்ற மதிப்புகளில், ஒரு நாட்டின் பண்டங்கள் மற்ற நாடுகளின் பண்டங்களுடன் பரிவர்த்தனையாகின்றன. அளிப்பு, தேவை ஆகியவற்றின் சமன்பாடு (equation of supply and demand) என்று சொல்லப்படுகின்ற மதிப்பின் பொதுவிதி (general law of value)யின் நீட்சிதான் இந்த பன்னாட்டு மதிப்பு விதியாகும்.[2] நாம் எடுத்துக்கொண்டுள்ள உதாரணத்தைக்

[2] மில், "அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள்" Mill, "Principles of Political Economy" ப. 592-593,

கொண்டே, சாத்தியமான ஒவ்வொரு விலை விகிதத்திலும் அளிப்பு, தேவை ஆகியவற்றை சுட்டிடும் அளிப்பு, தேவைக் கோடுகளை வரைய முடியும். எந்த விலை விகிதத்தில் அளிப்பும் தேவையும் சமமாகின்றனவோ, அந்த விலை விகிதத்தில் ஏற்றுமதியும், இறக்குமதியும் சமமாகும்.

உள்நாட்டு உற்பத்திச் செலவுகள், எந்த விகிதத்தில் நாடுகளுக்கிடையே பண்டங்கள் பரிவர்த்தனையாகின்றன என்பதனை நிர்ணயிக்கமாட்டா; அச் செலவுகள் சமநிலை விலை விகிதத்தையும் சுட்டிக்காட்டமாட்டா. ஆனால், இரு நாடு களின் உள்நாட்டு விலை விகிதங்களின் எல்லைகளுக்குள்ளாக மட்டுமே வாணிபம் நடைபெற முடியும் என்பதனையும், அவ் வெல்லைகளுக்குள்ளாகவே சமநிலை விலை விகிதம் அமையும் என்பதனையும், உள்நாட்டு உற்பத்திச் செலவுகள் உணர்த்து கின்றன. சமநிலை விலை விகிதம் அல்லது சமநிலை வாணிப வீதம் அளிப்பையும், தேவையையும் சார்ந்துள்ளது. அதிலும் குறிப்பாக, ஒவ்வொரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டில் உற்பத்தி யாகும் பண்டத்தின் தேவையின் அளவினையும் தராதர உறுதிப் பாட்டினையும் பொறுத்தே சமநிலை வாணிப வீதம் அமையும். அதாவது, வெளிநாட்டுப் பண்டத்தைப் பெறுவதற்கென, தாம் உற்பத்தி செய்திடும் பண்டத்தினை எந்த அளவிற்குப் பரிமாறிக்கொள்ள ஒவ்வொரு நாடும் தயாராக உள்ளது என்பதைப் பொறுத்தே சமநிலை வாணிப வீதம் அமையும். சுருங்கக்கூறின், பரிமாற்றத் தேவையை அனுசரித்தே வாணிப வீதம் அமையும்.

முன்னரே குறிப்பிட்டுள்ள உதாரணத்தையே மீண்டும் அணுகுவோம். 18 மீட்டர் ஆடைக்கு, இங்கிலாந்து 6 கிலோ கிராமுக்குமேல் 9 கிலோ கிராம் வரை ஆஸ்திரேலிய கோதுமை யினைப் பெற்றாலோ; அல்லது 6 கி. கி. கோதுமைக்கு ஆஸ்திரேலியா 12 மீட்டருக்குமேல் 18 மீ. வரை இங்கிலாந்தின் ஆடையினைப் பெற்றாலோதான் இரு நாடுகளுக்கிடையே ஆதாய பூர்வமான வாணிபம் நடைபெற முடியும் என்பது தெரிந்ததே. பன்னாட்டு வாணிபம் சிறப்புத் தேர்ச்சியுறலைச் சார்ந்தது. மொத்த உற்பத்தி உலகில் பெருகிட வாய்ப்பு ஏற்படுகிறது. 18 மீட்டர் ஆடை : 8 கி. கி. கோதுமை எனும் வாணிப வீதம் நிலவினால், இங்கிலாந்திற்கு 2 கி. கி. கோதுமை யும், ஆஸ்திரேலியாவிற்கு 2 மீட்டர் ஆடையும் ஆதாயமாகக் கிடைத்திடும். ஆக, வெளிநாட்டு விலை விகிதத்திற்கும், உள் நாட்டுச் செலவு விகிதற்திற்கும் உள்ள வேறுபாட்டின்

அளவினைப்பொறுத்து பன்னாட்டு வாணிப ஆதாயம் அமையும். ஒரு நாட்டினுடைய உள்நாட்டுச் செலவு விகிதத்தினை வாணிப வீதம் நெருங்குமேயானால், அந் நாட்டில் பன்னாட்டு வாணிப ஆதாயம் குறையும்; மற்றொரு நாட்டின் ஆதாயம் பெருகும். எடுத்துக்காட்டாக, 18 மீ. ஆடை : 9 கி. கி. கோதுமை என்ற வாணிப வீதம் நிலவினால், இது ஆஸ்திரேலியாவின் உள் நாட்டுச் செலவு விகிதமாகும். இதனால், இங்கிலாந்திற்கே முழு ஆதாயம் கிடைத்திடும். வாணிப வீதம் இங்கிலாந்திற்குச் சாதக மாக உள்ளது என்று பொருள். மாறாக, 18. மீ. ஆடை : 6 கி. கி. கோதுமை எனும் வாணிப வீதம் இங்கிலாந்தின் செலவு விகிதத்திற்குச் சமமாகவிருத்தலின், இந்த நிலை ஆஸ்திரேலியா விற்கே முழு ஆதாயம் தந்திடும். வாணிப வீதம் ஆஸ்திரேலியா விற்குச் சாதகமாக உள்ளது என்று பொருள். வாணிப வீதம் ஒரு நாட்டிற்குச் சாதகமா, பாதகமா என்பது எதனைப் பொறுத்தது? ஒரு நாட்டிற்குப் பிறிதொரு நாட்டில் உற்பத்தி யாகி ஏற்றுமதியாகும் பண்டத்தின் தேவையின் அழுத்தமும், உறுதிப்பாடும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகவிருக்கிறதோ அந்த அளவிற்கு வாணிப வீதம் அந்த நாட்டிற்குப் பாதக மாகிவிடும்.

பரிமாற்றத் தேவையின் அழுத்தத்தையும், உறுதிப் பாட்டையும் பொறுத்தே வாணிப வீதங்கள் அமைகின்றன. அவ்வாறே, ஒரு நாட்டிற்கு வாணிப வீதங்கள் சாதகமாக உள்ளனவா, பாதகமாக உள்ளனவா என்பதனையும் பரிமாற்றத் தேவையே நிர்ணயிக்கின்றன. என்றாலும், வாணிபத் தொடர் புடைய இரண்டு நாடுகளில் ஒன்று மிகப்பெரும் பரப்பளவு உள்ள நாடாகவும், மற்றொன்று சிறிதகாவும இருப்பின், தேவையின் பரிமாற்றக்கூறு (reciprocal aspect of demand) வாணிப வீதத்தினை நிர்ணயிக்காது. மாறாக, பெரிய நாட்டின் விலை விகிதமே நிலைபெறும். பெரிய நாட்டில் நிலவிடும் விலை விகிதத்திலேயே சிறிய நாடு தமது கோதுமையையோ, ஆடையையோ தாம் விரும்பும் அளவுக்கு விற்று, இத்தகைய வாணிபத்தின்மூலம் பெருமளவு ஆதாயத்தினை அடையும். சிறிய நாடுதான், சாமான்யம்தான் எனினும், அசாதாரணமான முறையில் ஆதாயம் அடைகிறது. சாதாரண, சாமான்ய நிலையில் இருந்துகொண்டு, அசாதாரண முக்கியத்துவத்தைப் பெறுவது என்பது இதுதான் என்று கிண்டல்பெர்தர் குறிப்பிடு கிறார்.[3] குவாடிமாலா (Guatemala) சிறிய நாடுதான். இன்னும்

[3] "This is the importance of being unimportant' 'கிண்டல்பெர்கர்: "பன்னாட்டுப் பொருளாதாரம்" ப. 39.

பல ஆண்டுகளுக்கு அது சிட்டா புத்தகத்தினை உற்பத்தி செய்யவியலாது. எனினும், அமெரிக்க விலை விகிதத்தில் சிட்டா புத்தகத்தினை வாங்கி, பிரேசிலும் ஐக்கிய அமெரிக்காவும் நிர்ணயித்திடும் விலை விகிதத்தில் தமது காஃபியை விற்று, பெரும் ஆதாயத்தினை குவாடிமாலா அடைகிறது. எனவே, "வாணிபம் துவங்குவதற்கு முன்னர், பெரிய நாட்டில் நிலவிடும் விலை விகிதத்தில் சிறிய நாடு வாணிபம் செய்து, ஆதாயம் பெறுவது ஆதாயமான வாணிபத்தில் ஒரு வரம்பாக அமைகிறது; தொன்மைப் பொருளியலார் கருதியதற்கு மாருக, இத்தகைய நேர்வுகள் அடிக்கடி ஏற்படுகின்றன."[4] என்றாலும், ஒரு நாட்டில் நிலவிடும் தேவையும், அளிப்பும் பிறிதொரு நாட்டில் நிலவிடும் தேவை, அளிப்புகளுக்கு ஈடு கொடுத்திடும் அளவிற்கு உயர்ந்திராவிட்டால், பரிமாற்றத் தேவை விதியே செயல்பட்டு, விலை விகிதத்தினை நிர்ணயிக்கும்.

மார்ஷல்–எட்ஜ்வர்த் விருப்பப் பரிமாற்றக் கோடு

மில் அவர்களுடைய பரிமாற்றத் தேவைக் கோட்பாட்டினை எட்ஜ்வர்த்தும், மார்ஷலும் வரைபடங்கள் மூலம் விளக்கியுள்ளனர். எட்ஜ்வர்த்தும், மார்ஷலும் வரைந்துள்ள கோட்டிற்கு விருப்பப் பரிமாற்றக் கோடு (offer curves) என்று பெயர். தாம் உற்பத்தி செய்துள்ள பண்டத்தினைப் பிறிதொரு நாடு உற்பத்தி செய்துள்ள பண்டத்துடன் விரும்பிப் பரிமாற்றிக் கொள்வதினைக் குறித்திடும் கோடே விருப்பப் பரிமாற்றக் கோடு எனலாம். தன்னுடைய பண்டத்தினை அளித்து, பிறிதொரு நாட்டின் பண்டத்தினை ஒரு நாடு பெறுதலைக் குறித்திடும் கோட்டினைப் பன்னாட்டு வாணிபத்தில் அளிப்புக் கோடு என்றும் குறிப்பிடலாம். அல்லது தம்முடைய பண்டத்தினைக் கொடுத்திடும்பொழுது, பிறிதொரு நாட்டின் பண்டம் தமக்கு எவ்வளவு தேவைப்படுகிறது என்பதனைக் குறித்திடும் கோட்டினைத் தேவைக் கோடு என்றும் வழங்கலாம். ஆக, விருப்பப் பரிமாற்றக் கோட்டினை அளிப்புக் கோடு, தேவைக் கோடு, பரிமாற்றத் தேவைக் கோடு என்றெல்லாம் அழைத்திடலாம்.

வரைபடம் 5.1a-ல் ஆடை, கோதுமை .இவற்றின் விலை விகிதம் காட்டப்பெற்றுள்ளது. இவ் விலை விகிதக் கோடு, மாருச் செலவுகளுடன் கூடிய உற்பத்தி சாத்தியக் கோடு போன்றதே. ஒரு பண்டத்தின் உற்பத்தி உயரும்பொழுது மற்றொன்றின் உற்பத்தி குறைகிறது என்பதனை எடுத்துக்

[4] முன் குறிப்பிட்ட நூல். ப. 39.

காட்டுவதே உற்பத்தி சாத்தியக் கோடு ஆகும். உற்பத்தி சாத்தியக் கோடாக இதனைக் கருதும்பொழுது, கோட்டின் முழு மதிப்புகளை நாம் பெருகிறோம். விலை விகிதக் கோடாக மட்டும் இதனை நோக்கும்பொழுது, எந்த அளவுகளில் ஆடை, கோதுமை இவற்றின் சம மதிப்புகள் அமைகின்றன என்பதனை இக் கோட்டின் சரிவிலிருந்து தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக, கோதுமையின் உற்பத்தி பெருகினால், ஆடையின் உற்பத்தி குறையும்; அவ்வாறே ஆடையின் உற்பத்தி பெருகினால், குறித்த அளவிற்குக் கோதுமையின் உற்பத்தி சுருங்கும். ஆக, ஒரு பண்டத்தில் ஏற்படும் பெருக்கத்தின் அளவின் மதிப்பும், பிறிதொரு பண்டத்தில் ஏற்படும் சுருக்கத்தின் (குறைப்பின்) அளவின் மதிப்பும் சமமாக இருத்தலையே, விலை விகிதக் கோட்டின் சரிவு சுட்டிக் காட்டிடும். இடமிருந்து



வரைபடம் 5-1a ஆடை, கோதுமையின் தராதர விலைகள்



வரைபடம் 5-1b ஆடை, கோதுமையின் தராதர விலைகள்

வலம் கீழிறங்கிச் செல்லும் கோட்டின் சரிவு, எதிர்க்கணிய சரிவாகும் (negative slope). இவ்வெதிர் கணிய சரிவு முக்கியத்துவம் உடையதன்று. எனவே, இடமிருந்து வலம் மேல் நோக்கிச். செல்லும், நேர்க்கணிய (Positive) சரிவுள்ள விலைக் கோட்டினை வரைபடம் 5.1b மூலம் வரைந்து காட்டியுள்ளோம். இவ் விலை விகிதக் கோடு எவ்வளவு தூரம் வேண்டு

மானாலும் இழுக்கப்படலாம்; எந்த அளவில், எந்த விகிதத்தில் இரண்டு பண்டங்களும் தங்களுக்கிடையில் பரிவர்த்தனை ஆகின்றன என்பதனை இக் கோடு நேரடியாகவே விளக்குகிறது.

ஒரு நாட்டினுடைய விருப்பப் பரிமாற்றக் கோடு வரைபடம் 5.1b-ல் உள்ள விலை விகிதக் கோட்டினைப் போலவே துவங்கும். எந்தச் சூழ்நிலையிலும் விலை விகிதக் கோட்டின் வரம்பினை மீறி ஒரு நாட்டின் விருப்பப் பரிமாற்றக் கோடு நகராது. எந்த நாடும் தன்னகத்தே நிலவும் விலைக்கு மேல் கொடுத்து வெளி நாட்டிலிருந்து அதே பண்டத்தினை இறக்குமதி செய்திடாது. வரைபடம் 5.2-ல் உள்ளதுபோல, ஒரு நாட்டினுடைய விரும்பப் பரிமாற்றக்கோடு பன்னாட்டு வாணிபம் துவங்குவதற்கு முன்னர், ஆரம்பத்தில் சொற்பத் தொலைவிற்குத் தமது உள்நாட்டு விலை விகிதக் கோட்டின் பாதையிலேயே செல்லும்.



வரைபடம் 5-2

இங்கிலாந்தின் விருப்பப் பரிமாற்றக் கோடு

ஆடையினை அளித்து கோதுமைத் தேவையினை நிறைவேற்றல்

வரைபடம் 5.2-ல் இங்கிலாந்தின் விருப்பப் பரிமாற்று கோடு (OC_e) வரையப்பட்டுள்ளது. இக் கோடு, கொஞ்ச தூரம் வரையில் விலை விகிதக் கோட்டின் பாதையிலேயே சென்று பின்னர் விலகி மேலேறிச் செல்கிறது. தோற்றுவாயிலிருந்து

கிளம்பியுள்ள a, b, c, d, ஆகிய ஒவ்வொரு நேர்க்கோடும் குறிப்பிட்ட ஒரு விலைவிகிதத்தைச் சுட்டுவதாக உள்ளது. பன்னுட்டு வாணிபம் நிகழாதபொழுது, ஆடை, கோதுமை இவற்றின் மாற்று விகிதமாகிய 6 : 18–எனும் விலை விகிதக் கோடாக a உள்ளது. வெவ்வேறு விலைகளில் இங்கிலாந்து வாணிபம் மூலம் பெற்றிடும் பண்டங்களின் அளவுகளைக் குறித்துக் காட்டிடும் வகையில், அந் நாட்டின் விருப்பப்பரிமாற்றக்கோடு வரையப்பட்டுள்ளது. வாணிபம் ஏற்படு முன்னர், 6:18–எனும் விலை விகிதக் கோடாகிய a-ன் மீதே கொஞ்ச தூரத்திற்கு விருப்பப் பரிமாற்றக் கோடு சென்ற பின்னர், கிடைத்திடும் கோதுமையின் அளவு பெருகப் பெருக, தாம் அளித்திடும் ஆடையின் அளவினை இங்கிலாந்து குறைக்கத் துவங்குகிறது. முதல் கட்டத்தில் 6 கி. கி. கோதுமைக்கு 18 மீட்டர் ஆடையினை வழங்கிய இங்கிலாந்து, அடுத்தடுத்து அதேயளவு கோதுமைக்கு 12, 9, 6 மீட்டர் அளவிற்கு, தாம் வழங்கிடும் ஆடையின் அளவினைக் குறைக்க முற்படுகிறது. உண்மையில், d-எனும் புள்ளியில், மேலும் தேவைப்படும் கோதுமைக்கு அதேயளவு ஆடையை மட்டுமே இங்கிலாந்து வழங்கிடும் என்பதனை விருப்பப் பரிமாற்றக்கோடு உணர்த்துகிறது. அப் புள்ளியில், விருப்பப் பரிமாற்றக் கோட்டினைக் கோதுமைத் தேவையைச் சார்ந்த தேவைக் கோடாகக் கருதினல், அக் கோடு ஒருமை நெகிழ்ச்சி (unitary elasticity) யுடையது எனலாம். மாருக, விருப்பப் பரிமாற்றக் கோட்டினை ஆடை அளிப்பினைச் சார்ந்த அளிப்புக் கோடாகக் கருதினல், அக் கோடு பூஜ்ய நெகிழ்ச்சி (zero elasticity) யுடையது எனலாம். இதிலிருந்து விளங்குவது என்னவென்ருல், விருப்பப் பரிமாற்றக் கோட்டின் நெகிழ்ச்சியினைப் பலவிதமாகப் பொருள் கொள்ளலாம் என்பதே. விலை மாற்றத்தின் விளைவாக, இறக்குமதிகளில் ஏற்படும் மாற்றத்தினைக்கொண்டு, அக் கோட்டின் இறக்குமதி நெகிழ்ச்சியினையும், ஏற்றுமதிகளில் ஏற்படும் மாற்றத்தினைக்கொண்டு, அக் கோட்டின் ஏற்றுமதி நெகிழ்ச்சியினையும் கணக்கிடலாம். இவற்றிற்கெல்லாம் மேலாக, விருப்பப் பரிமாற்றக் கோட்டின் ஏதேனுமொரு புள்ளியில், ஏற்றுமதிகளில் ஏற்படும் வீதாசார மாற்றினைச் சார்ந்து இறக்குமதிகளில் வீதாசார மாற்று ஏற்படுவதைக்கொண்டு அக் கோட்டின் மொத்த நெகிழ்ச்சியினையும் (total elasticity) கணக்கிடலாம்.

இங்கிலாந்திற்குரிய கோட்டினைப் போலவே, ஆஸ்திரேலிய விருப்பப் பரிமாற்றக் கோட்டினை (OC_a) வரைபடம் 5.3 மூலம் தெரியப்படுத்துவோம். இக் கோடு ஆஸ்திரேலிய விலை

விகிதத்தில் (6:12) நேர்கோடாகவே துவங்கி, ஆடை மேலும் மேலும் கிடைத்திடவே, ஒரேயளவு கோதுமைக்குக் கூடுதலான அளவில் ஆடைகிடைத்திடவேண்டி வலப்புறமாக வளைந்து



வரைபடம் 5-3

ஆஸ்திரேலியாவின் விருப்பப் பரிமாற்றக் கோடு

கோதுமையினை அளித்து ஆடைத் தேவையினை நிறைவேற்றல்

செல்கிறது. முதற்கட்டத்தில் 6 கி. கி. கோதுமைக்கு 12 மீ. ஆடையினைப்பெற்ற ஆஸ்திரேலியா, அடுத்தடுத்து அதேயளவு கோதுமைக்குத் தமது ஆடைத் தேவையினை, 14, 16, 18 மீட்டர் அளவிற்கு உயர்த்திக் கொண்டே செல்கிறது.

இப்பொழுது, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளின் விருப்பப் பரிமாற்றக் கோடுகளை ஒரே வரை படத்தில் வரைந்து, அவையிரண்டும் ஊடறுக்கும் புள்ளி யினைக் கொண்டு பன்னாட்டு வாணிபத்தின் சமநிலையினை விளக்கிட வேண்டும். இவ்விடத்தில் மார்ஷலின் அணுகு முறையை நோக்குவோம். அளிப்பும் தேவையும் விலையினை நிர்ணயித்திடும் பகுத்தாய்வினை உள்நாட்டுப் பரிவர்த்தனையில் பயன்படுத்தியது போலவே பன்னாட்டு வாணிப மாற்றிலும்

மார்ஷல் பயன்படுத்துகிறார்.[5] இரு பண்டங்களின் அடிப்படையில் பன்னாட்டு வாணிபத்தை விளக்குவதை ஒதுக்கி விட்டு, இறக்குமதி, ஏற்றுமதியாகும் பண்டங்களனைத்தையும் ஒருசேரப் "பண்டங்களின் பிரதிக் கட்டுகள்" **(representative bales of goods)** என்று ஆக்கி, அவ்வடிப்படையில் பன்னாட்டு வாணிப விளக்கத்தினை மார்ஷல் தருகிறார். ஒவ்வொரு கட்டிலும் உள்ள பண்டத்தின் அளவு வித்தியாசப்படலாம் என்றாலும், ஒரேயளவு கொண்ட உழைப்பும் மூலதனமும் அதில் அடங்கும். எனவே, மார்ஷலின் பகுத்தாய்வு உண்மைச் செலவுகளைச் சார்ந்திருப்பினும் உழைப்பு மதிப்புக் கோட்பாடு இதில் அடங்காது. இந்த அணுகு முறையைப் பின்னணியாகக் கொண்டு, மார்ஷலின் பரிமாற்றத் தேவைக் கோட்பாட்டின் பகுத்தாய்வினை வரைபடம் 5.4 மூலம் தெரிந்து கொள்ளலாம்.



வரைபடம் 5-4 மார்ஷலின் பரிமாற்றத் தேவைச் சார்புகள்

முன்னரே, இங்கிலாந்து ஆஸ்திரேலிய விருப்பப் பரிமாற்றக் கோடுகளை விளக்கியுள்ளோம். மார்ஷலின் பகுத்

[5] பன்னாட்டு வாணிபத்தினைப் பற்றிய பகுத்தாய்வினை "பணம், கடன், வர்த்தகம்" (Money, Credit and Commerce) எனும் தனது நூலில் மார்ஷல் வழங்கியுள்ளார்.

தாய்வினை [6] இங்குத் தந்திடும் வகையில் அவ்விரு நாடுகளையே பயன்படுத்துவோம். இங்கிலாந்து C_e முதலான பண்டங்களின் பிரதிக் கட்டுகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதாகவும், ஆஸ்திரேலியா W_a முதலான பண்டங்களின் பிரதிக் கட்டுகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதாகவும் கொள்வோம். ஒவ்வொரு நாடும் தமது பண்டங்களை மற்றொரு நாட்டின் பண்டங்களுடன் எந்த அளவில், எந்த விகிதத்தில் மாற்றிக் கொள்கின்றன என்பதனை OC_e, OC_a எனும் விருப்பப் பரிமாற்றக் கோடுகள் சுட்டிக் காட்டுகின்றன. இவ்விரு கோடுகளில் எந்த கோட்டில் எப் புள்ளியிட்டாலும், ஒரு நாடு தாம் அளித்திடும் பண்டத்தின் அளவும் மற்றொரு நாட்டிற்கு அப் பண்டத்தின் தேவையின் அளவும் அப் புள்ளியில் சமமாகவே இருக்கும். உதாரணமாக, OC_e கோட்டிலுள்ள புள்ளி 1-ல், இங்கிலாந்து $100C_e$ கட்டுகளை ஆஸ்திரேயாவிற்கு அளித்து, அதனிடமிருந்து $25C_a$ கட்டுகளைப் பெறும். அவ்வாறே OC_a கோட்டில், எந்தப் புள்ளியிட்டாலும் அப் புள்ளி, ஆஸ்திரேலியா எவ்வாறு B_a கட்டுகளைத்தந்த, இங்கிலாந் மிருந்து எவ்வாறு C_e கட்டுகளைப் பொறுகிறது என்பதனைக் குறித்திடும்.

மேலும், உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யவும், ஏற்றுமதி செய்திடவும் தேவையான அளவிற்கு ஒரு நாடு உற்பத்திசெய்திடும் பண்டத்தின் அளவும், வேறு நாட்டிலிருந்து இறக்குமதி செய்திடும் பண்டத்தின் அளவும் சமமாக இருப்பின், அந் நாட்டில் உள்நாட்டுச் சமநிலை நிலவுகிறது என்று பொருள். அந்த நாட்டின் விருப்பப் பரிமாற்றக் கோட்டில் எப் புள்ளி இட்டாலும் அப் புள்ளி உள்நாட்டிச் சமநிலையையே குறித்திடும். அக் கோட்டிலேயே அப் புள்ளி முன்னும் பின்னும் நகருவதாகக் கொண்டால், அவ்வாறு நகருவது எதனைக் குறிக்கும் எனில், உழைப்பின் அளவும் மூலதன அளவும் மாருதிருப்பினும், ஒவ்வொரு பிரதிக்கட்டிலும் உள்ள பண்டங்களின் கலவை மாறும் என்பதனைத்தான். அக் கோடு தமது பாதையை விட்டே நகருவதாகக் கொண்டால், அவ்வாறு கோடு தடம்விட்டுத் தடம்மாறுவது, இறக்குமதியில் ஏற்படும் மாற்றத்திற்கு இணையாக உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் மாற்றத்தினைச் சுட்டிக்காட்டும்.

[6] மாக்ஸ் ஜே. வாசர்மேன் — சார்லஸ் டபிள்யூ. ஹல்ட்மேன் (Max J. Wasserman—Charles W. Hultman) ''நவீன பன்னாட்டுப் பொருளாதாரம்அயல் - நாட்டுச் செலுத்து நிலையினின்று நோக்குதல்'' ப. 266-267. (''Modern International Economics—A Balance of payments Approach'')

இரண்டு நாடுகளின் விருப்பப் பரிமாற்றக் கோடுகள் எப் புள்ளியில் சந்திக்கின்றனவோ அப் புள்ளியில்தான் பன்னாட்டு வாணிபச் சமநிலை அமையும்.

புள்ளி 1–ல், இங்கிலாந்தின் உற்பத்தியும், தேவையும் எவ்வாறு அமைந்துள்ளன? தாம் உற்பத்தி செய்துள்ள $100C_e$ கட்டுகளை அளித்து, ஆஸ்திரேலியாவின் $25C_a$ கட்டுகளைப் பெற விரும்புகிறது. ஆனாலும், ஆஸ்திரேலியாவின் போக்கு என்ன? ஆஸ்திரேலியாவிற்கு C_e கட்டுகளின் தேவை மிகுதியாக இருப்பதால், தமது $25C_a$ கட்டுகளை வழங்கி, $10C_e$ கட்டுகளை இங்கிலாந்திடமிருந்து பெற்றால்கூட போதும் என்ற நிலை உள்ளது. ஆக, இரு நாடுகளுக்கிடையே பன்னாட்டு வாணிபச் சமநிலை ஏற்படவில்லை என்பது உறுதி. புள்ளி 2–ல் இரு விருப்பப் பரிமாற்றக் கோடுகளும் ஊடறுக்கின்றன. அப் புள்ளியில், இங்கிலாந்து $200C_e$ கட்டுகளை ஆஸ்திரேலியாவிற்குத் தந்து அதனிடமிருந்து $180C_a$ கட்டுகளை வாங்கிக் கொள்கிறது. இப் பரிமாற்றத்தில் இரு நாடுகளுக்குமே உடன்பாடுதான். அப் புள்ளியில், இங்கிலாந்தின் அளிப்பு, ஆஸ்திரேலியாவின் தேவைக்கும், ஆஸ்திரேலியாவின் அளிப்பு, இங்கிலாந்தின் தேவைக்கும் சமமாக உள்ளன. ஆக இரு நாடுகளும் தங்களுக்குரிய கோடுகளில் இருப்பதால் உள்நாட்டு வாணிபச் சமநிலையிலும், புள்ளி 2-ல் இரு கோடுகளும் ஊடறுக்கின்ற காரணத்தினால், பன்னாட்டு வாணிபச் சமநிலையிலும் உள்ளன எனலாம். இரு நாடுகளின் விருப்பப் பரிமாற்றக் கோடுகள் சந்தித்திடும் புள்ளி–2 வழியாக தோற்றுவாயிலிருந்து மேலெழும்பிச் சென்றிடும் OP எனும் கோட்டின் சரிவு, அப் புள்ளியில், சமநிலை வாணிப வீதத்தினைக் குறித்திடும் புள்ளி 2–ல் 200 : 180, அதாவது, 10 : 9-எனும் விகிதமே சமநிலை வாணிப வீதமாகும்.

மார்ஷலின் விருப்பப் பரிமாற்றக் கோடுகள், வாணிப வீதங்கள் மாறிடுவதையும் எடுத்துக் காட்டவல்லன. இங்கிலாந்தில் துய்ப்புச் சுவை மாறுவதாகக் கொள்வோம். அதனால் இங்கிலாந்து, ஆஸ்திரேலிய C_a கட்டுகளை அதிகமாக நாடுவதாகக்கொள்வோம். இதன் விளைவு, C_e எனும் தம்முடைய பண்டத்தினை முன்னர் தந்ததைவிட அதிகமாகத் தந்து, ஆஸ்திரேலியாவின் C_a பண்டத்தினை முன்னர் பெற்ற அளவே இங்கிலாந்து பெறும். இம் மாற்றத்தைக் குறித்திடும் வகையில், இங்கிலாந்தின் விருப்பப் பரிமாற்றக் கோடு OC_e-எனும் பாதையிலிருந்து நகர்ந்து, OC'_e பாதைக்கு மாறி வந்துள்ளது. வாணிப

வீதமும் 200 : 180 என்ற விகிதத்திலிருந்து 220 : 180, அதாவது, 11 : 9 என்ற விகிதத்திற்கு மாறியுள்ளது. இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஆஸ்திரேலியாவிற்கு வாணிப வீதம் சாதகமாகியுள்ளது என்பதுதான்.

கிரகாம் விமர்சனம்

மில் அவர்களுடைய பரிமாற்றத் தேவைக் கோட்பாடு, பன்னாட்டு மதிப்புகளை நிர்ணயிப்பதில், அளிப்பினை முழுதும் ஒதுக்கிவிட்டுத் தேவைக்கே பிரதான இடம் தந்துள்ளது என்று பேராசிரியர் ஃப்ராங் டி. கிரகாம் (Prof. Frank D. Cyraham) குற்றம் சாட்டுகிறார். நிலையான உற்பத்தியளவு, துவக்கத்தில் இருந்த வாணிபப்பேறு, இவற்றின் அடிப்படையிலேயே வாணிபக் கோட்பாட்டினை உருவாக்கினால், அளிப்புக்கு முக்கியத்துவம் தரத் தேவையில்லை; தேவைக்கே சிறப்பிடம் தரவேண்டும். ஆனால், உண்மையில் வாணிபம் என்பது உற்பத்தி மாறிக்கொண்டே இருக்கக்கூடிய, மேலும் மேலும் உற்பத்தி நிகழ்ந்து கொண்டு இருக்கக் கூடிய, மீண்டும் மீண்டும் உற்பத்தியாகிக் கொண்டு இருக்கக் கூடிய பண்டங்களைச் சார்ந்துள்ளது. எனவே, வாணிப வீத நிர்ணயிப்பில் அளிப்பின் பங்கு அவசியம் இடம்பெறுகிறது. மாறாச் செலவு நிலவுவதாகப் பாவித்துக் கொண்டிருக்கும் பொழுது, பன்னாட்டு வாணிபத்தில் மாற்று வீதத்தை அளிப்பு நிலைகளே நிர்ணயித்து விடுகின்றன. அது எவ்வாறு?

இரண்டு நாடுகள், இரண்டு பண்டங்கள், மாறாச் செலவுகள் ஆகிய எடுகோள்கள் இட்டுக் கொண்டு பன்னாட்டு வாணிபம் பற்றிய ஆய்வினை நிகழ்த்துவதாகக் கொள்வோம். இரண்டு நாடுகளின் உள்நாட்டுச் செலவு விகிதங்களுக்கிடையில் இறுதியான மாற்றுவிகிதம் நிர்ணயமாவதற்குப் பன்னாட்டுத் தேவை நிலைகளே காரணமாக உள்ளன என்று மில் கருதுகிறார். செலவு விகிதங்களுக் கிடைப்பட்ட மாற்று விகிதத்தினை கிரகாம், லிம்போவிகிதம் (limbo ratio) என்றழைக்கிறார். இரண்டு நாடுகளும் ஏறத்தாழ ஒரே பரப்பளவு உடையனவாகவும், இரண்டு பண்டங்களும் ஒரேயளவு முக்கியத்துவம் உடையனவாகவும் இருப்பதாகக் கொள்வோம்; மேலும் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பண்டத்தின் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி அடைந்துள்ளதாகவும் எடுகோளிட்டுக் கொள்வோம்; மாறாச் செலவு விதியும் நிலவுவதாகக் கொள்வோம். இவ்வாறு அமையும்பொழுது தேவையே வாணிப விகிதத்தினை நிர்ணயிக்கும் என்பது உண்மைதான்.

இரு நாடுகளில் ஒன்று பெரிய நாடாகவும், மற்றொன்று சிறிய நாடாகவும் இருப்பின், ஏதேனுமொரு பண்டம் இரு நாடுகளிலுமே உற்பத்தியாகும். வாணிப வீதம்கூட, இரு பண்டங்களையும் உற்பத்தி செய்திடும் நாட்டின் செலவு விகிதத்திற்குச் சமமாகிவிடும். இவ்வாறு, வாணிபம் அமைவது விதிவிலக்கு என மில் கருதுகிறார்; ஆனால், கிரகாம் அந்த நிலையினை இயல்பு என்கிறார். இரு பண்டங்களும் ஒருசேர உற்பத்தியாகின்ற நாட்டின் செலவு விகிதமே பன்னாட்டு வாணிப வீதமாகுமெனில், பன்னாட்டு மதிப்புகளை அளிப்பு அல்லது செலவு நிலைகளே நிர்ணயிக்கின்றன என்பது தெளிவு.

மேலும், இரண்டிற்கு மேற்பட்ட நாடுகளும், இரண்டிற்கு மேற்பட்ட பண்டங்களும், பன்னாட்டு வாணிபத்தில் இடம் பெறும்பொழுது, இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்கின்ற நாடு ஒன்றேனும் இருக்கும் என்பது உறுதி. மாறாச் செலவு நிலவிடும்பொழுது, அப்படிப்பட்ட நாட்டினுடைய உள் நாட்டுச் செலவு நிலவிடும் பொழுது, அப்படிப்பட்ட நாட்டினுடைய உள்நாட்டுச் செலவு விகிதமே மாற்று விகிதமாகவும் இருக்கும் என்பதுறுதி. எனவே, பன்னாட்டு வாணிப வீதங்களைத் தேவை நிலைகள் நிர்ணயிக்கமாட்டா என்றும், பன்னாட்டு மதிப்புக் கோட்பாட்டில் பரிமாற்றத் தேவைக்கு இடமில்லை என்றும் கிரகாம் முடிவெடுத்தார்.

மேலேயுள்ள விளக்கத்தின் அடிப்படையில் கிரகாம் தந்துள்ள விமர்சனம் சரிதான். மாறாச் செலவு நிலவுவதுடன், ஏதேனும் ஒரு நாட்டில் சிறப்புத் தேர்ச்சி முழுமை பெறாது இருப்பின், உள்நாட்டுச் செலவு விகிதமும், அளிப்பு நிலையும் வாணிப வீதத்தினை நிர்ணயித்திடும் என்ற முடிவு சரிதான். ஆனால், வளர்ந்து செல் செலவுவிதி செயல்படும்பொழுது என்ன நேரிடும்? ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பண்டத்திலும் சிறிதளவு உற்பத்தி செய்திடும். எந்த நாட்டிலும் முழுமையான சிறப்புத் தேர்ச்சியுறல் இருக்காது. வளர்ந்துசெல் செலவு நிலவும்பொழுது, உற்பத்தியாகும் பண்டங்களின் அளவினைக் கொண்டே (வாணிபம் துவங்குவதற்கு முன்னர் நிலவுகின்ற) உள்நாட்டுச் செலவு விகிதம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால், உற்பத்தி செய்து பரிவர்த்தனையாக வேண்டிய பண்டங்களின் அளவினைத் தேவை நிலையே நிர்ணயிக்கிறது. எனவே, பன்னாட்டு வாணிபத்தில் இடம் பெறுகின்ற பண்டங்களின் உற்பத்தி வளர்ந்துசெல் செலவு விதிக்குக்கட்டுண்டு இருக்கும் சூழ்நிலைகளின் பரிமாற்றத் தேவைக் கோட்பாட்டினைப் புறக்கணிக்க முடியாது.

வாணிப வீதத்தினை நிர்ணயிக்கும் வேறு காரணிகள்

பண்டத்தின் தன்மையைப் பொறுத்தும், ஒரு நாட்டின் இறக்குமதியாற்றலைப் பொறுத்தும், ஏற்றுமதித் தொழிலின் தொழில் நுட்ப வளர்ச்சியினைப் பொறுத்தும், வாணிப வீதம் அமையும். பண்டத்தின் தன்மைக்கும், வாணிப வீதத்திற்குமுள்ள தொடர்பினைக் கவனிப்போம். இந்தியா மிளகினை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்து. அந் நாட்டிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்கிறது. கோதுமை தரமானதும் இன்றியமையாததுமான ஓர் உணவுப் பொருள். ஆனால் மிளகானது, உணவுக்கும் மற்றவற்றிற்கும் வேண்டுமென்றால் பயன்படுத்தப்படுகின்ற தாளிதப் பொருள் அல்லது மணப் பொருள் என்று கூறலாம். எனவே, இந்தியாவிற்குக் கோதுமை தேவைப்படுகின்ற அளவிற்கு அமெரிக்காவுற்கு மிளகு போன்றவை தேவைப்படுவதில்லை. இந்தியா ஏற்றுமதி செய்திடும் மிளகின் அளவும், மதிப்பும், இறக்குமதியாகும் கோதுமையின் மதிப்பிற்கும் அளவிற்கும் போதுமானதாக இருக்க மாட்டா. அமெரிக்காவிலிருந்து பெற்றிடும் கோதுமையுடன் மேலும் தேவைப்படும் கோதுமையை இந்தியாவே உற்பத்தி செய்திடவேண்டும். கோதுமைக்கு அமெரிக்காவையே இந்தியா முழுதும் நம்பிடமுடியாது. இந்தியா வழங்கிடத் தயாராகவிருக்கும் மிளகு முழுதும் அமெரிக்காவிற்குத் தேவை இல்லை. அமெரிக்கா கோதுமை உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியுறும்பொழுது, இந்தியா கோதுமை, மிளகு ஆகிய இரண்டையும் உற்பத்தி செய்யும்படி ஏற்படுகிறது. இதன் காரணமாக, இந்தியாவில் நிலவிடும் மாற்று விகிதமே பன்னாட்டு வாணிபத்தில் இரு பண்டங்களுக்கிடையில் வாணிப வீதமாக அமையும். இது அமெரிக்காவிற்குச் சாதகமாக வாணிப வீதமாகும். பன்னாட்டு வாணிப ஆதாய முழுதும் அமெரிக்காவிற்கே கிட்டும்.

பரப்பளவில் பெரிய நாடாகவிருந்து, அதனுடைய இறக்குமதியாற்றல் உயர்ந்திருப்பின், சிறிய நாட்டிற்கே ஆதாயம் மிகும். பெரிய நாடாகிய இந்தியா, காஃபியினைச் சிறிய நாடாகிய இலங்கைக்கு ஏற்றுமதி செய்து, தமக்குத் தேவையான ரப்பரை அங்கிருந்து இறக்குமதி செய்து கொள்வதாக் கொள்வோம். இந்தியச் சந்தை, ரப்பரை வாங்குவதற்குரிய இறக்குமதியாற்றல் படைத்த பெருஞ்சந்தையெனக் கொள்வோம். இலங்கைக்குத் தேவையான காஃபியை வழங்கித் தமக்குத் தேவையான அளவிற்கு ரப்பரை இலங்கையிடமிருந்து பெற முடியாதெனில், என்ன நேரிடும்? இந்தியா

காஃபியுடன் சேர்த்து ரப்பரையும் உற்பத்தி செய்திடும். இலங்கை விற்றிடும் ரப்பருக்கு மேலாக எவ்வளவு தேவைப் படுகிறதோ, அந்த அளவிற்கு ரப்பரை இந்தியா உற்பத்தி செய்திட முற்படும். இலங்கை வழக்கம்போல ரப்பர் உற்பத்தி யிலேயே கருத்தினைச் செலுத்தும்; விளைவு என்ன? இந்தியச் சந்தையினுள்ளே இரு பண்டங்களுக்கிடையில் என்ன விலை விகிதம் நிலவுகிறதோ, அதுவே பன்னாட்டு வாணிப வீதமாக அமையும்; இதனால் இலங்கைக்கே பெருத்த ஆதாயம் கிட்டும் வாணிப வீதம் இந்தியாவிற்குச் சாதகமாயிராது.

பண்டத்தின் தன்மையைப் போலவே, ஒரு நாட்டின் இறக்குமதியாற்றலைப்போலவே, ஏற்றுமதித்தொழிலில் ஏற்படும் தொழில் நுட்ப வளர்ச்சியும் வாணிப வீதத்தினை நிர்ணயித்திடும். தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக ஏற்றுமதித் தொழிலில் உற்பத்தியாகும் பண்டத்தின் ஒவ்வோரலகிற்கும் ஆகும் உண்மைச் செலவும், பணச் செலவும் குறைந்துவிடும். ஏற்றுமதி யாகும் பண்டத்தின் விலையும் பன்னாட்டுச் சந்தையில் வீழ்ந்து விடும். ஏற்றுமதிப் பண்டம் மலிவாகிவிடுதலால், முன்னர் ஒரே யளவுள்ள இறக்குமதிக்கு இணையாகத் தற்பொழுது கூடுதலான அளவுக்கு ஏற்றுமதிப் பண்டத்தினை அளித்திட வேண்டும். தொழில் நுட்ப வளர்ச்சி கண்ட ஏற்றுமதித் தொழிலையுடைய நாட்டிற்குப் பாதகமாக வாணிப வீதம் மாறிவிடும். ஆனால், இவ்வாறு வாணிப வீதம் பாதகமாக மாறிவிடுதல் பொருளாதார முக்கியத்துவம் உடையதன்று. ஏனெனில், தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக ஏற்றுமதித் தொழிலில் உற்பத்தித் திறன் பெருகிறது; நிறைய உற்பத்தியாகிறது; ஒரேயளவு இறக்குமதிக்கு ஈடாகக் கூடுதலான, அளவிற்கு ஏற்றுமதி செய் திடும் வல்லமையினை நாடு பெறுகிறது.

வாணிப வீதம் புள்ளியியலின்படி அளக்கப் பெறுதல்

வாணிப வீதம் என்பது இரு நாடுகள் தாங்கள் உற்பத்தி செய்திடும் பண்டங்களைப் பரிமாற்றிக் கொள்ளும் விகிதமாகும். இந்த வாணிப வீதத்தை எவ்வாறு அளந்து பார்ப்பது? பன்னாட்டு வாணிபத்தில் சில எடுகோள்களை நாம் இட்டுக் கொண்டுள்ளோம். தொழிலாளர் தம் உழைப்பு ஒரே மாதிரி யானது என்றும், இடம் பெயரக் கூடியது என்றும், உழைப்புச் செலவே உற்பத்திச் செலவினை நிர்ணயித்துப் பண்டத்தின் விலையையும் நிர்ணயிக்கிறது என்றும் எடுகோளிட்டுக் கொண் டுள்ளோம். இரண்டு பண்டங்கள், இரண்டு நாடுகள், மாறாச் செலவு, போக்குவரத்துச் செலவு இல்லாமை போன்ற வேறு

பல எடுகோள்களும் உண்டு. இத்தகைய எடுகோள்களின் அடிப்படையில் வாணிபம் நிகழும்பொழுது, வாணிப வீதத்தினை மூன்று முறைகளில் அளந்திடலாம். அம் மூன்று முறைகள் பின் வருமாறு :-

(அ) இரு நாடுகளுக் கிடையே நிலவிடும் பணக்கூலி வீதங்களின் விகிதத்தினைக் கொண்டு வாணிப வீதத்தை அளத்தல்;

(ஆ) இரு நாடுகளுக்கிடையே ஏற்றுமதிகளும், இறக்கு மதிகளும் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனையாகின்ற விகிதத்தினைக் கொண்டு வாணிப வீதத்தை அளத்தல்;

(இ) ஏற்றுமதி, இறக்குமதி விலைகளின் விகிதத்தினைக் கொண்டு வாணிப வீதத்தினை அளத்தல்.

இரு நாடுகள்-இரு பண்டங்கள் மாதிரியத்தில் இறக்குமதி, ஏற்றுமதி, விகிதங்களைக் கொண்டு வாணிப வீதத்தினை அளந்திடலாம். இங்கிலாந்து ஏற்றுமதி செய்திடும் ஆடையில் அளவிற்கு இணையாக ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கோதுமையின் அளவினைக் கொண்டு, இவ் வேற்றுமதி, இறக்குமதி விகிதத்தினை வாணிப வீதமாகக் கணக்கிடலாம். எனினும், உண்மை வாழ்வில் இரண்டிற்கு மேற்பட்ட பண்டங்களில் பல்வேறு நாடுகளுக்கிடையில் வாணிபம் நடைபெறுவதால், வெவ்வேறு பண்டங்களின் அளவினை நிர்ணயிக்கப் பொது அளவை அலகு (common unit of measurement) கிடையாது. எனவே, இரண்டாவது முறையினைக் கடைப்பிடிக்கவியலாது.

ஏற்றுமதி, இறக்குமதி விலைகளின் விகிதத்தினைக் கொண்டு வாணிப வீதத்தை அளந்திடும் மூன்றாவது முறை சரியானதுதானா எனப் பார்ப்போம். மாறாச் செலவுகள் நிலவுவதாகக் கொண்டபோதிலும், விலைகளனைத்தும் ஒரே மாதிரியாக மாறுவதோ அல்லது ஒரே திசையில் ஏறுவதோ இறங்குவதோ கிடையாது. சில பண்டங்களின் ஏற்றுமதி விலைகள் குறையலாம்; சிலவற்றின் விலை உயரலாம். இறக்குமதிப் பண்டங்களில் சிலவற்றின் விலைகள் ஏறி, வேறு சிலவற்றின் விலைகள் இறங்கலாம். எனவே, ஏற்றுமதி, இறக்குமதி விலை விகிதங்களைக் கணக்கிடும் பொருட்டு, ஏற்றுமதிப் பண்டங்களனைத்திற்கும் சராசரி விலையினையும் அதுபோலவே, இறக்குமதிப் பண்டங்கள் அனைத்திற்கும் சராசரி விலையினையும் காணவேண்டும்.

ஏற்றுமதி பண்டங்களின் சராசரி விலையினை ஏற்றுமதி விலைக் குறியீட்டெண் (Export price index) எனலாம். அவ்வாறே இறக்குமதிப் பண்டங்களின் சராசரி விலையினை இறக்குமதி விலைக் குறியீட்டெண் (Import price index) எனலாம். இவ்விரு குறியீட்டெண்களின் விகிதமே வாணிப வீதமாகும். இதனையே இன்னும் தெளிவாகப் பொருள்சார் வாணிப வீதம் (commodity terms of trade) என்றும் குறிப்பிடலாம். பொருள் சார் வாணிப வீதமானது, $\frac{\text{ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்}}{\text{இறக்குமதி விலைக் குறியீட்டெண்}}$ எனும் பின்னத்திற்கு (விகிதத்திற்கு)ச் சமமாகும்.

மேலே இட்டுக் கொண்டுள்ள எடுகோள்களுடன் உழைப்பு மதிப்புக் கோட்பாட்டினையும், பிரயோகித்துப் பார்க்கும்பொழுது, இரு நாடுகளுக்கிடையில் நிலவும் இவ் விகிதமும், பணக்கூலி விகிதமும் ஒன்றெனப் புலப்படும். பண்டங்களின் உற்பத்திக்குத் தரப்பட்ட கூலி வீதமே பண்டங் களின் விலையினை நிர்ணயிக்கிறது என்ற காரணத்தினால்தான் ஏற்றுமதி, இறக்குமதி விலை விகிதங்களும், கூலி விகிதங்களும் ஒன்றுக்கொன்று சமமாயின.

ஆனால், மேலே கொண்டுள்ள எளிய எடுகோள்களை யெல்லாம் நீக்கிவிடுவதாகக் கொள்வோம். வேறு உற்பத்தி காரணிகள், மாறும் செலவுகள் விதி, போக்குவரத்துச் செலவு ஆகியவற்றின் பங்கினையும், உழைப்பு மதிப்புக் கோட்டிற்குப் பதிலாக பொது சமநிலை மதிப்புக் கோட்பாட்டின் பங்கினையும் கருத்திற் கொண்டால், மேலே குறிப்பிட்ட இரண்டு விகிதங் களும் இன்னும் சிக்கல் நிறைந்தனவாகக் காணப்படும். ஒன்று மற்றொன்றினை அளப்பதாகவோ, அல்லது குறித்துக் காட்டுவதாகவோ கருதமுடியாது. இன்னும் சொல்லப்போனால், பொருள்சார் வாணிப வீதம் ஒன்றாகவும், உழைப்புசார் வாணிப வீதம் (labour terms of trade) வேறாகவும் மாறிவிடும்.

ஏற்றுமதி, இறக்குமதி விலைகளின் விகிதமும் கூலி விகிதமும் சமமாக இருக்க வேண்டுமெனில், பண்டத்தின் விலையை உழைப்புச் செலவே நிர்ணயிக்கவேண்டும். அதாவது, உழைப்பு மதிப்புக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப் படவேண்டும். ஆனால், அக் கோட்பாடு விஞ்ஞான ரீதியாக இல்லாததால், அளிப்பு-தேவை கோட்பாடும் பொதுச் சம நிலைக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதன் பொருள் என்ன? உற்பத்திக் காரணிகளின் கிடைப்பில்

(availability) ஏற்படும் மாற்றங்கள், இன்னும் மக்கள் தொகையிலும் துய்ப்போர் சுவையுணர்வு முதலானவற்றிலும் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றின் காரணமாக அளிப்பு, தேவை நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஏற்றுமதி, இறக்குமதி விலைகள் மாறுவதற்கு இம் மாற்றங்களே காரணமாக உள்ளன. ஆகவே, அளிப்பு, தேவை நிலைகள்தாம் பொருள்சார் வாணிப வீதத்தைக் கணிக்கின்றனவேயன்றி, உழைப்புசார் வாணிப வீதமன்று.

தொழில் நுட்ப மாற்றங்களின் காரணமாகவும் பொருள் சார் வாணிப வீதமும், உழைப்பு சார் வாணிப வீதமும் வேறுபடும். ஏற்றுமதித் தொழிலில் தொழில் நுட்ப வளர்ச்சி, உற்பத்திச் செலவினைக் குறைத்திடும். ஏற்றுமதி விலைகள் வீழும். இறக்குமதி விலைகளுடன் ஒத்திட்டுப் பார்க்கும்பொழுது ஏற்றுமதி விலைகளின் விகிதம் சரிந்திருக்கும். ஒரேயளவு இறக்குமதிக்குத் தற்பொழுது கூடுதலாக ஏற்றுமதி செய்திட வேண்டும் என்று பொருள். இதனால், பொருள் சார் வாணிப வீதம் மாறிவிடும். ஆனால், இரு நாடுகளிலும் தராதரக் கூலி வீதங்கள் மாறாதிருப்பதால் உழைப்பு சார் வாணிப வீதம் பழைய நிலையிலேயே இருக்கும்.

பொருள் சார் வாணிபம் வீதத்திற்கும் உழைப்பு சார் வாணிப வீதத்திற்குமிடையில் வேறுபாடு தோன்றுவதற்கு இறக்குமதிப் பண்டங்களின் விலை உயர்வும் காரணமாக அமையலாம். இறக்குமதிப் பண்டத்தின் தேவை உயரும் பொழுது, அதன் விலையும் உயரும். மேலும், இறக்குமதிப் பண்டத்தினை உற்பத்தி அதிகரிக்கும் பொழுது, குறைந்து செல் விளைவு விதி செயல்படத் தொடங்கி, விலையேற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும், இறக்குமதி செய்திடும் நாட்டிலும், புதிதாக இறக்குமதி செய்யத் தொடங்கியுள்ள நாடுகளிலும் அப் பண்டத்திற்குத் தேவை பெருகி, விலையேறுதல் உண்டு. இத்தகைய காரணங்களின் அடிப்படையில் இறக்குமதி விலை ஏறும் பொழுது, பொருள்சார் வாணிப வீதம் மாறும். ஆனால், இரு நாடுகளுக்கிடையில் நிலவும் தராதரக் கூலி விகிதங்கள் மாறாததால் உழைப்புசார் வாணிப வீதம் பழைய நிலையிலேயே இருக்கும். சுருங்கக்கூறின், அளிப்பு–தேவை நிலைகளில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாகவும், ஏற்றுமதித் தொழிலில் ஏற்படும் தொழில் நுட்ப முன்னேற்றங்களின் காரணமாகவும், இறக்குமதிப் பண்டங்களின் விலையேற்றத்தின் காரணமாகவும் பொருள்சார் வாணிப வீதமும்,

உழைப்புசார் வாணிப வீதமும் சரி சமமாவதில்லை என்பது தெளிவு. புள்ளியியல் ரீதியான அளவைக்கு (measurement) பொருள்சார் வாணிப வீதமே சிறந்தது என்று பேராசிரியர் ஹேபர்லர் (Haberler) குறிப்பிடுகிறார்.

வாணிப வீதக் கருத்தியல்கள் (Terms of Trade concepts)

வாணிபத்திலிருந்து கிடைத்திடும் ஆதாயம், அதன் அளவு, அதில் ஏற்படும் மாற்றம், போக்கு முதலானவற்றைப் பொருள்சார் வாணிப வீதப் போக்கிலிருந்தே புரிந்து கொள்ளலாம் என்று தொன்மைப் பொருளியலார் கருதினர். இறக்குமதி விலைகளுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி விலைகள் உயர்ந்து செல்வது வாணிப வீதம் சாதகமாக உள்ளது என்பதனைக் குறித்திடும் என்று மெர்க்கண்டலிஸ்டுகள் (mercantilists) கருதினர். வாணிப ஆதாயத்துடன் வாணிப வீதத்தை ரிக்கார்டோ இணைத்துப் பார்க்கவில்லை என்றாலும், உள்நாட்டுப் பண்டத்தின் ஒவ்வோர் அலகிற்கும் வெளிநாட்டுப்பண்டத்தினை மேலும் மேலும் கூடுதலாகப்பெறும் வாய்ப்பு ஏற்பட்டால் அது வளர்ச்சிக்குரிய அறிகுறி என்பதாக அவர் நம்பினார். பொருள்சார் வாணிப வீதத்தின் சாதகமான போக்கு ஒரு நாட்டிற்கு உண்மையிலேயே நன்மை பயக்கும் வண்ணம் உள்ளதா என்பது எதைப் பொறுத்தது என்றால், வாணிப வீதத்தின் சாதகமான போக்கு எவ்வாறு நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டது என்பதைப் பொறுத்தமாகும். வாணிப வீதத்தின் மூலம் நாடு நன்மை பெறுகிறதா என்பதனைக் காண ஜான் ஸ்டூவர்ட் மில் தந்திடும் உரைகள் இது. இறக்குமதிக்கு ஈடாக ஏற்றுமதியின் மாற்று வீதத்தில் ஏற்படும் அதிகரிப்பினைக் கொண்டு ஒரு நாடு வாணிபத்தின் மூலம் பெறும் நன்மையினை அளந்திட வேண்டும் என்பது மில் அவர்களின் முடிவு.

மில் விளக்கும் பொருள்சார் வாணிப வீதம் இறுதிநிலைப் பயன்பாட்டினைச் (marginal utility) சார்ந்துள்ளமையால், ஜிவான்ஸ் (Jevons) இக் கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை. வாணிப ஆதாயம் மொத்த பயன்பாட்டினைச் (total utility) சார்ந்துள்ளது என்பது ஜிவான்ஸ் கருத்தாகும். ஏற்றுமதியினால் ஏற்படும் பயன்பாட்டு இழப்பினை மீறி இறக்குமதி மூலம் கிடைக்கப்பெறும் பயன்பாட்டு உபரியே மொத்த பயன்பாடு ஆகும். இந்த விளக்கம் வலியுறுத்துவது என்ன? இறக்குமதியின் இறுதிநிலைப் பயன்பாடு, ஏற்றுமதியின் இறுதிநிலைப் பயன்பாட்டிழப்பு (marginal disutility) ஆகிய இரண்டின் விகிதம் பொருள்சார் வாணிப வீதத்திற்குச் சமமாகும். இது நிலை

யானது. வாணிபச் சமநிலை ஏற்படும்பொழுது வாணிப இறுதி நிலை அலகு (marginal unit of trade) ஆதாயத்தையும் தராது; நஷ்டத்தையும் ஏற்படுத்தாது என்பதனைத்தான் மேலே தந்துள்ள விளக்கம் (மில் கருத்து குறித்த விளக்கம்) வலி யுறுத்துகிறது. ஆனால், ஜிவான்ஸ் தந்திடும் சிந்தனையோட்டம் என்ன? இறக்குமதிகளின் பயன்பாட்டுச் சார்பு பலனில் (utility function for imports) ஏற்படும் மாற்றங்கள், ஏற்றுமதி களின் பயன்பாட்டிழப்புச் சார்பு பலனில் (disutility function for exports) ஏற்படும் மாற்றங்கள், வாணிபப் பருமானத் (volume of trade) தில் ஏற்படும் மாற்றங்கள் ஆகிய இத்தகைய மாற்றங்களே வாணிபத்தின் மூலம் கிடைத்திடும் மொத்த பயன்பாட்டினை நிர்ணயிக்கக்கூடியவை என்றும், பொருள்சார் வாணிப வீதத்தின் சாதகமான போக்கு, மொத்த பயன் பாட்டில் ஏற்படும் அதிகரிப்பைச் சுட்டிக்காட்டுவது இம் மாற்றங்களைப் பொறுத்ததுதான் என்று ஜிவான்ஸ் கூறுகிறார். ஜிவான்ஸின் திறனாய்வினைத் தொடர்ந்து பொருள்சார் வாணிப வீதத்திற்கும் வாணிபத்திலிருந்து கிடைத்திடும் ஆதாயத்திற்கு முள்ள தொடர்பு குறித்துப் பொருளாதார நிபுணர்களிடம் எழுந்த சர்ச்சைகளின் விளைவாக, வாணிப வீதத்தினை விளக் கிடும் நோக்குடன் வெவ்வேறு கருத்தியல்கள் தோன்றின. அக் கருத்தியல்களை ஈண்டுச் சுருக்கமாக, ஆனால், தெளிவினை இழந்திடாவண்ணம் விளக்குவோம்.

வாணிப வீதக் கருத்தியல்கள்[7] மூன்று பிரிவுகளில் அடங்கும். ஒன்று, பண்டங்களிடையே மாற்று விகிதம் சார்ந்த பிரிவில் அடங்குவன :- நிகர பண்ட மாற்று வாணிப வீதம் (net barter terms of trade) அல்லது பொருள்சார் வாணிப வீதம் (commodity terms of trade), மொத்த பண்ட மாற்று வாணிப வீதம் (gross barter terms of trade), வருமான வாணிப வீதம் (income terms of trade); இரண்டு, உற்பத்திக் காரணி களிடையே பரிவர்த்தனையாதலைச் சார்ந்த பிரிவில் அடங்கு வன :- ஒற்றைக் காரணி வாணிப வீதம் (single factoral terms of trade), இரட்டைக் காரணி வாணிப வீதம் (double factor terms of trade); மூன்று, பயன்பாட்டுப் பகுத்தாய்வின் மூலம் வாணிப ஆதாயத்தை விளக்கிடும் பிரிவில் அடங்குவன :- உண்மைச் செலவுசார் வாணிப வீதம் (real cost terms of trade), பயன்பாட்டு வாணிப வீதம். வாணிப வீதக் கருத்தியல்கள் மொத்தம் ஏழு இங்குத் தரப்பட்டுள்ளன.

[7] ஜிரால்டு எம். மீயர் ; "பன்னாட்டு வாணிபமும் அபிவிருத்தியும்", Gerald M. Mear : "International Trade and Development" ப, 40-45,

நிகர பண்ட மாற்று வாணிப வீதம் (N), ஏற்றுமதிகளின் விலை குறியீட்டெண்ணிற்கும், இறக்குமதிகளின் விலை குறியீட்டெண்ணிற்கும் இடையே உள்ள விகிதத்தினைக் குறித்துக் காட்டுகிறது. அதாவது, தள ஆண்டில் (base year) நிலவும் ஏற்றுமதி, இறக்குமதி விலைகளின் விகிதத்துடன் நடப்பு ஆண்டில் (current year) நிலவும் விகிதத்தினை ஒப்பிடுவதே நிகர பண்ட மாற்று வாணிப வீதமாகும். இதன் சமன்பாடு பின்வருமாறு :-

$$N = \frac{Px_1}{Pm_1} : \frac{Px_0}{Pm_0} = \frac{Px_1}{Px_0} : \frac{Pm_1}{Pm_0} = \frac{Px}{Pm}$$ ஏனெனில்,

$Px = \frac{Px_1}{Px_0}$; $Pm = \frac{Pm_1}{Pm_0}$. இவ்வெழுத்துக் குறிகளின் விளக்கம் பின்வருமாறு :-

P — விலை.

x — ஏற்றுமதிகள்.

m — இறக்குமதிகள்.

o — தள ஆண்டு.

I — நடப்பு ஆண்டு.

Px — ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்.

$\frac{Px_1}{Px_0}$ — தள ஆண்டு, நடப்பு ஆண்டுகளில் ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்களின் விகிதம்.

Pm — இறக்குமதி விலைக் குறியீட்டெண்.

$\frac{Pm_1}{Pm_0}$ — தள ஆண்டு, நடப்பு ஆண்டுகளில் இறக்குமதி விலைக் குறியீட்டெண்களின் விகிதம்.

N — நிகர பண்ட மாற்று வாணிப வீதம்.

N அதிகரித்தால், விலை விகித அடிப்படையில், ஒரேயளவு ஏற்றுமதிக்கு ஈடாகக் கூடுதலான அளவில் இறக்குமதி கிடைத்திடும். N-ல் ஏற்படும் அதிகரிப்பு ஒரு நாட்டிற்குச் சாதகமான போக்கே. வாணிபத்தில் பண்டங்கள் மட்டும் இடம் பெற்றால் தான் ஒரு நாடு வாணிபம் மூலம் அடையும் ஆதாயத்தினைக்

கணிப்பதில் நிகர பண்டமாற்று வாணிப வீதம் பொருந்தி வரும் என்று எப். டபிள்யூ. டாஸிக் (F. W. Taussig) கருதுகிறார்.[8]

அயல்நாட்டுச் செலுத்து நிலைக்கு (balance of payments) என்ன நேர்கிறது என்பதனை நிகர பண்ட மாற்று வாணிப வீதம் விளக்கவில்லை. தள ஆண்டில் கிடைத்த அதேயளவு இறக்குமதிக்கு ஈடாக நடப்பு ஆண்டில் குறைந்த அளவு ஏற்றுமதி செய்யப்படுகிறதா இல்லையா என்பதனை நிகர பண்ட மாற்று வாணிப வீதம் விளக்கவில்லை. அயல்நாட்டுச் செலுத்து நிலைக்கு என்ன நேர்கிறது என்பதனையும் அது விளக்கிட வில்லை. ஈடு பெறுமல் ஏற்றுமதி செய்யும்பொழுதும், ஈடு தாராமல் இறக்குமதி செய்யும்பொழுதும் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஒரு தலையான செலுத்துகைகள் (unilateral payments) இடம் பெற்றுவிடுகின்றன. அதனுல், ஏற்றுமதி களிலோ அல்லது இறக்குமதிகளிலோ, அவற்றின் பண மதிப்பில் மிகைபாடு தோன்றிவிடுகிறது. இத்தகைய சூழ்நிலை யில் மொத்த பண்ட மாற்று வாணிய வீதமே (G) பொருத்த முடையது. ஏற்றுமதிப் பண்டங்கள், இறக்குமதிப் பண்டங்கள் ஆகியவற்றின் பருப்பொருள்சார் அளவுகளின் (physical quantities) மாற்று வீதத்தை G அளிக்கிறது.

$$G = \frac{Qm_1}{Qm_0} : \frac{Qx_1}{Qx_0} = \frac{Qm}{Qx}.$$

இச் சமன்பாட்டில் Qm, Qx முறையெ இறக்குமதி, ஏற்றுமதிகளின் பருமான குறியீட் டெண்களாகும் (volume index numbers). தள ஆண்டில் ஏற்றுமதியான பண்டங்களின் அதேயளவிற்கு ஈடாக நடப்பு ஆண்டில் கூடுதலான பண்டங்கள் இறக்குமதியாகின்றன என்றுல், G–ன் மதிப்பு உயர்ந்துள்ளது என்று பொருள்.

இறக்குமதி, ஏற்றுமதி ஆகியவற்றின் மதிப்புகள் சம மானுல், அயல்நாட்டுச் செலுத்து நிலை சமன்பட்டுவிட்டது என்று பொருள். அப்பொழுது G = N என்ற சமன்பாடு ஏற்படும். ஆக,

$$\frac{G}{N} = \frac{Qm}{Qx} . \frac{Pm}{Px} = \frac{Vm}{Vx}.$$

Vm, Vx முதலியன முறையே இறக்குமதி, ஏற்றுமதி ஆகிய வற்றின் மதிப்புகளின் குறியீட்டெண்களாகும். Vm = Vn. ஆகவே, G = N. அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஒரு

[8] எப். டபிள்யூ. டாஸிக்: "பன்னாட்டு வாணிபம்" (1972) (F W Taussig: International Trade) ப. *113, 117, 248, 249.*

தலையாய செலுத்துகைகள் இடம் பெற்றுவிட்டால், G, N இரண்டும் சமமாக இருத்தலைவிட்டு விலகிச் செல்லும்.

ஏற்றுமதிப் பண்டங்களின் அளவில் ஏற்படும் மாற்றங்களைக் கணக்கிடுவது ஓர் ஏழை நாட்டிற்குப் பயன்படும். நிகர பண்ட மாற்று வீதத்தினை ஏற்றுமதியளவினால் பெருக்கினால் வருமான வாணிப வீதம் (I) கிடைத்திடும். I = N . Qx. ஏற்றுமதி விற்று இறக்குமதிப் பண்டங்களை அதிக அளவில் பெற்றால் I உயர்ந்திருக்கிறது என்று பொருள். இறக்குமதி செய்திடும் வல்லமையினை ஒரு நாடு, தமது ஏற்றுமதியினைப் பொறுத்துப் பெருக்கிக் கொள்வதினை I-ல் ஏற்படும் அதிகரிப்பு உணர்த்துகிறது. இறக்குமதி செய்திடும் வல்லமை, ஒரு நாட்டிற்கு ஏற்றுமதியை மாத்திரமல்லாமல், வெளிநாட்டு மூலதனம் உள்ளே நுழைதலையும், ஏனைய புலனாகா மாற்று வரவுகளையும் (invisible exchange receipts) பொறுத்தது. வருமான வாணிப வீதத்திலே ஏற்படும் மாற்றம், வாணிப ஆதாயத்தினை அளந்திடுவதாகவோ' சேம நலத்தினைக் குறித்திடுவதாகவோ கொள்ளக்கூடாது. ஏற்றுமதி மூலம் பெற்ற இறக்குமதியின் அளவினையே அது குறிக்கும்.

ஏற்றுமதிகளை விற்று, இறக்குமதிப் பண்டங்களை அதிக அளவில் பெற்றால், I, N ஆகிய இரண்டு வாணிப வீதங்களும் உயர்ந்து, நாட்டின் வளர்ச்சி ஏற்படும். ஆனாலும், ஏற்றுமதி விலை உயர்ந்தால் ஏற்றுமதியின் மொத்த அளவு குறைந்து விடும். இறக்குமதியும் குறைந்து, நாட்டின் வளர்ச்சி பாதிக்கப் படலாம். ஏற்றுமதி விலை (Px), ஏற்றுமதியளவு (Qx) ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களின் அளவினையும், போக்கினையும் பொறுத்து, I, N ஆகிய இரண்டும் எதிரெதிர் திசையில் நகரும் உதாரணமாக, இறக்குமதி விலைகள் (Pm) மாறாதிருந்து, ஏற்றுமதி விலைகள் (Px) குறைந்துள்ளதாகக் கொள்வோம். ஏற்றுமதி விலைகள் குறைந்துள்ள வீதாசாரத்திற்குமேல், ஏற்றுமதியளவு (Qx) குறைந்துவிட்டதாகக் கொண்டால், நிகர பண்ட மாற்று வாணிப வீதம் (N) குறைவுற்று வருமான வாணிப வீதம் (I) வளர்ந்துவிடும்.

ஏற்றுமதித் தொழிலில், உற்பத்தித் திறனில் ஏற்படும் மாற்றங்களையும் கணக்கிற்கு எடுத்துக்கொண்டு வாணிப வீதக் கருத்தியலை அணுகுவோம். ஏற்றுமதித் தொழிலில் உற்பத்திக் காரணிகளின் உற்பத்தித் திறனில் ஏற்படும் மாற்றங்களை அனுசரித்து ஏற்றுமதி விலைக் குறியீட்டெண், இறக்குமதி

விலைக் குறியீட்டெண் ஆகியவற்றிற்கு இடையே நிலவிடும் விகிதத்தினைச் சுட்டிடும் வகையில் பேராசிரியர் வைனர் (Viner) ஒற்றைக் காரணி வாணிப வீதத்தினை (S) வழங்கியுள்ளார். ஏற்றுமதிப் பண்டத்தின் நுட்ப வினைமுறைக் குணகக் குறியீட்டெண்ணின் (technical coefficients index) தலைகீழ்ப் பரிமாற்றத்தினால் (reciprocal) பொருள்சார் வாணிப வீதக் குறியீட்டெண்ணைப் பெருக்கினால் கிடைத்திடும் ஒற்றைக் காரணி வாணிப வீதம் வாணிப ஆதாயப் போக்கினை நன்கு தெளிவாக்கும் என்று வைனர் கருதுகிறார்.

$$S = \frac{\frac{Px_1}{Px_0}}{\frac{Pm_1}{Pm_0}} \cdot \frac{Fx_0}{Fx_1} = N \cdot Zx.$$

Zx, ஏற்றுமதி உற்பத்தித் திறன் குறியீட்டெண் (export productivity index) ஆகும். ஏற்றுமதிப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பெறும் காரணி உள்ளிடுகையின் ஒவ்வோர் அலகிற்கும் (per unit of factor-input) இறக்குமதிப் பண்டங்கள் கூடுதலான அளவிற்குக் கிடைப்பின் S உயர்ந்து விடும். இவ்வாறு S உயருவது சாதகமான போக்கே.

பொருளாதார ரீதியாக வளரும் நாட்டில், காரணிகளின் உற்பத்தித் திறன் உயருவது இயல்பு. உற்பத்தித் திறனில் மாற்றங்கள் ஏற்படுவதை வாணிப ஆதாயத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பொருள்சார் வாணிப வீதத்தினால் அளக்க முடியாது. இறக்குமதி விலைகள் மாறுதிருக்கும்பொழுது ஏற்றுமதி விலைகள் குறைந்துவிடுவதாகக் கொள்வோம். இதனால், பொருள்சார் வாணிப வீதம் வீழ்ந்துவிடும். இருப்பினும், உற்பத்தித் திறன் உயர்ந்து, ஏற்றுமதிப் பண்டங்களின் உற்பத்தி பெருமளவு உயர்ந்தால், நாட்டிற்கு நன்மையே விளையும். இதனால்தான் சர் டென்னிஸ் ராபர்ட்ஸன் (Sir Dennis Robertson) ஒற்றைக் காரணி வீதத்தினை மற்ற எல்லாக் கருத்தியல்களையும்விட உயர்ந்தது எனக் கருதுகிறார்.

இறக்குமதி, ஏற்றுமதித் தொழில்களில் உற்பத்தித் திறனில் ஏற்படும் மாற்றங்களுக்கு இயைந்தவாறு பொருள்சார் வாணிப வீதம் ஒழுங்கு பெறுதலையே இரட்டைக் காரணி வாணிப வீதம் (D) என்பர்.

$$D = \frac{\frac{Px_1}{Px_0}}{\frac{Pm_1}{Pm_0}} \cdot \frac{\frac{Fm_1}{Fm_0}}{\frac{Fx_1}{Fx_0}} = \frac{\frac{1}{Zm}}{\frac{1}{Z_0}}$$

$$= \frac{N,\ Zx}{Zm}$$

Zx, Zm முறையே ஏற்றுமதி, இறக்குமதி உற்பத்தித் திறன் குறியீட்டெண்களாகும். ஏற்றுமதிகளில் உள்நாட்டிலேயே ஈடுபடுத்தப்பெறும் காரணிகளின் ஓரலகிற்கு இணையாக இறக்குமதிகளில் ஈடுபடுத்தப்பெறும் வெளிநாட்டு காரணிகளின் அலகுகள் கூடுதலாகக் கிடைக்குமெனில், D-ன் மதிப்பு உயரும். கடத்துச் செலவும் வேறு செலவுகளும் நிலையாக விருந்து, மாருச் செலவு விதியும் நடைமுறையில் நிலவினால், பொருள்சார் வாணிப வீதமும் இரட்டைக் காரணி வாணிப் வீதமும் சமமாக இருக்கும். ஆனால், இவற்றிற்குப் புறம்பான சூழலில், அவ் வீதங்கள் வேறுபடும். மேலும், அச் சூழலில் நாடுகளிடையில் வாணிப ஆதாயப் பகிர்வினைக் குறித்திடும் குறியீட்டெண்ணாக இரட்டைக் காரணி வாணிப வீதம் விளங்கும்.

உண்மை வாணிப ஆதாயத்தினைக் குறித்திடும் வகையில், வைனர் (Viner) உண்மைச் செலவு வாணிப வீதத்தினை (R) உருவாக்கினார். இது சேமநலப் பகுத்தாய்வினைச் சார்ந்த ஒன்று. ஏற்றுமதிகளினால் இழந்திடும் பயன்பாட்டினைவிட இறக்குமதிகளிலிருந்து கிடைத்திடும் மொத்த பயன்பாட்டின் மிகைபாடு வாணிப ஆதாயத்தினைக்குறிக்கும். அதுவே,R ஆகும். ஏற்றுமதிப் பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஏற்படும் பயன்பாட்டின்மையை அளந்திட, ஒற்றைக் காரணி வாணிப வீதத்தின் குறியீட்டெண்ணை ஒழுங்குபடுத்திட வேண்டும். அதாவது, ஏற்றுமதித் தொழிலில் ஈடுபடும் காரணிகளின் ஒவ்வோர் அலகின் பயன்பாட்டின்மையளவின் தலைகீழ்ப் பரிமாற்றத்தினால் ஒற்றைக் காரணி வாணிப வீதத்தினைப் பெருக்கினால் கிடைப்பது உண்மைச் செலவு வாணிப வீதம் ஆகும்.

$$R = \frac{\frac{Px_1}{Px_0}}{\frac{Pm_1}{Pm_0}} \cdot \frac{Fx_0}{Fx_1} \cdot \frac{Rx_0}{Rx_1} = S \cdot \frac{Rx_0}{Rx_1}$$

ஏற்றுமதியில் தொழில் நுட்ப குணகத்தின் ஒவ்வோர் அலகின் பயன்பாட்டின்மையைக் குறித்துக் காட்டுவது $\frac{Rx_0}{Rx_1}$ ஆகும். ஓரலகு உண்மைச் செலவிற்குக் கிடைக்கப்பெறும் இறக்குமதிகளின் அளவு மிகுதியானால் R-ன் மதிப்பு உயரும். ஏற்றுமதிப் பண்டங்களை உற்பத்தி செய்கின்ற முறைகளில் மாற்றம் ஏற்பட்டாலும் சரி, அல்லது ஏற்றுமதித் தொழிலில் பயன்படுத்தப்பெறும் காரணிகளின் வீதாசாரத்தில் மாற்றம் ஏற்பட்டாலும் சரி, மேற்குறிப்பிட்டவாறு R-ன் மதிப்பு உயரும்.

தேவையைப் பொறுத்தவரையில், இறக்குமதிப் பண்டங்களின் தராதரத் தேவையில் ஏற்படும் மாற்றங்களைக் கணக்கில் கொண்டுவருதல் வேண்டும். ஏற்றுமதித் தொழிலில் உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துவதால், உள்நாட்டில் துய்ப்பினைக் குறைத்துக் கொள்ள நேரிடுகிறது. இதனால் உள்நாட்டுப் பண்டங்களின் தராதரத் தேவையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய மாற்றங்களையும் கணக்கில் கொண்டு வந்த பின்னர், உள்நாட்டுத் துய்ப்பு தவிர்க்கப்பட்ட பண்டங்கள், ஆகியவற்றின் ஒவ்வோர் அலகின் தராதர சராசரி பயன்பாட்டின் குறியீட்டெண்ணை உண்மைச் செலவு வாணிப வீதத்துடன் பொருத்த வேண்டும். அவ்வாறு பொருத்தினால் கிடைத்திடும் குறியீட்டெண் பயன்பாட்டு வாணிப வீதமாகும். (U) துய்ப்பிலிருந்து தவிர்க்கப்பெற்ற உள்நாட்டுப் பண்டங்கள் (a), இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் (m) ஆகியவற்றின் ஒப்புமைப் பயன்பாட்டின் குறியீட்டெண்ணால் (u) R-ஐப் பெருக்கினால் கிடைப்பது U ஆகும்.

$$U = \frac{\frac{Px_1}{Px_0}}{\frac{Pm_1}{Pm_0}} \cdot \frac{Fx_0}{Fx_1} \cdot \frac{Rx_0}{Rx_1} \cdot \frac{\frac{Um_1}{Um_a}}{\frac{Um_0}{Ua_0}}$$

$$= R.\ U$$

எழுத்துக் குறியீடுகளாகிய R, U இவற்றைப் பயன்பாட்டின்மையையோ அல்லது பல்வேறு பண்டங்களின் தராதரச் சராசரிப் பயன்பாட்டினையோ கணக்கிடுவது சற்று கடினம். வாணிபவீத மாற்றங்களால் ஏற்படும் சேமநலத்தின் முக்கியத்துவத்தை R, U இவற்றை நேரடியாக அளந்து தெரிந்து கொள்ள முடியாது என்பது இதனால் தெளிவாகிறது.

இவ்வேழு வாணிப வீதக் கருத்தியல்களில் G, D, R, U ஆகியவற்றை அளந்திடுதல் கடினம் என்பதனால் அவ்வீதங்கள் நடைமுறைக்கு ஒத்துவரமாட்டா. ஏனைய வாணிப வீதங்களாகிய N, R, I முதலானவை நடைமுறைக்கு ஒத்துவருவன. வளர்ச்சியுற்ற நாடுகளுக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கும் N, S, I முதலிய வாணிப வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் பொருளாதார முக்கியத்துவம் உடையவை.

பொருளாதார முன்னேற்றத்தில் வாணிப வீதத்தின் பங்கு

வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குச் சாதகமான வாணிப வீதம் அமைந்தால், அவற்றின் வளர்ச்சி துரிதப்படும். பன்னாட்டு வாணிப முக்கியத்துவம் உள்ள நாடுகளாக இருப்பின், அவற்றின் வளர்ச்சிக்குச் சாதகமான வாணிபவீதம் அமையும்பொழுது, ஒரேயளவு ஏற்றுமதிக்கு இறக்குமதிப் பண்டங்கள் அதிகமாகக் கிடைக்கப் பெறுதல் நாட்டு வருமானத்தைக் கணிசமான அளவிற்கு உயர்த்தும், சாதக வாணிபவீதம் நாட்டு வருமானத்தை நேரடியாக மட்டுமன்றி, மறை முகமாகவும் உயர்த்தும். முன்னர் பெற்ற அதேயளவு இறக்குமதியை ஏற்றுமதிக் குறைப்பு மூலம் பெறமுடியுமெனில் அதனால் ஏற்றுமதியில் ஏற்படும் சேமிப்பினைக் கொண்டு வளர்ச்சி குறைந்த நாடுகள் வளர்ச்சித் திட்டமிடலாம். முன்னர் அனுப்பிய அதேயளவு ஏற்றுமதிக்கு இணையாகக் கூடுதலான இறக்குமதியைப் பெறமுடியுமெனில், இறக்குமதியில் ஏற்படும் அதிகரிப்பினைக் கொண்டு பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டலாம். பன்னாட்டு வாணிப முக்கியத்துவம் நிறைந்த ஒரு நாட்டில் சாதக வாணிப வீதம் நிலவினால், அதனை அந்த நாட்டு முதலாக்கத்தின் கருவியல்பான ஊற்றுக்கால் (potential source) எனக் கொள்ளலாம். சாதக வாணிபவீதம் மூலம் முதலாக்கம் நிகழுமெனில், அயல் நாட்டுக் கடன் சுமையைத் தாங்க வேண்டிய அவசிமுயமில்லை; அரசுகளுக்கிடையே கொடுத்துப் பெறுகிற கடன்கள், மானியங்கள் (grants) ஆகியவற்றினால் உராய்தல்கள் (frictions) ஏற்படவேண்டிய கட்டாயமும் இல்லை. "வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய பிரச்சினைகள்" எனும் தமது நூலில் ராக்னர் நர்க்ஸ் (Ragnar Nurkse) இக் கருத்தினைத் தெளிவு படுத்தியுள்ளார். அயல் நாட்டுச் செலுத்துகையில் ஏற்படும் நெருக்கடிகளைத் தீர்க்கவேண்டி வாணிப வீதம் சாதமாக அமைவது நல்லது. மேலும், நாட்டின் வரவு செலவுக் கணக்கில் ஏற்படும் பற்றுக்குறையினை ஒழுங்கு படுத்த பொருளாதார

வளர்ச்சிகுன்றிய நாடுகள், அயல் நாட்டு வாணிபத்தைப் பெருமளவு சார்ந்துள்ளமையால், சாதக வாணிப வீதம் அமைவது நல்லது, தேசிய வருமானத்தைப் பெருக்கிடவும், வளர்ச்சிக்கு வேண்டிய வளன்களைப் பெருக்கிடவும் பலவழிகள் உண்டெனினும், பன்னாட்டு வாணிப முக்கியத்துவம் பெற்ற நாட்டில் வாணிப வீதம் சாதகமாக அமைதல் சிறப்பான வழியாகும்.

வாணிப வீதமதிப்பு ஏறுவதனாலேயே பொருளாதார வளர்ச்சி தீவிரமாகும் என்பது பொருளன்று. வாணிப வீத மேம் பாட்டினால் கிடைத்திடும் ஆதாயத்தைக் குறிப்பிட்ட ஒரு நாடு எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதனைப் பொறுத்துத்தான் அதன் வளர்ச்சி அமையும். அவ் வாதாயத்தினைச் சேமித்து, உற்பத்தியினைப் பெருக்கக் கூடிய துறைகளில் முதலீடு செய்தால் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

வாணிபவீத மதிப்பினை உயர்த்துவதினாலேயே ஒரு நாட்டிற்கு வளர்ச்சி முத்திரை நாம் குத்திவிட முடியாது. இறுதியான குறிக்கோள் வாணிப வீத மதிப்பேற்றம் அன்று பொருளாதார வளர்ச்சியே. ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்து வதன் மூலம் வாணிப வீதத்தில் ஏற்றம் காணலாம். ஆனால், வளர்ச்சியைத் தீவிரப்படுத்துவதற்குத் தேவையான இயந்திர சாதனங்கள், தொழில் நுண்ணறிவு (technology) அத்தியாவசிய மான கச்சாப் பொருள்கள் போன்றவற்றை வெளி நாடுகளி லிருந்து வரவழைப்பதற்குத் தேவையான அன்னியச் செலா வணியினை ஏற்றுமதிக் குறைப்பின் காரணமாக ஏற்றுமதித் தொழிலிருந்து விடுவிக்கப் பெற்ற வளன்கள் உள்நாட்டில் உற்பத்தியாற்றல் குறைந்துள்ள துறைகளில் ஈடுபடுத்தப்படும். இது நாட்டின் மொத்த உற்பத்தியைப் பாதிக்கும். மேலும், ஏற்றுமதித் துறையிலிருந்து விடுவிக்கப் பெற்ற வளன்களைக் கொண்டு இறக்குமதிப் பதிலிகளை (import substitutes) உற்பத்தி செய்திடும்பொழுது, அதன் மதிப்பு, ஏற்கனவே பழைய விலைகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களின் மதிப்பினை விடக் குறைவாக இருந்தாலும் வியப்படைய வேண்டியதில்லை.

பணவீக்கத்தின் மூலம் வாணிப வீதத்தினை உயர்த்தி னாலும் எதிர்பார்க்கும் நன்மையினை அது வழங்காது. வாணிப வீத உயர்வின் நல் விளைவுகளைப் பணவீக்கத்தின் தீய விளைவுகள் அழித்துவிடும். ஏற்றுமதிப் பண்டங்களின் விலை யேறினால், வாணிப வீதம் உயர்ந்து, வாணிப ஆதாயம் குறிப் பிட்ட நாட்டிற்கே பயனளிக்கவேண்டும் என்பது நியதி.

ஆனால், வளர்ச்சி குறைந்த நாடுகளில் பல ஏற்றுமதித் தொழில் களில் அயல்நாட்டு முதலீடு கணிசமான அளவிற்கு இருப் பதால், ஏற்றுமதி விலையேற்றத்தின் பலன்களனைத்தும் உள் நாட்டிற்கல்லாமல் அயல்நாட்டிற்கே சென்று விடுகின்றன. அதுபோலவே, அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்குத் தேவை யான இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் குறைந்தாலும், வாணிப வீத மேம்பாடு அயல்நாட்டினருக்கு மட்டுமே பயன் அளிக்கவல்லது. இதுபோன்ற நேர்வுகளில், வாணிப வீதம் நாட்டின் வளர்ச்சியை அல்லது அதன் தேய்வினைச் சுட்டிக் காட்டவல்லதன்று.

பன்னாட்டுத் துறையில் நாட்டின் உண்மை வருமானத் தில் ஏற்படும் மாற்றங்களை வாணிப வீத மூலம் தெரிந்து கொள்ள இயலுமா என்பதனை ஆராயவேண்டும். தொன்மைப் பொருளாதார நிபுணர்கள் சில எடுகோள்களை இட்டுக்கொண் டுள்ளனர். உற்பத்திக் காரணிகளின் அளிப்பு மாறுமை, உற்பத்தியின் நுட்ப வினைசார்ந்த முறைகள் மாறுமை, வேலை நிறைவு, நிறைவுப் போட்டி போன்ற தொன்மைப் பொருளிய லாரின் பாவனைகளனைத்தும் குறுங்காலத்தில்கூட உண்மையாக நிகழ்வன அல்ல என்பது தெளிவு. வேலையின்மையால் பாதிக் கப்பட்டுள்ள சாதனங்கள், வளன்கள் அனைத்தையும் பயன் படுத்தி ஏற்றுமதித் தொழிலை வளர்க்கலாம். இதனால், நாட்டு வருமானமும் உயரும். ஆனால், வாணிப வீதமும் உயரும் என்று சொல்ல முடியாது. அதுபோலவே, ஒ ரே ய ள வு ஏற்றுமதிக்கு இணையாகக் கூடுதலான அளவிற்கு இறக்குமதி கிடைத்து, வாணிப வீதம் உயர்ந்துவிடலாம். இதனால், சேமிக்கப்பட்ட மூலவளன்கள் பயன்படுத்தப்படாமல் இருந்து விட்டால், நாட்டு வருமானம் உயராது. ஆக, நாட்டின் உண்மை வருமானத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பகுத்தாய் வதற்கு வாணிப வீதக் கருத்தியல் முழுமையான அளவிற்குப் பயன்படாது.

திட்டங்கள் தீட்டி, பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டுகின்ற நாடுகள், இயந்திரங்களையும், தளவாடங்களையும் இறக்குமதி செய்ய முனையும். இறக்குமதியளவு பெருகுவதன் காரணமாக வாணிப வீதம் பாதகமடைவதுடன் நாட்டு வருமானமும் குறைந்துவிடும். ஆனால், இந் நிலை குறுங் காலத் தில்தான்; நீண்ட காலத்தில் பொருளாதார முன்னேற்றம் உந்தப்பட்டு, நாட்டு வருமானம் பெருக வாய்ப்புண்டு. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் ஏற்படும் மாற்றங் களைக் கணித்திட, வாணிப வீத மாற்றங்களுடன் ஏனைய

மாற்றங்களையும் கருதவேண்டும். உற்பத்தித் திறன், தேவை, **மொத்த ஏற்றுமதி**, மொத்த இறக்குமதி, வேலை வாய்ப்பு ஆகிய **வற்றில்** ஏற்படும் விளைவுகளையும் கருத்திற்கொண்டுதான் **வாணிப** வீத மாற்றங்களினுல் ஏற்படும் விளைவுகளைக் **கணித்திட** முடியும்.

வளர்ச்சி குன்றிய நாடுகளில் வாணிப வீதம் குறைந்திடக் **காரணங்கள்** யாவை? தொழிற்றுறை நாடுகளைவிட வளர்ச்சி குறைந்த நாடுகளில் உற்பத்தித்திறன் உயர்ந்து செல்வதால், பிந்திய நாடுகளின் வாணிப வீதங்கள் குன்றிவிடுகின்றன என்று சொல்லமுடியாது. அப்படியே இருந்தாலும், வாணிப வீத வீழ்ச்சி வெகுவாகப் பாதிக்காது. அதிகரித்துள்ள உற்பத் தித் திறனைத் தொழிற்றுறை நாடுகளும், வளர்ச்சி குன்றிய நாடு களும் தங்களுக்குள்ளாகவே பகிர்ந்துகொள்கின்றன என்பது தான் இதன் பொருள். மேலும், உற்பத்தித்திறன் வளர்ச்சி குன்றிய நாடுகளைவிட தொழில் முன்னேற்றம் கண்டுள்ள நாடுகளிலேயே அதிகரித்துள்ளது என்பதுதான் ஹெச். டபிள்யூ. சிங்கரின் (H. W. Singer) கருத்தாகும்.[9]

மூலப் பொருள்களை (primary products) உற்பத்தி செய் திடும் நாடுகளில் வாணிப வீதக் குறைவிற்கான விளக்கத்தினை சிங்கர் தருகிருர். தொழில் நுட்ப முன்னேற்றத்தில் விளைந்திடும் ஆதாயத்தினை உயர்ந்த வருமானங்களாக உற்பத்தியாளர்கள் பெறுவர்; அல்லது துய்த்திடும் பண்டங்களின் விலை குறைப்பு மூலம் அவ்வாதாயத்தினைத் துய்ப்போர் பெறுவர். தொழில் முன்னேற்றம் கண்ட நாடுகளில், தொழில் நுட்ப முன்னேற்றத் தில் விளைந்த ஆதாயத்தினைப் பொறிவழிப் பொருள் உற்பத்தி யாளர்கள் உயர்ந்த வருமானங்களாகப் பெறுவர். மூலப் பொருள்களை உற்பத்தி செய்திடும் நாடுகளில் அவ்வாதாயத் தினை விலை குறைப்பு மூலம் துய்ப்போர் அனுபவிப்பர். விவசாயம் போன்ற மூலப்பொருள்கள் உற்பத்தியாகும் தொழிலைவிட பொறிவழிப் பொருள் உற்பத்தியாகும் தொழி லில் வலிவான சர்வாதீனப் போக்கும் தொழிற் சங்கமும் அமைந்துள்ளமையால், தொழிற்றுறை நாடுகளில் அவ்வாதா யத்தினை உற்பத்தியாளர்கள் தங்களிடமே தக்கவைத்துக் கொள்கின்றனர். விவசாய நாடுகளில் சர்வாதீனப் போக்கும்

[9] H. W. *சிங்கர்* : " முதலீடு செய்யும் நாடுகளுக்கும் கடன்பெறும் நாடுகளுக்குமிடையில் ஆதாயங்களில் பகிர்வு ", " அமெரிக்கப் பொருளா தார ஆய்வு " எனும் சஞ்சிகை, கட்டுரைகளும், கூட்ட நிகழ்ச்சிகளும் (மே, *1950*), ப. *477-478*. (H. W. Singer : "The Distribution of Gain, Between Investing and Borrowing Countries ", American Economic Reviews Papers & Proceedings, May, 1950, P. 477-478).

இல்லை; வலுமிக்க விவசாயத் தொழிற்சங்கமும் இல்லை. எனவே, அவ் வாதாயம் விலை குறைப்பு மூலம் துய்ப்போரைச் சென்றடைகிறது. மேலும், தொழிற்றுறை நாடுகளில் உற்பத்திக் காரணிகளின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட அதிகரிப்பைவிட காரணிகளின் விலைகளில் (வருமானங்களில்) ஏற்பட்ட அதிகரிப்பே அதிகம். இதற்கு நேர்மாறான நிலை விவசாய நாடுகளில் நிலவுகிறது.

தொழில் முன்னேற்றம் கண்ட நாடுகள் வெவ்வேறான தொழில்கள் நிறைந்தும், ஒரு தொழிலினைப் பிறிதொன்றாக மாற்றிடும் இயல்பு அமையப்பெற்றும், பல்வேறு பொருள் உற்பத்தி வாய்ப்புப் பெற்றும், பலவகைத்தாய உற்பத்தி முறைகள் நிறைந்தும் உள்ளன. இவ்வாறு, அமைந்திடும் நாடுகளின் பொருளாதாரம் (diversified economy) எனலாம். இப் பொருளாதாரங்கள் நிலைமைக்கேற்றவாறு மாறிடும் நெகிழ்ச்சித் தன்மையினை இயல்பாகப் பெற்றுள்ளது. இத் தகைய பொருளாதாரங்கள் அமையப்பெற்ற தொழிற்றுறை நாடுகளுக்கு ஓர் வசதியுண்டு. பன்னாட்டு வாணிபத்தில் சில பண்டங்களின் உலக விலைகள் வீழ்ந்திடும்பொழுது இந் நாடுகள் அப் பண்டங்களின் உற்பத்தியை நிறுத்திவிட்டோ அல்லது குறைத்துவிட்டோ, விலை வீழ்ச்சியுறாத பண்டங்களை உற்பத்தி செய்திட முற்படும். இந்த நெகிழ்ச்சித் தன்மை மூலப் பொருள்களை உற்பத்தி செய்திடும் விவசாய நாடு களுக்குக் கிடையாது. மூலப் பொருள்களையும், விவசாய, வாணிபப் பொருள்களையும் பொறுத்தவரையில் பன்னாட்டு வாணிப வீதம் குறைந்திடும்பொழுது, இப் பண்டங்களையும் உற்பத்தி செய்திடும் தொழிற்றுறை நாடுகளுக்கு நெருக்கடி ஏற்படுவதில்லை; காரணம், அந் நாடுகள் உலகச் சந்தையில் விலை குறைந்திடாத வேறு பண்டங்களின் உற்பத்திக்கு எளிதாக மாறிவிடுகின்றன.

முன்னேறிய நாடுகளெலாம் உணவுப் பண்டங்களுக்கும் வேறு கச்சாப் பொருள்களுக்கும், இவற்றின் ஏற்றுமதியை நம்பி வாழ்ந்திடும் பின்தங்கிய நாடுகளை அண்டி வாழ்ந்திடும் நிலையில் இல்லை. முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பதார்த்தங்களையும், மூலப் பொருள்களையும் தாங்களே பெருமளவிற்கு உற்பத்தி செய்து கொள்கின்றன. மேலும், இந் நாடுகள் தொழில் நுண்ணியலில் (technology) முன்னேற்றம் கண்டுள்ளமையால், பொறிவழிப் பண்ட உற்பத்தியின் ஒவ்வோர் அலகிற்கும் தேவைப்படும் கச்சாப் பொருள்களின் அளவு குறைந்துள்ளது. இயற்கை

யான கச்சாப் பொருள்களுக்குப் பதிலாக பிளாஸ்டிக், அலுமினியம், செயற்கை ரப்பர், செயற்கை நார்ப்பொருள் போன்ற செயற்கைச் சேர்மமான பதிலிப்பொருள்களும் (synthetic substitutes) உலகச் சந்தையில் விற்பனைக்கு வந்து விட்ட காரணத்தினால், வளர்ச்சி குன்றிய நாடுகளின் மூலப் பொருள் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுவிட்டது.

விவசாயப் பொருள்களையும், தாதுப் பொருள்களையும் மட்டுமே பெருமளவு ஏற்றுமதி செய்வதில் வளர்ச்சி குறைந்த நாடுகள் சிறப்புத் தேர்ச்சியுற்றன. இப் பொருள்களின் வருமானம்சார் தேவை நெகிழ்ச்சி (income elasticity of demand) மிகக் குறைவு. ஆனால், வருமானம்சார் தேவை நெகிழ்ச்சி மிகுந்துள்ள பொறிவழிப் பண்டங்களை உற்பத்தி செய்திடும் தொழிற்றுறை நாடுகளின் ஏற்றுமதிக்கு உள்ள தேவை மிகுதி யாகிவிடும்.

விவசாய நாடுகளின் மூலப்பொருள் ஏற்றுமதி வேறு சில காரணங்களாலும் பாதிக்கப்படுகின்றது. தங்களுடைய நாட்டில் விவசாயத் துறையில் வேலையின்மைப் பிரச்சினை எழக் கூடாது என்பதற்காகவேண்டி சில முன்னேறிய நாடுகள் பின் தங்கிய விவசாய நாடுகளிடமிருந்து உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்தலைக் குறைத்துக்கொள்கின்றன. வளர்ச்சி குறைந்த நாடுகளில் மக்கள் தொகை பெருகிச் செல்வதன் காரணமாக, அந் நாடுகளில் இறக்குமதித் தேவை அதிகரிக் கிறது. ஆனால், மக்கள் தொகையின் வளர்ச்சி வீதம் குறைந்து செல்கின்ற முன்னேறிய நாடுகளில இறக்குமதித் தேவையும் குறையத் தொடங்குகிறது. இதன் விளைவு என்ன? வளர்ச்சி குறைந்த நாடுகளில் ஒரு புறம் இறக்குமதிகள் அதிகரித்து, மறு புறம் ஏற்றுமதிகள் குறைந்து அவற்றின் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுகிறது. சுருங்கக்கூறின், வளர்ச்சி குறைந்த நாடுகள் தங்களுடைய ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் முன்னேறிய நாடுகளையே சார்ந்துள்ளன. இந் நாடுகளுக்குப் பொறுத் திருக்கும் ஆற்றல் இல்லை. ஏனெனில், போதுமான அளவிற்கு அன்னியச் செலாவணிச் சேமிப்பும் இல்லை. ஆனால், வளர்ச்சிக் குறிக்கோள் உடைய இந் நாடுகள் திட்டமிட்டப் பொருளா தாரத்தை மேற்கொண்டிருப்பதால் உடனடியாக மூலதனப் பொருள்கள், தொழில் நுண்ணறிவு, அத்தியாவசியமான கச்சாப் பொருள்கள் தேவைப்படுபடுகின்றன. அப் பொருள் களை இறக்குமதி செய்திடவேண்டிய கட்டாயமும் உள்ளது. முன்னேறிய நாடுகளுடன் பேரம் பேசும் சக்தி பின் தங்கிய நாடுகளுக்குக் குறைவு என்பது இதனால் தெற்றெனவி ளங்கும்.

பகுதி இரண்டு

வாணிபக் கைக்கோள்

6. தடையிலா வாணிபமும் காப்பு வாணிபமும் (1)

(Free Trade and Protection)

பொருளாதார நிபுணர்களும், அரசியல் மேதைகளும் தடையிலா வாணிபம், காப்பு வாணிபம் ஆகியவற்றின் தராதரச் சிறப்புகளை வெகுவாக விமர்சித்துள்ளனர். எந்த அரசும் தனியார் துறையிலோ, தனியார் பொருளாதார நடவடிக்கை களிலோ தலையிடக்கூடாது; ஒவ்வொருவரும் தனக்குப் பிடித்த வேலையில் தன்னுடைய வாய்ப்பிற்கும், வசதிக்கும், நன்மைக்கும் ஏற்றவாறு ஈடுபடுவதில் வேறு யாரும் தலையிடக் கூடாது என்ற தத்துவமே தலையிடாமை (laissez-faire) எனும் தத்துவமாகும். இதனை ஆடம் ஸ்மித் (Adam Smith) தமது "நாடுகளின் செல்வம்" எனும் நூலில் தெளிவாகவும், விரிவாக வும் விளக்கியுள்ளார். இத் தத்துவத்திற்கு வரலாறும் பரிணாம வளர்ச்சியும் உண்டு. இத் தத்துவத்தினைத் தொடர்ந்துதான் தடையிலா வாணிபக் கைக்கோள் பன்னாட்டு வாணிபத்தில் இடம் பெற்றது. தடையிலா வாணிபத்திலுள்ள நன்மையினைத் தெள்ளிய முறையில் ஆடம் ஸ்மித் தமது நூலில் பின்வருமாறு விளக்குகிறார் :- "நம்மைவிட மலிவாக உற்பத்தி செய்கின்ற ஒரு பண்டத்தினை வெளிநாடொன்று நமக்கு அளித்திடுமே யானால், அதனை விலைக்கு வாங்கி அதற்கு ஈடாக நாம் நமக்கு அனுகூலமாக உள்ள தொழிலில் உற்பத்தி செய்திடும் பண்டத்தை அந் நாட்டிற்கு விற்றிடலாம்."

வருமானப் பெருக்கம்

ஆடம் ஸ்மித் விளக்கிடும் வேலைப் பகுப்பு துல்லிய முறையில் செயல்படும்பொழுது, சிறப்புத் தேர்ச்சியுறல் ஏற்படு கிறது. ஒரு வேலையில் சிறப்புத் தேர்ச்சி அடையும்பொழுது நுட்பத்திறன் வளர்கிறது. ஒவ்வொருவருடைய வல்லமைக்கும் கிடைத்திடும் பொருள்சார் வளன்களுக்கும் தக்கவாறு வேலை அமைவதற்குத் தூண்டுதல் இச் சிறப்புத் தேர்ச்சியுறலே

ஆகும். காலச் சேமிப்பிற்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துதற்கும் காரணமாக விளங்குவது இந்தச் சிறப்புத் தேர்ச்சியும் வேலைப்பகுப்புமேயாம். சிறப்புத் தேர்ச்சியுறலில் விளைந்த நன்மைகளனைத்தும் தனித்தனியே உற்பத்திப் பெருக்கத்திற்குக் காரணமாக உள்ளன. உற்பத்திக் கருவிகளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்குக்கூட சிறப்புத் தேர்ச்சியுறலே காரணம் எனலாம். எனவே, கிடைக்கப் பெற்ற உழைப்பு, மூலதனம், உற்பத்திச் சாதனங்கள் ஆகிய வற்றைக் கொண்டு உச்ச அளவிற்கு உற்பத்தியினைப் பெருக்கிட, வேலைப் பகுப்பும் சிறப்புத் தேர்ச்சியுறலும் காரணங்களாக உள்ளன என்பது தெளிவு. சிறப்புத் தேர்ச்சி யுறல் உற்பத்தியினைப் பெருக்கி, உச்ச அளவு வருமானத்தை வழங்குகிறது என்பது முடிந்த முடிபாகும்.

பன்னாட்டு வாணிபம் என்பதே உள்நாட்டு வேலைப் பகுப்பின் விஸ்தரிப்பே எனலாம். பண்டங்களை உற்பத்தி செய்வதில் நாடுகளிடையே தகுதியிலும், திறமையிலும் தராதர வேறுபாடுகள் நிலவுகின்றன. உற்பத்திக்கு வேண்டிய சாதனங்கள் அனைத்தையும் எல்லா நாடுகளும் பெற்றிருக்க வில்லை. பெற்றிருக்கும் சாதனங்களிலும், அவற்றின் அளவு நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. எனவே, ஒரு நாட்டிற்கு அமைந்துள்ள உற்பத்தி வாய்ப்புகளும், சாத்தியங்களும் பிறி தொரு நாட்டிற்கு அமைவதில்லை. ஒவ்வொரு நாடும் தமக்கு எந்தப் பண்டத்தின் உற்பத்தியில் ஒப்புமைத் திறன் மிக்கிருக் கிறதோ அப் பண்டத்தை உற்பத்தி செய்து, அதனை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடலாம். தாம் உற்பத்தி செய்யாத பண்டத்தை மற்ற நாடுகளிடமிருந்து குறைந்த செலவில் இறக்குமதி செய்துகொள்ளலாம். இந்த அடிப்படையில் நாடு களிடையே எவ்விதத் தடையுமின்றி பண்டங்கள் பரிவர்த்தனை யாகும்பொழுது, எல்லா நாடுகளுடைய உண்மை வருமானங் களும் உயரும் எனலாம்.

இதர நன்மைகள்

தடையிலா வாணிபத்தினால் வேறு சில நல்விளைவுகளும் ஏற்படுகின்றன. தடையிலா வாணிபம் போட்டியின் அடிப் படையாக உடையது. போட்டி முன்னேற்றத்தைத் தூண்டும். வெளிநாட்டு வாணிபம் இப் போட்டியை மேலும் விரிவு படுத்தும். இதனால் வாணிபத்தில் ஈடுபடும் நாடுகளுடைய தொழிற்றுறைக்குரிய நுட்பவினை முறைகள் மேலும் முன்னேற்ற முறும். ஹேபர்லர் (Haberler) குறிப்பிடுவதுபோல, தடையிலா

வாணிபம் அறிவு பூர்வமான விளைவுகளை ஏற்படுத்தும் ஆற்றல் படைத்தது; வெளி நாட்டுப் போட்டியின் மோதுதலின் காரண மாக, உள்நாட்டு உற்பத்தியாளர்கள் உற்பத்தி முறைகளை மேலும் செப்பனிடவும், புதுப்பிக்கவும், புதுமைகளை ஏற்றுக் கொள்ளவும் துணிந்து முன்வருகிறார்கள்; வெளிநாட்டு உற்பத் தியாளருக்கு இணையாகத் திறமை பெற முனைகின்றனர். போட்டியின் அடிப்படையாகக்கொண்ட தடையிலா வாணிபம் சர்வாதீன வளர்ச்சிக்கு இடமளிக்காது. தடையிலா வாணிபம் இல்லாத சூழ்நிலையில், சுங்கச்சுவர்கள் எழுப்பப்பட்ட சிறிய நாடுகளில் தொழில்களெல்லாம் உற்பத்தியில் உத்தம அளவினை (optimum size) அடையமாட்டா. ஏனெனில், அத் தொழில்களுக்குரிய சந்தைகள் உள்நாட்டுச் சந்தைகள் மட்டிலுமே. எனவே, சிக்கனத்தினை அளித்திடக்கூடிய பெரு மளவு உற்பத்தி செய்திடும் வாய்ப்பு அத் தொழில்களுக்கு இல்லாமல் போய்விடுகிறது. இதன் விளைவு, சர்வாதீனத்தை அத் தொழில்கள் அமைத்துக்கொண்டு பண்டங்களின் விலை களை உயர்த்திவிடுவதுதான். இந்த அவலநிலைக்கு மாறாகத் தடையிலா வாணிபம் போட்டியைக் காத்து, சந்தையினை விரி வாக்கி, பெருமளவு உற்பத்தியினைத் தூண்டி, சிக்கனத்தை உருவாக்கி, குறைந்த பட்ச செலவினைக் கொண்ட உத்தம உற்பத்தியளவினை நடைமுறைப்படுத்துகிறது. எனவே, தடை யிலா பன்னாட்டு வாணிபச் சூழலில் பண்டங்கள் குறைந்த விலையில் கிடைக்கும். எவ்விதத் தடையுமின்றி, இறக்குமதி வரிகளே விதிக்கப்படாமல் இறக்குமதியாகின்ற பண்டங்களின் விலை குறைவாகவே இருப்பது துய்ப்போருக்கு ஆதாயமே. தடையிலா வாணிபத்தில் விலைகள் குறைந்து விடுவதோடு மட்டுமல்லாமல், உற்பத்திக் காரணிகளும் மிகுதியான வருமானம் தேடி வேறு பகுதிகளுக்குப் பெயர்ந்து செல்லும். திறமை வாய்ந்த பொருளாதார போக்கிற்கும், நடவடிக்கை களுக்கும் தடையிலா வாணிபமே ஆதாரமாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

நாடுகளிடையே பண்டங்கள் எவ்விதத் தடையுமின்றி, உள்நாட்டுப் பண்டம், வெளி நாட்டுப் பண்டம் என்ற வேற்றுமையுமின்றி தேவையை அனுசரித்துப் பரிமாற்றம் ஆவதையே தடையிலாப் பன்னாட்டு வாணிபம் என்கிறோம். அரசாங்க வருமானம் கருதி இறக்குமதியாகும் பண்டங்களின் (வெளிநாட்டுப் பண்டங்கள்) மீது வரிவிதிக்கலாம். அப் பண்டங்களுக்கு இணையான உள்நாட்டுப் பண்டங்களையும்

ஒரே மாதிரியாக நடத்தினுல் தடையிலா வாணிபம் பாதிக்கப் படாது. குறிப்பிட்ட நாடும் தடையிலா வாணிப நாடாகவே திகழும்.

தடையிலா வாணிபம் வேறு பல நன்மைகளையும் அளிக் கின்றது. கிராக்கியாக உள்ள இயற்கை வளன்கள் சில நாடுகளிலே கிடைக்கலாம். பன்னாட்டு வாணிபம் நிகழும் பொழுது, உபரி உற்பத்தியுள்ள நாடுகள் தங்களுடைய உபரிப் பண்டங்களை ஏற்றுமதி செய்து கிராக்கியான இயற்கை வளன்களைத் தேவையான அளவிற்கு இறக்குமதி செய்து கொள்ளலாம். மேலும், பண்டங்களின் ஏற்றுமதியில் தடையிலாதிருக்கும் பொழுது, கடனளி நாடுகளிலிருந்து கடன் கொடுத்த நாடுகளுக்கு நிதிகளை மாற்றிக் கொடுத்தல் சுலபமாக அமையும். ஆக, பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படுகின்ற மூலதனப் பெயர்ச்சி யானது, தடையிலா வாணிபத்தில் மிகவும் எளிதாக நடை பெறுகிறது. ஏனெனில், தடையிலா வாணிபத்தில் பன்னாட்டு ரீதியாகக் கடனளித்தலும் கடன் பெறுதலும் எளிதாக நடை பெறமுடியும் என்பதுதான். இன்னும், வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குத் தேவைப்படும் தொழில் நுண்ணறிவினை, வளர்ச்சியுற்ற நாடுகளிலிருந்து உடனுக்குடன் எளிதாகப் பெறுவதற்குத் தடையிலா வாணிபம் வழிவகுக்கிறது.

திறமையைப் பேணிடும் கைக்கோள்

ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை வழங்கிடும் பொழுது, உச்ச அளவு நாட்டு வருமானக் குறிக்கோளினையே தொன்மைப் பொருளியலார் முற்கோளாகக் (postulate) கொண்டனர். உச்ச அளவு நாட்டு வருமானக் குறிக்கோளினை அடைய தடையிலா வாணிபக் கைக்கோளே சிறந்தது என்பதனை நாம் முன்னரே விளக்கியுள்ளோம். தொன்மைப் பொருளியலாரைப் பொருத்த வரையில், தடையிலா வாணி பத்தின் மூலம் உலகளவில் அடையப்பெறும் வருமான அதிகரிப்பு என்பது சேம நல அதிகரிப்பினையே குறிக்கும் எனலாம். வாணிபமே இல்லாதிருக்கும் பொழுது ஏதோ வாணிபம் நடைபெறட்டும் என்ற தொன்மைப் பொருளிய லாரின் கருத்தே சேமநலக் கருத்தாகும். இக் கருத்து எந்த அளவிற்குச் சரியானது என்பதையும் நாம் ஆராயவேண்டும்.

தடையிலா வாணிபத்திற்குத் திறமையே ஆதாரம். திறமையின் உத்தம நிலையினை (efficiency optimum) அடைவ தற்குத் தடையிலா வாணிபம் வழி செய்திடும் என்பதே

தொன்மைப் பொருளியலாரின் நம்பிக்கை. நிறைவுப் போட்டியும் மாருச் செலவும் நிலவிடும் பொழுது, தடையிலா வாணிபத்தில் விலையமைப்பு திறமையுடன் இயங்கி, உற்பத்தியில் உத்தம நிலையினைப் பொருளாதாரம் அடைவதற்குத் துணை புரிகிறது. மேலும், பரிவர்த்தனை மூலம் இன்னும் ஆதாயம் ஏற்படாத வகையில், எல்லா இடங்களிலும் பண்டங்களின் விலையில் சமநிலையினை விலைவிசை (price mechanism) உண்டாக்குகிறது. பண்டங்களின் விலையினை இறுதி நிலைச் செலவிற்குச் சமப்படுத்தி, உத்தம அளவு உற்பத்தியினை உறுதிப்படுத்தி, எல்லாத் தொழில்களிலும் உற்பத்திக் காரணிகள் ஒரே மாதிரி விலைபெறுதலை நிலைநிறுத்தி, எல்லா வளன்களையும் அவற்றிற்குரிய துறைகளில் சிறக்கப் பயன்படும்படிச் செய்து விலைவிசை இயங்குகிறது. பண்டங்களை உற்பத்தி செய்வதிலும், அவற்றை விநியோகிப்பதிலும், மூல வளன்களைப் பகிர்ந்து பயன்படுத்துவதிலும் திறமையின் உத்தம நிலையினை ஒரு பொருளாதாரம் அடையும் வண்ணம் விலையமைப்பு திறமையுடன் இயங்குகிறது. விலையமைப்பின் திறமைமிகு இயக்கம், தடையிலா வாணிபத்தில் பாரிடோ உத்தமநிலைமை (Pareto optimality) யை அடைதலை உறுதிப்படுத்துகிறது.

எந்த எடுகோள்களின் அடிப்படையில் தடையிலா வாணிபம் உத்தம நிலையினை அடைய வழிவகுக்கிறது? எல்லாச் சந்தைகளிலும் போட்டிநிலவவேண்டும் என்பது ஒருநிபந்தனை. மூலவளன்கள் அனைத்தும் முழுதும் பயன்படுத்தப் பெற்று, வேலை நிறைவு நிலவவேண்டும் என்பது மற்ரெரு நிபந்தனை. மூன்ருவதாகப் பண்டங்களின் விலைகள் அவற்றின் இறுதிநிலைச் செலவுகளுக்குச் சமமாக இருந்தல் வேண்டும். தேவையின் மாற்றங்களுக்கேற்ப உற்பத்திச் சாதனங்களில் ஏற்படும் மாற்றங்களின் தற்காலிக விளைவுகளை இங்கு நாம் கருத்திற் கொள்ளவில்லை. இது நான்காவது நிபந்தனையாகும். இறுதியாகத் தடையிலா வாணிப விலையில் உற்பத்தியின் மொத்த மதிப்பினைக் கணக்கிட்டு, அதன் மூலம் சேமநலம் அளக்கப்படுகிறது. ஆனால், அவ்வாறு அளக்கப்படும் சேமநலம் உற்பத்திப் பகிர்வினைச் சார்ந்திருக்கவில்லை.

மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில், நீண்ட காலத்தில் தடையிலா வாணிபம் உயர்ந்த அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கி, அதேயளவிற்கு சேம நலத்தினையும் உயர்த்துகிறது. உயர்த்தப்பட்டுள்ள உற்பத்திக்கும் சேம நலத்திற்குமிடையில் வேற்றுமை ஏற்பட்டால், சிறிய நாடுகளில் குறைந்த அளவிற்கே செழுமை நிலவும். அச் செழுமையையும்

அச் சிறு நாடுகளில் ஒரு சிலரே அனுபவிப்பர். தடையிலா வாணிப நிலையில் உற்பத்தியின் மொத்த மதிப்பினைக் கணக்கிட்டு, அதன் மூலம் சேமநலம் அளக்கப்படுகின்றவரையில் மேற்கூறிய கருத்து சரிதான். ஆனால், தடையிலா வாணிப நிலையில் செலவின் மதிப்பினைக் கணக்கிட்டு, அதன் மூலம் சேமநலம் அளக்கப்படின், தங்களுடைய வாணிப வீதங்களை இயக்குகின்ற அளவிற்குப் பெரியனவாக இருக்கின்ற நாடுகளுக்கு மேற்குறிப்பிட்ட கருத்து பொருந்திவராது.

தடையிலா வாணிபத்தின் குறைபாடுகள்

தொன்மைப் பொருளியலாரின் கருத்துப்படி, திறமையைப் பொறுத்த உத்தம நிலையும், சேமநல உத்தம நிலையும் ஒன்றே. இந்த அடிப்படையில் தடையிலா வாணிபம் சேமநல உத்தம நிலையினை உருவாக்கும் எனத் தொன்மைப் பொருளியலார் முடிவெடுத்தனர். ஆனால், இதற்கோர் நிபந்தனை. விலையமைப்பு திறமையுடன் இயங்கி, பொருள்சார் உத்தம நிலையினை உருவாக்கிட வேண்டும். ஆனால், சேமநலமானது உற்பத்தியைக் குறித்திடும் திறமையை மட்டும் சார்ந்திருக்கவில்லை; உற்பத்திப் பகிர்வினைக் குறித்திடும் சமத்துவத்தையும் சார்ந்துள்ளது. காப்பு வாணிபத்தைவிட தடையிலா வாணிபம் திறமையின் அடிப்படையில் உயர்ந்ததுதான். ஏனெனில், மொத்தத்தில் உயர்ந்த வருமானத்தை அளிக்க வல்லது தடையிலா வாணிபம். ஆனால், அதே நேரத்தில் நாடுகளுக்கிடையே நிலவிடும் வருமானப் பகிர்வுக் கட்டமைவினைத் தடையிலா வாணிபம் குலைத்திடுவதும் உண்டு; இன்னும் சொல்லப்போனால், உள்நாட்டிற்குள்ளாகவே மக்களிடையே நிலவும் வருமானப் பங்கீட்டினையும் குலைத்திடும் எனலாம். தடையிலா வாணிபத்தின் மூலம் ஏற்படும் வருமானப் பகிர்வானது, மிகுதியாகக் கிடைத்திடும் உற்பத்திக் காரணிக்கு நன்மையாகவும் கிராக்கியுள்ள காரணிக்குக் கேடு சூழ்வதாகவும் உள்ளது. திறமையின் உத்தம நிலையினை உண்டாக்கும் வகையில் விலையமைப்பு நன்றாகச் செயல்பட்டாலும்கூட, இதனால் பன்னாட்டுச் சேமநலம் உச்சநிலைக்கு உயர்ந்துவிடும் என்று சொல்ல முடியாது. மூலவளன்களை அவற்றிற்குரிய துறைகளில் சிறப்பாகப் பயன்படும் வகையில் விலையமைப்பு அவற்றைப் பங்கீடு செய்வதுடன், வருமானத்தையும் பங்கீடு செய்கிறது. என்றாலும், திறமையின் உத்தமநிலை சேமநல உத்தமநிலைக்குச் சமமாக இராது. இந்த உண்மை, தொன்மைப் பொருளியலாருக்கு நன்கு தெரியும். தடையிலா

வாணிபம் வருமானப் பங்கீட்டினை மேலும் கெடுத்து விடாது என்பது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை. இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான், முன்னர் இருந்த நிலையிலிருந்து திறமை மேலும் உயரும்பொழுது, சேமநலனும் உயரும் என்று தொன்மைப் பொருளியலார் நம்பினர்.

சேமநலன் என்பது வருமானப் பங்கீட்டின் சில கூறுகளை உள்ளடக்கமாகக் கொண்டது எனில், தடையிலா வாணிபம் சிறந்த கைக்கோளாக இருக்கத் தேவையில்லை. சுங்கவரிகள் விதித்து சுங்கத்தடைச் சுவர்கள் எழுப்பி, காப்பு வாணிபத்தினை கடைப்பிடித்து, உள்நாட்டிலும் பன்னாட்டு ரீதியாகவும் சேம நலத்தினைப் பேணி வளர்க்க முடியும். பெரிய நாடுகள் இறக்குமதியாகும் பண்டங்கள் மீது வரிவிதித்து, அவற்றின் தேவையைக் குறைத்து, குறைந்த விலைக்கு அவற்றை வாங்கிடலாம். உற்பத்தி மூலமும் வாணிபத்தின் மூலமும் பெறுகின்ற பண்டங்களின் அளவினை உயர்த்துகின்ற முறையில், இறக்குமதி வரிகளை அப் பெரிய நாடுகள் பயன்படுத்தலாம். இவையனைத்தும் காப்பு வாணிபமே சிறந்தது என நிரூபிக்க மாட்டா. என்றாலும் தடையிலா வாணிபக்கைக் கோளின் வரம்பினையும் குறைகளையும் கோடிட்டுக் காட்டுகின்றன என்பது உண்மையே.

நாம் முன்னரே சுட்டிக் காட்டியுள்ளது போல, பொருள் சார் உத்தம நிலையினை (material optimum) உருவாக்கும் வகையில், திறமையுடன் விலையமைப்பு இயங்கினால்தான், தடையிலா வாணிபம் சிறப்புடையது என்று ஏற்றுக் கொள்ளப் படும். புறச்சிக்கனங்கள் (external economies,) புறச்சிக்கன இழப்புக்கள் (external diseconomies,) நிறுவனங்கள் அல்லது உற்பத்திக் காரணிகள் இவற்றினிடையே போட்டியின்மை, வேலை நிறைவினைத் தனியார் துறையமைப்பு நிலைநிறுத்தாமை ஆகிய இன்னபிற காரணங்களினால் விலையமைப்பு தனது செயல்பாட்டில் திறமையை இழக்க நேரிடலாம். பன்னாட்டு வாணிபத்தில் தடையிலா வாணிபமுறைக்கு இருக்கும் ஆதரவும் செல்வாக்கும் விலையமைப்பின் திறமையான இயக்கத்தைப் பொறுத்ததுதான்.

ஒரு நிறுவனத்திற்குரிய புறச்சிக்கனங்களோ சிக்கன இழப்புக்களோ நிலவும்பொழுது, சமூக இறுதிநிலை மதிப்பு (private marginal value) வேறுபட்டிருக்கும் இளம் தொழில் நிகழ்வினத்தில் (infant industry case) நடப்பது போல, தனியார் செலவுகள் (private costs) சமூகச் செலவுகளை (social costs)

மீறிவிடும். உற்பத்தியாளர்கள் செலவுகளையும் விலையினையும் குறைத்திட வழிசெய்திடும் புதிய செலவு நிலைகளை உண்டாக்கும் முறையில் இறக்குமதிகள் மீது வரிவிதிக்க நேரிடும்; அல்லது உள்நாட்டு உற்பத்திக்கு உதவிக் கொடைகள் (subsidies) கொடுக்க நேரிடும். சில வேளைகளில், அறியாமையின் காரணமாகப் போட்டி இல்லாதுபோய், அதன் விளைவாக அகச் சிக்கனங்கள் (internal economies) நிலவுதலும் உண்டு. இவ்வாறு, உருவாகும் அகச் சிக்கனங்களும் சமூக இறுதிநிலை மதிப்பிற்கும் தனியார் இறுதிநிலை மதிப்பிற்கு மிடையில் வேற்றுமையினை உண்டாக்கி, பொருளாதாரத் திறமையை உத்தம அளவிற்கும் கீழே இறக்கிவிடும். இதனால் தடையிலா வாணிபத்தினால் கிடைப்பதாகக் கருதப்படுகிற பலன் கிட்டாமல் போய் விடுகிறது.

நிறைகுறைப்போட்டி (imperfect competition) நிலவுவ தாகக் கொண்டால், திறமையின் உத்தம நிலைக்கு என்ன நேரிடும் ? சர்வாதீனத்தில் (monopoly) உற்பத்தி கட்டுப்படுத்த பெற்று, சமூக மதிப்பிற்கு மேல் தனியார் மதிப்பு உயர்த்தப் படும். துய்ப்போர் சார் சர்வாதீனத்தில் (monopoly) துய்ப்பு கட்டுப்படுத்தப்படும்; சமூக மதிப்பிற்குக் கீழ் தனியார் மதிப்பு குறைக்கப்படும். இந்த விளைவுகளைப் பண்டங்கள் விற்றிடும் சந்தைகளிலும் காணலாம். அறியாமை, பழக்க வழக்கங்கள் முதலானவை கூட இவ் விளைகளுக்குக் காரணங்களாக உள்ளன. அறியாமையின் காரணமாகவோ, பழக்க வழக்கங் களின் காரணமாகவோ, துய்ப்போர் மலிவான சந்தையில் பண்டங்களை வாங்காமல் விலையுயுர்ந்து உள்ள சந்தைகளில் வாங்குகிறார்கள்; போதுமான அளவிற்கு மூலதனமோ சேமிப்போ இல்லாத காரணத்தினாலும் விலை குறைந்து இருக்கும் காலங்களில் பண்டங்களைத் தேவையான அளவிற்கு ஒட்டு மொத்தமாக அவர்கள் வாங்குவதில்லை. தேவையில் ஏற்படு கின்ற மாற்றம் எந்த அளவுக்கு நிரந்தரமாகவே தங்களுடைய பண்டங்களுக்கு எதிராகப் போய் விட்டது என்பதைக் கூட உற்பத்தியாளர்களால் முன்கூட்டியே நிதானிக்க முடியவில்லை.

மேலும், நிறைகுறைப் போட்டி நிலவுதலின் காரணமாக, உற்பத்திக் காரணிகளும் அவற்றிற்கு உரிய துறைகளில் பெரும் பயனளிக்கத் தக்கவகையில் ஈடுபடுத்தப்படுவதில்லை. சில துறைகளில் காரணிகள் அபரிமிதமாகப் பயன்படுத்தப் படுகின்றன. வேறு சில துறைகளில் தேவையான அளவிற்கு

அவை உபயோகப்படுத்தப்படவில்லை. உற்பத்திக் காரணி களுக்கு வெவ்வேறு துறைகளில் எத்தகைய வாய்ப்புகள் உள்ளன என்பது தெரியாத காரணத்தினாலும், அவ் வாய்ப் புகள் எவ்வளவு காலம் நிலவிடும் என்பதனைச் சரியாகக் கணக்கிடாததாலும், அக் காரணிகளுக்காகின்ற இடப் பெயர்ச்சிச் செலவினைப்பற்றி முன் கூட்டியே கணிப்பு இல்லாத தாலும் அவற்றை வெவ்வேறு துறைகளில் தேவையை அனு சரித்து, திறமையின் அடிப்படையில் நல்லவண்ணம் ஈடு படுத்தவில்லை என்பது புலனாகிறது. நிறைகுறைப் போட்டியின் இத்தகைய விளைவுகளின் காரணமாகத் திறமையின் உத்தம நிலைக்குக் குந்தகம் ஏற்படுகிறது.

சந்தையிலே தென்படும் விலைகளின் போக்கிற்குத் தக்கவாறு நிறுவனங்களும் காரணிகளும் இயங்காவிடில், சமூக மதிப்பினையும் தனியார் மதிப்பினையும் சமன்படுத்த அவை தவறி விடும். இந்த நிகழ்வினை உதாரணம் ஒன்றின் மூலம் விளக்கலாம். தக்காளிப் பழத்தின்விலை முதல் ஆண்டு உயர்ந் திருப்பதைத் தொடர்ந்து இரண்டாமாண்டு அத் தக்காளியினை அதிகமாக உற்பத்தி செய்வர். இதன் விளைவாக மீண்டும் விலை குறைந்து அடுத்த ஆண்டு பழத்தில் பற்றுக்குறையும் ஏற்பட்டு விடுகிறது. சாதாரணமாகவே, விலையேற்றம் பெரிய அளவு உற்பத்திக்கு அடிகோலி சமநிலையை (equilibrium) உண்டாக்கு கிறது; அதுபோலவே விலையிறக்கம் பெருமளவு உற்பத்தி வீழ்ச்சிக்கு விதையூன்றி, மீண்டும் சமநிலையைச் சற்று கீழ் மட்டத்தில் புதுப்பித்து உருவாக்குகிறது.

குறிப்பிட்ட துய்ப்புப் பொருள்களின் தேவை அதிகரிப் பதாகக் கொள்வோம். தேவை அதிகரிப்பிற்கு ஈடுசெய்திடும் அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கிட வேண்டும். உற்பத்தியை அதிகரிக்கச் செய்திடும் புதிய வல்லமையினை (new capacity) ஏற்படுத்த வேண்டி முதலீடு செய்திடவேண்டும். புது வல்ல மையைப் படைத்திடும் முதலீட்டிற்கு வழிவகுக்கும் வகையில் விலையமைப்பு (price system) திறமையுடன் இயங்கமுடியுமா என்பதை அலசிப் பார்க்கவேண்டும். புதிய வல்லமையினை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்வதற்கும், உணர்ந்த வண்ணம் அவ் வல்லமையைப் படைத்து உற்பத்தியைப் பெருக்குகின்ற நிலைமையை அடைவதற்கும் இடையில் காலப் பின்னீடு (time lag) ஏற்படும் என்பதனை மறுக்கவியலாது. இதற் கிடையில் குறிப்பிட்ட அத் துய்ப்புப் பண்டங்களின் விலை எவ்வளவு ஏறினாலும், அக் கால கட்டத்தில் அப் பண்டங்களின்

அளிப்பு நெகிழ்ச்சியற்றதாகவே இருக்கும். மேலும், அப் பண்டங்களின் உற்பத்தி மூலதனச் செறிவுமிக்க படிமுறைகளை (capital intensive processes) உடையாத இருப்பின், காலப் பின்னீடும் நீட்சிமிக்கதாக இருக்கும். இதன் விளைவாகப் பற்றாக்குறை நிலைமை நீட்டிக்கப் பெற்று, விலைகள் விரைவுடன் ஏறத்தொடங்கிவிடும். உற்பத்தியை எப்படியேனும் உயர்த்திட வேண்டும் என்ற நெருக்கடியின் காரணமாக, உற்பத்தியில் எச்ச வல்லமை (excess capacity) ஏற்படும் நிலைமை உருவாகி விடும். முதலீடு சம்பந்தமான முடிவெடுப்பதில் விலையமைப் பிற்குப் போதுமான திறன் அமையவில்லை என்பதனால் பற்றாக் குறை நிலவுதலையும், அதனைத் தொடர்ந்து எச்ச வல்லமை உருவாதலையும் விளக்கினோம். இறுதியில் வாணிபச் சுழல் (business cycle) ஏற்பட்டால் அதற்குப் பொறுப்பு விலையமைப்பு தான் என்ற முடிவு தவிர்க்க முடியாத ஒன்றாகும். திறமைக் குறைவுடன் இயங்கிடும் விலையமைப்பு, தடையிலா வாணிபத்தில் குறைகள் மலிந்திடக் காரணமாகி விடுகிறது.

தடையிலா வாணிபத்தின் மூலம் கிடைத்திடும் நன்மை களைத்தையும் வேலை நிறைவுத் திட்டத்தின் மூலமே பெற முடியும் என்பது ஒரு கருத்து. ஆனால், பெரும்பாலான நாடு களில் வேலையின்மையே நிலவுகிறது. வேலையற்றிருக்கும் மூல வளன்களை முழுதும் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கு வதற்கு சுங்க வரிகள் துணைபுரியும். வேலையின்மையைப் போக்குவதற்குத் தொழிலாளர்களுக்கு மறுபயிற்சியும், புதுப் பயிற்சியும் தருவதற்கு ஆகும் செலவினையும், புதிய முதலீடு களும், மறு முதலீடுகளும் செய்வதற்கு ஆகும் செலவினையும் தடையிலா வாணிபத்தின் மூலம் கிடைத்திடும் இலாபத்தி லிருந்து கழித்தால் கிடைப்பது தடையிலா வாணிபத்தின் நிகர இலாபம் அல்லது நிகர நன்மை (net advantage) எனலாம். தடையிலா வாணிபத்தின் நிகர நன்மை எதிர்க்கணியமானால் (negative), தொழிலாளர் மறுபயிற்சிக் காலமும், மறு முதலீட்டுக் காலமும் நீட்டிக்கின்ற வரையில் தற்காலிகமாகக் காப்பு வாணிபத்தைக் கடைப்பிடிக்கலாம். இது போன்ற காரணங் களின் அடிப்படையில்தான் சுங்கவரி விதித்தலை நியாயப் படுத்துகின்ற இளம் தொழில் வாதம் தரப்பட்டது.

இதுகாறும் தரப்பட்ட சில விளக்கங்களிலிருந்து சில உண்மைகள் புலப்படுகின்றன. விலையமைப்பு திறமையுடன் செயல்படுகிறது என்று கூறிட முடியாது. திறமையின் உத்தம நிலையினை விலையமைப்பு சென்றடைவதாகச் சொன்னாலும்கூட, திறமையின் உத்தம நிலையினையே சேமநல உத்தம நிலையாகக்

கொள்ள முடியாது; அப்படியே இரண்டினையும் ஒன்றாகக் கொண்டாலும், குறிப்பிட்ட ஒரு வருமானப் பங்கீட்டிற்கே அது பொருந்துமேயன்றி எல்லாக் கட்டங்களிலும் நிறை வேறும் வருமானப் பகிர்விற்குப் பொருந்தாது. வாணிபத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டாலே உள்நாட்டிலும் நாடுகளுக்கிடையே யும் மீண்டும் வருமானப் பகிர்வு ஏற்படுகிறது. இதனால் வாணிபத்தைப் பற்றியும், சேமநலத்தினைப் பற்றியும் தெளி வாகக் குறிப்பிட முடியவில்லை.

காப்பு வாணிபத்தின் இலக்கணம்

தொன்மைப் பொருளியலார் தந்த ஒப்புமைச் செலவு விதியின் கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது, எடுத்த எடுப் பிலேயே, முதல் தோற்றத்திலேயே தடையிலாப் பன்னாட்டு வாணிபமே சிறந்தது என்ற முடிவு இயல்பாக வருகிறது. ஆனால், அண்மைக் காலத்தில் காப்பு வாணிபத்திற்கோர் மரியாதை ஏற்பட்டுள்ளது. சாதாரணமாகவே பொருளாதார வாழ்வில் போட்டியினை ஒவ்வொருவரும் விரும்புவர் என்றாலும், அயல்நாட்டினரின் போட்டியினால் சொந்தத்தில் பாதிப்பு ஏற்படும்பொழுது அரசாங்கக் குறுக்கீட்டின் மூலம் கிடைத் திடும் பாதுகாப்பினையே நாடுவர். போட்டியுணர்வு ஒருபுற மிருக்க, வர்த்தகர், விவசாயிகள், தொழிலாளர் முதலானோர் பாதுகாப்பினை நாடுவோரே!

உள்நாட்டுப் பண்டங்களை வெளிநாட்டுப் பண்டங்களி லிருந்து வேறுபடுத்திக் காட்டுதலே காப்பு வாணிபக் கைக் கோளாகும். இறக்குமதியாகும் பண்டங்களின்மீது வரி விதித்து, வெளிநாட்டு உற்பத்தியாளரையும், வெளிநாட்டுப் பண்டங் களையும் வேறுபடுத்தி, இறக்குமதி வரிச் சுமையை வெளிநாட்டு உற்பத்தியாளரே தாங்கும்படிச் செய்து, உள்நாட்டு உற்பத்தி யார்கள் தங்கள் பண்டங்களை உள்நாட்டுச் சந்தையிலேயே வெளிநாட்டாரின் போட்டியின்றிச் சாதகமான முறையில் விற்றிடும் வாய்ப்பினை உருவாக்குதலே காப்பு வாணிபக் கைக் கோளாகும். சுங்கத் தீர்வைகள் (customs duties) மூலமோ, அல்லது ஊக்கக் கொடைகள் (bounties) மூலமோ, உள்நாட்டுத் தொழில்களை வளரச் செய்திடும் கைக்கோளே காப்பு வாணிப மாகும். பொதுவாக, சுங்க வரி விதிப்பதனையே காப்பு வாணிப மாகக் கொள்வதுண்டு. இறக்குமதிக் கட்டுப்பாடு, நாணய மாற்றுக் கட்டுப்பாடு (exchange control), பலவாகிய நாணய மாற்று வீதங்கள் (multiple exchange rates) ஆகிய முறைகளின் மூலமும் சுங்கவரி விதிப்பின் விளைவுகள் ஏற்படுவதுண்டு.

உலகச் சந்தையில் இறக்குமதிக்குரிய பண்டங்களுக்கு எந்த விலை நிலவுகிறதோ அவ் விலையைவிட அதிகமாக உள்நாட்டுச் சந்தையில் அப் பண்டங்களின் தராதர விலை உயர்ந்துவிடுவதற்கு மேலே குறிப்பிட்டுள்ள முறைகள் பெரிதும் காரணமாகின்றன.

இறக்குமதி செய்யத்தக்க பண்டங்களின் (importable goods) உற்பத்தியாளர்கள் அடைந்திடும் உள்நாட்டுத் தராதர விலையினை உலக விலைக்குமேல் உயர்த்திட இரு வழிகள் உண்டு. ஒன்று, இறக்குமதி வரி விதித்தல் போன்ற முறைகளின் மூலம் உலக விலைக்குமேல் உள்நாட்டு விலையினை உற்பத்தியாளருக்கும் துய்ப்போருக்கும் வேறுபாடு காட்டாது உயர்த்திவிடுவது; மற்றொன்று, உற்பத்தியாளருக்கு மட்டும் உலக விலைக்குமேல் உள்நாட்டு விலையினை உயர்த்திவிட்டு, உற்பத்திக்கு உதவிக் கொடை வழங்குதல் மூலம் துய்ப்போர் உலக விலையில் வாங்கிடும் வாய்ப்பினைத் தருவது. ஆக, இறக்குமதி வரி விதிப்பு மூலம் ஒன்றும் உதவிக்கொடை (subsidy) மூலம் மற்றொன்றும் என இருவிதக் காப்பு வாணிபம் நடைமுறையில் உண்டு. உள்நாட்டு உற்பத்தியாளரின் தொழிலுக்குப் பாதுகாப்பும், வளர்ச்சி வாய்ப்பும் தந்திட வேண்டி, உலக விலைக்குமேல் உள்நாட்டு விலையினை உயர்த்துகின்ற இவ் விருமுறைகளும், அவற்றின் பொருளாதார விளைவுகளைப் பொறுத்தவரையில், மாறுபட்டவை எனலாம்.

காப்பு வாணிப வகைகள்

காப்பு வாணிபம் பலவகைத்தானவை. சுங்க வரிகள், கிடைப்புப் பங்குகள் அல்லது கோட்டாக்கள் (quotas), இறக்குமதிக்குரிய வாணிப இணக்க ஆணை (import licenses), இறக்குமதித் தடைகள் (import embargoes), நாணய மாற்றுக் கட்டுப்பாடு (exchange control), வாங்குதலில் அரசின் விருப்பத் தேர்வு (Government purchasing preferences), உள்நாட்டு உற்பத்தியாளருக்கு உதவிக்கொடைகள் (subsidies to home producers), விலை வேறுபடுத்தல் (price discrimination), பண்டங்களை விற்பதில் உடன்பாடு காணல் (commodity agreement), அரசு வாணிபமேற்றல் (state trading) ஆகிய பல்வேறு வகைகள் காப்பு வாணிபத்தில் உண்டு.

முதலில் சுங்கத் தீர்வையை எடுத்துக்கொள்வோம். இது யாவரும் அறிந்த காப்புமுறை, உள்நாட்டுச் சந்தையில் உள்நாட்டு உற்பத்தியாளர்களுடைய பண்டங்களுடன்

போட்டிக்கு வருகின்ற வெளிநாட்டுப் பண்டங்கள்மீது போடப்படும் வரிகளே இறக்குமதி வரிகள் எனப்படும். பண்டத்தின் தேவை, அளிப்பு ஆகியவற்றின் நெகிழ்ச்சித் தன்மையைப் பொறுத்து, இறக்குமதித் தீர்வைகள் ஏற்றுமதி யாளர்மீதோ, இறக்குமதியாளர்மீதோ விழும். வெளிநாட்டு ஏற்றுமதியாளரின் அளிப்பு நெகிழ்ச்சி குறைந்தோ அல்லது உள்நாட்டில் துய்ப்போரின் தேவை நெகிழ்ச்சிமிக்கதாகவோ இருப்பின், இறக்குமதி வரியினை வெளிநாட்டு ஏற்றுமதியாளரே ஏற்றுக்கொள்வர்.

எல்லா இறக்குமதிகளும் சுங்கவரிக்கு ஆளாவதில்லை. சுங்க வரியினுல் பாதிக்கப்படாத பண்டங்களின் பட்டியல் எல்லா நாடுகளுக்கும் உண்டு. உள்நாட்டுத் தொழிலால் படிமுறைப் படுத்தப்படுகின்ற கச்சாப் பொருள்களும், உள் நாட்டுப் பண்டங்களுடன் போட்டியில் ஈடுபடாத பண்டங் களும், அரசாங்க வருவாயினை உத்தேசித்து வரி விதிக்கப் படாத பண்டங்களும் சுங்க வரிக்கு உட்படுவதில்லை. உதாரண மாக, ஐக்கிய அமெரிக்க நாட்டில் எஃகுத் தொழிற்சாலை பயன் படுத்துகின்ற இரும்புக் கலவையும் (iron ore), பதிப்பாளர்கள் பயன்படுத்துகின்ற செய்தி அச்சிடும் தாளும், யூரியாவும் மற்றும் பல பண்டங்களும் சுங்கத் தீர்வைக்கு உட்படவில்லை.

அமெரிக்காவில் இறக்குமதியாகும் பண்டங்கள் அனைத் திற்கும் மொத்த மதிப்பினைக் கணக்கிட்டு, அதில் இறக்குமதி வரிகளால் பாதிக்கப்படாத பண்டங்களின் மதிப்பு எவ்வளவு சதவீதம் என்பதனை 1916–20 ஆண்டுகள் முதல் 1951–55 ஆண்டுகள் முடிய கணக்கிட்டுப் பார்க்கும் பொழுது[1] ஓரிரு உண்மைகள் பளிச்சிடுகின்றன. மேலே குறித்துள்ள நாற்ப தாண்டுகளில் சுங்கத் தீர்வையினுல் பாதிக்கப்படாத பண்டங் களின் மதிப்பு 67 சதவீதத்திலிருந்து 56 சதவீதத்திற்குக் குறைந்து விட்டது. காப்பு வாணிபத்தின் செல்வாக்குப் பெருகுகிறது என்பது பொருள். வரியால் பாதிக்கப்படாத இறக்குமதிகளின் மொத்த மதிப்பு 5, 919 மில்லியன் டாலர்கள் எனில், இறக்குமதித் தீர்வைக்கு இலக்கான பண்டங்களின் மொத்த மதிப்பு 4, 859 மில்லியன் டாலர்களாகும்; செலுத்தப் பட்ட மொத்த வரி 584 மில்லியன் டாலர்களாகும். இந்த

[1] என்கே, ஸ்டீபன்; சலீரா, வர்ஜில் (Stephen Enke and Virgil Salera): "பன்னுட்டுப் பொருளாதாரம்" (மூன்றும் பதிப்பு) ப. 225. ("International Economics") மேல்வரும் கருத்துக்கு மூலம் "ஐக்கிய அமெரிக்காவின் புள்ளி விவரச் சுருக்க"த்திலிருந்து எடுக்கப்பட்டது.

கணக்கு 1953-ஆம் ஆண்டுக் கணக்காகும். இறக்குமதியான வரிக்கு இலக்கான பண்டங்கள் மீது விழுந்த சராசரி வரிவீதம் 12 சதவீதமாகும். சுங்கத்தீர்வையாய் பாதிக்கப்படாத பண்டங்களின் பட்டியல் சிறிது என்றாலும், அப் பட்டியலில் உள்ள சாதாரண பண்டங்களின் எண்ணிக்கையே அதிகம் என்றாலும், இறக்குமதிவரிக்கு இலக்கான பண்டங்களின் மதிப்பு உண்மையாகவே இறக்குமதியான பண்டங்களின் மொத்த மதிப்பில் பாதிக்கும் குறைவுதான். இதற்குக் காரணம், இறக்குமதி வரிவிதிக்கப் பெற்ற பண்டங்களில் பல்வேறு வகைகளைச் சார்ந்த பண்டங்கள் மிகக்குறைந்த அளவிலேயே இறக்குமதி செய்யப்படுகின்றன என்பது தான். வரிவிதிக்கப் படாவிட்டால், அப் பண்டங்கள் பெருமளவு இறக்குமதி செய்யப்பட்டிருக்கும். இறக்குமதி வரிக்கு ஆளான பண்டங்கள் மீது விதிக்கப்பட்ட சராசரி சுங்கத்தீர்வை 12 சதவீதமென்றாலும் இதற்கும் அதிகமான வரிவீதத்திற்குப் பலியான பண்டங்கள் பல இறக்குமதியே செய்யப்படவில்லை என்பதனையும் மறந்து விடக்கூடாது. ஆக, இப் பிரச்சினையை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் பொழுது, சுங்கத் தீர்வை மூலம் அமையும் காப்பு வாணிகத்தின் செல்வாக்கு அமெரிக்க நாட்டிலும் கூட உயர்ந்து உள்ளது என்ற உண்மை தெளிவாகிறது.

அடுத்து, கோட்டாக்கள் எனும் கிடைப்புப் பங்குகளை (quotas) எடுத்துக் கொள்வோம். குறிப்பிட்ட அளவுள்ள பண்டமே இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவதைக் கிடைப்புப் பங்கு முறை என்பர். இவ்வாறு அனுமதியின் பேரில் இறக்குமதி செய்யப்பட்ட பண்டத்தினை இறக்குமதியாளருக்கு வாணிப இணக்க ஆணை (licence) வழங்கிப் பங்கிட்டுத் தரு வதனையே கிடைப்புப் பங்கு முறையின் நிர்வாகம் என்கிறோம். இத்தகைய கிடைப்புப் பங்கு முறையைப் பெருமளவில் பயன் படுத்திய நாடுகளில் முதன்மை ஸ்தானம் பெறுவது பிரான்சு நாடே.

சுங்கத் தீர்வைக்கும் கோட்டா முறையாகிய கிடைப்புப் பங்கு முறைக்கும் இடையில் பெரிய வேறுபாடு ஒன்றும் கிடையாது. இவ்விரு முறைகளுமே ஒரு நாட்டின் மூல வளன்களைத் திறமை மிகுந்த துறைகளிலிருந்து திறமைக் குறை வான துறைகளுக்குத் திருப்பிவிட்டு, உற்பத்திக்குப் பாதிப்பினை ஏற்படுத்திவிடும். என்றாலும் ஒரு விதத்தில் கிடைப்புப் பங்கு முறை சுங்கத் தீர்வைக்கு மாறுபட்டதே. பண்டங்களின் இறக்குமதிக்குத் தடையாக அமையாத சுங்கத்தீர்வை குறைந்த

பட்சம் அரசாங்கத்திற்கு வருவாய் தேடித்தரலாம். இதனுல் ஓரளவிற்கு இறக்குமதித் தடையினுல் ஏற்படக்கூடிய கேட்டினைக் களையலாம். காப்பு வாணிபத்தில், இறக்குமதியாகும் பண்டத்தின் உலக விலைக்கு மேல் உள்நாட்டு விலை உயர்ந்து விடுவதால் அதன் மூலம் கிடைத்திடும் இலாபம் கிடைப்புப் பங்கு அனுமதி பெற்ற இறக்குமதியாளரையே சென்று அடையும். சுங்கத் தீர்வையைவிட கோட்டா-லைசென்சு முறையிலேயே கேடுகள் அதிகம் என்பது இதனுல் பெறப் படுகிறது.

அநேகமாக எல்லா நாடுகளுமே சில பண்டங்களின் மீதேனும் இறக்குமதித் தடையினை விதிக்கின்றன. ஒரு நாட்டின் சுகாதாரத்திற்கும் ஒழுக்கத்திற்கும் ஊறு செய்யக்கூடிய விலங்கினங்கள், இறைச்சிகள் முதலானவற்றை இறக்குமதி செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. அர்ஜன்டைனுவின் மாட்டிறைச்சியை அமெரிக்கா இறக்குமதி செய்வதில்லை. சில வெளிநாட்டுப் புத்தகங்களுக்கும் திரைப்படங்களுக்கும், அவை கீழ்த்தர உணர்ச்சிகளையும், தேச விரோத உணர்வு களையும் தூண்டுகின்றன என்ற காரணத்திற்காக, இறக்குமதித் தடை சில நாடுகளில் விதிக்கப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணியின் (foreign exchange) தேவை யினையும் அளிப்பினையும் ஒழுங்கு படுத்துவதன் மூலம் மாற்று வீதங்களைக் (exchange rates) ஒழுங்குபடுத்துகின்ற நடவடிக் கைகளை எடுப்பதனையே நாணயமாற்றுக்கட்டுப்பாடு (exchange control) என்கிருேம். பன்னுட்டு வாணிபத்தின் மூலம் கிடைத் திடும் அந்நியச் செலாவணிச் சம்பாதித்தியம் அனைத்தையும் ஒரு மத்திய நாணய நிருவாக அமைப்பின் கட்டுப்பட்டிற்குள் கொண்டு வருகின்ற திட்டமே நாணயமாற்றுக் கட்டுப் பாடாகும். பண்டங்கள், முதலீடு, அன்னியச் செலாவணி தொடர்பான பேரங்களில் செலுத்தவேண்டிய செலுத்துகை களைக் (Payments) கட்டுப்படுத்தும் நோக்கினையே பிரதானமாக நாணயமாற்றுக் கட்டுப்பாடு கொண்டுள்ளது. இக் கட்டுப் பாடு எவ்வாறு நிருவகிக்கப்படுகிறது என்பதனை நோக்க வேண்டும். ஏற்றுமதியாளர்கள் அனைவரும் தாங்கள் சம்பாதிக் கின்ற அன்னியச் செலாவணியினை மத்திய நாணய நிருவாக அமைப்பின் வசம் ஒப்படைத்திடவேண்டும். அன்னியச் செலாவணி தேவைப்படும் இறக்குமதியாளர்கள் அதனை அவ்வமைப்பினிடமிருந்து விண்ணப்பித்துப் பெறலாம்; அல்லது அவ்வமைப்பினிடமிருந்து அதற்குரிய லைசென்சு

எனும் இசைவாணை பெற்று, அன்னியச் செலாவணியில் வாணிபம் நடத்துவோரிடமிருந்து அதனை விலைபேசி வாங்கலாம். எந்த நாட்டிலிருந்து எப் பண்டம் இறக்குமதி செய்யப்படுகிறது என்பதனை அறிந்த பின்னரே, இறக்குமதியாளருக்கு வேண்டிய இசைவாணையினை அவ் வமைப்பு வழங்கிடும். எடுத்துக்காட்டாக, அமெரிக்கப் பண்டம் ஒன்றினை இந்திய இறக்குமதியாளர் வாங்குவதற்குத் தேவைப்படும் டாலரினைப் பெற லைசென்சு கோரி விண்ணப்பிக்கிறார் எனக்கொள்வோம். இந்தியப் பொருளாதாரத்தில் அப் பண்டத்தின் முக்கியத்துவத்தையும், அமெரிக்க டாலருக்கு உள்ள கிராக்கியையும் அனுசரித்தே லைசென்சு வழங்கப்படுதலோ, நிராகரிக்கப்படுதலோ அமையும்.

நாணய மாற்றுக் கட்டுப்பாட்டினைத் திறமையுடன் நிருவகிக்கின்ற ஒரு நாட்டில் சுங்கத் தீர்வை தேவையில்லை. நாட்டின் வருவாய் பெருகுவதற்கு வேண்டுமானால் சுங்கத் தீர்வை தேவைப்படலாம். காப்பு வாணிபக் கோட்பாட்டினரின் கருத்துப்படி, இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்குக் கிடைப்புப்பங்கு முறையைவிட நாணயமாற்றுக் கட்டுப்பாடே சிறந்தது. ஏனெனில், அதிக ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி அன்னியச் செலாவணி, லைசென்சினை விண்ணப்பித்திடும் இறக்குமதியாளருக்குத் தகுதியின் அடிப்படையில் நிருவாக ரீதியாக வழங்கலாம், அல்லது நிராகரிக்கலாம். வெளிநாட்டுப் பண்டத்தின் இறக்குமதியைத் தடுத்திட நாம் இறக்குமதி வரி விதித்தால், நமது பண்டத்தினை அவ் வெ நாட்டு அரசு இறக்குமதி வரி விதித்துத் தடுத்துவிட முடியும். ஆனால், அதே காரியத்தை எவ்வித ஐயமும், குரோதமும் ஏற்படாதவண்ணம் நாம் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டினைக் கொண்டு நிறைவேற்ற முடியும்.

அநேகமாக எல்லா நாடுகளுமே இராணுவ தளவாடங்கள், இயந்திரங்கள் முதலானவற்றை வெளிநாடுகளிலிருந்தும் வாங்குவது உண்டு. ஆனால், இப் பண்டங்களை உற்பத்தி செய்திடும் உள்நாட்டு உற்பத்தியாளருக்கு ஆதரவு அளித்திட அரசாங்கங்கள் விரும்பினால், உள்நாட்டுப் பொருள்கள் வெளிநாட்டுப் பொருள்களைவிட விலை உயர்ந்திருப்பினும் அவற்றையே வாங்கிட அரசாங்கங்கள் முனையும். அரசின் விருப்பத் தேர்விற்கு ஒப்ப உள்நாட்டுப் பண்டங்களை அரசே வாங்குதலும் காப்பு வாணிபத்தின் பாற்பட்டதே.

காப்பு வாணிபத்தின் பிறிதோர் வகை உள்நாட்டுத் தொழிலுக்கு உதவிக் கொடை (subsidy) வழங்குதல் ஆகும். இறக்குமதிகளைக் குறைத்திடவும், ஏற்றுமதிகள் மூலம் அன்னியச் செலாவணியை ஈட்டுதற்கும் உள்நாட்டுத் தொழிலுக்கு உதவிக்கொடை வழங்கலாம். வரிவிதிப்பிலிருந்து விலக்கு அளித்தும், வரிகுறைப்பு செய்தும் உள்நாட்டுத் தொழிலுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கலாம். உதவிக் கொடை மூலம் உள்நாட்டுத் தொழிலுக்குக் காப்பு அளித்தல் தடையிலா வாணிபத்துடனும் கூட இணைந்து செயல்படலாம். இவையிரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையவை அல்ல. ஏனெனில், உதவிக்கொடை அளித்த தன் வாயிலாக அரசாங்கமே உள்நாட்டு உற்பத்திச்செலவின் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தைத் தானே ஏற்றுக் கொள்கிறது.

உதவிக் கொடை மூலமாக சென்ற உலகப்போர் தொடங்குவதற்கு முன்னரே சில விவசாயப் பொருள்களின் உற்பத்திக்கும், செயற்கை எண்ணெய் (synthetic oil), ரப்பர் போன்ற யுத்தச் சார்புள்ள சில தொழில்களுக்கும் ஜெர்மனி பாதுகாப்பளித்தது. சில ஐரோப்பிய அரசுகள் 17-ம் நூற்றுண்டிலிருந்தே சில பண்டங்களுக்கு ஏற்றுமதி ஊக்கக் கொடைகள் (export bounties) அளித்து வந்திருக்கின்றன. இரயில்வேக்கள் தேசிய மயமாக்கப்பட்ட நாடுகளில் ஏற்று மதிப் பண்டங்களைத் துறைமுகத்திற்குக் கொண்டு செல்வதற்கு விதிக்கும் கட்டணத்தில் சலுகைகள் காட்டப்பட்டன. ஆக, ஏற்றுமதி ஊக்கக் கொடைகள் உருவிலும் உதவிக் கொடைகள் அளிக்கப்பட்டன.

ஏற்றுமதியை வளர்த்து, அயல் நாட்டுச் செலுத்து நிலையில் சமநிலையினை உண்டாக்க ஏற்றுமதி ஊக்கக் கொடைகள் நல்ல வண்ணம் பயன்படுகின்றன. ஊக்கக் கொடைகளைப் பெறும் ஏற்றுமதியாளர்கள் வெளி நாட்டுச் சந்தைகளில் தங்களுடைய பண்டங்களின் விலைகளைக் குறைத்துத் தேவையைத் தூண்டமுடியும். இதன் விளைவாக ஏற்றுமதி பெருகும். என்றுலும் ஏற்றுமதிப் பெருக்கத்தினுல் மட்டுமே ஒரு நாட்டின் வருமானம் உயரும் என்றே அதன் அயல் நாட்டுக் கொடுப்பல் நிலையில் அபிவிருத்தி இருக்கும் என்றே அறுதியிட்டுக் கூறமுடியாது.

ஏற்றுமதிப் பண்டங்களுக்கு அயல் நாட்டுத் தேவை நெகிழ்ச்சி குறைந்துள்ளதாகக் கொள்வோம். அப் பண்டங்களின் விலைகுறைப்பு மூலம் நாம் ஏற்றுமதியை அதிகரிக்கச்

செய்ய முடியும் என்றாலும், அயல்நாட்டுத் தேவை நெகிழ்ச்சி குறைந்து காணப்படுவதால், ஏற்றுமதி மூலம் நாம் பெறுகின்ற மொத்த வருமானம் குறைந்து விடும். ஏற்றுமதிப் பண்டத்தின் விலை ரூ. 10–ஆக இருக்கும்பொழுது அயல் நாட்டுத் தேவை 1,000 அலகுகள் எனில், நமக்கு வருமானம் ரூ. 10,000 ஆகும். விலைகுறைப்பு 10% எனக்கொள்வோம். அயல் நாட்டுத் தேவையின் நெகிழ்ச்சி குறைவு என்பதனால், தேவை 8% உயருமேயானால், 1,080 அலகுகள் ஏற்றுமதியாகும். நமக்குக் கிடைத்திடும் வருமானம் ரூ. 280 குறைவாகி, ரூ. 9,720 கிடைக்கும். ஆக, ஏற்றுமதிப் பண்டங்களின் அயல் நாட்டுத் தேவை நெகிழ்ச்சி குறைந்து அமையின், ஏற்றுமதிக்கு அளிக்கப்படும் ஊக்கக் கொடையோ, உதவிக் கொடையோ எதுவானாலும் ஏற்றுமதி வருமானத்தைக் குறைத்திடவே செய்யும்; தேவை நெகிழ்ச்சி மிக்கிருப்பின், ஏற்றுமதி வருமானம் உயர்ந்திடும்.



வரைபடம் 6-1 உதவிக் கொடையின் விளைவு

உதவிக் கொடையின் விளைவினை வரை படம் 6.1 விளக்கிடும். உள்நாட்டு அளிப்பினை SS குறிக்கிறது; அயல்நாட்டுத் தேவையினை DD குறிக்கிறது. உள்நாட்டு விலை OP எனக் கொள்வோம்; இது உலகச் சந்தையில் நிலவிடும் OP'–எனும்

விலையைவிட அதிகம். ஏற்றுமதிப் பண்டத்தின் ஒவ்வோர் அலகிற்கும் PP' உதவிக் கொடையினை அரசாங்கம் அளிப்ப தாகக் கொள்வோம். அதாவது, மொத்தத்தில் PP'QR பரப்பிற்கு உதவிக் கொடை அளிக்கப்படுகிறது எனக் கொள்வோம். இவ்வாறு கொடை அளிப்பதனுல் ஏற்றுமதிப் பண்டத்திற்கு அயல்நாட்டுச் சந்தையில் திறனுடன் போட்டியிடும் வாய்ப்பும் தகுதியும் கிடைத்துவிடுகின்றன. உதவிக் கொடையின் பொரு ளாதார விளைவு என்னவென்ருல், நாட்டின் இயற்கை வளன்கள் திறமை மிகுந்த துறைகளிலிருந்து திறமை குறைந்த துறை களுக்குத் திருப்பி விடப்படுகின்றன. உதவிக் கொடை நாம் எதிர்பார்க்கும் பலனுக்கு நேர்மாருன பலனை உண்டாக்குவதும் உண்டு. நமது ஏற்றுமதிப் பண்டங்களுக்கு நாம் அளித்திடும் உதவிக் கொடைக்கு எதிராக வெளிநாட்டு அரசு இறக்குமதி வரி விதிக்குமேயானுல், நாம் அளித்த உதவிக் கொடையினை வெளிநாட்டரசு இறக்குமதி வரியாக வசூலித்துவிடும்.

தனியாகவோ அல்லது அரசாங்கத்தின் ஆதரவுடனே ஒரே உற்பத்தித் துறையினைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் பன்னுட்டு ரீதியாக ஒன்று சேர்ந்து பன்னுட்டு கார்ட்டல் (International cartel) அமைத்து, உற்பத்தியிலும் விற்பனையிலும் சர்வாதீனத்தை நிலைநிறுத்துவர். பேராசிரியர் ஹேபர்லர் பன் னுட்டு கார்ட்டலை பின்வருமாறு இலக்கணப்படுத்துகிருர் :— "உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பல்வேறு நாடுகளுக்கிடையே சந்தைகளைப் பிரித்திடவும், உற்பத்தி மீதும் விலை மீதும் திட்ட மிட்டு ஒரே மாதிரியான கட்டுப்பாட்டினை ஏற்படுத்தவும் எவ்வளவு நாடுகள் ஒன்றிணைய முடியுமோ அவ்வளவு நாடு களும் ஒன்றிணைந்து, அந் நாடுகளின் ஒரே தொழிற்றுறையைச் சார்ந்த உற்பத்தியாளரனைவரும் அமைந்திடும் ஒன்றியமான அமைப்பே பன்னுட்டு கார்ட்டல் (Cartel) ஆகும்."

அளவு மீறிய போட்டி ஏற்படுவதைத் தடுத்திடும் நோக் குடனேயே பன்னுட்டு வாணிபத்தில் கார்ட்டல்களை உற்பத்தி யாளர்கள் ஏற்படுத்துகின்றனர். கார்ட்டலை அமைக்கா திருக்கும்பொழுது ஒவ்வொரு தொழிலிலும் தேவைக்குமேல், நடப்பு ஆண்டில் நிலவிடும் துய்ப்பிற்கு மேல், உற்பத்தி பெருகிவிடுவதும் உண்டு. இதனுல். விலை குறைந்து ஆதாயம் குறைந்துவிடுகிறது. எனவே, ஹேபர்லர் குறிப்பிட்டுள்ளது போல, உற்பத்தியிலும் விலையிலும் சந்தைகளைப் பங்குப் போட்டுக் கொள்வதிலும் பல்வேறு நாடுகளின் உற்பத்தி யாளர்கள் ஒன்று கூடி முன்கூட்டியே திட்டமிட்ட கட்டுப்

பாட்டினை ஏற்படுத்தித் தங்களுடைய ஆதாயத்தற்குப் பங்கம் நேராத வகையில் கார்ட்டல் போன்ற சர்வாதீன அமைப்பினை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

முதிர்ந்த முதலாளித்துவத்தின் தவிர்க்கவியலாத விளைவே பன்னாட்டு கார்ட்டல்கள் ஆகும். முதிர்ந்த முதலாளித்துவம் பன்னாட்டு ரீதியாக இயங்கி, ஏகாதிபத்தியத்தை (imperialism) உருவாக்கி, உலக முழுதும் சுரண்டல் சாம்ராச்சியத்தை எவ்வாறு நிறுவுகிறது என்பதனைத் தெள்ளத் தெளிய மார்க்சீய உலகத் தலைவர் லெனின் படம் பிடித்துக் காட்டுகிறார். கார்ட்டல், சிண்டிகேட், டிரஸ்டு (Trust) போன்ற சர்வாதீன முதலாளித்துவ அமைப்புக்களெலாம் உள்நாட்டுச் சந்தை யினைத் தங்களுக்குள்ளாகவே பிரித்துக் கொண்டு, தொழிற் துறையினையே தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ்கொண்டுவந்து நிலைப்படுத்திக் கொள்கின்றன. முதலாளித்துவப் பொருளா தார அமைப்பு சர்வதேச வியாபகம் உடையது. உலகச் சந்தையினைப் படைத்தது முதலாளித்துவமே. மூலதன ஏற்றுமதி பெருகப் பெருக, சந்தைகள் உலகம் தழுவியதாக மாறிட மாறிட, இராட்சஸ சர்வாதீன அமைப்புகளின் அயல் நாட்டுத்தொடர்பும், காலனித் தொடர்பும் ஆதிக்க எல்லையும் விரிவடைய விரிவடைய, பன்னாட்டு கார்ட்டல்கள் ஏற்பட்டு ஏகாதிபத்தியம் தோன்றுகிறது.

நிறைவுப் போட்டியுள்ள சந்தையில் எண்ணற்ற துய்ப் போரும் எண்ணற்ற விற்போரும் இருப்பர். ஒரே மாதிரியான பண்டத்தை ஒரே விலையில் விற்றிடும் நிலையே நிறைவுப் போட்டியில் நிலவிடும். பன்னாட்டு வாணிபத்துடன் தொடர்பு கொண்ட தொழில்களைச் சார்ந்த நிறுவனங்களனைத்தும் பெரிய அளவு உடையன. அவை பன்னாட்டுச் சந்தையில் தாங்களே விலையினை நிர்ணயிக்கும் ஆற்றல் படைத்தவை. மேலும் பன்னாட்டு வாணிபத்தில் வெவ்வேறு சந்தைகளின் தேவைக் கோடுகள் வெவ்வேறு நிகழ்ச்சிகளை உடையன என்பதால், வேறுபடுத்திய விலைகளின் (discriminatory prices) மூலமே உச்ச ஆதாயத்தை அடைய முடியும். தேவை நெகிழ்ச்சி குறைந்த சந்தையில் விலையை உயர்த்தியும், தேவை நெகிழ்ச்சி மிக்க சந்தையில் விலையைக் குறைத்தும் விற்பனை செய்து ஆதா யத்தை உச்சத்திற்கு உயர்த்திட வேண்டும். தேவை நெகிழ்ச் சியும் இறுதிநிலை வரவும், குறைந்துள்ள சந்தைகளில் அதிக விலையில் குறைந்த அளவிற்கு விற்று இலாபத்தினை உச்சத் திற்கு உயர்த்திடலாம். அதுபோலவே, தேவை நெகிழ்ச்சியும்

இறுதிநிலை வரவும் உயர்ந்துள்ள சந்தைகளில் குறைந்த விலையில் அதிக அளவிற்கு விற்று உச்ச இலாபத்தினைப் பெற்றிடலாம். எல்லாச் சந்தைகளிலும் இறுதிநிலை வரவு சமமாக இருக்கும் வகையில் உற்பத்தியான பண்டத்தினை அச் சந்தைகளிடையே பிரித்துப் பங்கிட்டு விற்றிட வேண்டும். அப்பொழுதுதான் ஆதாயம் உச்சமடைந்து சமநிலை ஏற்படும்.

வெவ்வேறு சந்தைகளில் வெவ்வேறு விலைகளில் பண்டத்தினை விற்றலையே பன்னாட்டு வாணிபத்தில் "சந்தையில் பண்டங்களைத் திணித்தல்" (dumping) எனக் குறிப்பிடுவர். உள்நாட்டுச் சந்தையைவிட வெளிநாட்டுச் சந்தையில் தேவையின் நெகிழ்ச்சி மிகுந்திருப்பின், விலையினை எவ்வளவு குறைத்திட முடியுமோ அவ்வளவு குறைத்து, பண்டத்தின் பெரும் பகுதியினை வெளிநாட்டுச் சந்தையில் திணித்திடலாம். வெளிநாட்டுச் சந்தைகளில் பண்டத்தைத் திணித்தல் என்பது உற்பத்திச் செலவிற்கும் குறைவான விலையில் விற்பதனையும் குறிக்கும். சில வேளைகளில் உள்நாட்டு உற்பத்தியாளருக்குக் கேடு சூழும் வகையிலும் குறைந்த விலையில் விற்றலைக் குறிக்கும். வெளிச் சந்தையில் பண்டத்தைத் திணித்தல் என்பது, வெவ்வேறு தேசீய சந்தைகளில் விலை வேறுபடுத்தலையே (price discrimination) குறிக்கும். விலைவேறு படுத்தல் காப்பு வாணிபத்தின் ஒரு வகையே என்று நாம் அறிவோம்.

அரசின் ஆதரவுடன்கூடிய பன்னாட்டு கார்ட்டல், பன்னாட்டு ரீதியாக பண்டங்களை விற்பதில் உடன்பாடு காணலும் (International Commodity Agreements) அமையும். சாதாரணமாக விவசாயப் பண்டங்களை விற்பதில் உடன்பாடு பன்னாட்டு ரீதியாகக் காண்பர். ஏனெனில், விவசாயத்தில்தான் உற்பத்தியில் சுழல்கள் ஏற்படுகின்றன. விவசாயத் துறையில் சுழல் சார்ந்த ஏற்ற இறக்கங்கள் ஏற்படுவதால், விவசாயப் பண்டங்களை விற்பதில் நாடுகளுக்கிடையே உடன்பாடுகள் ஏற்படுகின்றன. இத்தகைய உடன்பாடுகள், தேவை–அளிப்பு ஆகியவற்றின் சமநிலையின்மையினை நீண்ட காலப் போக்கில் நீக்கி விடுகின்றன. காப்பு வாணிபத்தின் வகையைச் சார்ந்தது தான் இத்தகைய உடன்பாடுகள்.

அரசாங்கமே வாணிபத்தை மேற்கொள்ளும் (State trading) பொழுது, ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் சேர்த்து அவர்கள் சார்பிலேயே அரசாங்கம் அதிகாரபூர்வமான ஏஜென்ஸிமூலம் வாணிப முடிவுகள் எடுக்கிறது. இம் முடிவு

களின்படியே ஏற்றுமதி, இறக்குமதி உற்பத்தியாளர்கள் தங்களுடைய வாணிபத்தினைத் நடத்திட வேண்டும். வாணிப வீதத்தினை உயர்த்திடுவதே அரசாங்கம் வாணிபத்தினை மேற்கொள்வதின் முக்கிய குறிக்கோளாகும்.

காப்பு வாணிபத்தின் விளைவுகள்

காப்பு வாணிபம் எந்த வகையைச் சார்ந்ததாக இருப்பினும், அதன் விளைவுகள் ஏறத்தாழ ஒரே மாதிரியானவையே. தடையிலா வாணிபம் இரு சாராருக்கும் சாதகமாக இருப்பது போல காப்பு வாணிபம் இல்லை. திறமை மிக்க வெளிநாட்டு உற்பத்தியாளர்களுடைய போட்டிக்குத் தடையாகக் காப்பு வாணிபம் அமைந்துவிடுவதால், திறமை குறைந்த உள்நாட்டு உற்பத்தியாளருக்கு வாய்ப்பு கிட்டுகிறது. திறமையின்மையைப் பாதுகாத்து வளர்ப்பதே காப்பு வாணிபம்தான். தடையிலா வணிபத்தில் போட்டி நிலவுவதால் உற்பத்தியாளர்கள் தங்களுடைய பண்டங்களின் தரத்தை உயர்த்தவும், உற்பத்திச் செலவினைக் குறைத்திடவும் முன்வருகின்றனர். போட்டியில் வெற்றி பெறவேண்டும் என்ற குறிக்கோளுடன் இக் காரியங்களை அவர்கள் செய்கின்றனர். ஆனால், காப்பு வாணிபம் இப் போட்டியைத் தடுத்துவிடுவதால், உற்பத்தியில் புதிய முறைகள் தோன்றுவதற்கு வழி இல்லாமல் போய்விடுகிறது. பழைய பண்டங்களுக்குப் புதிய பயன்கள் உருவாக்க முடியாமல் போய்விடுகிறது; புதிய பண்டங்களையும் உற்பத்தி செய்ய முடியாமல் போய்விடுகிறது.

பல வெளிநாட்டுப் பண்டங்களைக் காப்பு வாணிபத்தின் மூலம் தடை செய்துவிடுவதால், எண்ணற்ற பண்டங்களிலிருந்து தங்களுக்குப் பிடித்த பண்டங்களைத் தேர்த்தெடுக்கின்ற உரிமையினை உள்நாட்டுத் துய்ப்போர் வர்க்கம் இழந்துவிடுகிறது. வெளிநாடுகளிருந்து பண்டங்களை இறக்குமதி செய்கின்றபொழுது அந்த நாடுகளுடைய கருத்துக்கள், நாகரிகம், வாழ்க்கை முறை முதலானவற்றை இறக்குமதி செய்கிறோம் என்று பொருள். விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக உலகம் சுருங்கிக்கொண்டு செல்லும்பொழுது, காப்பு வாணிபத்தின் விளைவாக மக்கள் பல்வேறு நாடுகளின் பண்டங்களையும், பிறவற்றையும் சுவைத்து மகிழ்ந்திடும் வாய்ப்பினை இழப்பதுடன், அவற்றைப் பொறுத்தவரையில் அவர்கள் அறியாமையில் மூழ்கிவிடுகின்றனர்.[2] என்றாலும் 20-ஆம் நூற்

[2] என்கே,, சலீரா : "பன்னாட்டுப் பொருளாதாரம்" (Enke & Salera 'International Economics") மூன்றும் பதிப்பு : ப. 235-245.

ருண்டில், குறிப்பாகக் கடந்த 40, 50 ஆண்டுகளில், காப்பு வாணிபத்திற்குச் செல்வாக்கு உலகில் பல்வேறு நாடுகளில், குறிப்பாகப் பின்தங்கிய நாடுகளில், பெருகியுள்ளது. திட்டமிட்ட பொருளாதாரத்தை மேற்கொண்டு, தொழிற்றுறைகளை முன்னேற்றி, பின்தங்கிய நிலைகளிலிருந்து நீங்கி, பொருளாதார வளர்ச்சியை மையமாக வைத்துப் பாடுபடும் நாடுகளனைத்தும் இந்த நூற்றுண்டில் காப்பு வாணிபத்தையே நம்பி மேற்கொண்டுள்ளன என்பது நடப்பு வரலாருகும்.

7. தடையிலா வாணிபமும் காப்பு வாணிபமும் (2)

(Free Trade and Protection)

இரண்டாம் உயர்நிலை வாதங்கள்

காப்பு வாணிபத்திற்கு ஆதரவாகத் தரப்படுகிற பல வாதங்கள் இரண்டாம் உயர்நிலை வாதங்கள் (second-best arguments) போன்றவை எனப் பேராசிரியர் மீடு (Professor Meade) குறிப்பிட்டுள்ளார். பாரிடோவின் உத்தம நிலையை paretian optimum) அடைவதற்கு உத்தம நிலைக்குரிய நிபந்தனை களனைத்தையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றிட வேண்டும். ஏதேனும் ஒரு நிபந்தனையை நிறைவேற்ற முடியவில்லை என்றால், ஏனைய நிபந்தனைகளையும் நிறைவேற்றுதுவிட்டால் உத்தமநிலை கிட்டும். இவ்வாறு பெற்றிடும் உத்தம நிலையினையே இரண்டாம் உயர் உத்தமநிலை (second-best optimum) என்பர். இரண்டாம் உயர் உத்தமநிலை எனப்பெயரிடக் காரணம், பாரிடோவின் உத்தம நிலையினை அடைய முடியாதவாறு தடையொன்று இருப்பதனுல்தான். இரண்டாம் உயர் உத்தமநிலை போல, இரண்டாம் உயர்நிலை வாதங்கள் காப்பு வாணிபத்தின் சார்பில் வழங்கப்படுகின்றன. சந்தைக் குறைபாடுகளின் அடிப் படையில் மனேயிலெஸ்கோ (Manoilesco,) குன்னர் மிர்டல் (Gunnar Myrdal,) ஹேகன் (Hagen) ஆகியவர்கள் அளித்துள்ள வாதங்களும், இளம் தொழில் வாதமும் (Infant Industry Argument) வாணிபவீதம், வருமானப் பகிர்வு, அயல்நாட்டுச் செலுத்து நிலை முதலானவற்றின் அடிப்படையில் தரப்படும் வாதங்களும் இரண்டாம் உயர்நிலை வாதங்களெனக் கொள்ள லாம்.

சந்தைக் குறைபாடுகளும் காப்புக் கோட்பாடும்

பின்தங்கிய, ஏழை நாடுகளில் தொழிற்றுறைக்கும் விவசாயத் துறைக்கும் இடையில் உள்நாட்டுச் செலவுகள், விலைகள் ஆகியவற்றின் கட்டமைவில் ஏற்ற இறக்கங்கள் உள்ளன. இவ்வேற்ற இறக்கங்கள் தொழிற்றுறைக்கு நல்ல

தல்ல என்பதனுல் ஏழை நாடுகளில் தொழிற்றுறைக்குப் பாது காப்பு தேவைப்படுகிறது. இந்த வாதத்தை மனேயிலெஸ்கோ முன்னரே தந்துள்ளார்.[1] இவரது கருத்தின்படி, செல்வம் கொழிக்கின்ற தொழிற்றுறை நாடுகளுக்கே பன்னுட்டு வாணிபம் பெரும் பயன் உடைத்து; விவசாயப் பண்டங்களை ஏற்றுமதி செய்து, பொறிவழிப் பண்டங்களை இறக்குமதி செய் திடும் ஏழை நாடுகளுக்கல்ல. விவசாயத் தொழிலாளிக்கும் தொழிற்றுறை சார்ந்த தொழிலாளிக்குமிடையில் சராசரி வருமானத்தில் பெருத்த வேறுபாடு நிலவுவதை முன்னிட்டு, விவசாயத் துறையைவிட தொழிற்றுறை உயர்ந்தது என்று கருதப்படுகிறது. இக் கருத்தை ஆதாரமாகக் கொண்டு, உற்பத்தித்திறன் குறைவாக உள்ள விவசாயத்திலிருந்து அத் திறன் மிகுந்துள்ள தொழிற்றுறைக்குத் தொழிலாளர்களை மாற்றிவிட வேண்டும் என்று மனேயிலெஸ்கோ கருதுகிருர். விவசாயத்துறையிலிருந்து தொழிற்றுறைக்குத் தொழிலாளரைத் திருப்பிவிடுதலுக்குப் பாதுகாப்பு (காப்பு) தேவை என்பது அவர் தம் கொள்கை. குன்னர் மிர்டலும் (Gunnar Myrdal) லூயிசும் (Lewis) நவீன முறையில் இதே வாதத்தினை அளித் துள்ளனர்.[2] தொழிற்றுறைக்கும் விவசாயத்திற்கும் இடையில், உண்மைக் கூலியில் பெருமளவு வேறுபாடு இருப்பினும் தொழிற்றுறையில் பணக்கூலியைவிட உழைப்பைச் சார்ந்த சமூகச் செலவுகள் குறைந்தே உள்ளன. எனவே தொழிற்று றைக்கும் விவசாயத்திற்கும் இடையில் உழைப்புச் செலவில் நிலவிடும் பேதத்தினை அகற்ற வாணிபக் கட்டுப்பாடுகளை விதித்திடவேண்டுமென மிர்டலும் லூயிசும் வலியுறுத்து கின்றனர்.

அடுத்து, பேராசிரியர் ஹேகன் (Professor Hagen) அவர்கள் வழங்கிடும் அழுத்தமான தர்க்கத்தினை ஆராய் வோம்.[3] உற்பத்திக் காரணிகளுக்குரிய சந்தைகளில் நிறை

[1] மிஹெய்ல் மனேயிலெஸ்கோ (Mihail Manoilesco): "காப்புக் கோட்பாடும் பன்னுட்டு வாணிபமும்" (Theory of Protection and International Trade'), ஆங்கில பதிப்பு: பி. எஸ். கிங் (P. S. King), *1931.*

[2] குன்னர் மிர்டல் (Gunnar Myrdal): "பன்னுட்டுப் பொருளியல்" ("International Economics"), *1956.* ப. *277-278.*

W. A லூயிஸ் (W. A. Lewis): "எல்லையற்ற உழைப்பின் அளிப் பும் பொருளாதார முன்னேற்றமும்" ("Economic Development with Unlimited Supplies of Labour") Manchester School of Economic & Social Studies, May, 1954.

[3] E. E. ஹேகன் (E. E. Hagen), "காப்புக் கொள்கையினைப் பொருளா தார ரீதியாக நியாயப்படுத்துதல்" ("An Economic Justification of Protectionism"), Quarterly Journal of Economics, 1958.

குறை (inperfection) நிலவுவதாலோ அல்லது வெவ்வேறு காரணி விதங்களைப் பயன்படுத்துவதாலோ வெவ்வேறு துறைகளில் அக் காரணிகளுக்கும் கிடைத்திடும் விளைவுகளில் (returns) பெரும் வேறுபாடு நிலவுகிறது. இவ் வேறுபாட்டினை அகற்றி, உண்மை வருமானத்தை உயர்த்திடக் காரணிகளில் பொருத்த மான மறு பகிர்வு தேவை. உற்பத்திக் காரணிகளின் விலையினை உயர்த்தித் தொழிற்றுறையைப் பாதுகாப்பதன் மூலம் காரணிப் பகிர்விலேயுள்ள கோளாறுகள் நீக்கப்பட்டால், உண்மை வருமான உயர்வு ஏற்படும். ஆனால் ஒரு நிபந்தனை, காப்பிற் குரிய தொழிற்றுறைக்கு உற்பத்திக் காரணிகளின் விலையினை உயர்த்தித் திருப்பிவிடும்பொழுது, அவ் விலையுயர்வினைவிட காப்பிற்குரிய பண்டத்திற்குத் துய்ப்போர் தந்திடும் மொத்த விலை குறைவாக இருக்கவேண்டும். உண்மையான ஒப்புமைத் தகுதியினை அடைவதற்குரிய வாய்ப்புகள் மேற்குறிப்பிட்ட வண்ணம் அமையுமேயானல், சிறந்த கைக்கோள் ஒன்றினை உருவாக்க முடியும். உழைப்பின் ஒவ்வோரலகிற்கு ஆகும் செலவு தொழிற்றுறையில் உயர்ந்தும் விவசாயத் துறையில் குறைந்தும் உள்ளது எனில், இச் செலவுகளுக்கிடையில் உள்ள வேறுபாட்டிற்குச் சமமாக இருக்கும் வண்ணம், தொழிற் துறையில் பயன்படுத்தப்படுகின்ற உழைப்பின் ஒவ்வோரல கிற்கும் உதவிக் கொடையளித்து, அதனைத்தடையிலா வாணிபத்துடன் இணைத்துவிடுவது சிறந்த கைக்கோள் என்று E. E. ஹேகன் கருதுகிருர். தொழிற்றுறைக்கு உதவிக் கொடை யளித்து, விவசாயத்துறையிலுள்ள உழைப்புச் செலவின் மட்டத்திற்குத் தொழிற்றுறையில் உழைப்புச் செலவினைக் குறைத்துச் சமப்படுத்தல் இக் கைக்கோளில் உள்ளது. உதவிக் கொடையை ஆதாரமாகக் கொண்ட காப்பு வாணிபமும் தடையிலா வாணிபமும் இணைந்து செயல்படுகின்ற கைக் கோளே இது.

ஏழை நாடுகளுக்குப் பொருளாதார ரீதியான காப்பு (protection) அளித்திடும் வாதத்தினை மனேயிலெஸ்கோ, மிர்டல், லூயிஸ், ஹேகன் ஆகியோர் வழங்கியுள்ளதை மேலே விளக்கினேம். விவசாயத்திலே நிலவிடும் உருமறைந்த வேலை யின்மையைச் (disguised unemployment) சுட்டிக் காட்டி, ஹேகன் இவ் விவாதத்திற்கு வலிவூட்டுகிருர். குறிப்பிட்ட எண்ணிக்கைக்குமேல் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் தம் இறுதிநிலை உற்பத்தித்திறன் பூஜ்யம் எனலாம். விவசாய அமைப்பினையும், ஏனைய உற்பத்திக் காரணிகளின் வீதத்தினையும் மாற்ருதிருக்கும்பொழுது, விவசாயத்தில் குறிப்

பிட்ட எண்ணிக்கைக்குமேல் பணி புரியும் தொழிலாளர்களை அகற்றிவிடுவதனல் உற்பத்தி ஒன்றும் பாதிக்கப்படமாட்டாது. கூடுதலாக உள்ள விவசாயத் தொழிலாளர்களைத் தொழிற் றுறைக்கு மாற்றிவிடவேண்டுமெனில், அவர்களுக்கு விவசாயத் தில் கிடைத்திடும் பிழைப்பூதியத்திற்கு (subsistence wage) மேல் மிகை ஊதியம் (premium) அளித்து ஊக்குவிக்க வேண்டும். விவசாயத்தில் கிடைத்திடும் இறுதிநிலை உற்பத்தித் திறனல் நிர்ணயிக்கப்பெறும் சமூகப் பிறவாய்ப்புப் பெறுமானம் (social opportunity cost) பூஜ்யமாக இருப்பினும், விவசாயத்தில் கூடுதலாக உள்ள தொழிலாளர்களைத் தொழிற்றுறைக்குத் திருப்பிவிட்டு வேலைக்கமர்த்துவதற்கு ஆகும் செலவு மிகுதி யாகவே இருக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தொழிற் றுறையில் உழைப்பிற்கு மிகுதியான மதிப்பே நிலவும்; பணச் செலவிற்கும் சமூகச் செலவிற்குமுள்ள விகிதம்கூட விவசாயத் துறையைவிடத் தொழிற்றுறையில் குறைந்தே இருக்கும். எனவே, இதுகாறும் தரப்பட்ட விளக்கத்திலிருந்து ஒரு தெளிந்த முடிவு கிடைக்கின்றது. தனித்த பணச் செலவுகளுக்கும் (private money costs) சமூக இறுதிநிலைச் செலவுகளுக்குமிடையி லுள்ள இடைவெளி அடைக்கப்பட வேண்டுமெனில், இரண்டாம் நிலைத் தொழிற்றுறைகள் (secondary industries) பொருளாதாரக் காப்பினைப் பெறுதல் வேண்டும். இரண்டாம் நிலைத் தொழில்களுக்குக் காப்பு கிடைத்தலைப் பொறுத்தே உள்நாட்டு இயற்கை வளங்கள் நன்கு பயன்படுத்தப்பட்டுள் ளனவா என்பது தீர்மானிக்கப்படும்.

விவசாயத்தில் உரு மறைந்த வேலையின்மை நிலவும் பொழுது, உபரியாக உள்ள விவசாயத் தொழிலாளர்களைத் தொழிற்றுறைக்குத் திருப்பிடவேண்டி, அத் தொழிற்றுறைக்குப் பொருளாதாரக் காப்பு அளித்திடவேண்டும் என்று வாதித் தோம். ஆனல், இதற்குப் பொருள், பொருளாதாரக் காப்பு மூலம் தொழில்மயமாக்கல் (industrialisation) வேண்டும் என்ப தன்று. ஒரு பொருளாதாரத்தில் ஏதோ ஒரு துறையில் உபரியாக மனித சக்தி தேங்கிக்கிடப்பதன் காரணமாகவே, அச் சக்தி நிரந்தர ஆக்க சக்தியாக மாறிடும் தகுதியும் வாய்ப்பும் பெற்று விட்டது என்று பொருள்படுத்திக் கொள்ளக்கூடாது. வேலை யற்ருேர் அனைவரும் தொழிற்றுறைக்குரிய தொழிலாற்றல் பெறும் தகுதி படைத்த நிரந்தர தொழிலாளர்களாகிவிட முடியாது. அதாவது, உபரியாக உள்ள தொழிலாளரைக் காப்புப் பெற்ற தொழில்களுக்கு மாற்றிவிடுவதால் மட்டுமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. விவசாயத்தில் உபரியாக

உள்ள தொழிலாளரால் ஏற்படும் முக்கிய விளைவு குறைந்த உற்பத்தித் திறன் என்றும், இதற்குத் தேவையான தீர்வு தொழில் மயமாக்குதல் அன்று, முதலாக்கமே (capital formation) என்று வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள ராக்னர் நர்க்ஸ் (Ragnar Nurkse) கருத்தினை[4] நன்கு ஓர்தல் வேண்டும்.

தொழிலாளர் தம் இடப்பெயர்ச்சியைத் தூண்டுவதற்கு, அதாவது உழைப்பு தேக்கம் அடைந்துள்ள விவசாயத்துறையிலிருந்து, உழைப்பு மேலும் பயன்படக் கூடிய தொழில் துறைக்குத் தொழிலாளரைத் திருப்பிவிடுவதற்கு, சுங்கத் தீர்வையைவிட உறுதி மிக்க வேறு முறைகள் உள்ளன. உரு மறைந்த வேலையின்மைக்குத் தேவையின் போதாமையைக் (deficiency of demand) காரணமாகக் கூடாது; நிலமும் மூலதனமும் போதுமான அளவிற்குக் கிடைக்காமையும், அமைப்பு முறையும் நுட்பவினைத் திறனும் போதுமான அளவிற்கு இல்லாமையுமே உரு மறைந்த வேலையின்மைக்குக் காரணங்களாகக் கொள்ள முடியும்.[5] வளர்ச்சியற்ற நாடுகளிளெல்லாம் சந்தைகளெல்லாம் ஆரம்ப கட்டத்தில், சாதாரண நிலையில் இருக்கும். அவற்றின் பொருளாதாரங்களும் நெகிழ்ச்சி குறைந்தனவாகவே இருக்கும். இத்தகைய பொருளாதாரங்களில் விலை, வருமானம் ஆகியவற்றின் தூண்டுதல் மூலம் அளிப்பில் தேவையான, விரும்பத்தக்க மாற்றங்களைக் காப்பு முறையைச் செயல்படுத்தி உண்டாக்கிட முடியாது. உண்மையில் சொல்லப்போனால், தொழிலாளர்கள் இடம்விட்டு இடமோ, தொழில்விட்டுத் தொழிலோ மாறுவதற்குத் தடைக் கற்களாக அமைப்பு முறையும் கலாச்சாரமுமே அமைந்துள்ளன. இத் தடைகளை அப்புறப்படுத்திட பொருளாதாரம் சாராத, அதற்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும். பொதுத்துறை முதலீடு, கல்வி, பயிற்சி, நிலவமைப்புச் சீர்திருத்தம் போன்றவற்றால் தொழிலாளர் தம் இடப்பெயர்ச்சியை ஊக்குவிக்கலாம். பொருளாதாரக் காப்புமுறை அந்த அளவிற்குப் பயன்படாது.[6]

[4] ராக்னர் நர்க்ஸ் (Ragnar Nurkse): "உபரி மக்கள் தொகையும் மூலதனக் கட்டும்" ("Excess Population and capital construction"), Malayan Economic Review, October, 1957.

[5] J. R. ஹிக்ஸ் (J. R. Hicks): "உலகப் பொருளாதாரம் பற்றிய கட்டுரைகள்" ("Essays in World Economics"), ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக அச்சுக்கூடம், *1959, ப. 178-179.*

[6] ஜிரால்டு எம். மீயர்: "பன்னாட்டு வாணிபமும் வளர்ச்சியும்", (Gerald M Meier: "International Trade and Deveplopment") *1963, ப. 132-139.*

இளம் தொழில் வாதம்

அமெரிக்க ராஜதந்திரி அலெக்சாண்டர் ஹாமில்டன் (Alexander Hamilton) முதன் முதலாக 1791-ல் பொறி வழித் தொழில் பற்றிய அறிக்கை ஒன்றில் இளம் தொழில் வாதத்தினை (infant industry argument) வழங்கினர். இவ் வாதத்தினை ஜர்மானியப் பொருளாதாரி பிரடரிக் லிஸ்ட் (Friedrich List) மேலும் விவரித்தார்; ஆங்கில நாட்டுப் பொருளாதாரி ஜான் ஸ்டூவர்ட் மில் அதனை இன்னும் முழுமையாக்கினர். ஒரேயளவுத் திறமையும் சமபலமுள்ள நாடுகளிடையை-பொருளாதார வளர்ச்சி யடைந்துள்ள நாடுகளிடையே-தடையிலா வாணிபமும் முழுமையான போட்டியும் நிகழ்ந்திடலாம் என்பதில் லிஸ்ட், மில் போன்றுருக்கு ஆட்சேபணை கிடையாது. வளர்ச்சியுற்ற நாட்டிற்கும் வளர்ச்சி குறைந்த நாட்டிற்குமிடையிலே-செல்வம் கொழிக்கும் நாட்டிற்கும் ஏழை நாட்டிற்குமிடையிலே நிறைவுப் போட்டியோ தடையிலா வாணிபமோ நடைபெறுதல் முயற்கொம்பே என்பது அவர்கள் முடிபு.

போட்டிக்குரிய விலைகள் (competitive prices) சமூகச் செலவுகளைப் (social cost) பிரதிபலிக்க வில்லையென்றுல், காப்பு முறை ஒன்றே வழி. இளம் தொழில் வாதம் இந்த அடிப்படையில்தான் எழுந்துள்ளது. தாமாதித்துத் தொடங்கப் பெற்ற தொழிலே இளம் தொழிலாகும். முதிர்ச்சியுறுத தொழிலே அது. நெடுங்காலமாக இயங்கிவரும் அயல்நாட்டுத் தொழிலுடன் போட்டியிடும் வலிமை பெருத தொழிலே அது. போதுமான அளவுக்கு வளர்ந்து, தனது சொந்தக் காலிலேயே நிற்குமளவிற்குத் தெம்பூட்டும் வகையில், வெளிநாட்டுப் போட்டிக்குச் சரியான ஈடு கொடுக்கும் வண்ணம் இத்தகைய இளம் தொழில்களுக்குக் காப்பு அளித்திட வேண்டும். பொதுவாகவே, வளர்ச்சி இல்லாத நாடுகளில் புதிதாகத் துவக்கப்படும் தொழில்களெலாம் வெளிநாட்டுப் போட்டியைச் சமாளிக்க முடியாத இளம் தொழில்களேயாகும்.

பொருளாதாரக் காப்பு இல்லாது சொந்தக் காலிலேயே நின்று அயல்நாட்டுப் போட்டியைச் சமாளிக்கும் சக்தி பெறும் வரையில், வளர்ச்சி குறைந்த நாடுகளில் தொடங்கபெறும் புதிய தொழில்களுக்குக் காப்பு அளித்திட வேண்டும். நிரந்தரக் காப்பு கூடாது என்பதே இதன் திரண்ட கருத்து. தற்காலிகக் காப்பினைக் கூடத் தராதரமின்றி எல்லாத் தொழில்களுக்கும் எல்லா சூழ்நிலைகளிலும் அளித்திடக் கூடாது. காப்பு வேண்டிடும் தொழில்கள் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திட வேண்டும், அவை பின்வருமாறு :-

(1) காப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் அந்த நாட்டிற்கு இயற்கையாகவே உரியதாக இருக்க வேண்டும். அதாவது, அந்த நாடு போதுமான அளவிற்கு இயற்கை வளன்களையும், கச்சாப் பொருள்களையும், தொழிலாளர்களையும், சந்தை யினையும் பெற்றிருக்க வேண்டும். அப்பொழுது தான் குறிப்பிட்ட தொழில் வளர்ச்சியடைவதற்குரிய முகாந்திரம் இருக்க முடியும். வளர்ச்சியுற்ற பிறகு காப்பு இல்லாமலேயே போட்டியினைச் சமாளிக்கக் கூடிய ஆற்றலை அத் தொழில் பெறக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

(2) தரப்படும் காப்பு தற்காலிகமானதாக இருக்க வேண்டும். தொழில் வளர்ந்து விட்டபிறகு காப்பினை விலக்கிக் கொள்ளவேண்டும்.

(3) இளம் தொழில் காப்புமுறை வளர்ச்சியுறாத நாடு களுக்கும் வளர்ந்து கொண்டிருக்கின்ற நாடு களுக்கும் மட்டுமே பொருந்தும்.

கைக்குழந்தையைப் பாலூட்டி வளர்க்கவேண்டும்; ஓடி ஆடி விளையாடும் குழந்தையைக் கண்காணிக்க வேண்டும்; வயது வந்த இளைஞனைத் தனித்தியங்கிடச் செய்தல் வேண்டும். இதுவே இளம் தொழில் காப்பு முறைக்குப் பின் மறைந்துள்ள தத்துவமாகும். இத் தத்துவம் சரிதான் என்றாலும், இதனைப் பிரயோகிக்கும் பொழுது சில நடைமுறைச் சங்கடங்கள் எழுகின்றன. குறிப்பிட்ட ஒரு தொழில் குறிப்பிட்ட நாட்டிற்கு இயல்பானது தானா என்று முடிவு எடுப்பது சிரமம்; தேவையான அளவிற்கு வேண்டிய தொழிலாளரையும், நுட்பவினைத் திறனையும் அத் தொழில் பெறமுடியுமா என்பது குறித்து முடிவு எடுப்பதும் கடினமே; பன்னாட்டுப் போட்டி சார்ந்த விலைகளில் பண்டத்தை உற்பத்தி செய்திடும் தெளிவு பெறுதல் கடினமே. தொழிலுக்குக் காப்பு தந்த பின்னர் சிலகாலம் கழித்தே தெளிவான முடிவுகள் எடுக்கவியலும். மேலும், ஒரு தடவை காப்பு அளித்துவிட்டால் அதனை விலக்குவது அவ்வளவு எளிதன்று காப்புப்பெற்ற சில தொழில் அதிபர்கள் சர்வாதீன ஆதாயம் பெறவேண்டி காப்பினை நீட்டிக்கச் செய்வர். காப்பினை நீட்டிக்கச் செய்ய அரசியல் செல்வாக்கினையும் பயன்படுத் துவர். குறைகள் பல இருப்பினும் காப்பின் மூலம் புதுத் தொழில்கள் வளர வாய்ப்புண்டு.

வாணிப வீத வாதமும் வருமானப் பகிர்வும்

இறக்குமதி வரிவிதிப்பின் சுமையினை வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் தாங்குவார்கள் என்றும், வரிவிதிக்கும் நாட்டின் வாணிபவீதம் உயரும் என்றும், அயல் நாட்டினரிடமிருந்து வரிவிதிக்கும் நாட்டினருக்குச் சாதகமாக உண்மை வருமானம் பகிர்வுபெறும் என்றும் கருதப்படுகிறது. இறக்குமதி வரிவிதிப்பின் விளைவாக இறக்குமதிப் பண்டத்தின் விலை உயரவில்லை என்றால், வெளிநாட்டினர் வரிப் பளுவைத் தாங்குகின்றனர் எனப்பொருள். வரி விதிப்பின் அளவிற்கு விலை உயர்ந்திடின், வரிவிதித்திடும் நாட்டின் துய்ப்போர் வரிப் பளுவை ஏற்றுக்கொண்டுள்ளனர் எனப்பொருள். வரி விதிப்பின் அளவிற்கு இல்லை என்றாலும், ஓரளவுக்கு விலை உயர்ந்தால் வரிச்சுமையினை வெளிநாட்டினர் ஓரளவிற்கும், உள்நாட்டுத் துய்ப்போர் ஓரளவிற்கும் தாங்குகின்றனர் எனப் பொருள். எந்த அளவிற்கு வெளிநாட்டினர் வரிப்பளுவைத் தாங்குகின்றனரோ அந்த அளவிற்கு வாணிபவீதம் வரிவிதித்த நாட்டிற்குச் சாதகமாகவும், வருமானப் பங்கீடும் வரிவிதித்த நாட்டின் துய்ப்போருக்குச் சாதகமாகவும் ஆகியுள்ளன எனலாம்.

வரிவிதித்திடும் நாட்டின் தேவை நெகிழ்ச்சி மிக்கதாக இருந்தாலும் சரி, அல்லது இந் நாட்டின் சந்தை பெரிதாக இருந்தாலும் சரி, அல்லது வேறுநாடுகளின் இறக்குமதி வரிகள் உயர்ந்து இருந்தாலும் சரி, வரிப் பளுவை வெளிநாட்டு உற்பத்தியாளரே தாங்கிட முன்வருவார். வேறு நாடுகளுக்கு அனுப்புவதற்கு ஆகும் கடத்துச் செலவு மிக அதிகம் என்றாலும், வரிப்பளுவை வெளிநாட்டினரே தாங்கிடுவர். ஆக, வரிப் பளுவை வெளிநாட்டினர் தாங்குதல் என்பது வரி விதிக்கும் நாட்டின் தேவைநிலை, சந்தையின் அளவு, மற்ற நாடுகளின் வரி நிலவரம், கடத்துச் செலவு ஆகிய இன்ன பிற காரணங்களைப் பொறுத்ததாகும்.

வருமானப் பகிர்வு வாதம்

சுங்கத் தீர்வையின் விளைவாக, வெளிநாட்டின் உற்பத்தியாளரிடமிருந்து வரி விதித்திடும் உள்நாட்டு அரசாங்கத்திற்கு வருவாய் பெருகலாம். பொதுவாகவே, வரி வீதம் அளவுக்கு மீறி உயர்ந்திருப்பின், அதன்மூலம் அரசாங்க வருவாய் பெருகிவிடாது. வரி விதிக்கப்பட்டவுடனேயே வருவாய் பெருகினாலும், நீண்டகால நோக்கில் வருவாய் உச்சநிலையை அடைய முடியாது. இறக்குமதி வரி விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து

உற்பத்திச் சாதனங்கள், ஏற்றுமதிக்குப் போட்டியிடும் தொழில்களிலிருந்து இறக்குமதிப் பண்டங்களுடன் போட்டியிடும் தொழில்களுக்கு மாறிட முனைந்து இயங்கிடும்பொழுது, வரியின் மூலம் கிடைத்திடும் வருவாய் பெருகிவிடும். உற்பத்திச் சாதனங்கள் இறக்குமதிப் பண்டங்களுடன் போட்டியிடும் தொழில்களுக்கு முழுதும் மாறிய பிறகு, இறக்குமதித் தீர்வை மூலம் கிடைத்திடும் வருவாய் குறைந்து விடும். உச்சநிலை வருவாய்க்குரிய இறக்குமதித் தீர்வையினை நிர்ணயிக்கும் பொழுது, நீண்டகாலத்தில் எவ்வாறு உற்பத்திச் சாதனங்கள் ஒருதொழிலிருந்து பிறிதொரு தொழிலுக்கு மாறுகிறது என்பதனை கணக்கிடவேண்டும். சாதனங்கள் இவ்வாறு மாறுவதைப் பொறுத்துத்தான், நீண்டகால உச்சநிலை வருவாய்க்குரிய இறக்குமதித் தீர்வை குறுங்காலத்திலுள்ளதைவிட குறைந்திருக்கும்.

சுங்கத் தீர்வையின் விளைவாக, வெளிநாட்டாரிடமிருந்து உண்மை வருமானம் வரிவிதித்த நாட்டு மக்களுக்குச் சாதகமாகப் பகிர்வு பெறும்; வாணிபவீதமும் உயரும். இவ் விளைவினை முன்னரே விளக்கியுள்ளோம்.

மூன்றாவதாக, இறக்குமதித் தீர்வையின் விளைவாக, வரிவிதித்திடும் நாட்டிற்குள்ளாகவே வருமானப் பங்கீடு நடைபெறும். இது வறிய தொழிலாளர் வாதத்தினைக் குறிக்கும். இவ் வாதத்தினை அமெரிக்கா வழங்குகிறது. குறைந்த கூலியில் நிறையத் தொழிலாளர்கள் ஆசிய நாடுகளில் கிடைத்திடும் காரணத்தினால் அந் நாடுகளில் உற்பத்திச் செலவு குறைந்து உள்ளது. ஆனால், அமெரிக்க நாட்டில் கூலி உயர்வின் காரணமாக உற்பத்திச் செலவும் உயர்ந்துள்ளது. தடையிலா வாணிபம் நிலவினால், ஆசிய நாடுகளுடன் சரிசமானமாகப் போட்டியிட அமெரிக்கா தனது கூலியினைக் குறைத்திட வேண்டும். கூலிகுறைந்தால் அமெரிக்க வாழ்க்கைத்தரம் குறைந்துவிடும். உயர்ந்த கூலியையும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் கட்டிக் காத்திடும் நோக்குடன் அமெரிக்கா வறிய தொழிலாளர் வாதத்தினை முன்னிறுத்திக் காப்பு முறையை ஆதரித்தது.

உயர்ந்த கூலி நிலவிடும் நாடு வறிய தொழிலாளருக்கு வழங்கப்படும் குறைந்த கூலியுடைய நாடுகளுடன், திறந்த, சரிசமான போட்டி போட முடியாது என்ற வாதம் பொருந்தா வாதமாகும். குறைந்த செலவில் உற்பத்தி செய்வதற்குத் தடையாக உயர்ந்த கூலி இருந்திடமுடியாது என்பது எல்ஸ்

வர்த் கருத்தாகும். உழைப்பு, உயர்ந்த செலவுக்குரிய உற்பத்திக் காரணியாக இருக்கும் நாட்டிலேயே. மூலதனமும் ஏனைய இயற்கை வளன்களும் நிறையக் கிடைத்திடலாம்; மலிவாகவும் கிடைத்திடலாம். இப்படிப்பட்ட நாடுகளில் மூலதனச் செறிவுள்ள பண்டங்களையும் நிலச்செறிவுள்ள பண்டங்களையும் உற்பத்தி செய்வதில் ஒப்புமைத் தகுதி நிலவிடும். குறைந்த கூலி நிலவிடும் நாடுகளில் உழைப்புச் செறிவுள்ள பண்டங்களில் மட்டுமே ஒப்புமைத் தகுதி நிலவிடும். எனவே, எல்லா உற்பத்தித் துறைகளிலும், குறைந்த கூலி நிலவிடும் நாடுகளைவிட, உயர்ந்த கூலி நிலவிடும் நாடுகளில், ஒப்புமைத் தகுதியும் திறனும் குறைவு என்று வாதிடுவது தவருன வாதமாகும்.

தொழிலாளரின் உயர்ந்த உற்பத்தித் திறனுக்காகத் தரப் படுவதே உயர்ந்த கூலியாகும். திறமையான தொழிலாளர்கள் நிறைந்துள்ள நாட்டில், உயர்ந்த கூலி உயர்ந்த செலவுகளையோ உயர்ந்த விலைகளையோ பிரதிபலிக்காது. தொழிலாளருக்குத் திறமைக்கேற்ற கூலிதான் கிடைக்குமே தவிர, திறமைக் குறைவுக்கு உயர்ந்த கூலி கிடைத்திடாது. இவையெலாம் எதனைக் கோடிட்டுக் காட்டுகின்றன? உயர்ந்த கூலி வழங்கிடும் நாடுகளெலாம் குறைந்த கூலி வழங்கிடும் நாடுகளுடன் போட்டியிடமுடியும். ஏனெனில், உயர்கூலி நிலவிடும் நாடுகளில் தராதர உற்பத்தித்திறன் தராதரக் கூலியைவிட உயர்ந்திருப்பதுதான்.

வறிய தொழிலாளர் வாதத்தினை வழங்கிடுவோர் ஒன்றை நினைவுகூர்ந்திடவேண்டும். வெவ்வேறு பண்டங்களின் உற்பத்திக்கு, வெவ்வேறு காரணி வீதங்கள் தேவைப்படும் என்பதனையும், தொழிலாளர் தம் திறமையை நிர்ணயிக்கின்ற காரணங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன என்பதனையும் மறந்துவிடக் கூடாது. கூலி உயர்வு நிலவிடும் நாடுகள் கூலி குறைவாக உள்ள நாடுகளுடன் போட்டியிட முடியும் என்பதும், வறிய தொழிலாளர் வாதத்தின் அடிப்படையில் கூலி உயர்வு உள்ள நாடுகளுக்குக் காப்புத் தேவையில்லை என்பதும் இவற்ருல் பெறப்படுகிறது.

ஒருவிதத்தில், வறிய தொழிலாளர் வாதத்தில் உண்மை இருக்கிறது. ஒரு நாட்டில் நிலவிடும் கூலி மட்டத்தினைச் சுங்கத் தீர்வை பாதுகாக்கும் என்பது இவ் வாதத்தில் அடங்கியுள்ளது. தொழிலாளர் எண்ணிக்கையில் போதாமை நிலவிடும் நாட்டில் வேண்டுமானுல் சுங்கத் தீர்வை கூலிமட்டத்தினைப் பாது

காக்கலாம். இவ் வாதம், ஸ்டோல்பர்-சாமுவல்சன் தேற்றத்தைக்[7] (Stolper-Samuelson Theorem) கோடிட்டுக் காட்டுகிறது எனலாம். இத் தேற்றத்தின் பிரகாரம், இரண்டு உற்பத்திக் காரணிகளைக் கொண்ட பொருளாதாரத்தில், சுங்கத் தீர்வை மூலமாகக் கிராக்கியாக உள்ள காரணியின் முழுமையான கூலி உயர்த்தப்படும். என்றாலும் காப்பு வாணிபத்தில், ஸ்டோல்பர் சாமுவல்சன் வாதம் நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியது என்று கூறிட முடியாது. ஏனெனில் இவ் வாதத்தில் இயக்க (dynamic) வீறுகொண்ட சில நிகழ்வுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. முதலீட்டின் மூலம் கிடைத்திடும் ஆதாயத்தில்

[7] ஸ்டோல்பர்-சாமுவல்சன் தேற்றம் (Stolper-Samuelson Theorem) எக் கருத்தினைப் பிரதிபலிக்கிறது என்பதை நோக்குவோம். இரண்டு உற்பத்திக் காரணிகள் கொண்ட பொருளாதாரத்தில் கிராக்கியாக உள்ள காரணியின் முழு அளவான வருவாய், சுங்கத் தீர்வையின் காரணமாக உயரும் என்பது இத் தேற்றத்தின் முடிபு. காப்புப் பெற்றுள்ள தொழில்களில் பயன்படுத்தப்படும் மிக முக்கியமான உற்பத்திக் காரணியின் உண்மை வருவாயும், மொத்த உற்பத்தியில் அக் காரணியின் தராதரப் பங்கும் சுங்கத் தீர்வையின் காரணமாக அதிகரிக்கும். உதாரணமாக, தொழிலாளர் அளிப்பினைக் குறைவாக உடைய ஒரு நாட்டில் காப்பு வாணிபத்தின் விளைவாக உண்மைக் கூலி விதம் உயரும்; ஆனால், நாட்டு வருமானம் குறையலாம். சுங்க வரியின் தீமைகளனைத்தும் அந் நாடு பெற்றிருக்கும் மிகுதியான உற்பத்திக் காரணிகள்மீது படியும்.

இத் தேற்றத்திற்கு மூன்று எடுகோள்கள் அடிப்படையாக உள்ளன. ஒன்று, சுங்கத் தீர்வையின் விளைவாக உற்பத்திக் காரணிகள் ஏற்றுமதித் தொழில்களைவிட்டு இறக்குமதிப் போட்டித் தொழில்களை வந்தடைகின்றன. இரண்டு, ஏனைய உற்பத்திக் காரணிகளுடன் எந்த விகிதத்தில் குறிப்பிட்ட உற்பத்திக் காரணி இணைந்திருக்கிறதோ அதனைப் பொறுத்தே அக் காரணியின் இறுதிநிலைப் பொருள்சார் உற்பத்தியளவு அமையும். மூன்று, எல்லாத் தொழில்களிலும் காரணிகள் ஒரேயளவு வருவாயையே பெறுகின்றன.

குறிப்பிட்ட ஒரு நாட்டில் நிலத்தையும், உழைப்பையும் பயன்படுத்திக் கோதுமை, ஆடை ஆகிய இரு பண்டங்களை உற்பத்தி செய்வதாக அனுமானிப்போம். ஆடை நெய்தல் உழைப்புச் செறிவு மிக்கதாகவும், கோதுமை விளைச்சல் நிலச் செறிவு மிக்கதாகவும் கொள்வோம். அந் நாட்டில் உழைப்பு கிடைப்பருமை (scarcity) உடையதாகவும், அதன் காரணமாக அது விலை உயர்ந்ததாகவும் அமைந்துவிட்டால், உள்நாட்டு ஆடைத் தொழிலைக்காத்திடச் சுங்கவரி விதிக்கப்படும். கோதுமைச் சாகுபடியிலிருந்து நிலமும், உழைப்பும் விலகி ஆடை நெய்தலை மேற்கொள்ளும். கோதுமைச் சாகுபடி நிலச் செறிவு மிக்கது என்பதனால், அவ்வுற்பத்தியிலிருந்து விலகிடும் நிலம் அளவு மிகுந்தும், உழைப்பு அளவு குறைந்தும் இருக்கும். ஆனால், ஆடைத் தொழிலுக்கு நிலத்தைவிடத் தொழிலாளர்தம் உழைப்பே அதிகம் தேவை. எனவே, சுங்க வரி விதிப்பைத் தொடர்ந்து உழைப்பில் மேலும் கிராக்கி ஏற்பட்டுக் கூலி வீதம் மேலும் உயரும். இதன் விளைவாக, எல்லாத் தொழிற்றுறைகளிலும் உழைப்பிற்குப் பதிலாக நிலம் அதிகமாகப் பயன்படுத்தப்படும். உழைப்பு-நில விகிதமும் (labour-land ratio) குறையும். உழைப்பின் இறுதிநிலைப் பொருள்சார் உற்பத்தியளவும் உண்மைக் கூலி வீதமும் தொழிற்றுறைகள் எல்லாவற்றிலும் முன்னர் நிலவியதைவிடக் கூடுதலாகிவிடும். ஆனால், சுங்க வரியின் விளைவாக நிலம் மிகுதியான காரணியாக மாறிவிட்ட காரணத்தினால் அதனுடைய உண்மை வருவாய் குறைந்துவிடும். உற்பத்திக் காரணிகளின் அளவினைச் சுங்கத் தீர்வை பாதிக்கவில்லை என்று அனுமானித்துக்கொண்டால், அத் தீர்வையின் காரணமாகக் கிடைப்பருமையுள்ள காரணியின் தராதர வருவாயும், முழுமையான வருவாயும் உயரும் என்பதும், மிகுதியாகியுள்ள காரணியின் வருவாய் குறையும் என்பதும் இத் தேற்றத்தின் துணிபாகும்.

ஏற்படும் வீழ்ச்சியும், அவ் வீழ்ச்சியைத் தொடர்ந்து குவிப்பு வீதத்தில் (rate of accumulation) ஏற்படும் விளைவும், இவ்வாறு மொத்த மூலதன அளிப்பில் ஏற்படும் விளைவும், நீண்ட காலத்தில் உழைப்புடன் இணைந்துள்ள கலவையில் மூலதனத்து வீதாச்சாரமும், மூலதனத்து வீதத்தில் ஏற்படும் விளைவும் இவ் வாதத்தின் பகுத்தாய்வில் இடம் பெறவில்லை.

அயல்நாட்டுச் செலுத்துநிலை வாதம்

சுங்கத் தீர்வை மூலம் அயல்நாட்டுச் செலுத்து நிலையை வளர்த்து, சாதகமாக்கிக் கொள்ள முடியும் என்று கருதப்படு கிறது. சுங்கவரி வீதத்தை உயர்த்திவிட்டால், கொடுக்கப் பட்டுள்ள நாட்டு வருமானம் நிலவிடும்பொழுது, இறக்குமதிப் பண்டங்களின் தேவைகுறைந்து உள்நாட்டுப்பண்டங்களின் தேவை உயர்ந்துவிடும். இதனால் பற்றுக்குறை நீங்கி, அயல் நாட்டுச் செலுத்து நிலையில் (balance of payments) சாதகநிலை உருவாகும். இறக்குமதிப் பண்டங்களின் தேவை நெகிழ்ச்சி மிக்கதாக இருப்பின், உள்நாட்டுத் துய்ப்போர் விலை அதிகரித் துள்ள இறக்குமதிப் பண்டங்களை வாங்குவதை நிறுத்திவிட்டு அல்லது குறைத்துக்கொண்டு, உள்நாட்டில் உற்பத்தியான பண்டங்களைக் கூடுதலாக வாங்குவர். மாறாக, இறக்குமதித் தேவை நெகிழ்ச்சி குறைந்ததாக இருப்பின், உள்நாட்டு அரசுக்கு வருவாய் பெருகும், கூடுதலாகப் பெற்ற வருவாயினை அரசு உள்நாட்டுப் பண்டங்களின்மீது செலவிடும். இறுதியில் அயல் நாட்டுச் செலுத்து நிலையில் (கொடுப்பல் நிலையில்) உபரிகூட ஏற்படுவதுண்டு.

இவ்வாறு அயல்நாட்டுச் செலுத்து நிலையில் சுங்கத் தீர்வையினால் உண்டாக்கப்பட்ட உபரியானது உள்நாட்டு முதலீட்டு மட்டத்தை உயர்த்திவிடும். முதலீட்டு மட்டம் உயர்ந்தால் உள்நாட்டில் வருமானம் மேலும் உயர்ந்து, இறக்கு மதித் தேவை மீண்டும் உயர்த்தப்படும். சுங்கத் தீர்வையின் காரணமாக வீழ்ந்த இறக்குமதித் தேவையின் அளவிற்கு மீண்டும் அத் தேவை (உள் நாட்டு வருமானம் உயர்ந்து விட்டதைத் தொடர்ந்து) உயர்ந்துவிட்டால் தொடக்கத்தில் நிலவிய இறக்குமதித் தேவையே நிலவிடும்; வெளிநாடுகளின் வருமானமும் பாதிக்கப்படமாட்டாது.

சுங்கத் தீர்வையின் காரணமாக அயல்நாட்டு வாணிப நிலையும் (balance of trade) தேசிய வருமானமும் உயரும் என்றாலும், பாதிக்கப்பட்ட வெளிநாடுகளும் தங்களுடைய நாட்டு வருமானத்தையும் வாணிபக் கொடுப்பல் நிலையையும்

(balance of trade) பாதுகாத்திட வேண்டுமெனெ இதுபோன்ற சுங்கத் தீர்வையையும் வேறு பல நடவடிக்கைகளேயும் மேற் கொண்டால், சுங்கத் தீர்வைக்குரிய எந்தப் பலனும் ஏற்படாது.

சமநிலேயற்ற அயல்நாட்டுச் செலுத்துநிலேயில் இறக்கு மதித் தடைகள் சமநிலேயை உண்டாக்குவதுபோல் தோன்று மேயன்றி உண்மை அதுவன்று. நீண்ட காலத்திற்கு இறக்கு மதிகளே வரிவிதித்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தடைப் படுத்திக் கொண்டிருந்தால், அன்னியச் செலாவணியில் சேமிப்பு நிகழ்வதுபோலத் தோன்றினுலும், உள்நாட்டில் உற் பத்தி வெகுவாகப் பாதிக்கப்படும். இறக்குமதிப் பண்டங் களின் வரத்துக் குறைவதால் சில நெருக்கடிகள் உண்டாகும். காப்புப் பொருளாதாரத்தைச் சாக்காகக் கொண்டு சர்வாதீனப் போக்கு நிலேபெறும். தனியார் ஆதாயம் உயர்ந்திட வாய்ப்பு கள் உருவாகும்.

மேலும், இறக்குமதித் தடைகள் மூலம் உண்டாகும் காப்புச் செலவினங்களே உயர்த்தி, ஏற்றுமதித் தொழில்களின் போடடியிடும் பலத்தையும் குறைததுவிடும். அத்துடன், ஏற்றுமதி வளர்ச்சிக்குக் குந்தகம் விளேவிக்கும் வகையில் இறக்குமதிப் பதிலித் தொழில்களுக்கு (import-substitution industries) இயற்கை வளன்கள் திருப்பிவிடப்படும். நாடு, பணவீக்கப் பிடியில் ஏற்கெனவே சிக்கியிருந்தால், நிலேமை இன்னும் மோசமாகிவிடும். இறக்குமதித் தடைகள் மேலும் விலேவாசிகளே உயர்த்திவிடுவதுடன், இயற்கை வளன்களேப் பல்வேறு துறைகளுக்கிடையில் பங்கீடு செய்வதிலும் கோளாறுகள் ஏற்பட்டுவிடும். எப்படியெனில், வெளி நாட்டுப்போட்டி இல்லாதபோது, உள்நாட்டில்மேற்கொள்ளப் படுகின்ற ஒவ்வொரு புதுத்தொழிலும் ஆதாயமாகத் தோன்ற லாம். ஆனுல், பொருளாதாரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் உற்பத்தித்திறன் குறைந்துவிடும்.

அயல்நாட்டுச் செலுத்து நிலேயில் சமநிலேயினே உருவாக்குவதில் வாணிபத் தடைகள் சிறந்தனவா? நாணய மதிப்புக் குறைப்பு (devaluation) சிறந்த முறையா? என்பதனேப் பேராசிரியர் ஜான்சன் அவர்கள் ஆராய்ந்து, அம் முறைகள் எழுப்பிடும் இரு முக்கியப் பிரச்சினேகளேத் தெளிவுபடுத்து கிருர்.[8] முதல் பிரச்சினே, இறக்குமதித் தடைகள் மூலமாக நிகர அன்னியச் செலாவணி வருமானத்தைப் பெருக்கிடமுடியுமா

[8] H G ஜான்சன் (Johnson): 'பணம், வாணிபம், பொருளாதார வளர்ச்சி', ("Money, Trade and Economic Growth), ப. 25-27.

என்பதனை ஆய்தல் வேண்டும். நாணய மதிப்புக் குறைப்பு, ஒருவிதத்தில் பார்த்தால், இறக்குமதி வரி போன்றும், வேறு வகையில் பார்த்தால், ஏற்றுமதி உதவிக் கொடை போலும் தோன்றுகிறது. இறக்குமதித் தீர்வை அன்னியச் செலாவணியில் மிச்சம் பிடிக்கிறது என்பது உண்மைதான். சொந்த நாட்டி லிருந்து ஏற்றுமதியாகும் பண்டங்களுக்கு வெளிநாட்டுத் தேவையின் நெகிழ்ச்சி, ஒன்றிற்கு (unity) மேல் இருப்பின், ஏற்றுமதி உதவிக் கொடை மூலமாகவும் அன்னியச் செலா வணியில் மிச்சம் பிடித்திட முடியும். இதிலிருந்து பெறப்படுவது என்னவெனில், வெளிநாட்டுத் தேவை நெகிழ்ச்சி குறைந்த தாக இருப்பின், நாணயமதிப்புக் குறைப்பைவிட இறக்குமதித் தடைகள் மூலமே நிகர அன்னியச் செலாவணியைப் பெருக்கிட முடியும்; தேவை நெகிழ்ச்சி மிகுந்திருப்பின், நாணய மதிப்புக் குறைப்பே சிறந்தது.

இரண்டாவது பிரச்சினை, இறக்குமதித் தடைகளுக்கும் நாணய மதிப்புக் குறைப்பிற்கும் இடையில், ஏதேனும் ஒரு முறையினைத் தேர்ந்தெடுப்பதில் அடங்கியுள்ள சேமநலக் கூறுகளைப் பற்றியதாகும். சர்வாதீனம் உள்ள நாட்டில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் மூலமே சேமநலன் பேணப் படுகிறது. ஆனால், உத்தமநிலையினையும் மீறி வாணிபக் கட்டுப் பாட்டினை அந்த நாடு மேற்கொண்டால், நாணய மதிப்புக் குறைப்பின் மூலமே சேமநலனைப் பேணலாம்.

பொருளாதார வளர்ச்சி சார்ந்த வாதம்

பொருளாதார வளர்ச்சி போன்ற இயக்க வீறு (dynamic force) படைத்த வாதத்தின் அடிப்படையிலும் காப்புமுறையினை ஆதரிக்கலாம். வாணிப மூலமும் விவசாயம் மூலமும் கிடைத் திடும் உபரி வருமானம் பொதுவாக ஆக்கமிலா வழிகளிலேயே செலவழியும். ஆனால், தொழிற்றுறையின் இயல்பு வளர்ச்சி யினைத் தூண்டுவதாகும். இந்த வரம்பிற்குட்பட்டுக் கவனிக்கும் பொழுது, வெளிநாட்டுப் போட்டியிலிருந்து தொழில்களைப் பாதுகாத்திடும் கைகோளினை நாம் நியாயப்படுத்த முடியும். இட்டுக்கொண்டுள்ள வரம்பு சரிதானா என்பதனையும் கவனித் திடவேண்டும்.

பிழை நிறைந்த வாதங்கள்

காப்பு முறைக்கு ஆதரவான வாதங்களில், பொருளாதார ரீதியான வாதங்களைவிடப் பிழையுள்ள வாதங்களுக்கே அதிக வரவேற்புக் கிடைக்கிறது. வெளிநாட்டுப் பண்டங்களைத்

தடையேதுமின்றி இறக்குமதி செய்தால், சொந்த நாட்டுப் பணம் வெளி நாட்டிற்குச் சென்று, சொந்த நாடு ஏழை நாடாகி விடும் என்ற வாதத்தின் அடிப்படையில் காப்பு வாணிபம் ஆதரிக்கப்படுகிறது. பணம், செல்வத்தின் ஒருவகையே என்பது மெர்க்கண்டலிசத் தத்துவத்தைச் சார்ந்த ஒன்று. இது ஒரு பிழையுள்ள பொருளாதார வாதம். தனி நபருக்குப் பணம் சேருதல் ஆதாயம் நிறைந்ததாக இருக்காலம். வேலை நிறைவு அடைந்த சமூகத்தில், மேலும் மேலும் பணம் குவிந்தால், புதிய பண்டங்களை வாங்கமுடியும் என்று கருதமுடியாது; பண்டங் களின் விலை உயரும் என்று எதிர்பார்க்கலாம். மேலும், பன்னாட்டு வாணிபத்தில் பண்டங்களுக்குப் பண்டங்களே ஈடு கொடுக்கின்றன; பன்னாட்டுப் பணம் என்று சொல்லத்தக்க பொன், அயல்நாட்டுச் செலுத்து நிலையிலுள்ள சம நிலையின் மையைச் (disequilibrium) சரிசெய்திட மட்டுமே பயன்படு கிறது. ஒரு நாட்டினுடைய பணத்தை அந்த நாட்டிலேயே செலவழித்தாலொழிய வெளிநாட்டானுக்கு அப் பணத்தால் பயனில்லை.

மற்றொரு தவறான வாதம், உற்பத்திச் செலவினைச் சமப் படுத்துதல் ஆகும். சொந்த நாட்டிலும் வெளி நாட்டிலும் உற்பத்திச் செலவினைச் சமப்படுத்தும் வகையில் இறக்குமதி வரிகளை விதிக்கவேண்டும் என்பதே அவ் வாதம். இவ்வாறு விதிக்கப்படும் சுங்கத்தீர்வை பேதங்காட்டும் தீர்வையாகும். திறமை மிகுந்த தொழில்கள் பாதிக்கப்பட்டு, திறமை குறைந்த தொழில்கள் வளர்க்கப்படும். இறக்குமதிகள் தடுக்கப்படுவ தால், திறமைமிக்க ஏற்றுமதித் தொழில்களுக்குரிய வெளி நாட்டுச் சந்தைகள் சுருங்கிவிடுகின்றன. உற்பத்திச் செலவு களில் உள்ள வேறுபாடுகளே, வாணிபத்தின் மூலம் பெறப் படும் அனுகூலங்களின் அஸ்திவாரம் எனலாம். உள்நாட்டு உற்பத்திச் செலவுக்கு ஈடாக இறக்குமதிகளின் செலவினை வரிமூலம் உயர்த்திவிட்டால், வாணிபம் அழியும் என்பதே உண்மை. ஆக, செலவுகளைச் சமன்படுத்தல் என்ற வாதம் வாணிபக் காப்பிற்குரிய வாதமன்று, வாணிபத்தினையே அழித்து விடும் வாதமாகும்.

உள்நாட்டுச் சந்தைக்குக் காப்பு அளித்திடும் வாதமும் பிழையுள்ள வாதமே. உள்நாட்டுத் தொழிற்றுறைக்குக் காப்பு அளித்து, அதனை வளரச்செய்து, தொழிலாளர் தம் வாங்கும் சக்தியினைப் பெருக்கினால், விவசாயப் பண்டங்களின் உள் நாட்டுச் சந்தை வளரும் என்பது வாதம். இவ் வாதத்திலுள்ள குறை என்ன ? சுங்கத்தீர்வை மூலம் இறக்குமதியைக் குறைத்

திடும் அதே வேளையில் விவசாய ஏற்றுமதியும் பாதிக்கப் படுகிறது. மேலும், இத் தீர்வை மூலம் வெளிநாட்டுச் சந்தைக் குப் பதில் உள்நாட்டுச் சந்தை உருவாகியதே தவிர, புதிய சந்தை ஒன்றும் ஏற்படவில்லை. உள்நாட்டில் காப்புப் பெற்ற தொழிற்றுறைகளின் பொறிவழிப் பண்டங்களுக்கு அதிக விலை கொடுக்க நேரிட்ட விவசாயிகளுக்கு ஆதாயம் ஒன்றும் ஏற்பட வில்லை. என்ருலும், சுங்கத்தீர்வையின் விளைவாக, விவசாயப் பண்டங்களுக்கு உள்நாட்டுச் சந்தை விரிவடைகிறது என்று குறிப்பிடலாம். ஆனல்,இதுவும் சரியான வாதமன்று. பன்னட்டு வாணிப ஓட்டத்திலிருந்து விலகிநிற்கும் நாடுகளில் (காப்பு வாணிபம் இத்தகைய ஒதுக்கத்தையே--isolation—உண்டாக் கும்.) மொத்த நாட்டு உற்பத்தி அல்லது உண்மை வருமானம் குறைந்துவிடும். குறைந்துவிட்ட உண்மை வருமான மட்டத்தில் விவசாயப் பண்டங்களுக்குரிய மொத்த உள் நாட்டுத் தேவையும் குறைந்துவிடும் என்பது உண்மை.

காப்பு வாணிபத்தின் மூலம் உள்நாட்டு உற்பத்தி பெருகும் என்ற வாதத்தின் நியாயத்தினைச் சீர்தூக்கிப் பார்ப் போம். இறக்குமதிகள் தடையாகும்பொழுது, அப் பண்டங் களின் தேவையைப் பூர்த்தி செய்திட அவற்றின் பதிலிகளை உற்பத்தி செய்திடும் புதிய தொழில்கள் உள்நாட்டில் தொடக் கப்படும். என்ருலும், அதேநேரத்தில் சுங்கத்தீர்வையால் இறக்குமதிகள் பாதிக்கப்படும்பொழுது, ஏற்றுமதித் தொழில் களும் பாதிக்கப்படுகின்றன. மேலும், பொருளாதாரக் காப்புப் பெற்ற உள்நாட்டுப் பண்டங்களை அதிக விலை கொடுத்து உள் நாட்டுத் துய்ப்போர் வாங்கிடும் அவல நிலையும் ஏற்படுகிறது என்பதனை முன்னரே கண்டோம். உள்நாட்டுத் தொழில்கள் சிலவற்றிற்குக் காப்பு வழங்கிடும்பொழுது மூலவளன்கள் ஆக்கப் பூர்வமான துறைகளிலிருந்து ஆக்கம் குறைந்த துறை களுக்குத் திருப்பிவிடப்படுகின்றன என்பதனையும் ஏற்கெனவே எடுத்துக்காட்டியுள்ளோம். வெளிநாடுகள் விதித்திடும் சுங்க வரிக்கு எதிராக அதேயளவு வரியினை நாமும் விதித்திட வேண்டும் என்ற வாதமும், விலை குறைத்து வெளிநாட்டுப் பண்டத்தினை நம் நாட்டில் திணித்தலைத் (dumping) தடுத்திடும் வகையில் இறக்குமதி வரி விதித்தல் என்ற வாதமும் உறுதி மிக்க வாதங்கள் அல்ல.

வேலைவாய்ப்பு வாதம்

சுங்கத்தீர்வை மூலம் இறக்குமதி குறைகிறது. இறக்கு மதிப் போட்டித் தொழில்கள் (import competing industries) காப்புப்பெற்று வளர்தலினல் உள்நாட்டில் வேலைவாய்ப்புப்

பெருகுகிறது. வேலையை உண்டாக்கிப் பெருக்கிடும் இவ் விளைவு மற்றத் துறைகளுக்கும் பரவுகிறது. இறக்குமதிப் பதிலித் தொழில்களில் (import-substitute industries) முதலீடு செய்யும் பொழுது, புதிய வேலை வாய்ப்புகள் உருவாகின்றன.

இவ் வாதம் முழுதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. சுங்கத்தீர்வையின் விளைவால் சொந்த நாட்டில் இறக்குமதிகள் குறையும்பொழுது, நம் நாட்டில் வாணிபம் செய்திடும் வெளி நாடுகளின் ஏற்றுமதிகளும் அதேயளவு குறைந்துவிடுகின்றன. அவ் வெளிநாடுகளில் வேலையின்மை ஏற்படுகிறது. ஆகவே, வரிவிதிக்கும் நம் நாட்டின் ஏற்றுமதிக்கான வெளிநாட்டுத் தேவை குறைகிறது. மேலும் வெளி நாடுகளின் வருமான, வேலை மட்டங்கள் இறங்கிவிடுவதால், அந் நாடுகளிலும் அதே யளவு வரிவிதித்துத் திருப்பித் தாக்கிடும் (retaliation) உணர்ச்சி உருவாகிறது. இறக்குமதித் தீர்வை மூலம் சொந்த நாட்டில் வேலை வாய்ப்பினைப் பெருக்கிடும் முயற்சி வேலையின்மையை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்திடும் விளைவினை உண்டாக்கு கிறது. அண்டை நாட்டினை வறுமைக்குள்ளாக்கும் முறை களினால் எவ்விதப் பயனும் ஏற்படாது என்பது உறுதி. இதைவிடப் பணம் சார்ந்த (monetary), நிதியம் சார்ந்த (fiscal) கைகோள் தக்க பலனை அளித்திடும் என்று நம்பலாம்.

எதிர்காலத்தை முன்னிறுத்திக் கிடைப்பதற்கரிய இயற்கை வளன்களை மீத்துச் சேமித்திட வேண்டும் என்பதற்காகவும் காப்புவரிகளை விதிப்பதுண்டு. இராணுவம் சார்ந்த பாது காப்புத் தொழில்களுக்கும் காப்பு அளிப்பதுண்டு. இன்னும் உள்நாட்டில் போடப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றவும், வெளிநாட்டுப் பண்டங்கள் மீது மோகம் கொண்டு, ஆடம் பரப் பண்டங்களை வாங்குவதில் படாடோபம் செய்து ஆரவார வாழ்வு வாழ்தலைத் தடுப்பதற்கும் இறக்குமதித் தடைகள், அல்லது இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

வளர்ச்சி குன்றிய நாடுகளில் தொழிற்றுறைப் பாதுகாப்பு

நான்கு முக்கியக்காரணங்களுக்காக வளர்ச்சி குன்றிய நாடு களில் தொழில்களுக்குக் காப்பு அளித்திட வேண்டும் என்பது குன்னர் மிர்டலின் முடிவு.[9] அக் காரணங்கள் பின்வருமாறு: (1) புதிய அளிப்பிற்கு ஈடாகத் தேவையைக் கண்டுபிடிப் பதில் உள்ள தொல்லைகள்; (2) தேவைக்கு மேற்பட்ட தொழி

[9] குன்னர் மிர்டல்: 'பன்னாட்டுப் பொருளாதாரம்' (Gunnar Myrdal: International Economics) ப. 279.

லாளர் இருத்தல்; (3) புறச் சிக்கனங்களைப் படைப்பதில் தனித்த முதலீடுகளுக்குக் கிடைத்திடும் பெருமளவு ஆதாயங்கள்; (4) சீரற்ற (lopsided) உள்நாட்டு விலைக்கட்டமைவும் அதனால் தொழிலுக்கு ஏற்படும் கேடும் தவிர்க்கப்படவேண்டிய நிலை. இத்தகைய காரணங்களை ஒன்றுதிரட்டிப் பார்க்கும்பொழுது பொருளாதாரம் குழந்தைப் பருவத்தில் உள்ளது என்பது புரிகிறது. ஆகவேதான் இக் காரணங்களின் அடிப்படையில் வளர்ச்சி குறைந்த நாடுகளின் தொழிற்றுறைகளை வளர்த்திட காப்புத் தேவை என்பது உறுதியாகிறது.

முடிவுரை

திறமைக்குரிய சில நிபந்தனைகளை நிறைவேற்றுதல், தடையிலா வாணிபமே உண்டாக்கித் தருகின்ற வருமானப் பகிர்வினை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற அடிப்படைகளின் மீதே தடையிலா வாணிபம் ஆதரவு பெறுகிறது. பொருள்களின் சந்தையிலும் காரணிகளின் சந்தையிலும் உருத்திரிபுகள் (distortions) ஏற்பட்டால், தடையிலா வாணிபத்தில் திறமை சார்ந்த உத்தம நிலையினை அடைய முடியாது. எனவே, இரண்டாம் தரத்து வாதத்தின்படி, தடையிலா வாணிபத்தை விடக் காப்பு வாணிபமே சிறந்தது. மேற்குறித்த உருத்திரிபுகளை நீக்கிடக் காப்பு வாணிபம் பயன்படலாம்.

இருந்தபோதிலும், ஜிரால்டு எம். மீயர் குறிப்பிடுவது போலக் காப்பு வாணிபத்திற்குத் தரப்படும் வாதங்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே இருக்கவேண்டும்; அதனால் ஏற்படும் செலவுகளைக் குறைத்து மதிப்பிடக் கூடாது; காப்புமுறை சார்ந்த கைகோளைத் தவிர வேறு கை கோள்களின் பயன்களை அலட்சியப்படுத்தக் கூடாது. பன்னாட்டு வாணிபம் மூலமாக எவ்வாறு, எந்த முறையைப் பின்பற்றிப் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டி, வளர்ப்பது என்று ஆராய்வதுதான் முக்கியமே தவிர, காப்புவாணிபம் சார்ந்த வர்த்தகக் கைகோள் தொடர்பாகக் குறுகிய பிரச்சினையைக் கிளப்புவது முக்கியமன்று என ஜிரால்டு மீயர் குறிப்பிடுகிறார்.[10]

[10] ஜிரால்டு எம். மீயர்: 'பன்னாட்டு வாணிபமும் வளர்ச்சியும்', (Gerald M. Meier: International Trade and Development), ப. 149-150.

8. சுங்கவரிகளும் அவற்றின் விளைவுகளும்

(Tariffs and their effects)

சுங்கவரிகளை வகைப்படுத்தல்

நாட்டின் எல்லையைக் கடந்து ஒரு பண்டமானது வெளியே செல்லும்பொழுதோ, அல்லது வெளியே தோன்றி உள்ளே வரும்பொழுதோ அதன்மீது விதிக்கப்படும் வரியினைச் சுங்கவரி என்று குறிப்பிடலாம். சுங்கவரியைப் பொதுவாகவே காப்பு வரி என்றும் விளிக்கலாம். காப்பு வாணிபத்தை ஏற்றுக் கொண்டுள்ள நாடு, அதனை அமல்படுத்துவதற்குத் தான் இறக்குமதி செய்திடும் பண்டத்தின்மீது சுங்கவரி விதித்தலையே பிரதான முறையாகப் பின்பற்றுகிறது. சென்ற அத்தியாயத்தில் பல இடங்களில் சுங்கவ்ரி விளைவுகளை விமர்சித்து, காப்பு வாணிப முறையினை விளக்கிடும் வகையில், சுங்கவரி விதிப்பு சார்ந்த வாதங்களை விவரித்துள்ளோம்.

பண்டங்கள் தோன்றிடும் இடங்களையும், சென்றடையும் இடங்களையும் பொறுத்துச் சுங்கவரியினை இறக்குமதி வரி, ஏற்றுமதி வரி, ஊடு சுங்கவரி (transit duty) என மூன்றாகப் பிரிக் கலாம். வெளிநாட்டில் உற்பத்தியாகி வரி விதித்திடும் நாட்டிற்கு வந்து இறக்குமதியாகும் பண்டங்களின்மீது விதிக் கப்படும் வரி இறக்குமதி வரியாகும். வரிவிதிக்கும் நாட்டில் தோன்றி வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகும் பண்டங்களின் மீது விதிக்கப்படும் வரி ஏற்றுமதி வரியாகும். ஒரு நாட்டில் தோன்றி வேறுநாடுகளுக்குச் செல்லும் பண்டங்கள் நமது நாட்டின் வழியாக, நமது எல்லையைக் கடந்து சென்றால், அப் பண்டங்கள்மீது நாம் விதிக்கும் வரியே ஊடு சுங்கவரி என்று அழைக்கப்படும். இம் மூன்று வரிகளிலும் இறக்குமதி வரியே அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

வரி விதித்திடும் முறையினைப் பொறுத்துச் சுங்க வரியை மூன்று வகைப்படுத்தலாம். தனித்து வரையறுக்கப்பெற்ற வரிகள் (specific duties), பெறுமான விகிதத் தீர்வை (ad valorem

duty), இணைக்கப்பெற்ற வரிகள் (combined duties) என்று மூன்று பிரிவுகள் உள்ளன. இறக்குமதியாகும் ஒவ்வொரு பண்டத்தின் ஒவ்வோர் அலகின் (unit) மீதும் இவ்வளவு பணம் வரியாக வசூலிக்கப்படவேண்டும் என்பதே தனித்து வரையறுக்கப்பெற்ற வரியாகும். ஆனல், பெறுமான விகிதத் தீர்வை என்பது, பண்டத்தின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை நிர்ணயித்து வசூலிப்பது ஆகும். எனவே, இறக்குமதியாகும் பண்டத்தின் விலையில் மாற்றங்கள் ஏற்படும் பொழுது, பெறுமான விகிதத் தீர்வை தனது தராதரச் சுமையில் மாறுவதில்லை. பொருளாதார மந்த காலங்களில் தனித்து வரையறுக்கப்பெற்ற வரிகள், காப்பு முறை மிக்கதாகவும், பண வீக்கக் காலங்களில் காப்பு முறை குறைந்தும் உள்ளன. தனித்து வரையறுத்த வரிகளையும் பெறுமான விகிதத் தீர்வையையும் இணைத்து உண்டான வரியானது, இவையிரண்டில் எது குறைவான தீர்வையோ அதனையே சுங்கவரித் துறையினருக்குக் கட்டணமாகச் செலுத்திடும் நோக்கினைக் கொண்டது. சில வேளைகளில், விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு வரிவிதிப்பினைச் சரிசெய்திடவும், குறைந்தபட்ச வரி வசூலிப்பினையேனும் நிச்சயப்படுத்தவும் மேற்குறித்த இரு வரிகளையும் ஒன்ருகவே அரசாங்கம் விதிக்கும்.

பண்டம் உற்பத்தியாகும் நாட்டைப் பொறுத்தும் சுங்க வரிகளை வகைப்படுத்தலாம். பண்டங்கள் உற்பத்தியாகும் நாட்டைப்பற்றிக் கவலைப்படாது, ஒவ்வொரு பண்டத்தின்மீதும் சட்டப்படி ஒரே ஒரு சுங்கவரியினை விதித்தலை, ஒற்றைப்பத்திச் சுங்கவரி (single-column tariff) என்பர். பல இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒற்றைப்பத்திச் சுங்கவரி நிலவுகிறது. பண்டங்கள் உற்பத்தியாகும் நாட்டைப்பொறுத்துப் பல பத்திச் சுங்கவரி (multiple-column tariff) விதிக்கப்படுகிறது. பொதுவாக ஆஸ்திரேலியா பொது, இடைப்பட்டது, சலுகைபெற்றது (general, intermedite, preferential) என்ற மூன்று பத்திகளைப் பயன்படுத்துகிறது, ஆஸ்திரேலியா, ஆங்கில நாட்டுப் பண்டங்களுக்குச் சலுகை காட்டிடும் வரிவீதமும், சுங்கவரி உடன்பாடு செய்து கொண்ட நாடுகளுக்கு இடைப்பட்ட வரிவீதமும், மற்ற எல்லா நாட்டுப் பண்டங்களுக்குப் பொது வரிவீதமும் விதித்துப் பலபத்திச் சுங்கவரியினைப் பிரயோகிக்கிறது.

பொதுவாக, எப்பொழுதுமே விதிக்கப்படும் வரி, மரபுவழிச் சுங்கவரி (conventional tariff) ஆகும். ஒவ்வொரு பொருளினத்திற்கும் அடிப்படையான வரி ஒன்று நிர்ணயிக்கப்படும்.

இவ்வாறு நிர்ணயிக்கப்படும் வரியினைப் பன்னாட்டு உடன்பாட்டின் மூலம் குறைத்திட முடியும். இவ்வாறு குறைக்கப்பட்ட வரியினை எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்டு பொதுவாக்கப்பட்டால், ஒற்றைப் பத்திச் சுங்கவரியாக அதுமாறும்; இல்லையெனில் பலபத்திச் சுங்கவரியாகவே அது அமையும். ஐக்கிய அமெரிக்கா, ஸ்வீடன், இங்கிலாந்து போன்ற நாடுகள் இம் மரபுவழிச் சுங்கவரியையே விதித்துள்ளன.

எட்டு விளைவுகள்

சுங்கவரிகள் விதிக்கப்படும்பொழுது, பன்னாட்டு வாணிபத்தில் குறுக்கீடுகள் ஏற்படுகின்றன. கிண்டில்பெர்கர் குறிப்பிடுவதுபோல, சுங்கவரி விதிப்பு எட்டு விளைவுகளைக் கொண்டது. அவையாவன : (1) காப்புவிளைவு, (2) துய்ப்பு விளைவு, (3) வருவாய்விளைவு, (4) மறுபகிர்வு விளைவு, (5) வாணிப வீத விளைவு, (6) போட்டி விளைவு, (7) வருமான விளைவு, (8) அயல்நாட்டுச் செலுத்துநிலை விளைவு என எட்டு விளைவுகளாகும். சுங்கவரிகள் ஒரு தொழிலின்மீது என்ன விளைவினை உண்டாக்குகின்றன, ஒரு நாட்டின்மீது அல்லது ஒரு பிராந்தியத்தின்மீது அல்லது உலகத்தின்மீது எத்தகைய விளைவுகளை உண்டாக்குகின்றன என்பதனை ஆராய வேண்டும். சுங்கவரியின் மூலம் உற்பத்திக் காரணிமீது என்ன விளைவு ஏற்படுகிறது என்பதனையும் ஆராயவேண்டும். எல்லா விளைவுகளுக்கும் ஒரே மாதிரியான பகுத்தாய்வு பொருந்திவராது. ஒரு நாட்டிற்குக் கிடைத்திடும் ஆதாயத்தினை வேறு பல நாடுகளுக்கு ஏற்படும் நஷ்டங்கள் பாதிக்கும்பொழுது, ஒரு நாட்டிற்குப் பொருந்தும் வாதம் உலகிற்கே பொருந்தும் என்றியம்பிட முடியாது. ஆனால், சில சூழ்நிலைகளில் குறிப்பிட்ட முறையில் வருமான மறுபகிர்வு சீர்படுத்தப்பெற்று, பன்னாட்டு ரீதியாகச் சேமநலத்தினைப் பங்கீடு செய்திடும்பொழுது, ஒரு நாட்டிற்குப் பொருந்தும் வாதம் உலகிற்கே பொருந்தி வரக்கூடும். சுங்கத்தீர்வை மூலம் ஓர் உற்பத்திக் காரணிக்கு ஆதாயம் கிடைத்திடும் பொழுது, வேறு காரணிகளுக்கு இழப்பு ஏற்படுவதுண்டு. ஒரே நாட்டில் எல்லாப் பிராந்தியங்களுக்குச் சுங்கவரி வாதம் பொருந்த வேண்டுமெனில், சேமநலக்காரணங்களுக்காக மறுபகிர்வு தேவை என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இக் கருத்துகளை முன்னிறுத்தி, முன் விளக்கங்களாகக் கொண்டு எட்டு விளைவுகளை நாம் அணுக வேண்டும். இவ்வெட்டு விளைவுகளையும் கிண்டில்பெர்கர் அரைகுறைச்

சமநிலை (partial equilibrium) அமைப்பில் அமைத்து விளக்குகிறார்; பொதுச் சமநிலை (general equilibrium) மூலமும் விளக்குகிறார்.

காப்பு, வருவாய், துய்ப்பு, மறுபகிர்வு விளைவுகள்

வரிவிதிப்பு இறக்குமதிகளனைத்தையும் தடைசெய்யும் அளவிற்கு இருப்பின், முழுக்காப்பு வரியாக அது அமையுமேயன்றி, வருவாய் விளைவு ஏதும் ஏற்படாது. சொந்த நாட்டில் உற்பத்தியாகாத பண்டங்களை இறக்குமதி செய்யும்பொழுது, அவற்றின் மீது சுங்கவரி விதிப்பது காப்பு விளைவினை ஏற்படுத்தாது; ஆனால், வருவாய் விளைவு ஏற்படும். ஆனால், வரி விதிப்பின் காரணமாகத் தேவை உள்நாட்டில் வேறு பண்டங்களின் பக்கம் திரும்புமேயானால், காப்பு விளைவு ஏற்படுவதுண்டு. இறக்குமதி வரி விதித்திடும் அளவிற்கு உள்நாட்டிலேயே உற்பத்தியாகின்ற அதே பண்டங்களின்மீதும் ஆயத் தீர்வை (excise duty) விதித்தால், சுங்கத் தீர்வை காப்பு விளைவினை ஏற்படுத்தாது. சுருங்கக் கூறின், சுங்கத் தீர்வை இறக்குமதியினைத் தடைப்படுத்தும் அளவிற்கு அமையக் கூடாது. சுங்கத் தீர்வையின் அளவிற்கும் குறைவாகவே உள்நாட்டுப் பண்டங்கள் மீது விதிக்கப்படும் ஆயத் தீர்வை அமைதல் வேண்டும். இவ் விருவிதிகளும் நிறைவேற்றம் அடைந்தால், சுங்கத் தீர்வைக்குக் காப்பு விளைவும் (protective effect), வருவாய் விளைவும் (revenue effect) ஏற்படும்.

அரைகுறைச் சமநிலையில்[1] சுங்கவரி விதிப்பின் விளைவுகளை வரைபடம் 8.1 மூலம் விளக்குவோம். s s' உள்நாட்டு அளிப்புக்கோடாகும். இதனையே நீண்ட காலத்துச் சராசரிச் செலவுக் கோடு என்றும் குறிப்பிடலாம். DD' உள்நாட்டுத் தேவைக்கோடு. தடையிலா வாணிபமிலாத் தன்னிறைவுப் பொருளாதாரம் உள்ள நாட்டில், P_3 சுட்டிடும் விலையில் உள்நாட்டுத் தேவையும் அளிப்பும் சமமாகவிருக்கும். ஆனால் தடையிலா வாணிபத்தில், விலை P_1-க்கு விழுந்துவிடும்; உள்நாட்டு உற்பத்தி OM_1 ஆகவும், உள்நாட்டுத் தேவை OM_4 ஆகவும் மாறும்; இச் சூழ்நிலையில் இறக்குமதித் தேவை M_1M_4 ஆகும். இறக்குமதியாகும் பண்டத்தின் மீது சுங்கத் தீர்வையாக P_1P_2 விதிப்போம். இறக்குமதியின் அளிப்பு,

[1] பொதுச் சமநிலையில் (General equilibrium) வரி விதிப்பின் காப்பு, துய்ப்பு விளைவுகளைப் பற்றிய அழுத்தமான வரைபட விளக்கத்திற்கு, சார்லஸ் பி கிண்டில்பெர்கரின் 'பன்னாட்டு வாணிபம்' எனும் நூலில் ப. 107-109 காண்க.

P_1 விலையில் அளவிலியான நெகிழ்ச்சி (infinitely elastic) உடையது என எடுகோளிட்டுக் கொண்டால், சுங்கவரி வெளி நாட்டு வழங்கு விலையில் (foreign offer price) எவ்வித விளை வினையும் ஏற்படுத்தாது எனலாம். சுங்கத் தீர்வையின் (P_1P_2) விளைவாக உள்நாட்டுச் சந்தையில் விலை P_2 ஆக உயர்கிறது



வரைபடம் 8-1
அரைகுறைச் சமநிலையில் சுங்கவரி விதிப்பின் விளைவுகள்

எனக் கொள்வோம். இவ் விலையில் உள்நாட்டு உற்பத்தி M_1-ல் இருந்து M_2-விற்கு உயருகிறது. துய்ப்பு M_4-ல் இருந்து M_3-க்குக் குறைகிறது. இறக்குமதி M_1M_4-லிருந்து M_2M_3 ஆகக் குறைகிறது. உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு (M_1M_2) காப்பு விளைவினையும், R-எனும் செவ்வகம் வருவாய்

விளைவினையும், துய்ப்புக் குறைப்பு (M_3) துய்ப்பு விளைவினையும், நாற்கோண வரைவடிவம் (P_1P_2 la) மறுபகிர்வு விளைவினையும் வரைபடம் *8.1* தெரியப்படுத்துகிறது.

வருவாய் விளைவு (Revenue effect)

அரசாங்கம் பல பொதுக் காரியங்களை மேற்கொள்வதற்கு வரிமூலம் கிடைத்திடும் வருவாய்த் தேவை பண்டைக் காலத்திலிருந்தே வரிவிதிக்கும் நோக்கிற்கு வெளிநாட்டு வாணிபம் இலக்காகி வந்துள்ளது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் சுங்கத் தீர்வை மூலமே கணிசமான அளவிற்கு அரசுக்கு வருமானம் கிடைக்கிறது. பண்டங்கள் இறக்குமதியாகும் துறைமுகங்களில் வெளிநாட்டுப் பண்டங்கள் மீது விதிக்கப்படும் வரி சுலபமாக உடனுக்குடன் வசூலிக்கப்படும். உள்நாட்டு வர்த்தகத்தில் வரிவசூலிப்பு என்பது பல இடர்ப்பாடுகள் கொண்டது. சுங்கவரி விதிப்பிலும் வசூலிப்பிலும் நிருவாக எளிமையும் நிருவாக வசதியும் உண்டு.

வருவாய்க்குரிய சுங்கவரி விதிப்பில், காப்பு, மறுபகிர்வு விளைவுகளைக் காணமுடியாது. விதித்த வரியினை வெளிநாட்டு உற்பத்தியாளரே தாங்குகின்ற வகையில், அவ் வரியின் முழு அளவிற்கு வெளிநாடுகளில் விலை இறங்குவதாக இட்டுக் கொள்ளும் எடுகோளின் அடிப்படையில் துய்ப்பு விளைவும் ஏற்படாமல் போகலாம். உள்நாட்டில் உற்பத்தியாகாமல் இறக்குமதியாகும் பண்டங்கள்மீது விதித்திடும் சுங்கவரி, வருவாய் விளைவினை மட்டுமே உண்டாக்கும் என்பதனை முன்னரே கண்டோம். இறக்குமதி வரி விதித்ததுபோலவே உள்நாட்டுப் பண்டத்தின் மீதும் அதேயளவு ஆயத் தீர்வை விதித்தால், வருவாய் விளைவுமட்டுமே உண்டாகும் என்பதனையும் முன்னரே விளக்கியுள்ளாம். வரைபடம் *8.1*–ல், சுங்கத் தீர்வையை P_1P_3 அளவுக்கு விதித்தால், இறக்குமதி முழுதும் தடைபட்டுவிடுவதுடன், வருவாய் விளைவும் அற்றுப்போய் விடும். வரி P_1P_2ஆக இருக்கும் பொழுது, அதனை இறக்குமதியளவினால்(M_2M_3) பெருக்கக் கிடைக்கும் தொகையே வருவாய் ஆகும். வரைபடத்தில் செவ்வகம் R அதனைக் குறிக்கும்.

காப்பு விளைவு (Protective effect)

சுங்கத் தீர்வையின் விளைவாக உள்நாட்டு விளைவு P_2 அளவிற்கு உயர்ந்து, உள்நாட்டு உற்பத்தியும் M_1–ல் இருந்து M_2–க்கு உயருகிறது, இவ்வுற்பத்தி அதிகரிப்பே காப்பு விளைவு ஆகும். சுங்கத் தீர்வைக்கு ஏற்ப அமைகின்ற காப்பு

விளைவின் அளவு, அளிப்புக் கோட்டின் நெகிழ்ச்சியால் தீர்மானிக்கப்படுகிறது. நெகிழ்ச்சி மிக்க அளிப்பு அதிக அளவிற்குக் காப்பு விளைவினையும், நெகிழ்ச்சி குறைந்த அளிப்பு குறைந்த காப்பு விளைவினையும் தந்திடும். இறக்கு மதிகளை விலக்கி, உள்நாட்டுத் தேவையை முழுதும் பூர்த்தி செய்யும் அளவிற்கு உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கிடு வதற்குப் போதுமான அளவுள்ள காப்புவிளைவு கிட்டும் பொழுது, இறக்குமதிகளையே தடைப்படுத்தும் வகையில் சுங்கத் தீர்வை அமையும். வரைபடம் 8.1-ல், இறக்குமதிகளை முழுதும் விலக்கிடும் வகையில் அமைகின்ற குறைந்தபட்சச் சுங்கவரி P_1P_3 ஆகும்.

பணத்தின் மூலமும் காப்பு விளைவினை அளந்திட முடியும். வரைபடத்தில் உள்ளதுபோல, உள்நாட்டு உற்பத்தியாளரின் அதிகரித்த வருவாய், P_1P_2lb எனும் செவ்வகத்தின் மூலம் குறிக்கப்பட்டுள்ளது. அதில் a l b-எனும் முக்கோணப் பகுதி பண அளவில் காப்பு விளைவினைக் குறிக்கிறது.

இறக்குமதி வரிவிதிப்பிற்குப் பின்னர், விலை P_2-க்கு உயர்ந்துவிடுகிறது. வேறு தொழில்களில் இறுதிநிலை அலகு களாகப் பயன்படுகின்ற இயற்கைவளன்கள் அத் தொழில் களில் P_1 எனும் பழைய விலையில் பெற்றிடும் வரவு $OP_1 \times M_1M_2$, அதாவது, M_1M_2 a b எனும் செவ்வக அளவு வரவாகும். இவ் வளன்கள் P_2 எனும் புதிய விலையில் காப்புப் பெற்ற தொழிற்றுறைக்கு மாறுவதால், பொருளாதாரத்திற்குக் காப்பு விளைவினால் ஏற்படும் இழப்பு a l b எனும் முக்கோண அளவு ஆகும். காப்புப்பெற்ற தொழிற்றுறையைப் புதிதாகச் சென்றடைந்த இவ் வளன்கள் எவ்வித ஆதாயத்தினையும் பெறுதது ஒருபுறமிருக்க, திறமை குறைந்த புதுத்துறையில் அவற்றைப் பயன்படுத்துவது நாட்டின் பொருளாதாரத்திற்கு ஊறு செய்திடும்.

இறக்குமதித் தீர்வையின் காப்பு விளைவினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு மொத்தத்தில் இழப்பு ஏற்படினும், ஒரே மாதிரியான பொருளாதார நடவடிக்கையினை மேற்கொள்ளும் ஒரு பிரதேசத்திற்கோ அல்லது தொழிலுக்கோ நன்மைதான் ஏற்படும் .காப்புப்பெற்ற தொழிற்றுறையின் பண்டத்தின் விலை ஏறுதல் அத் துறைக்குக் குறுங்காலத்திலேனும் நன்மையே பயக்கும். திறமை குறைந்த தொழிலில் பயனாகிவரும் இயற்கை வளன்கள் காலப்போக்கில் திறமை மிகுந்த துறை நோக்கிச் செல்லும் வாய்ப்பினைப் பெறலாம். திறமை குறைந்த தொழி

லானாலும் காப்புப் பெற்றுள்ள காரணத்தினால் அவ் வளன்களுக்கு நன்மையே பயக்கும். காப்பு பெற்றுள்ள காலத்தில் அத் தொழிற்றுறைகள் சோம்பலின்றிப் பாடுபட்டு, வளர்ச்சி முகம் பெற்று, புதிய உற்பத்தி முறைகளைத் தயக்கமின்றி மேற்கொள்ளும்பொழுது, அவ் வளன்கள் அத் துறைகளில் பயனுவதில் இழப்பு ஏற்பட்டுவிடாது; நன்மையே ஏற்படும். காப்பு நீங்கும்பொழுது, உற்பத்தித் திறனில் உயர்வு ஏற்படும் வகையில் போட்டி நிலையின் தூண்டுதலும் துணை நிற்கும். சாதகமான இத்தகைய விளக்கங்கள் தரப்பட்டபோதிலும், இறக்குமதிப் பதிலித்தொழில்கள் (Import-substitution Industries) பொதுவாகவே திறமை குறைந்தே இருப்பனவென்றும், இத்திறமைக் குறைவினால் ஏற்படும் இழப்பினைச் சமாளிப்பது இன்னும் தொல்லை நிறைந்தது என்றும் கிண்டில்பெர்கர் சந்தேகிக்கிறார்.

துய்ப்பு விளைவு (Consumption effect)

இறக்குமதி வரி விதிப்பினால் ஏற்பட்ட துய்ப்பு விளைவு என்னவெனில், மொத்த துய்ப்பில் $M_3 M_4$ குறைந்துவிடும் என்பதுதான். இவ் வரி விதிப்பிற்கு முன்னர், துய்ப்போர் பெற்ற மொத்தப் பயன்பாடு, $OM_4P'_1D$; அதற்கான செலவு, $OM_4P'_1P_1$; ஆக, துய்ப்போர் எச்சப்பாடு (Consumer's surplus), $P_1P'_1D$ ஆகும். வரி விதிப்பிற்குப் பின்னர், துய்ப்போர் பெறும் மொத்த பயன்பாடு, $OM_3P'_2D$; அதற்கான செலவு, $MO_3P'_2P_2$; ஆக, துய்ப்போர் எச்சப்பாடு, $P_2P'_2D$ ஆகும். வரிவிதிப்பிற்குத் துய்ப்போர் எச்சப்பாட்டில் ஏற்பட்டுள்ள இழப்பு, $P_1P'_1D—P_2P'_2D = P_1P'_1P'_2P_2$ எனும் நாற்கோண வரைவடிவமாகும் (quadrilateral).

துய்ப்போர் எச்சப்பாட்டில் இழப்பு ($P_1P'_1P'_2P_2$) ஏற்பட்டபோதிலும், அதற்கு ஈடாக அரசாங்கத்திற்கு வருவாய் (revenue) $b\,c\,P'_2l$ எனும் செவ்வகமாகவும், உற்பத்தியாளக்கு உபரியாக $P_1a\,l\,P_2$ எனும் நாற்கோண வரைவடிவமாகவும் அமைந்துள்ளன. துய்ப்போர் எச்சப்பாட்டிலுள்ள இழப்பிலிருந்து அரசாங்க வருவாய், உற்பத்தியாளர் உபரி ஆகியவற்றைக் கழித்தபிறகு, மிஞ்சியுள்ள இழப்பு $a\,l\,b$, $P'_1P'_2c$ எனும் முக்கோணப் பரப்பளவுகளாகும். இவை தாம் சுங்கத்தீர்வைக்கு நாடு தரும் விலையாகும்.

மறுபகிர்வு விளைவு (Redistribution effect)

இறக்குமதிவரி விதித்த பிறகு, $P_1P_2l\,b$ – அளவிற்கு உற்பத்தியாளர் வருமானம் உயர்ந்துள்ளது. கடைசி அலகினைத் தவிர்த்த உற்பத்திச் செலவுக்கு மேல் கிடைத்த உபரியினை

$P_1 a P_2$ அளக்கிறது. துய்ப்போரிடமிருந்து உற்பத்தியாளர் பெற்ற பொருளாதார வாரமாக (economic rent) அவ்வுபரியினைக் கருதலாம். அல்லது, துய்ப்போர் எச்சப்பாட்டிலிருந்து கழித்து உற்பத்தியாளரின் உபரியுடன் சேர்த்துவிட்ட சேர்ப்பு (addition) ஆகவும் அதனைக் கருதலாம். இதனையே மறுபகிர்வு விளைவு என்கிறோம்.

வரைபடம் 8.1 காட்டுகின்ற மறுபகிர்வு விளைவு, உற்பத்தியாளருக்கு உயர்ந்த விலையையும், உயர்ந்த இலாபத்தினையும் அளிப்பதைக் குறிக்கிறது. உண்மை உலகில், இது காப்புவிளைவினை விட உயர்ந்தது. துய்ப்போர் எச்சப் உற்பத்தியாளரைச் சென்று அடைகின்ற மறுபகிர்வு விளைவினை அரைகுறை சமநிலை வரைபடம் (8.1) சுட்டிக் காட்டுகிறது. வெவ்வேறு பண்டங்களை உற்பத்தி செய்வதில் வெவ்வேறு வீதாச்சாரங்களில் ஈடுபட்டுள்ள உற்பத்திக் காரணிகளிடையே, சுங்கத்தீர்வை வருமானப் பகிர்வு செய்திடும். தடையிலா வாணிபம் அபரிமிதமாகக் கிடைத்திடும் உற்பத்திக் காரணியின் விலையினை உயர்த்தி, கிராக்கியாக உள்ள காரணியின் விலையைக் குறைத்துவிடுகிறது. இதற்கு நேர்மாறான விளைவினைக் காப்புவாணிபம் உண்டாக்கிவிடுகிறது.

வாணிப வீத விளைவு (Terms of trade effect)

காப்பு வாணிபத்திற்கு ஆதரவான வாணிப வீத வாதத்தினைச் சுருக்கமாகச் சென்ற அத்தியாயத்தில் விளக்கினோம். இப்பொழுது சுங்கத்தீர்வையின் வாணிப வீத விளைவினை ஆராய்வோம். இறக்குமதிவரி விதித்திடும் நாட்டிற்குப் பொதுவாகவெ வாணிப வீதம் சாதகமாகவே அமையும். இதனை விளக்கிட, அரைகுறைச் சமநிலைப் பகுத்தாய்வினையே பின்பற்றலாம்.

A, B எனும் இரு நாடுகளை எடுத்துக்கொள்வோம். குறிப்பிட்ட பண்டத்தின் உற்பத்தியில் A தராதரத் தகுதி குறைவாகவும், B அதிகமாகவும் பெற்றிருப்பதாகக் கொள்வோம். A, B-யிடமிருந்து அப் பண்டத்தை இறக்குமதி செய்து கொள்வோம். வரை படம் 8.2, வாணிபத்திற்கு முந்தியநிலை, தடையிலா வாணிபத்தினைக் கையாளும்போது இருக்கும் நிலை, சுங்கத்தீர்வை விதித்த பிறகு உள்ள நிலை ஆகிய மூன்று நிலைகளையும் விளக்கி, வாணிப வீத விளைவினைச் சுட்டிக்காட்டுகிறது. வாணிபத்திற்கு முந்தியநிலை என்ன? DD-தேவைக்கோடு, SS-அளிப்புக்கோடு, வாணிபத்திற்கு முந்திய சமநிலையினை B எனும் புள்ளி குறிக்கிறது.

இரு நாடுகளிடையே தடையிலா வாணிபம் அமைவதாகக் கொள்வோம். குறிப்பிட்ட பண்டத்தினை A உற்பத்தி செய்வதோடு அமையாது, B-யிடமிருந்தும் இறக்குமதியும் செய்கிறது. உள்நாட்டு அளிப்பு, B-யிடமிருந்து இறக்குமதியான



வரைபடம் 8-2 வாணிபவித விளைவு

அளவு ஆகிய இரண்டையும் சேர்த்து உண்டான அளிப்புக் கோடு Sf ஆகும். தடையிலா வாணிபச் சமநிலையினை F எனும் புள்ளி குறிக்கும். இதில் OP_1, பண்டத்தின் விலை; A–நாட்டில் துய்ப்பு OM_4 ஆகும். உள்நாட்டு உற்பத்தி, OM_1 ஆகும். B–நாட்டிலிருந்து இறக்குமதியாவது, M_1M_4 ஆகும்.

இறக்குமதி வரியினை A விதித்த பிறகு என்ன விளைவு ஏற்படும்? அளிப்புக்கோடு, S_{f+t} ஆகும். புதிய சமநிலை, T எனும் புள்ளியில் அமைகிறது. உள்நாட்டு விலை OP_2 ஆக உயருகிறது. விலை உயர்வு A-நாட்டின் துய்ப்பினை OM_3 அளவிற்குக் குறைந்தாலும், உள்நாட்டு உற்பத்தி OM_2-க்கு உயருகிறது. உள்நாட்டுத் துய்ப்பு குறைந்து, உற்பத்தி அதிகமானதால். B–யிடமிருந்து ஆகும் இறக்குமதி M_3M_3 ஆகக் குறை

கிறது. அதே வேளையில், அந்த வெளிநாட்டுப் (B) பண்டத்தின் அளிப்பு விலை OP_3 ஆக குறைகிறது. வாணிப வீதம் A-நாட்டிற்குச் சாதகமாகிறது.

A-நாடு, பண்டத்தின் ஒவ்வோரலகிற்கும் P_2P_3 வரி வசூலிக்கிறது. மொத்த வரி வசூலிப்பு TYKG ஆகும். A-நாட்டுத் துய்ப்போர், தடையிலா வாணிபத்தின்போது பண்டத்திற்குக் கொடுத்த விலையைவிட வரி விதித்த பிறகு கொடுக்கின்றனர் என்றாலும், B-நாட்டு உற்பத்தியாளருக்குக் குறைவாகவே கொடுக்கின்றனர் எனலாம். துய்ப்போர் நலனுக்கு இதனால் ஏற்படும் இழப்பினைப் பெருமளவிற்கு வருவாய் விளைவு ஈடு செய்துள்ளது. B-நாட்டின் அளிப்பு நெகிழ்ச்சி குறைந்ததாகவும், A-நாட்டின் தேவை நெகிழ்ச்சி மிக்கதாகவும் இருப்பின், சுங்கத் தீர்வை பெருமளவிற்குக் காப்பு தந்திடாது. அதாவது இறக்குமதிகள் வெகுவாக மாறிவிடமாட்டா. ஆனாலும் இறக்குமதிகளை மலிவான விலைக்கு A-நாடு வாங்கிடலாம். இந்த வகையில் வாணிக வீதம் A-நாட்டிற்குச் சாதகமாகிவிடும்.

பொதுவான சில உண்மைகளையும் விதிகளையும் இங்கு வழங்குவோம். உலக அரங்கில் முக்கியமான பாத்திரம் பெற்றிருக்கும் நாடு, சுங்கத் தீர்வையைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்தப் பன்னாட்டு வாணிபத்திலிருந்து ஆதாயத்தினை நல்ல வண்ணம் பற்றிட முயலலாம். வெளிநாட்டு அளிப்புக் கோடு நெகிழ்ச்சி குறைந்ததாகவும், திருப்பித் தாக்குவதுபோல் வெளிநாடும் எதிரீட்டுக் காப்புவரி போடாத நாடாகவும் இருப்பின், முதலில் குறிப்பிட்ட நாடு சுங்கத் தீர்வையை நாசுக்காகப் பயன்படுத்த முடியும். அப்பொழுதுதான் வாணிப வீதமும் அந் நாட்டிற்குச் சாதமாக அமையும்.

போட்டி விளைவு (Competitive effect)

சுங்கத் தீர்வைமூலம் அயல்நாட்டுப் போட்டி தவிர்க்கப்பட்டால், உள்நாட்டுத் தொழில் மந்தமடைந்து, சோம்பலுறுகிறது. வெளிநாட்டுப் புத்தாக்கத்தின்மூலம் வரவேற்கத்தக்க மாற்றங்கள் நிகழுவதைக் காப்பு பெற்ற தொழில் தடுத்திடும். விரும்பத்தக்க மாற்றங்கள் நிகழாவண்ணம் இருக்க வேண்டி, உள்நாட்டுத் தொழில்கள் இறக்குமதி வரியை விதிக்கவோ அல்லது அதனை நீட்டிக்கவோ அரசாங்கத்தினைத் தூண்டும். கிண்டெல்பெர்கர் குறிப்பிடுவது போல, "சுங்கத் தீர்வையின் போட்டி விளைவு எனப்படுவது உண்மையில் போட்டிக்கு எதிரான விளைவே; சுங்கத் தீர்வையினை நீக்குவது மூலமே போட்டியை உற்சாகப்படுத்த முடியும்."

போட்டி விளைவு பற்றிய வரலாற்று நிலையினைக் காண்போம். இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் இடையில் 1860-ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கையானது தொழில் புரட்சிக்கு பிரான்சை இழுத்துச் சென்றது: குறிப்பாக, ஆடை நெசவில் கைத்தறி நீங்கி விசைத்தறி செல்வாக்குப்பெற்றது. ஐரோப்பிய பொதுச் சந்தை (European Common Market) உண்டான பிறகு, பிரான்சு போன்ற நாடுகளில் சர்வாதீனம் உடையலாயிற்று. பொதுச் சந்தை நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், பிரான்சில் ஓரிரு திறமைமிக்க பெறும் நிறுவனங்கள் திறமை குறைந்த சிறு நிறுவனங்களையும் உள்ளடக்கி உயரமான விலைக் குடையைப் (high, price umbrella) பிடித்தன. அன்னியப் போட்டி குறைந்திருந்தமையால் இச் சர்வாதீன நிலை. சுங்கச் சுவர்கள் சரிந்தவுடன், சிறிது நிறுவனங்கள் பெரிய, திறமையான நிறுவனங்களுடன் இணைய வேண்டிய கட்டாயநிலை வந்தது; அல்லது தாமாகவே ஒன்றிணைந்து பெரிய நிறுவனங்களாக மாற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. இறக்குமதிப் பண்டங்களுடன் போட்டியிடும் சக்தி பெற்ற பெரும் நிறுவனங்கள் விலைகளைக் குறைக்கவும் முடியும்; திறமை குறைந்த சிறிய நிறுவனங்களை அகற்றிடவும் முடியும்.

வருமான விளைவு (Income effect)

சுங்கவரி விதித்த பின்னர் வெளிநாட்டில் செலவழிக்கும் வாய்ப்பு நசித்துப் போய்விடுகிறது. இதற்குப் பொருள், உள்நாட்டில் சேமிக்கப்படும் என்பதன்று; உள்நாட்டில் பெருமளவிற்குச் செலவழிக்கப்படும் என்பதுதான். வேலை நிறைவு குறைந்துள்ள சூழ்நிலையில், இத்தகைய உள்நாட்டுச் செலவழிப்புப் பண வருமானத்தையும் உண்மை வருமானத்தையும் வேலையினையும் பெருக்கிடும். வேலை நிறைவே நிலவும்பொழுது இச் செலவழிப்புப் பணவீக்கத்தினைத் தூண்டி, பண வருமானத்தைப் பெருக்கிவிடும். ஆனால், மூலவளன்களின் பகிர்வு மாற்றப்படுவதால் உண்மை வருமானம் குறைந்துவிடலாம். மூலவளன்கள் வேலையற்றிருக்கும் பொழுது, உள்நாட்டுச் செலவழிப்பையும் நாட்டு வருமானத்தையும் சுங்கத்தீர்வை உயர்த்திவிடும். அண்டை நாட்டினை வறுமைக்குள்ளாக்கும் கைக்கோளே இது. இறக்குமதி வரிவிதித்த நாட்டில் அதிக அளவில் செலவழிப்பது என்பது இதுவரை ஏற்றுமதி செய்துவந்த வெளிநாட்டில் செலவழித்ததைக் குறைப்பது என்றே பொருள்படும். இதன் விளைவாக, உள்நாட்டில் வருமானமும் வேலையும் பெரு

கும்போது, (ஏற்றுமதி செய்துவந்த) வெளிநாட்டில் அவை குன்றத் தொடங்குகின்றன. எனவே, சுங்கத் தீர்வையின் வருமான விளைவுகள் போற்றுதற் குரியதாகவில்லை.

அயல்நாட்டுச் செலுத்துநிலை விளைவு (Balance of payment effect)

அயல்நாட்டுச் செலுத்துநிலை விளைவு, பணவருமான விளைவு போல அவ்வளவு தெளிவு உடையதன்று. சுங்கத் தீர்வையின் விளைவால் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படக்கூடிய மாற்றம் அவ்வப்பொழுது எழுகின்ற நிலையைப் பொறுத்தது. சுங்கவரி விதித்தவுடனேயே இறக்குமதிகள் குறையலாம். இது உடனடி விளைவாக இருக்கலாமே தவிர, நிலையான விளைவு எனக்கொள்ள முடியாது. இறக்குமதியின் அளவு குறைவது உள்நாட்டாரின் தேவை நெகிழ்ச்சியைப் பொறுத்தது என்பது தெரிந்த கருத்தே.

தேவை நெகிழ்ச்சி மிக்கதாக இருப்பின், விலை உயர்ச்சியின் காரணமாக உள்நாட்டினர் வாங்கிடும் இறக்குமதிகள் வெகுவாகக் குறைந்துவிடும்; நெகிழ்ச்சி குறைந்திருப்பின், இறக்குமதிக்காகும் செலவு முன்னிலும் அதிகமாகும். இறக்குமதிக்காகும் பணச் செலவு அதிகரித்தாலும், வரி விதிப்பின் காரணமாக அவ்வதிகரிப்பு சொந்த அரசாங்கத்திற்குக் கிடைக்குமேயன்றி, வெளிநாட்டு ஏற்றுமதியாளருக்கன்று. எனவே அயல்நாட்டுச் செலுத்துநிலையில் விரும்பத்தக்க விளைவே ஏற்படலாம்.

சுங்கவரி சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்குயென ஜெனீவாவில் அமைக்கப்பட்ட அமைப்பு GATT என அழைக்கப்படும். சுங்கவரி-வாணிபம் குறித்த பொது உடன்பாடு (General Agreement on Tariffs and Trade) என்று விரிந்த பொருள் கொண்ட பெயர் அது. இந்த உடன் படிக்கையின்படி, அயல்நாட்டுச் செலுத்துநிலையில் உள்ள நெருக்கடியைக் காரணமாகக் காட்டி எந்த நாடும் சுங்கவரியைக் குறைப்பதற்கு மறுப்பு தெரிவிக்கக் கூடாது. நாடுகள் ஒன்றுக்கொன்று ஒத்தாசை செய்துகொள்ளும் வகையில் இறக்குமதிவரி குறைப்பைக் கடைபிடிக்க வேண்டும். சுங்கத்தீர்வை, அயல் நாட்டுச் செலுத்துநிலை மீது பக்க விளைவுகளையே உண்டாக்கும். ஆனால் முக்கியமாக இயற்கை வளன்களைப் பல்வேறு துறைகளுக்கிடையே திறமையுடன் பகிர்ந்தளிப்பதில் சுங்கத்தீர்வையின் விளைவினைக் காணலாம். அயல்நாட்டுச் செலுத்து நிலையினைத் திறமையுடன் கையாள்வதற்கு, சுங்கத்தீர்வை

யைவிடத் தொகுதிப் பொருளாதார கைக்கோளினைப் (macro-economic policy)பயன்படுத்துவதே சிறந்தது எனலாம். அயல் நாட்டுச் செலுத்து நிலையில் ஏறபடும் நெருக்கடிக்குத் தீர்வு காண, சுங்கத்தீர்வை மூலம் இயற்கை வளன்களின் பகிர்வில் குறுக்கிடுவது தேவையில்லை என்றும், இதனைக் கடைசியில் மேற்கொள்ள வேண்டிய முறை என்றும் பொருளாதார நிபுணர்கள் கருதுகிறார்கள். ஆனல், அயல்நாட்டுச் செலுத்து நிலையை ஒழுங்குபடுத்துவதற்குச் சுங்கத்தீர்வையேசிறந்தமுறை என்பது பேராசிரியர் ஜே. கென்னத் கால்பிரெய்த் (J. Ke.ineth Galbraith) அவர்களின் கருத்தாகும்.

விலை விளைவு (Price effect)

இறக்குமதி வரி விதித்த பிறகு, விலை உயராது இருக்கலாம்; அப்படி உயர்ந்தாலும் வரி விதித்த அளவிற்கு உயராதிருக்கலாம். வரி விதித்த நாட்டிலிருந்து வரி விதிக்கப்பட்ட பண்டம் ஏற்றுமதியானுல் விலை உயர்வு ஏற்படாது. போக்குவரத்துச் செலவு நீக்கப்பட்டு, உலக விலையும் உள்நாட்டு விலையும் சமமாக இருக்கும். காப்பின் காரணமாக உள்நாட்டு விலை உயர்ந்தால், உள நாட்டு விலையும் வெளிநாட்டு விலையும் சமமாகும் வரையில், ஏற்றுமதிகள் குறையவும் உள்நாட்டு விற்பனைகள் உயரவும் ஆனநிலையே நிலவும். வெளிநாட்டு ஏற்றுமதியாளர் வரி முழுவதையும் தாங்கிக்கொண்டால், விலை உயராது. இது வரி விதிக்கும் நாடு மற்ற நாடுகள் மீது செலுத்தும் ஆதிக்கத்தைப் பொறுத்தது.

பொதுவாகவே சுங்கத்தீர்வை விதித்தாலே காப்புபெற்ற பண்டத்திற்குத் துய்ப்போர் அதிக விலை கொடுக்க நேரிடுகிறது. இறக்குமதி செய்யும் நாட்டில் விலை எவ்வளவு ஏறும், ஏற்றுமதி செய்யும் நாட்டில் விலை எவ்வளவு குறையும் என்பதனைக் கணக்கிட வேண்டும். இறக்குமதி நாடு, ஏற்றுமதி நாடுகளிடையே வரியின் அளவிற்கு விலை வேற்றுமை நிலவுமா என்பதனையும் நோக்க வேண்டும். குறிப்பிட்ட தொழில் விளைவு விதிகளுக்குக் (laws of returns) கட்டுப்படுவதைப் பொறுத்தே முடிவு எடுக்க முடியும். இரு நாடுகளிலும் கடத்துச் செலவு (transport cost) கிடையாது என்றும், ஒரே மாதிரியான செலவுநிலைகளே (cost conditions) நிலவுவதாகவும் எடுகோளிட்டுக் கொள்வோம்.

வெளிநாட்டு உற்பத்தி மாருச் செலவு விதிக்குக் (law of constant cost) கட்டுப்பட்டு இருப்பதுடன், வெளிநாட்டு உற்பத்திச் செலவு இறக்குமதி செய்திடும் நாட்டின் உற்பத்திச்

செலவைவிடக் குறைவாக யிருப்பின், இறக்குமதி நாடு தனது தேவை முழுவதையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தே தீர்த்துக்கொள்ளும். இறக்குமதி நாடு விதித்திடும் இறக்குமதி வரி, இரு நாடுகளின் உற்பத்திச் செலவு வேறுபாட்டிற்குக் குறைவாக இருப்பின், இறக்குமதிகள் குறையும்; வெளிநாட்டு உற்பத்தி சுருங்கும்; உள்நாட்டு விலையும் வரியளவிற்கு உயரும். இறக்குமதி வரி உற்பத்திச் செலவு வேறுபாட்டிற்குச் சமமாகவோ அல்லது அதற்குக் கூடுதலாகவோ இருப்பின், இறக்குமதி முழுதும் தடைப்படும்; உள்நாட்டு விலையில் ஏற்படும் அதிகரிப்பு, உற்பத்திச் செலவு வேறுபாட்டின் அளவிற்கு இருக்கும்.

இப்பொழுது வெளிநாட்டு உற்பத்தி வளர்ந்துசெல் செலவு விதிக்குக் (law of increasing cost) கட்டுப்படுவதாகக் கொள்வோம். இறக்குமதி நாடு, இறக்குமதி வரி விதிப்பின் என்ன நேரிடும்? வெளிநாட்டு உற்பத்தியாளருக்கு விற்பனை குறையும்; வெளிநாட்டு உற்பத்தி குறைந்து, உற்பத்திச் செலவும் குறையும்; எனவே இறக்குமதி விலை குறைகிறது. புதிதாகக் குறைந்துள்ள இறக்குமதி விலையுடன் வரியையும் கூட்டினால் கிடைப்பது புதிய உள்நாட்டு விலை. வெளிநாட்டு விலையினவிட இப் புதிய உள்நாட்டு விலை வரியின் அளவிற்கு உயர்ந்துள்ளது. எனினும், இப் புதிய உள்நாட்டு விலை, வரி விதிப்பிற்கு முன்னர் இருந்த விலையைவிட வரியின் அளவிற்கு உயர்ந்துள்ளது என்று கூற முடியாது. உற்பத்தியில் வளர்ந்து செல் செலவு நிலவும்பொழுது, இறக்குமதி நாட்டில் உற்பத்தி பெருகப் பெருக விலையும் செலவும் ஏறிக்கொண்டே போகும்; ஏற்றுமதி நாட்டில் உற்பத்தி சுருங்கச் சுருங்க செலவும் குறைந்து, விலையும் குறையும். வரி விதிப்பிற்குப் பின்னர், உள்நாட்டு விலைக்கும் வெளிநாட்டு விலைக்கும் இடையில் உள்ள வேறுபாடு வரியின் அளவிற்குச் சமமாக இருக்கும். இவ் வேறுபாடு இன்னும் அதிகமாக இருப்பின், மேலும் இறக்குமதியாதல் இலாபகரமானதே. இறக்குமதி பெருகும்பொழுது உள்நாட்டு விலை இன்னும் குறையும். இரு நாடுகளிடையே விலை வேறுபாடு குறையும்பொழுது, இறக்குமதி குறையத் தொடங்கும்; உள்நாட்டு விலை ஏறும்.[2]

[2] ஹேபர்லர் (Haberler): 'பன்னாட்டு வாணிபக் கோட்பாடு' (The Theory of International Trade). இதில் 11, 15-ஆம் அத்தியாயங்கள் பயனுடையவை.

எல்ஸ்வர்த் (Ellsworth): 'பன்னாட்டுப் பொருளாதாரம்.' (International Economics) மூன்றும் அத்தியாயத்தில் இரண்டாம் பகுதி காண்க.

இப்பொழுது மூன்றுவது செலவு நிலையினை எடுத்துக் கொள்வோம். ஏற்றுமதி, இறக்குமதி நாடுகளிரண்டிலும் உற்பத்தியில் குறைந்துசெல் செலவு விதி (law of decreasing cost) நிலவுவதாகக் கொள்வோம். இறக்குமதி செய்திடும் நாட்டில் இறக்குமதி வரி விதிக்கப்படுவதாகக் கொள்வோம். இதனுல் ஏற்றுமதி நாட்டின் ஏற்றுமதிகள் குறைந்து, அதன் காரணமாக அந் நாட்டு உற்பத்தியாளர்களின் உற்பத்தி குறையவே, உற்பத்திச் செலவு ஏறத் தொடங்கும். அவ் விலையில் இறக்குமதி நாட்டின் தேவையும் ஏற்றுமதி நாட்டின் ஏற்றுமதியும் ஏறத்தாழச் சமமாக இருக்கும். ஏற்றுமதி நாட்டில் உற்பத்திச் செலவு உயர்ந்துவிட்ட அளவிற்குப் பண்டத்தின் விலையும் உயர்ந்துவிட்டதாகக் கொள்வோம். இறக்குமதி நாட்டில் அதே யளவிற்குப் பண்டத்தின் விலை உயர்ந்து, மேலும் வரியளவிற்கும் விலை அதிகரிக்கும். ஆக, குறைந்து செல் செலவில் உற்பத்தியாகும் பண்டத்தின் மீது சுங்கவரி விதிக்கப்பட்ட பின்னர், இறக்குமதி நாட்டில் பண்டத்தின் விலை சுங்க வரிக்குமேல், உற்பத்தி குறைப்பின் காரணமாக ஏற்றுமதி நாட்டில் செலவு உயர்ந்துள்ள அளவிற்கு விலை உயரும். குறைந்துசெல் செலவு என்பது தற்காலிகமான நிலையெனில், இவ்வாதம் சரிதான். அகச் சிக்கனங்களில் விளையும் குறைந்துசெல் செலவு போட்டி நிலைக்கு ஒத்துவராது. இறக்குமதி வரி விதித்திடும் நாட்டில், குறிப்பிட்ட பண்டத்தினை உற்பத்தி செய்திடும் தொழிலில் சர்வாதீனப் போக்கு நிலவினுலோ அல்லது வரியின் காரணமாகவே சர்வாதீனப் போக்கு புதிதாக ஏற்பட்டலோ, சுங்கத்தீர்வை சர்வாதீனத்தை மேலும் பலப்படுத்தவே செய்யும். வரியின் அளவிற்கு விலை உயருமா என்பது, உயர்ந்தபட்ச நிகர வருவாயைப் பெறுவதற்கு அமைந்திடும் சர்வாதீன நிலையைப் பொறுத்ததாகும்.

ஏற்றுமதி வரிகள்

ஏற்றுமதி வரிகளை வெளிநாட்டு இறக்குமதியாளர்கள், வெளிநாட்டுத் துய்ப்போர் தாங்களே ஏற்றுக்கொள்கின்றனர் என்ற பொதுவான அபிப்பிராயம் பத்தொன்பதாம் நூற்றுண்டில் நிலவியது. ஆனுல், ஏற்றுமதி பாதிக்கப்படுகிறது என்பது முதலில் உணரப்படவில்லை.

ஏற்றுமதி வரிகளின் குறிக்கோள் அரசாங்க வருவாயைப் பெருக்குவதுதான். பொறிவழிப் பண்டங்களை ஏற்றுமதி செய்திடும் தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளில் ஏற்றுமதி வரிகள் செல்வாக்குப் பெறவில்லை. ஏனெனில், பொறிவழிப் பண்டங்

களின் விற்பனைக்கு நாடுகள் தழுவிய அனைத்துலகச் சந்தை தேவை. ஏற்றுமதி வரி, விற்பனையைப் பாதிக்கும். ஏற்றுமதி வரியைவிட மொத்த விற்பனையின் மூலமே வருமானப் பெருக்கம் கணிசமான அளவிற்கு இருக்கும்.

ஏற்றுமதி வரிகளுக்குச் செல்வாக்கு, ஆதாரப் பண்டங்களையும் இயற்கை வளன்களையும் ஏற்றுமதி செய்திடும் பின் தங்கிய விவசாய நாடுகளில்தான் உண்டு. உள்நாட்டு வருமானம், உற்பத்தி, இலாபம் முதலானவற்றின்மீது வரிகள் போட்டுத் திறமையுடன் வசூலித்திடும் வலிமை மிகு நிர்வாக இயந்திரத்தைப் பின்தங்கிய நாடுகள் பெற்றிருக்கவில்லை. வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது வரி விதித்து வசூலிப்பது இத்தகைய நாடுகளுக்கு எளிதாக அமைந்துள்ளது. பின் தங்கிய நாடுகளில் பெரும்பகுதி வருமானம் பணரீதியாக இல்லாததாலும், வருமான–உற்பத்தி–இலாபம் மீது வரிவிதிப்பிற்கு ஏற்ற முறையில் சரியான கணக்கு வழக்கு வைத்துக்கொள்ளும் அளவுக்கு மக்கள் அறிவு பெருததாலும், கிராமங்களிலும் குக்குராமங்களிலும் மக்கள் கூட்டம் பரவிச் சிதறிக் கிடப்பதாலும், வருமானம் மீதும், உற்பத்தி மீதும், ஆதாயம் மீதும் போடப்படும் வரிகளை வசூலிப்பதற்கு ஆகும் செலவு மிகவும் உயர்ந்து விடுவதாலும் உள்நாட்டு வரிவிதிப்பு திறம்படச் செயல்படுவதில்லை. ஆனால், ஏற்றுமதி வரிகளைத் துறைமுகங்களில் மட்டுமே வசூலிக்க வேண்டும். இதற்கு எளிய நிர்வாகம் போதும்.

உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குப் பாதுகாப்பு தரும் நோக்கத்துடனும் ஏற்றுமதி மீது வரிகள் விதிக்கப்படலாம். கச்சாப் பொருள்கள் மீது ஏற்றுமதி வரியினை மிகவும் ஏற்றி, வெளிநாட்டு உற்பத்தியாளர்களுக்கு அவற்றைக் கிராக்கியாக்கி, உள் நாட்டு உற்பத்தியாளர்கள் அக் கச்சாப் பொருள்களை நல்ல வண்ணம் பயன்படுத்த ஊக்குவிக்கலாம். சில வேளைகளில் காலனிகளின் போட்டியிலிருந்து தமது உள்நாட்டுத் தொழில்களைக் காத்துக்கொள்ளும் நோக்கத்துடன் தாய்நாடு தனது ஆதிக்கத்தின் கீழுள்ள காலனிகளை ஏற்றுமதி வரி விதிக்கும்படிக் கட்டாயப்படுத்துவதும் உண்டு. தீர்ந்துவிடக் கூடிய இயற்கை வளன்களைச் சேமித்து, உள் நாட்டுத் தொழிலுக்குப் பயன்படுத்துவதற்கென ஏற்றுமதி வரிகளைச் சில வேளைகளில் போடுவதுமுண்டு. ஏற்றுமதி வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாடுகளுக்காகும் செலவினை ஈடுகட்டவும் ஏற்றுமதி வரி விதிப்பதுண்டு.

குறைந்த அளிப்புள்ள பண்டங்களுக்கு வெளிநாட்டாரிட மிருந்து அதிக விலை பெற்றிடும் நோக்குடனும் ஏற்றுமதி வரிகள் விதிப்பதுண்டு.

போட்டி நிலவும்பொழுது, ஏற்றுமதி செய்யும் நாட்டின் உற்பத்தியாளர்களே ஏற்றுமதி வரியின் பளுவைத் தாங்க வேண்டும். உலகச் சந்தையில், மற்ற நாடுகள் எந்த விலையில் விற்கிறார்களோ அந்த விலைக்குமேல் வரிவிதித்திடும் நாட்டின் உற்பத்தியாளர்கள் தங்கள் பண்டங்களை விற்றிட முடியாது. வரி விதித்திடும் நாட்டின் ஏற்றுமதியாளர்கள் தங்கள் பண்டங்களை உலக விலையைவிட குறைந்த விலையிலேயே விற்பர். அவ்வாறு விலையில் ஏற்படும் குறைவு வரியின் அளவிற்கு இருக்கும். இவ்வாறு குறைந்த விலையில் ஏற்றுமதி யாளர்கள் பண்டத்தை விற்கும்பொழுது, இலாபமும் குறைந்து உற்பத்தியும் ஏற்றுமதியும் குறைந்துவிடும்.

வரி விதித்திடும் நாட்டின் உற்பத்தியாளர்களே உலகச் சந்தையைத் தங்கள் பண்டங்களைப் பொறுத்தவரையில் ஆதிக்கம் செலுத்திடும் பிரதான விற்பனையாளர்களாகவிருந்து, அவர்கள் உற்பத்தி செய்திடும் பண்டத்தின் அளிப்பும் நெகிழ்ச்சி மிக்கதாக இருந்தால், ஏற்றுமதி வரியின் ஒரு பகுதியை இறக்குமதி செய்திடும் நாட்டின் துய்ப்போரே ஏற்றுக் கொள்ள நேரிடும். வரி விதித்திடும் ஏற்றுமதி நாட்டில் எந்த அளவிற்குப் பண்டத்தின் அளிப்பு நெகிழ்ச்சி மிக்கதாக இருக் கிறதோ அந்த அளவிற்கு அப் பண்டத்திற்கு உற்பத்தியா ளர்கள் (ஏற்றுமதியாளர்கள்) பெற்றிடும் நிகர விலையில் ஏற்படும் குறைப்பும் சிறிய அளவினதாகவே இருக்கும். இது போலவே, உலக விலையில் ஏற்படும் அதிகரிப்பும் பெரிய அளவினதாக இருக்கும். நிகர விலை குறைகளினால் உற்பத்தி குறையலாம். குறைந்த உற்பத்தி மீண்டும் விலை யேற்றத்தை உண்டாக்கலாம். இவ் விளைவுகளெலாம் அளிப்பு எந்த அளவிற்கு நெகிழ்ச்சி மிக்கதாக உள்ளதோ அதனைப் பொறுத் ததாகும். அளிப்பு நெகிழ்ச்சி குறைந்தாகவிருப்பின், உலக விலையின் உயர்ச்சி குறைவாகவும், ஏற்றுமதி நாட்டின் உற்பத் தியாளர்கள் பெற்றிடும் விலையில் ஏற்படும் குறைப்பு பெரிய அளவினதாகவும் இருக்கும்.

ஏற்றுமதி நாட்டின் பண்டத்திற்குள்ள உலகத் தேவையை நோக்குவோம். உலகத் தேவையின் நெகிழ்ச்சி எந்த அளவுக்கு மிகுந்திருக்கிறதோ அந்த அளவிற்கு உலக

விலையேற்றம் குறைந்த அளவினதாகவும், ஏற்றுமதி நாட்டின் உற்பத்தியாளர்கள் பெற்றிடும் விலையில் ஏற்படும் குறைப்பு பெரிய அளவினதாகவும் இருக்கும். உலகத் தேவை நெகிழ்ச்சி யுடையதாகவிருப்பின், சிறிய விலையேற்றம் கூட தேவையைக் கணிசமான அளவிற்குக் குறைத்திடும். தேவையில் ஏற்படும் குறைவு மீண்டும் விலையைக் கீழிறக்கும். நெகிழ்ச்சியற்ற தேவை நிலவும் பொழுது மேலே கூறிய விளைவுகளுக்கு மாறான விளைவுகளே ஏற்படும்.

ஊடு சுங்கவரி (Transit duty)

மெர்க்கண்டலிச காலத்திலும் 19-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் ஊடு சுங்கவரி செல்வாக்கு பெற்றிருந்தது. அக் காலத்தில் போக்குவரத்து வசதிகள் குறைவு என்பதால், குறைந்த தூரம் கொண்ட குறுக்குப் பாதைமூலம் பண்டங்களை வேறு நாடுகளுக்கு அனுப்புகின்ற முறை செல்வாக்கு பெற்றிருந்தது. பூகோள ரீதியாகச் சாதகமான வகையில் அமைந் திருந்த நாடுகள் தங்களுடைய எல்லைகளைக் கடந்து பண்டங்கள் வேறு நாடுகளுக்குச் செல்லும்பொழுது, ஊடுசுங்க வரிகள் விதித்தனர். காலப் போக்கில் போக்குவரத்து வசதிகள் நல்ல வண்ணம் உயர்ந்து, பெருகிய பிறகு ஊடுசுங்க வரியின் செல் வாக்குக் குறையத் தொடங்கியது. மேலும், பன்னாட்டுப் பொரு ளாதார ஒத்துழைப்பு என்பது நாளாவட்டத்தில் கருத்தளவிலும் செயல் உருவிலும் செல்வாக்குப் பெறத் தொடங்கியவுடன், ஊடுசுங்க வரிக்கு மதிப்பு குறையத் தொடங்கியது. தேவை, அளிப்பு ஆகியவற்றின் நெகிழ்ச்சியைப் பொறுத்து இறக்குமதி நாட்டின் துய்ப்போரோ அல்லது ஏற்றுமதி நாட்டின் உற்பத்தி யளரோ ஊடு சுங்கவரியின் சுமையினைத் தாங்குவர்.

உதவிக் கொடைகள் (Subsidies)

உதவிக் கொடைகள்மூலம் ஒரு நாட்டின் தொழில்கள் பெற்றிடும் காப்பு (protection) மற்ற எல்லா காப்பு முறை களையும் விடச் சிறந்தது எனலாம். ஏனெனில், சுங்கவரியின் பளுவும் கிடைப்புப் பங்கின் (quotas) சுமையும் வெளிக்குத் தெரியாமல் மறைந்திருக்கும்பொழுது, உதவிக் கொடையால் ஏற்படும் சுமை வரி செலுத்துவோருக்கு நன்கு புரியும். வெளிக்குத் தெரியாத சுமையாக இருப்பதால், சுங்கவரியையும் கிடைப்புப் பங்கினையும் தவறாகப் பயன்படுத்திடும் வாய்ப்பு நிறைய உள்ளது. இந்த அளவிற்கு உதவிக் கொடையைத் தவறான வழிகளில் பயன்படுத்த முடியாது; அப்படிப் பயன் படுத்தினால் அது வெளிப்பட்டுவிடும்.

வேறு ஏற்றுமதித் தொழில்களுக்குப் பயன்படுகின்ற பண்டங்களை உற்பத்தி செய்திடும் தொழில்களுக்கு உதவிக் கொடை வழங்குதல் நலன் பயக்கும். ஆனால் சுங்கத்தீர்வையும், கிடைப்புப் பங்குகளும் பண்டத்தின் விலையை உயர்த்திவிடுவதுடன் ஏற்றுமதித் தொழில்களையும் வெகுவாகப் பாதித்திடும். இவ்வுண்மையும் உதவிக் கொடையின் மேன்மையை விளக்குகிறது. நெகிழ்ச்சி மிக்க தேவையுள்ள பண்டங்களை உற்பத்தி செய்திடும் தொழில்களுக்கும் வழங்கிடும் உதவித் தொகை பயனுடையதே. இத் தொழில்களுக்கு சுங்கத்தீர்வை விதித்தாலோ அல்லது "கோட்டா" முறை வழங்கினாலோ என்ன விளைவு ஏற்படும்? விலை ஏறும்; சந்தை சுருங்கும்; தொழில்களின் இலாபம் குறையும்; உள்நாட்டு உற்பத்தியாளர்கள் அத் தொழில்களை விட்டுவிலக முனைவர். இவ்வுண்மையும் உதவிக் கொடையின் தராதரச் சிறப்பினை வெளிப்படுத்துகிறது.

சுங்கத் தீர்வையின் விளைவாக, இறக்குமதி செய்யப்படும் பண்டத்தின் விலையேற்றத்தினால் உண்டாகின்ற சுமையினைப் பகிர்வதில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படும்; சில துறைகளில் சுமை அதிகமாகவும் வேறு சில துறைகளில் குறைந்தும் அமைந்திட நேரிடும். ஆனால், உதவிக் கொடை வழங்குவதற்குத் தேவைப்படும் நிதி அரசாங்கத்தின் பொது வருவாயிலிருந்து எடுக்கப்படுவதால், அதனால் ஏற்படும் சுமையினைச் சமூகத்திலுள்ள எல்லா வகுப்பினரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர். இது உதவிக் கொடையின் சிறப்பினைச் சுட்டிக் காட்டியபோதிலும், இவ் வாதத்தில் ஒரு கீறல் இருக்கிறது. சமத்துவக் கண்ணோட்டம் உள்ள வரி விதிப்பு முறையாக இருந்தால்தான் இவ் வாதம் எடுபடும். ஆனால், பின் தங்கிய நாடுகளின் வரி விதிப்பு முறை பெரிதும் சமூக ஏணியில் கீழ்த் தளத்தில் உள்ள வர்க்கத்தினரையே பாதிக்கிறது.

பொதுவாக இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இறக்குமதிப் பண்டங்களின் விலையை ஏற்றி, பணவீக்க விளைவுகளை உண்டாக்குகின்றன. ஆனால், உதவிக் கொடைகள் இத் தகைய விளைவுகளை உண்டாக்குவதில்லை. உதவிக் கொடைக்குச் சாதகமான இவ் வாதம்கூட சரியில்லை. ஏனெனில், உதவிக் கொடைகள் வழங்குவதற்கு நிதி சேர்த்திடும் வகையில் வரி விதிப்பு முறை திருத்தம் பெறும்பொழுது பணவீக்க விளைவுகள் ஏற்படமாட்டா என்று பாவிப்பது பொருத்த முடையதன்று.

வளர்ச்சி குறைந்த நாடுகளில் உள்நாட்டுத் தொழி களுக்குப் பாதுகாப்புக் தருவதற்கென உதவிக் கொடைகள் அளிப்பது எதிர்பார்த்திடும் பலனை அளிப்பதில்லை. காரணம் விலைகுறைவாக உள்ளது என்பதனாலோ அல்லது தரம் உயர்ந் துள்ளது என்பதனாலோ வெளிநாட்டுப் பண்டங்களை வளர்ச்சி குறைந்த நாடுகளின் மக்கள் நாடவில்லை. ஓரளவிற்கு வெளி நாட்டுப் பண்டங்களின் தரம் உயர்ந்துள்ளது ஒரு காரணம் என்றாலும், வெளிநாட்டுப் பண்டங்கள்மீது இனம் தெரியாத பற்று, காரணம் புரியாத ஒரு விருப்பத்தேர்வு (preference) மக்களிடத்தில் நிலவுவதால் உதவிக் கொடையின் பலன் கணிசமான அளவிற்கு உயர்ந்திருப்பதில்லை.

சுங்கத்தீர்வை, கோட்டாக்கள் ஆகியவற்றைவிட உதவிக் கொடைகள் சிறப்புமிக்கதாக இருப்பினும், வளர்ச்சி குறைந்த நாடுகளில் அவ்வுதவிக் கொடைகள் நடைமுறைக்கு ஒத்துவரமாட்டா. வளர்ச்சிகுறைந்த நாடுகளில் தொழிலாளர் பயிற்சி, போக்கு வரத்து வளர்ச்சி போன்ற பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான நிதியினை வரிவிதிப்பு மூலமே திரட்டுவது தொல்லையாக இருக்கும்பொழுது, உதவிக்கொடை வழங்குவதற்கு நிதி திரட்டுவது என்பது எவ்வளவு கடினமானது என்பதனை எண்ணிப் பார்க்கவேண்டும். உதவிக்கொடை முறையை மட்டும் தனியாகப் பயன்படுத்தாமல் வேறு முறை களுடன் பொருத்தமான முறையில் இணைத்துப் பயன் படுத்தினால் நலன்பயக்கும். ஏற்றுமதித் தொழில்களுக்குத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்திடும் தொழில் களுக்கும், நெகிழ்ச்சி மிகுந்த தேவையுள்ள பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கும், நாம் மேலே விளக்கி யுள்ளது போல, உதவிக்கொடைகள் வழங்கிடும்பொழுது, அவற்றிற்கான நிதியினைச் சுங்கத் தீர்வை மூலமே அடைந்திடும் வண்ணம் தொழில்களுக்குக் காப்பு அளித்திடும் முறைகளை இணைத்துப் பயன்படுத்தலாம்.

9. கிடைப்புப் பங்குகள் ("கோட்டாக்கள்")

(Quotas)

இலக்கணமும் குறிக்கோள்களும்

காப்பு வாணிபத்தைச் செயலில் நிலை நிறுத்துவதற்குச் சுங்கத்தீர்வை போலவே 'கோட்டாக்கள்' எனப்படும் கிடைப்புப் பங்குகள் முறையும் ஒன்றுள்ளது. குறிப்பிட்ட கால அளவிற்குள்ளாகவே இறக்குமதி செய்யப்படும் பண்டத்தின் அளவு அல்லது மதிப்பின் மீது கட்டுப்பாடு விதித்து இறக்குமதியை அனுமதிக்கின்ற முறைக்குக் கிடைப்புப் பங்கு முறை என்று பெயர். அது போலவே ஏற்றுமதியை அனுமதிக்கின்ற முறைக்கும் கிடைப்புப் பங்கு முறை என்று பெயர். கோட்டாக்களைச் சட்டப்படி நிர்ணயிப்பதும் உண்டு; மற்ற நாடுகளுடன் வர்த்தக உடன்பாட்டின் நிர்ணயிப்பதும் உண்டு.

ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் ஒழுங்குபடுத்துவதே கிடைப்புப் பங்கு முறையின் அடிப்படைக் குறிக்கோளாகும். அயல்நாட்டுச் செலுத்துநிலையின் சமநிலையின்மையைப் போக்குவதற்கென இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த நேரிடின், கிடைப்புப் பங்கு முறையைப் பயன்படுத்தலாம். குறிப்பிட்ட சில நாடுகளிடமிருந்து அபரிமிதமாக இறக்குமதி செய்திருந்து. அதன் காரணமாக அயல்நாட்டுச் செலுத்துநிலையின் சம நிலையின்மை ஏற்பட்டிருந்தால், அதனைப் போக்க அந் நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்தும் வகையில், கிடைப்புப் பங்கு முறையைப் பிரயோகிக்கலாம். வெளிநாட்டுப் போட்டியைக் கட்டுப்படுத்தி உள்நாட்டுத் தொழில்களுக்குப் பாதுகாப்புத் தந்திடவும், மந்த காலத்தில் ஏற்படும் விலைச் சரிவினைத் தடுத்து நிறுத்திட இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த வேண்டியும் கோட்டா முறையைப் பின்பற்றுவது உண்டு. தங்களுடைய ஏற்றுமதிகளுக்கு வெளிநாட்டுச் சந்தைகளைக் கவரும் நோக்குடனும் வெளிநாடு

களுக்கு இறக்குமதி கோட்டா வழங்குதல் உண்டு. வெளி நாட்டினர் இறக்குமதிக் "கோட்டா" முறையைப் பிரயோகித்து இறக்குமதியைக் கட்டுப்படுத்தவோ அல்லது தடைபடுத்தவோ முயன்றால், நாமும் அதே காரியத்திற்காக அதே முறையில் இறக்குமதி "கோட்டாவை"ப் பிரயோகம் செய்திடலாம். பன்னாட்டு வாணிப உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதற்கு கிடைப்புப் பங்கு முறை எளிதான ஒன்றாகும். மேலும் சுங்கவரி விதிப்பு மசோதா நிறைவேறப் போவதை முன் கூட்டியே மோப்பம் பிடித்து, அவசர அவசரமாக ஊக வாணிப அடிப் படையில் இறக்குமதிகளைப் பெருமளவில் மேற்கொள்வதைத் தடுத்திடப் பயன்படும் உறுதி வாய்ந்த கருவியே கோட்டா முறையாகும். சுருங்கக் கூறின், கோட்டா எனும் கிடைப்புப் பங்கு முறை ஒரு நெருக்கடி நடவடிக்கையே! அது உறுதி யுடன் செயல்பட வேண்டுமெனில், துரிதமாக அதனை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

கிடைப்புப் பங்குகளை நிர்ணயித்தல்

பண்டத்தின் அளவின் அடிப்படையிலோ மதிப்பின் அடிப்படையிலோ மதிப்பின் அடிப்படையிலோ அல்லது இவ்விரண்டின் அடிப்படையிலோ கிடைப்புப் பங்கினை நிர்ணயிக்கலாம். எந்த அடிப்படையில் கிடைப்புப் பங்கினை நிர்ணயிக்க வேண்டும் என்பது பண்டத்தின் தன்மையையும் கோட்டாமுறையின் குறிக்கோளையும் பொறுத்தது. அயல் நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நீக்குவதுதான் முக்கிய குறிக்கோள் எனில், மதிப்பின் அடிப் படையில் கிடைப்புப் பங்கினை நிர்ணயித்தலே ஏற்புடைத்து. அன்னியச் செலாவணி தேவை குறித்துச் சரியான மதிப் பீட்டினை இது அளிக்கும். மாறாகப், பண்டத்தின் அளவின் அடிப்படையில் கிடைப்புப் பங்கு நிர்ணயம் பெற்றால் என்ன நேரிடும்? திடீரென இறக்குமதியின் விலை உயர்ந்தாலோ அல்லது எதிர்பாராமல் விலையில் சரிவு ஏற்பட்டாலோ இறக்குமதிக் கட்டுப்பாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படும் பலன் கிட்டாது. தக்கபலன் விளையவேண்டுமெனின், அயல்நாட்டுச் செலுத்து நிலையிலுள்ள பற்றாக்குறையை நீக்கும் வகையில் அதே மதிப்பளவிற்குச் சமமாக உள்ள இறக்குமதியை வரை யறுத்து கிடைப்புப் பங்கு முறையை உபயோகிக்க வேண்டும். மாறாக, நாட்டின் தேவைக்குத் தக்கவாறு இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் பண்டத்தின் அளவின் அடிப் படையிலே கிடைப்புப் பங்கு முறையினை நிர்ணயிக்க

வேண்டும். உதாரணமாக, நாட்டின் உணவுத் தேவையைக் கணக்கிட்டு அதிலிருந்து உள்நாட்டு உற்பத்தியைக் கழித்துக் கிடைத்திடும் மீதியின் அளவிற்கு இறக்குமதியைக் கட்டுப் படுத்த கோட்டாமுறையைப் பின்பற்றலாம். இறக்குமதியின் அளவைக் கட்டுப் படுத்தும் பொழுது, உள்நாட்டு உற்பத்தி யாளருக்கு வெளி நாட்டிலிருந்து இறக்குமதியாக அனுமதிக்கப் பட்ட அளவு தெரிவதால், அதற்கு ஏற்றவாறு அவர்கள் உள்நாட்டு உற்பத்தியைச் சரி செய்து கொள்ள முடிகிறது. இறக்குமதியின் மதிப்பினைக் கட்டுப்படுத்தும் ''கோட்டா'' முறையைப் பின்பற்றும் பொழுது, இறக்குமதியாளர்கள் மலிவான சந்தையிலிருந்து இறக்குமதி செய்து தங்கள் இறக்குமதி கோட்டாவைப் பூர்த்தி செய்ய முற்படுவர்.

கிடைப்புப் பங்குகளில் பல வகைகள் உண்டு. சுங்கத் தீர்வைக் கோட்டாக்கள் (tariff quotas), முழுமைக் ''கோட்டாக்கள்'' (absolute quotas), மறைமுகக் ''கோட் டாக்கள்" (indirect quotas), உலகு தழுவிய ''கோட்டாக்கள்'' (global quotas) என்ற பலவகைத்தாய கிடைப்புப் பங்குகள் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன என்பதனைச் சற்று ஆராய்வோம்.

பலவகையான ''கோட்டாக்''களிலும் சுங்கத்தீர்வை ''கோட்டாவே'' நீண்ட, நெடிய வரலாறு உடையது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடைப்பட்ட காலத்தில் பல ஐரோப்பிய நாடுகளில் குறைந்த அளவில் எல்லைப்புற வர்த் தகத்தை வளர்த்துப் பேணுவதற்கு இச் சுங்கத்தீர்வை கோட்டா பயன்பட்டது. இச் சுங்கத்தீர்வை கோட்டா முறையின் கீழ், சுங்கவரி விதிக்கப்படாமலோ அல்லது குறைந்த வரிக்கோ குறிப்பிட்ட அளவிற்குப் பண்டம் இறக்குமதி செய்யப்படும். இவ்வளவிற்கு மேல் இறக்குமதியாகும் பண்டத்தின் மீது மிக உயர்ந்த இறக்குமதிவரி விதிக்கப்படும். இவ்வாறு அளவு வரையறுத்த கோட்டாவும் சாதாரண சுங்கவரி முறையும் இணைக்கப் பெற்ற முறைக்கே சுங்கத் தீர்வைக் ''கோட்டா'' என்று பெயர். இதற்கு மாறுபட்ட முழுமை கோட்டா முறையில், வரையறுக்கப் பெற்ற அளவிற்கு மேல் இறக்குமதி செய்ய முடியாது. ஏற்றுமதி நாடுகளுக்கும் இறக்குமதி நாடு களுக்கும் இடையே நிலவும் விலை வேறுபாட்டிற்கும் குறைவான இறக்குமதிவரி விதிக்கப்பட்டிருந்தால், சுங்கத்தீர்வை கோட்டா முறைப்படி, கூடுதலான இறக்குமதிகள் வரும். அப்பொழுது, இறக்குமதி நாட்டில் தேவைவிலை இறங்கியும், ஏற்றுமதி

நாட்டில் அளிப்பு விலை ஏறியும் இறுதியில் அவ்விரு விலைகளும் உயர்ந்த இறக்குமதி வரி வீதத்திற்குச் சமமாகிவிடும். இக் கட்டத்தை அடைந்தவுடன் மேலும் இறக்குமதிகள் செய்யப் படமாட்டாது. சுங்கத்தீர்வை கோட்டா முறையினால் ஏழை மக்களுக்குப் பயனில்லை. உயர்ந்த இறக்குமதி வரியினை அவர் களால் செலுத்தமுடியாது. உயர்த்த வரிவீதத்தில் கூடுதலாக இறக்குமதி செய்யப்படும் பண்டங்களை வாங்கிடும் வசதி செல்வம் படைத்தோருக்கே உண்டு. வரி இல்லாமலோ அல்லது குறைந்த வரி வீதத்திலோ இறக்குமதி செய்யப்படும் கிடைப்புப்பங்கு அளவினை மேலும் மேலும் குறைத்தும், உயர்த்த வரிவீதத்தில் இறக்குமதி செய்யப்படும் பண்டத்தின் அளவை அதிகரித்தும் அரசு தனது வருவாயைப் பெருக்கிக் கொள்ள முயலும். விலையுயர்ந்த சொகுசுப் பொருள்களை உயர்ந்த இறக்குமதி வரி செலுத்திப் பெற்றிடும் வசதி பணம் படைத்தோருக்கே உண்டு. இதனால், சேர்க்கப்படவேண்டிய அன்னியச் செலாவணி விரயமாக்கப்படும். வளர்ச்சித் திட்டத் திற்குத் தேவையான பண்டங்களை இறக்குமதி செய்திட அன்னியச் செலாவணி பயன்படாமல் போய்விடும். சுங்கத் தீர்வை "கோட்டா" முறையினை நல்ல வண்ணம் அரசு பயன் படுத்தாமையினால் ஏற்படும் விளைவுகளே மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. எனினும், சந்தைக்குரிய தேவை, அளிப்பு போன்ற சக்திகள் எவ்விதத் தடையுமின்றி ஓரள வேனும் இயங்குவதற்குச் சுங்கத்தீர்வை "கோட்டா பயன் படுகிறது. சில வேளைகளில், கிடைப்புப்பங்கு அளவிற்கும் கூடுதலான இறக்குமதிகளுக்கு விதிக்கப்படும் சுங்கவரி மிகவும் உயர்ந்து உள்ளதால், அவற்றை இறக்குமதி செய்ய முடியாமல் போவதுமுண்டு இத்தகைய சூழ்நிலைகளில் சுங்கத் தீர்வை "கோட்டா"விற்கும் முழுமை "கோட்டா"விற்கும் வேறுபாடு இல்லாது போய்விடும்.

சில நிகழ்வினங்களில், இறக்குமதியாளருக்கு அல்லாமல் உள்நாட்டு உற்பத்தியாளருக்குக் கிடைப்புப்பங்கு வழங்குதல் உண்டு. இறக்குமதி செய்யப்படும் கச்சாப் பொருள்களுடன் உள்நாட்டு கச்சாப் பொருள்களை ஒரு குறிப்பிட்ட குறைந்த பட்ச அளவிற்கு இணைத்திடவேண்டும் என்ற அரசாங்க விதியின் அடிப்படையில் உள்நாட்டு உற்பத்தியாளருக்குக் கிடைப்புப்பங்கு வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்பெறும் "கோட்டாக்"களுக்கு மறைமுக "கோட்டாக்கள்" எனப் பெயர்.

வெளிநாட்டு அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி எவ்வித உடன்பாடும் செய்து கொள்ளாமல், குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக இறக்குமதி செய்யவேண்டிய பண்டத்தின் அளவினை முழுமையாக வரையறுத்துக் கொள்வதையே ஒரு முக இறக்குமதிக் கோட்டா (unilateral import quota) எனலாம். இவ்வாறு வரையறுக்கப்படும் கோட்டாவினை உலகு தழுவிய "கோட்டா" என்றும் குறிப்பிடலாம். இம் முறையின்படி "கோட்டா"வின் அளவிற்கு உலகில் எந்த நாட்டிலிருந்தேனும் பண்டத்தை இறக்குமதி செய்து கொள்ளலாம். கோட்டா அளவு முழுதும் தீரும் வரையில் இறக்குமதியாளர்கள் எந்த நாட்டிலிருந்தும், எவ்வளவுவேண்டுமானாலும் இறக்குமதி செய்து கொள்ளலாம். இந்த முறையின்படி, ஏற்றுமதி நாடுகளுக்கோ அல்லது இறக்குமதியாளர்களுக்கோ தனித் தனியே கிடைப்புப் பங்குகளை வழங்குவதில்லை.

உலகு தழுவிய கோட்டா முறையில் ஒரு நன்மை உண்டு. எந்த நாட்டிலிருந்தேனும் கிடைப்புப்பங்கு அளவிற்கு இறக்குமதி செய்து கொள்ளும் சுதந்திர வாய்ப்பு இருப்பதால், வெளிநாட்டு ஏற்றுமதியாளர்களிடையே நிகழும் போட்டியில் விளையும் பயனைப்பெறும் வாய்ப்பு உள்நாட்டு இறக்குமதியாளருக்கு உண்டு. உலகு தழுவிய "கோட்டா" முறை, ஒரு ஏற்றுமதி நாட்டிற்குச் சாதகமாகவும், பிறிதொரு நாட்டிற்கு பாதகமாகவும் இயங்கிடாது. அதாவது, ஏற்றுமதி நாட்டையும் வேற்றுமைப்படுத்துதல் கிடையாது. ஆனலும் இக் 'கோட்டா' முறையில் சில குறைபாடுகளும் உண்டு.

சுங்கச்சாவடிகள் பல இருப்பதால், தினந்தோறும் மொத்தம் எவ்வளவு இறக்குமதியாகிறது என்பதனைக் கணக்கிடுவது கடினம். இதனல், சுங்கத்தீர்வை அதிகாரிகள் உணருவதற்கு முன்னரே உண்மையான இறக்குமதியளவு கிடைப்புப் பங்களவினை மீறிவிடும். இறக்குமதிமூலம் கிடைப்புப் பங்கை நிரப்புவதற்குக் காலக்கெடு கொடுக்கப்பட்டிருந்த போதிலும், எடுத்த எடுப்பிலேயே இறக்குமதியாளர்கள் கிடைப்புப்பங்கை நிரப்பிட அவசரப்படுகிறார்கள். இதனல் திடீரென இறக்குமதித் தேவை உயருவதால் விலை உயர்ந்து, கிடைப்புப் பங்கு முறையைப் பின்பற்றும் நாட்டிற்கு வாணிப வீதம் பாதகமாகி விடுகிறது. துவக்கத்திலேயே கிடைப்புப் பங்கின் அளவிற்கு அவசர அவசரமாக இறக்குமதி செய்தால், அப் பண்டங்களை முழுதும் பயன்படுத்தி முடியும் வரையில் அவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்து வைக்க வேண்டிய செலவு கணிசமான அளவிற்கு இருக்கும். ஆனல், கொடுக்கப்பட்டுள்ள கால

அளவிற்குள்ளாக கிடைப்புப் பங்கின் அளவு முழுவதையும் கொஞ்சம் கொஞ்சமாக-படிப்படியாகக் காலக்கெடு தீர்வ தற்குள் இறக்குமதி செய்தால், பாதுகாத்து வைக்க வேண்டிய அவசியமிராது; செலவுமிராது.

மேலும், கிடைப்புப் பங்கு தீருவதற்கு முன்னர் இறக்குமதி செய்திட வேண்டும் என்ற அவசரத்தில், எந்த நாட்டில் மலிவான விலைக்குப் பண்டம் கிடைத்திடும் என்பதனைக் கண்டு பிடிப்பதற்கும், திறமை வாய்ந்த பேரத்தை நிகழ்த்துவதற்கும் இறக்குமதியாளர்களுக்கு நேரம் போதிய அளவிற்குக் கிடைப்பதில்லை. உலகம் தழுவிய 'கோட்டா' என்று வருணிக்கப்பட்டாலும், தொலைவில் உள்ள நாடுகளைவிட அருகிலுள்ள நாடுகளிடமிருந்தே கிடைப்புப் பங்கினை நிரப்புவதற்கு இறக்குமதி செய்துகொள்வது சௌகரியமாக இருக்கிறது என்று கருதப்படுகிறது. எனவே, தொலைவிலுள்ள நாடுகளை வேற்றுமைப்படுத்துதல் (discrimination) என்னும் நிலை உலகு தழுவிய 'கோட்டாவில்' உள்ளது :எனலாம். சில நேரங்களில் இறக்குமதியாளர்கள் வெளிநாட்டு உற்பத்தியாளருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு பண்டங்களை இறக்குமதி செய்திட முனையும் நேரத்தில், அறிவிக்கப்பட்ட கிடைப்புப் பங்கு முற்றுப்பெற்று விட்டது என்று அதிகாரபூர்வமான செய்தி வந்திடும். ஒப்பந்தம் செய்துகொண்டபடி இறக்குமதி செய்ய முடியாமல் போகும். இதனால் இறக்குமதியாளருக்கு இழப்பு ஏற்படும். உலகு தழுவிய 'கோட்டா' பற்றிய அறிவிப்பு வந்தவுடன் இறக்குமதிகள் பெருகி, விலைகள் குறைகின்றன. கிடைப்புப் பங்கு முடிந்தவுடன், பண்டங்களை இறக்குமதி செய்து தேக்கி வைத்திருப்போர் கடிதில் விலையினை ஏற்றுகின்றனர். கிடைப்புப் பங்கு பற்றிய அறிவிப்பு வந்தவுடன் பண்டங்களின் விலை ஏறுவதும் அதே பண்டத்தை உற்பத்தி செய்திடும் உள்நாட்டு உற்பத்தியாளரைப் பாதிக்கிறது. விலையில் ஏற்படும் சரிவு, உள்நாட்டு உற்பத்தியை ஆதாயமற்றதாக்கிவிடுகிறது. ஆக, உலகு தழுவிய 'கோட்டா' முறை உள்நாட்டு உற்பத்தியாளருக்குக் காப்புத் தருவதற்குப் பதிலாகக் கேடு சூழச் செய்கிறது. விட்டுவிட்டு செயல்படுத்தப்படாமல் சீரான முறையில் இயக்கப்படுகின்ற காப்பே பெரும் பயனளிக்கக் கூடியது.

கிடைப்புப் பங்குகளைப் பகிர்தல்

மொத்தக் கோட்டாவைப் பகிர்ந்து கொடுத்தல் என்பது இரு வகைப்படும். ஒன்று, ஏற்றுமதி நாடுகளிடையே பகிர்ந்தளிப்பது. உலகு தழுவிய கோட்டா முறையிலுள்ள குறை

பாடுகளின் காரணமாகவே, அதற்குப் பதிலாக ஏற்றுமதி நாடுகளிடையே கோட்டாவைப் பகிர்ந்தளிக்கின்ற முறை நடைமுறைக்கு வந்தது. இம் முறையிலும் சில குறைகள் தென்படுகின்றன. முதலாவதாக, மொத்தக் 'கோட்டாவை' ஏற்றுமதி நாடுகளிடையே பகிர்ந்து அளித்திருப்பதால், அப் பகிர்வின் படியே இறக்குமதி செய்ய வேண்டியது கட்டாயமாகிவிட்டது. இதனுல் சில நாடுகளின் கிடைப்புப் பங்குகள் நிறைவு பெறுகின்றன; சிலவற்றின் கிடைப்புப் பங்குகள் மீறப்படுகின்றன. சில நாடுகளின் கிடைப்புப் பங்குகள் முழுவதும் பயன்படுத்தப்படாமல் பாதியில் நின்றுவிடுகின்றன. இரண்டாவது குறைபாடு என்னவென்ருல், மொத்த 'கோட்டாக்களில்' தங்களுக்கும் கிடைப்புப் பங்குகள் நிர்ணயிக்கப்பட்டுவிட்டன என்ற தெம்பின் காரணமாக சில ஏற்றுமதி நாடுகள்—குறிப்பாகக் கணிசமான அளவிற்குக் கிடைப்புப் பங்குகளைப் பெற்றுள்ள ஏற்றுமதி நாடுகள், சர்வாதீனப் போக்கினைக் கடைப் பிடிக்கின்றன.

பேராசிரியர் ஹேபர்லர் அவர்களுடைய கருத்தின்படி, அதிக விலை கூறி ஏலம் எடுப்போருக்கு லைசென்சு வழங்குதல், 'கோட்டாவை'ப் பகிர்ந்தளிக்கும் முறைகளுள் ஒன்று. இது ஒரு சிறந்த, ஊழலற்ற முறையாகும். லஞ்சத்திற்கோ சலுகை காட்டுதலுக்கோ இதில் இடமில்லை. திறமை மிகுந்தோரே அதிக ஏல விலை கூறி கிடைப்புப் பங்கினைப் பெற முடியும் என்று நம்பப்படுகிறது. உள்நாட்டு விலைக்கும் இடையிலே உள்ள வேறுபாட்டிலிருந்து கிடைத்திடும் ஆதாயம் வர்த்தகர்களைச் சென்றடைவதில்லை; அரசாங்கத்திற்கே சேரும். இவ்வாறு ஏலத்திற்கு விடப்படும் 'கோட்டா' முறையில், சில இறக்குமதியாளருக்கோ—ஏற்றுமதியாளருக்கோ சலுகைகள் காட்டப்பட்டன என்ற குற்றச்சாட்டிற்கே இடமில்லை.

கிடைப்புப் பங்குகளை ஏலத்திற்கு விடும் முறையின் வெற்றி, வணிகரிடையே ஏலத்தை எடுப்பதில் ஏற்படும் போட்டியைப் பொறுத்ததாகும். வளர்ச்சி குறைந்த நாடுகளில் இறக்குமதியாளர்கள் குறைவாக இருப்பதால், அவர்கள் ஒன்று சேர்ந்து ஏலத்தின் போட்டி சார்ந்த குறிக்கோளையே தோற்கடித்துப் பெரும் ஆதாயத்தை ஈட்டுகின்றனர். இதனுல் அரசாங்க வருவாய் குறைகிறது; துய்ப்போருக்கும் நன்மை கிட்டவில்லை. ஏலம் முடிந்த பிறகு, தங்கள் விருப்பப்படி ஏலமெடுத்த இறக்குமதியாளர்கள் விலையை ஏற்றுகின்றனர். ஏற்றுமதி நாட்டின் அளிப்பு விலை, இறக்குமதி நாட்டின்

தேவை விலை, அடுத்தடுத்து நடந்திடும் ஏலங்களில் விலையில் ஏற்படும் திருப்பங்கள் ஆகியவற்றைப் பொறுத்து இறக்குமதி யாளர்களுக்கு இலாபமே ஏற்படுகிறது. விலையில் நிலையா மையும் ஏற்படுகிறது. நிலையற்ற விலைப் போக்குள்ள இந்த ஏல முறையினை உணவுப் பண்டங்கள், மருந்துகள், இயந் திரங்கள், முக்கிய கச்சாப் பொருள்கள் போன்ற அவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதில் பின்பற்றக் கூடாது. ஏனெனில், இப் பண்டங்கள் துய்ப்போருக்குக் குறைந்த விலையில் கிடைத்திட வேண்டும்; அல்லது உற்பத்தியாள ருக்குக் குறைந்த விலையில் கிடைந்திட வேண்டும். வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குத் தேவையில்லாத ஆடம்பரப் பொருள் களின் இறக்குமதியில் இந்த ஏல முறையைப் பின்பற்றலாம்.

லைசென்சு எனும் வாணிப இணக்க ஆணை முறை மூல மாகவும் கிடைப்புப் பங்கினை நிர்வாகம் வழங்குதலுண்டு. இறக்குமதியாளர்கள் கிடைப்புப்பங்கு அனுமதி கோரி விண்ணப்பித்துக் கொள்வார்கள். தகுதியின் அடிப்படையில் இறக்குமதியாளர்கள் நிர்வாகத்திடமிருந்து கிடைப்புப்பங்கு அனுமதி பெறுவார்கள். கிடைப்புப்பங்கு நிர்வாகத்தின் திறமையை வாணிப இணக்க ஆணை முறை உயர்த்துகிறது. ஒவ்வோர் இறக்குமதியாளனுடைய பத்திரங்களைப் பார்வை யிட்டுத் தகுதியின் அடிப்படையில் இணக்க ஆணை வழங்குவது நிர்வாகத்திற்கு எளிய முறைதான். கிடைப்புப்பங்கு காலவரை யறைக்குள் இறக்குமதியை நிரவிவிடுவது லைசென்சு எனும் இணக்க ஆணை முறையில் எளிது. இதனால் விலையில் திடீர் திடீரென ஏற்ற இறக்கங்கள் ஏற்படுவதில்லை.

கடந்த சில ஆண்டுகளில் ஒவ்வோர் இறக்குமதியா ளரும் எவ்வளவு இறக்குமதி செய்திருக்கிறார்கள் என்பதனைக் கணக்கிட்டு, இறக்குமதி வாணிபத்தில் அவருடைய பங்கு என்ன, திறமை என்ன என்பதனையும் நிதானித்து, அந்த அடிப் படையில் அரசு கிடைப்புப் பங்கு அனுமதிகளை இறக்குமதி யாளருக்கு அளித்திடும். கடத்த காலப் பணியின் அடிப் படையில் நன்கு நிருவகிக்கப்பெறும் இறக்குமதி நிறுவனங் களே பெரும்பாலும் வாணிப இணக்க ஆணை பெறுகின்ற வாய்ப்பு உண்டு. புதிதாகத் துவக்கப்படும் இறக்குமதி அமைப்புகள் வாணிப இணக்க ஆணை பெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. கடந்த காலப் பணியின் அடிப் படையில் இணக்க ஆணை வழங்குகிற முறையின் காரணமாகப் புதிய இறக்குமதியாளருக்கு வாய்ப்பில்லை என்பது புதிய

திறமைகளுக்கு ஊக்கமளித்தல் இல்லை என்றுகிறது. இதனுல் ஊன்றிய நலமிகளுக்கே (vested interest) வாய்ப்பு பெருகு கிறது. மேலும், போட்டி தடுக்கப்பட்டுச் சர்வாதீனம் மேலோங் குகிறது.

கடந்த காலப் பணியின் பின்னணியில் லைசென்சு வழங் குகிற முறையில் இன்ஞெரு சிக்கலும் உண்டாகிறது. மாமூலா கவே கிடைப்புப் பங்கு பெறுகின்ற நிறுவனங்கள், இறக்குமதி செய்வதோடு உள் நாட்டு உற்பத்தியாளரிடமிருந்தும் பண்டத்தினை வாங்குகிருர்கள். இறக்குமதி செய்திடும் அளவை விட உள்நாட்டில் வாங்கிடும் அளவு ஏதேனும் ஓரிரு ஆண்டு களில் உயர்ந்துவிட்டால், அந்த அடிப்படையில் வருகின்ற ஆண்டுகளில் அந்த நிறுவணங்களின் இறக்குமதிக் 'கோட் டாக்களை'க் கூடுமான வரையில் பெருக்கிக் கொள்ளவே விரும்பும். கிடைப்புப் பங்குகள் குறைந்துவிடாது இருக்க வேண்டும் என்பதற்காக வேண்டி, உள்நாட்டில் வாங்கிடும் அளவினை இறக்குமதியாளர்கள் குறைத்துக் கொள்வார்கள். உள்நாட்டு உற்பத்தி இதனுல் பாதிக்கப்படுகிறது. இந் நிலைக்கு மாற்று என்னவென்ருல், கடந்த காலப் பணியினைக் கணக் கிடும்பொழுது வளர்ச்சிப் பாதையில் செல்லும் இறக்குமதி நிறுவனங்களுக்கு அதிக அளவு கிடைப்புப் பங்கும் வளர்ச்சி தேய்கின்ற நிறுவனங்களுக்குக் குறைந்த அளவு கிடைப்புப் பங்கும் வழங்கிடும் முறையில் நிருவாகம் இணைக்க ஆணை முறையினை வகுத்திடலாம். இறக்குமதி வாணிபத்தில் புதிதாக நுழையும் நிறுவனங்களுக்கும் இணக்க ஆணை வாய்ப்பு ஒரு குறிப்பிட்ட வீதத்தில் அளித்திடலாம்.

சில வேளைகளில் இறக்குமதி நாடு, வாணிப இணக்க ஆணை வழங்கும் அதிகாரத்தை ஏற்றுமதி நாடுகளின் அரசுகள், உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதியாளர்களிடம் கொடுத்து விடுவதுமுண்டு. சலுகை காட்டுதல், வேற்றுமைப் படுத்துதல் போன்ற குற்றச்சாட்டுகளிலிருந்து இறக்குமதி நாடுகள் தப்பித் துக்கொள்வதற்கு இந்த முறை அனுகூலமாயிருக்கும். இறக் குமதி வாணிபத்தைவிட ஏற்றுமதி வாணிபம் செறிவு மிக்கதாக இருப்பின், ஏற்றுமதி நாடு மேற்கொள்ளும் கிடைப்புப் பங்கு கட்டுப்பாடு நிர்வாகம் இறக்குமதி நாட்டினுடைய நிர்வாகத் தைவிட சிக்கனம் நிறைந்ததாகவும், திறமை மிகுந்ததாகவும் இருக்கும். 'கோட்டா' லைசென்சு வழங்குதலை ஏற்றுமதி நாடு களே மேற்கொள்ளும்பொழுது, அதனைத் தங்களுக்குச் சாதக மாகவே பயன்படுத்திக் கொள்ளும். ஏற்றுமதி நாட்டின் அளிப்பு விலைக்கும் இறக்குமதி நாட்டின் தேவை விலைக்கு

மிடையில் உள்ள வேறுபாட்டினால் கிடைத்திடும் ஆதாயத்தை ஏற்றுமதி நாடுகளே அனுபவித்திடும். இறக்குமதி நாடுகளின் கோட்டா நிருவாகத்தில் ஏற்றுமதி நாடுகள் கலந்துகொள்வது, ஏற்றுமதி நாடுகளுக்கே ஆதாயம்; இறக்குமதி நாடுகளுக் கன்று. எனவே, தங்களுடைய சொந்த நலன்களையும் பாது காத்துக்கொள்ள விரும்பிடும் இறக்குமதி நாடுகள், ஏற்றுமதி நாடுகள், ஏற்றுமதி நாடுகளுக்குச் சில நிபந்தனைகளை விதித் திடும். அவை பின்வருமாறு :– (1) ஒப்புக்கொள்ளப்பட்ட கிடைப்புப் பங்கை மீறி ஏற்றுமதி செய்திடக்கூடாது. (2) இறக் குமதி நாட்டின் தேவையை அனுசரித்து, கிடைப்புப் பங்கிற் கென ஒதுக்கப்பட்டுள்ள கால வரம்பிற்குள் ஏற்றுமதிகளைச் சமமாக நிரவுதல் வேண்டும். (3) கிடைப்புப் பங்கு அளவினைக் கட்டுப்படுத்துதலினால் ஏற்படும் இழப்பினை ஈடு செய்திட வேண்டி, ஏற்றுமதி விலைகளை ஏற்றுமதியாளர்கள் உயர்த்தக் கூடாது.

ஏற்றுமதி நாடுகளிடையே கிடைப்புப்பங்கினைப் பகிர்ந் தளித்திடும் முறையினைச் சற்று ஊன்றி நோக்குவோம். சில ஏற்றுமதி நாடுகளுக்குச் சலுகை காட்டி, வேறு சில நாடுகளை வேற்றுமைப் படுத்துதல் எனும் குற்றச் சாட்டு, முன்னரே இறக்குமதியாளருக்குக் கிடைப்புப் பங்கு வழங்கிடும் முறை யினை ஆராய்ந்தபொழுது, சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு மாற்று என்னவென்றால், எல்லா ஏற்றுமதி நாடுகளுக்கும் கிடைப்புப்பங்கினைச் சமமாகப் பங்கிடவேண்டும் என்பது தான். இது சிறிய ஏற்றுமதி நாடுகளுக்கு நன்மைபயக்கும். சில வேளைகளில், இச் சிறுநாடுகள் தங்களுக்கு நிர்ணயித்துத் தரப்பட்ட கிடைப்புப்பங்கு அளவினைப் பூர்த்தி செய்ய முடியாமல் கைவிட்டிடும் பொழுது, கிடைப்புப்பங்கு விதித் துள்ள இறக்குமதி நாட்டில் தேவையான அளவிற்கும் கீழ் இறக்குமதிகள் சரிந்துவிடும்.

வேற்றுமைப் படுத்துதலைத் தவிர்ப்பதற்கு மற்றொரு வழி உள்ளது. இறக்குமதியாளர்களிடமே இணக்க ஆணை வழங்கி, தங்களுக்குப் பொருத்தமானதும் ஆதாயம் வழங்கக் கூடியது மான நாடுகளிலிருந்து அவர்களே இறக்குமதி செய்து கொள்ளும் வாய்ப்பினைத் தருவதே அவ்வழி. ஆனால், நடை முறையில், குறிப்பிட்ட ஏற்றுமதி நாடுகளிடமிருந்தே பண்டத்தை வாங்கிடவேண்டும் என வாய்மொழியாக (oral) இறக்குமதியாளர்களுக்கு நிருவாகம் நிபந்தனை விதித்திடும் நிலையும் உள்ளது.

முந்திய ஆண்டில் ஏற்றுமதி நாடு ஒவ்வொன்றும் எந்த அளவிற்குப் பண்டத்தை இறக்குமதி நாட்டில் விற்றுள்ளது என்ற அடிப்படையிலும் ஏற்றுமதி நாடுகளிடையே கோட்டாவைப் பகிர்ந்தளித்திடலாம். இம்முறையும் வேற்றுமைப் படுத்துதல் எனும் குறைபாட்டினைக் களைந்திடும். முந்திய ஆண்டுகளில் நிகழ்ந்த வெளிநாட்டு வாணிபம் பற்றிய புள்ளி விவரங்கள் சரியாகக் கிடைக்கப் பெற்றால் தான் இம் முறையினைத் திறம்படச் செயல் படுத்தமுடியும். வேற்றுமைப் படுத்துதலுக்கும் இடம் இருக்கிறது. எந்த ஏற்றுமதி நாட்டினை வேற்றுமைப்படுத்துதல் வேண்டும் என்று கருதப்படுகிதோ, அந்த நாட்டிலிருந்து குறைந்த அளவிற்கு எந்த ஆண்டில் பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட்டதோ, அந்த ஆண்டை ஆதாரமாகக் கொண்டு கிடைப்புப்பங்கினைப் பகிரும்பொழுது, அந்த ஏற்றுமதி நாட்டிற்குக் கிடைத்திடும் கிடைப்புப்பங்கு குறைத்திடும். வேற்றுமைப் படுத்துதலில் இது ஒரு முறை. வெளிநாட்டு வர்த்தகம் குறித்து உருவாக்கப்பெறும் புள்ளி விவரங்களில் நாடுகளிடையே ஒழுங்குமுறை ஒன்று இல்லாத தால், இப் பின்னணியில் வேண்டாத ஏற்றுமதி நாட்டிற் கெதி• ராகக் கிடைப்புப் பங்கினைக் குறைத்திடலாம். கிடைப்புப் பங்கினைப் பகிர்வதற்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படும் ஆண்டில், சில ஏற்றுமதி நாடுகளில் வேளாண்மை வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்டு உற்பத்தி குறைந்திருக்கலாம்; வேலை நிறுத்தம், அரசியல் குழப்பம் போன்ற இன்ன பிற காரணங்களினால் உற்பத்தி குறைதலைத் தொடர்ந்து ஏற்றுமதி களும் குறைந்திருக்கலாம். கிடைப்புப்பங்கின் பகிர்விற்கு அவ்வாண்டு ஆதாரமாக அமையும்பொழுது, அவ் வேற்றுமதி நாட்டிற்கு அனுமதிக்கப்படும் கிடைப்புப்பங்கு குறையத்தான் செய்யும். 'கோட்டா' அனுமதி பெற்ற ஏற்றுமதி நாடுகளில் உற்பத்தியில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படுகின்றபொழு தெல்லாம், சில நாடுகள் கிடைப்புப்பங்கினைப் பூர்த்தி செய்யத் தடுமாறுவதும் உண்டு. மேலும், எதிர்பாராத முறையில் விலை யேற்றமும் விலை இறக்கமும் ஏற்படும்பொழுது கிடைப்புப் பங்கு முறை கேடுபயத்தலும் உண்டு. மேலும், கிடைப்புப் பங்கு அனுமதி வழங்கிய பிறகு இறக்குமதி நாட்டின் துய்ப் பாளர்களின் சுவையிலும் விருப்பத் தேர்விலும் மாற்றங்கள் ஏற்பட்டாலும் கிடைப்புப்பங்கு முறை சரிவர இயங்காது வேற்றுமைப்படுத்துதல், நிருவாகக் குறுக்கீடு, வெளிநாட்டு வர்த்தகம் குறித்துச் சேகரித்திடும் புள்ளி விவரங்களில் நாடு களிடையே வேறுபாடு, ஏற்றுமதி நாடுகளின் உற்பத்தியில் ஏற்படும் எதிர்பாராத ஏற்ற இறக்கங்கள், விலையில் ஏற்படும்

ஏற்ற இறக்கங்கள், இறக்குமதி நாடுகளின் துய்ப்புச் சுவையிலும் விருப்பத் தேர்வுகளிலும் ஏற்படும் மாற்றங்கள் ஆகிய இவையனைத்தும் ஏற்றுமதி நாடுகளுக்குக் கிடைப்புப் பங்கு அனுமதித்திடும் முறையில் உள்ள குறைகளும் தடைகளும் ஆகும் எனலாம்.

ஒருமுக, இருமுக 'கோட்டா'க்கள்

முன்னரே விளக்கியுள்ளது போல, ஒருமுகக் கோட்டா முறையில் (Unilateral quota), மொத்தம் எவ்வளவு இறக்குமதி செய்திட வேண்டும் என்பதனையும், எந்தெந்த ஏற்றுமதி நாட்டிற்கு எவ்வளவெவ்வளவு கிடைப்புப் பங்கு ஒதுக்கிட வேண்டுமென்பதனையும், அந் நாடுகளைக் கலக்காமலேயே இறக்குமதி நாடுகள் முடிவெடுத்திடும்.

இருமுக 'கோட்டா' முறையில், இறக்குமதி நாடும், ஏற்றுமதி நாடும் கிடைப்புப் பங்கு அனுமதியில் ஓர் உடன்பாட்டிற்கு வருதலே இருமுக 'கோட்டா' முறை (bilateral quotas) எனப்படும். இம் முறையில் சில நன்மைகள் உண்டு. 'கோட்டா' காலவறைக்குள் ஏற்றுமதியைச் சமமாக நிரவிட வாய்ப்புண்டு. விலையேற்ற இறக்கங்களை இம்முறை சரி செய்திடும். உடன்பாட்டின்மூலம் ஏற்றுமதி சர்வாதீனத்தைத் தவிர்க்க முடியும். ஏற்றுமதி நாடுகள் இணக்க ஆணை வழங்கிடும் நிர்வாகத்தில் பங்கு பெறுதலினால், அந் நாடுகள் இறக்குமதி நாடுகளின் கிடைப்புப் பங்கு முறைக்கு எதிர்ப்புக் காட்டுவதில்லை. ஏற்றுமதி நாடே இணக்க ஆணை வழங்கிடும் பொழுது, கிடைப்புப் பங்கு, விதித்திடும் நாட்டின் இறக்குமதியாளர்களின் முறையீடுகளுக்கும் குறுக்கீடுகளுக்கும் வழியில்லை. நன்மைகள் இவ்வளவு இருப்பினும், இருமுக கோட்டா முறையில் தீமைகளும் உண்டு. கோட்டா முறை நிருவாகம் கார்ட்டல் (Cartel) போன்ற அமைப்புகளினால் நடத்தப்படும் பொழுது, இலஞ்ச ஊழல் ஏற்படும் சூழல் உருவாகிறது. இம்முறை, ஏற்றுமதி நாடுகளில் விலை யேற்றத்தினைத் தூண்டுகின்ற போக்குடையது என்பதனால் இறக்குமதியாளர்கள் நஷ்டப்படும் நிலை ஏற்படுகிறது. இதனால் இலாபம் வெளிநாட்டு நிறுவனங்களைச் சென்றடைவதால் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படுகிறது. சில பொருளாதார நிபுணர்கள் நினைப்பதுபோல, இருமுகக் 'கோட்டா' முறை என்பது ஏற்றுமதி நாட்டின் சர்வாதீனத்தை இறக்குமதி நாடு ஏற்றுக்கொள்வது போன்றது எனலாம்.

கிடைப்புப் பாங்குகளின் விளைவுகள்

சுங்கத்தீர்வையானாலும் சரி, கிடைப்புப் பங்குகளானாலும் சரி, இவற்றை–இவற்றின் சுமையை ஏற்றுக்கொள்வோர் யார்? எந்த வகையில் ஏற்றுக் கொள்கின்றனர்? சுங்கத் தீர்வை, 'கோட்டா' ஆகியவற்றின் உடனடி விளைவுகளை ஆராய்வதுதான் நோக்கம். மூலவளன்களெல்லாம் தவறான முறையில் பயன்படுவதாகக் கொள்ளப்படுவது சுங்கத்தீர்வை, கிடைப்புப் பங்கு முதலியவற்றின் இறுதியான விளைவுகளாக இருக்கலாம். பொதுவாகச் சுங்கத்தீர்வை, கிடைப்புப் பங்கு முதலியவற்றின் விளைவுகளைக் கீழ்க்கண்ட முறையில் தொகுக் கலாம் :– (1) இறக்குமதிகள் குறையும்; (2) உள்நாட்டுத் துய்ப்போருக்குப் பண்டத்தின் விலை உயர்ந்துவிடலாம்; (3) வெளிநாட்டு உற்பத்தியாளர் பெற்றிடும் விலை குறையலாம். அதே பண்டம் உள்நாட்டிலும் உற்பத்தி செய்யப்படுமே யானால், (4) விலைகள் மேலும் உயரலாம்; (5) உள்நாட்டு உற்பத்தியாளாருக்கு விற்பனை பெருகலாம். உற்பத்தியாளர் பெற்றிடும் விலைக்கும், இறக்குமதிகளைப் பயன்படுத்துவோர் தந்திடும் விலைக்கும் இடையில் நிலவிடும் வேறுபாட்டில் விளையும் ஆதாயம் எவரைச் சென்றடையும் என்று ஆராயும் பொழுது, (6) முக்கியமாகச் சுங்கத்தீர்வையைப் பொறுத்த வரையில், அரசாங்க வருவாய் பெருகி, அதன் காரணமாக வரி செலுத்திடும் சில வகுப்பினருக்கு வரிச்சலுகை கிடைத்திடலாம்; (7) கிடைப்புப் பங்கு முறையைப் பொறுத்த வரையில், இறக்குமதி செய்திட அனுமதி பெற்றோருக்குக் கூடுதலான ஆதாயம் கிடைத்திடலாம்.

குறிப்பிட்ட ஒரு பண்டத்தைப் பொறுத்த வரையில், தேவைக் கோட்டின் அமைப்பும் அளிப்புக் கோட்டின் அமைப்பும் தெளிவாக இருக்குமெனில், மேலும் இக்கோடுகள் நெகிழ்ச்சி பெற்றதாக இல்லாது இருக்குமெனில், ஒரு நாடு சுங்கத்தீர்வை விதித்தாலும் கிடைப்புப் பங்கு முறையைப் புகுத்தினாலும் இரண்டும் ஒன்றே. சுங்கத்தீர்வை விதிப்பதைத் தொடர்ந்து இறக்குமதி அளவு எவ்வளவு அமைந்திடுமோ அந்த அளவு இறக்குமதிக்கு மட்டுமே கிடைப்புப் பங்கு முறை விதித்தால், காப்பு விளைவு துய்ப்பு விளைவு, மறு பகிர்வு விளைவு ஆகிய விளைவுகளனைத்தும் சுங்கத்தீர்வை விதிப்பிலும் கிடைப் புப்பங்கு முறையிலும் ஒரே மாதிரியாகவே அமைந்திடும்.

பின் பக்கத்திலுள்ள வரைபடம் 9.1-ல், P_1P_2–அளவுக்குச் சுங்கவரி விதித்தாலும் சரி, M_2M_3–அளவிற்கு 'கோட்டாவை'

நிர்ணயித்தாலும் சரி, உள்நாட்டில் விலையேறுதல், துய்ப்பு குறைதல், இறக்குமதி குறைதல் போன்ற விளைவுகள் இரு முறைகளுக்கும் ஒரே மாதிரியாகவே இருக்கும். SS என்பது பண்டத்தின் உள்நாட்டு அளிப்புக் கோடு; DD என்பது தேவைக்கோடு. வாணிபம் நிகழாதபொழுது P_3 எனும் விலையில் தேவையும் அளிப்பும் சமம். தடையிலா வாணிபததில், விலை P_1 ஆகவும் உள்நாட்டு உற்பத்தி OM, ஆகவும் இறக்குமதி M_1M_4 ஆகவும் உள்ளன. வெளிநாட்டு அளிப்பு, அளவிறந்த நெகிழ்ச்சி (infinite elasticity) உடையதாகக் கொள்வோம். இந்த எடுகோளின்படி, சுங்கவரியோ கோட்டா முறையோ



பண்டத்தின் அளவு

வரைபடம் 9-1

அரைகுறைச் சமநிலையில் சுங்கத் தீர்வை-கோட்டா முறை

வெளிநாட்டு அளிப்பு விலையைப் பாதிக்காது எனலாம். சுங்க வரி P_1P_2- அளவிற்கு விதிக்கப்பட்டால், உள்நாட்டு விலை P_1-லிருந்து P_2- அளவிற்கு உயருகிறது. உள்நாட்டு உற்பத்தி M_1-லிருந்து M_2-அளவிற்கு உயருசிறது. இதனைக் காப்பு விளைவு எனலாம். உள்நாட்டுத் துய்ப்பு M_4-லிருத்து M_3-அளவிற்குக் குறைந்திடும். இதுவே துய்ப்பு விளைவு ஆகும். துய்ப்போர் எச்சப்பாட்டிலிருந்து கழித்து, வருவிக்கப் பெற்றுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களின் கூடுதலான வருமானத்தை P_1a I P_2 குறிக்கும். இதுவே மறுபகிர்வு விளைவு ஆகும். இறக்குமதியளவு, இறக்குமதி வரி ஆகியவற்றின் பெருக்கற் பலனே அரசாங்க வருவாயைச் சுட்டிடும். இந்த வருவாய் விளைவினைக் குறித்திடும் பகுதி b c m l ஆகும்.

இறக்குமதிக் 'கோட்டாவை' M_2M_3 அளவிற்கு நிர்ணயிக்கும் பொழுது இதே விளைவுகளே ஏற்படும். ஆனால் வருவாய் விளைவினைப் பொறுத்த வரையில், சுங்கவரி விதிப்பிற்கும் 'கோட்டா' முறை நிர்ணயிப்பிற்குமிடையில் ஒரு வேறுபாடு நிலவுகிறது. சுங்கவரி விதிப்பினால் இறக்குமதி நாட்டின் அரசாங்க வருவாய் b c m l ஆகும் என்று கண்டோம். M_2M_3-கிடைப்புப்பங்கு விதிக்கும்பொழுது, இறக்குமதிகளின் விலை P_2-ஆக உயருகிறது. இறக்குமதி மூலமும் உள்நாட்டு உற்பத்தி மூலமும் கிடைத்திடும் பண்டத்தை வாங்கிடும் உள்நாட்டுத் துய்ப்போர் தந்திடும் விலை முழுவதையும் யார் அடைகின்றனர் என்பதே கேள்வி. கூடுதலான விலையும் ஆதாயமும் இறக்குமதியாளருக்கே சாதாரணமாகக் கிடைத்திடும்; வெளிநாட்டு உற்பத்தியாளருக்கன்று. கூடுதலான ஆதாயத்தைப் பெற்றிடும் இறக்குமதியாளர் யாரெனில், தேவைப்படும் இறக்குமதி லைசென்சு பெற்றவர்களே !

வேறொரு சாத்தியக்கூறும் உள்ளது. இறக்குமதி நாட்டின் அரசு இறக்குமதி லைசென்சுகளை ஏலமிடுவதன் மூலம் பற்றுக் குறையினால் ஏற்பட்ட கூடுதலான விலையினையும் ஆதாயத்தினையும் தானே அடைந்திடும். இவ்வாறு அரசு பெறும் கூடுதலான ஆதாயத்தினைப் பொருளாதார வல்லுநர்கள் வாரம் (rent) என்றழைப்பர். இது இவ்வாறு நேரின், வருவாய் விளைவு சேர்த்து எல்லா விளைவுகளும் சுங்கத்தீர்விற்கும் கிடைப்புப்பங்கு முறைக்கும் ஒரே மாதிரியாகவே இருக்கும். இந் நிகழ்வினை விருப்பப் பரிமாற்ற கோடுகள் மூலம் விளக்கிடலாம்.

வரைபடம் 9.2-ல் X-பண்டத்தினை ஏற்றுமதி செய்திடும் A-எனும் நாட்டின் விருப்பப் பரிமாற்றக்கோடு (reciprocal demand curve) OA ஆகும்; Y-பண்டத்தினை ஏற்றுமதி செய்திடும் B-எனும் நாட்டின் விருப்பப் பரிமாற்றக் கோடு OB ஆகும். தடையிலா வாணிபத்தில், வாணிபவீதம் OP ஆகும். A-எனும் நாடு Y-எனும் பண்டத்தை OD அளவிற்கு இறக்குமதி செய்வதாகக் கொள்வோம். X, Y எனும் இரு பண்டங்களிடையே புதிய வாணிபவீதம், OP' அல்லது PO'' அல்லது இவ்விரண்டிற்கிடைப்பட்ட விலையாக அமையலாம். கிடைப்புப்பங்கு முறையினைக் கையாளும் நாட்டிற்குப் புதிய வாணிப வீதங்கள் நன்மை மிகுந்ததாகவோ நன்மை குறைந்ததாகவோ அமையலாம். இறக்குமதியாளர்கள் கூடுதலான இலாபத்தை அடைவார்களேயானால், ஏற்றுமதி நாட்டின்

விருப்பப் பரிமாற்றக் கோடு பெற்றிருக்கும் நெகிழ்ச்சியின் அளவிற்கு ஏற்ப, கிடைப்புப்பங்கு மூலமாக வாணிப வீதத்தினை உயர்த்துவர். இருந்தபோதிலும், B–எனும் நாட்டின் ஏற்றுமதி யாளர்கள் ஒன்றுபட்டு ஸ்தாபன ரீதியாக இயங்கினல், வாணிப வீதம் A–நாட்டிற்கு எதிராக மாறலாம்.



வரைபடம் 9-2

வாணிப வீதத்தின் மீது கோட்டாவின் விளைவுகள்

விலை விளைவு

கிடைப்புப்பங்கு முறையும் சுங்கவரியும் பண்டங்களின் விலையை உயர்த்திவிடும். சுங்கவரியின் காரணமாக, வரியின் அளவுக்கு விலை உயரலாம்; வெளி நாட்டில் விலையில் குறைப்பு ஏற்பட்டிருந்தால் அதனைக் கழித்துக் கொள்ள வேண்டும். கிடைப்புப்பங்கு முறையில் விலை எந்த அளவிற்கு வேண்டு மானாலும் உயர்ந்திடும்; விலை உயர்வது மூன்று காரணங்களைப் பொருத்தது. அவை வருமாறு:– 1) வெளி நாட்டு அளிப்பு எந்த அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதோ அதனைப் பொறுத்து விலையேற்றம் அமையும். 2) இறக்குமதி நாட்டின் தேவையின் அளவையும் நெகிழ்ச்சியையும் பொறுத்தும் விலை யுயர்வு அமையும். 3) வெளி நாட்டு, உள்நாட்டு அளிப்பு களின் நெகிழ்ச்சியைப் பொறுத்தும் விலையேறுதல் அமையும்.

ஒப்பிட்டுப் பார்த்தல்

சுங்கத் தீர்வையையும் கிடைப்புப்பங்கு முறையையும் ஒப்பிட்டுப்பார்ப்போம். சுங்கவரியினுல் தனியே ஏற்படாத பிரச்சினைகளெலாம் கிடைப்புப்பங்கு முறையினுல் ஏற்படும். வெளிநாட்டுப் பண்டங்களின் விலைகளைச் சுங்கவரி உயர்த்துவதன் மூலம் வாணிபத்தைத் தடைப்படுத்துகிறது என்ருலும், வரி செலுத்திவிட்டால் எவ்வளவு வேண்டுமானுலும் இறக்குமதி செய்திடலாம். ஆனுல் கிடைப்புப்பங்கு முறையில் குறிப்பிட்ட அளவிற்குமேல் இறக்குமதி செய்திட முடியாது. நேரடியாகப் பண்டத்தின் அளவின் மீது கட்டுப்பாட்டினை விதிக்கின்ற ஓர் அளவையே இறக்குமதிக் 'கோட்டா' முறை; வாணிபத்தை முழுதும் தடைப்படுத்திட வழிகோலும் முன்னறிவிப்பு அது.

சுங்கத் தீர்வை முறையை மேற்கொண்டால், யார் இறக்குமதி செய்வது, எவ்வளவு இறக்குமதி செய்வது என்பதனைத் தேவையும் அளிப்பும் நிர்ணயம் செய்திடும். வரி செலுத்திவிட்டால், யார் வேண்டுமானுலும் எவ்வளவு வேண்டுமானுலும் இறக்குமதி செய்திடலாம். ஆனுல் கிடைப்புப் பங்கு முறையில் இறக்குமதி வரையறுக்கப்பட்டுள்ளது. தேவை, அளிப்பு போன்ற சந்தை சக்திகளின் இயக்கத்திற்கு அதில் வேலை இல்லை, 'உயர்ந்தபட்ச விலையை நிர்ணயிப்பது போல, இறக்குமதிக் 'கோட்டா'க்களை நிர்ணயிப்பது என்பது விலை அமைப்பில் அதற்குப் புறம்பான முறையில் குறுக்கிடுதல் ஆகும்' என்று ஹேபர்லர் குறிப்பிடுகிருர்.[1]

சுங்கத் தீர்வைமூலம் மறைமுகமாக இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்படும்பொழுது உள்நாட்டு விலைகள் உயருவதைவிட அதிகமாகக் கிடைப்புப் பங்கு முறையில் விலைகள் உயர்ந்திடும். கிடைப்புப் பங்கு முறையில் இறக்குமதி அளவு வரையறுக்கப்பட்டுவிட்டதால், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தேவை, அளிப்பு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப இறக்குமதி அளவை மாற்ற முடியாது; விலைகளில் வேண்டுமானுல் ஏற்ற இறக்கங்கள் செய்திடலாம். இத்தகைய சூழ்நிலைகளில் கிடைப்புப் பங்கு முறையினுல் துய்ப்போருக்குப் பயனில்லை.

சுங்கத் தீர்வையைவிட கிடைப்புப் பங்கானது கேடு பயக்கும் நேரடியான கட்டுப்பாட்டு முறையாகும். பொது

[1] ஹேபர்லர்: 'பன்னுட்டு வாணிபம் பற்றிய கோட்பாடு.' (Haberler: 'The Theory of International Trade.') ப. 348.

வாகக் கிடைப்புப் பங்கு முறையானது திறமை குறைந்த பழைய நிறுவனங்களுக்குப் பயன்படுவது போல புதிய, திறமை மிகுந்த நிறுவனங்களுக்கு உதவுவது இல்லை. உள்நாட்டுச் சந்தையை உள்நாட்டு உற்பத்தியாளருக்கு வெளிநாட்டுப் போட்டியைத் தவிர்த்துப் பாதுகாத்துத்தருகிறது. சுங்கத்தீர்வை முறை எனில், திறமையற்ற இறக்குமதியாளருக்கும் நிறுவனங்களுக்கும் பாது காப்புத் தருவது கிடைப்புப் பங்கு முறை எனலாம். மேலும் உள்நாட்டு உற்பத்தியாளர்களை உண்மையாகவே சர்வாதீனப் போக்கினை மேற்கொள்ளச் செய்வது இந்த கிடைப்புப் பங்கு முறைதான்.

காப்பு மறு பகிர்வு விளைவுகளைப் பொறுத்தவரையில் கிடைப்புப் பங்கு முறையும் சுங்கத்தீர்வையும் ஒரே மாதிரியானவையே. ஆனால் சுங்கத்தீர்வை போலல்லாமல், கிடைப்புப் பங்குகள் அரசாங்கத்திற்கு வருவாய் உண்டாக்குவதற்குத் தவறிவிடுகின்றன. இக்குறையைப் போக்கிட இறக்குமதி லைசென்சுகளை அரசாங்கம் ஏலமிட வேண்டும். கிடைப்புப்பங்கு முறையில் இறக்குமதியளவை முன்கூட்டியே கணித்திட முடியும்; சுங்கத்தீர்வையில் இத்தகைய கணிப்பு செய்திட இயலாது,

நிறைகளும் குறைகளும்

முதலில் நிறைகள் என்ன என்று பார்ப்போம். அன்னியச் செலாவணியைச் சேமித்துவைக்க வேண்டிய அவசியம் ஏற்படும் பொழுதெல்லாம் பல நாடுகளுக்குக் கிடைப்புப்பங்கு முறையே சிறந்த வழியாகத் தென்படுகிறது. காரணம், இம்முறை நிச்சயமாக இறக்குமதியைக் கணிசமான அளவிற்குக் குறைத்திடும் என்பதுதான். கிடைப்புப்பங்கு முறை ஒரு நெருக்கடி நேர நடவடிக்கை வருமானக் குறைவினால் திடீரென உள்நாட்டுத் தொழில் பாதிக்கப்படாது இருக்க வேண்டுமெனில், கிடைப்புப்பங்கு முறை மூலமே உறுதியான காப்பு அளிக்க முடியும். வெளிநாட்டு விலை இறக்கப் போக்கின் விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ள கிடைப்புப்பங்கு முறையைக் கையாளலாம். ஆனால் உள்நாட்டு பணவீக்கத்தினால் ஏற்படும் தொல்லைகளை கிடைப்புப்பங்கு முறை மேலும் அதிகப்படுத்திவிடும்.

குறைபாடுகளை நோக்கும் பொழுது, இறக்குமதி 'கோட்டாக்'களை ஏற்றுக்கொள்ள முடியாது. இறக்குமதி வெகுவாகக் கட்டுப்படுத்தப்படுதல், அரசாங்க வருவாய்க்கு வழி

யில்லாமல் செய்திடல், இறக்குமதியாளர் சர்வாதீனம் ஏற்பட வழிவகுத்தல், வெளிநாட்டு உற்பத்தியாளர் (ஏற்றுமதியாளர்) போட்டியைக் குறைத்து விடுதல் போன்ற இன்னபிற குறைகளைக் கிடைப்புப்பங்கு முறை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

கிடைப்புப்பங்கு முறையை இணக்க ஆணை வழங்கி அமுல் படுத்திடும் நிர்வாகத்தில் அரசியல் உள்நோக்கும் கையூட்டு முறையும் உள்நுழைந்து விடுகின்றன. பன்னாட்டு வாணிபத்தினுள் காரண அடிப்படையற்ற ஒருதலையான புதிய சக்தி ஒன்றினைக் 'கிடைப்புப் பங்கு' முறை புகுத்துகிறது என்று கிண்டல்பெர்கர் குறிப்பிடுகிறார். கிடைப்புப் பங்கு முறையின் கீழ், தேவை, அளிப்பு போன்ற சந்தைச் சக்திகள் ஏற்றுமதி, இறக்குமதிகளை நிர்ணயிக்கவில்லை; மாறாகத் திறமையையும் உச்ச உற்பத்தியாற்றலையும் தவிர வேறு காரணங்களின் அடிப்படையில் எதேச்சையாகத் தனி நபர்கள் எடுத்திடும் முடிவின் அடிப்படையில் கோட்டாக்கள் பிரிக்கப்படுகின்றன; ஏற்றுமதி, இறக்குமதிகள் நிர்ணயம் பெறுகின்றன. கிண்டெல்பெர்கர் கூர்மையாக உறைப்பது பின் வருமாறு: 'கிடைப்புப் பங்கு முறையின் பலன், இடைக்காலப் பொருளாதாரத்தை நோக்கிப் பின்னுக்கு இழுத்துச் செல்லப்படுவதுதான்.'

10. சந்தையில் பண்டங்களின் திணிப்பு

(Dumping)

பொருள் விளக்கம்

பன்னாட்டு வாணிபத்தில் வெவ்வேறு சந்தைகளில் வெவ்வேறு விலைகள் விதிக்கப்படுதலையே 'சந்தையில் பண்டங்களின் திணிப்பு' அல்லது சுருக்கமாக 'திணிப்பு' (Dumping) என்று குறிப்பிடுகிறோம். 'திணிப்பு' அல்லது 'டம்பிங்' என்ற சொல்—தமிழிலும் சரி, ஆங்கிலத்திலும் சரி—அவ்வளவு திருப்திகரமான சொல் அன்று. இதற்குத் தோற்றுவாய் ஒன்றுண்டு. பொறிவழி உற்பத்தியாளர் ஒருவர், விற்பதற்கு வழியில்லாது எஞ்சிப்போய் உள்ள பண்டத்தைத் தம்முடைய சொந்த நாட்டுச் சந்தையிலேயே திணிக்க முயன்றால் விலை முறிவு ஏற்பட்டு விலை வீழ்ந்திடும் என்றஞ்சி, தாம் இதுவரையில் விற்பனை மேற்கொள்ளாத வெளிநாட்டுச் சந்தையில் குவித்துத் திணித்து விற்க முற்பட்டதாகச் சொல்லப்படுகின்ற ஒரு நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டுதான் 'திணிப்பு' என்ற பொருள் படும்படியான 'டம்பிங்' என்ற சொல் வழக்கில் வந்தது. சரியாகவோ தப்பாகவோ, இரண்டு சந்தைகளில் வெவ்வேறு விலைகளில் விற்றிடும் செயலுக்குத் 'திணிப்பு' என்ற பொருள் கொண்ட 'டம்பிங்' என்ற சொல் வழக்கிற்குக் குறிப்பாக பன்னாட்டு வாணிகத்தில், வந்துவிட்டது. வெவ்வேறு சந்தைகளில் வெவ்வேறு விலைகளில் விற்றலை 'விலை வேற்றுமைப் படுத்தல்' (price discrimination) என்று குறிப்பிடுகிறோம். சுருக்கமாகக் கூறின், திணிப்பு என்பதுதான் விலை வேற்றுமைப் படுத்தல் ஆகும்.

"போக்குவரத்துச் செலவுகளிலுள்ள வேற்றுமையினைக் கணக்கில் வைத்துக்கொண்டு, ஒரே மாதிரியான சூழ்நிலைகளில் (அதாவது, செலுத்து நிலைகள் போன்றவை ஒரே மாதிரியாக இருந்திடும் பொழுது), ஒரே காலத்தில், ஒரே பண்டத்தினை உள்நாட்டில் விற்பதைவிட வெளிநாட்டுச் சந்தையில்

குறைந்த விலையில் விற்பதனையே'' திணிப்பு என்று ஹேபர்லர் (Haberler) குறிப்பிடுகிறார். இரு சந்தைகளுக்கிடையே விலையினை வேற்றுமைப்படுத்துதலையே திணிப்பு என்று வைனர் (Viner) இலக்கணப்படுத்துகிறார். இரு நாடுகளுக்கிடையிலே மட்டு மல்லாமல் ஒரே நாட்டில் இரு பிராந்திய சந்தைகளுக் கிடை யேயும் திணிப்பு ஏற்படலாம். உள்நாட்டுச் சந்தையைவிட வெளிநாட்டுச் சந்தையில் விலையுயர்ந்திருப்பதை எதிரிடைத் திணிப்பு (reverse dumping) எனலாம். உள்நாட்டிற்குத் துய்ப்புத் தேவையில்லாத பண்டமாக இருப்பின், இரண்டு வெளிநாட்டுச் சந்தைகளுக்கிடையே விலை வேற்றுமைப் படுத்தலை மேற்கொள்ளலாம். இவ்வாறு விலை வேற்றுமைப் படலையே திணிப்பு என்கிறோம்.

விலை வேற்றுமைப் படுத்துதல் ஏன் நடைபெறுகிறது? உள்நாட்டுத் தேவையைவிட வெளிநாட்டுத் தேவை நெகிழ்ச்சி மிக்கதாக இருக்கும் பொழுது விலை வேற்றுமைப்படல் ஏற்படு கிறது. உள்நாட்டுச் சந்தையில் சர்வாதீனப் போக்கு நிலவு வதே இதற்குக் காரணம். எதிரிடைத் திணிப்பில், உள் நாட்டுத் தேவையைவிட வெளிநாட்டுத் தேவை நெகிழ்ச்சி குறைந்ததாக உள்ளது. எனவே, உள்நாட்டுச் சந்தையில் விலை குறைவாகவும், வெளிநாட்டுச் சந்தையில் விலை உயர் வாகவும் அமைந்து இரு சந்தைகளிலும் இறுதிநிலை வரவு சமன் படுத்தப்படும்.

விலை வேற்றுமைப் படுத்துதல் சார்ந்த திணிப்பு என்பதனை எப்போதும் கேடு விளைவிக்கக் கூடியதாகக் கருதக் கூடாது. பொதுவாக இதனைப் பொதுப் பயன்பாட்டுத் துறை களில் (public utilities) பயன்படுத்துவது உண்டு. உதாரண மாக, வெவ்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு மின்வாரியத்துறை வெவ்வேறு கட்டணங்களை விதிப்பது வழக்கம். விவசாய வேலைகளுக்கு மின்சாரம் குறைந்த கட்டணத்திலும், தொழிற்றுறை சார்ந்த செயல் களுக்குச் சற்று அதிகக் கட்டணத்திலும், வீட்டு உபயோகத் திற்கு இன்னும் கூடுதலான கட்டணத்திலும் வழங்கப்படும். போட்டியிடுவோரை வெளியேற்றுவதற்காகவும், கார்ட்டல் அமைப்பை உருவாக்குவதற்காகவும் விலை வேற்றுமைப் படுத் துதலைக் கையாள்வது கேடு பயக்கும். நல்ல நோக்கிற்காகக் கையாளப்படும்பொழுது நல்ல விளைவுகளையே உண்டாக்கும்.

வேற்றுமைப்படுத்துதலைச் சாராத திணிப்பும் உண்டு. உள்நாட்டு நாணயத்தின் மதிப்பினைச் செயற்கையான முறை

யிலேயே குறைப்பதன்மூலமும் திணிப்பு மேற்கொள்ளப்படும் என்ருலும், மாற்றுவீதத் திணிப்பு (exchange rate dumping) என்பப்படுவது வர்த்தகத்தில் இடம்பெற்றுள்ள எல்லாப்பண்டங்களையும் உள்ளடக்கிய பொது நடவடிக்கையாகும். மாருக, திணிப்பு என்பது தேர்ந்த சில பண்டங்களைப் பொறுத்த நடவடிக்கையாகும். மேலும், ஏற்றுமதித் தொழில்களில் வேலை பார்த்திடும் தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலி கொடுப்பதன் மூலம், இயல்பாகவே உள்நாட்டுச் சந்தையைவிட வெளிநாட்டுச் சந்தையில் விலை குறைந்திருக்கும் நிலையை உண்டாக்குதல் வாயிலாகவும் திணிப்பினைச் செயல்படுத்தலாம்.

திணிப்பு வேருெரு முறையிலும் நிகழலாம். உற்பத்திச் செலவைவிட குறைந்த விலையில் வெளிநாட்டுச் சந்தையில் விற்பதும் திணிப்பு தான். வெளிநாட்டுச் சந்தையில் குறைந்த விலைக்கு விற்பதனுல் ஏற்படுகின்ற இழப்பினை, உள்நாட்டு விற்பனை மூலம் ஈடு செய்திடமுடியும் என்ற கருத்தும் இதில் தொக்கி நிற்கிறது. இதில் குறிப்பிடப்படும் உற்பத்திச் செலவு என்பது சராசரிச் செலவையோ (average cost) அல்லது இறுதி நிலைச் செலவையோ (marginal cost) குறித்திடும். சராசரிச் செலவிற்குக் கீழான விலையில் விற்பது நஷ்டத்தை உண்டாக்காது. உள்நாட்டுச் சந்தைக்கென்று உற்பத்தி செய்து அளிக்கப்பட்ட பண்டத்திற்காகும் பொதுச் செலவினைச் செய்து முடித்த பிறகு, வெளிநாட்டு விற்பனைக்குத் தேவையான அளவுக்குப் பண்டத்தினைக் கூடுதலாக உற்பத்தி செய்திட ஆகும் இறுதிநிலைச் செலவு, சராசரிச் செலவைவிட குறைவாகவே இருக்கும். அந்த இறுதிநிலைச் செலவைவிட ஏற்றுமதி விலைகுறைவாக இருந்தால்தான் நஷ்டம் ஏற்படும். உள்நாட்டுச் சந்தையிலேகூட சராசரிச் செலவிற்கும் குறைந்த விலைக்குப் பண்டத்தை விற்பது ஒன்றும் புதிதல்ல. விலை மந்தகாலத்திலே (recession period), சராசரிச் செலவுக்கும் குறைந்த விலையில் நிறுவனங்கள் விற்க நேரிட்டாலும் கூட, அந்த விலைக்குள்ளாகவே குறிப்பிட்ட சில முக்கிய செலவுகள் அடங்கிடுமெனில், நிறுவனங்கள் உற்பத்தியைக் கைவிடாது தொடர்ந்து நடத்தும் எனலாம். பொதுவாகவே, மாறும் செலவுகளைச் (variable costs) சரிக்கட்டுகின்ற அளவிற்கேனும் விலை கிடைக்கும் வரையில் பழைய நிறுவனங்கள்கூட உற்பத்தியைத் தொடரும். மேலும், உள்நாட்டு விலையைவிட உற்பத்திச் செலவை நிர்ணயிப்பது எளிதன்று.

பலவகை மறைமுகத் திணிப்பும் நிகழ்வதுண்டு. ஏற்றுமதி விலைகளை வெளிப்படுத்தாமல் வெளிநாட்டுச் சந்தைகளுக் கிடையே வெவ்வேறு விலைகளில் பண்டங்களை விற்பதுண்டு. வெவ்வேறு விதவிதமான பண்டங்களை உள்நாட்டுச் சந்தை யிலும் வெளிநாட்டுச் சந்தையிலும் வெவ்வேறு விலைகளில் விற்றிடும்பொழுது, விலைகளை ஒத்திட்டுப் பார்ப்பது அவ்வளவு எளிமையானதன்று.

திணிப்பின் வகைகள்

திணிப்பு பலவகைப்படும். எத்தகைய குறிக்கோள்களை நிறைவேற்றப் பயன்படுத்தப்படுகிறதோ அவற்றைப் பொறுத்தும், எத்தகைய விளைவுகளை உண்டாக்குகின்றனவோ அவற்றைப் பொறுத்தும் திணிப்பினைப் பல வகைகளாகப் பிரித் திடலாம். இடையிடையே நிறுத்திவிட்டு மீண்டும் மீண்டும் செயல் படுத்தப்படுகின்ற திணிப்பு (intermittent dumping) ஒரு வகை. இது குறுங்காலத்தைச் சேர்ந்தது. நீண்ட காலத் திற்குத் தொடர்ந்து செயல்படுகின்ற திணிப்பு (persistent dumping) மற்றொருவகை. திணிப்பு இடையிடையானதாகவும் (sporadic) இருக்கலாம். எதிரிகளை வீழ்த்திடும் நோக்கு (predatory) கொண்ட திணிப்பும் உண்டு.

உள்நாட்டில் நிலவிடும் விலைக்கும் குறைந்த விலையிலோ அல்லது உற்பத்திச் செலவிற்கும் குறைந்த விலையிலோ, வெளி நாட்டுச் சந்தையில் விற்று, சில குறிக்கோள்களை நிறைவேற்ற முனைவதுண்டு. இத்தகைய திணிப்பு சில வேளைகளில் குறுங் காலத்தில் நிலவும். இடையிடையே நிறுத்தப் பெற்று மீண்டும் மீண்டும் செயல்படுத்தப் படுகின்ற திணிப்பு இது. விலை மந்தத்தின் காரணமாகவும் வேறு காரணங்களினாலும் தற்காலி கமாக விலை குறைந்துள்ள சந்தையில் தொடர்பு அறுந்து விடாது இருக்கவேண்டி இத்தகைய திணிப்புகளை மேற் கொள்வதுண்டு. வெளிநாட்டுச் சந்தையில் ஊன்றி நின்றி டவும் இத்திணிப்பினை மேற்கொள்வதுண்டு. போட்டி அமைப்பு ஏற்படுவதைத் தடுத்திட, ஏற்கெனவே உள்ள வெளி நாட்டுப் போட்டியாளரை விரட்டிட, போட்டியாளரை கார்ட்டல் அமைப்பில் சேர்த்திட, புதிய சந்தையில் நல்லெண்ணம் உண்டாக்கிட, திணிப்பு முறையை அதே முறை மூலம் சந்தித்திட, மிக முக்கியமாகத் தேவைப்படும் அன்னியச் செலாவணியைச் சேமித்திட, பெருக்கிட இத்தகு திணிப்பு முறைகளை ஒரு நாடு கையாள்வது இயல்பே. சில வேலைகளில் தீவிர உற்பத்திப் பெருக்கத்தின் காரணமாகவோ

அல்லது தேவை வீழ்ச்சியின் காரணமாகவோ விற்காது எஞ்சி நின்றிடும் பண்டத்தினை உள்நாட்டுச் சந்தையில் விலைகுறைப்பு மூலம் விற்று முடித்திட விரும்பாமல் வெளிநாட்டுச் சந்தையில் குறைந்த விலைக்கு விற்றிடும் திணிப்பு முறையும் ஒருவகையே.

போட்டியை ஒழித்திடவும், போட்டியாளரை விரட்டிடவும் மேற்கொள்ளப்படும் திணிப்பு மிகவும் கேடு பயப்பது. போட்டி நீங்கியவுடன் சர்வாதீனவாதி (monopolist) விலையை உயர்த்தி, இறக்குமதி நாட்டுத் துய்ப்பாளருக்கு கேடு சூழ்வான். இத்தகைய திணிப்பின் ஆரம்ப கட்டங்களில், இறக்குமதி நாட்டுத் துய்ப்போர் குறைந்த விலை கொடுத்துப் பயனடைந்த போதிலும் இறுதியில் சர்வாதீனம் அமைந்து விட்ட பிறகு அத் துய்ப்போர் அதிகவிலை கொடுக்க நேரிடும். விலைப்போர் தொடங்கிப் போட்டியாளரை விரட்டிய போதிலும், சர்வாதீனவாதி மீண்டும் விலையை உயர்த்தும்பொழுது போட்டியாளர் தலை தூக்குவர்; புதிய போட்டியாளரும் கிளம்புவர். எனவே திணிப்பு முறை சர்வாதீனத்திற்கு ஆதாயம் தரத்தக்கதாகவே இருக்கும் என்று சொல்லமுடியாது. போட்டியை முழுதும் ஒழித்துவிட்டாலும் கூட, அரசாங்கம் சட்டத்தின் துணை கொண்டு சர்வாதீன விலை உயர்த்துதலைத் தடைசெய்திடும்.

உள்நாட்டில் விற்றது போக எஞ்சியுள்ள பொருளை வெளிநாட்டுச் சந்தையில் விற்க முனைவதைத் திணிப்பு எனலாம். சில வேளைகளில் ஒப்பந்தம் செய்து கொண்ட வெளிநாட்டினரே பண்டம் முழுவதையும் ஒப்பந்தத்தின்படி வாங்க முடியாமற் போகலாம். அவ்வாறு எஞ்சி நின்றிடும் பண்டத்தை மீண்டும் சொந்த நாட்டிற்குக் கொண்டு வருவதற்குப் பதிலாக, வெளிநாட்டுச் சந்தையிலேயே கிடைத்திடும் விலைக்கு (விலை எவ்வளவு குறைந்து இருப்பினும்) விற்பது திணிப்பைச் சார்ந்த ஒன்றே ஆக, எஞ்சியுள்ள பண்டத்தை வெளிநாட்டுச் சந்தையில் விற்க முயல்வது திணிப்பு முறையின் குறிக்கோள்களில் ஒன்றே. மிகவும் தேவைப்படும் அன்னியச் செலாவணியைச் சேமிப்பதும் வளர்ப்பதும் திணிப்பு முறையின் இலக்குதான் என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். இக் குறிக்கோள்களுக்காகத் திணிப்பினை மேற்கொள்வது என்பது இறக்குமதி நாட்டின் பொருளாதாரத்தில் நிலையாமையை உண்டாக்கிடும். தனது அன்னியச் செலாவணியின் தேவையையும் ஏற்றுமதி நாட்டின் உபரியையும் பொறுத்தே இறக்குமதிநாடு தனது இறக்குமதியைப் பெறும். இதனால் இறக்குமதி நாட்டின் உற்பத்தியாளருக்கு அதிகக்கேடு சூழும்.

திரும்பத் திரும்ப ஒரு நாட்டின் மூலவளன்கள் பங்கீடு செய்யப் படுவதில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்குமானால், அவ் வளன்கள் விரயமாவதாகத்தான் பொருள். திணிப்பு முறையை அடிக்கடி மேற்கொள்ளும் பொழுதும், திணிப்பு செயல்படும் காலம் நீண்டிருக்கும் பொழுதும், வளன்கள் விரயமாவதும் அதிகமாகவே இருக்கும்.

நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து செயல்படும் திணிப்பினை நோக்குவோம். உள்நாட்டைவிட வெளிநாட்டில் விலை குறைத்து விற்பதே இத் திணிப்பு முறையாகும். வெவ் வேறு நாடுகளில் குறிப்பிட்ட பண்டத்தின் தேவைக் கோடு களுடைய நெகிழ்ச்சியின் வேறுபாட்டைப் பொறுத்தே இத்தி ணிப்பு முறை செயல்படும். உள்நாட்டுத் தேவைக்கோடு நெகிழ்ச்சி குறைந்தும் வெளிநாட்டுத் தேவைக்கோடு நெகிழ்ச்சி மிகுந்தும் இருப்பின், உள்நாட்டுச் சந்தையில் உயர்ந்த விலைக்குக் குறைந்த அளவு பண்டத்தை விற்றும், நெளிநாட்டுச் சந்தையில் குறைந்த விலைக்கு உயர்ந்த அளவு பண்டத்தை விற்றும் ஆதாயம் காட்டிட முடியும். இத்தகைய திணிப்பிற்கு ஆதாயத்தினை உயர்த்திடும் நோக்கைத் தவிர வேறு கேடான நோக்கம் கிடையாது. தமக்கு வேண்டிய பண்டத்தைக் குறைந்த விலையில் நிறையப் பெறுகின்ற காரணத்தினால் இறக்குமதி நாட்டிற்கு இத் திணிப்பு நன்மையே பயக்கிறது.

நாட்டுப் பாதுகாப்புத் தொழில்களின் கோணத்திலிருந்து அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்கும் பொழுது, நிரந்தர மாக்கப்படும் திணிப்பு அவ்வளவாக விரும்பத் தக்கதல்ல. எந்த உற்பத்தியாளனும் நஷ்டத்திற்கு நிரந்தரத் திணிப்பினை மேற் கொள்ளமாட்டான். நிரந்தரத் திணிப்பில் நிர்ணயிக்கப்படு கின்ற விலை, இறுதிநிலைச் செலவைவிட உயர்ந்திருக்கும். அதி கரித்திடும் உற்பத்தியின் காரணமாகச் செலவு வீழ்ந்திடும் பொழுது, இத்தகைய திணிப்பு நிகழ்கிறது. உள்நாட்டுச் சந்தை யிலே பண்டத்தினை அதிக விலைக்கும் வெளிநாட்டுச் சந்தையில் குறைந்த விலைக்கும் விற்றிடும்பொழுது, இரண்டு சந்தை களுக்கும் தேவையான அளவிற்கு உற்பத்தி பெருகியே தீர வேண்டும். உற்பத்தி பெருகும்பொழுது, உற்பத்திச் செலவு குறையும். இறுதிநிலைச் செலவைவிட பண்டத்தின் விலைத் திணிப்பு நிகழும்பொழுது உயர்ந்திருக்கும் எனக்கண்டோம். வெளிநாட்டுத் துய்ப்போரைவிட உள்நாட்டுத் துய்ப்போர் தரும் விலை அதிகம் என்றாலும் கூட, திணிப்பினால் ஏற்பட்ட இச் சூழ்நிலையில் தரப்படும் விலை, திணிப்பு நிகழாதபோது தரப்

பட்ட விலையைவிடக் குறைவே. காரணம், திணிப்பின் விளைவால் உற்பத்தி பெருகி, உற்பத்திச் செலவுகள் குறைவதுதான். ஆக, உள்நாட்டுத் துய்ப்போர் வெளிநாட்டினர் தந்திடும் விலையைவிட அதிகம் தந்திடுவதால், பாதிப்பு ஒன்றும் ஏற்படுவதில்லை.

திணிப்பின் வெற்றிக்குக் காரணங்கள்

ஏற்றுமதி செய்திட்ட நாட்டிற்கே மீண்டும் பண்டம் திரும்ப வாராது இருக்கும் நிலையே திணிப்பின் வெற்றிக்கு மிக முக்கியமான நிபந்தனையாகும். திணிப்பு செய்யப்பட்ட பண்டம் திரும்ப வருதலைத் தடுத்திட இயலவில்லை என்ருல், விலையுயர்ந்துள்ள சொந்த, உள்நாட்டுச் சந்தையில் பண்டத்தினை வாங்காமல் விலை குறைவாகவுள்ள வெளிநாட்டுச் சந்தையில் உள்நாட்டுத் துய்ப்போர் வாங்க முனைவர். உள்நாட்டு விலைக்கும் ஏற்றுமதி விலைக்கும் இடையிலுள்ள வித்தியாசம் கடத்துச் செலவிற்கும் குறைவாக இருக்குமேயானல், பண்டங்கள் திரும்பவும் ஏற்றுமதி நாட்டிற்கு வருதல் இயலாது. அந்த வித்தியாசம் கடத்துச் செலவிற்கும் அதிகமாக இருக்குமேயானல், பண்டங்கள் திரும்பவும் ஏற்றுமதி நாட்டிற்கு வருகின்ற வாய்ப்பு உண்டு; எனினும் அதனைத் தடுத்திட வரிவிதித்தல் அவசியம்.

உள்நாட்டில் சர்வாதீனம் நிலவுதல், திணிப்பு வெற்றி பெறுதற்குரிய மற்ருெரு விதியாகும். உள்நாட்டில் நிறைவுப் போட்டி (perfect competition) நிலவும்பொழுது, உள்நாட்டு விலை இறுதிநிலைச் செலவிற்கும், சராசரி செலவிற்கும் சமமாகவிருக்கும்; தேவைக்கோடு அளவிறந்த நெகிழ்ச்சியுடையதாக (perfectly elastic) இருக்கும். நிலவுகின்ற விலையில் ஒவ்வோர் உற்பத்தியாளரும் தன்னல் முடிந்த–தான் விரும்புகின்ற அளவிற்கே பண்டத்தினை விற்கமுடியும். இத்தகு சூழ்நிலைகளில், ஊக்கக்கொடைகள் (bounties) ஏதும் வழங்காததாக எடுகோளிட்டுக் கொள்ளும்பொழுது, உள்நாட்டு விலையைவிட குறைந்த விலைக்கு வெளிநாட்டில் விற்பதற்கு எந்த உற்பத்தியாளரும் முன்வரமாட்டார்கள். சர்வாதீனமோ அல்லது சர்வாதீனப் போட்டியோ (monopolistic competition) நிலவும்பொழுது, இறுதிநிலைச் செலவு அல்லது சராசரிச் செலவினைவிட உள்நாட்டு விலை உயர்ந்திருக்குமாதலால், சர்வாதீன உற்பத்தியாளர்கள் உள்நாட்டு விலைக்கும் குறைந்த விலையில் வெளிநாட்டில் விற்பர்.

திணிப்பினுல் ஏற்படும் விளைவுகள்

விடாமல் நீண்ட காலத்திற்குத் தொடர்ந்திடும் திணிப்பு, இறக்குமதி நாட்டிற்கு ஆதாயமானதாகவும், ஏற்றுமதி நாட்டிற்குத் தீங்கு பயப்பதாகவும் இருக்கும். ஏற்றுமதி நாட்டுத் துய்ப்போர் உயர்ந்த சர்வாதீன விலை அளித்திட நேரிடும். எந்த நாட்டில் திணிப்பு நிகழ்கிறதோ அந்த நாட்டின் கண்ணேட்டத்திலிருந்து பார்க்கும்பொழுது, வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் குறைந்த செலவில் உற்பத்தி செய்து விற்பனை செய்வதால் ஏற்படுகின்ற விளைவுகளைப் போலவே திணிப்பினுல் ஏற்படும் விளைவுகளும் ஒரே மாதிரியாகவே இருக்கும் என்பது புலனுகிறது. துய்ப்போரைப் பொறுத்த வரையில் இறக்குமதிகள் மலிவாகவும் கிடைக்கின்றன; விடாது நீண்டகாலம் தொடர்ந்திடும் திணிப்பு என்பதனுல், மலிவாகக் கிடைத்தல் நிலையான அடிப்படையிலும் கிடைக்கின்றன. இதற்குத் தக்காற்போல. போட்டியிடும் உற்பத்தியாளர்களும் தங்களுடைய உற்பத்தியையும் விற்பனையையும் சரிசெய்து கொள்ளமுடியும். திணிப்பின் காரணமாகக் காப்பு வழங்கப் படவேண்டியது அவசியமில்லை என்பது இதனுல் தெரிய வருகிறது.

இடையிடையே மேற்கொள்ளப்படும் திணிப்பு, உள்நாட்டு நிறுவனங்களுக்கு நன்மை பயப்பது அன்று. துய்ப்போர் பெறும் ஆதாயம் குறுகியகாலத்திற்கே. ஆனுல், வாணிபத்தின்மீது நீண்ட கால விளைவுகளை உண்டாக்கும், உள்நாட்டுப் போட்டியாளர்களை ஒழிக்கின்ற அளவிற்குப் பண்டங்களைத் திணித்திடும் வெளிநாட்டு விற்பனையாளர்கள் இறுதியில் விலையினை உயர்த்தித் துய்ப்போருக்கு ஊறு தேடுவார்கள்.

சுங்கத் தீர்வையைவிட கேடுவிளைப்பது திணிப்பு என்று பல பொருளாதார நிபுணர்கள் கருதுகிருர்கள். உள்நாட்டு மக்களுக்கும் வெளிநாட்டினருக்குமிடையிலே ஓர் அரசாங்கம் வேறுபாடு கற்பிப்பதை ஏற்றுக்கொள்ளும் இந்த நிபுணர்கள், ஓர் உற்பத்தி நிறுவனம் திணிப்பினைக் கடைபிடிக்கும் வகையில் இவ் வேறுபாட்டினைக் கடைபிடிப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. தனி நபருக்கோ அல்லது தனிக் குழுவின ருக்கோ ஆதாயம் தரத்தக்க முறையில் அரசாங்கக் குறுக்கீடு அமைந்தாலும் கூட அது பொது நன்மையை வளர்க்கக் கூடியது என்று இப் பொருளாதார விற்பன்னர்கள் நம்பு கின்றனர். ஆனுல், தனி நிறுவனங்கள் இவ்வாறு நடந்துகொள்

வதைச் சர்வாதீனம் என்றும், தங்களுடைய சொந்த நலனுக்கே அவை பாடுபடுகின்றன என்றும் அவர்கள் குறை கூறுகிறார்கள். திணிப்புச் சார்ந்த விளக்கங்களை வழங்கிடும்பொழுது, கிண்டெல்பெர்கர் இக் கருத்தினைத் தந்துள்ளார்.

உற்பத்திச் செலவு விதிகளைப் பொறுத்து, குறிப்பிட்ட நாட்டின் நிரந்தரத் திணிப்பு எத்தகையவிளைவுகளை உண்டாக்குகிறது என்பதனைக் கவனிப்போம். திணிப்பினை மேற்கொள்ளும் நாட்டில் தேவையில் மாற்றமேதுமில்லை என எடுகோளிட்டுக் கொள்வோம். வெளிநாட்டுச் சந்தையில் குறைந்த விலையில் பண்டத்தைத் திணிப்பதால், உற்பத்தி பெருகுகிறது. திணிப்பினை மேற்கொள்ளும் நாட்டில் வளர்ந்துசெல் செலவு விதி செயல்படுவதாகக் கொள்வோம். உற்பத்தி பெருகப் பெருக, உற்பத்திச் செலவும் உயரும்; உள்நாட்டில் விலை உயரும். குறைந்து செல் செலவு விதி செயல்படும்பொழுது, உற்பத்திச் செலவு குறைந்து உள்நாட்டு விலை வீழும். மாறாச் செலவுவிதி நிலவும் பொழுது உற்பத்திச் செலவும் விலையில் மாறாமல் இருக்கும்.

விலை வேற்றுமைப் படுத்துதல் மூலமாக நிகழும் திணிப்பு, எப்பொழுதுமே வெளிநாட்டுச் சந்தைக்குச் சாதகமாகவே இருக்கும் என்று எண்ணி விடக் கூடாது. சர்வாதீன ஆதாயத்தின் உச்ச அளவிற்குப்பெறும் நோக்குடன் வெளி நாட்டுச் சந்தையிலும் உயர்ந்த விலைக்கு விற்க நேரிடலாம்; சில வேளைகளில் உள்நாட்டுச் சந்தையைவிட வெளிநாட்டுச் சந்தையில் கூடுதலான விலையில் விற்றால்தான் உச்ச அளவு இலாபம் கிடைத்திடும். குறிப்பாக, உள்நாட்டுத் தேவையை விட வெளிநாட்டுத் தேவை நெகிழ்ச்சி குறைந்ததாக இருந்தால் தான் உள்நாட்டு விலையைவிடக் கூடுதலான விலையில் வெளிநாட்டில் விற்பனை செய்திட முடியும். இரு நாடுகளிலும் தேவை நெகிழ்ச்சி ஒரே மாதிரியாக இருந்தால் திணிப்பு நிகழ வழியில்லை.

திணிப்பிற்கு எதிரான நடவடிக்கைகள்

திணிப்பினை மேற்கொள்ளும் நாட்டினை வெளிநாடு அல்லது ஏற்றுமதி நாடு என்றும் திணிப்பினால் பாதிக்கப்படும் நாட்டினை உள்நாடு அல்லது இறக்குமதி நாடு என்றும் குறிப்பிடுவோம். ஏற்றுமதி நாட்டின் விலைக்கும் இறக்குமதி நாட்டின் உள்நாட்டு விலைக்கும் உள்ள வேறுபாட்டின் அளவிற்குச் சமமாகச் சுங்கத்தீர்வை விதித்துத் திணிப்பினைத் தடுத்திடலாம்.

ஆனால், இவ் வேறுபாட்டினை நிர்ணயிப்பதுதான் கடினம். இறக்குமதி நாட்டிலுள்ள சர்வாதீனவாதி உள்நாட்டுச் சந்தையைப் பல பிராந்தியச் சந்தைகளாகப் பிரித்து, வெவ் வேறு பிராந்திய சந்தைகளில் வெவ்வேறு விலைக்குப் பண்டத்தினை விற்பான். உள்நாட்டுச் சந்தையிலேயே பல்வேறு விலைகள் நிலவும் பொழுது, உள்நாட்டு விலைக்கும் ஏற்றுமதி நாட்டு விலைக்கும் உள்ள வேறுபாட்டினைக் கணக் கிடுவது சிக்கல் நிறைந்ததாகும். சில வேளைகளில், பண்டங் களின் விலையை முன்கூட்டியே, அதாவது சந்தைக்கு விற்ப னைக்குச் செல்வதற்கு முன் கணக்கிடவியலாது. மேலும், உள்நாட்டுச் சந்தையிலும் வெளிநாட்டுச் சந்தையிலும் விற்ப னைக்கு வரும் பண்டங்கள் பலதரப்பட்டவை. சுங்கத்தீர்வை உயர்ந்து இருந்தாலொழிய திணிப்பினை அகற்றுவது கடினமே. சுங்கத்தீர்வை மிகவும் உயர்ந்திருந்தாலும் நல்லதல்ல; திணிப்பினை மாத்திரமல்லாமல் சாதாரண அளவுள்ள இறக்கு மதிகளைக்கூட பாதித்துவிடும். திணிப்பு அகற்றப்படும் அதே நேரத்தில், சாதாரண சராசரியளவு இறக்குமதிகளும் பாதிக்கப் படாமல் இருக்கவேண்டிய வகையில் சுங்கத்தீர்வை விதிக்கப் படவேண்டும்.

'கோட்டா'க்கள் மூலமாகவும், நாணய மாற்றுக் கட்டுப் பாட்டின் மூலமாகவும் தேவையான அளவிற்கு இறக்குமதியை நிர்ணயித்துவிட்டால், திணிப்பு தானே ஒடுங்கிவிடும். திணிப்பினை ஒழிப்பதில் சுங்கத் தீர்வையைவிட இறக்குமதியின் அளவினைக் கட்டுப்படுத்திடும் 'கோட்டா', நாணயமாற்று கட்டுப்பாடு போன்றவை உறுதி வாய்ந்தவை.

உடன்படிக்கை செய்துகொண்டு, இறக்குமதியான பண்டத்தினையே மீண்டும் வரி விதிப்பு இல்லாமல் பண்டம் உற்பத்தியான நாட்டிற்கே திரும்பவும் அனுப்பிவிடுதல் மூலமும் திணிப்பைத் தவிர்க்க முடியும். ஆனால், ஏற்றுமதி நாட்டு விலைக்கும் இறக்குமதி நாட்டு விலைக்கும் இடையிலுள்ள விலைவேறுபாடு கடத்துச் செலவை (transport cost) விடக் குறைவாக இருந்தால் திரும்பவும் உற்பத்தி நாட்டிற்கு அனுப் படும் முறை வெற்றியுராது.

திணிப்புத் தடுப்பு முறைகள் நன்மையைவிட தீமை யையே செய்துள்ளது என்பது அனுபவம். வெளிநாட்டினரின் பண்டம் உள்நாட்டு விலையைவிட குறைந்த விலைக்குக் கிடைத்தபோதிலும் வெளிநாட்டுப் போட்டியைத் தவிர்க்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கு

என்றே திணிப்பிற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள் ளுதல் தீமையே பயக்கும். திணித்திடும் குறிக்கோளுடன் அல்லாமல், உற்பத்திச் செலவு குறைந்திருக்கும் காரணத்தி னாலேயே ஏற்றுமதி நாடு குறைந்த விலைக்கு விற்பது இறக்குமதி நாட்டுத் துய்ப்பாளருக்கு நன்மை பயப்பதே. எனினும் தங்க ளுடைய ஊன்றிய நலன்களைக் காத்திடும் உள்நோக்குடன் திணிப்புத் தடுப்பு முறைகளைக் கையாளுமாறு அரசாங்கத்தைத் தூண்டுவர். இன்னும் சொல்லப் போனால், திணிப்பு நீங்கிய பின்னரும் கூட, திணிப்புத் தடுப்பு முறைகள் தொடர்ந்திருக்க வேண்டும் என்பதே இறக்குமதி நாட்டு உற்பத்தியாளரின் உள்நோக்கு நிறைந்த விருப்பம்.

இறுதியாக, காலம் சம்பந்தப்பட்ட தொல்லை ஒன்று இருக்கிறது. சுங்கத் தீர்வை குறித்த முன்னறிவிப்பு தரப்பட் டால் வரி விதிப்பு உறுதியாக அமுலுக்கு வருவதற்கு முன்னரே, திணிக்கப் பெற்ற பண்டம் சந்தையினுள் நுழைந்து விடும். முன்னறிவிப்பு இல்லாதபோது, இறக்குமதி வாணி பத்தில் தெளிவற்ற போக்கு நிலவுகிறது. ஏனெனில், எந்த குறிப்பிட்ட பேரமும் திணிப்புச் சார்பு உடையது என்ற முத்திரை பெற்றுவிடுமோ என்ற அச்சம் உண்டாகிறது. திணிப்புத் தடுப்பு நடவடிக்கைகள் நன்மை விளைத்திடுமா, தீமை விளைத்திடுமா என்பது தடுப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளும் நாட்டின் நோக்கத்தினைப் பொறுத்தது.

11. நாணய மாற்றுக் கட்டுப்பாடு

(Exchange Control)

பொருள் விளக்கம்

நாணய மாற்று வீத மட்டத்தினை (level of exchange rate) கட்டுப்படுத்தவும், நிர்ணயிக்கவும் ஓர் அரசாங்கம் குறுக்கீடு செய்வதே நாணய மாற்றுக் கட்டுப்பாடு (exchange control) என வழங்கப்படும். மைய பாங்கு (central bank) மூலம் உள்நாட்டு நாணயத்தை ஒழுங்குபடுத்துதல், மூலதன இயக்கத்தை ஒழுங்குபடுத்துதல், நாணயமாற்று நிலையாக்க நிதியின்மூலம் (exchange stabilisation fund) கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றி நாணயமாற்றுக் கட்டுப்பாட்டினை மேற்கொள்வர். சுருங்கக் கூறின், அன்னியச் செலாவணியின் (foreign exchange) தேவையையும் அளிப்பையும் ஒழுங்குப்படுத்திச் சமநிலைக்குக் கொணரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதே நாணயமாற்றுக் கட்டுப்பாடு ஆகும்.

பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் பெற்றிடும் அன்னியச் செலாவணியைத் தன்னிச்சையாகப் பயன்படுத்திட முடியாது. நாட்டிலுள்ள நாணய மாற்றுக் கட்டுப்பாட்டு ஏஜென்சியிடம் ஏற்றுமதியாளர்கள் தாங்கள் பெற்ற அன்னியச் செலாவணியைக் கொடுத்துவிட்டு அதற்கீடாக உள்நாட்டு நாணயத்தைப் பெறுவர். இறக்குமதியாளர்கள் தாங்கள் அனுமதி பெற்று இறக்குமதி செய்த பண்டங்களுக்கு ஈடாக வெளிநாட்டு உற்பத்தியாளருக்குத் தரவேண்டிய அன்னியச் செலாவணியை மேலே குறிப்பிட்டுள்ள ஏஜென்சி மூலமே செலுத்த முடியும். ஏற்றுமதியாளர்களோ இறக்குமதியாளர்களோ தங்கள் சொந்த விருப்பு, வெறுப்புக்கு ஏற்றாற்போல அன்னியச் செலாவணியைப் பயன்படுத்திட முடியாது.

நாணய மாற்றுக் கட்டுப்பாடு வெற்றி பெற வேண்டுமானால், ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் சில உறுதி வாய்ந்த

ஒழுங்குபடுத்தும் முறைகளைப் பின்பற்ற வேண்டும். நாணய மாற்றுக் கட்டுப்பாடு, வாணிபக் கட்டுப்பாடுகளை உள்ளடக்கியதே !

வரலாற்றுச் சூழல்

முதல் உலகப் போரின் போதும், அதனைத் தொடர்ந்தும் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கங்களின் தலையீடு அதிகமாயிற்று. "தங்களுடைய அரசியல், பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றிடும் நோக்குடன் பல்வேறு நாடுகளிலிருந்த சமதர்மவாதிகளும் பாசிஸ்டுகளும் பன்னாட்டு ரீதியாக நடைபெறும் மூலதனப் பெயர்ச்சியின்மீது முழுக் கட்டுப்பாடு விதித்திட வேண்டும் என்று கனவு கண்டனர்" என பால் ஐன்ஸிக் (Paul Einzig) வருணிக்கிறார்.[1] பல நாடுகள் 1926ஆம் ஆண்டு முடிய அன்னியச் செலாவணிமீது கட்டுப்பாடு விதித்து வந்தனர். 1926 முதல் 1931 முடிய உள்ள ஆண்டுகளில் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது என்றாலும் முதல் உலகப் போருக்கு முன்னர் இருந்த நிலை கிட்டவில்லை. உலகப் பெரும் மந்தம் 1931-ல் ஏற்பட்டது. மீண்டும் நாணயமாற்றுக் கட்டுப்பாடு தீவிரமாக்கப்பட்டது.

பொருளாதார மந்தத்தின் காரணமாக, திடீரெனப் பெருமளவிற்கு மூலதனப் பெயர்ச்சி ஏற்பட்டுவிட்டதைத் தடுத்திடும் அளவுக்குப் பொன் சேமிப்புக்களோ அன்னியச் செலாவணிச் சேமிப்புக்களோ இல்லாமையால் மத்திய, கிழக்கு ஐரோப்பிய கடனாளி நாடுகள் நாணயச் செலுத்துகைகள் (payments) மீது கட்டுப்பாடுகளை விதித்தன. நாட்டுப் பொருளாதாரத்தின் மீதும் பணம் சார் அமைப்பின் (monetarry system) மீதும் நம்பிக்கை வறண்டிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக அந் நாடுகள் உள்நாட்டு நாணய மதிப்புக் குறைப்பினைச் (currency depreciation) செய்யவில்லை. விலையிறக்கமோ நாணய மாற்று மதிப்பிறக்கமோ (exchange depreciation) ஏற்றுமதிகளைத் தூண்டமாட்டா என்ற காரணத்தினாலும் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. நாணய மாற்றுக் கட்டுப்பாடு ஒன்றே மருந்து என்ற நிலை அந் நாடுகளுக்கு ஏற்பட்டது.

இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்னர், முன்னேறியுள்ள சில உலக நாடுகள் மீண்டும் பொருளாதாரத் தொடர்பு

[1] பால் ஐன்ஸிக்: 'நாணயமாற்றுக் கட்டுப்பாடு' (Paul Einzig: 'Exchange Control' ப. 8.

களைப் புதுப்பித்துக் கொள்ளவும், போரால் சீர்கேடுற்ற நாடுகளின் பொருளாதாரங்களைத் செப்பனிடவும் முற்பட்டன. என்றாலும், திட்டமிட்ட பொருளாதாரத்தை மேற்கொண்டு முதலாக்கத்தை (capital formation) வலுக்கட்டாயமாகத் தூண்டிடும் வகையில் செயல்படத் தொடங்கிய பின்தங்கிய நாடுகள் அரசாங்கத் தலையீடுடைய பொருளாதாரச் சீரமைப்பு வேலைகளில் ஈடுபட்டன. இயல்பாகவே, அந் நாடுகள் செலுத்துகைக் கட்டுப்பாடுகளை (payments restrictions) விதித்தன. உலகப்போரைத் தொடர்ந்து உருவான பணவீக்கச் சூழ்நிலையும் பின்தங்கிய நாடுகளை நாணயமாற்றுக் கட்டுப் பாட்டினை மேற்கொள்ளும் வகையில் கட்டாயப்படுத்தின.

1950–ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் நாணயமாற்றுக் கட்டுப்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்த்தப்பட்டன. என்றாலும் முதல் உலக யுத்தத்திற்கு முன்னிருந்த தாராள நிலை முழுதும் உண்டாகவில்லை. நாணயமாற்றுக் கட்டுப்பாடு குறித்து 1964–ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள பதினைந்தாவது ஆண்டறிக்கையில் இக் கருத்துபட பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பு (International Monetary Fund) ஒருண்மையினைத் தந்துள்ளது. நாணயமாற்றுக் கட்டுப்பாட்டினைத் தீவிரப் படுத்தும் காரியத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்கின்ற நாடுகளுக்கும் இடையில் நிரம்ப வேறுபாடுதோன்றுகிறது என்று அந்த நிதியமைப்பு அறிக்கை குறிப்பிடுகிறது. நடப்புப் பேரங்களுக்குத் தேவைப்படும் அன்னியச் செலாவணியைச் சேமிப்பதிலும் பயன்படுத்துவதிலும் சில முக்கிய கட்டுப்பாடுகளை விதித்துத் தங்களுடைய வெளிநாட்டுப் பொருளாதாரத் தொடர்புகளைத் தொழில் வளர்ச்சியும் வருமானப் பெருக்கமும் உள்ள நாடுகள் உறுதிப்படுத்திக் கொள்கின்றன என்றும் அவ்வறிக்கை குறிப்பிடுகிறது. ஆனால், குறைந்த வருமானத்தை ஈட்டுகின்ற நாடுகள் அனைத்தும் அல்லவென்றாலும் அவற்றில் பல நாடுகள் வளர்ச்சிப் படிமுறையை (development process) மேற்கொண்டிருப்பதால் இத்தகு நாணயமாற்றுக் கட்டுப் பாடுகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம் என்றுணர்ந்து செயல்படுகின்றன என்பதாகவும் அவ்வறிக்கை மேலும் குறிப் பிடுகிறது.

குறிக்கோள்கள்

அரசியல் காரணங்களுக்காகவும், மனோபாவ ரீதியான காரணங்களுக்காகவும் உள்நாட்டு மூலதனம் அளவுமீறி வெளியேறுதல் உண்டு. தங்களுடைய கடனீட்டுப் பத்திரங்களையும்

(securities) பாங்குவைப்புகளையும் (bank deposits) அன்னியச் செலாவணியாகச் சிலர் மாற்ற முயலும் போது மூலதன வெளியேற்றம் நடைபெறுதல் உண்டு. அதிக வட்டியை எதிர் பார்த்தும், முதலீட்டு வாய்ப்பினை எதிர்பார்த்தும் மூலதனம் வெளிநாடுகளுக்குச் செல்வது உண்டு. அளவுமீறிய மூலதன வெளியேற்றம் இயற்கைக்குப் புறம்பான முறையில் நிகழுமே யானால், உள்நாட்டு நிதித்துவ அமைப்பு முறிந்துவிடும். தேவையற்ற மூலதன வெளியேற்றத்தைத் தடுத்திடப் பல மறைமுக முறைகளிருப்பினும், நேரடியான நாணயமாற்றுக்கட்டுப்பாடே சிறந்த முறையாகும்.

தேவையான அளவிற்கு அன்னியச் செலாவணி சேமிக்கப்பட்டிருந்தால்தான் நாட்டிற்குத் தேவையான இன்றியமையாத பண்டங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ள முடியும். பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை மேற்கொண்டுள்ள நாடுகள் இயந்திரங்கள் போன்ற முதற் பொருள்களை (capital goods) முன்னேறிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளவும் அன்னியச் செலாவணி தேவைப்படுகிறது. இன்னும் தொழில் நுண்ணறிவு, அவசியமான கச்சாப் பொருள்கள் முதலானவற்றை இறக்குமதி செய்யவும் அன்னியச் செலாவணி நிறையத் தேவைப்படும். தேவைப்படுமளவுக்கு அன்னியச் செலாவணியை மீத்திட வேண்டுமெனில், செல்வமுடையோர் துய்த்திட விரும்பும் ஆடம்பரப் பொருள்கள் போன்ற தேவையில்லாத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துகின்ற அளவிற்கோ அல்லது தடை செய்திடும் அளவிற்கோ செயல்படவேண்டும். அவ்வாறு செயல்பட நாணயமாற்றுக் கட்டுப்பாடே சிறந்த வழியாகும். தேவையை அனுசரித்து இறக்குமதிகளைத் தேர்ந்தெடுப்பதில் இக் கட்டுப்பாட்டு முறை நல்லவண்ணம் பயன்படும்.

வெளிநாட்டுக் கடன்கள்மீது ஏறியுள்ள வட்டியினைச் செலுத்தவும், கடன்களைத் தீர்க்கவும் அன்னியச் செலாவணி தேவைப்படும். ஏற்றுமதிகளைப் பெருக்கி உபரி உண்டாக்கினால்தான் அன்னியச் செலாவணியினை ஈட்டிச் சேமிக்க முடியும். மாற்றுக் கட்டுப்பாடு இவ்வாறு வெளிநாட்டுக் கடன் பொறுப்புகளைக் குறைத்திடவும், முடிந்தால் நீக்கிடவும் பயன்படும். மேலும் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் நிலவிடும் சமநிலையின்மையைப் போக்கவும் நாணயமாற்று வீதத்தினைக் குறிப்பிட்ட மட்டத்தில் நிலைக்கச் செய்திடவும் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டினை ஒரு நாடு மேற்கொள்ளலாம்.

இன்றியமையாத கச்சாப் பொருள்களை மலிவாக இறக்குமதி செய்துகொள்ளும் நோக்குடன் நாணயத்திற்கு மிகை மாற்று மதிப்பு உண்டாக்கிட வேண்டி நாணயமாற்றுக் கட்டுப் பாட்டினை மேற்கொள்ளுதல் உண்டு. அது போலவே வெளி நாட்டுக் கடனைச் சொந்த நாட்டு நாணயத்தில் மலிவாகத் தீர்த்திட, நாணய மாற்றுக் கட்டுப்பாட்டின்மூலம் மிகை மாற்று மதிப்பினை (currency overvaluation) உண்டாக்குவதும் உண்டு. உதாரணமாக, முதல் உலகப் போர் முடிந்தவுடன், ஜர்மனி, ஹங்கேரி, ஆஸ்திரியா போன்ற நாடுகளெல்லாம், தங்க ளுடைய யுத்தகால வெளிநாட்டுக் கடன்களைச் சுலபமாகத் தீர்ப்பதற்காக வேண்டி மாற்றுக் கட்டுப்பாட்டின்மூலம் தங்க ளுடைய நாணயங்களின் வெளிநாட்டு மதிப்பை உயர்த்திவிட் டார்கள்.

இறக்குமதிகளைக் குறைத்து ஏற்றுமதிகளைப் பெருக் கிடவும் தங்களுடைய நாணயத்தின் மாற்று மதிப்பினைக் குறைத்திடுவார்கள். குறை மாற்று மதிப்பினை (currency under-valution) நாணயமாற்றுக் கட்டுப்பாட்டின்மூலமே செய்திடுவர். நாணயத்தின் வெளிநாட்டு மாற்று மதிப்பைக் குறைத்து, ஏற்று மதிகளை மலிவாக்கி இறக்குமதிகளை விலையுயர்ந்ததாகச் செய்து அயல்நாட்டுச் செலுத்து நிலையினைச் சாதகமாக்கிடுதலே நாணய மாற்றுக் கட்டுப்பாட்டின் குறிக்கோளாகும். மேலும், உள்நாட்டுத் தொழில்களுக்குக் காப்புதரும் நோக்குடனும், வெளிநாட்டில் ஏற்படக் கூடிய பொருளாதார மாற்றங்களும் நெருக்கடிகளும் உள்நாட்டின் திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்காது காத்திடும் நோக்குடனும் நாணய மாற்றுக் கட்டுப்பாட்டினைச் செயல்படுத்துவதுண்டு.

மாற்றுக் கட்டுப்பாட்டிற்கான வழி முறைகள்

'நாணய மாற்றுக் கட்டுப்பாடு' எனும் தனது நூலில் பால் ஐன்ஸ்க் (Paul Einzig) அருமையான வழிமுறைகளை வகுத்துத் தந்துள்ளார். நாணயமாற்றுக் கட்டுப்பாட்டினைச் செயல்படுத் துவதற்கு ஏறத்தாழ நாற்பத்தொன்று வழிமுறைகளைப் பட்டியல் படுத்தியுள்ளார். இவ் வழிமுறைகளை நேரடியான முறைகள் என்றும் மறைமுக முறைகள் என்றும் இரண்டு வகை களாகப் பிரிக்கலாம். நாணயத்தின் மாற்று மதிப்பினை ஏற்றி டவோ அல்லது இறக்கிடவோ அரசாங்கம் மேற்கொள்ளும் இடையீடு (intervention) நேரடி வழி முறைகளுள் ஒன்றுகும். அரசாங்க இடையீடு என்பது, மாற்று வீதத்தினை மேலிறுக்குதல் (pegging up) அல்லது கீழிறுக்குதல் (pegging down) மூலமாக மாற்றுதல் என்பதனைக் குறிக்கும். நாணய மாற்றுத் தடை

களும் (exchange restrictions) நேரடியான வழி முறையைச் சார்ந்தவையே. முடங்கிய கணக்கு வைப்பு (blocked accounts); ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீத முறைகளெலாம் (multiple exchange rates) நாணய மாற்றுத் தடைகளைச் சார்ந்தவையே. நேரடி வழி முறைகளில் நாணய மாற்று விடுவிப்பு (exchange clearing), அன்னியச் செலாவணிக் கடன் திருப்புதல் தவணை முறை (transfer moratoria) போன்றவைகளும் அடங்கும். ஏற்றுமதி உதவிக் கொடைகள் (export subsidies), இறக்குமதி வரிகள், வட்டிவீத மாற்றங்கள் மூலம் நாணய மாற்று வீதத்தில் மாற்றங்களை உண்டாக்குதல் போன்றவை யனைத்தும் நாணய மாற்றுக் கட்டுப்பாட்டின் மறைமுக வழிமுறைகளாகும். இவ் வழிமுறைகளை ஒன்றன்பின் ஒன்றாக ஆய்வோம்.

இடையீடு (Intervention)

தன்னுடைய நாணயத்தின் வெளிநாட்டு மாற்று வீதத்தை உயர்த்தவோ குறைக்கவோ ஓர் அரசாங்கம் அன்னியச் செலாவணிச் சந்தையில் குறுக்கிடுவதையே இடையீடு என்கிறோம். ஆனால், பொதுவாக ஓர் அரசாங்கம் தனது நாட்டு நாணயத்தின் மாற்றுவீதத்தை உயர்த்தும் நோக்குடனேயே அன்னியச் செலாவணிச் சந்தையில் இடையீடு செய்கிறது. அன்னியச் செலாவணிச் சந்தையில் அன்னியச் செலாவணிக்கு ஈடாகத் தனது நாட்டு நாணயத்தை வாங்குகின்ற பொறுப்பினையும் விற்கின்ற பொறுப்பினையும் ஓர் அரசாங்கமோ அல்லது அதன் அதிகாரத்திற்கு உட்பட்டு அதன் சார்பில் மைய பாங்கோ ஏற்றுக் கொள்வதனையே இடையீடு என்கிறோம். இறுக்குதல் நடவடிக்கைகள் (pegging operations) மூலம் தனது நாட்டு நாணயத்தின் மாற்று வீதத்தை நிர்ணயிப்பதையே இடையீடு என்கிறோம். இறுக்குதல் நடவடிக்கை மூலம் நிர்ணயிக்கப் பெற்ற மாற்று விதம் குறுக்கீடுகளற்ற சுயேட்சைச் சந்தையில் நிலவும் மாற்று வீதத்திற்காக மாறுபட்டிருக்கும். முதல் உலக யுத்தத்தின்போது, ஒரு பவுண்ட்ஸ்டர்லிங்கின் (pound sterling) மதிப்பு 4. 765 டாலர்கள் என்று அமெரிக்க டாலருடன் மேலிறுக்கி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. யுத்தம் முடிந்த பிறகு அரசாங்க இடையீடு நீக்கம் பெற்றவுடன், சுயேட்சை சந்தையில் பவுண்ட் ஸ்டர்லிங்கின் மதிப்பு 4. 765 டாலர்களிலிருந்து 3. 40 டாலர்களுக்குக் குறைந்தது.

மேலிறுக்குதல் அல்லது கீழிறுக்குதல் மூலமாக மாற்று வீதத்தை நிர்ணயித்து நிலைபெறச் செய்தாலும், அரசாங்க

இடையீட்டின் குறிக்கோள் அதுவேயன்று, இறுக்குதல் நடவடிக்கைகளைப்பற்றி கவலைப்படாமல் அரசாங்க இடையீடு செய்திடமுடியும். அன்னியச் செலாவணிச் சந்தையில் அயல் நாட்டு நாணயத்திற்கு எதிராக உள்நாட்டு நாணயத்தை வாங்குவதன் மூலமும் விற்பதன் மூலமும், ஓர் அரசாங்கம் இடையீடு செய்து, உள்நாட்டு நாணயத்தின் மாற்றுமதிப்பை நிலைநிறுத்திடவோ அல்லது குறைத்திடவோ செய்திடும். நிலையான மாற்று மதிப்பினை உண்டாக்கிடும் நோக்கம் அரசாங்க இடையீட்டில் இல்லை. அன்னியச் செலாவணிச் சந்தையில் நாணயங்களின் மாற்று வீதங்கள் தேவை, அளிப்பு ஆகிய சக்திகளின் இயக்கத்தைப் பொறுத்தது. தமது நாட்டு நாணயத்தின் மாற்றுவீதத்தை உயர்த்திட விரும்பும் அரசு, அன்னியச் செலாவணிச் சந்தையில் அன்னியச் செலாவணியைத் தந்து, தமது நாட்டு நாணயத்தை வாங்குவதன் மூலமாகத் தமது நாட்டு நாணயத்தின் அளிப்பினைச் சந்தையில் குறைத்திட முனையும். அன்னியச் செலாவணிச் சந்தையில் ஒரு நாட்டு நாணயத்தின் தேவையைவிட அளிப்பு குறைவாக இருக்கும்பொழுது, அந் நாணயத்தின் மாற்றுவீதம் உயரும்; அளிப்பைவிடத் தேவை குறைந்திருக்கும்பொழுது மாற்று வீதம் தாழும். இது யாவரும் அறிந்த, சாதாரண தேவை-அளிப்பு விதியே. மேலிறுக்குதல்[2] நடவடிக்கையை மேற்கொள்ளும் அரசு அன்னியச் செலாவணிச் சந்தையில் அன்னியச் செலாவணியைத் தந்து தமது நாட்டு நாணயத்தை வாங்கிக்கொள்ள முன் வந்தால்தான் உயர்த்தப்பட்ட மாற்று வீதம் நிலைக்கும்; அதுபோலவே, கீழிறுக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தால், தமது நாணயத்தைத் தந்து அன்னியச் செலாவணியை வாங்கிட முன்வருதல் வேண்டும்.

உள்நாட்டு நாணயங்களையும் வெளிநாட்டு நாணயங்களையும் அன்னியச் செலாவணிச் சந்தையில் வாங்கியும் விற்றும் நிலையான மாற்றுவீதங்களை முறையே தங்களுடைய சொந்த நாணயங்களுக்கு இறுக்குதலுக்கென (pegging)த் தொடார்ந்து 1932, 1934, 1936-ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு போன்ற நாடுகளில் மாற்றுச் சமனுக்கல் கணக்கினையோ (Exchange Equalipation Account) அல்லது மாற்று நிலையாக்க நிதியினையோ (Exchange Stabilisation Fund)

[2] Pegging up என்ற கலைச் சொல்லிற்கு மேலிறுக்குதல் என்றும் Pegging down என்ற சொல்லிற்குக் கீழிறுக்குதல் என்றும் சொல்லாக்கம் செய்தோம். என்றாலும். நூலாசிரியர்கள் வசதி குறித்து Pegging up என்ற தொடரின் பொருளிலியே Pegging என்ற சொல்லைப் பயன்படுத்துதற்கு இணையாக நாமும் இறுக்குதல் எனும் சொல்லைப் பயன்படுத்துவோம்.

அந் நாட்டு அரசாங்கங்கள் அமைத்தன. இங்கிலாந்து நாட்டில் 1932–இல் மாற்றுச் சமனுக்கல் கணக்கு நிறுவப் பட்டது. அயல்நாட்டுச் செலுத்து நிலையில் குறுங்காலத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களும் குறுங்கால மூலதன இயக்கங் களும் மாற்றுவீதத்தில் உண்டாக்கும் ஏற்ற இறக்கங்களை அகற்றிடும் நோக்குடன் இக் கணக்கினை இங்கிலாந்து ஏற்பாடு செய்தது. நீண்டகாலத்தில் அமைந்திடும் மாற்றுவீதத்தை இம் மாற்றுச் சமனுக்கல் கணக்கு பாதிக்காது. வெளிநாட்டு நாணயம் மிகுதியான அளவிற்கு உள்ளே வந்தாலும், உள் நாட்டு நாணயம் மிகுதியான அளவிற்கு வெளியே சென்றாலும் ஒரு நாட்டின் மாற்றுச் சமனுக்கல் கணக்கு, பணச் சந்தையில் கருவூல உண்டியல்களை (treasury bills) விற்க முற்படும். இவ் வுண்டியல்களைப் பெரும்பாலும் வர்த்தக பாங்குகள் விலைக்கு வாங்கும். உண்டியல் விற்பனை மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு அன்னியச் செலாவணிச் சந்தையில் தேவைக்கு அதிகமான அளவில் இருப்பு உள்ள அன்னியச் செலா வணியை வாங்கி, அதன் அளிப்பைத் தேவையின் அளவிற்குச் சுருக்கி, இம் மாற்றுச் சமனுக்கல் கணக்கு எனும் அமைப்பு மாற்றுவீதத்தின் மீது எவ்வித மாற்றமும் ஏற்படாதவாறு தடுத்துவிடும். இவ்வாறு வாங்கப் பெற்ற அன்னியச் செலா வணி இருப்புகளைப் பொன்னாகவும் மாற்றிக் கொள்ளும். வெளிநாட்டு நாணயம் அதிக அளவில் வெளியேறுதலைத் தடுத்திட வேண்டி, சேர்த்து வைத்துள்ள பொன்னை விற்று, கருவூல உண்டியல்களை மீண்டும் அவ்வமைப்பு விலைக்கு வாங்கிடும்.

நாணயமாற்று வீதத்தினை நிலைபெறச் செய்திடும் இம் முறையானது, ஒரு நாட்டின் கடனளிப்பு முறையில் சிக்கலை உண்டாக்குகிறது. வெளிநாட்டுப் பணம் உள்ளே வரும் பொழுது, வாணிப பாங்குகள் கருவூல உண்டியல்களை வாங்கி, தங்களுடைய வைப்புகளை (deposits) பெருக்கிக் கொள் கின்றன. ஆனால் ரொக்கக் காப்புகள் (cash reserves) மாறா திருக்கும் பொழுது, வைப்புக்களின் பெருக்கம் ரொக்க விகிதத்தினைக் (cash ratio) குறைத்துவிடும். ரொக்க விகிதக் குறைப்பின் காரணமாக வாணிப பாங்குகள் கடனளிப்பது குறையும்; வட்டி வீதம் உயரும், இதுபோலவே, வெளிநாட்டு நாணயம் வெளியேறும் பொழுது, இதற்குமாறான விளைவுகள் ஏற்படும். ஒரு நாட்டின் கடனளிப்பு முறையில் இத்தகைய விளைவுகள் ஏற்படுவதைத் தடுத்திடும் நோக்குடன், வெளி நாட்டு நாணயம் உள்ளே நுழையும் பொழுது, மாற்றுச்

சமனுக்கல் கணக்கிலிருந்து பொன்னை இங்கிலாந்து மைய பாங்கிற்குத் (Bank of England) தேவையான அளவிற்கு மாற்றி விடும் முறை பின்பற்றப்பட்டது. இங்கிலாந்து மைய பாங்கு வாணிப பாங்குகளுக்குக் கூடுதலான பணம்தர முன்வந்தது. வாணிப பாங்குகளும் ரொக்க விகிதத்தைக் குறைத்திடாமல் தங்களுடைய வைப்புகளைப் பெருக்கிக்கொண்டன. வட்டி வீதம் உயர்வது நின்றது. இவ்வாறு சமனுக்கல் கணக்கு எனும் அமைப்பானது செயல்படும் பொழுது, குறுங்கால மூலதன இயக்க விளைவுகள் பெரிதும் தடுக்கப்பட்டு விட்டன.

அமெரிக்க டாலரின் மாற்று மதிப்பினை நிலைத்து இருக்கச் செய்யவேண்டி, 1934–ஆம் ஆண்டில் அமெரிக்கா மாற்று நிலையாக்க நிதியினை உருவாக்கியது. இது பொன்நிதி; டாலர் நிதியன்று. பொன் உள் வரும்பொழுது, பொன் பத்திரங்களை (gold certificates) பெடரல் ரிசர்வ் பாங்கினிடம் (Federal Reserve Bank) தந்து, அதற்கு ஈடாக அப் பாங்கினிடமிருந்து பெற்ற பணத்தைக்கொண்டு, மாற்று நிலையாக்க நிதியமைப்பு பொன்னை வாங்கும். பொன் வெளியேறும் போது இந் நிதிய மைப்பு தன்னுடைய சேமிப்பிலுள்ள பொன்னை விற்றிடும். இதனால் உள்நாட்டுக் கடனளிப்பில் பெருக்கமும் சுருக்கமும் ஏற்படுவதாயிற்று. பொன் உள்ளே வருதலும் வெளியேறுதலும் எந்த வீதத்தில் நிகழ்கிறதோ அதே வீதத்தில் உள்நாட்டுக் கடனளிப்புப் பெருக்கமும் சுருக்கமும் நிகழவில்லை. உள்ளே யும் வெளியேயும் செல்கின்ற பொன்னின் ஒரு பகுதியை ரொக்க இருப்புகளின் விகிதத்தில் ஏற்படும் மாற்றங்கள் சுவீகரித்து விடுகின்றன. இதனால் கடனளிப்பு மாற்றங்கள் ஏற்படுவதில்லை. உள்நாட்டுக் கடனளிப்பின் மீது வேறு விளைவுகள் ஏற்படாததற்குக் காரணம் குறைந்த பட்ச காப்புத் தேவையில் (minimum reserve requirements) ஏற்பட்ட மாற்றங் களே எனலாம். வெளிநாட்டு நாணயம் உள்ளே வருவதும் வெளியேறுவதுமான நிலையில் உள்நாட்டுக் கடனளிப்பில் ஏதேனும் மாற்றம் ஏற்படுவதைத் தடுத்திடும் நோக்கில் அமெரிக்கக் கருவூலம் பொன்னை விளைவற்றதாக்கிடும் திட்ட மொன்றைத் தயாரித்தது. பொன்னை விளைவற்றதாக்கிடும் திட்டத்தின் (policy of sterilsation of gold) கீழ் பொன் பத்தி ரங்களை பெடரல் ரிசர்வ் பாங்கிடம் கொடுத்து நிதிபெற்று பொன் வாங்கிடும் முறை கைவிடப்பட்டது. மாறுக, பணச் சந்தையில் குறுங்காலக் கருவூலப் பொறுப்புகளை (short-term treasury obligations) வழங்குதல் மூலமாகப் பொன் வாங்கிடும் முறை மேற்கொள்ளப்பட்டது.

நாணய மாற்றுத் தடைகள் (Exchange Restrictions)

அந்நியச் செலாவணிச் சந்தையில் உள்நாட்டு நாணயத்தின் அளிப்பினை அரசாங்கம் கட்டுப் படுத்துவதையே நாணயமாற்றுத் தடை என்கிறோம். உள்நாட்டு நாணயத்தின் அளிப்பைக் குறைத்து, அதன் மாற்று மதிப்பு மாறாது நிலைக்கச் செய்யலாம். நாணய மாற்றுத் தடையை மேற்கொள்ளும் அரசு மூன்று முறைகளைக் கையாளும். முதலாவதாக, அன்னியச் செலாவணியில் நிகழும் கொடுக்கல், வாங்கல் ஆகிய அனைத்தும் அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடைபெறும்; அல்லது அரசு பிரதிந்திகள் மூலம் அவை நடைபெறும். இரண்டாவதாக உள்நாட்டு நாணயத்தை வழங்கி அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கு அரசின் ஒப்புதல் தேவை. மூன்றாவதாக, அரசாங்கத்தின் முன் அனுமதி பெறாமல் யாரும் அன்னியச் செலாவணியில் பேரங்கள் பேசிட முடியாது. பேரங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் ஏஜென்சி மூலமே நடைபெறவேண்டும். நாணய மாற்றுத் தடையினை 1931–ஆம் ஆண்டில் ஜர்மனியும் ஆஸ்திரியாவும், இரண்டாம் உலகப் போரின் போது இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகளும் மேற் கொண்டன.

இங்கிலாந்து தேசம் செப்டம்பர் 21, 1939–இல் எவ்வாறு நடைமுறையில் நாணயமாற்றுத் தடையினைச் செயல்படுத்தியது என்பதைச் சற்று ஆய்வோம். தனக்குச் சொந்தமான அன்னியச் செலாவணி அங்காடியை அரசு முழுதும் கட்டுப் படுத்தி விட்டது. பிரிட்டிஷ் பிரஜைகள், தாங்கள் ஈட்டியுள்ள பொன் இருப்புகள், வேறு அன்னியச் செலாவணிச் சொத்துகள் ஆகியவற்றைச் சந்தையில் நிலவிடும் மாற்று வீதத்தில் அரசாங்கத்திடம் விற்றுவிட்டு, அவற்றிற்குப் பதிலாக உள்நாட்டு நாணயத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அரசு பிரகடனப் படுத்தியது. அன்னியச் செலாவணியை உள்நாட்டு நாணயத்திற்கு மாற்றிக்கொள்ளவும் நிர்வாக அனுமதி பெறவேண்டும். வெளிநாட்டு நாணயத்தையோ உள்நாட்டு நாணயத்தையோ நாட்டிற்கு வெளியே கொண்டு செல்லவோ அல்லது உள்ளே கொண்டு வரவோ அரசாங்க அனுமதி தேவை; ஆனால் வரையறை செய்யப்பட்ட அளவிற்குள்ளிருப்பின் அரசின் அனுமதி தேவையில்லை.

நாணயமாற்றுத் தடைகள் பலவிதமானவை. முடங்கிய கணக்கு வைப்பு (blocked accounts), ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீதமுறை (multiple exchauge rates) போன்றவையெலாம்

இவ்வினத்தைச் சார்ந்தவையே, முடங்கிய கணக்கு வைப்பு எதனைக் குறிக்கும்? வெளிநாட்டாருக்குச் செலுத்தவேண்டிய கடன்களை உள்நாட்டுக் கடனாளிகள் குறிப்பிட்ட பாங்குகளில் செலுத்திட வேண்டும். கள்ளச்சந்தையில் அன்னியச் செலாவணியை விலைக்கு வாங்கித் தங்களுடைய கடன்களை அடைத்திடும் முறை இதனால் தடையுற்றது. முடங்கிய கணக்கு வைப்பின் மூலமாக கடனாளி நாட்டிலேயே வெளிநாட்டாரின் பெயரிலேயே சேருகின்ற தொகையினை அவர்கள் கடனாளி நாட்டு அரசாங்கத்தின் விதிமுறைகளுக்குட்பட்டுக் கடனாளி நாட்டிலேயே செலவிடவேண்டும்.

கடனாளி நாடுகள், கடன் தந்துதவிய நாடுகளுக்குத் தர வேண்டிய தொகையினைத் தங்கள் நாடுகளிலேயே முடக்கிக் கணக்கு வைத்தலையே "முடங்கிய கணக்கு வைப்பு" என்று குறிப்பிட்டோம். கடனாளி நாடுகள் பல இம் முறையைப் பின் பற்றின. குறிப்பாக ஜர்மனி நாடு 1931-ஆம் ஆண்டில் நிதி சார்ந்த நெருக்கடியைச் சமாளிக்க இம் முறையைப் பின் பற்றியது. கடன் தந்துதவிய வெளிநாட்டினர் முடங்கிய கணக்கு வைப்பினால் பெரிதும் தொல்லையுற்றனர். தங்கள் விருப்பம்போல தங்களுக்குச் சேரவேண்டிய தொகையினை அவர்கள் பயன்படுத்த முடியவில்லை. இட்லரின் அராஜக நடவடிக்கைகளிலிருந்து தப்பி ஓடிய யூதர்கள் லண்டன் மாநகரில் வறுமையில் வாடினர். காரணம், யூதர்களுக்குச் சேரவேண்டிய இலட்சக் கணக்கான ஜர்மானிய மார்க்குகளை அவர்கள் திரும்பப்பெற முடியவில்லை. யூதர்களுக்குச் சேர வேண்டிய சொத்துகளனைத்தும் முடங்கிய கணக்கு வைப்பில் ஜர்மனியில் சிக்கிக் கொண்டன. இவ்வைப்பு முறையின் விளைவாக வெளிநாட்டினர், கடன் தந்துதவியோர், வெளி நாட்டு ஏற்றுமதியாளர் போன்றோரெலாம் தங்கள் திரும்பப்பெற வேண்டிய தொகையினைத் திரும்பப் பெறுவதற்குத் தங்களுடைய அன்னியச் செலாவணி இருப்புகளின் மதிப்பைக் குறைத்திட வேண்டிய நிலையேற்பட்டது.

ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீத முறை

ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீத முறையினை முதலில் ஜர்மனியும் பின்னர் சிலி (Chile), அர்ஜெண்டைனா (Argentina), பிரேசில் (Brazil), பெரு (Peru), ஈகுவேடர் (Equador) போன்ற நாடுகளும் பின்பற்றின. வெவ்வேறு பண்டங்களைக் கொண்ட ஏற்றுமதிகள், இறக்குமதிகள் ஆகியவற்றிற்கு வெவ்வேறு மாற்றுவீதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. ஏற்றுமதிப் பெருக்

கத்தின் மூலமும் இறக்குமதிச் சுருக்கத்தின் மூலமும் எவ்வளவு அன்னியச் செலாவணியை ஈட்ட முடியுமோ அந்த அளவிற்கு பல்வேறு நாணய மாற்று வீதங்களைப் பின்பற்றி அன்னியச் செலாவணியை ஈட்டுதலே குறிக்கோளாயிற்று. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் தொடர்ந்த உடனடி ஆண்டுகளில் ஐம்பதிற்கு மேற்பட்ட நாடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்று வீத முறையினைப் பின்பற்றின.

அயல் நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் பற்றுக் குறையினை அகற்ற ஒன்றுக்கு மேற்பட்ட மாற்று வீதமுறை பயன்படும். சில பண்டங்களில் குறைந்த நாணய மாற்று வீதத்தில் வாணிபத்தை மேற்கொள்வதன் மூலமாக ஏற்று மதியைத் தூண்டலாம். உலக விலையைவிட உள்நாட்டு விலை அதிகமாக உள்ள பண்டங்களின் ஏற்றுமதியைத் தூண்டவும், தனித்த பணச்செலவை (private money cost) விடச் சமூகப் பயன்பாட்டு உற்பத்திச் செலவு (social cost of production) அதிகமாக உள்ள பண்டங்களின் ஏற்றுமதியைத் தூண்டவும் இம் முறையினைப் பயன்படுத்தலாம். முதன்மைப் பொருள்கள் (capital goods,) தொழில் நுட்பத்திறன், அத்தியாவசியமான கச்சாப் பொருள்கள் முதலானவற்றை ஏற்றுமதித் தொழில்கள் சாதகமான மாற்றுவீதத்தில் இறக்குமதி செய்து கொள்வதற்கு அரசாங்கம் அன்னியச் செலாவணி அளித்திடலாம். கிராக்கி நாணயப் பகுதிகளிலிருந்து (hard currency areas) பண்டங்களை இறக்குமதி செய்தலைக் குறைத்திடவும் அப் பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்தலைத் தூண்டிடவும் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீதத்தினைப் பின்பற்றலாம்.

அயல்நாட்டுச் செலுத்து நிலையில் உள்ள பற்றுக் குறையினைப் போக்குவதற்கு முழுமையான நாணய மதிப்புக் குறைப்பினை ஒட்டு மொத்தமாகப் பின்பற்றுவதைவிட ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீத முறையினைப் பின்பற்றுவது நல்ல பலனளிக்கும். இறக்குமதியாகும் பண்டங்களின் உள் நாட்டுத் தேவை நெகிழ்ச்சி குறைந்ததாகவோ ஏற்றுமதியாகும் பண்டங்களின் வெளிநாட்டுத் தேவை நெகிழ்ச்சி குறைந்த தாகவோ இருப்பின், மொத்தமான நாணயமதிப்புக் குறைப்பு நல்ல பலனை விளைக்காது. மாறாக, முழுமையான நாணய மதிப்புக் குறைப்பினை வரைமுறையின்றி எல்லாப் பண்டங் களின் வாணிகத்திலும் பின்பற்றுவதை விட்டு விட்டு, ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீதத்தைப் பண்டங்களின் தேவைநிலைக்கு ஏற்பப் பின்பற்றினல் நல்ல பலன் கிடைக்கும். உள்நாட்டுத்

தேவை நெகிழ்ச்சிமிக்க பண்டங்களை இறக்குமதி செய்வதற்கும், வெளிநாட்டுத் தேவை நெகிழ்ச்சிமிக்க பண்டங்களை ஏற்றுமதி செய்வதற்கும், நாணய மாற்று மதிப்பினைக் குறைத்தும் ஏனைய பண்டங்களுக்கு உயர்த்தியும் நல்ல பலன் உண்டாகும்படிச் செய்யலாம்.

பன்னாட்டு வாணிபத்தில் சில நாடுகளுடன் அயல் நாட்டுச் செலுத்து நிலையில் சமநிலையின்மை ஏற்பட்டிருக்க லாம். அதனைப் போக்குவதற்குப் பல்வேறு மாற்று வீதங்களைப் பின்பற்றலாம். அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பற்றுக்குறை ஓரிரு நாடுகளுடனும், எச்சப்பாட்டுநிலை ஏனைய நாடுகளுடனும் ஏற்பட்டிருக்கலாம். ஓரிரு நாடுகளுடன் ஏற்பட்டுள்ள பற்றுக் குறையைப் போக்குவதற்கு மாற்று வீதத்தைக் குறைத்திட லாம்; ஏனைய நாடுகளுடன் உள்ள வாணிபத்தில் மாற்றுவீதம் உயர்ந்திருக்கலாம். பன்னாட்டு வாணிபத்தில் பண்டங்களின் தேவையைப் பொறுத்தும் மற்ற நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள வாணிப நிலையைப் பொறுத்தும் பிரச்சினைக்குத் தக்கவாறு வெவ்வேறு மாற்று வீதங்களை நிர்ணயிப்பது நல்ல பலனைத் தரும் எனக்கண்டோம்.

ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீதங்களைப் பின்பற்றுவதில் வேறு பல அனுகூலங்களும் உண்டு. மூலதனம் வெளியேறு தலைத் தடுப்பதற்கும் உள்வருதலைத் தூண்டுவதற்கும் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீதமுறையைப் பயன்படுத்தலாம். திட்ட மிட்ட பொருளாதாரத்தின் மூலமாக வளர்ச்சியைத் தூண்டு கின்ற நாட்டில், வெளிநாட்டு மூலதனத்தைத் தேவைப்படு கின்ற உற்பத்தித் துறைகளில், முதலீடு செய்தலைத் தூண்டு கின்ற வகையிலும் மேற் குறிப்பிட்ட முறையைப் பின் பற்றலாம். மூலதனப் பொருள்கள் (capital goods), தொழில் நுட்பத்திறன், முக்கிய கச்சாப்பொருள்கள் போன்றவற்றை இறக்குமதி செய்திட ஏற்றவகையில் மாற்றுவீதத்தை நிர்ணயிக் கவும், தேவையற்ற ஆடம்பரப் பொருள்களை இறக்குமதி செய்தலைத் தடுத்திடும் வகையில் அப் பொருள்களைப் பொறுத்த வரையில் ஒரு மாற்றுவீதத்தை நிர்ணயிக்கவும் மேற்குறிப் பிட்டுள்ள முறை உதவும். மேலும் தேய்ந்து கொண்டிருக்கும் தொழில்களைப் பாதுகாக்கவும் புதிய தொழில்களை வளர்க் கவும் அத் தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பண்டங்களைப் பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடும் வாய்ப் பினை உண்டாக்கவேண்டும். ஏற்றுமதி வாய்ப்பினை உண்டாக்கி பெருக்குகின்ற வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீத முறையைப் பின்பற்றலாம்.

வேறு பல நன்மைகளும் உண்டு. வாங்குகின்ற பொழுதும் விற்கின்ற பொழுதும் நாணயமாற்று வீதத்தில் உண்டாக்கப்படுகின்ற வேறுபாட்டினைப் பொறுத்து அரசாங்கம் பெரும் வருவாயினைத் திரட்டமுடியும். அரசாங்க இறக்குமதிகளுக்குச் சாதகமான மாற்றுவீதத்தை நிர்ணயித்துப் பொதுச் செலவினைக் குறைத்திடலாம். உள்நாட்டுத் தொழில்களின் வளர்ச்சிக்குத் தூண்டுதலாக மாற்றுவீதத்தை நிர்ணயித்து, அவ்வாறு வளர்கின்ற தொழில்கள் மீது தக்க ஆயத் தீர்வை இட்டு அரசு தனது வருவாயைப் பெருக்கிடலாம். மேலும், அத்தியாவசியமான துய்ப்போர் பண்டங்களை இறக்குமதி செய்வதற்குத் தக்காற்போல சாதகமான மாற்று வீதத்தை நிர்ணயித்து வாழ்க்கைச் செலவினைக் குறைத்திடலாம். இன்னும், விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து நிறுத்திடவும் ஏற்றாற்போல ஒன்றுக்கு மேற்பட்ட மாற்று வீதத்தை பயன்படுத்தலாம்.

சில வேளைகளில் ஏற்றுமதிப் பண்டங்களின் அளிப்பை விட அப் பண்டங்களிள் வெளிநாட்டுத்தேவை உயர்ந்திருப்பது உண்டு. இதனால் ஏற்றுமதித் தொழில்களுக்கு அபரிமித ஆதாயம் கிடைத்திடும். அந்த இலாபத்தில் கணிசமான அளவிற்கு அரசாங்கம் தன் பங்காகப் பெற்றிடும் வகையில் மாற்றுவீதத்தை உயர்த்திடலாம். ஆனால், ஏற்றுமதி பெரிதும் பாதிக்காத வகையில் மாற்றுவீதம் நிர்ணயிக்கப்பட வேண்டும். அபரிமித ஏற்றுமதி ஆதாயத்தினை அரசாங்கம் அடைவதற்கு மாற்றுவீதத்தைக் குறைப்பதைவிட ஆதாய வரிவிதிப்பதே மேலான வழியாகும்.[3] இறக்குமதியாளர்களும் அபரிமிதமான இலாபம் ஈட்டுவதுண்டு. மாற்றுவீதத்தைக் குறைத்து அவ்விலாபத்தை அரசு அடையலாம்.

ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றின் அளவினைக் கட்டுப்படுத்துகின்ற 'கோட்டா' முறை, லைசென்சு முறை போன்றவற்றை நடைமுறைப் படுத்துகின்றபொழுது, நேர்மையான வாணிபத்திலும் திறமையான அரசாங்க நிர்வாகத்திலும் கட்டிக் காத்திடவேண்டிய சில ஒழுங்குமுறைகளும் தர உயர்வும் பாதிக்கப்படுகின்றன என்ற உண்மையினை மறுத்திட இயலாது. நிர்வாகத் தாமதமும் ஊழலும் கையூட்டும் அதிகார துஷ்பிரயோகமும் பரவலாக நிலவிடும் நிலைமையும் ஏற்பட்டது.

[3] பெர்ன்ஸ்டீன், ஈ. எம். (E. M. Bernstein): 'ஒன்றுக்கு மேற்பட்ட மாற்று வீத முறையின் சில பொருளாதாரக் கூறுகள்' ('Some Economic Aspects of Multiple Exchange Rates', I. M. F. Staff Papers. (Washington, Sept. 1950) ப. 230.

ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீத முறையினை விலை இயங்கு முறை மூலம் செயல்படுத்தும் பொழுது இத்தகைய சிக்கல்கள் தவிர்க்கப்படும். வெவ்வேறு மாற்றுவீதங்களைப் பிரயோகிப் பதற்கெனப்பண்டங்களை வகைப்படுத்துவதற்கு மட்டுமே அரசாங்க நிர்வாக மேல்மட்டத்தினர் பொறுப்பு ஏற்றுக் கொள்வதால் சிக்கல் ஏதும் ஏற்படுவதில்லை.

ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீத முறையைப் பின்பற்றும் பொழுது சில கேடுகள் ஏற்படுவதுண்டு. எல்லா ஏற்றுமதி களையும் இறக்குமதிகளையும் வகைப்படுத்தி, வகைப்படுத்திய எண்ணிக்கையின் அளவிற்கு மாற்றுவீதங்களை நிர்ணயிக்கும் பொழுது இம் முறையிலுள்ள எளிமை பாதிக்கப்படுகிறது. ஏற்றுமதியாளர்களிடமிருந்து அன்னியச்செலவாணியைப் பெறு வதிலும், அதனை இறக்குமதியாளர்களிடம் பகிர்ந்தளிப்பதிலும், பகிர்ந்தளிக்கப் பெற்ற அன்னியச் செலாவணியை இறக்கு மதியாளர்கள் பண்டங்களை இறக்குமதி செய்வதில் எவ்வாறு பயன் படுத்துகிறார்கள் என்பதைக் கண்காணிப்பதிலும் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீத முறையைவிட நிதிசார்ந்த முறையாகிய வரிவிதிப்பு முறை எளிதானதுதான். என்றாலும் சட்ட சம்மதம் பெற்ற வரிவிதிப்பு முறை மாறாத தன்மை உள்ளது. வெவ்வேறு மாற்று வீதங்களைப் பயன்படுத்துகின்ற முறையானது சூழ் நிலைக்குத் தக்கவாறு மாறும் தன்மையது.

வேறு சில தீமைகளையும் நோக்குவோம். அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் ஏற்படும் பற்றாக் குறையை அகற்றுவது தான் நோக்கம். ஏற்றுமதியைத் தூண்டுதற்குச் சாதகமான மாற்று வீதத்தையும், சில இறக்குமதிகளைப் பெறுவதற்குச் சாதகமான மாற்று வீதத்தையும், வேறு சில இறக்குமதிகளை வேறு சில நாடுகளிலிருந்து பெறுவதைத் தடுத்திடும் வண்ணம் பாதகமான மாற்று வீதத்தையும் பிரயோகிக்கும்பொழுது, குறிப் பிட்ட நாடுகளின் நேரடியான அதிருப்திக்கு ஆளாக நேரிடு கிறது. பன்னாட்டு வாணிபத்தில் வெவ்வேறு நாடுகளுடன் அமைந்திடும் வாணிபத் தொடர்பில் ஒரு பொதுமை அல்லது சமத்துவநிலை இல்லாமற் போய்விடுகிறது. ஆனால், மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கென நாணய மதிப்புக் குறைப்பினை (currency depreciation) மேற் கொள்ளும்பொழுது, ஏற்றுமதி விஸ்தரிப்பும் இறக்குமதி குறைப் பும் பல பண்டங்களையும் பல நாடுகளையும் தழுவியதாகவும்

சார்ந்ததாகவும் அமையும். எனவே, குறிப்பிட்ட சில நாடு களின் நேரடியான மனத்தாங்கலுக்கு ஆளாக வேண்டிய அவசிய மேற்படாது.

ஒன்றுக்கு மேற்பட்ட மாற்று வீதங்களைப் பின்பற்றும் பொழுது, அன்னியச் செலாவணியை மலிவான சந்தையில் விலைக்கு வாங்கி விலையுயர்ந்துள்ள கிராக்கிச் சந்தையில் விற்றிடும் கள்ள வாணிபம் தலை தூக்கும். மேலும், ஏற்றுமதிப் பண்டங்கள், இறக்குமதிப் பண்டங்கள் ஆகியவற்றின் அளிப்பு, தேவை முதலானவற்றின் நெகிழ்ச்சித் தன்மையை நன்கு புரிந்துகொண்டால்தான் குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்று வீதங் களைப் பின்பற்ற முடியும்; இல்லையெனில் குறிக்கோள்கள் நிறைவேற மாட்டா. வெவ்வேறு மாற்று வீதங்களைப் பின் பற்றும்பொழுது, அவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்ற மாற்று வீதங்களுக்கேற்றாற் போல அங்காடி மாறுவதற்குச் சற்று கால தாமதம் ஆகக்கூடும். எனவே, விரும்புகின்ற விளைவுகள் உடனடியாக ஏற்படாது. தேவைக்குக் குறைவான பொன் இருப்புகளையோ அல்லது வேறு அன்னியச் செலாவணி களையோ வைத்துள்ள நாடுகளுக்குக் குறுங்காலத்தில் இந்த முறையானது உபயோகமாயிராது.

பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் நிதியினைத் தொடர்ந்து பெறுவதற்குப் பல மாற்று வீதங்களைப் பின்பற் றுகிற முறை பொருந்தி வராது. இம் முறையினைப் பின்பற்று வதால் கிடைத்திடும் வருவாய் நிலையானதன்று; ஏற்றுமதி, இறக்குமதி, அயல்நாட்டுச் செலுத்துநிலை ஆகியவற்றின் அளவு, கலவை முதலானவற்றில் ஏற்படும் மாறுதல்களைப் பொறுத்து வருவாயும் மாறும் தன்மையது. ஆனால், பொரு ளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் வருவாய் தொடர்ந்து, நிலையானதாகக் கிடைத்திட வேண்டும். வருவாயை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு மாற்று வீதங்களை நிர்ணயம் செய் தால், அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் பற்றாக் குறையை அகற்றிடும் ஒரு கருவி வீணடிக்கப்பட்டுவிட்டது என்று பொருள்.

அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் பற்றாக் குறையை அகற்ற வேண்டுமெனில், இறக்குமதிகளைக் கட்டுப் படுத்தி ஏற்றுமதிகளைப் பெருக்க வேண்டும். இதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீத முறையைப் பயன்படுத்தலாம். இறக்கு மதித் தேவையையும் ஏற்றுமதி அளிப்பும் நெகிழ்ச்சி மிக்கதாக

இருப்பின் இம் முறை வெற்றிபெறும். ஆனால், வளர்ச்சி குறைந்த நாடுகளில் மூலதனப் பொருள்கள், தொழில் நுட்பத் திறன், உணவுப் பண்டங்கள், கச்சாப் பொருள்கள் முதலானவை இறக்குமதியாக வேண்டும்; திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு இப் பொருள் அனைத்தும் தேவையே. இத்தகைய இறக்குமதித் தேவைகள் நெகிழ்ச்சி குறைந்தவை. ஏற்றுமதிகளைப் பெருக்கிடும் திறனும் இந் நாடுகளுக்குக் கிடையாது. எனவே, பல மாற்று வீதங்களைப் பின்பற்றி இந் நாடுகளில் பலன் காண ஒன்றுமில்லை. மேலும் இத்தகைய பின்தங்கிய நாடுகள் பல மாற்று வீதங்களைப் பின்பற்றி, அன்னியச் செலாவணியைப் பெருமளவு ஈட்டிடவோ அன்னியச் செலாவணிச் செலவினைக் குறைத்திடவோ முடியவில்லை. இந்த நாடுகளின் ஏற்றுமதி அளிப்பில் ஏற்படும் மாற்றங்களோ இறக்குமதித் தேவையில் ஏற்படும் மாற்றங்களோ உலக விலைகளைப் (வெளிநாட்டு நாணயத்தில்) பாதிக்க மாட்டா. பின்தங்கிய நாடுகளைத் தனித்தனியாகக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டால், இந் நாடுகளின் ஏற்றுமதிகளுக்கான உலகத் தேவையின் நெகிழ்ச்சியும், இறக்குமதிகளுடைய உலக அளிப்பின் நெகிழ்ச்சியும் உயர்ந்தே இருக்கும். பின்தங்கிய நாடுகளில் எந்த நாடும் தனியாகத் தனது இறக்குமதிகளிலும் ஏற்றுமதிகளிலும் மாறுதல்களை உண்டாக்கி உலக விலைகளை மாற்றிடமுடியாது. சிறிய நாடுகளைப் பொறுத்த வரையில் இது முழு உண்மையாகும்.

சில பண்டங்களை இறக்குமதி செய்வதற்கு ஏற்றாற்போல சாதகமாக மாற்று வீதங்கள் அமைந்திருப்பின், பின்னால் இவ் வாய்ப்பு மாறிவிடுமோ என்று அஞ்சி இப் பண்டங்களை பெருமளவில் இறக்குமதி செய்து கிடங்குகளில் சேமித்து வைத்து விடுவர். இவ்வாறு முதலீட்டு விரயம் ஏற்பட்டுவிடுகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீத முறையையும் லைசென்சு-கோட்டா முறையையும் ஒன்றிணைத்துச் செயல்படுத்தி நல்ல பலனைக் காணமுடியும். முதல் முறையினைப்பின்பற்றி இறக்குமதிகளைத் திறப்படக் கட்டுப்படுத்தமுடியவில்லை எனில், இரண்டாவது முறையினையும் பின்பற்றுவது தக்க பாதுகாப்பு முறையாகும். இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதன் விளைவாக உருவாகும் அபரிமித ஆதாயத்தினைக் கணிசமான அளவிற்கு அரசு அடைந்திட பல மாற்றுவீதங்களைப் பின்பற்றுகின்ற முறையினை உபயோகித்திடலாம்.[1]

[1] ஈ. ஆர். ஷீல்சிங்கர் (E. R. Schelesinger) : 'ஒன்றுக்கு மேற்பட்ட மாற்று வீதங்களும் பொருளாதார வளர்ச்சியும்' ('Multiple Exchange Rates and Economic Grorwth') பிரின்ஸ்டன் பல்கலைக் கழகம், 1952. ப. 17.

நாணய மாற்று விடுவிப்பு.

நாணய மாற்றுக் கட்டுப்பாடு, லைசென்சு–கோட்டா முறை போன்ற வாணிபத்தைக் கட்டுப்படுத்துகின்ற முறைகளின் மூலம் அன்னியச் செலாவணி நெருக்கடியினைத் தீர்க்கவும் முடியவில்லை; அயல்நாட்டுச் செலுத்து நிலையைச் சரி செய்திடவும் முடியவில்லை. எனவே, வாணிபத்தைக் கட்டுப்படுத்துகின்ற முறைகளைக் கைவிட்டு, ஏற்றுமதியை வளர்த்திடும் நோக்குடன் நாயணய மாற்று விடுவிப்பு (Exchange Clearing) முறையினை இரு உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பல நாடுகள் நடைமுறைக்குக் கொண்டு வந்தன. கிடைப்பருமை கொண்ட அன்னியச் செலாவணியைப்பற்றி கவலை கொள்ளாமல், இருநாடுகளுக்கிடையே வாணிபத்தினைப் பெருக்கிடும் முறையே நாணயமாற்று விடுவிப்பு முறையாகும். ஜர்மனி நாடே இம் முறையை வகுத்துப் பின் பற்றியது.

நாணயமாற்று விடுவிப்பு முறை எவ்வாறு செயல்படும் என்பதனை இப்பொழுது ஆராய்வோம். இரு நாடுகளிடையே வாணிபம் நடைபெறும் பொழுது, இருநாடுகளின் வணிகரும் செலுத்தவேண்டிய செலுத்துகைகளையும் (payments) பெற வேண்டிய செலுத்துகைகளையும் சமன்படுத்தி வாணிப வளர்ச்சியினைப் பேணும் பொறுப்பினை இரு நாடுகளின் மைய பாங்குகள் ஏற்றுக்கொள்ளும். ஒவ்வொரு நாட்டின் மைய பாங்கும் மற்றொரு நாட்டின் மைய பாங்கின் சார்பில் கணக்கு வைத்துக்கொள்ளும் உதாரணமாக, நாணய மாற்று விடுவிப்பு உடன்பாட்டினை இந்தியாவும் இங்கிலாந்தும் செய்து கொண்டுள்ளதாகக் கொள்வோம். இந்திய நாட்டு இறக்குமதியாளர்கள் (அல்லது கடனாளிகள்) இந்திய மைய பாங்கில் அமெரிக்க ஏற்றுமதியாளர்களுக்குத் (அல்லது கடன் கொடுத்தோர்) தரவேண்டிய செலுத்துகைகளை இந்திய நாணயத்திலேயே செலுத்துவர். அதுபோலவே இந்திய ஏற்றுமதியாளர்கள் அமெரிக்க இறக்குமதியாளரிடமிருந்து தாங்கள் பெற வேண்டிய செலுத்துகைகளை இந்திய மைய பாங்கிலிருந்து இந்திய நாணயத்திலேயே பெற்றுக் கொள்வர். அமெரிக்காவிலும் இதுபோலவே நடைபெறும். இறுதியில் ஏற்படும் நிலுவைகளை மைய பாங்குகள் சரி செய்து கொள்ளும். இறுதியில் நிலுவைகளை நேர் செய்து, அயல்நாட்டுச் செலுத்து நிலையில் சமன்பாட்டினை ஏற்படுத்துவதற்கு இரு நாடுகளும் உடன்பட வேண்டும்.

நாணய மாற்று விடுவிப்பு முறையில் நிலவிய சில குறைபாடுகளைக் களைந்திடும் நோக்குடன் 1945-ஆம் ஆண்டில்

செலுத்துகை உடன்பாடுகளை (Payment Agreement) சில நாடுகள் மேற்கொண்டன. ஏற்றுமதியாளர்களுக்கு வந்துசேர வேண்டிய செலுத்துகைகள் குறித்த காலம் கடந்துவந்து சேருகின்ற குறைபாடு நாணய மாற்று விடுவிப்பு முறையில் உள்ளது. இந்தச் செலுத்துகைகள் அனைத்தையும் நிருவாகம் செய்வதில் அதிகாரக் குவிப்பு ஏற்பட்டது மற்றொரு குறைபாடு எனலாம். இவ்விரு குறைகளையும் செலுத்துகை உடன்பாடு ஓரளவிற்குக் களைந்தது எனலாம். எனினும், செலுத்துகை உடன்பாட்டிலும் ஓரிரு குறைகள் தென்பட்டன. அனுமதிக் கப்பெற்ற செலுத்துகைகளைப் பொறுத்த கணக்கத்தைான் இவ்வுடன்பாடு ஏற்றுக் கொள்ளும். உடன்பாடு செய்து கொண்ட இரு நாடுகளின் கணக்கில் உண்டாகின்ற மீதத்தினை இவ்விரு நாடுகளுக் கிடையிலேயே பட்டுவாடா செய்து கொள்ள வேண்டும். இவ்விரு குறைகளையும் களைந்துவிட்டால் செலுத்துகை உடன்பாடு நல்ல பலனை அளிக்கும்.

நேரடியான முறைகளில் இறுதியாக நாம் ஆராய்வது 'அன்னியச் செலாவணிக் கடன் திருப்புதல் தவணை முறை' யாகும் (Transfer Moratoria) இம் முறையின்படி, வெளிநாட்டாருக்குத் தரவேண்டிய அன்னியச் செலாவணியைக் கொடுத்திடாமல் கொஞ்ச காலத்திற்குத் தள்ளிவைப்பது உண்டு. அன்னியச் செலாவணி நெருக்கடி தீர்ந்த பின்னர், அயல் நாட்டுச் செலுத்து நிலையினைச் சரி செய்த பின்னர், பிறநாட்டினருக்குச் சேர வேண்டிய செலுத்துகைகளைச் செலுத்து நிலையினைச் சரி செய்த பின்னர், பிற நாட்டினருக்குச் சேர வேண்டிய செலுத்துகைகளைச் செலுத்துகின்ற முறை இது.

நாணய மாற்றுக் கட்டுப்பாட்டினைச் செயல்படுத்தச் சில மறைமுக முறைகளைக் கையாளுவதுண்டு. சுங்கத் தீர்வையும், இறக்குமதி கோட்டாவும், வட்டிவீத மாற்றமும் மறைமுக வழிமுறைகளே. இவை பற்றி முன்னரே விளக்கியுள்ளோம். நாணய மாற்றுக் கட்டுப்பாட்டிற்கான பல்வேறு வழிமுறைகளைப் பின் பக்கத்திலுள்ள விளக்கப்படம் தெளிவுறுத்தும்.


நாணய மாற்றுக் கட்டுப்பாடு
நேரடியான முறைகள்
மறைமுக முறைகள்
இடையீடு
மாற்றுத் தடைகள்
நாணய மாற்று விடுவிப்பு
செலுத்துகை உடன்பாடு
அன்னியச் செலாவணிக் கடன் திருப்புதல் தவணை முறை
மாற்றுவீத மேலிறுக்கல்
மாற்றுவீத கீழிறுக்கல்
முடங்கிய கணக்கு வைப்பு
பல மாற்று வீத முறை
வட்டிவீத மாற்றம்
இறக்குமதி வரிகள்
ஏற்றுமதி உதவிக் கொடைகள்

பகுதி மூன்று

அயல்நாட்டுச் செலுத்துநிலை

12. அயல்நாட்டுச் செலுத்துநிலை- பொருளும் கட்டமைவும் சமனாக்கலும்

பொருள் விளக்கம்

ஒரு நாடு, பிறநாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளும் பொருளாதாரத் தொடர்புகளை அட்டவணைப் படுத்துவதை அயல்நாட்டுச் செலுத்து நிலையினைப் படம் பிடித்துக் காட்டு வதாகக் கொள்ளலாம். இவ்வாறு அட்டவணைப் படுத்துவதற் கெனப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பது நல்ல வண்ணம் பகுத்தாய்வதற்கும், பன்னாட்டு வாணிபக் கோட்பாடுகளை விளக்குவதற்கும், உள்நாட்டு – வெளிநாட்டுப் பொருளாதாரங் கள்மீது ஏற்படும் விளைவுகளை ஆய்வதற்கும் பயன்படும்.

ஒரு நாட்டின் குடிமக்களுக்கும் மற்ற நாடுகளின் குடிமக்களுக்கும் இடையில் உண்டாகின்ற பொருளாதார பேரங்களைப் புள்ளி விவர ரீதியாக அட்டவணைப்படுத்து தலையே அயல்நாட்டுச் செலுத்து நிலை (balance of payments) எனலாம். சாதாரணமாக, ஓராண்டில் நடத்தப்படும் வெளி நாட்டுப் பொருளாதார பேரங்களின் அளவினைக் கணக்கிட்டு, அப் பேரங்களை வகைப்படுத்தி அட்டவணைப்படுத்துதலையே அயல்நாட்டுச் செலுத்து நிலை என்பர்.

ஒரு நாட்டின் பண வருமானத்தையும் அந் நாடு பிற நாடுகளுக்குத் தரவேண்டிய செலுத்துகைகளையும் கணக்கிட்டு வருமானத்திற்கும் செலுத்துகைகளுக்கும் இடையிலே ஏற்படு கின்ற வேறுபாடு உபரியாக அமைந்தால் சாதகமான அயல் நாட்டுச் செலுத்து நிலையென்றும், அவ் வேறுபாடு பற்றுக் குறையாக அமைந்தால் பாதகமான அயல் நாட்டுப் செலுத்து நிலை என்றும் குறிப்பிடுவர். ஒரு நாட்டின் மொத்தப் பண வருமானம் என்பது அந்த நாட்டு குடிமக்களுக்குக் கிடைத் திடும் வருமானங்களையோ அல்லது அவர்களை வந்தடையும் செலுத்துகைகளையோ குறித்திடும். நாட்டுப் பிரஜைகளின்

மொத்த வருமானம் R என்றும் அவர்களுடைய மொத்த செலுத்துகைகள் P என்றும் குறிப்போம். இவற்றை உள் நாட்டைச் சார்ந்த உறுப்புகளாகவும், வெளிநாட்டைச் சார்ந்த உறுப்புகளாகவும் பிரிப்போம். வருமானம் R என்றால், உள்நாட்டைச் சார்ந்ததை Rd என்றும், வெளிநாட்டைச் சார்ந்த உறுப்பினை Rf என்றும், பிரிக்கலாம். இவ்வாறே செலுத்துகைகளை P என்று குறித்தால், உள்நாட்டைச் சார்ந்த உறுப்பினை Pd என்றும் வெளிநாட்டினைச் சார்ந்ததை Pf என்றும் பிரிக்கலாம். உள்நாட்டு வருமானமும் உள்நாட்டுச் செலுத்துகையும் சமம் எனக் கொண்டால், அயல் நாட்டுச் செலுத்து நிலையை (B) கீழ்க்கண்ட சமன்பாட்டின் மூலம் விளக்கலாம்.

$$B = R - P = (Rd + Rf) - (Pd + Pf)$$

$Rd = Pd$ என்று பாவித்துக் கொண்டுள்ளமையால்,

$$B = Rf - Pf.$$

தடையிலாப் பொருளாதார அமைப்பில், மொத்த வருமானம் மொத்த செலுத்துகையிலிருந்து வேறுபடலாம், வெளிநாட்டிலிருந்து கிடைத்திடும் வருமானத்திற்கும் (Rf) வெளிநாட்டிற்குச் செலுத்த வேண்டிய செலுத்துகைக்கும் (Pf) உள்ள வேறுபாடே இது. நேர்க்கணிய வேறுபாடாக இருப்பின் உபரி என்றும், எதிர்க்கணிய வேறுபாடாக இருப்பின் பற்றுக் குறை என்றும் குறிப்பிடுகிறோம்.

இவ்வளவு விளக்கங்களைத் தந்த பிறகு, சுருக்கமான முறையில் தெரிந்து கொள்வதற்கு ஏற்றாற் போல, ஐக்கிய அமெரிக்க வர்த்தகத் துறை அயல் நாட்டுச் செலுத்து நிலையை தெள்ளத்தெளிய இலக்கணப்படுத்தியுள்ளதைக் கீழே தருவோம் :

"ஒருநாட்டின் குடிமக்களும் ஏனைய வெளிநாடுகளின் குடிமக்களும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் தங்களுக்குள்ளாகவே செலுத்திக்கொள்கின்ற செலுத்துகைகளையே அந்த நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலையாகக் கொள்ளப்படுகிறது. புள்ளி விவர ரீதியாக இதனை இலக்கணப்படுத்த வேண்டுமெனில் வெளிநாட்டாரிடமிருந்து பெற வேண்டிய வருமானங்களையும் அவர்களிடம் செலுத்தவேண்டிய செலுத்துகைகளையும் உள்ளடக்கிய பேரங்களை உருப்படி, உருப்படியாக வகைப்படுத்

திடும் கணக்கு இது எனலாம். முந்தியதை ஒரு நாட்டின் வரவினம் என்றும் பிந்தியதைச் செலவினம் என்றும் குறிப்பிட வேண்டும்.''

ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்து நிலையைப் பொறுத்தவரையில் மூன்று முக்கிய விஷயங்களை நினைவில் நிறுத்தவேண்டும். ஒன்று, அயல் நாட்டுச் செலுத்து நிலையென்பது, ஒரு நாடு தான் சேர்த்துவைத்திருக்கின்ற அன்னியச் செலாவணிச் சொத்துகளையும் அதற்கு ஏற்பட்டிருக்கின்ற அன்னியச் செலாவணிக் கடன்களையும் கணக்கெடுத்து வைத்திருக்கின்ற இருப்புநிலை ஏடு (balance sheet) ஆகாது. வேறு என்னவென்றால், குறிப்பிட்ட காலத்தில் வெளிநாடுகளிலிருந்து கிடைத்திடும் வருமானங்களையும் வெளிநாடுகளுக்குத் தரவேண்டிய செலுத்துகைகளையும் பற்றிய கணக்காகும் அது. இரண்டாவதாக, வழக்கமாகப் பின்பற்றுகின்ற இருமடிப் பதிப்புக்கணக்கு முறையின்படி (double entry accounting), ஒரு நாட்டின் வருமானங்களும் செலுத்துகைகளிலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மொத்தத்தில் சமமாக இருந்திட வேண்டும். அதாவது, அயல்நாட்டுச் செலுத்து நிலை எப்பொழுதும் சமமாகவே இருக்கவேண்டும். மூன்றுவதாக, ஒரு நாட்டிற்குக் கிடைத்திடும் வருமானங்கள் பிறநாடுகளின் செலுத்துகைகள் ஆகும். ஒருநாட்டின் செலுத்துகைகள் எனப்படுவன பிறநாடுகளின் வருமானங்கள் ஆகும்.

கட்டமைவு (Structure)

அயல்நாட்டுச் செலுத்துநிலையில் அடங்கியுள்ள உள் உறுப்புகளைப்பற்றி ஆராய்வோம். உள்நாட்டுப் பேரங்களைப் போலவே, ஒரு நாட்டின் பன்னாட்டுப் பேரங்களிலும் பண்டங்கள், பணிகள் (services), உரிமைப்பங்குகள் (claims) ஆகியவற்றை வாங்குதலும், (இறக்குமதிகள்) விற்றலும் (ஏற்றுமதிகள்) இடம் பெறுகின்றன. ஒருமுக மாற்றுகளை (unilateral transfers) வாங்குதல், விற்றல் முதலானவையும் இடம்பெறுகின்றன. பொதுவாக இருமடிப் பதிப்புக் கணக்கு முறையைப் பின்பற்றி, அயல்நாட்டுச் செலுத்துநிலையில் அடங்கியுள்ள உள் உறுப்புகளையெலாம் வகைப்படுத்திப் பட்டியல் படுத்தும்பொழுது, அவற்றை ஐந்துபெரும் பகுதிகளுக்குள் பிரித்து அமைத்துவிடலாம், அவ்வைந்து பெரும் பகுதிகளாவன:- (1) நடப்புக் கணக்கு (current account); (2) முதல் கணக்கு (capital account); (3) ஒருமுக மாற்றுக்

கணக்கு (unilateral transfers account); (4) பொன் வாங்குதலும் விற்றலும்; (5) பதிவு செய்யப்படாத பேரங்கள் (unrecorded transactions).

பணிகளையும் பண்டங்களையும் சார்ந்த பேரங்களை ஒன்றிணைத்து அவற்றின் மதிப்பைக் கணக்கிடுவது நடப்புக் கணக்காகும். ஐக்கிய அமெரிக்காவின் அயல்நாட்டுச் செலுத்துநிலைத் தொடர்பான நடப்புக்கணக்கில் மட்டும் இருபத்து மூன்று உருப்படிகள் (items) இடம் பெற்றுள்ளன.[1] நடப்புக் கணக்கையே சாதாரணமாக வாணிபச் சரக்கு (merchandise), போக்குவரத்து, பயணம், பலவகைப் பணிகள், முதலீட்டின்மீது கிடைத்திடும் வருமானம் என ஐந்து பகுதி களாகப் பிரிக்கலாம். பலவகைப் பணிகள் (miscellaneous services) எனும் பகுதியில் தனியாகப் பட்டியல்படுத்தவேண்டிய அளவிற்கு முக்கியத்துவமல்லாத உருப்படிகள் பல உள்ளன. செய்தித் தொடர்பு, இன்சூரன்சு, மறு இன்சூரன்சு, திரைப்பட வருமானம், பொறியியலார் பணிகள், குத்தகைதாரர் பணிகள், உள்நாட்டு அலுவலகக் கட்டணங்கள், வெளிநாட்டுப் பிரதி நிதித்துவச் செலவுகள் போன்ற சில முக்கியமான உருப்படி களும் பலவகைப் பணிகள் எனும் பகுதியில் அடங்கும். அமெரிக்க நடப்புக் கணக்கு வைப்பு முறையில் முதலீட்டின் மீது கிடைத்திடும் வருமானம் என்பது மரபுப்படிப் பார்த்தால் பணிகள் குறித்த பேரங்களைச் சார்ந்ததாகும். ஆனால், வருமானத்தைப் பணிகள் சார்ந்த பேரங்களில் அடக்கிட முடியாது என்பதனால், அதனை அயல்நாட்டுச் செலுத்து நிலையில் தனி உருப்படியாகவே அமைத்து விடலாம்.

பண்டங்களையும் பணிகளையும் ஏற்றுமதி செய்வதன் மூலம் ஒரு நாடு வருமானம் ஈட்டுகிறது. இவ் வருமானம் அந்த நாட்டின் மொத்த நாட்டு உற்பத்தியின் (Gross National Product) ஒரு பகுதியைக் குறிக்கும். பண்டங்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் மாத்திரமல்லாமல் கப்பலில் சரக்கேற்றுதல், ஆகாய விமானப் பணிகள், பாங்கு-இன்சூரன்சு பணிகள், வெளி நாட்டிலிருந்து சுற்றுலா வரும் பயணிகளுக்கு அளிக்கப்படும் போக்கு வரத்து வசதிகள், வேறு பணிகள் ஆகியவை மூலமும் ஒரு நாட்டிற்கு வருமானம் கிடைத்திடும். இத்தகைய வரவு இனங்களுக்கு எதிராகப் பிற நாடுகளுக்குச் செலுத்தவேண்டிய

[1] ஐக்கிய அமெரிக்க அயல்நாட்டுச் செலுத்துநிலைப் பட்டியல், 1959-ஆம் ஆண்டு, 1960-ஆம் ஆண்டு சார்ந்தது.

ஆதாரம்: மாக்ஸ் ஜே, வேஸர்மேன், சார்லஸ் டபிள்யூ. ஹல்ட் மேன்; 'நவீன பன்னாட்டுப் பொருளாதாரம்', ப. 37

செலுத்துகைகளாகிய செலவினங்களும் உண்டு. பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள், பணிகள் முதலானவற்றிற்குத் தரவேண்டிய விலைகள் செலுத்துகைகளாகும். வெளிநாடுகளிலிருந்து கிடைத்திடும் வட்டி, வெளிநாடுகளுக்குத் தந்துதவிய கடன்களையும், முதலீடுகளையும் திரும்பப்பெறுதல் போன்றவையனைத்தும் பன்னாட்டு வாணிபத்தில் ஒரு நாடு பெறுகின்ற வருமானங்களாகும். இவற்றிற்கு மாறாக, வெளிநாட்டினருக்குத் தரவேண்டிய வட்டி, வெளிநாட்டுக் கடன்களையும் முதலீடுகளையும் திரும்பச் செலுத்துதல் போன்றவையனைத்தும் ஒரு நாட்டின் செலுத்துகைகளாகும்.

ஒரு நாட்டின் வருமானக் கணக்கிலும் உற்பத்திக் கணக்கிலும் அதன் அயல்நாட்டுச் செலுத்துநிலை இடம் பெறுகிறது. அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் மட்டுமே இடம்பெறுகின்றன. ஒரு நாட்டின் ஏற்றுமதிகளின் மதிப்பு என்பது, பிற நாடுகளின் தேவையின் மதிப்பைக் குறிக்கும். ஒரு நாட்டின் இறக்குமதிகளின் மதிப்பு என்பது, தேவைப்படுகின்ற பிறநாட்டுப் பண்டங்களின்மீது செலவிடப்படும் தொகையைக் குறித்திடும். ஏற்றுமதி மதிப்பை X என்றும், இறக்குமதி மதிப்பை M என்றும் குறித்தால், இவையிரண்டிற்கும் உள்ள வேறுபாட்டினை, அதாவது $(X \backsim M)$ என்பதனைப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றைக் கொண்ட ஏற்றுமதி இறக்குமதியிடையே ஏற்படும் வேறுபாடு (balance on goods and services) என்று குறிப்பிடலாம். அல்லது நடப்புக் கணக்கில் வேறுபாடு (balance on current account) எனலாம். இவ் வேறுபாடே வேறுபாட்டுச் சரியீடாகவோ வேறுபாட்டு மிகையாகவோ குறையாகவோ அமையலாம்.

ஐக்கிய அமெரிக்காவைப் பொறுத்தவரையில் முதல் கணக்கு எனப்படும் மூலதனக் கணக்கில் (capital account) இருபெரும் பிரிவுகள் இடம் பெறுகின்றன. அமெரிக்கக் குடிமக்களின் மூலதனப் பேரங்கள் ஒரு பிரிவு. வெளிநாட்டு குடிமக்களுக்குச் சொந்தமான மூலதனப் பேரங்கள் இரண்டாவது பிரிவாகும். இவ்விரு பிரிவுகளையும் முறையே அமெரிக்க மூலதனக் கணக்கு என்றும் வெளிநாட்டு மூலதனக் கணக்கு என்றும் குறிப்பிடுவதுண்டு. மேலும் மூலதன இயக்கங்களை அரசினர் சார்புடையது என்றும் தனியார் துறையைச் சார்ந்தது என்றும் பிரிப்பதுண்டு. இவ்வாறே அயல்நாட்டுச் செலுத்துநிலையில் குறுங்கால முதலென்றும், நீண்ட கால முதலென்றும் பிரிக்கலாம். மூலதனக் கணக்கில் நேரடியான முதலீடுகள் என்ற பிரிவும், கடனீட்டுப் பத்திரங்கள் (securities)

மூலமாகச் செய்யப்படும் முதலீடுகள் என்ற பிரிவும் உண்டு. கடனீட்டுப் பத்திரங்களை-பங்குகளை வாங்குதலும் விற்றலும் இவற்றின் மூலம் எழுகின்ற உரிமைப்பங்குகளும் மூலதனக் கணக்கில் இடம்பெறுகின்றன.[2] இவையனைத்தும் அயல் நாட்டுச் செலுத்துநிலையில் வரவினங்களாகவும் செலவினங் களாகவும் பிரிந்து, இவற்றினிடையே ஏற்படும் வேறுபாடு மூலதனக் கணக்கில் வேறுபாடு (balance on capital account) ஆகிறது.

ஐக்கிய அமெரிக்காவின் ஒருமுக மாற்றுக் கணக்கில் (unilateral transfers account) ஆறு உருப்படிகள் உள்ளன. புதிதாகக் குடியேறியவர்கள் தங்களுடைய குடும்பத்தின ருக்கும் நண்பர்களுக்கும் அனுப்பிடும் தொகையும், மத, சேமநல, கல்வித்துறை சார்ந்த, விஞ்ஞானத்துறை சார்ந்த அமைப்புகளெலாம் அவ்வப்போது அனுப்பிடும் பண்டங் களும் நிதிகளும் இக் கணக்கின் கீழ் வருகின்றன. பிறநாடு களுக்கு அரசாங்கம் அளிக்கின்ற உதவித் தொகையும் இக் கணக்கில் இடம் பெறுகின்றன. இவ்வாறு பிறநாடுகளுக்குச் சென்றிடும் நிதிகளுக்கு நேர் இணையாக வெளிநாடுகளிலிருந்து வராததால் இவற்றை ஒருமுக மாற்றுகள் என்றனர். அயல் நாட்டுச் செலுத்து நிலைகள் குறித்து ஆரம்ப ஆண்டுகளில் பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பு (International Monetary Fund) வெளியிட்ட பிரசுரங்களில் இக் கணக்கு "நன் கொடைகள்" (donations) என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், 1961-ஆம், ஆண்டிலிருந்து இந்த நிதியமைப்பு 'நன்கொடை' என்ற சொல்லுக்குப் பதிலாக மாற்றுகள் (transfers) என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது.

பொன்னை விற்றலும் வாங்குதலும் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் உள்ள வரவினத்திலும் செலவினத்திலும் இடம் பெறுகின்றன. பதிவு செய்யப்படாத பேரங்கள் (unrecorded transactions) கொண்ட கணக்கினைத் "தவறுதல் களும் விடுபட்டவைகளும்" (errors and omissinos) என்று குறிப் பிடுவதுண்டு. வரவினங்களையும் செலவினங்களையும் சமன் படுத்துவதற்குப் பதிவுசெய்யப்படாத பேரங்களைக் கொண்ட கணக்கினைப் பயன்படுத்துவர். அட்டவணையைத் தயார் செய்யும் பொழுதும், அயல்நாட்டுச் செலுத்துநிலையைக் கணக்

[2] அமெரிக்காவைப் பொறுத்த வரையில் மூலதனக் கணக்கில் பதினெட்டு உருப்படிகள் உள்ளன.

ஆதாரம்: வேஸர்மேன் & ஹல்ட்மேன்: 'நவீன பன்னாட்டுப் பொரு ளாதாரம்', ப. 36-37.

கிடுகின்ற புள்ளிவிவர இயலாரின் பார்வைக்குக் கொண்டுவரப் படாத பேரங்கள் நிலவும் பொழுதும், நாடுகளிடையே பரிமாறிக் கொள்ளப்படுகின்ற செலாவணிகள் உடனுக்குடன் கணக்கிற்குக் கொண்டு வரப்படாதபொழுதும் இத்தகைய தவறுதல்களும் விடுபடுபவைகளும் எழுகின்றன. எனினும் முன்னர் குறிப்பிட்டுள்ளதுபோல வரவினங்களையும் செல வினங்களையும் சமன்படுத்துவதற்கு இக் கணக்கு வைப்பு பயன்படுகிறது.

முக்கியத்துவம்

ஒரு நாட்டினுடைய பன்னாட்டு ரீதியான, நிதி சார்ந்த பேரங்களின் அளவுபற்றிய சுருக்கம்தான் அயல்நாட்டுச் செலுத்துநிலை ஆகும். ஒரு நாட்டின் அயல் நாட்டுச் செலுத்து நிலையிலிருந்து, உலகில் அந் நாட்டின் பொருளாதார நிலையையும், பொருளாதார வலிவையும் புரிந்து கொள்ள முடியும். முன்னேறியுள்ள நாடுகள் பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கென முதலீடு செய்கின்றன. வளர்ச்சி யுற்ற நாடுகளின் மூலதனக் கடன்களையும் நிதி யுதவியினையும் நம்பி எந்த அளவிற்குப் பின்தங்கிய நாடுகள் வாழ்கின்ற என் பதனை அயல்நாட்டுச் செலுத்துநிலை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டும். அது போலவே, பழம்பெரும் நாட்டின் கதையையும் அயல்நாட்டுச் செலுத்துநிலை நன்கு வெளிப் படுத்தும். ஒருபழம் பெரும் நாடு செல்வம் கொழிக்கும் நாடாக உள்ளது எனப் பாவித்துக் கொள்வோம். எண்ணற்ற முதலீடு களும் அம் முதலீடுகளிலிருந்து கிடைத்திடும் பெருமளவு ஆதாயப் பங்குகளும் (dividends) வட்டி வருவாய்களும் அப் பழம் பெரும் நாட்டைச் செல்வக் கொழிப்பில் திளைக்கச் செய் கின்றன. இப்படிப்பட்ட நாட்டின் குடிமக்கள் எந்த அளவிற்குப் பழைய ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்திடும் வருமானத்தை நம்பிவாழ்கிறார்கள் என்பதை அந் நாட்டின் அயல்நாட்டுச் செலுத்து நிலை தெற்றென விளக்கிடும். உலகப் பொருளாதார அரங்கில் ஒரு நாட்டின் பொருளாதார அந்தஸ்தும், வலிவும் பொலிவும் காலப்போக்கில் எப்படி யெல்லாம் மாறுகின்றன என்பதை அயல்நாட்டுச் செலுத்து நிலை கோடிட்டுக் காட்டும். ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலையைத் தொடர்ந்து பலவாண்டுகள் ஆய்வு நடத்தினால், உலக வாணிபத்தில் குறுங்காலத்தில் அதன் வாய்ப்புகளைக் கணித்திட முடியும். காலப் போக்கில் அதன் பொருளாதார உறுதிப்பாட்டைப் பற்றிய தெளிவு பெற்றிட

முடியும்; இத்தகைய அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்டு பன்னாட்டு வாணிபத்தில் நிலைத்து நின்றிட உதவும் மாற்று வீதத்தை நிர்ணயிக்க முடியும்.

அயல்நாட்டுச் செலுத்துநிலையைக் கொண்டு பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியும் என்றாலும், எல்லாவற்றையும் இதன் மூலமாகவே தெரிந்துகொள்ள முனைவது அவ்வளவு சுலபமல்ல. உதாரணமாகச் சொல்வதென்றால், சாதகமான அயல்நாட்டுச் செலுத்துநிலை ஒரு நாட்டின் செழிப்பைக் குறித்திடாது. அதுபோலவே, பாதகமான அயல் நாட்டுச் செலுத்துநிலையும், நாடு நொடித்துவிட்டது என்பதைக் குறித்திடாது. ஒரு நாட்டின் செழிப்பும் வறுமையும் அதன் அயல்நாட்டுச் செலுத்துநிலையைப் பொறுத்ததன்று. ஒரு ஏழைநாடு வெளிநாட்டு மூலதனத்தைக் கடனாகப் பெருமளவில் அடைவதாகக் கொள்வோம்; அப்பொழுது அதன் அயல் நாட்டுச் செலுத்துநிலை சாதகமாக அமைந்துவிடும். இவ்வாறே ஏழை நாடுகளுக்குப் பெருமளவில் மூலதனக் கடனுதவி செய்திடும் வலிமைமிக்க ஐக்கிய அமெரிக்காவின் அயல்நாட்டுச் செலுத்துநிலை அதே காரணத்தினால் பாதகமாக அமைந்துவிடும். எனவே, கடன்பெற்றிடும் நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலை அந்த நேரத்தில் சாதகமாகவும், கடன்வழங்கிடும் நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலை அந்த நேரத்தில் பாதகமாகவும் அமைந்திடும்.

அயல்நாட்டுச் செலுத்துநிலை மட்டுமே ஒரு நாட்டின் பொருளாதார நிலையை முழுதும் விளக்கிடாது; அதன் மூலம் புரிவது ஒரு பகுதிதான், அதில் காணக் கிடைக்கும் புள்ளி விவரங்களிலிருந்து மேலெழுந்த வாரியாக பார்க்கும்பொழுது பிரச்சினைகள் ஏதும் தட்டுப்படுவதில்லை. புள்ளிவிவரங்களை ஆழமாக ஆராய்ந்து பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கு நல்ல பகுத்தாய்வு தேவை. அயல்நாட்டுச் செலுத்துநிலையில் உபரி ஏற்படுகிறதா, பற்றாக்குறை ஏற்படுகிறதா என்பதனைக் கணித்து ஒருநாட்டின் பொருளாதார நிலையைப் பற்றி முடிவு எடுக்க முடியாது என்பதனை முன்னரே விளக்கினோம். ஆனால், உபரி உண்டாவதற்கும் பற்றாக்குறை ஏற்படுவதற்கும் காரணங்கள் யாவை என ஆராய்ந்து பார்த்தால் நல்ல பலன் கிடைக்கும்.

அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சமனாக்கல்

ஒருநாட்டின் ஏற்றுமதிகளிலும், இறக்குமதிகளிலும் புலனாகும் உருப்படிகளும் (visible items), புலனாகா உருப்படி

களும் (invisible items) இடம் பெறுகின்றன. அயல்நாட்டு வாணிபநிலையில்[8] (balance of trade) பண்டங்களின் ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றின் மதிப்புமட்டுமே இடம்பெறுகிறது. அதாவது, புலனாகும் பொருள்களின் ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றின் மதிப்புமட்டுமே இடம் இடம்பெறுகிறது. எனவே, அயல்நாட்டு வாணிபநிலை என்பது அயல்நாட்டுச் செலுத்துநிலையினுள் அடங்கிடும் ஒரு பகுதியாகும்; அதுவே பெரும்பகுதியாகும். புலனாகும் பண்டங்களின் ஏற்றுமதிகள் இறக்குமதிகள் மட்டுமல்லாமல் புலனாகாப் பொருள்களின் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு. மதிப்பினைக் கணிப்பது அயல்நாட்டுச் செலுத்துநிலையாகும். ஆகவே, அயல்நாட்டு வாணிபநிலையை விட அயல்நாட்டுச் செலுத்துநிலையின் நோக்கெல்லை (scope) மிகவும் விரிவானது எனலாம். கப்பலில் சரக்கேற்றுதல், சுற்றுலா, பாங்குப் பணிகள், இன்சூரன்சு பணிகள், வட்டி வசூலிப்பு, கடன்பெறுதல்-தருதல், அரசின் பொதுச் செலவு, பொன்னும் மூலதனமும் வெளிச் செல்லுதல்-உள்வருதல், சன்மானங்கள், சீரமைப்புச் செலுத்துகைகள் ஆகிய இன்னபிற உருப்படிகளனைத்தும் புலனாகாப் பொருள்களைச் சாரும்.

தற்பொழுது இந்திய நாட்டின் அயல்நாட்டுச் செலுத்து நிலை சம்பந்தப்பட்ட நடப்புக் கணக்கு, முதல் கணக்கு ஆகிய வற்றின் அட்டவணைகளை ஈராண்டு பயன்படுத்துவோம். அயல் நாட்டுச் செலுத்துநிலையிலுள்ள வேறுபாடு சரிக்கட்டப் பெற்று எப்பொழுதும் சமனாக்கப்பட்டுவிடும் என்பதை இப்பொழுது விளக்குவோம். தான் இறக்குமதி செய்திடும் பண்டங் களுக்கும், பிறநாடுகளிடமிருந்து பெறுகின்ற பாங்குப்பணி களுக்கும் இன்சூரன்சு பணிகளுக்கும் பிறநாட்டுக் கப்பல்களில் சரக்கேற்றுதலுக்கும் இந்தியநாடு செலுத்துகைகள் செலுத்திட வேண்டும். வெளிநாட்டுத் திரைப்படங்களை இந்தியாவில் காட்டுதற்கும், வெளிநாடுகளில் பயிலும் இந்திய மாணவர் களின் கல்விக்கும், வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இந்தியப் பயணிகளின் சுற்றுலாவிற்கும் இந்திய நாடு செலுத்துகைகள் செலுத்திட வேண்டும். இந்தியாவில் பயன்படும் வெளி நாட்டு முதலீடுகளுக்கு வட்டி செலுத்திட வேண்டும். வெளி நாடுகளிடமிருந்து பெற்ற கடன்களுக்கும் பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பிடமிருந்தும் உலக பாங்கிடமிருந்தும் பெற்ற நிதிகளுக்கும் இந்தியா வட்டி செலுத்திடவேண்டும்.

[8] Balance fo trade என்ற தொடரினைக் குறிக்க 'வாணிபக் கொடுப்பல் நிலை' என்ற தொடரையும் பயன்படுத்தலாம்.

இவையனைத்தும் வெளிநாடுகளுக்கு இந்தியா தந்திடவேண்டிய செலுத்துகைகள் என்பதனால் இவற்றைப் பற்று அல்லது செலவினங்கள் (debit items) என்று குறிப்பிடலாம். இதுபோலவே, இந்தியாவின் ஏற்றுமதிகள், இந்தியக் கப்பல்களில் சரக்கேற்றுதல், இந்தியா வழங்கிடும் பாங்கு–இன்சூரன்சு பணிகள், இந்தியாவின் இதர பணிகள், இந்தியப் படங்களை வெளிநாடுகளில் திரையிடல், இந்தியப் பயணிகளின் வெளிநாட்டுச் சுற்றுலா இன்ன பிற யாவும் இந்தியாவின் வரவினங்கள் (credit items) எனப்படும். செவினங்கள், வரவினங்கள் ஆகியவற்றையெலாம் உள்ளடக்கிய எல்லாவிதமான பேரங்களும் ஒருநாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் இடம்பெறும் என்பது தெளிவு. இந்திய நாட்டின் நடப்புக் கணக்குச் சார்ந்த அட்டவணையை ஈண்டு கீழே தருகிறோம்.

அட்டவணை 1. அயல்நாட்டுச் செலுத்துநிலை–நடப்புக் கணக்கு[4]
(1969–70) (ரூ. கோடிக்கணக்கில்)

இனங்கள்	வரவினங்கள்	செலவினங்கள்	நிகர வேறுபாடு
1. வாணிபச் சரக்கு	1403.9	1582.3	—178 4
2. பயணம்	31.7	15.2	+ 16.5
3. போக்குவரத்து	100.4	72.0	+ 28.4
4. இன்சூரன்சு	12.9	13.4	— 05
5. முதலீட்டு வருமானம்	33.8	251.6	—217.8
6. அரசின் சார்புடையது–வேறு எதிலும் சேர்க்கப்படாதது	29.5	23.5	+ 6.0
7 இதர இனங்கள்	54.3	69.4	— 15.1
8. வெகுமதிகள் முதலானவை	174.9	31 0	+143.9
நடப்புப் பேரங்கள்–மொத்தம்	1841.4	2058.4	—217.0
தவறுதல்களும் விடுபட்டவைகளும்			— 14.4
			—231.4

ஒன்றாவது அட்டவணையில் வரும் உருப்படிகள் அனைத்தும் புலனாகும் இனங்களையும் புலனாகா இனங்களையும் உள்ளடக்கியுள்ளன. இவையனைத்தும் சேர்ந்தே வாணிபக்

[4] மூலம்: இந்திய ரிசர்வ் பாங்கு புல்லடின் (Reserve Bank of India Bulletin), மார்ச் 1971. இந்த அட்டவணையில் எடுத்தாளப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் தற்காலிகமானதே.

கணக்கு (Trade Account) அல்லது நடப்புக் கணக்கு (Current Account) ஆகும். இவ்வுருப்படிகள் அனைத்திலும் முதலாவது உருப்படியாகிய வாணிபச் சரக்கே மிகவும் முக்கியமானது. இது அயல்நாட்டு வாணிபநிலையைக் குறித்திடும். அயல்நாட்டு வாணிபநிலை சமனாகவில்லை; அதில் ஏற்பட்டுள்ள பற்றுக் குறை ரூ. 217.4 கோடியாகும். முதலீட்டு வருமானத்திலும் பற்றுக்குறை ரூ. 127.8 கோடி அளவிற்குப் பெருகியுள்ளது. நடப்புக் கணக்கை முழுமையாக நோக்கும்பொழுது பற்றுக் குறை ரூ. 231.4 கோடி அளவிற்கு உயர்ந்து உள்ளது.

இந்தியநாட்டின் முதல்கணக்கு (capital account) பற்றிய அட்டவணையைப் பார்ப்போம்.

அட்டவணை 2. அயல்நாட்டுச் செலுத்துநிலை–முதல் கணக்கு[5]
(1969–70) (ரூ. கோடிக்கணக்கில்)

இனங்கள்	வரவினம்	செலவினம்	நிகர வேறுபாடு
1. தனியார் கடன்கள்	34.2	68.4	— 34.2
2. பாங்கு	51.8	37.2	+ 14.6
3. அதிகார பூர்வமான கடன்கள்	990.5	501.6	+488.9
4. காப்புகள் முதலானவை	79.0	316.9	—237.9
மொத்தம் : மூலதனமும் செலவாணிப் பொன்னும்	1155.5	92.41	+231.4

மூலதனக் கடனைப் பெறுதல், மூலதனக் கடனை வழங்குதல், மூலதனத்தைத் திரும்பச் செலுத்துதல், வெளிநாட்டாரிடமிருந்து சொத்துகளை வாங்குதல், வெளிநாட்டாருக்குச் சொத்துகளை விற்றல் ஆகிய இவையனைத்தும் மூலதனப் பேரங்களாகும். இப் பேரங்களைக் கொண்ட முதல் கணக்கு பற்றிய அட்டவணை 2–ஐ மேலே தந்துள்ளோம்.

நடப்புக் கணக்கிற்கும் முதல்கணக்கிற்கும் உள்ள வேறுபாட்டினை நோக்குவோம். நடப்பில் உற்பத்தியாகின்ற பண்டங்கள், பணிகள் ஆகியவற்றிற்காகப் பெறப்படுகின்ற வரவுகளும், செலுத்தப்படுகின்ற செலுத்துகைகளும் நடப்புக் கணக்கில் இடம்பெறுகின்றன. உரிமைப்பங்குகளுக்கு வழங்கிடும் வட்டியும் அவற்றின் மீது பெற்றிடும் வட்டியும் சன்மானங்களும் நன்கொடைகளும் நடப்புக் கணக்கில் இடம்பெறு

[5] மேலே வரும் இந்திய ரிசர்வ் பாங்கு புள்ளடினே மூலமாகும்.

கின்றன. ஆனால் மூலதனக் கடன்களைப் பெறுதல், வழங்குதல் போன்றவையெலாம் முதல் கணக்கில் வைக்கப்படுகின்றன. ஒரு நாட்டின் நடப்புக் கணக்கில் செலவினங்கள் என்பன வெல்லாம் அந்த நாட்டின் வருமான ஓட்டத்தில் ஏற்படும் குறைப்பினைக் குறிக்கும். வருமான ஓட்டத்தில் ஏற்படும் கசிவு (leakage) என்று இதனைக் குறிப்பிடலாம். சுருக்கமாகக் கூறின், நடப்புக் கணக்கில் ஏற்படும் மாற்றங்களனைத்தும் நாட்டின் தேசிய வருமானத்தைப் பாதிக்கும் எனலாம். ஆனால் முதல் கணக்கானது நேரடியாகத் தேசிய வருமானத்தைப் பாதிக்காது என்றாலும், நாட்டின் சொத்துகள்மீது மாற்றங்களை உண்டாக் கிடும்.

நடப்புக் கணக்கும் முதல் கணக்கும் உருப்படிகளைப் பொறுத்தவரையில் வைப்பு முறையில் வேறுபட்டாலும், இவ் விரு கணக்குகளையும் நேர் செய்திடவேண்டும். ஏனெனில், அயல் நாட்டுச் செலுத்துநிலை எப்பொழுதும் சமம் அடைந் திடும்—சமம் அடைந்திட வேண்டும். வாணிபக் கணக்கின் உபரி மூலதனக் கணக்கின் பற்றுக்குறைக்குச் சமமாகிட வேண்டும். அதுபோலவே, முன்னதன் பற்றுக்குறை பின்னதன் உபரிக்குச் சமமாக வேண்டும். உதாரணத்திற்கு இந்தியாவையே எடுத்துக் கொள்வோம். வெளிநாடுகளி லிருந்து வாங்கியதைவிட அந் நாடுகளுக்கு இந்தியா அதிக அளவில் பண்டங்களையும் பணிகளையும் ஏற்றுமதி செய்து விற்றமையால் இந்தியாவிற்கு நடப்புக் கணக்கில் உபரி கிடைத்துள்ளது எனக்கொள்வோம். நடப்புக் கணக்கில் கிடைத்த உபரியைக் கொண்டு வெளிநாடுகளிலிருந்து இந்தியா பொன்னையோ அல்லது வேறு சொத்துகளையோ வாங்கலாம். அல்லது இந்த உபரியிலிருந்து வெளிநாடு களுக்குக் கடனுதவி அளிக்கலாம். இவையனைத்தும் முதல் கணக்கில் செலவினங்களாகின்றன. இதற்கு மாறாக நடப்புக் கணக்கில் இந்தியாவிற்குப் பற்றுக்குறை ஏற்பட்டால், பற்றுக் குறையை அடைக்க வெளிநாடுகளுக்கு இந்தியா பொன்னை யோ மற்ற சொத்துகளையோ அனுப்பலாம். அல்லது பிற நாடுகளிடமிருந்து கடன் வாங்கலாம். இவையனைத்தும் முதல் கணக்கில் வரவினங்களாகின்றன. நடப்புக் கணக்கும் முதல் கணக்கும் ஒன்று சேர்ந்து ஒன்றுக்கொன்று சமன் செய்து கொள்கின்றன. முதல் அட்டவணையில் நடப்புக் கணக்கில் ரூ. 231.4 கோடிக்குப் பற்றுக் குறை அமைந்துள்ளது. இரண் டாவது அட்டவணையில் கண்டுள்ள முதல் கணக்கில் அதே அளவு தொகை உபரியாகி நேர் செய்துள்ளது.

முன்னரே குறிப்பிட்டுள்ளது போல, பாதக அயல் நாட்டுச் செலுத்துநிலை நிலவிடும்பொழுது அதனை ஒழுங்கு படுத்திட நடப்புக் கணக்கில் உள்ள பற்றுக் குறையைப் போக்கிட வேண்டும். அதற்கு என்ன செய்திட வேண்டும்?

(a) வெளிநாட்டில் இதுவரையில் தான் சேமித்து வைத்திருக்கின்ற இருப்புகளைப் பயன்படுத்திடலாம். உதாரணமாக இந்தியா தான் இலண்டன் மாநகரில் சேமித்து வைத்திருந்த ஸ்டர்லிங் இருப்புக்களைப் (sterling balances) பயன்படுத்திப் பற்றுக் குறையை நீக்கியது.

(b) பொன் ஏற்றுமதி மூலமும் பற்றுக்குறையைத் தவிர்க்கலாம்.

(c) பற்றுக்குறையைச் சரிசெய்திட வெளிநாடுகளில் குறுங்காலக் கடன்களையும் நெடுங்காலக் கடன் களையும் எழுப்பலாம்.

மேலே வரிசைப்படுத்தியுள்ள மூன்றும் முதல் கணக்கைச் சாரும். நடப்புக் கணக்கின் வரவினங்களுக்கும் செலவினங் களுக்கும் இடையிலே எழுகின்ற வேறுபாடு எனும் இடை வெளியை அடைத்திட அவை பயன்படும். இம் மூன்று முறை களையும் தக்கவாறு பின்பற்றியே நடப்புக்கணக்கில் எழும் உபரியினையும் சரி செய்து அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சமப்படுத்திடலாம்.

பாதக அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சரிசெய்தல்

அயல்நாட்டுச் செலுத்துநிலையில் சமநிலையின்மைக்கு (disequilibrium) இரண்டு காரணங்கள் கற்பிக்கலாம். உலக அரங்கில் ஒரு நாடு நிறைய கடன் வாங்கினாலோ அல்லது கடன் கொடுத்தாலோ அதனுடைய அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பற்றுக்குறையோ எச்சப்பாடோ ஏற்படும். உதாரண மாக, பொருளாதார வளர்ச்சியை முன்னிட்டு இந்தியா அமெரிக்காவிடமிருந்து நிறைய கடன் வாங்குவதாகக் கொள் வோம். மூலதனப் பொருள்களையும் துய்ப்புப் பொருள்களையும் இந்தியா நிறைய இறக்குமதி செய்யும். இதனால் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் பற்றுக்குறை ஏற்படும் கொஞ்சகாலத்திற்குப் பின்னர் திட்டங்கள் முடிவுற்று, உற்பத்தி பெருகும்; இரும்பு, எஃகு, மின்சாரம் போன்றவைகளின் உற்பத்தி உயரும். உற்பத்தி பெருகி வளர்ச்சியுற்ற நிலையில், இங்கிலாந்திற்குத்

தரவேண்டிய கடன்களை இந்தியா திரும்ப அடைத்திடும். இதனால் இந்திய ஏற்றுமதிகள் உயர்ந்து, அயல்நாட்டுச் செலுத்துநிலையில் உபரி உண்டாகும். இங்கிலாந்தைப் பொறுத்தவரையில், இந்தியாவிற்குக் கடன் வழங்கியபொழுது அந் நாட்டிற்குச் சாதக அயல்நாட்டுச் செலுத்துநிலையும் கடனைத் திரும்ப பெற்றபொழுது பாதக அயல்நாட்டுச் செலுத்துநிலையும் நிலவின. ஆக, கடனளிப்பதினாலும் கடன் வாங்குவதினாலும் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் சமநிலையின்மை கேடு பயக்கக்கூடியதன்று.

தன் தகுதிக்கு மீறி ஒருநாடு வாழும்பொழுதும் பற்றுக் குறை உண்டாகும். இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக விருக்கும். இறக்குமதி செய்யப்படும் பொருள்களும் முதலீட்டுப் பொருள்களல்ல; முதன்மைப் பொருள்களல்ல; மாறாக, துய்ப்புப் பொருள்களே. இத்தகைய இறக்குமதிகள் பொருளாதார வளர்ச்சிக்கு உதவமாட்டா. இவ்வாறு அயல் நாட்டுச் செலுத்து நிலையில் உண்டாகும் பற்றுக்குறை நல்ல தன்று. இத்தகைய பற்றுக் குறைகள் திரும்பத்திரும்ப ஆண்டு தோறும் ஏற்படுமேயானால் அவற்றைச் சரி செய்திட வேண் டியது அவசியம். இல்லையெனில் அந்த நாடு தான் சேர்த்து, சேமித்து வைத்திருக்கிற அயல்நாட்டுச் செலாவணி, பொன் இருப்புகள் போன்றவை அனைத்தையும் கொஞ்சம் கொஞ்ச மாக இழக்க நேரிடும். ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் சமநிலையின்மையைச் சரி செய்ய பண வாட்டம் (deflation) நாணய மாற்றுக் குறைப்பு (exchange depreciation)- நாணய மதிப்புக் குறைப்பு (devaluation), நாணய மாற்றுக் கட்டுப்பாடு (exchange control), இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி ஏற்றுமதிகளைப் பெருக்குதல் என ஐம்பெரும் வழி முறைகள் உள்ளன. நாணய மாற்றுக் கட்டுப்பாடு குறித்தும் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்திடப் பயன்படும் இறக்குமதி வரிகள், லைசென்சு 'கோட்டா' முறை போன்றவை குறித்தும் ஏற்கனவே விரிவாக விளக்கியுள்ளோம்.[6] இவை நீங்கலாக பிறவழி முறைகளைப் பற்றி இங்கு எழுதுவோம்.

பண வாட்டம்

பாதக அயல்நாட்டுச் செலுத்துநிலை என்பது மேலே தெரி கின்ற ஓர் அறிகுறிதான். அடிப்படைக் காரணம், முதலீட்

[6] இறக்குமதி வரிகள் குறித்து, 8-வது அத்தியாயத்திலும், லைசென்சு-கோட்டா முறை பற்றி 9-வது அத்தியாயத்திலும், நாணய மாற்றுக் கட்டுப் பாடு தொடர்பாக 11-வது அத்தியாயத்திலும் காண்க.

டிற்காகவோ அல்லது வெறும் துய்ப்பிற்காகவோ வேண்டி வெளிநாட்டுப் பண்டங்களின் தேவை வெகுவாகப் பெருகுவது தான். எனவே துய்ப்பைக் குறைத்து வெளிநாட்டுப் பண்டங்களின் இறக்குமதியைக் குறைத்திடவேண்டும். வருமானத்தைக் குறைத்து அதன்மூலம் தேவையைக் குறைத்துத் துய்ப்பைக் கட்டுப்படுத்தப் பண வாட்டம் உதவுகிறது. பண வருமானத்தைக் குறைக்க மைய பாங்கு, பாங்கு வீதத்தை உயர்த்தலாம். வெளி அங்காடி நடவடிக்கைகள் (open market operations) மூலமாகவும் பண வருமானத்தைக் கட்டுப்படுத்தலாம். வர்த்தக பாங்குகள் தோற்றுவிக்கின்ற கடன் பண அளவையும் கட்டுப்படுத்தலாம். பண வருமானம் இத்தகைய நடவடிக்கைகளினுல் குறைந்து, தேவை சுருங்கும்பொழுது இறக்குமதிகள் விழுந்து விடுகின்றன. பண வருமானக் குறைப்பு பணச் செலவில் குறைப்பினை உண்டாக்குகின்றது. அதாவது உற்பத்திச் செலவுகள் கீழே விழத் தொடங்குகின்றன. இதனுல் ஏற்றுமதிகள் தூண்டப்படுகின்றன. உலக விலையை விட உள்நாட்டு விலை குறைந்திருப்பதால் உள்நாட்டினர் உள்நாட்டுப் பண்டங்களையே பெரிதும் வாங்குவர். இவ்வாறு ஒரு நாட்டின் நிதித் துறையினர் பின்பற்றும் பண வாட்டக் கைக்கோளின் மூலம் இறக்குமதியைச் சுருக்கி ஏற்றுமதியைப் பெருக்கி அயல்நாட்டுச் செலுத்து நிலையில் நிலவிடும் சமனின்மையைப் போக்கிடலாம்.

பொதுவாகவே, பொன் திட்டத்தைப் (gold standard) பின்பற்றுகிற நாடுகளும், நிலையான மாற்று வீதத்தை நிர்ணயித்துக் கொண்டுள்ள நாடுகளுமே பண வாட்ட முறையைப் பயன் படுத்தும். என்றுலும், பண வாட்ட முறையில் ஓரிரு குறைகள் உள்ளன. பண வருமானத்தைக் குறைப்பது என்பது தொழிலாளர் தம் கூலியைக் குறைப்பதாகும். தொழிற் சங்கங்கள் கூலிக் குறைப்பை எதிர்க்கும். மேலும், பண வாட்டத்தினைச் செயல்படுத்தும்பொழுது வேலையின்மை உண்டாகும்; பலதரப்பட்ட மக்களுக்கு-குறிப்பாகத் தொழிலாளர்களுக்குத் தொல்லைகள் ஏற்படும்.

நாணய மாற்றுக் குறைப்பு

ஒரு நாட்டு நாணயத்தினைப் பிறிதொரு நாட்டு நாணயத்திற்கு மாற்றும்பொழுது, மாற்று வீதத்தினைக் குறைப்பதையே நாணயமாற்றுக் குறைப்பு என்கிறேம். உதாரணமாக, இந்தியா அமெரிக்காவுடன் செய்திடும் வாணிபத்தின் விளைவாக இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்துநிலை பாதகம் அடைவ

தாகக் கொள்வோம். இதற்குப் பொருள், இந்தியாவிற்கு அமெரிக்க டாலர் அதிகமாகத் தேவைப்படுகிறது என்பதாகும். இதனுல் டாலரின் ரூபாய் மதிப்பு உயர்ந்துவிடும். அதாவது டாலரின் மதிப்பு (விலை) உயரும், ரூபாயின் மதிப்பு (விலை) குறையும்.

டாலரின் மதிப்பு உயருவதால் இந்திய அங்காடியில் அமெரிக்கப் பண்டங்களின் விலை உயருகிறது. இயற்கை யாகவே இந்தியாவில் அமெரிக்கப் பண்டங்களின் தேவை சுருங்கும். இந்திய இறக்குமதிகள் குறையும். அதேவேளையில், ரூபாய் நாணயத்தின் மாற்றுமதிப்புக் குறைந்துள்ளமையால் இந்திய ஏற்றுமதிகள் தூண்டுதல்பெறும். முதலாவதாக, இந்திய நாணய மதிப்புக் குறைந்துள்ளமையால் அமெரிக்கர் களைப் பொறுத்தவரையில் இந்தியப் பண்டங்கள் மலிவாகக் கிடைக்கும். இந்திய உற்பத்தியாளர்கள் ஏற்றுமதி செய்திடும் பண்டங்களின் ஒவ்வொரு டாலர் மதிப்பிற்கும் இணையாக அதிக அளவு ரூபாய் நாணயத்தைப் பெறுவார்கள். ஆகவே, இறக்குமதிகள் குறைந்து, ஏற்றுமதிகள் பெருகி அயல்நாட்டுச் செலுத்து நிலையிலுள்ள பாதக நிலை மாறிடும்.

இதில் நாணய மாற்றுக் குறைப்பு இயல்பாகவே நடை பெற்றுள்ளது. எனினும் இதிலும் குறைகளுண்டு. நிலையான மாற்று வீதத்தை நிர்ணயித்துக் கொள்கின்ற நாடுகளுக்கு இந்த வழிமுறை பொருந்தாது. பன்னுட்டு வாணிபத்தைப் பலவீனப் படுத்தக் கூடிய முறை இது. நாணய மாற்றுக் குறைப்பு முறை யினைப் பின்பற்றும் நாட்டிற்கு எதிராக வாணிப வீதம் (terms of trade) மாறிவிடும் கேடும் உள்ளது. எப்படியெனில், வெளி நாட்டுப் பண்டங்களின் விலை உயர்ந்தும் உள்நாட்டுப் பண்டங்களின் விலை குறைந்தும் இருக்கும்பொழுது, உள் நாட்டின் வாணிப வீதம் அதற்கு எதிராகப் போய்விடும். நாணய மாற்றுக் குறைப்பு பணவீக்கச் சூழலை உண்டாக்க வல்லது என்பது சில நாடுகளின் அனுபவம்.

நாணய மதிப்புக் குறைப்பு

ஒரு நாணயத்தின் மதிப்பைப் பொன்னைக் கொண்டும் நிர்ணயிக்கலாம்; மற்ற செலாவணிகளைக் கொண்டும் நிர்ண யிக்கலாம். இவ்வாறு நிர்ணயிக்கப் பெறுகின்ற ஒரு நாண யத்தின் பொன் மதிப்பையோ அல்லது மற்ற செலாவணி மதிப்பையோ குறைப்பதனையே நாணய மதிப்புக் குறைப்பு (devaluation) என்கிறோம். நாணய மாற்றுக் குறைப்பினைச்

சந்தைச் சக்திகள் இயற்கையான முறையில் செய்திடும் பொழுது நாணய மதிப்புக் குறைப்பினை அரசாங்கம் செய்கிறது. விளைவைப் பொறுத்தவரையில் உண்மையில் இரண்டும் ஒன்று தான். உள்நாட்டு நாணய மதிப்புக் குறைந்து வெளிநாட்டுச் செலாவணி மதிப்பு உயரும்பொழுது, வெளிநாட்டுப் பண்டங்கள் விலை உயர்ந்துவிடுகின்றன. எனவே, இறக்கு மதிகள் குறைந்துவிடுகின்றன. மாறாக, உள்நாட்டுப் பண்டங்கள் விலை குறைந்து ஏற்றுமதிகள் பெருகி அயல் நாட்டுச் செலுத்து நிலையிலுள்ள பற்றுக்குறை நீங்குகிறது.

ஒரு நாட்டின் நாணயத்திற்கு மிகை மதிப்பு (over valuation) நிலவும்பொழுது, உள்நாட்டுப் பண்டங்களில் விலை யுயர்ந்து ஏற்றுமதி தடையுறும். வெளிநாட்டுப் பண்டங்கள் மலிவாகக் கிடைப்பதால் இறக்குமதிகள் பெருகும். அயல் நாட்டுப் பற்றுக்குறை ஏற்படும். இதனைப் போக்க நாணய மதிப்புக் குறைப்பே சிறந்தது.

ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்து நிலையிலுள்ள பாதகப் போக்கினை நீக்கிட, நாணய மதிப்புக்குக் குறைப்பு எந்த அளவிற்குப் பயன்படும் என்பது, சில சூழ்நிலைகளைப் பொறுத்தது. தேவை நெகிழ்ச்சி, செலவு—விலைகட்டமைவு, மற்ற நாடுகளின் ஒத்துழைப்பைப் பொறுத்தே நாணய மதிப்புக் குறைப்பின் விளைவுகள் அமையும்.

இறக்குமதிகள், ஏற்றுமதிகள் ஆகியவற்றின் தேவை நெகிழ்ச்சியைப்பொறுத்து நாணய மதிப்புக் குறைப்பின் வெற்றி அமையும். வெளிநாட்டுப் பண்டங்கள்மீது இந்தியாவின் தேவை நெகிழ்ச்சி குறைந்ததாகவும் இந்திய பண்டங்கள் மீது வெளிநாட்டுத் தேவை நெகிழ்ச்சி குறைந்ததாகவும் அமைந்து விட்டால், வெறும் நாணய மதிப்புக் குறைப்பு மூலம் இறக்கு மதிகளைக் குறைத்திட முடியாது; ஏற்றுமதிகளைத் தூண்டிட முடியாது. ஆனால், நாணய மதிப்புக் குறைப்பு இறக்குமதி களின் மொத்த மதிப்பை மேலும் உயர்த்தி ஏற்றுமதிகளின் மொத்த மதிப்பை மேலும் குறைத்து; அயல்நாட்டுச் செலுத்து நிலையை மேலும் பாதகமாக்கிவிடும். எனவே, தேவை நெகிழ்ச்சி மிக்கதாக இருந்தால்தான் நாணய மதிப்புக் குறைப்பு விரும்பத்தக்க பலனை அளிக்கும்.

செலவு—விலை கட்டமைவில் (cost-price structure) ஏதும் மாற்றம் ஏற்படாதிருந்தால்தான் நாணய மதிப்புக் குறைப்பு வெற்றியுறும். நாணயத்தின் வெளிநாட்டு மதிப்பைக் குறைத்

திடும்பொழுது அதன் உள்நாட்டு மதிப்பு, அதாவது அதன் வாங்கும் சக்தி உள்நாட்டில் மாறிவிடக் கூடாது. உள்நாட்டில் நாணயத்தின் வாங்கும் சக்தி (purchasing power) மாறுதிருப்பது என்பது செலவு, விலை முதலானவை மாருதிருப்பதைக் குறிக்கும். நாணய மதிப்புக் குறைப்பு செயல்படுத்தப்படும் பொழுது, இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்ட பண்டங்களின் விலையை வர்த்தகரும் ஊக வணிகரும் உயர்த்திவிடுவர். இத்தகைய பண்டங்கள் தொழிலாளர்தம் துய்ப்பிற்குத் தேவை யானவை என்ருல், இப் பண்டங்களின் விலை உயர்ந்துவிடுவ தால் வாழ்க்கைச் செலவும் உயர்ந்து, கூலி உயர்வும் மேலும் விலை உயர்வும் ஏற்படும் சூழ்நிலை உருவாகிறது. இதனுல் செலவு–விலை கட்டமைவு மாறிவிடுகிறது; நாணய மதிப்புக் குறைப்பின் மூலம் கிடைத்திடவேண்டிய நல்ல விளைவுகள் கிடைக்காமல் போய்விடுகின்றன.

அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்பட்டுள்ள பாதகத் தைப் போக்கிட ஒரு நாடு நாணய மதிப்புக் குறைப்பினை மேற் கொள்ளும்பொழுது, பிற நாடுகளும் அதே முறையைக் கையாண்டாலோ அல்லது தங்கள் நாடுகளின் சுங்கச் சுவரை உயர்த்திவிட்டாலோ எந்த விதமான நல்விளைவுகளும் ஏற்பட மாட்டா. எனவே, பிற நாடுகளின் ஒத்துழைப்பு இருந்தால் தான் இந்த முறை தக்க பயனை அளிக்கும்.

13. அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் சமநிலையின்மை

(Disequilibrium in the Balance of Payments)

மூலதன இயக்கங்கள் (Capital movements)

அயல்நாட்டுச் செலுத்து நிலையில் மொத்த வரவினங்களும் செலவினங்களும் சமமாக இருந்திடவேண்டும். கணித முறைப்படி உரைப்பின், அயல்நாட்டுச் செலுத்து நிலையில் எப்பொழுதும் சமநிலை நிலவிட வேண்டும். வரவினங்களிலும் செலவினங்களிலும் சில உருப்படிகளைப் பொறுத்துச் சமநிலையின்மை ஏற்படலாம்.

பொதுவாக மெர்க்கண்டலிஸ்டுகள் (mercantilists) நடப்புக் கணக்கை மட்டும் நோக்குவார்கள். பொன் கட்டிகளை ஏற்றுமதி செய்தோ இறக்குமதி செய்தோ, ஏற்படுகின்ற உபரியையும் பற்றுக் குறையையும் மெர்க்கண்டலிஸ்டுகள் சரிசெய்வார்கள். தொன்மைப் பொருளியலாரும் (classicists) நவீனத் தொன்மைப் பொருளியலாரும் (neo-classicits) பொன் கட்டிகளின் இயக்கத்தைக் கொண்டும் 'தூண்டப் பெற்ற' அல்லது 'சமநிலைப்படுத்துகின்ற' மூலதன ('induced' or 'equilibrating' capital) இயக்கத்தைக் கொண்டும் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் சமநிலையின்மையை அளந்திடுவர். இச் சமநிலையின்மையைச் சரிசெய்திடும் மூலதன இயக்கத்தையே தூண்டப்பெற்ற, சமநிலைப்படுத்துகின்ற மூலதன இயக்கம் என்கிறோம். இதற்கு மாறாக, நாடுகளிடையே வட்டிவீத வேறுபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற மூலதன இயக்கம் தன்னிச்சையானது (autonomous). எனவே, அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமநிலையின்மையை அளந்திடும்பொழுது, இவ் வேறுபாட்டின் அடிப்படையில் தூண்டப்பெற்ற-சமநிலைப்படுத்துகின்ற மூலதன இயக்கத்தை மட்டும் தனிப்படுத்திக் கணக்கிற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஈடுசெய் நிதியாக்கம் (Compensatory financing)

அதிகார பூர்வமான ஈடுசெய் நிதியாக்கத்தினைப் (official compensatory financing) பயன்படுத்தி அயல்நாட்டுச் செலுத்து நிலையில் எழும் சமநிலையின்மையைச் சரிசெய்திடும் கருத்தியலைப் பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பு (International Monetary Fund) உருவாக்கியது. அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் உபரியையோ அல்லது பற்றுக் குறையையோ ஒழுங்குபடுத்துவதற்காக, நிதித் துறையினர் பொன் நாணயத்தையும், அன்னியச் செலாவணி இருப்புகளையும், கொடைகளையும், கடன்களையும் 'அதிகாரபூர்வ ஈடுசெய் நிதியாக்க'மாகப் பயன்படுத்துவர். பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பின் ஈடுசெய் நிதியாக்க முறைக்கும் தொன்மைப் பொருளியலாரின் சமன்படுத்தும் மூலதன இயக்க முறைக்கும் வேறுபாடு உண்டு.

ஈடுசெய் நிதியாக்க முறையின் மூலம் சமனின்மையைப் போக்குவது என்பது அதிகாரபூர்வமானது. இம் முறையில் பொன் இயக்கமோ சமநிலைப்படுத்தும் மூலதன இயக்கமோ இடம்பெறுது. இவ்வாறு நடைபெறுகின்ற மூலதன இயக்கங்கள் தனியார் கணக்கைச் சார்ந்தவை. என்றாலும், தனியார் துறை சார்ந்த ஈடுசெய் நிதியாக்கம் என்பது இன்றைய உலகில் முக்கியத்துவம் உடையதன்று. ஏனெனில், பெருவாரியான நாடுகளில் ஏதோ ஒரு வகையில் நாணயமாற்றுக் கட்டுப்பாடு நிலவுகிறது. வர்த்தக பாங்குகளும் தனி நபர்களும் தங்களுடைய அன்னியச் செலாவணி இருப்புகளையும், சேமிப்புக்களையும், பொன் இருப்புகளையும் பண, நிதித்துறையினரின் அதிகார வரம்பிற்குள் கொண்டுவர வேண்டும். அயல்நாட்டுச் செலுத்துநிலையிலுள்ள சமநிலையின்மையைப் போக்குவதற்குப் பண, நிதித் துறையினர் அன்னியச் செலாவணியையும் பொன்னையும் பயன்படுத்தும் பொழுது, அதிகாரபூர்வமாக ஈடுசெய்திடும் நிதியாக்கமாக அது அமையும். அயல்நாட்டுச் செலுத்து நிலையில் உள்ள பல்வேறு உறுப்புகளைத் தன்னிச்சையானவை, ஈடுசெய்தற்குரியவை என, இருபகுதிகளாகப் பிரித்து, ஈடுசெய்தற்குரிய உறுப்புகளைமட்டும் தனிப்படுத்திக் கணக்கில் எடுத்துக்கொள்வதில் பெரும் தொல்லைகள் ஏற்பட்ட காரணத்தினால், பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பு ஈடுசெய் நிதியாக்க முறையைக் கைவிட்டது.

சமநிலைக்கான விதிகள்

மூலதன இயக்கத்தின் மூலமாகவும் ஈடுசெய் நிதியாக்கத்தின் மூலமாகவும் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் உருவாகும் சமநிலையின்மையைப் போக்கிடலாம் என்பதனை மேலே விளக்கினோம். சமநிலை ஏற்படவும் நிலைத்திருக்கவும் எத்தகைய சூழ்நிலை அமைய வேண்டும் என்பதனை இப்பொழுது ஆராய்வோம். சில விதி முறைகளின் அடிப்படையில்தான் சமநிலை உருவாக வேண்டும்.

அன்னியச் செலாவணியின் அளிப்பும் தேவையும் சமமாக இருக்கும்பொழுது அயல்நாட்டுச் செலுத்து நிலையில் சமநிலை உண்டாகும். சமநிலையை இவ்வாறு இலக்கணப் படுத்தும்பொழுது சில பிரச்சினைகள் எழுகின்றன. கால நீட்சி, மாற்று வீதம், வருமான-வேலை மட்டம், பொருளாதாரத்தில் நிலவிடும் தடையின்மை முதலானவையே பிரச்சினைகளாகும்

அயல்நாட்டுச் செலுத்துநிலை சமநிலையில் இருக்கிறதா இல்லையா என்பது கால நீட்சியைப் (time period) பொறுத்ததாகும். கால நீட்சி என்பது ஒரு நாளையோ, ஒரு மாதத்தையோ, ஓர் ஆண்டையோ அல்லது குறிப்பிட்ட வாணிபச் சுழலுக்கான (business cycle) கால அளவையோ குறிக்கலாம். ஒரு குறிப்பிட்ட கால நீட்சியின்போது சமநிலையும், பிறிதொரு கால நீட்சியின்போது சமநிலையின்மையும் நிலவுதல் உண்டு.

மாற்று வீதத்தைப் பொறுத்தும் சமநிலையோ சமநிலையின்மையோ அமைவதுண்டு. மாற்றுவீதம் மாறுவதற்கு ஏற்றாற்போல அன்னியச் செலாவணியின் தேவையும் அளிப்பும் மாறும். உயர்ந்த மாற்று வீதத்தில் அன்னியச் செலாவணியின் தேவை அதிகமாகவும் அளிப்பு குறைவாகவும் இருக்கும்; குறைந்த மாற்று வீதத்தில் அளிப்பு அதிகமாகவும் தேவை குறைவாகவும் இருக்கும். சமநிலையை உண்டாக்குவதற்கு ஏற்ற மாற்று வீதத்தை நிர்ணயம் செய்வதற்கு வாங்கும் சக்தி சமநிலைக் கோட்பாடு (Purchasing Power Parity Theory) உள்ளது.

அன்னியச் செலாவணியின் தேவையும் அளிப்பும் உள்நாட்டு-வெளிநாட்டு வருமான வேலை வாய்ப்புச் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு மாறும். உள்நாட்டு வருமானக் குறைப்பின்மூலமாக அயல்நாட்டுச் செலுத்து நிலையிலுள்ள பற்றுக் குறையினை அகற்றலாம். உற்பத்திச் சாதனங்கள் வேலைவாய்ப்

பினைப் பெருமளவிற்கு இழந்திடாத வகையில் அன்னியச் செலாவணியின் தேவையையும் அளிப்பையும் சமப்படுத்திட வேண்டும். அப்பொழுதுதான் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் சமநிலை உருவாகும். பன்னாட்டு வாணிபம் தவிர்த்த வேறு காரணங்களினால் வேலையின்மை நிலவினால், அதற்கும் அயல்நாட்டுச் செலுத்து நிலையிலுள்ள சமநிலைக்கும் சம்பந்தம் கிடையாது. ஒரு நாட்டின் வருமான-வேலை மட்டங்களைப் பொருத்து மட்டுமல்லாமல் அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தைப் பொறுத்தும் அன்னியச் செலாவணித் தேவை எழும்.

தடையற்ற, சுயேட்சையான பொருளாதாரம் ஒரு நாட்டில் நிலவிட வேண்டும். அயல்நாட்டுச் செலுத்து நிலையின் சமநிலைக்குச் சுயேட்சையான பொருளாதார அமைப்பு ஆதாரமாக அமைய வேண்டும். சமநிலையை ஏற்ப டுத்தும் நோக்குக்காக, அளவு மீறிய இறக்குமதிக் கட்டுப் பாடும் கூடாது; அத்துமீறிய ஏற்றுமதித் தூண்டுதலும் கூடாது. இவையெல்லாம் அளவோடு இருத்தல்வேண்டும். வருமான நோக்குடனும் உள்நாட்டு இளந்தொழில்களுக்குப் பாது காப்புத் தரும் நோக்குடனும் சுங்கக் கட்டுப்பாடுகளையும் ஏற்று மதித் தூண்டுதல்களையும் நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது வேறு. இத்தகைய இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் ஏற்றுமதித் தூண்டுதல்களும் அயல்நாட்டுச் செலுத்துநிலையின் சமநிலைக்கு விரோதமான போக்கு உள்ளவை அல்ல. சமநிலையை ஏற்படுத்துவதற்கு வேறு சில விதிகளும் உண்டு. இருப்புகள் (inventories) இயல்பாக அமைய வேண்டும். பண அளவும் வட்டி வீதமும் ரொக்க விருப்பத் தேர்வுக்குப் (liquidity preference) பொருந்தி வரவேண்டும்.

சமநிலையின்மையின் வகைகள்

அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பல காரணங்களினால் சமநிலையின்மை ஏற்படலாம். காரணங்கள் இருக்கின்ற அளவிற்குச் சமநிலையின்மையில் வகைகளும் உண்டு. குறிப் பாக இங்கு மூன்று வகைகளை மட்டும் எடுத்துக் கொள்வோம். வாணிபச் சுழல் சார்ந்த சமநிலையின்மை (cyclical disequilibrium), நெடுங்காலச் சமநிலையின்மை (secular disequilibrium), கட்டுமான சமநிலையின்மை (structural disequilibrium) ஆகிய மூன்று வகைகளும் முக்கியமானவை.

வாணிபச் சுழல் சார்ந்த சமநிலையின்மையின் முக்கிய அம்சம், சுழலின் முழுக் காலத்தையும் எடுத்துக்கொண்டால்

அயல்நாட்டுச் செலுத்துநிலை சமநிலையில் இருக்கும் என்பது தான். சமநிலையின்மைக்கு வாணிபச் சுழல் தேவையானதொரு விதி எனலாம்; ஆனால், போதுமானதொன்றாகாது. வாணிபச் சூழல் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் சமநிலையின்மையை உண்டாக்க வேறுசில சூழ்நிலைகளும் உதவியாக அமையலாம். பொருளாதாரப் பூரிப்புகள் (booms), மந்தங்கள் (depressions) ஆகியவற்றின் செறிவு நாடுகளிடையே வேறுபடலாம். அவ்வாறே வாணிபச் சுழலின் வெவ்வேறு கட்டங்கள் நிகழும் காலங்கள் நாடுகளிடையே வேறுபடலாம். இறக்குமதித் தேவைக்கான வருமான நெகிழ்ச்சியும் நாட்டிற்கு நாடு வேறு படலாம். இவை யாவும் சமநிலையின்மையை உண்டாக்கக் கூடிய சூழ்நிலைகள்தாம்!

இந்தியாவையும் அமெரிக்காவையும் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். மற்றவை மாறாதிருத்தல் எனும் எடுகோளினை இட்டுக் கொள்வோம். அமெரிக்காவைவிட இந்தியாவில் வாணிபச் சுழல் அழுத்தமாக, அதாவது செறிவு மிக்கதாக இருப்பதாகக் கொள்வோம். இதன் விளைவு என்ன? பொருளாதாரப் பூரிப்பின்போது, அமெரிக்காவைவிட இந்தியாவில் வருமானம் பெருகும்; இறக்குமதிகளும் பெருகும்; அயல்நாட்டுச் செலுத்துநிலையில் பற்றாக்குறை ஏற்படும். பொருளாதார மந்தத்தின்போது நேர்மாறான விளைவுகள் ஏற்படும். ஆக, பூரிப்பின்போது அமெரிக்காவைவிட இந்தியாவில் பற்றாக்குறை மிகுந்தும், மந்தத்தின்போது உபரி மிகுந்தும் காணப்படும்.

இரண்டாவதாக, வாணிபச்சுழலின் வெவ்வேறு கட்டங்கள் நிகழும் காலங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடும் சூழ்நிலையை ஆய்வோம். அமெரிக்காவைவிட இந்தியாவில் வாணிபச் சுழலின் ஒவ்வொரு கட்டமும் ஓராண்டு தாமதமாகவே நிகழுமேயானால், பொருளாதாரப் பூரிப்பின் காரணமாக வருமானமும் இறக்குமதிகளும் உயருதலும் மந்தம் ஏற்படும் போது, அவை குறைதலும் இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் தாமதமாகவே நிகழும். ஆக, பூரிப்பின்போது பற்றாக்குறையும் மந்தத்தின்போது உபரியும் அமெரிக்காவில் ஏற்படும் அதே வேளையில் இந்தியாவில் நேர்மாறான விளைவுகள் ஏற்படுகின்றன.

மூன்றாவதாக, இறக்குமதித் தேவையின் வருமான நெகிழ்ச்சியில் ஏற்படும் வேறுபாடுகள் எவ்வாறு சமநிலையின்மையை அயல்நாட்டுச் செலுத்துநிலையில் உண்டாக்கும்

என்பதைக் கவனிப்போம். மற்றவை மாறுதிருத்தல் எனும் எடுகோளினை இட்டுக் கொள்வோம். அமெரிக்காவைவிட இந்தியாவில் இறக்குமதித் தேவையின் வருமான நெகிழ்ச்சி மிகுந்திருப்பின், பூரிப்புக் காலத்தில் இந்தியாவில் பற்றுக்குறை நிலவும்; பின்னிறக்கும் (recession) நிலவும்போது உபரி கிடைக்கும். அமெரிக்காவைவிட இந்தியாவில் இறக்குமதித் தேவையின் வருமான நெகிழ்ச்சி மிகவும் அதிகமாக இருப்ப தால், பூரிப்பின் போதும் மந்தத்தின் போதும் அமெரிக்கா வைவிட இந்தியாவில் அதிகமான அளவிற்கு இறக்குமதிகள் முறையே உயருவதும் தாழ்வதுமாக இருக்கும்.

நான்காவதாக, இறக்குமதித் தேவையின் விலை நெகிழ்ச்சி நாட்டுக்கு நாடு வேறுபடுவதாலும் வாணிபச் சூழல் சார்ந்த சமநிலையின்மை ஏற்படுவதுண்டு. பூரிப்புக் காலத்தில் விலை யேற்றமும், மந்த காலத்தில் விலை இறக்கமும் ஏற்படுவதுண்டு. அமெரிக்காவைவிட இந்தியாவில் விலை நெகிழ்ச்சி அதிகமாக யிருப்பின், பூரிப்பின்போது இந்தியாவிற்கு உபரி கிட்டும்; மந்தத்தின்போது பற்றுக்குறை ஏற்படும். அமெரிக்காவைவிட இந்தியாவில் இறக்குமதித் தேவையின் விலை நெகிழ்ச்சி மிக்கிருக்கும்போது, இறக்குமதி குறைதலும் அதிகரித்தலும் அமெரிக்காவைவிட இந்தியாவில் முறையே பூரிப்புக் காலத் திலும் மந்த காலத்திலும் அதிக அளவில் இருக்கும்.

மேலே விளக்கியுள்ள சூழ்நிலைகள் மட்டுமின்றி வேறு சில சூழ்நிலைகளும் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் சமநிலை யின்மையை உண்டாக்கிடும். ஏற்றுமதித் தேவையின் ஏற்ற இறக்கங்கள், உற்பத்தி நெகிழ்ச்சியில் நாட்டுக்கு நாடு வேறு பாடு, விலைகளில் வேறுபாடு போன்றவைகளும் சமநிலையின் மையை ஏற்படுத்தும்.

V அடுத்து, நெடுங்கால சமநிலையின்மையை (secular disequilibrium) எடுத்துக் கொள்வோம். வளர்ச்சிப் பாதையில் ஒரு நாட்டின் பொருளாதாரம் நடைபோடும்பொழுது ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் நீண்ட காலச் சார்புள்ள ஆழமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. இம் மாற்றங்களின், விளைவே நெடுங்காலச் சமநிலையின்மையாகும். இச் சமநிலை யின்மை ஏற்படுவதற்கு மூதலாக்கம் (captial formation), மக்கள் தொகைப் பெருக்கம், தொழில் நுண்ணியல் மாற்றம் (techno-logical change), அங்காடி வளர்ச்சி, மூலவளங்களில் மாற் றங்கள் போன்றவைகளும் காரணங்களாக அமையும்.

பொருளாதார வளர்ச்சியைத் திட்டமிட்டு மேற்கொண்டுள்ள ஒரு பின்தங்கிய நாடு, கிடைத்திடும் உள்நாட்டுச் சேமிப்பிற்கு மேல் முதலீடு செய்ய முன்வந்தால்தான் வளர்ச்சி வீதத்தில் தேவையான வேகம் ஏற்படும். ஏற்றுமதிகளைவிட இறக்குமதிகள் அதிகரிக்கும். வெளிநாட்டு மூலதனம் போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை என்றால், அயல்நாட்டுச் செலுத்துநிலையில் நெடுங்கால சமநிலையின்மை (பற்றுக்குறை) ஏற்படத்தான் செய்யும்.

முதிர்ந்த பொருளாதாரத்தினையுடைய வளர்ச்சியுற்ற நாட்டில் முதலீட்டைவிட சேமிப்பு அதிகமாக இருக்கும். முதலீட்டு வாய்ப்புகளனைத்தையும் முழுதும் பயன்படுத்தி விட்ட நாடு இது. இந்த நாட்டில் இறக்குமதியைவிட ஏற்றுமதி அதிகம். மூலதனம் வெளியேறுவிட்டால், அயல்நாட்டுச் செலுத்துநிலையில் நெடுங்கால உபரி நிலவிடும்.

ஏற்றுமதிகள், இறக்குமதிகள் ஆகியவற்றின் அளிப்புகளிலும் தேவைகளிலும் கட்டுமான ரீதியான மாற்றங்கள் ஏற்படும்பொழுது, ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் கட்டுமானச் சமநிலையின்மை (structural disequilibrium) ஏற்படுகிறது. ஒரு நாட்டின் ஏற்றுமதிகளின் வெளிநாட்டுத் தேவையில் மாற்றம் ஏற்பட்டாலும் சரி, இறக்குமதிகளின் உள்நாட்டுத் தேவையில் மாற்றம் ஏற்பட்டாலும் சரி, கட்டுமான சமநிலையின்மை அயல்நாட்டுச் செலுத்துநிலையில் உருவாகும். இவ்வாறே அளிப்பிலே ஏற்படுகின்ற மாற்றங்களும் கட்டுமான சமநிலையின்மையை ஏற்படுத்தும். வெளிநாடுகளுக்கு வழங்கிடும் பணிகளுக்குக் கிடைத்திடும் வருமானம் குறையத் தொடங்கும் பொழுதும் கட்டுமான சமநிலையின்மை உருவாகும்.

கோட்பாடுகள்

ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமநிலையின்மையை விளக்கிடச் சில கோட்பாடுகள் உண்டு. தொன்மைப் பொருளியலாரின் விலைக் கோட்பாடு, கீன்ஸின் வருமானக் கோட்பாடு, காட்சி விளைவுக் கோட்பாடு, உற்பத்தித் திறன் வளர்ச்சி வேறுபாட்டுக் கோட்பாடு ஆகியவை சமநிலையின்மையை விளக்கிடும் கோட்பாடுகளாகும்.

தொன்மைப் பொருளியலாரின் விலைக் கோட்பாட்டினைக் (classical price theory) கவனிப்போம். தராதரச் செலவு

களையும் தராதர விலைகளையும் கொண்டு சமநிலையின்மையை விளக்கிடும் கோட்பாடு இது. பன்னாட்டுச் செலவு, விலை களைவிட உள்நாட்டுச் செலவும் விலையும் உயர்ந்திருக்குமே யானால் அந்த நாட்டின் அயல்நாட்டு வாணிபநிலை பாதகமாகி விடும்; சமநிலையின்மை ஏற்பட்டுவிடும். இச் சமநிலையின்மை இயல்பாகவே சரியாகிவிடும் என்பது தொன்மைப் பொருளிய லாரின் எண்ணம்.

உள்நாட்டில் விலைகள் அதிகமாகவும் உலக விலைகள் குறைவாகவும் இருப்பின், குறிப்பிட்ட நாட்டில் ஏற்றுமதிகள் குறைந்து இறக்குமதிகள் பெருகி, பொன்னும் அன்னியச் செலாவணியும் வெளியேறும். இதனைத் தொடர்ந்து உள் நாட்டில் பண அளிப்பு குறையப் பெற்று பணப் புழக்கம் சுருங்கும். இதனால் உள்நாட்டு விலைகள் மீண்டும் வீழ்ந்து ஏற்றுமதிகள் தூண்டப்பெற்று, இறக்குமதிகள் கட்டுப்படுத்தப் பெற்று, அயல்நாட்டுச் செலுத்து நிலையில் மீண்டும் சமநிலை ஏற்படும். பண அளிப்பு குறைக்கப்பெற்றதனால் வேறொரு விளைவும் ஏற்படும். உள்நாட்டு வட்டி வீதம் உயர்ந்து, மூலதனம் வெளியேறுதல் கட்டுப்படுத்தப்பெற்று, வெளி நாட்டு மூலதனம் உள்ளே நுழையும் வாய்ப்பு பெருகும். எனவே, தொன்மைப் பொருளியலார் குறிப்பிட்டதுபோல, சமநிலை இயல்பாகவே மீண்டும் ஏற்படும்.

தொன்மைப் பொருளியலாரின் இவ் விலைக் கோட்பாடு சில உண்மைக்குப் புறம்பான எடுகோள்களின்மீது எழுப்பப் பட்டுள்ளது, நிறைவுப் போட்டி உண்மை வாழ்வில் கிடை யாது. தராதர விலைகள் எனும் ஒரே ஒரு மாறி (variable)யை மட்டும் ஆதாரமாகக் கொண்டுள்ளது இக் கோட்பாடு. வருமானம், உற்பத்தி, சுவையுணர்வு, இருப்புகள், மூலதன இயக்கங்கள் போன்ற மாறிகளில் ஏற்படும் மாறுதல்களை இக் கோட்பாடு கருதவில்லை. தடையிலா, சுயேட்சை அங்காடி நிலவுவதாக இட்டுக் கொண்ட பாவனையும் (assumption) உண்மைநிலையன்று. உள்நாட்டில் உற்பத்தியாகாத, ஆனால் பெரிதும் தேவைப்படுகின்ற பண்டத்தினை வெளிநாடுகளிலிருந்து அதிகவிலை கொடுத்து இறக்குமதி செய்யவேண்டி நேரிடுவதை அலட்சியப்படுத்திவிட முடியாது. இவற்றிற்கெல்லாம் மேலாக, இக் கோட்பாடு ஓர் அனுமானத்தைக் கொண்டிருக்கிறது. தராதர விலைகளில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்றவாறு இறக்கு மதிகளும் ஏற்றுமதிகளும் மாறும் தன்மை உடையவை என்ற

அனுமானமே இது. சமநிலை இயல்பாக ஏற்படுவதற்கு விலை நெகிழ்ச்சிகள் போதுமான அளவிற்கு மிகுந்திருக்கவில்லை என்று அண்மைக் காலத்து ஆராய்ச்சிகள் முடிவு எடுத்துள்ளன. வளர்ச்சி குறைந்த நாடுகளின் இறக்குமதிகளையும் ஏற்றுமதிகளையும் பொறுத்தவரையில், நெகிழ்ச்சித் தன்மை மிகவும் குறைவு என்பது தெளிந்த உண்மையாகும். மொத்தமாகப் பார்க்கும் பொழுது; பின்தங்கிய நாடுகளுக்கு வேண்டிய முதன்மைப் பொருள்கள், தொழில் நுட்பவினை, முக்கிய கச்சாப் பொருள்கள் போன்ற பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டியதன் அவசியத்தை நோக்கும்பொழுது, இந் நாடுகளின் இறக்குமதித் தேவை நெகிழ்ச்சி குறைந்துள்ளது விளங்கும். அவ்வாறே இந் நாடுகள் ஏற்றுமதி செய்திடும் உணவுப் பொருள்கள் போன்றவைகளின் வெளிநாட்டுத் தேவை நெகிழ்ச்சி குறைந்துள்ளது என்பதும் உண்மையே ஆக, விலை நெகிச்சிகள் மிகுந்து இல்லாமையால், சமநிலை இயல்பாக ஏற்படும் வாய்ப்பு இல்லை எனலாம்.

இப்பொழுது கீன்ஸின் வருமானக் கோட்பாட்டினை (Keynes Income Theory) ஆராய்வோம். நாடுகளிடையே நிலவிடும் தராதர வருமான வேறுபாடுகளைக் கொண்டு ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் சமநிலையின்மையை இக் கோட்பாடு விளக்குகிறது. ஒரு நாட்டின் வருமானம் பிறநாடுகளின் வருமானத்தைவிடக் கூடுதலான வீதத்தில் வேகமாக வளருமேயானல் அந்த நாட்டின் இறக்குமதிகளும் அதே யளவிற்கு வேகமாகப் பெருகி, அயல்நாட்டுச் செலுத்துநிலையில் பற்றுக் குறையினை உண்டாக்கிவிடும் என்பதுதான் இக் கோட்பாட்டின் திரண்ட கருத்து. இறுதிநிலை இறக்குமதி நாட்டம் (marginal propensity to import) எல்லா நாடுகளிலும் சமம் என்பது இக் கோட்பாட்டின் எடுகோள். ஒரு நாட்டின் வருமானம் பிறிதொரு நாட்டின் வருமானத்தைவிட கூடுதலான வீதத்தில் பெருகினலும் கூட, அந்த நாட்டின் இறுதிநிலை இறக்குமதி நாட்டம் மிகக் குறைவாக-பிறிதொரு நாட்டின் இறுதிநிலை இறக்குமதி நாட்டத்தைவிடக் குறைவாக இருப்பின், அந்த நாட்டின் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பற்றுக்குறை ஏற்படாது. நாடுகளனைத்தும் சமமான இறுதிநிலை இறக்குமதி நாட்டத்தைப் பெற்றிருப்பதாக இட்டுக் கொண்டுள்ள எடுகோள், உண்மை நிலைக்குப் புறம்பாகாதிருக்கும் வரையில் இக்கோட்பாடு தந்திடும் கருத்து ஏற்புடைத்தே.

ராக்னர் நர்க்ஸ் (Ragnar Nurkse) அவர்கள்[1] காட்சி விளைவு கோட்பாட்டின் (Demonstration Effect Theory) மூலம் அயல்நாட்டுச் செலுத்துநிலையின் சமநிலையின்மையை விளக்குகிறார். பின்தங்கிய நாடுகளின் வருமானத்தைவிட முன்னேறிய நாடுகளின் வருமானம் வெகுவேகமாக உயர்ந்து கொண்டே போகிறது. முன்னேறிய நாடுகளின் மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினால் கவர்ச்சிக்கப்பெற்ற ஏழை நாடுகள் அவ் வாழ்க்கைத் தரத்தைப் பின்பற்ற முனைகின்றன. இதனால் ஏழை நாடுகளின் துய்ப்பு நாட்டம் உயருகிறது; இறக்குமதி விருப்பம் உயர்ந்து, இறக்குமதிகள் பெருகி, அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இது ஓர் ஒற்றைக்கால் கோட்பாடு. ஏற்றுமதியின் பங்கினை முழுதும் ஒதுக்கி வைத்துவிட்டு, இறக்குமதி பெருக்கத்தினால்தான் சமநிலையின்மை ஏற்படுவதாக இக் கோட்பாடு கூறுகிறது. வாழ்க்கைத் தரத்திற்கும் அயல்நாட்டுச் செலுத்து நிலைக்கும் தலைகீழான தொடர்பினை இக் கோட்பாடு அமைத்துள்ளது. இக் கோட்பாட்டின்படி, வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ள செல்வம் கொழிக்கும் நாட்டில் சாதக அயல்நாட்டுச் செலுத்துநிலை நிலவிடும்; வறிய நாட்டில் பாதகநிலை நிலவிடும். இது உண்மைக்குப் புறம்பானது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், பிரான்ஸ், பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பாதக அயல்நாட்டுச் செலுத்து நிலையும், போர்ச்சுகல், சில பிரிட்டிஷ் காலனிகள் போன்ற வறியநாடுகளில் சாதக செலுத்து நிலையும் நிலவின என்ற உண்மையை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.[2]

அயல்நாட்டுச் செலுத்துநிலை மீது காட்சிவிளைவு ஏற்படுத்துகின்ற பாதக விளைவுகளை மட்டும் பேராசிரியர் ராக்னர் நர்க்ஸ் பெரிதுபடுத்திவிட்டார். செல்வம் கொழிக்கும் நாடுகளின் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினால் கவர்ச்சிக்கப் பட்டது போலவே, அந் நாடுகளின் உற்பத்தி முறைகளாலும் ஏழை நாடுகள் ஈர்க்கப்படுகின்றன. அதே உற்பத்தி முறைகளைப் பின்பற்றி ஏழைநாடுகளும் செலவினங்களைக் குறைத்துத் தரமிக்க உற்பத்தியினைப் பெருக்கி, பன்னாட்டு

[1] ராக்னர் நர்க்ஸ் (Ragnar Nurkse): 'வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கப் பிரச்சினைகள்' (Problemes of Capital Formation in Under-developed Countries) Oxford, 1955. ப. 72.

[2] டொனல்டு மெக்டூகல் (Donald Macdougall): 'உலக டாலர் பிரச்சினை' (The world Dollar Problem) London 1957, ப 62-63.

வாணிபத்தில் நல்லவண்ணம் ஈடுபட்டு, அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏழைநாடுகளும் சாதக நிலையினை ஏற்படுத்த முடியும் என்பதனை நர்க்ஸ் அவர்கள் கருதவில்லை.

மேலும், தேவையில்லாத பொருள்களையும் ஆடம்பரப் பொருள்களையும் இறக்குமதி செய்வதைத் தடுத்திடும் வகையில் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டினைப் பின்பற்றுகின்ற பின்தங்கிய நாடுகளில் காட்சிவிளைவு நர்க்ஸ் குறிப்பிடும் பலன்களைத் தராது. பின்தங்கிய நாடுகள் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான முதன்மைப் பொருள்கள், தொழில் நுட்பத்திறன், தேவையான உணவுப் பொருள்கள், கச்சாப் பொருள்கள் போன்ற இறக்குமதி செய்கின்றன. பின்தங்கிய நாடுகளில் காட்சிவிளைவு செயல்படும் முறை வேருனது. முன்னேறிய நாடுகளைப்போல தாங்களும் பொருளாதார வளர்ச்சியடைந்து, அந் நாடுகளின் வாழ்க்கைத் தரத்தைக் கைப்பற்றவேண்டும் என்ற முறையிலேதான் காட்சிவிளைவு பின்தங்கியநாடுகளிலே செயல்படுகிறது. கணிசமான இறக்குமதித் தேவையை உள்ள டக்கிய பெரும் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் பின் தங்கிய நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் இத் திட்டங்களின் காரணமாகச் சமநிலையின்மை ஏற்படுகிறது. நேரடியாக முன்னேறிய நாடுகளின் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பின்பற்றுவதால் சமநிலையின்மை ஏற்படுகிறது என்பது இரண்டாம் பட்சமே எனலாம்.

இறுதியாக, உற்பத்தித் திறன் வளர்ச்சி வேறுபாட்டுக் கோட்பாட்டினை (Disparities in Growth of Productivity Theory) இங்கு விளக்கலாம். பொதுவாக எல்லாத் தொழில்களிலும் உற்பத்தித் திறன் வேறுபாடுகள் ஒரே மாதிரியாகப் பரந்து அமையலாம். எனினும், ஏற்றுமதி நோக்கு உள்ள தொழில் களில் அல்லது இறக்குமதி நோக்கு உள்ள தொழில்களில் உற்பத்தித் திறன் சார்ந்த வேறுபாடு சற்று அதிகமாக செறிந்து கிடக்கலாம். உற்பத்தித் திறன் வேறுபாடுகள் வருமான விளைவின் மூலமாகவும், விலை விளைவின் மூலமாகவும் அயல்நாட்டுச் செலுத்து நிலையைப் பாதிக்கலாம். முதலில் ஏற்றுமதி நோக்கு உள்ள தொழில்களின் உற்பத்தித் திறன் வேறுபாடுகளினுடைய விலை விளைவைப் பார்ப்போம். விலை குறைந்து, இறக்குமதிகளின் மதிப்பு குறைவதால், இறக்குமதி நாடுகளுக்கு இவ் வேறுபாடுகளினால் ஆதாயமே ஏற்படும். ஏற்றுமதி விலை குறைந்ததைத் தொடர்ந்து ஏற்றுமதிப் பண்டங் களின் தேவை உயராவிடில், ஏற்றுமதிகளால் கிடைக்கப் பெறும் அன்னியச் செலாவணி குறைந்து ஏற்றுமதி நாட்டின்

அயல்நாட்டுச் செலுத்துநிலை இவ் வேறுபாடுகளினால் பாதிப்பு அடையும். ஏற்றுமதிகளின் வெளிநாட்டுத் தேவை நெகிழ்ச்சி மிகுதியாக இருப்பின், விலை விளைவு ஏற்றுமதி நாட்டிற்குச் சாதகமாகவே இருக்கும்.

வருமான விளைவை எடுத்துக் கொள்வோம். ஏற்றுமதி நோக்குடைய தொழில்களில் உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஏற்பட்டால், இறக்குமதி நாடுகளின் உண்மை வருமானத்தை அது உயர்த்தும்; இந் நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்துநிலை பாதிப்பு அடையும். மாறாக, ஏற்றுமதித் தொழில்களில் ஏற்பட்ட உற்பத்தித் திறன் அதிகரிப்பை ஏற்றுமதி விலை குறைப்புக்குப் பயன்படுத்தாமல் தொழிலாளர் தம் கூலியை உயர்த்துவதற்கும் தொழில் முயல்வோரின் (entrepreneurs) ஆதாயத்தை உயர்த்துவதற்கும் பயன்படுத்தினால் என்ன நேரிடும்? ஏற்றுமதி நாட்டின் உண்மை வருமானம் உயர்ந்து, அயல்நாட்டுச் செலுத்துநிலை பாதிப்பு அடையும்.

இறக்குமதி நோக்கு கொண்ட தொழில்களில் உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஏற்படின், அது, போட்டிபலம் கொண்ட ஏற்றுமதி நாடுகளின் பலத்தைக் குன்றச் செய்கிறது. என்றாலும், இறக்குமதி நோக்குடைய தொழில்களின் உற்பத்தித்திறன் அதிகரிப்பு, இறக்குமதிநாட்டின் வருமானத்தை மாத்திரம் உயர்த்திவிடுகிறது; இவ் வருமான விளைவு இறக்குமதி நாட்டைப் பாதிக்கிறது. இறக்குமதியையும் ஏற்றுமதியையும் சார்ந்த வாணிபத்திற்குரிய பண்டங்களைப் பொறுத்தவரையில், பொதுவான உற்பத்தித்திறன் அதிகரிப்பின் விலைவிளைவு வேலை செய்கிறது எனலாம். பொதுவான உற்பத்தித்திறன் அதிகரிப்பு உள்நாட்டுப் பண்டங்களின் விலைகளைக் குறைத்துவிடும். எந்த அளவிற்கு உள்நாட்டுப்பண்டங்கள் பன்னாட்டு வாணிபத்திற்குரிய பண்டங்களின் உற்பத்திச் செலவைக் கணக்கிடுவதில் பங்குபெறுகிறதோ அந்த அளவிற்கு வாணிபத்திற்குரிய பண்டங்களின் விலைவிளைவு தூண்டப்பெறும்.

அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சரிசெய்திடல்

அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமநிலையின்மையை ஒரு நாடு எவ்வாறு சமாளிக்கிறது? எவ்வாறு சரிசெய்கிறது? வேறு முறையில் கேட்பது என்றால், குறிப்பிட்ட விலையில் கிடைத்திடும் அன்னியச் செலாவணியின் அளிப்பையும் தேவையையும் எப்படி ஒரு நாடு சமப்படுத்துகிறது? அன்னியச் செலாவணி அங்காடியை ஒழுங்குபடுத்திடப் பன்னாட்டு

ரீதியாகப் பல அமைப்புகள் உள்ளன. பன்னாட்டு ரீதியாகச் சரிசெய்கின்ற சிலமுக்கிய முறைகளைச் சுருக்கமாக விளக்குவோம்.

தராதர விலைகளிலும் தராதர வருமானங்களிலும் ஏற்படும் மாற்றங்கள் மூலமாக அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சரிசெய்திடும் முறையினை எடுத்துக் கொள்வோம். இந்த அத்தியாயத்தில், தொன்மைப் பொருளியலாரின் விலைக் கோட்பாட்டையும் கீன்ஸின் வருமானக் கோட்பாட்டையும் முன்னரே விளக்கியுள்ளதை நினைவுகூர்தல் நலம். அயல் நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்பட்ட சமநிலையின்மையால் உருவான தராதர விலைகள், தராதர வருமானங்கள் ஆகியவற்றின் மாற்றங்களே அச் சமநிலையின்மையை இயல்பாகவே சரிசெய்திடும் என்று அக் கோட்பாட்டினர் விளக்கியுள்ளதை முன்னரே பயின்றுள்ளோம். இம் முறையின் குறைபாடுகளையும் கண்டோம்.

அடுத்து, மாற்றுவீத மாற்றங்களின் மூலம் சமநிலையின்மையைச் சரி செய்திடலாம். சுயேட்சையான மாற்றுவீதம்–நெகிழ்ச்சி மிக்க மாற்றுவீதம் **(free exchange rate-flexible exchange rate)** கொண்ட முறையின் மூலமாகச் சமநிலையின்மையைச் சரி செய்திடலாம். அன்னியச் செலாவணிச் சந்தையில் தேவை, அளிப்பு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களை அனுசரித்து, மாற்றுவீதத்தினை ஏற்றியோ இறக்கியோ செலுத்து நிலையில் சமநிலை ஏற்படுத்த முடியும். அன்னியச் செலாவணிச் சந்தையின் தேவை, அளிப்பு எனும் சுயேட்சையான சக்திகளின் இயக்கத்திற்கு ஏற்றாற் போல மாற்றுவீதம் இயல்பாகவே ஏறியோ இறங்கியோ செலுத்து நிலையினைச் சமநிலைப் படுத்தும். சுயேட்சையான மாற்றுவீதத்தின் குறைகளையும் நிறைகளையும், அவ்வாறே நெகிழ்ச்சி மிக்க மாற்றுவீதத்தின் குறைகளையும் நிறைகளையும் இனிவரும் அத்தியாயத்தில் விளக்குவோம்.

செலாவணிக் கட்டுப்பாட்டின் மூலமும் வர்த்தகக் கட்டுப்பாட்டின் மூலமும் செலுத்து நிலையைச் சமப்படுத்தலாம். வெளிநாட்டு மூலதனமும் ஏற்றுமதிகள் மூலம் அன்னியச் செலாவணியும் ஒரு நாட்டிற்குக் கிடைத்திடலாம். வெளிநாட்டு மூலதனத்தின் அளவிற்கும் ஈட்டப்பட்ட அன்னியச் செலாவணியின் அளவிற்கு உட்பட்ட இறக்குமதிகளை மாத்திரம் மேற்கொண்டு, பொருத்தமான இறக்குமதிக் கட்டுப்பாட்டின் மூலம் அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சமன்படுத்

தலாம். இவை தொடர்பான விவகார விளக்கங்களை முன்னரே அத்தியாயங்கள் *8, 9, 10, 11* ஆகியவற்றில் விரிவாகத் தந்துள்ளதை நினைவு கூர்தல் நல்லது.

அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமநிலையின்மைக்கு எவ்வளவு காரணங்கள் உண்டோ அந்த எண்ணிக்கையளவிற்குச் சமநிலையின்மையைப் போக்கிடும் முறைகளும் உண்டு. வேனக் (Vanek) அவர்கள்,[3] அயல்நாட்டுச் செலுத்து நிலையைச் சரி செய்தலில் சில முக்கியமான மாறிகளைப் பட்டியல்படுத்திக் காட்டுகிருர். அம் மாறிகளாவன :- உள்நாட்டு, வெளிநாட்டு விலை மட்டங்கள்; மாற்றுவீதம்; வட்டி வீதம்; உண்மைக் கூலியும் பணக் கூலியும்; வருமானம்; வேலை; வருமானப் பகிர்வு; உற்பத்தித் திறன்; பணம், நிதி, வர்த்தகம் சார்ந்த கைக்கோள்கள்; காலம், ஆக, ஏறத்தாழ பத்து மாறிகளில் ஏற்படும் மாற்றங்கள் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் மாறுதல்களை உண்டாக்குகின்றன என்பது தெளிவாகிறது.

[3] ஜரோஸ்லேவ் வேனக் (Jaroslav Vanek): 'பன்னாட்டு வாணிபம்: கோட்பாடும் பொருளாதார கைக்கோளும்.' (*1962*) ப. 48.

14. நாணய மாற்றுவீத நிர்ணயம்

சமநிலை மாற்று வீதம் (Equilibrium rate of exchange)

மாற்று வீதம் என்றால் என்ன? ஓர் அலகு வெளிநாட்டுச் செலாவணியின் விலையை உள்நாட்டு நாணய அலகுகளைக் கொண்டு நிர்ணயிப்பதே நாணயமாற்றுவீதமாகும். அதாவது, வெளிநாட்டுச் செலாவணியின் ஒவ்வோர் அலகிற்கும் எவ்வளவு உள்நாட்டுச் செலாவணி அலகுகள் கிடைக்கின்றன என்பதனைக் கணக்கிடுவதே மாற்றுவீதமாகும். இதுபோலவே; ஓர் அலகு உள்நாட்டு நாணயத்திற்கு எவ்வளவு வெளிநாட்டுச் செலாவணி அலகுகள் கிடைத்திடும் என்பதைக் கணக்கிடுதலே மாற்றுவீதமாகும். அன்னியச் செலாவணிச் சந்தையில் ஓர் அமெரிக்க டாலருக்கு ரூ. 7-50 இந்திய நாணயம் கிடைத்திடுமெனில், நாணயமாற்றுவீதம் $ 1 = ரூ. 7–50 ஆகும். சுயேட்சையான சந்தையில் (free market) ஒரு பண்டத்தின் விலையைச் சந்தையிலே இயங்குகின்ற தேவை, அளிப்பு எனும் சக்திகள் நிர்ணயம் செய்வதுபோல சுயேட்சையான அன்னியச் செலாவணி அங்காடியில் வெளிநாட்டு நாணயத்தின் தேவை, அளிப்பு ஆகிய சக்திகள் நாணய மாற்று வீதத்தை நிர்ணயம் செய்கின்றன.

அன்னியச் செலாவணியின் தேவையை முதலில் ஆராய்வோம். அன்னியச் செலாவணியின் தேவையளவிற்கும் மாற்றுவீதத்திற்கும் இடையிலே உள்ள சார்புத் தொடர்பினைத் (functional relationship) அன்னியச் செலாவணியின் தேவைப் பட்டியல் (demand schedule) விளக்கிடும், மற்றவை மாறுதிருப்பின் (ceteris parileus), வெவ்வேறு மாற்றுவீதங்களில் வெவ்வேறு அளவில் அன்னியச் செலாவணி தேவைப்படுதலை தேவைப் பட்டியல் விவரிக்கும். தேவைப்பட்டியல் விவரிப்பது என்னவென்றால், மாற்றுவீதம் உயரும்பொழுது அன்னியச் செலாவணித் தேவை தாழ்வதும், மாற்றுவீதம் தாழும்பொழுது அத் தேவை உயருவதும் இயல்பு என்பதனைத்தான். ஆக அன்னியச் செலாவணித் தேவைக்கும் மாற்றுவீதத்திற்கும் உள்ள சார்புத் தொடர்பு நேர்மாறானது என்பது தெரிந்த உண்மையாகும்.

மாற்றுவீதம் உயரும்பொழுது இறக்குமதிகள் விலையுயர்ந்து, இறக்குமதித் தேவை சுருங்குகிறது. இறக்குமதிகளை விலைகொடுத்து வாங்க அன்னியச் செலாவணியே வேண்டும். இறக்குமதித் தேவை சுருங்கிடும்பொழுது, அன்னியச் செலாவணியின் தேவையும் சுருங்குகின்றது. இவ்வாறே மாற்றுவீதம் தாழும்பொழுது மாறான விளைவுகள் ஏற்படுகின்றன. இறக்குமதிகள் தூண்டப்பெற்று அன்னியச் செலாவணித் தேவை பெருகுகிறது. எனவே, அன்னியச் செலாவணித் தேவைக்கும் மாற்றுவீதத்திற்கும் நேர்மாறான சார்புத் தொடர்பு உள்ளது என்பது நிரூபணம் ஆகிறது. ஆகவே, அன்னியச் செலாவணியின் தேவைக்கோடு இடமிருந்து வலம் சரிவுபெற்று வீழும்.

அன்னியச் செலாவணியின் அளிப்பு எத்தகையது என்பதனைச் சற்று நோக்குவோம். அன்னியச் செலாவணி அங்காடியில் வெவ்வேறு மாற்றுவீதங்களில் எவ்வளவு அன்னியச் செலாவணியின் அளிப்பு கிடைத்திடும் என்பதனை அதன் அளிப்புப் பட்டியல் அல்லது அளிப்புக்கோடு விளக்கிடும். மாற்று வீதம் உயரும் பொழுது அளிப்பும் உயரும்; மாற்று வீதம் இறங்கும் பொழுது அளிப்பும் இறங்கும். ஆக, மாற்றுவீதற்றிற்கும் அன்னியச் செலாவணியின் அளிப்புக்குமிடையில் நேரான சார்புத் தொடர்பே நிலவுகிறது. அன்னியச் செலாவணியின் தேவையை இறக்குமதிகளும் மூலதனம் வெளியேறுதலும் வெளிப்புற ஒருமுக மாற்றுகளும் (outward unilateral transfers) நிர்ணயிப்பது போலவே, அதன் அளிப்பினை ஏற்றுமதிகளும் மூலதனம் உள்வருதலும் உட்புற ஒரு முக மாற்றுகளும் (inward unilateral transfers) நிர்ணயிக்கின்றன. அன்னியச் செலாவணித் தேவைக்கும் மாற்று வீதத்திற்கும் நேர்மாறான சார்புத் தொடர்பு உள்ளது என்றால், அதன் அளிப்பிற்கும் மாற்றுவீதத்திற்கும் நேரான சார்புத்தொடர்பு உள்ளது. அன்னியச் செலாவணித் தேவைக்கோடு இடமிருந்து வலம் சரிவுற்று வீழும் எனில், அதன் அளிப்புக்கோடு இடமிருந்து வலம் சரிவுடன் மேலேறும்.

அயல்நாட்டாரின் முடிவுகளைப் பொறுத்துத்தான் அன்னியச் செலாவணியின் அளிப்பு அமையும். ஒரு நாடு ஏற்றுமதி செய்திடும் பண்டங்களும் பணிகளும், அவற்றிற்காகப் பெறப்படும் வெளிநாட்டுச் செலாவணியும் வெளிநாட்டுக் குடிமக்கள் எந்த அளவிற்கு இறக்குமதி செய்ய விரும்புகிறார்களோ அதனைப் பொறுத்தது. மூலதனம் உள்ளே நுழைதலும் ஒருமுக மாற்றுகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்

களின் முடிவுகளைப் பொறுத்தது. உள்நாட்டுப் பிரஜைகளின் முடிவுகளைப் பொறுத்து அன்னியச் செலாவணியின் தேவை அமைவதும் இவ்வாறே. மற்றவை மாருதிருக்கும் பொழுது, மாற்றுவீதத்தைப் பொறுத்துத்தான் ஒரு நாட்டின் ஏற்று மதிகள், அதாவது, மற்ற நாடுகளின் இறக்குமதிகள் அமைகின்றன. காரணம், இவைதாம் ஏற்றுமதி விலைகளை வெளிநாட்டுச் செலாவணிகளில் நிர்ணயிக்கின்றன.

மாற்றுவீதம் என்பது இரண்டு நாடுகளின் நாணயங்களை ஒன்றுக்கொன்று ஈடாக மாற்றிக்கொள்கின்ற மதிப்பின் விகிதத்தைக் குறிக்கும். இரு நாணயங்களிடையே மாற்றுவீதம் நிர்ணயமாகும்பொழுது ஒன்றின் மதிப்பு உயர்ந்தால் மற்ருென்றின் மதிப்பு குறையும். இது இயல்பானநிலை. அமெரிக்க டாலரைப்பொறுத்த வரையில் இந்திய நாணயத்தின் மாற்றுவீதம் உயர்ந்திருந்தால், இந்தியாவில் இந்திய நாணயத்தில் அமெரிக்க பண்டங்களின் விலை உயர்ந்துவிடும். அமெரிக்காவிலிருந்து இறக்குமதிசெய்தல் குறையும். அமெரிக்க டாலரின் இந்தியத் தேவையும் குன்றும். ஆனுல், ஒன்று இங்கு கருத வேண்டும். அமெரிக்க டாலரில் இந்திய ரூபாய் நாணயத்தின் மாற்றுவீதம் உயர்ந்திருக்கிறது என்பதன் பொருள், ரூபாய் நாணயத்தில் அமெரிக்க டாலரின் மாற்றுவீதம் தாழ்ந்துள்ளது என்பதாகும். இதனுல், அமெரிக்காவில் இந்தியப் பண்டங்கள் மலிவாகிவிடும். இந்திய ஏற்றுமதி பெருகும். ரூபாய் நாணயத்தின் அமெரிக்கத் தேவை பெருகும். இவ்வாருக, உயர்ந்த ரூபாய் டாலர் மாற்றுவீதம் இந்திய இறக்குமதிகளைக் குறைத்து ஏற்றுமதிகளைப் பெருக்கும்; அதாவது டாலரின் இந்தியத் தேவையைக் குறைத்து ரூபாய் நாணயத்தின் அமெரிக்கத் தேவையை உயர்த்தும். அதாவது, அன்னியச் செலாவணியின் தேவையைக் குறைத்து அளிப்பினைப் பெருக்கும். இவ்வாறே, குறைந்த மாற்றுவீதம் இறக்குமதிகளைப் பெருக்கி அன்னியச் செலாவணியின் தேவையை உயர்த்தும்; ஏற்றுமதிகளைச் சுருக்கி அன்னியச் செலாவணியின் அளிப்பைக் குறைக்கும்.

பின் பக்கத்திலுள்ள வரைபடம் 14.1-ல் அன்னியச் செலாவணியின் தேவைக்கோடும் (DD) அளிப்புக்கோடும் (SS) ஒன்றையொன்று E-எனும் புள்ளியில் ஊடறுத்துச்செல்வது காட்டப்பட்டுள்ளது. மாற்றுவீதம் OR-ஆக இருக்கும்பொழுது, அன்னியச் செலவாணியின் தேவையும் அளிப்பும் OM-ஆக இருக்கும். அதாவது, தேவையும் அளிப்பும் சமம். அன்னியச் செலாவணிச் சந்தையில் சமநிலை நிலவுகிறது என்று பொருள்.

மாற்றுவீதம் OR_1-க்கு உயரும்போது அன்னியச் செலாவணித் தேவை குறைந்து அதன் அளிப்பு உயருகிறது. அளிப்பில் OP-அளவிற்கு உபரி ஏற்படுகிறது; மாற்றுவீதம் OR_2-க்குக் குறையும்போது அன்னியச் செலாவணி அளிப்பு குறைந்து தேவை உயருகிறது. இப்பொழுது OR_3 அளவிற்குத் தேவையில்



வரைபடம் 14-1 சமநிலை மாற்று வீதம்

உபரி ஏற்படுகிறது, மாற்றுவீதம் OR-க்குப் பதிலாக உயர்ந்தோ தாழ்ந்தோ இருந்தால், அன்னியச் செலாவணிச் சந்தையில் சமநிலை இருக்காது. எனவே, சமநிலை மாற்றுவீதம் (equillibrium rate of exchange) OR-ஆகும்.

வெவ்வேறு பணவமைப்பு முறைகளில் (monetary systems) சமநிலை மாற்றுவீதம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது? பொன் திட்டத்தைப் (gold standard) பின்பற்றுகின்ற இரண்டு நாடுகளின் மாற்றுவீதத்தை நிர்ணயிப்பதற்கு, அவ்விரு நாடு களின் நாணயங்களுடைய தங்கச்சாலை விகிதங்களின் சமன் பாட்டைக் கணக்கிட வேண்டும். இதனைத் தங்கச்சாலை சமன்

பாட்டு மாற்றுவீதக் கோட்பாடு (Mint Parity Theory of Foreign Exchange Rate) எனலாம். இரண்டு நாடுகளும் பொன் திட்டத்தையோ வெள்ளித் திட்டத்தையோ பின்பற்ருமல் மாற்றவியலா தாள்நாணயங்களைப் (inconvertible paper currencies) புழக்கத்தில் கொண்ட நாடுகள் எனக் கொள்வோம். இப்படிப்பட்ட அமைப்பில், அவ்விரு நாடுகளுடைய நாணயங்களின் வாங்கும் சக்தியின் சமன்பாட்டைக் கொண்டு மாற்றுவீதத்தை நிர்ணயிக்க வேண்டும். இதனை வாங்கும் சக்தி சமன்பாட்டுக் கோட்பாடு (Purchasing Power Parits Theory) என அழைப்பர். மாற்றுவீதத்தை நிர்ணயிப்பதற்கு அயல்நாட்டுச் செலுத்து நிலைக் கோட்பாடு (Balance of Payments Theory) ஒன்றும் உள்ளது.

தங்கச்சாலை சமன்பாட்டுக் கோட்பாடு (Mint Parity Theory)

பொன் திட்டத்தில் உள்ள நாடுகளின் நாணயங்களுக்கிடையே மாற்றுவீதத்தினை நிர்ணயிப்பதற்கு இக் கோட்பாடு உதவுகிறது. பொன் திட்டத்திலுள்ள நாடுகளின் நாணயங்கள் பொன் நாணயங்களாக இருக்கலாம். குறிப்பிட்ட தூய்மையும் எடையும் கொண்ட பொன் நாணயங்களாக இருக்கலாம். பொன் நாணயங்களாக இல்லை என்ருல், குறிப்பிட்ட தூய்மை நிறைந்த பொன்னுகக் குறிப்பிட்ட வீதத்தில் எவ்விதத் தடையுமின்றி மாற்றிக்கொள்ளக் கூடியதாக அந் நாணயங்கள் அமையலாம். சுருங்கக் கூறின், பொன் திட்டத்தைப் பின்பற்றுகின்ற நாடுகளின் நாணயங்கள் பொன் நாணயங்களாகவோ அல்லது பொன்னுக்குத் தங்கு தடையின்றி மாற்றக் கூடியவைகளாகவோ இருக்கும்.

பொன் திட்டத்திலுள்ள நாடு அதிகார பூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட விலையில் எந்த அளவிற்கு வேண்டுமானாலும் பொன்னை வாங்கலாம், விற்கலாம்; நாட்டைவிட்டு பொன் வெளியேறுவதையோ நாட்டினுள் வருவதையோ தடை செய்யாது. உள்நாட்டு நாணயத்திற்குப் பொன் எவ்வளவு கிடைக்கும் என்பதும், பொன்னை ஏற்றுமதி செய்தால் எவ்வளவு அன்னியச் செலாவணி கிடைக்கும் என்பதும் பொன் திட்டத்தைப் பின்பற்றுகின்ற நாடுகளிலுள்ளோருக்குத் தெளிவாகத் தெரியும். இத்தகைய சூழ்நிலைகளில், நிர்ணயிக்கப்பெற்ற தங்கச்சாலை சமன்பாட்டைச் சுற்றியுள்ள குறுகிய எல்லைகளுக்குள்ளாகவோ பொன் திட்டமுள்ள நாடுகளின் நாணயங்களுடைய மாற்றுவீதங்கள் சற்று முன்பின் அமையும். இரண்டு

நாடுகளின் பொன் நாணயங்களின் எடையைக் கணக்கிட்டுப் பொன்னின் தூய்மைக்கோர் கழிவு தந்துவிட்டு, மாற்று வீதத்தை நிர்ணயிப்பதுதான் தங்கச்சாலைச் சமன்பாடு ஆகும்.

தங்கச்சாலை சமன்பாட்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பெற்ற மாற்று வீதம் நீண்ட காலத்தில் நிலைபெறும்; என்றாலும் குறுங்காலத்தில் அங்காடி மாற்று வீதம் வரையறுக்கப்பெற்ற குறிப்பிட்ட எல்லைகளுக்குள் சற்று ஏறவும், இறங்கவும் செய்யும். பொன்னைக் கப்பலில் ஏற்றி அனுப்பிடும் செலவு, இன்சூரன்சு, பண்டங்களைக் கட்டுதல் முதலானவற்றிற்கு ஆகும் செலவு, கப்பலில் செல்லும் காலத்திற்கு வட்டி விதிப்பு போன்றவைகளால் அவ்வெல்லைகள் நிர்ணயமாகின்றன.

பொன்னை ஏற்றுமதி செய்வதில் பல செலவுகள் ஏற்படும், சரக்கைக் கட்டி ஏற்றுகின்ற செலவு, கடத்துச் செலவு இன்சூரன்ஸ் கட்டணங்கள் முதலான செலவுகள் செய்திட வேண்டும். இன்னும், பொன் கப்பலில் செல்லும்போது கொஞ்சம் வட்டி வருமானத்தை இழக்க நேரிடும். கப்பலில் செல்லும் காலத்தில் பொன் தேய்மானம் அடைந்து, அதனால் கொஞ்சம் நஷ்டம் ஏற்படுவதுண்டு. பொன் சென்றடையும் நாட்டிலுள்ள மைய பாங்கு பொன்னைத் தங்கச்சாலையில் கொடுத்து காசாக்கிடும் செலவும் உள்ளது. ஆக, ஒரு நாட்டில் இருந்து பிறிதொரு நாட்டிற்குத் தங்கத்தைக் கப்பலேற்றி அனுப்புவதில் இத்தகைய செலவுகளனைத்தையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். எனவே, தங்கச்சாலைச் சமன்பாட்டு மாற்று வீதத்துடன் பொன்னை ஏற்றுமதி செய்திடும் செலவும் கூட்டப்பெற்று வரும் மதிப்பிற்கு அங்காடி மாற்று வீதம் அதிகமாக இருந்தால்தான் ஒருவர் பொன்னைத் தன் நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு கப்பலேற்றி அனுப்புவார். அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்குமிடையிலே பொன்னை ஏற்றுமதி செய்திடும் செலவு ஒரு பவுண்ட் ஸ்டர்லிங்கிக்கு இரண்டு செண்டுகள் என்று பாவித்துக்கொண்டால், \$ 4.8865 = £ 1 என்ற விகிதத்திற்குச் சமமாகவோ அல்லது சற்று குறைவாகவோ, மாற்று வீதம் இருக்கும் வரையில் வெளிநாட்டுச் செலுத்துகைகளை நிறைவேற்றுவதற்கு என அமெரிக்கா பொன்னை ஏற்றுமதி செய்யாது. இவ்வாறே, £ 1 = \$ 4.8465-க்குக் கீழே அங்காடி மாற்று வீதம் வீழ்ந்தால்தான் இங்கிலாந்திலுள்ள பிரஜை ஒருவன் பொன்னை இறக்குமதி செய்வான். இவ்வாறாக மேல் எல்லை, கீழ் எல்லை என இரு எல்லைகள் மாற்று வீதத்தில் உள்ளன. பொன் திட்ட நாடுகளுக்கிடையே பொன்னை

ஏற்றுமதி செய்வதற்கும், இறக்குமதி செய்வதற்கும் ஆகும் செலவின் மூலம் இவ்விரு எல்லைகளும் நிர்ணயிக்கப்படு கின்றன. அங்காடி மாற்று வீதம் ஏறுதலும், இறங்குதலும் இவ்விரு எல்லைகளுக்கிடையேதான். இவ்விரு எல்லைகளைத் தான் மேல் பொன் எல்லை (upper gold point) என்றும், கீழ்ப் பொன் எல்லை (lower gold point) என்றும் குறிப்பிடுவர். தங்கச் சாலைச் சமன்பாட்டு மாற்றுவீதத்துடன் பொன் ஏற்றுமதிக் காகும் செலவினைக் கூட்டிப்பெறுவதே மேல் பொன் எல்லை யெனும் பொன் ஏற்றுமதி எல்லை (gold export point) ஆகும். இதுபோலவே, தங்கச்சாலைச் சமன்பாட்டு மாற்று வீதத்தி லிருந்து பொன் ஏற்றுமதிக்காகும் செலவினைக் கழித்துப் பெறுவதே கீழ் பொன் எல்லை எனும் பொன் இறக்குமதி எல்லை (gold import point) ஆகும். ஆகவே, அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்குமிடையே பொன்னை ஏற்றுமதி செய்வதற்காகும் செலவு இரண்டு செண்டுகள் என்றால், டாலருக்கும் பவுண்டு ஸ்டர்லிங்கிற்குமிடையில் அங்காடி மாற்று வீதம், ஒரு பவுண்டு ஸ்டர்லிங்கிற்கு £ 4.8865-க்கும் $ 4.8465-க்கும் இடைப்பட்ட அளவுள்ள டாலர் மதிப்புடையதாகவிருக்கும்.

மேலே குறிப்பிட்டுள்ள வீச்சிற்குள் (range) அங்காடி மாற்று வீதம் அமைகின்றபொழுது பொன் ஏற்றுமதி நிகழாது. பொன் ஏற்றுமதி எல்லையாகிய $ 4.8865 = £ 1 எனும் விகிதத்தை மீறி அங்காடி மாற்று வீதம் அமைந்தால், அமெரிக்க இறக்கு மதியாளர்கள் பவுண்டு ஸ்டர்லிங் மாற்று உண்டியல்களை (pound sterling bills of exchange) விலைக்கு வாங்குவதற்குப் பதி லாக இங்கிலாந்திற்குப் பொன்னை ஏற்றுமதி செய்வதே சிக்கன மானது. எப்படியெனில், பொன்னை ஏற்றுமதி செய்வதற்கு இரண்டு செண்டுகளே கட்டணம் செலுத்த நேரிடுகிறது. இக் கட்டணத்தை $ 4.8665 = £ 1 எனும் தங்கச்சாலைச் சமன்பாட்டு மாற்றுவீதத்துடன் கூட்ட வருவது $ 4.8865 ஆகும். இச் சரியான வீதத்திற்கு மேல் இருந்தால் பொன் ஏற்றுமதி துவங்கும் என்ப தனால் இதற்கு பொன் ஏற்றுமதி எல்லை எனும் பெயர் வந்தது.

தங்கச்சாலைச் சமன்பாட்டு மாற்றுவீதத்தில் இரண்டு செண்டுகளைக் குறைத்தால் கிடைத்திடும் விகிதம் $ 4.8465 = £ 1 ஆகும். அங்காடி மாற்றுவீதம் இதற்கும் குறைவாக அமைந் தால் பொன் இறக்குமதி செய்யப்படும். இவ் வீதத்தையே பொன் இறக்குமதி எல்லை என்கிறோம். பொன் ஏற்றுமதி, இறக்குமதி எல்லைகளுக்கப்பால் அங்காடி மாற்றுவீதம் அமை யாது. ஏனென்றால், சிக்கனமாகக் கப்பலில் பொன்னை ஏற்றி

அனுப்பிடும் வாய்ப்பு இருக்கின்ற வரையில், பவுண்டு ஸ்டர்லிங் டிராப்டுகளை (drafts) 4.8865 டாலர்களுக்கு மேல் விலை கொடுத்து எந்த அமெரிக்க இறக்குமதியாளனும் வாங்கமாட்டான். பிரிட்டிஷ் ஏற்றுமதியாளனும் டாலர் டிராப்டுகளை லண்டனில் விற்றிடும்பொழுது 4.8465 டாலர்களுக்குக் குறைவாக ஏற்றுக் கொள்ளமாட்டான்.

பொன் திட்டத்தின் கீழ் மாற்று வீதத்தை நிர்ணயிப்பதில் பொன் எல்லைகளின் பங்கு மிகவும் முக்கியமானது. எப்படியெனில், அன்னியச் செலாவணிச் சந்தையில் மாற்றுவீதத்தில் ஏற்படும் பெருமளவு ஏற்ற இறக்கங்களை பொன் எல்லைகள் நன்கு விளக்கிடும். தங்கச்சாலைச் சமன்பாட்டு மாற்றுவீதத்திலிருந்து அங்காடி மாற்றுவீதம் ஏன் வேறுபடுகிறது என்பதையும் பொன் எல்லைகள் விளக்கிடும். பொன் ஏற்றுமதி,



வரைபடம் 14-2 அங்காடி மாற்றுவீத நிர்ணயம்

இறக்குமதி எல்லைகள் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன என்பதனையும், அன்னியச் செலாவணித் தேவை, அளிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பொன் எல்லைகளுக்குள்ளாகவே எவ்வாறு அங்காடி மாற்றுவீதம் நிர்ணயிக்கப்படுகிறது என்பதனையும் மேலுள்ள வரை படம் 14.2 நல்லவண்ணம் விளக்கிடும்.

பொன் ஏற்றுமதி, இறக்குமதி எல்லைகளினால் நிர்ணயிக்கப்பட்ட 4 செண்டுகளின் வீச்சிற்குள்ளாகவே அன்னியச்

செலாவணித் தேவை, அளிப்புக்கோடுகளில் ஏற்படும் மாறுதல் களுக்கு ஏற்றவாறு அங்காடி மாற்றுவீதம் ஏறி இறங்குதலை வரைப்படம் விளக்குகிறது. வரைபடத்தில் பொன் ஏற்றுமதி எல்லைக்கு மேல் அளிப்புக் கோடுகளைத் தொடர் கோடுகளா கவும் பொன் இறக்குமதி எல்லைக்குக் கீழ் தேவைக்கோடுகளைத் தொடர் கோடுகளாகவும் வரைந்துள்ளோம். பொன் ஏற்றுமதி எல்லைக்குமேல் இயல்பான அளிப்புக் கோடுகள் இயங்க மாட்டா என்பதனையும் அவ்வாறே பொன் இறக்குமதி எல்லைக் குக் கீழே தேவைக்கோடுகள் இயல்பான முறையில் இயங்க மாட்டா என்பதனையும் எடுத்துக் காட்டிடவே தொடாக் கோடு களாக அவை வரைந்து காட்டப்பட்டுள்ளன. ஏனெனில், அவ் வெல்லைகளில் அன்னியச் செலாவணியின் தேவை நெகிழ்ச்சி யும் அளிப்பு நெகிழ்ச்சியும் அளவிறந்தவை (perfectly elastic) ஆகின்றன. பொன் ஏற்றுமதி எல்லையாகிய $ 4.8865 = £ 1 என்ற விகிதத்தை மாற்றுவீதம் அடையும்போது, அவ்வீதத்திலேயே அன்னியச் செலாவணியின் தேவை அதன் அளிப்பைவிட அதிகமானாலும் அம் மாற்றுவீதம் மேலும் உயராது; உயரத் தேவையில்லை. காரணம், அன்னியச் செலாவணியின் பற்றுக் குறையைப் போக்குவதற்குப் பொன் ஏற்றுமதி உள்ளது. பொன் இறக்குமதி எல்லையாகிய $ 4.8465 = £ 1 என்ற விகிதத் திற்கு மாற்றுவீதம் இறங்கிய பின்னர், மேலும் இறங்காது. ஏனெனில், இவ் வீதத்திற்கப்பால் பொன் இறக்குமதியாகும். இவ்வாறாகப் பொன் ஏற்றுமதி, இறக்குமதி எல்லைகளுக் குள்ளாகவே, அதாவது 2+2=4 செண்டுகளின் வீச்சிற்குள் ளாகவே அங்காடி மாற்றுவீதம் ஏறவும் இறங்கவும் செய்யும்.

பொன் எல்லைகளுக்குள்ளாகவே அமைந்துள்ள அங்காடி மாற்று வீதம் OR ஆகும். அளிப்புக்கோடும் (S_1S_1) தேவைக்கோடும் (D_1D_1) ஊடறுக்கின்ற புள்ளியில் அங்காடி மாற்றுவீதம் (OR) நிர்ணயம் பெறுகிறது. அப் புள்ளியில் (E) அன்னியச் செலாவணித் தேவையும், அளிப்பும் சமநிலையில் இருக்கும். அளிப்பு, தேவை சார்புகள் S_2S_2, D_2D_2 நிலைக்கு மாறும் (உயரும்) பொழுது, மாற்று வீதமும் உயரும்; ஆனால் பொன் ஏற்றுமதி எல்லையினால் ($ 4.886 = £ 1) நிர்ணயிக்கப்பெற்ற மட்டத்திற்குமேல் உயராது; இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமெனில், மாற்று வீதம், $ 4.886 = £ 1 எனும் வீதத்திற்கு மேல் உள்ள மட்டத்தில் அமைந்திட, தேவைக் கோடும் அளிப்புக் கோடும் ஊடறுத்திடும் புள்ளியே (E) அம் மட்ட மாக இருந்தபோதிலுங்கூட மாற்றுவீதம் உயர்ந்திடாது.

பொன் திட்டத்தின்கீழ் தங்கச்சாலைச் சமன்பாட்டு விகிதத்தினால் (mint par ratio) நிர்ணயம் பெற்ற இயல்பான மாற்று வீதத்திலிருந்து, அதாவது சமநிலை மாற்று வீதத்திலிருந்து அங்காடி மாற்று வீதம் வேறுபடலாம். இவ்வாறு, வேறுபடுதல் குறுங்காலத்திலேதான். நெடுங்காலத்தில் அங்காடி மாற்று வீதம் இயல்பான (சமநிலை) மாற்று வீதத்துக்குச் சமமாகிவிடும். அயல்நாட்டுச் செலுத்து நிலையில் சமநிலையின்மை நிலவிடும்பொழுது, அங்காடி மாற்று வீதம் சமநிலை மாற்று வீதத்திலிருந்து வேறுபடும். தன்னியக்கமான முறையில் பொன் உள்ளே வருதல், பொன் வெளியேறுதல் மூலமாகவே சமநிலை மீண்டும் ஏற்படும். இது எப்படி நிகழும் என்பதைக் கவனிப்போம். அயல்நாட்டுச் செலுத்து நிலையில் சமநிலையின்மை நிலவுவதன் பொருள், அந்நாட்டின் அயல் நாட்டு வாணிப நிலை பாதகமாகியுள்ளது என்பதுதான். அதாவது, ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாகியுள்ளது என்று பொருள். தன்னியக்கமாக நிகழுவது என்னவெனில், பாதக வாணிப நிலையுள்ள நாட்டிலிருந்து பொன் சாதக வாணிப நிலையுள்ள வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகும். உள்நாட்டில் பணவாட்டம் ஏற்பட்டு, விலையும் வருமானமும் வீழ்ந்து, ஏற்றுமதிப் பண்டங்களின் விலையும் வீழ்ந்து வெளிநாடுகளில் தேவை உயர்ந்துவிடும். பாதக வாணிப நிலையினால் பொன்னை இழந்திடும் நாட்டின் ஏற்றுமதிகள் இவ்வாறாகத் தூண்டப்படும். அதே வேளையில், சாதக வாணிப நிலையின் காரணமாகப் பொன்னைப் பெற்றிடும் நாட்டின் பண்டங்களின் விலைகளும், அந் நாட்டின் வருமானமும் உயர்கின்ற காரணத்தினால், பாதக வாணிப நிலையினால் பொன்னை இழந்திடும் நாட்டில் இறக்குமதித் தேவை குறைந்துவிடும். ஆக, பொன்னை இழந்திடும் நாட்டில் ஏற்றுமதிகள் தூண்டப்பெற்று இறக்குமதிகள் குறைந்திடும்; பொன்னைப் பெற்றிடும் ஏற்றுமதிகள் சுருங்கி இறக்குமதிகள் உயரும். மீண்டும் சமநிலை ஏற்படுகிறது. அங்காடி மாற்றுவீதம் தங்கச்சாலைச் சமன்பாட்டு மாற்றுவீதத்திற்குச் சமமாகிவிடும்.

பொன் திட்டத்தின் குறைபாடுகள் அனைத்தும் இக் கோட்பாட்டிலும் நிலவுவதால் தங்கச்சாலைச் சமன் விகிதத்தின்மூலம் மாற்றுவீதத்தை நிர்ணயிப்பது சரியாக இருப்பதில்லை. உள்நாட்டு விலை, வருமான மட்டங்களில் நிலையாமையை உண்டு பண்ணிவிட்டு நாணய மாற்றுவீதத்தில் நிலைபேற்றினைப் பொன் திட்டம் உண்டாக்குகிறது. நாட்டின் உள்நாட்டு மதிப்பின் உறுதிப்பாட்டைக் குலைத்துவிட்டு வெளிநாட்டு மதிப்பினை

உறுதிப்படுத்துகின்ற முறை இது. நாணயத்தின் வெளிநாட்டு மதிப்பினை நிலைநிறுத்துவதற்காக உள்நாட்டில் பண வீக்கத்தையோ வாட்டத்தையோ உண்டாக்கிடும் முறை இது. அயல் நாட்டுச் செலுத்து நிலையின் மென்மையான சமநிலையின்மையைப் பொன் ஏற்றுமதியும் இறக்குமதியும் சரி செய்யக் கூடும்; ஆனால் செலுத்துநிலையில் ஏற்படும் பெரும் சமநிலையின்மையை -பெரும் நெருக்கடிகளைச் சரி செய்ப இயலாது. பொன் ஏற்றுமதி இறக்குமதி மாத்திரமல்லாமல் வட்டிவீத மாற்றங்கள்கூட செலுத்துநிலையில் ஏற்படக் கூடிய பெருமளவு சமநிலையின்மையினைப் போக்கிட முடியாது.

அயல்நாட்டுச் செலுத்துநிலையில் சமநிலையின்மை ஏற்படுவதைத் தொடர்ந்து பொன் ஏற்றுமதியும் இறக்குமதியும் நிகழ்கின்றன. பொன்னை இழந்திடும் நாடுகள், பெற்றிடும் நாடுகள் ஆகியவற்றின் ஏற்றுமதிகளிலும் (அன்னியச் செலாவணி அளிப்பிலும்) இறக்குமதிகளிலும் (அன்னியச் செலாவணித் தேவையிலும்) மாற்றங்கள் ஏற்படுகின்றன. மாற்றுவீதத்திலும் மாற்றம் ஏற்பட்டுச் சமநிலை ஏற்படும் என்று கருதப்படுகிறது. தன்னியக்கமாக இவ்வாறே சமநிலை ஏற்படுமா என்று சொல்வதற்கில்லை. முதலாவதாக, அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பண்டங்கள் மாத்திரமல்லாமல் மூலதன இயக்கங்களும் இடம் பெறுகின்றன. இரண்டாவதாக, குறுங்கால நிதிகளும் காப்பீட்டுப் பத்திரங்களும் பொன்னையும் முந்திக்கொண்டு இயங்குகின்றன. ஆகவே மூலதன நிதியியக்கத்தின் காரணமாக சமநிலை மீண்டும் நிறுவப்படும்பொழுது பண்டங்களின் விலை பாதிக்கப்படுவதில்லை. உண்மையில், வெளிநாட்டிலிருந்து பொன் இறக்குமதியானாலும் அது மைய பாங்கினைச் சென்றடையுமே தவிர, பணப் புழக்கத்தையோ அளிப்பையோ உயர்த்தாது. மேலும், செலவு-விலை கட்டமைவில் நெகிழ்ச்சி அமைந்தால்தான் பொன்னியக்கத்தின்மூலம் எதிர்பார்க்கப்படும் பலன் கிட்டும். பொன்னை ஏற்றுமதி செய்திடும் நாட்டில் விலையும் குறைய வேண்டும்; தொழிலாளர் தம் கூலியும் குறைதல் வேண்டும். ஆனால் தற்கால அரசு சேமநல அரசாக இருப்பதாலும் தொழிற்சங்கங்கள் வலுமிக்கனவாக இருப்பதாலும் கூலியைக் குறைப்பது என்பது நடைபெற முடியாத ஒன்று.

அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமநிலையின்மையைப் போக்கிடும் பொறுப்பு, பற்றுக்குறை ஏற்பட்டுள்ள நாட்டிற்கும், உபரிபெற்றுள்ள நாட்டிற்கும் பொதுவான ஒன்று என்ற எடுகோளின் அடிப்படையிலேயே பொன்னியக்

கங்கள் பன்னாட்டு வாணிபத்தில் மேற்கொள்ளப்பட்டு வாணிபத்தில் ஈடுபடும் இரண்டு நாடுகளும் சமப் பொருளாதார பலமுள்ளனவாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் பொன்னியக்கம் மூலம் சமநிலையை உருவாக்க முடியும். எடுத்துக்காட்டாக, சிறிய நாடாகிய டென்மார்க்கிற்கும், பெரிய நாடாகிய அமெரிக்காவிற்கும் இடையில் வாணிபம் நிகழும்பொழுது, பற்றுக்குறையை நீக்கிடும் நோக்குடன் டென்மார்க் பொன்னை ஏற்றுமதி செய்து, தன்னியக்கமாகவே விலை உள்நாட்டில் வீழ்ந்திடும் வாய்ப்பினைப்பெறும். அமெரிக்கப் பொன் இருப்புடன் ஒத்திட்டுப்பார்க்கும்பொழுது, டென்மார்க்கிலிருந்து கிடைக்கப்பெறும் பொன்னளவு மிகவும் குறைவே என்பதனுல் அமெரிக்காவில் விலையேற்றம் ஏற்படும் வாய்ப்பில்லை. ஆகவே, பொன்னியக்கம் எதிர்பார்க்கப்படும் பலனை நல்காது என்பது புலனுகிறது. மேலும், பொன் திட்டம் இன்று எந்த நாட்டிலும் நடைமுறையில் இல்லை. எனவே, தங்கச்சாலை சமன்பாட்டு மாற்றுவீத கோட்பாட்டினை நடைமுறைப்படுத்த முடியாது.

வாங்கும் சக்தி சமன்பாட்டுக் கோட்பாடு

இக் கோட்பாட்டினை முதலில் அறிமுகம் செய்தவர் வீட்லே (Wheatlay) என்பார். பின்பு அதனைச் செம்மைப் படுத்தியவர் யாவருக்கும் தெரிந்த கஸ்டேவ் காசல் (Gustav Cassel) என்பார். முதல் உலக யுத்தத்தைத் தொடர்ந்த ஆண்டுகளில் நாடுகள் ஒன்றன்பின் ஒன்ருகப் பொன் திட்டத்தைக் கைவிடவே, தங்கச்சாலை சமன்பாட்டு மாற்றுவீதக் கோட்பாடு உபயோகமற்றதாகிவிட்டது. ஒவ்வொரு நாடும் தமது நாணயத்தைப் பொன்னுக்கு மாற்றவியலாதபடி விதி செய்து கொண்டது. பொன்னுக்கு மாற்றவியலாத தாள் செலாவணியைக் (inconvertible paper currency) கொண்ட பணவமைப்பினை (monetary system) நாடுகள் பின்பற்றத் தொடங்கின. இரண்டு நாடுகளின் நாணயங்களுடைய வாங்கும் சக்தி சமமாகும் நிலையை மையமாகக் கொண்டு மாற்றுவீதம் நிர்ணயிக்கப் பெற்று நிலைபேறு அடையும். பொன்னுக்கு மாற்றவியலாத தாள் செலாவணிகளையுடைய பணவமைப்பில் இவ்வாருக, செலாவணிகளின் வாங்கும் சக்தி சமன்பாட்டை அனுசரித்தே மாற்றுவீதம் நிர்ணயம் பெறுகிறது.

இக் கோட்பாட்டினை ஓர் உதாரணத்தின்மூலம் விளக்கலாம். பண்டங்களின் குறிப்பிட்ட ஒரு தொகுப்பினை அமெரிக்காவில் ஒரு டாலர் கொடுத்தும் இந்தியாவில் ரூ. 7.50 கொடுத்தும் வாங்கினுல் ரூபாய் நாணயத்திற்கும் டாலருக்கு

மிடையில் மாற்று மதிப்பு $ 1=ரூ. 7.50 என்ற விகிதத்தில் அமையும். இம் மாற்றுவீதத்திலிருந்து விலகினல், அங்காடியில் தேவை, அளிப்பு ஆகிய சக்திகளின் போக்கின் விளைவாக மீண்டும் நிலையான மாற்றுவீதமே ஏற்படும். உதாரணமாக, $ 1=ரூ. 7.75 என்ற புதிய வீதம் உருவாளுல், அதற்குப் பொருள் டாலரின் வாங்கும் சக்தி ரூபாய் நாணயத்தில் உயர்ந்துவிட்டது என்பதாகும். டாலரின் உடைமைக்காரர்கள் இப் புதிய மாற்று வீதத்தில் டாலரை ரூபாய் நாணயங்களாக மாற்றுவர்; இரு நாடுகளிலும் விலைகள் மாருத காரணத்திஞல், இந்தியாவில் ரூ. 7.50க்குப் பண்டங்களை வாங்கி மீண்டும் அமெரிக்காவில் அவற்றை ஒரு டாலருக்கு விற்பர்; இவ்வாறு ஒவ்வொரு டாலர் கொண்ட ஒவ்வொரு பேரத்திலும் 25 பைசாக்களை ஆதாயமாகப் பெறுவர். இதஞல், ரூபாய் நாணயத்தின் அமெரிக்க தேவை பெருகுகின்ற காரணத்திஞல், ரூபாய் நாணயத்தின் டாலர் மதிப்பு உயர்ந்து, மீண்டும் பழைய $=ரூ. 7.50 என்ற மாற்றுவீதம் ஏற்படும், இரு நாடுகளிலும் விலை மட்ட மாற்றங்கள் ஏற்படாத வரையில் முதலில் ஏற்பட்ட மாற்றுவீதத்தில் மாற்றம் ஏற்படாது. இந்தியாவில் விலையேற்ற ஏற்படாமல் அமெரிக்காவில் மட்டும் விலையேற்றம் ஏற்பட்டால் டாலரின் ரூபாய் மதிப்பு குறைந்துவிடும். இவ்வாறே அமெரிக்காவில் விலைகள் நிலைத்திருக்க இந்தியாவில் விலைகள் உயர்ந்தால் டாலரின் ரூபாய் மதிப்பு உயர்ந்துவிடும். இக் கோட்பாட்டின் அடிப்படையான அம்சமிது. இரு நாடுகளிலும் விலை மட்டங்கள் ஒரே மாதிரியாக-ஒரே வீதாச்சாரத்தில் ஏறிஞலோ இறங்கிஞலோ மாற்றுவீதத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

பொன்னுக்கு மாற்றவியலாத தாள் செலாவணிகளைக் கொண்ட பணவமைப்பு உள்ள நாடுகளில் வாங்கும் சக்தி சமன்பாட்டுக் கோட்பாடும் பொன் அல்லது வெள்ளித்திட்டம் நடைமுறையில் உள்ள நாடுகளில் நாணயச்சாலைச் சமன்பாட்டுக் கோட்பாடும் மாற்றுவீத நிர்ணயத்திற்குப் பயன்படுத்தப்படும் என்பதைக் கண்டோம். இவ்விரு கோட்பாடுகளுக்குமிடையில் வேறுபாடு உண்டு. தங்கச்சாலைச் சமன்பாடு நிலைபேறுடையது. ஆஞல் வாங்கும் சக்தி சமன்பாடு, நாடுகளில் நிலவிடும் விலைமட்டங்களில் ஏற்படும் மாறுதல்களுக்குத் தக்கவாறு மாறும்தன்மை உடையது. ஒரு நாட்டின் நாணயத்தின் தேவை, அளிப்பு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு வாங்கும் சக்தி சமன்பாட்டைச் சுற்றிலும் அங்காடி மாற்றுவீதம் ஏறவும் இறங்கவும் செய்யும், பண்டங்களை ஏற்றுமதிசெய்வதற்காகும் செலவு, சுங்கத்

தீர்வைகள், இன்சூரன்சு செலவு, பாங்கு-வட்டிச் செலவுகள், வெளிநாடுகளில் விளம்பரச் செலவு போன்ற செலவுகளனைத்தும் மாற்றுவீதத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களின் எல்லைகளை நிர்ணயிப்பன. ஆனால் இவ்வெல்லைகள் பொன் ஏற்றுமதி, இறக்குமதி எல்லைகளைப் போல நிலைத்து நிற்பவை அல்ல.

வாங்கும் சக்தி சமன்பாட்டுக் கோட்டினை இப்பொழுது விமர்சிப்போம். முதலாவதாகச் செலாவணிகளின் வாங்கும் சக்தியைப் பொறுத்தமாத்திரம் மாற்றுவீதம் நிர்ணயிக்கப்படுவதில்லை. மாற்றுவீதத்தை இறக்குமதிவரிகள் போன்ற காரணிகளும் நிர்ணயிக்கின்றன. ஒரு நாடு இறக்குமதி வரிவிதிக்கவும் பிறநாடுகள் இவ் வரியினை விதிக்காமலுமிருப்பின், உள்நாட்டில் விலைமட்டம் மாறாதிருப்பினும், இறக்குமதி வரி விதித்த நாட்டு நாணயத்தின் மாற்று மதிப்பு உயர்ந்துவிடும். ஆகவே, நாணயங்களின் வாங்கும் சக்திக்கும் மாற்றுவீதத்திற்கும், நேரடியான தொடர்பு கிடையாது.

இரண்டாவதாக, பொதுவிலைமட்ட வேறுபாடுகளையே ஆதாரமாக வைத்து இக் கோட்பாடு உருவாகியுள்ளது. உள்நாட்டுப் பண்டங்களின் விலைகளுக்கும் பன்னாட்டுப் பண்டங்களின் விலைகளுக்கும் உள்ள வேறுபாட்டினை இக் கோட்பாடு கருதவில்லை. நாடுகளுக்கிடையே நிலவிடும் தராதர விலை மட்டத்தைப் பொறுத்தே மாற்றுவீதம் நிர்ணயிக்கப்படும் என்பது கோட்பாடு. ஆனால், பன்னாட்டு வாணிபத்தில் எவ்விதத் தொடர்பும் கொள்ளாது உள்நாட்டில் மட்டும் விற்பனையாகும் பண்டங்களின் விலைகளும் பொது விலைமட்டத்தில் இடம்பெறும்பொழுது, இக் கோட்பாட்டின் மூலம் மாற்றுவீதம் நிர்ணயம் பெறுதல் அவ்வளவு சரியாக இருக்காது என்பது தெளிவு. பன்னாட்டு வாணிபத்தில் இடம்பெறும் பண்டங்களின் விலைமட்டத்தை மட்டும் அனுசரித்தே மாற்றுவீதம் நிர்ணயிக்கப்படும் என்றால் இக் கோட்பாடு சரியானது எனலாம் என்பது ஹெக்ஷர் (Heckscher) போன்றாரின் வாதமாகும்.

விலைமாற்றங்களை அனுசரித்து மாற்றுவீதம் நிர்ணயிக்கப்படுகிறது எனில், விலைமாற்றங்களை அளப்பதற்குக் குறியீட்டெண்களைப் (index numbers) பயன்படுத்தவேண்டும். மொத்தவிற்பனை விலைகளின் குறியீட்டெண்களைப் பயன்படுத்தி வாங்கும் சக்தி சமன்பாடுகளைக் கணக்கிட்டால், பொறிவழிப் பண்டங்களையும் பல்வேறு பணிகளையும் புலனாகா ஏற்றுமதிகளையும் கணக்கில் சேர்த்துக் கொள்ளாத குறை

ஏற்படும். மாருக, வாழ்க்கைச் செலவு குறியீட்டெண்களைப் பயன்படுத்தினுல், பன்னுட்டு வாணிபத்தில் இடம்பெருத பண்டங்கள் பலவற்றை நாணயங்களின் வாங்கும் சக்தியை நிர்ணயிக்கப் பயன்படுத்திய குறை ஏற்படும். ஆனுல், கூலிவீத குறியீட்டெண்களைப் பயன்படுத்தி வாங்கும் சக்தி சமன்பாடு களைக் கணக்கிடுவதில் தவறு ஒன்றுமில்லை. ஏனெனில், எல்லாப் பண்டங்களின் செலவில் கூலி வீதம் அடங்குகிறது, இதிலும் கூட ஒரு குறை உண்டு; தொழிலாளர் திறன் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது; உள்நாட்டுப் பண்டங்களின் விலைகளனைத்தும் ஒரே திக்கில் இயங்கிடும்; அதாவது, ஒன்ருகவே ஏறும், ஒன்ருகவே தாழும். எனவே, இக் கோட்பாடு நெடுங்காலத் திற்கே பொருந்தும்.

மேலும், ஒரு நாட்டில் விற்பனையாகும் பண்டங்கள்' பணிகளனைத்தும் வேறு ஒரு நாட்டிலுள்ள அதே மாதிரியான பண்டங்கள், பணிகள் ஆகியவற்றுடன் போட்டியிடுவன என்று :கூறிட முடியாது. இந்தியாவில் தேவைப்படும் வீடு களும், தலைமுடி சரி செய்தலும் அமெரிக்காவில் தேவைப்படும் வீடுகளுடனும் முடி சரிசெய்தலுடனும் போட்டியிடமாட்டா. இன்னும், சரக்கேற்றும் செலவின் காரணமாகவும் வாணிபத் தடைகளின் காரணமாகவும் பன்னுட்டு வாணிபத்தைச் சார்ந் துள்ள பண்டத்தின் விலையும் கூட நாடுகளுக்கிடையே வேறு படும். இத்தகைய விலை ஒப்புமைகளின்மூலம் தெரிய வருவது என்னவென்ருல், பன்னுட்டு வாணிபம் சார்ந்த பண்டங்கள் இறக்குமதியாகும் நாட்டில் விலை உயர்ந்தும் ஏற்றுமதி செய்யும் நாட்டில் விலை குறைந்தும் விற்பனையாகும் என்பதுதான்.

நான்காவதாக, விலை மாற்றங்கள் மாற்றுவீதத்தை நிர்ண யிக்கும் என்பது கோட்பாடு. மாற்று வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் பண்டங்களின் விலைகளில் எவ்வித மாற்றங் களையும் ஏற்படுத்தாது என்பதும் கோட்பாட்டிலிருந்து பெறப் படும்; ஆனுல், இது உண்மையன்று. உதாரணமாக, ஊக வாணிக அடிப்படையில் பெருமளவு மூலதனம் பிரிட்டினி லிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டால், பவுண்ட் ஸ்டர்லிங்கின் மாற்று மதிப்பு குறைந்துவிடும். இந் நிலை நீண்ட காலம் நீடித் தால், பிரிட்டனின் இறக்குமதிகள் விலை உயர்ந்துவிடும். எனவே, இறக்குமதியாகும் அமெரிக்க கோதுமையை அதிக பவுண்ட் ஸ்டர்லிங் கொடுத்து வாங்கிட வேண்டும். மேலும் பிரிட்டிஷ் தொழில்களுக்குத்தேவைப்படும் கச்சாப் பொருள்கள் பல அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகின்றன. இவ்விறக்கு

மதிகளின் விலைகளும் உயர்ந்துவிடுகின்றன. இக் கச்சாப் பொருள்களின்மூலம் தயாராகும் பிரிட்டிஷ் பொறிவழிப் பண்டங்களின் விலைகளும் உயரும். இவ்வாறே, பிரிட்டிஷ் ஏற்றுமதிகளின் டாலர் விலை வீழ்ந்து, அமெரிக்காவில் பிரிட்டிஷ் ஏற்றுமதிகளின் தேவை பெருகும். அளிப்பு நெகிழ்ச்சி குறைந்திருப்பதால் பிரிட்டிஷ் ஏற்றுமதியாளரும் குறுங்காலத்தில் விலைகளை உயர்த்துவர். பவுண்ட் ஸ்டர் லிங்கின் டாலர் மதிப்பிறக்கத்தின் அளவிற்கும் குறைவாகவே அவர்கள் விலையை உயர்த்தினாலும் ஏற்றுமதியாளர்கள் தங்க ளுடைய ஏற்றுமதிகளைக் குறைக்காமலேயே இலாபத்தினைப் பெருக்கிட முடியும். பிரிட்டிஷ் ஏற்றுமதிகளின் விலை உயர்ந் தாலும் வெளிநாடுகளில் அவை மலிவாகவே கருதப்படும். எனவே, பவுண்ட் ஸ்டர்லிங்கின் டாலர் மதிப்பு குறைந்தமை யால் பிரிட்டிஷ் விலை மட்டம் உயர்ந்துள்ளது.

மேலும், பவுண்ட் ஸ்டர்லிங்கின் மதிப்பிறக்கத்தின் காரணமாகப் பன்னாட்டுச் சந்தையில் பிரிட்டிஷ் ஏற்றுமதித் தொழில்களின் போட்டிபலம் உயர்ந்து விடுகிறது. இதனைக் காணும் மற்ற நாடுகளும் பிரிட்டனுடன் போட்டியிடவேண்டிய கட்டாயத்தின் காரணமாகத் தங்களுடைய பண்டங்களின் விலையினையும் குறைக்க முன்வரும். ஆக, மாற்று வீத மாற் றங்கள் விலை மாற்றங்களை உண்டாக்குகின்றன என்பது நிரூபணமாகின்றது.

ஐந்தாவதாக, மாற்றுவீத ஏற்ற இறக்கங்கள் வெவ்வேறு நாடுகளின் விலைமட்டங்களின் மீது வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன. துய்ப்புப் பண்டங்களைப் பெருமளவு இறக்குமதி செய்து தனது மூலவளன்களின் பெரும்பகுதியை ஏற்றுமதிப் பண்டங்களை உற்பத்தி செய்ய பயன்படுத்துகின்ற நாடு மாற்றுவீத ஏற்ற இறக்கங்களால் பெருமளவு பாதிக்கப் படும். ஏற்றுமதிகள், இறக்குமதிகள் ஆகியவற்றின் விலைகளை மாற்றுவீத மாற்றங்கள் பாதிக்கும். பண்டங்களில் பெரும் பகுதி ஏற்றுமதிப் பண்டங்களாகவும் இறக்குமதிப் பண்டங் களாகவும் அமைந்துவிட்டால், பொதுவிலை மட்டத்திலும் பெருமளவு ஏற்ற இறக்கங்கள் ஏற்படும். ஆக, சுருக்கமாகச் சொன்னால், வெளிநாட்டு வாணிபத்தில் அதிக பங்கு பெற்றுள்ள நாடுகளின் விலைமட்டத்தின் மீது மாற்றுவீத ஏற்ற இறக்கங்கள் அதிகப்பட்ட விளைவுகளையே ஏற்படுத்தும் என்பது தெளிவு.

ஆறுவதாகப், பன்னாட்டு வாணிபத்தின் மூலமாக அல்லாமல் வேறு வகைகளில் எழுகின்ற அன்னியச் செலாவணி

தேவையையும் அளிப்பையும் இக் கோட்பாடு கருதவில்லை. புலனாகாப் பண்டங்களின் ஏற்றுமதிகள், இறக்குமதிகள் ஆகியவற்றின் காரணமாகவும், சீரமைப்புச் செலுத்துகைகள், வெகுமதிகள் வழங்குதல், கடன்களைத் தருதல், வட்டிகட்டுதல் போன்ற ஒருமுக நிதிமாற்றலின் காரணமாகவும் அன்னியச் செலாவணித் தேவையும் அளிப்பும் எழுகின்றன. நீண்டகால முதலீடுகளும், வட்டியையும் ஆதாயப் பங்கையும் செலுத்துவதற்கென மூலதனத்தை மாற்றுதலும், குறுங்கால மூலதன இயக்கங்களும் ஒவ்வொரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் வரவையும் செலவையும் ஏற்படுத்தி, அன்னியச் செலாவணிச் சந்தையைப் பாதிக்கின்றன. அயல்நாட்டு வாணிப நிலையைப் பொறுத்து மட்டும் மாற்றுவீதம் நிர்ணயிக்கப்படுவதென்றால் வாங்கும் சக்தி சமன்பாட்டுக் கோட்பாடு சரியானதே எனலாம். ஆனால், பல்வேறு அம்சங்களைக் கொண்டதும் பல்வேறு சக்திகளின் இயக்கங்களையும் கொண்டதுமான அயல்நாட்டுச் செலுத்து நிலையைப் பொறுத்தே மாற்றுவீதம் அமைகிறது என்பதால் இக் கோட்பாடு ஒருதலையானதாகவும் முழுமையற்றதாகவும் கருதப்படுகிறது.

ஏழாவதாக, நாடுகளிடையே உள்ள பொருளாதாரத் தொடர்புகளில் ஏற்படும் மாற்றங்களைத் தொடர்ந்து மாற்றுவீதம் மாறலாம். நாடுகளிடையே நிலவிடும் தராதர விலைகளில் மாற்றங்கள் ஏற்படாதிருக்கும் போதே மாற்றுவீதம் மாறலாம். புதிதாக ஒரு நாடு பன்னாட்டு வாணிபத்தில் கலந்திடும் பொழுதோ அல்லது ஒரு நாடு புதிதாகப் பண்டத்தை வாங்கவோ விற்கவோ முற்பட்டாலோ பழைய நாடுகளிடையே நிலவிடும் பொருளாதாரத் தொடர்புகளிலே மாற்றம் ஏற்பட்டு, அந் நாடுகளின் நாணயங்களின் மாற்றுவீதங்களும் பாதிக்கப்படும்.

இவ்வளவு குறைபாடுகளை விமர்சித்தாலும் கூட இக் கோட்பாட்டினைப் பயனற்றது என்று கூறி உதறித் தள்ளிவிட முடியாது. பணம்சார் கைக்கோளின் (monetary policy) கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது, இக் கோட்பாட்டிற்கு நடைமுறை முக்கியத்துவம் உண்டு என்பது புலனாகும். உதாரணம் ஒன்றினை ஆதாரபூர்வமாக-வரலாற்றுச் சான்றாக வழங்கலாம். நாட்டில் நிலவிய விலை மட்டத்திற்கு மாறாக, பவுண்ட் ஸ்டர்லிங்கின் பொன் மதிப்பினை 1925-ல் இங்கிலாந்து உயர்த்தியது. உலக விலையைவிட உள்நாட்டு விலைகள் குறைந்திருந்தால்தான் பவுண்ட் ஸ்டர்லிங்கின் உயர்ந்த மாற்று மதிப்பினைக்

காத்திட முடியும் என்பது கோட்பாடு. இல்லையெனில் பவுண்ட் ஸ்டர்லிங்கின் மாற்றுவீதம் குறைந்தே தீரும். ஆனாலும், உயர்த்தப்பட்ட மாற்றுவீதத்தை நிலைநிறுத்தும் நோக்குடன் அரசாங்கம் பாங்கு வீதத்தை உயர்த்தி வெளிநாட்டு மூலதனத்தைக் கவர முனைந்தது. பாங்கு வீதம் உயர்ந்தால் விலைகள், தொழிலாளர் தம் கூலி, வேலை வாய்ப்பு முதலானவை வீழ்ந்திடும். ஆனால், வலுவான தொழிற்சங்கங்களின் பலமான வேலை நிறுத்தப் பயமுறுத்தல்களின் காரணமாகக் கூலியைக் குறைக்க முடியவில்லை. எனவே, விலைகள் உயர்ந்தபடியே இருந்தன. இவ்வாறு விலை மட்டத்திற்கும் மாற்று வீதத்திற்குமிடையில் சமநிலை அற்றுப்போய்விட்டது. விலைகள் இறங்கவில்லையெனில், மாற்றுவீதம் இறங்கியே தீரவேண்டும். மாற்றுவீதம் இறங்கும் நிலை 1931ஆம் ஆண்டு பொன் திட்டத்தை இங்கிலாந்து கை கழுவியபோது ஏற்பட்டது. மாற்றுவீதம் எல்லா நாடுகளிலும் ஏறுவதும் இறக்குவதுமாக இருக்கும் இக்காலத்தில் எந்த அளவிற்குச் சமன்பாட்டு மாற்றுவீதத்திலிருந்து அங்காடி மாற்றுவீதம் விலகுகிறது என்பதை இக்கோட்பாடு ஓரளவிற்கு அளந்து கணக்கிடப் பயன்படுகிறது. எது சரியான மாற்றுவீதம் என்பதனைக் கணிப்பதற்குக் கூட இக் கோட்பாடு பயன்படுகிறது.

அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கோட்பாடு

உள்நாட்டு விலைகளோ பணத்தின் அளவோ அல்லாமல் வேறு தனித்த காரணங்களினால் மாற்றுவீதம் நிர்ணயிக்கப்படும் என்று அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கோட்பாடு குறிப்பிடுகின்றது. பாதக அயல்நாட்டுச் செலுத்துநிலைக் நிலவுமேயானால் மாற்றுவீதம் வீழும்; சாதகச் செலுத்து நிலையெனில் மாற்றுவீதம் உயரும். பாதகச் செலுத்துநிலையில் குறிப்பிட்ட மாற்றுவீதத்தில் அன்னியச் செலாவணித் தேவை அளிப்பைவிட அதிகமாக இருக்கும். எனவே, உள்நாட்டு நாணயத்தில் அன்னியச் செலாவணியின் விலை ஏறும். அதாவது உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டு மதிப்பு குன்றும். மாறாக, சாதக செலுத்துநிலை நிலவினால் அன்னியச் செலாவணிச் சந்தையில் உள்நாட்டு நாணயத்தின் தேவை அளிப்பைவிட உயர்ந்துவிடும். உள்நாட்டு நாணயத்தின் அன்னியச் செலாவணி விலை உயரும். உள்நாட்டு நாணயத்திற்குச் சாதகமாக மாற்றுவீதம் மாறும்.

மாற்றுவீதத்தை அயல்நாட்டுச் செலுத்து நிலையை நிர்ணயிக்கிறது என்பதே கோட்பாட்டின் சுருக்கம். அதாவது,

அன்னியச் செலாவணியின் தேவையையும் அளிப்பையும் பொறுத்தே மாற்று வீத நிர்ணயம் அமைகிறது என்பதே விளக்கம். ஆனால், அன்னியச் செலாவணியின் தேவையையும் அளிப்பையும் நிர்ணயிக்கும் காரணிகள் எவை என்பது கேள்வி. நாம் முன்னரே குறிப்பிட்டுள்ளதுபோல, சீரமைப்புச் செலுத்துகைகள், வெளிநாட்டுக் கடன்களுக்குத் தரப்படும் வட்டி போன்ற தனித்த செலுத்துகைகளே மாற்றுவீதத்தை நிர்ணயிக்கின்றன.

அயல்நாட்டுச் செலுத்துநிலை கோட்பாட்டிற்குச் சில சிறப்புகள் உண்டு. பொது மதிப்புக் கோட்பாட்டில் பண்டங்களின் விலையைத் தேவையும் அளிப்பும் நிர்ணயிப்பது போலவே, மாற்றுவீதத்தை அன்னியச் செலாவணியின் தேவையும் அளிப்பும் நிர்ணயிக்கின்றன. இக் கோட்பாட்டின் காரணமாக மாற்றுவீத நிர்ணயம் பொது சமநிலைப் பகுத்தாய்வில் இடம் பெறுகின்றது. மாற்றுவீத நிர்ணயத்தில் பல காரணிகளின் பங்கினை இக் கோட்பாடு எடுத்துக் காட்டுகிறது. சமநிலையின் மையைப் போக்கிட நாணய மதிப்புக் குறைப்பினையோ மதிப் பேற்றத்தினையோ மேற்கொள்ளலாம் என்பதை இக் கோட்பாடு சுட்டிக் காட்டுகிறது ஆனால், தங்கச்சாலை சமன்பாட்டுக் கோட்பாட்டில், பண வீக்கத்தையோ பண வாட்டத்தையோ கொண்டுதான் சமநிலையை உண்டாக்க வேண்டும் என்ற கருத்து உள்ளது.

இக் கோட்பாட்டிலும் குறைகள் உள்ளன. அயல் நாட்டுச் செலுத்துநிலை என்பது ஒரு நிலையான அளவு என்ற கருத்து இக் கோட்பாட்டில் உள்ளது. மேலும், இறக்குமதி யாகின்றன அநேகச் கச்சாப்பொருள்களின் தேவை நெகிழ்ச்சி அளவிறந்தவை (prefectly inelostic) என்பதாகவும் இக் கோட்பாடு கருதுகிறது. எனவே, இவ்விறக்குமதிகளை விலை மாற்றமோ மாற்றுவீத மாற்றமோ பாதிக்காது என்றுகிறது. உண்மையில் எந்தப் பண்டத்தின் தேவை நெகிழ்ச்சியும் அளவிறந்தவை என்று கூறிட முடியாது.

இறுதியாகக் கூறுவதென்றால், அயல்நாட்டுச் செலுத்து நிலையை மாற்றுவீதத்தினின்றும் தனிப்படுத்திட முடியாது. அயல்நாட்டுச் செலுத்து நிலை மாற்றுவீதத்தையும் அதன் மாற்றங்களையும் சார்ந்திருக்கிறது. மாற்றுவீதத்தைச் சார்ந்திருக்கின்ற அயல் நாட்டுச் செலுத்துநிலை அதனையே நிர்ணயம் செய்திடும் என்பது இயலாது.

நிலையான மாற்றுவீதத்தின் (stable exchange rate) சிறப்புகள்

பன்னாட்டு வாணிபம் நல்ல வண்ணம் நடைபெறுவதற்கு நிலையான மாற்றுவீதம் அவசியம். அப்பொழுதுதான் இறக்குமதியாளர்கள் தாங்கள் எவ்வளவு செலுத்த வேண்டும் என்பதனைத் தெளிவாகப் புரிந்துகொள்வர். இவ்வாறு தங்களுக்கு எவ்வளவு வரவு கிட்டும் என்பதனையும் ஏற்றுமதியாளர்கள் தெளிவாக உணர்வர். பன்னாட்டு வாணிபம் நன்கு நடைபெற இத்தகைய தெளிவுடைமை அவசியம் எனலாம்.

வெளிநாடுகளில் முதலீடு செய்கின்ற காலங்களிலும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்ற காலங்களிலும் மாற்றுவீதம் நிலையானதாக இல்லாது மாறிக்கொண்டே இருக்குமானால் முதலீட்டு இயக்கமும் தடையுறும்; வளர்ச்சித் திட்டங்களும் துவளும். ஸ்டர்லிங் பிரதேசம் (Sterling area) போன்ற பிராந்திய அமைப்புகளிலே மாற்றுவீதம் ஏறுவதாகவும் இறங்குவதாகவும் இருக்கக் கூடாது. அதன் உறுப்பினர்களுக்குக் காப்புச் செலாவணியின் (Reserve Currency) மாற்றுவீத ஏற்ற இறக்கங்களிலேயே கண் இருக்கும். எனவே, இத்தகைய பிரதேச அமைப்புகளுக்கெல்லாம் நிலையான மாற்றுவீதம் இருப்பதே நல்லது. மேலும், வெளிநாட்டு வாணிப முக்கியத்துவம் உடைய நாடுகளுக்கு நிலையான மாற்றுவீதமே நல்லது. பன்னாட்டுப்பணச் சந்தையும் மூலதனச் சந்தையும் ஒழுங்கான முறையில் வளருவதற்கும் மாற்றுவீதம் நிலையானதாகவே இருக்கவேண்டும்.

நெகிழ்வுள்ள மாற்றுவீதத்தின் (Flexible exchange rate) சிறப்புகள்

நிலையான மாற்றுவீதம் நிலவுவதாலேயே பன்னாட்டு வாணிபம் ஒழுங்காக நடைபெறும் என்பது வரலாற்றுக்குப் புறம்பான வாதமாகும். மாற்றுவீதம் மாறிக்கொண்டிருக்கும் பொழுதே கூட அன்னியச் செலாவணிச் சந்தையில் செலாவணியின் மதிப்பைக் கணக்கிட முடியும். மாற்றுவீத நிர்ணயம் இயல்பான முறையில் அமைவதற்கே நெகிழ்வுள்ள மாற்றுவீதம் தேவை என்று கூறுவாரும் உளர். செலாவணிப் பிரதேச அமைப்புகளுக்கு நிலையான மாற்றுவீதம் தேவையில்லை என்ற வாதமும் தரப்படுகிறது. ஒரு நாட்டு பொருளாதாரத்தில் செலவு-தொடர்புகளில் ஏற்படும் மாற்றங்களை நிலையான மாற்றுவீதம் பிரதிபலிப்பதில்லை. அம் மாற்றங்களை நெகிழ்வுள்ள மாற்றுவீதம் நன்கு பிரதிபலிக்கும்.

இவ்வளவு சிறப்புகளைக் குறிப்பிட்டாலும் நெகிழ்வுள்ள மாற்றுவீதத்திலும் குறைகளுண்டு. மாற்று வீதம் மாறிக் கொண்டே இருப்பது அவ்வளவு நல்லதல்ல. அந்நிலை வெளி நாட்டு வாணிபத்தையும் கெடுத்து, ஒரு நாட்டின் பொருளாதார கட்டமைவினையும் சீர் குலையச் செய்திடும். மேலும், தேவை யற்ற மூலதன இயக்கத்தைத் தூண்டிடும். மாற்று வீதங்கள் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்குமேயானால் ஊக வணிகர் ஆதாயம் கருதி ரொக்க இருப்பைப் பெருமளவில் வைத்துக் கொண்டு, ஒரு செலாவணியை மற்றொரு செலாவணியாக மாற்றிக் கொண்டே இருப்பர். இதனால் ரொக்க இருப்பும் (liquidity preference) உயர்ந்துவிடும். தொடர்ந்து பணவீக்கம் பொருளாதாரத்தைப் பாதித்துக் கொண்டிருக்கும் பொழுது, மாற்றுவீதம் நெகிழ்ந்து கொண்டே இருக்குமேயானால் நாணய மதிப்பிறக்கமும் பணவீக்கமும் மாறி மாறி வரும் நச்சுச் சுழல் ஏற்பட்டுவிடும். மாற்றுவீதம் தடையில்லாமல் 'மாறிக் கொண்டே இருக்குமேயானால், வெளிநாட்டு முதலீட்டிற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

முடிவாக, நிலையான மாற்று வீதத்தையும் நெகிழ்வுள்ள மாற்றுவீதத்தையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது, நிலையான மாற்றுவீதம் நிரந்தரமாகி விடக் கூடாது என்ற கருத்தும் மாற்றுவீதம் அடிக்கடி மாறிக் கொண்டும் இருக்க கூடாது என்ற கருத்தும் சரியானவை. ஒன்றுக்கொன்று இணைந்து நிற்கக் கூடியவை என நாம் உணரவேண்டும். பன்னாட்டு வாணிபத்தின் ஒழுங்கு கெடாத வகையில், நாடுகளின் பொருளாதாரக் கட்டமைவு சீர்குலையாத வகையில், ஊக வாணிப வாய்ப்பு ஏற்படாத வகையில் மாற்றுவீத மாற்றங்களை, சூழ்நிலை களின் முக்கியத்துவத்தை ஒட்டி, சீரான பொருளாதாரச் சிந்தனையின் அடிப்படையில், அவசியத்தை முன்னிட்டு உண்டாக்கலாம். காரணம், பொருளாதார அமைப்பு நல்ல வண்ணம் இயங்குவதற்கு நிலையான மாற்றுவீதம் தேவை என்பதுதான்.

பகுதி நான்கு

பண்ணுட்டு அமைப்புகள்

15. பன்னாட்டுச் செலாவணி நிதி

(International Monetary Fund)

பரிணாம வளர்ச்சி

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பு ஏற்பட்டது. செலாவணிகள் ஒன்றுக் கொன்று பொருந்துகின்ற வகையில் மாற்றிக் கொள்வதற்கு ஏற்றமாதிரி மாற்று வீதம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற நியதியின் அடிப்படையில்தான் பன்னாட்டு வாணிபத்தின் சீரான வளர்ச்சி ஏற்பட முடியும். அப்பொழுதுதான் உலகில் பொருளாதார நிலைபேறு உருவாக வழி ஏற்படும். பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பு இக் குறிக்கோள்களுக்காக ஏற்படுத் தப்பட்டது. இவ் வமைப்பு ஏற்படுவதற்கோர் வரலாற்றுப் பின்னணி உண்டு. பரிணாம வளர்ச்சி ரீதியாக அது உருவான பாங்கினை இங்குச் சுருக்கமாக உரைப்போம்.

பொன் திட்டம் உலகில் நிலவியபோது, பன்னாட்டு வாணிப வளர்ச்சிக்கும் நாடுகளிடையே சுமுகமான பொருளா தாரத் தொடர்புகள் அமைவதற்கும் அது உதவியாகவிருந்தது.

முதல் உலகப் போரின் போது கைவிடப்பட்ட பொன் திட்டத்தை அதன் பலனை நன்கு அனுபவித்த பெரும் உலக நாடுகள், குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா போர் முடிந்த பின்னர் பொன் திட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வந்தது. வேறு நாடுகளும் பொன்னைக் கவரும் நோக்குடன் நாணய மதிப்புக் குறைப்பினைப் போட்டி உணர்வுடன் மேற் கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஜெனீவாவில் 1922-ல் கூடிய பொருளாதார மாநாடும் பொன் திட்டத்தை வரவேற்று, பணப்புழக்கம் மிகுந்துள்ள லண்டன், நியூயார்க், பாரீஸ் போன்ற இரண்டு அல்லது மூன்று நகரங்களில் உலகப் பொன்னிருப்புகளைச் சேமித்து வைத்துப் பொன் திட்டத்தை இயக்கிட யோசனை கூறியது. தங்களுக்குச் சொந்தமான பாங்கு வைப்புகளையும் (bank deposits) ரொக்க சொத்துகளையும் (liquid assets) மற்ற நாடுகள் இப் பெரும் நகரங்களில் வைத்துத் தங்களுடைய அன்னியச் செலாவணித் தேவைகளைப் பூர்த்தி

செய்துகொள்ளலாம் என்றும் அம் மாநாடு பரிந்துரைத்தது. உலக சமாதானத்தையும் பொருளாதாரச் செழிப்பையும் நெஞ்சில் நிறுத்தி, கடன் பணத்தை ஒழுங்குபடுத்திடும் திட்டத்தினையும் மாநாடு வகுத்துத் தந்தது.

நாடுகள் பொன்திட்டத்திற்குத் திரும்பின. பிரான்சு பிராங் நாணய மதிப்பிறக்கம் செய்து பொன்னினையும் அன்னியச் செலாவணி இருப்பையும் பெருக்கிக் கொண்டது. சமநிலை கெடாதிருக்க பிரான்சு தன்னுடைய உபரி இருப்புகளை வெளி நாடுகளில் முதலீடு செய்திட வேண்டும். நீண்டகால முதலீடு செய்வதற்குப் பதிலாக, இருப்புகளில் ஒரு பகுதியை மட்டும் குறுங்காலத்திற்கு வெளிநாடுகளில் பிரான்சு முதலீடு செய்தது இருப்புகளில் கணிசமான பகுதியை பிரான்சு பொன்னாக மாற்றிக்கொண்டுவிட்டது. ஆனால் அதே நேரத்தில், கடனாளி நாடுகளுக்குத் தங்களுடைய அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்பட்ட பற்றுக் குறையினை அகற்றத் தங்களிடமுள்ள பொன் இருப்புகளை முழுதும் அனுப்பியும் பயனில்லை. செல்வம் கொழிக்கும் நாடுகளுக்குக் கூடத் தங்களிடமுள்ள பொன் இருப்புகளைக் கொண்டு செலுத்துநிலையிலுள்ள பற்றுக் குறையை நீக்க முடியவில்லை.

பிரான்சும் அமெரிக்காவும் கடன் கொடுத்த நாடுகளாக இருந்தும் கூட பொன்திட்டத்தை நல்ல வண்ணம் செயல் படுத்த வேண்டிய பொறுப்புகளை நிறைவேற்றவில்லை. இறக்குமதியாகும் பொன்னையெலாம் இவ்விரு நாடுகளும் மைய பாங்கிலேயே இருத்திக் கொண்டுவிட்டன. நாடுகளிடையே பொன்னின் ஓட்டம் தடங்கலின்றி நடைபெற்றால்தான், பொன் திட்டம் நன்கு செயல்படும். பிரான்சும் அமெரிக்காவும் பொன்னைத் தங்களுடைய மைய பாங்குகளிலேயே இருத்திக் கொண்டதோடமையாமல் வாணிப ரீதியான இறக்குமதிகளைத் தடுத்திடும் வகையில் சுங்கச் சுவர்களையும் உயர்த்திவிட்டன. பொன்திட்டம் வீழ்ந்தது.

பொன்திட்டம் வீழ்ந்த பிறகு மாற்று நிலையாக்க நிதி முறை (technique of exchange stabilistion funds) மூலம் பிரான்சு, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய முப்பெரும் வல்லரசு நாடுகளும் தங்களுடைய அன்னியச் செலாவணி வீதங்களை நிலைத்து நிற்கச் செய்ய முற்பட்டன. இரண்டாம் உலகப் பெரும்போர், 1939-ல் வெடிக்கும் வரையில் இம் முறையானது நன்கு செயல்பட்டது. பொன்திட்டம் 1930-களில் உடைந்த

பிறகு, பன்னாட்டு வாணிபத்தைப் பேணிடும் பணத்திட்டம் ஒன்றும் உருவாகவில்லை. ஒவ்வொரு நாடும் தனது பற்றுக் குறையைப் போக்கிடும் வகையில் விதம் விதமான பன்னாட்டு வாணிபக் கட்டுபாட்டு முறைகளைக் கைக்கொள்ளலாயின. வாணிபத்தின் மீதும் செலுத்துகைகள் மீதும் கட்டுப்பாட்டினை விதித்திடும் முடங்கிய கணக்கு வைப்பு (blocked accounts), ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுவீத முறை (multiple exchange), நாணய மாற்று விடுவிப்பு (exchange clearing) போன்ற முறைகளை நாடுகள் பின்பற்றத் தொடங்கின.

இத்தகைய வாணிப, செலுத்துகைக் கட்டுப்பாடுகளை உலகப் போருக்குப் பின்னரும் ஒவ்வொரு நாடும் தொடர்ந்து கடைபிடித்தால், பன்னாட்டு வாணிபச் சீரமைப்பும் ஏற்படாது, நிலைத்த மாற்றுவீதமும் உருவாகாது என்ற விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. பன்னாட்டுச் செலாவணி நிருவாகத்தில் தக்க ஒத்துழைப்பு நாடுகளிடையே உருவாக வேண்டும் என உணரப்பட்டது. இந்த அடிப்படையில், பிரிட்டிஷ் திட்டமாகிய கீன்ஸ் திட்டமும் (Keynes Plan) அமெரிக்கத் திட்டமாகிய வெள்ளைத் திட்டமும் (White Plan) இணைக்கப்பெற்று, 1944-ல் பிரட்டன் உட்ஸ் (Bretton Woods) எனுமிடத்தில் 44 நாடுகள் கூடி, பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பையும் உலக பாங்கையும் உருவாக்கின. பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பில் 1970-ல் மொத்தம் 115 உறுப்பினர்-நாடுகளிருந்தன. போரால் பாதிக்கப்பட்ட நாடுகளின் செலாவணி அமைப்பு முறைகளைச் (monetary systems) செப்பனிட்டு நிலைபேறுடையனவாக ஆக்கிடவும், போரால் அழிவுற்ற ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரங்களைச் சீரமைப்புச் செய்திடவும், ஆசியா, ஆஃப்ரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள நாடுகளில் உள்ள வறுமையை விரட்டிச் செழிப்பை உண்டாக்கவும் இம் மாநாடு உறுதிபூண்டு, தக்க முடிவுகளை எடுத்தது. முதல் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய பொறுப்பு பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பிற்கும், மற்ற இரு பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வேண்டிய பொறுப்பு உலக பாங்கிற்கும் விடப்பட்டது. பன்னாட்டுச் செலாவணியின் நிலைபேறு குறித்து நாடுகளிடையே ஒத்துழைப்பு ஏற்படுத்த வேண்டிய காரியத்தில் அதற்கெனப் பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பு ஏற்படுத்தியமை அத் துறையில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றம் எனலாம்.

குறிக்கோள்கள்

பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்புச் சாசனத்தின் விதிகளில் காணக் கிடைக்கின்ற முக்கியமான குறிக்கோள் களைச் சுருக்கமாக எழுதுவோம்.

(அ) பன்னாட்டுச் செலாவணி ஒத்துழைப்பினை நாடு களிடையே ஏற்படுத்த வேண்டும். அந்த அடிப் படையில் பன்முகச் செலுத்துகைகளுக்குரிய அமைப்பினை (system of multilateral payments) ஏற்படுத்த வேண்டும்.

(ஆ) நிலையான, வேற்றுமை கற்பிக்காத, பன்முக வாணிபத்தின் சீரான வளர்ச்சியை மேற்கொண்டு, உறுப்பினர்-நாடுகளில் வேலையும் வருமானமும் உயர்ந்த மட்டத்தில் இருக்கச் செய்திட வேண்டும்.

(இ) நிலையான நாணய மாற்று வீதத்தை நிறுவ வேண்டும். மாற்றுவீதத்தின் ஏற்ற இறக்கங்கள் உலக வாணிப வளர்ச்சியைப் பாதிப்பதால், சீரான வாணிப வளர்ச்சியை நாடுகளிடையே ஏற்படுத் திடவே நிலையான மாற்று வீதம் தேவை என்று நிதியமைப்பு (fund) உணர்ந்தது. ஆனாலும் மாற்று வீதத்தில் தேவைப்படும் நேரத்தில் நெகிழ்ச்சியினை ஏற்படுத்த உறுப்பினர்-நாடுகளுக்கு உரிமை உண்டு. பொன்திட்டத்தில் நிலவிய நிலையான மாற்றுவீதக் கடுமையையும் அகற்றி, தாள்பணத் திட்டத்தில் நிலவிய நிலையற்ற மாற்றுவீதத் தாராளப் போக்கினையும் அகற்றி, இரண்டிற்கும் இடைப்பட்ட சீரான நெகிழ்ச்சியுள்ள மாற்றுவீத நிலைபேற்றினைப் (flexible exchange stability) பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பு உருவாக் கியது.

(ஈ) தங்களுடைய அயல்நாட்டுச் செலுத்துநிலை யில் ஏற்படும் தற்காலிக பற்றுக்குறையினைப் பாதிக்கப்பட்ட நாடுகள் உடனடியாகத் தீர்த்துக் கொண்டு நம்பிக்கை பெற்றிடும் வகையில் நிதிய மைப்பு (fund) அந் நாடுகளுக்குக் குறுங்கால நிதியுதவி செய்யும்.

(உ) பாதிக்கப்பட்ட நாடுகளின் அயல் நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் அடிப்படையான சமநிலையின்மையைப் போக்கவும் தற்காலிகப் பற்றுக் குறையைப் போக்கவும் மட்டுமே நிதியமைப்பு நிதியுதவி அளிக்கும்.

(ஊ) நாடுகள் போட்டி மனப்பான்மையுடன் மேற்கொள்ளும் நாணயமதிப்புக் குறைப்பு நடவடிக்கைகளையும் அன்னியச் செலாவணிக் கட்டுப்பாடுகளையும் நிதியமைப்பு தடுத்திட முனையும். ஆனாலும் மூலதனம் நாட்டைவிட்டுத் தேவையற்ற முறையில் வெளியோடுதலைத் தடுத்திடும் முயற்சிகளைப் பாதிக்கப்பட்ட நாடுகள் மேற்கொள்ளும் பொழுது நிதியமைப்பு குறுக்கிடுவதில்லை. ஆனால் நடப்பு வாணிப பேரங்களின் காரணமாக மூலதனம் வெளியேறுதலை நாடுகள் தடுத்திடக்கூடாது.

அமைப்பு முறை

ஆளுநர் குழு (Board fo Governors) ஒன்றின் மேற்பார்வையில் பன்னாட்டுச் செலாவணி நிதி இயங்குகிறது. ஆளுநர் அல்லாமல் இருபது நிர்வாக இயக்குநர்கள் (Exective Directors) இக் குழுவில் இடம் பெறுகின்றனர். பெருமளவு கோட்டாவைக் (quota) கொண்டிருக்கின்ற அமெரிக்கா, இங்கிலாந்து, ஜர்மனி, பிரான்சு, இந்தியா, இத்தாலி ஆகிய ஆறு பெரும் நாடுகள் ஒவ்வொன்றும் ஒரு நிருவாக இயக்குநரை நியமிக்கும். ஏனைய பதினான்கு இயக்குநர்களை மற்ற உறுப்பினர் நாடுகள் தேர்ந்தெடுக்கின்றன. உறுப்பினர் நாடுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கோட்டாக்களின் மொத்தமே நிதியமைப்பின் முதல் ஆகும். ஒவ்வொரு நாடும் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள 'கோட்டாவில்' 25 சததவீத்திலேயோ—தான் சேர்த்து வைத்துள்ள பொன், டாலர் இருப்புகளின் மொத்தத்தில் 10 சதவீதத்திலேயோ எது குறைந்த அளவோ அதனைப் பொன்னாக நிதியமைப்பிற்கு அளித்திடவேண்டும். ஒவ்வொரு நாடும் 'கோட்டாவின்' மீதிப் பங்கினை நிதியமைப்பிற்குத் தன் சொந்த நாணயத்திலேயே செலுத்தலாம். அதனை நிதியமைப்பு தனது சார்பில் அந்தந்த நாட்டின் மைய பாங்கில் வைத்திருக்கும். 1970-ஆம் ஆண்டின் துவக்கத்தில் நிதியமைப்பில் 115 உறுப்பினர் நாடுகள் இடம் பெற்றன; சேர்ந்த மொத்த 'கோட்டாவின்' மதிப்பு $ 21. 3 பில்லியன் (billion) ஆகும்.

ஒரு நாட்டிற்குரிய பன்னாட்டு வாணிபத்தின் மதிப்பையும் மொத்த நாட்டு உற்பத்தியையும் பொன் இருப்பையும் அன்னியச் செலாவணி இருப்பையும் வேறு சில தொடர்பான காரணிகளையும் அளந்து பார்த்துத் தெரியவருகின்ற முக்கியத் துவத்தின் அடிப்படையில் அந் நாட்டின் கோட்டாவை நிதி யமைப்பு நிர்ணயிக்கும். உறுப்பினர் நாடுகளிடைய 'கோட்டாக்களை நிதியமைப்பு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுபரிசீலனை செய்யும். பன்னாட்டு நீர்மைப் (international liquidity) பிரச்சினைக்கு, குறிப்பாக நிபந்தனையுள்ள நீர்மைப் (conditional liquidity) பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற அடிப்படையில் உறுப்பினர் நாடுகளின் கோட்டாக்களை உயர்த்திட நிதியமைப்பின் நிருவாக இயக்குநர்கள் முனைந் தனர். நிதியமைப்பின் மொத்த முதல் $ 28.9 பில்லியனாக வேண்டும் என்பது குறிக்கோளாகும். இத் தீர்மானத்தின்படி, தங்களுடைய 'கோட்டாக்'களில் ஏற்படுத்திய அதிகரிப்பினை ஏற்றுக்கொண்ட நாடுகள் 'கோட்டாக்'களில் ஏற்பட்ட அதிகரிப்புகளைச் செலுத்திட விதிக்கப்பட்ட நிபந்தனை என்ன வெனில், 1970ஆம் ஆண்டு அக்டோபர் 30–க்கு முன்னரோ அல்லது 1971–ஆம் ஆண்டு நவம்பர் 15–க்குப் பின்னரோ கோட்டாவில் அதிகரிப்பு ஏற்படக்கூடாது என்பதே. இதன் விளைவாக இந்தியாவின் 'கோட்டாவில்' ஏற்பட்ட உச்சநிலை அதிகரிப்பு 940 மில்லியன் டாலர்களாகும். பெருமளவு 'கோட்டா'வினைக் கொண்ட ஐம்பெரும் நிரந்தர உறுப்பினர் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பதனை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் ஜப்பான், கனடா முதலிய நாடு களின் 'கோட்டாக்'களில் ஏற்பட்ட அதிகரிப்புகள் முறையே 1200 மில்லியன் டாலர்கள், 1100 மில்லியன் டாலர்கள் என்று ஆகிவிட்டமையால் இந்தியாவின் 'கோட்டா' அந்த நாடுகளின் 'கோட்டாக்'களுக்குத் குறைவாக அமைந்துவிட்டது.

நியூயார்க்கின் பெடரல் ரிசர்வ் பாங்கு, இங்கிலாந்து பாங்கு, இந்திய ரிசர்வ்பாங்கு ஆகிய மூன்று மைய பாங்குகளும் பன்னாட்டுச் செலாவணி நிதியின் பொன்வைப்பு நிலையங் களாயின. உறுப்பினர் நாடுகள் நிதியமைப்பிற்குச் செலுத் திடும் பொன்கட்டிகளின் தூய்மை 0.995 அல்லது அதற்கு மேலானதாகவும் எடை 400 அவுன்சுகள் கொண்டதாகவும் இருக்க வேண்டும். பொன் நாணயங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா. நிதியமைப்பு, உறுப்பினர் நாடுகளின் நாணயங் களுடைய மாற்றுச் சமன்பாட்டு மதிப்பினை ஏற்றுக்கொண்ட பின்னரே, உறுப்பினர் நாடுகள் தங்களுக்கு ஒதுக்கப்

பட்டுள்ள 'கோட்டாக்'களின் ஒரு பகுதியைத் தங்களுடைய நாணயங்களிலேயே செலுத்தமுடியும். இவ்வாறு 'கோட்டாக்'கள் மூலம் சேர்ந்த பொன் இருப்புகளைக் கொண்டு நிதியமைப்பு தேவையான சமயங்களில் உறுப்பினர் நாடுகளின் நாணயங்களை வாங்க முன்வர நேரிடலாம். உதாரணமாக, 1957–ல் அமெரிக்க டாலர் இருப்புகள் குறைந்ததைத் தடுத்துத் தேவையான அளவிற்கு அதனை நிரப்புவதற்காக வேண்டி, நிதியமைப்பு அமெரிக்காவிற்குத் தங்கத்தை விற்று 600 மில்லியன் டாலர்களை ஈடாகப் பெற்றது. வெவ்வேறு நாணயங்களில் ஏற்படும் பற்றுக்குறையைப் போக்குவதற்காக நிதியமைப்பு அவ்வப்பொழுது குறிப்பிட்ட நாடுகளுக்குப் பொன்னை விற்று அந் நாடுகளின் நாணயங்களைப் பெறும். பன்னாட்டுச் செலாவணியமைப்பு 1961–ல் 300 மில்லியன் டாலர்கள் மதிப்புடைய தங்கத்தை விற்று அமெரிக்க டாலர்களையும், வேறு எட்டு நாணயங்களையும் பெற்றது. 1964–ல் 250 மில்லியன் டாலர்கள் மதிப்பு கொண்ட தங்கத்தை விற்று பத்து நாணயங்களில் ஏற்பட்ட பற்றுக்குறையைப் போக்கிக் கொண்டது; வட்டி தருகின்ற அமெரிக்க அரசாங்க காப்பீட்டுப் பத்திரங்களைப் (securities) பெறுவதற்கெனப் பன்னாட்டு நிதியமைப்பு 1956, 1959, 1960 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் மொத்தம் 800 மில்லியன் டாலர் மதிப்புள்ள தங்கத்தை விற்றது.

நிலையான மாற்றுவீத குறிக்கோள்

தன்னிருப்பில் வைத்துள்ள உறுப்பினர் நாடுகளின் நாணயங்களையும் பொன்னையும் கொண்டு பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பு, அன்னியச் செலாவணி மாற்றுவீத ஏற்ற இறக்கங்களைப் போக்கிடவும், பன்முக வாணிபத்தைப் பெருக்கிடவும் முனையும். நிதியமைப்பின் ஒப்பந்தத்தின்படி, ஒவ்வோர் உறுப்பினர் நாடும், தனது நாணயத்தின் சமன்பாட்டு மாற்றுமதிப்பினை 1944–ஆம் ஆண்டு, ஜூலை முதல் தேதியில் இருந்த தூய்மையும் எடையும் கொண்ட அமெரிக்க டாலரிலோ அல்லது தங்கத்திலோ நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். உறுப்பினர் நாடுகள் தங்களுடைய நாயணங்களின் சமன்பாட்டு மதிப்பினை, நிதியமைப்புக்குத் தெரிவித்துவிட்டுப் பத்து சதவீதத்திற்குள்ளாகவே ஏற்றவோ இறக்கவோ செய்திடலாம். சமன்பாட்டு மதிப்பினை அதற்கு மேலும் திருத்திட மற்ற உறுப்பினர்களின் ஒப்புதல் தேவை. சமன்பாட்டு மதிப்பினைப் பத்து சதவீதத்திற்குள் திருத்துவதாக இருந்தாலும் அதற்கு அப்பாலும் திருத்துவதாக இருந்தாலும் அயல்நாடுச் செலுத்துநிலையில்

அடிப்படைச் சமநிலையின்மை ஏற்பட்டால்தான் அவ்வாறு திருத்துவதற்கு நிதியமைப்பின் ஒப்புதல் கிட்டும். அடிப் படைச் சமநிலையின்மை குறித்து நிதியமைப்பின் சாசனத்தில் இலக்கண வரையறை ஏதுமில்லையெனினும், ஒரு நாட்டில் தொடர்ந்து பற்றுக்குறை நிலவினால் அதனையே அடிப்படைச் சமநிலையின்மை எனலாம்.

உறுப்பினர் நாடுகள் தங்களுடைய அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமநிலையின்மையைப் போக்கி, தங்களுடைய நாணயங்களின் சமன்பாட்டு மதிப்பில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டி, அவ்வப்பொழுது பன்னாட்டு நிதியாக்கம் தற்காலிகமாக அந் நாடுகளுக்குத் தேவைப்படும் அன்னியச் செலாவணியை விற்பது உண்டு. ஆனால், சில நாடுகளின் நாணயங்களின் மாற்று மதிப்பு மிகைமதிப்பாக (over valuation) இருக்கலாம். சில நாடுகளில் உற்பத்திச் செலவு மிகவும் உயர்ந்து விடுதலின் காரணமாக, அவற்றின் பொருளாதாரக் கட்டமைவில் மாற்றங்கள் ஏற்பட நேரிடலாம். இவற்றின் காரணமாக அந் நாடுகளில் அடிப்படையான சமநிலையின்மை உருவாக லாம். இத்தகைய சூழ்நிலைகளில் நிதியமைப்பு மாற்றுவீத மாற்றங்களுக்கு அனுமதி வழங்கிடும். சில வேளைகளில், உறுப்பினர் நாடுகள் உள்நாட்டில் பின்பற்றிடும் பணக் கைக் கோள் நிதியமைப்பின் நிலையான மாற்றுவீதக் கொள்கைக்குப் புறம்பாக அமைந்துவிடும். உள்நாட்டுப் பொருளாதாரத் தையும் செலாவணி நிலையையும் நிலைப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தை முன்னிட்டுச் சில வேளைகளில் சில உறுப்பினர் நாடுகள் மாற்று வீத ஏற்ற இறக்கங்களைக் கடைப்பிடிக்க நேரிடலாம். இதுபோன்ற நிகழ்வுகளில், நிலையான மாற்று வீதமே சிறந்தது என்ற கருத்தை உறுப்பினர் நாடுகளுக்கு விளக்கிச் சொல்லி, அக் கருத்துக்கு அந் நாடுகள் தாமாகவே இசைவு தரும்படிச் செய்திட நிதியமைப்பு முயற்சிக்க வேண்டும்.

சமநிலையின்மையைப் போக்கிட உறுப்பினர் நாடுகள் நிதியமைப்பிலிருந்து விலை கொடுத்து வாங்கிடும் அன்னியச் செலாவணியின் அளவிற்கோர் உச்ச எல்லை வகுத்துள்ளனர். தன்னுடைய சொந்த நாணயத்தைக் கொடுத்தே ஓர் உறுப் பினர் நாடு தனக்குத் தேவையான அன்னியச் செலாவணியை நிதியமைப்பிடமிருந்து பெறுகின்றது. தனது கோட்டாவிற்கு அதிகமாக 25 சதவீதத்திற்கு மேல் தனது நாட்டு நாணயமே

நிதியமைப்பில் சேர்ந்தால், குறிப்பிட்ட உறுப்பினர் நாட்டிட மிருந்து நிதியமைப்பு தண்டவரி (penalty) வசூலிக்கும். அதற்கு மேல் சேரும் ஒவ்வொரு 25 சதவீத அளவு கொண்ட நாணயத் திற்கும் தண்டவரி கூடுதலான வீதாச்சாரத்தில் உயர்ந்து கொண்டே போகும். இவ்வாறு ஐந்தாண்டுகளுக்குக் குறுங் கால அடிப்படையில் உறுப்பினர் நாடுகளுக்குத் தேவைப் படுகின்ற அன்னியச் செலாவணியை விற்று அந் நாடுகளின் சொந்தச் செலாவணிகளை நிதியமைப்பு பெறும். இவ்வைந் தாண்டு காலத்திற்குள்ளாகச் செலுத்து நிலையில் ஏற்பட்டுள்ள சமநிலையின்மையை உறுப்பினர் நாடுகள் போக்கிட வேண்டும். நிதியமைப்பைப் பொறுத்தவரையில், ஐந்தாண்டுகளில் தொ டர்ந்து அன்னியச் செலாவணியை விற்று, உறுப்பினர் நாட்டின் 'கோட்டாவில்' 25 சதவீதம் கொண்ட அந்த நாட்டின் நாண யத்தைப் பெற்றால், இறுதியில் அந் நாட்டின் 'கோட்டாவில்' 125 சதவீத நாணயம் சேர்ந்துவிடும். உறுப்பினர் நாடான வுடன் தொடக்கத்தில் 'கோட்டாவில்' 75 சதவீதம் தனது சொந்த நாணயத்தையே செலுத்தியுள்ளமையைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டால், 'கோட்டாவில்' 200 சதவீதம் உறுப் பினர் நாட்டின் சொந்த நாணயமாகவே நிதியமைப்பில் இருக்கும்.

அயல் நாட்டுச் செலுத்து நிலையில் உபரியைத் தொடர்ந்து பெற்றுவருகின்ற உறுப்பினர் நாடுகளின் நாண யங்களின் அளிப்பு, அன்னியச் செலாவணிச் சந்தையில் தேவைக்கும் குறைவாக அமைந்துவிடும். நிலையான மாற்று வீதம் மூலம் செலுத்து நிலையில் சமநிலையினை ஏற்படுத்திட வேண்டும் என்ற கொள்கைக்கு இந்த நிலையும் ஏற்றதன்று. எனவே, தொடர்ந்து பன்னாட்டு வாணிபத்தில் உபரியினையே பெற்றிடும் உறுப்பினர் நாடுகள் தங்களுடைய நாணயத்தின் மதிப்பினை உயர்த்திடவேண்டும் என்று பன்னாட்டு நிதியமைப்பு பரிந்துரைத்திடும். இத்தகைய நாடுகள் நாணய மதிப்பேற் றத்தின் மூலமாகவே அயல்நாட்டுச் செலுத்து நிலையில் சம நிலையினை ஏற்படுத்த முடியும்.

பொன்திட்டத்தினின்றும் வேறுபடுதல்

பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பில் சேர்ந்திடும் உறுப்பினர் நாடுகளின் நாணயங்களின் சமன்பாட்டு மதிப் பினைப் பொன்னைக் கொண்டோ அல்லது அமெரிக்க டால ரிலோ நிர்ணயிக்கப்படும் என்பதை முன்னரே கூறியுள்ளோம். நிதியமைப்பில் நாணய மாற்றுவீத நிர்ணயிப்பிற்குத் தங்கமே

ஆதாரமாக இருப்பதனால் நிதியமைப்புத் திட்டமும் பொன் திட்டமும் ஒன்றே என்ற கருத்து சில பொருளாதார நிபுணர் களுக்கு உடன்பாடாயிற்று. அயல் நாட்டுச் செலுத்து நிலையில் பற்றுக்குறையின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள உறுப்பினர் நாடுகள் நிதியமைப்பில் (Fund) எந்த நிலையில் உள்ளனரோ அதுபோலவே பொன்திட்டத்தின் கீழ் பொன்னை இழந்த நாடுகள் உள்ளன. இதுபோலவே நிதியமைப்பில் உபரி பெற்றுள்ள நாடுகளைப்போலவே பொன் திட்டத்தில் பொன் பெற்றிடும் நாடுகள் அமைந்துள்ளன.

உறுப்பினர் நாடுகள் நிதியமைப்புடன் நேரடியான பேரங்களை நிகழ்த்த முடியாது. தன்னுடைய கருவூலத்தின் (Treasury) மூலமாகவோ அல்லது மைய வங்கியின் மூலமாகவோ அல்லது நாணயமாற்று நிலையாக்க நிதியின் மூலமாகவோ தான் உறுப்பினர் நாடுகள் நிதியமைப்புடன் தொடர்பு கொள்ள முடியும். மேலும், பன்னாட்டுச் செலுத்துகைகள் எல்லாவற் றிற்கும் நிதியமைப்பு ஒரு கணக்குத் தீர்வகமாக (clearing house) இருக்கவியலாது. பன்னாட்டுச் செலுத்துகைகளின் கணக்கினை ஒழுங்குபடுத்திட அன்னியச் செலாவணிச் சந்தையுள்ளது. ஆனாலும் உறுப்பினர் நாடுகள் நிதியமைப்புடன் பேரங்கள் நடத்திப் பொன்னையும் அன்னியச் செலாவணியையும் வாங்கிடு தலையும் விற்றலையும் பொன்திட்டத்தின் கீழ் நிகழ்கின்ற பொன் இயக்கத்துடனும் குறுங்கால மூலதன இயக்கங்களுடனும் ஒப் பிட்டுப் பார்க்க முடியும்.

அயல்நாட்டுச் செலுத்துநிலையில் சமநிலையை உண்டாக் குவதைப் பொறுத்தவரையில் பொன் திட்டத்திற்கும் பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்புத் திட்டத்திற்கும் ஒற்று மையுண்டு. இந்திய அயல்நாட்டுச் செலுத்து நிலையில் டாலர் பற்றுக்குறை ஏற்பட்டு விட்டதாகக் கொள்வோம். இந்தியா விற்குத் தேவைப்படும் டாலரை இந்திய ரிசர்வ் பாங்கு நியூயார்க்கில் பெடரல் ரிசர்வ் பாங்கில் பன்னாட்டு நிதியமைப்பு வைத்துள்ள டாலர் கணக்கிலிருந்து பெற்றுக்கொள்ளும். இதன் விளைவாக, நிதியமைப்பு அமெரிக்காவில் பெடரல் ரிசர்வ் பாங்கில் வைத்துள்ள டாலர் கணக்குக் குறைந்து இந்தியாவில் ரிசர்வ் பாங்கில் உள்ள அதன் கணக்கில் ஏறும், இந்திய ரிசர்வ் பாங்கு வர்த்தக பாங்குகளுக்கு டாலரை விற்றிட, அந்த பாங் குகள் தங்களுடைய வாடிக்கைக்காரர்களாகிய இறக்குமதியாள ருக்கு விற்றிடுவர். இதனால் வர்த்தக பாங்குகளின் வைப்புகள் சுருங்கி, ரிசர்வ் பாங்கிடம் வைத்துள்ள காப்பிருப்புகளும்

(reserves) குறைந்து, இந்திய பொருளாதாரத்தில் பண ஓட்டம் சுருங்கிவிடும். மாறாக, அமெரிக்கா பொருளாதாரத்தில் நேர் மாறான விளைவுகள் ஏற்படும். இந்திய இறக்குமதியாளர்கள் அமெரிக்க ஏற்றுமதியாளருக்குச் தரவேண்டிய செலுத்துகை களைச் செலுத்துவதற்கு டாலரைப் பயன்படுத்துவார்கள். இதனால் அமெரிக்க வர்த்தக பாங்குகளில் வைப்புகளும் காப்பிருப்புகளும் உயர்ந்து, கடன் வழங்கலும் தூண்டப் பெற்று பொருளாதாரத்தில் பணப் பெருக்கம் ஏற்பட்டு, பொரு ளாதார விரிவு ஏற்படும். பொன்திட்டத்தின் பொன் இயக்கத் தின் மூலம் செலுத்து நிலை சமப்படுத்தப் பெறுவது போலவே நிதியமைப்பிலும் பாங்கு காப்பிருப்புகள் (bank reserves) இயக்கப்படுதல் மூலம் அதே செயல் நடைபெறுகிறது. ஒன்று உறுதியாகின்றது; நிதியமைப்பில் இடம் பெற்றுள்ள பொன் வெறும் பகட்டிற்காக இடம் பெறவில்லை என்பது தெளிவு. நிதியமைப்பில் இருத்தி வைக்கப்பட்டுள்ள பொன் மிகவும் முக்கியமான ரொக்கச் சொத்தாகும், மேலும் அப் பொன் உறுப்பினர் நாடுகளின நாணயங்களின் சரியான நங்கூர மாகும்.[1]

ஒற்றுமைகள் ஒருபுறமிருக்க, நிதியமைப்பிற்கும் பொன் திட்டத்திற்குமிடையில் சில வேறுபாடுகளும் உண்டு. உறுப் பினர் நாடுகளின் நாணயங்களின் சமன்பாட்டு மதிப்புகளை நிதியமைப்பு தங்கத்தின் மூலமாகவே நிர்ணயித்தாலும் கூட, பொன்திட்டத்தில் உள்ளதைப்போலச் செலாவணிப் பெருக் கத்திற்கும் சுருக்கத்திற்கும் பொன் ஆதாரமாக இல்லை. மேலும் உறுப்பினர் நாடுகளின் செலாவணி மதிப்பு, தங்கத்தைக் கொண்டு உறுதியான கடுமையுடன் நிர்ணயிக்கப்படவில்லை. பொன்திட்டத்தில் உள்ள பொன், போகும் வழியிலுள்ள தலைவன் போல் நடந்து கொள்ளும். ஆனால், நிதியமைப்பில் இடம் பெற்றுள்ள பொன், நன்றியுள்ள வேலையாளுக்கு இணை யானது. பொன், உற்பத்தியில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைப் பற்றி நிதியமைப்பு கவலைப்படத் தேவையில்லை. குறிப்பிட்ட தூய்மையும் எடையும் உள்ள பொன்னில் ஒவ்வொரு பொன் திட்ட நாட்டின் செலாவணி மதிப்பும் நிர்ணயிக்கப் படுகின்ற மையால், பொன் திட்டத்தில் தங்க உற்பத்தியின் ஏற்ற இறக் கங்கள் பெருமளவு முக்கியத்துவம் கொண்டுள்ளது. பொன் திட்டத்தில் மாற்றுவீதம் நிலையானதாக இருக்கும். ஆனால், நிதியமைப்பில் மாற்றுவீதம் நெகிழ்வு உடையதாக இருக்கும்.

[1] ஜார்ஜ் என். ஹாம் (George N. Halm): 'பணம்-பாங்கு பொரு ளாதாரம்' (The Economics of Money and Banking). ப. 532.

உறுப்பினர் நாடுகளின் அயல் நாட்டுச் செலுத்துகைகளில் சமநிலையை உண்டாக்க நிதியமைப்பு அந் நாடுகளைத் தூண்டிடும். சமநிலையை இயல்பான முறையில் உண்டாக்க இயலாத போது, அந் நாடுகளின் நாணயங்களின் சமன்பாட்டு மதிப்பை மாற்றி, மாற்று வீதத்தைப் புதிதாக நிர்ணயித்து, மீண்டும் செலுத்து நிலைகளில் சமநிலையை ஏற்படுத்த நிதியமைப்பு உதவிடும். பொன்திட்டத்திற்கு இத்தகைய பிரச்சினைகள் கிடையாது. ஏனெனில் பொன் திட்டத்தின் கீழ் பன்னாட்டுச் செலாவணி நிருவாகம் ஏற்படவில்லை. பொன்திட்டத்தின்படி உபரி நாடுகளும் பற்றுக்குறை நாடுகளும் பொன் ஏற்றுமதியையும் இறக்குமதியையும் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் பற்றுக்குறை, உபரிக்குத் தக்கவாறு மேற்கொண்டு, உள்நாட்டில் பொன் இயக்கத்தின் காரணமாக இயல்பாக ஏற்படும் பணப்பெருக்கத்தையும் பணச்சுருக்கத்தையும் தடுத்திடாதிருந்து, இவற்றைத் தொடர்ந்து விலைகளில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் மேற்கொண்டு அயல்நாட்டுச் செலுத்து நிலையில் இயல்பாகவே சமநிலை உருவாவதை ஏற்றுக்கொள்கின்றன. பொன்திட்டத்தின் வெற்றி அதற்குரிய தன்னியல்பான முறையில் அது இயங்குவதைப் பொறுத்தது எனலாம். ஆனல், பொன்திட்டத்தின் இத்தகைய தடையிலாமைக்கு நிதியமைப்பு மாருனது, பொன் திட்டத்தில் பொன்னை இழந்திடும் நாடுகள் பணவாட்டத்தை (deflation) ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். ஆனல், பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பில் பற்றுக்குறையில் தத்தளித்திடும் உறுப்பினர் நாடுகள் பணவாட்டத்தை மேற்கொள்ள வேண்டுவதில்லை. உண்மையில் பொன்திட்டத்தின் இக் குறைபாட்டினை நீக்கவே நிதியமைப்பு ஏற்பட்டது எனலாம். ஜான் மேனர்டு கீன்ஸ் (John Meynard Keynes) கூட நிதியமைப்பு பொன்திட்டத்தினின்றும் மாறுபட்டது என்றே குறிப்பிட்டுள்ளார்.

பலவகை உதவிகள்

தங்களுடைய அயல்நாட்டுச் செலுத்து நிலைகளில் ஏற்படும் பற்றுக்குறையைப் போக்கிட சாதாரணமாக நாடுகள் தாங்கள் சேமித்து வைத்துள்ள பொன் காப்பிருப்புகளைப் பயன்படுத்தும். அல்லது, ஏற்கனவே வெளிநாடுகளில் வாணிபத்தின்மூலம் ஈட்டிய அன்னியச் செலாவணி சேமிப்பைப் பயன்படுத்தும். இலண்டனில் சேமிக்கப் பெற்றிருந்த ஸ்டர்லிங் இருப்புகளை இந்தியா பயன்படுத்திக் கொண்டமை

யாவரும் அறிந்ததே. வேறு ஒரு முறையும் உண்டு; குறுங்கால வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று, அவற்றை பயன்படுத்திப் பற்றுக்குறையை அகற்றும் வழி அது.

பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பு ஏற்பட்ட பின்னர், பன்னாட்டு (ரொக்க) நீர்மையை (international liquidity) நிபந்தனையின் பேரிலோ நிபந்தனை இல்லாமலோ அளித்திடும் மிகப் பெரும் பன்னாட்டு அமைப்பே அந் நிதியமைப்புத்தான். முன்னரே குறிப்பிட்டுள்ளது போல, ஒவ்வோர் உறுப்பினர் நாடும் தனது 'கோட்டா'வில் 24 சதவீத அளவே நிதியமைப் பிடமிருந்து கடன் பெற முடியும்; கோட்டாவில் 125 சதவீதத் திற்குமேல் கடன் பெறமுடியாது.

இச் செலாவணி நிதியமைப்பு தொழில்நுட்ப உதவி யினையும் (technical assistance) உறுப்பினர் நாடுகளுக்கு வழங்குகிறது. பன்னாட்டுச் செலாவணி நிதியின் வேலைக்குத் தொடர்பான துறைகளிலெல்லாம் உறுப்பினர் நாடுகள் கோரிடும் நுட்பவினை முறைசார்ந்த உதவிகளை வழங்கிடத் தனது அலுவலகக் குழுக்களை அவ்வப்போது நிதியமைப்பு அனுப்பி வைத்திடும். அலுவலக் குழுக்கள் நிபுணர்களைக் கொண்ட குழுக்களாகவிருக்கும். 1969, ஏப்ரலுடன் முடிகின்ற நிதியாண்டில் பதினைந்து நாடுகளுக்கு ஓராண்டிற்கு மேலாகவே பணியாற்றிடத் தனது அலுவலக உறுப்பினர்களை நிதியமைப்பு அனுப்பிவைத்தது. நிதிப் பிரச்சினைகளையும் மைய பாங்கு பிரச் சினைகளையும் நல்ல வண்ணம் ஆராய்ந்து யோசனைகள் வழங்கிட உறுப்பினர் நாடுகளுக்கு நிதியமைப்பு தனது நிபுணர்களை அனுப்பி வைத்தது. மைய பாங்கு பணித்திட் டத்தின் கீழ் நிதியாண்டு 1969-ல் 39 நாடுகளுக்கு நிபுணர்களை நிதியமைப்பு அனுப்பி வைத்தது; ஆலோசனைக் குழுக்களை அவ்வாண்டில் 33 நாடுகளுக்கு அனுப்பியுள்ளது. மைய பாங்கு பணித் திட்டத்தைப் (Central Banking Service Programme) போலவே, 1968–69-ஆம் ஆண்டிலேயே புள்ளிவிவரக் கழகம் (Bureau of Statistics) ஒன்று ஏற்படுத்தப்பட்டு, புள்ளியல் துறையில் தேவைப்படும் நிபுணத்துவ உதவியை நான்கு அலுவலகக் குழுக்களின்மூலம் நிதியமைப்பு உறுப்பினர் நாடு களுக்கு வழங்கியது. பதினொரு மத்திய கிழக்கு, ஆப்பிரிக்க நாடுகளுக்கென ஒரு மாத காலத்திற்கு நிதியமைப்பின் அன்னியச் செலாவணிப் பிரிவைச் சார்ந்த நுட்பவினைஞர்களை (technicians) நிதியமைப்பு அனுப்பி வைத்தது. நிதியமைப்பு பல்வேறு துறைகளுக்கும் பயன்படக் கூடிய நிபுணத்துவம்

நிறைந்த வெளியீடுகளை அச்சிட்டு உறுப்பினர் நாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றது. மேலும் நிதியமைப்பின் சார்பில் நிதிசார்ந்த கைக்கோள், பகுத்தாய்வு முதலானவற்றைக் கற்பித்திடும் நிலையம் ஒன்றும் உள்ளது.

பலவகைப் பேரங்களும் நிதியமைப்பில் இடம்பெறுகின்றன. கடன் வாங்கிடப் பொது ஏற்பாடுகள் அமைப்பின் (General Arrangements to Borrow-GAB) கீழ்வரும் பேரங்கள் சில. இதுபோலவே, ஏற்றுமதி ஏற்ற இறக்கங்களுக்கு ஈடுசெய் நிதியாக்கத்தின் (Compensatory Fiancing of Exports Fluctuations) கீழ்வரும் பேரங்கள் சில. துவக்கத்திலிருந்து 1969, ஏப்ரல் முடிய 68 நாடுகள் நிதியமைப்பிடமிருந்து அன்னியச் செலாவணிகளை வாங்கியுள்ளன. நான்கு நாடுகள் அன்னியச் செலாவணிகளை வாங்கிடாது உறுதி. மொழிச்சார்பு ஒப்பந்தங்களைச் (standly agreements) செய்துகொண்டுள்ளன அன்னியச் செலாவணி மொத்த விற்பனை 17.4 பில்லியன் டாலர் மதிப்பாகும். உறுப்பினர் நாடுகள் திரும்பவும் நிதியமைப்பிடமிருந்து வாங்கிய தொகை 9.2 பில்லியன் டாலர் மதிப்பாகும். இவை குறிப்பிடத்தக்க ஒரு சில புள்ளி விவரங்களே.

மதிப்பீடு

பன்னாட்டு ஒத்துழைப்பின் அடிப்படையில் அதனை நம்பி ஆரம்பிக்கப்படும் பன்னாட்டு அமைப்புகள் அனைத்திலுமே குறைகள் உண்டு என்றாலும், நிதியமைப்பு உறுப்பினர் நாடுகளின் பிரச்சினைகளை ஓரளவு தீர்த்துவைத்திருக்கிறது எனலாம். உறுப்பினர் நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமநிலையின்மையைப் போக்கிட நிதியமைப்பு உதவியுள்ளது. நிதிசார்ந்த, பணம் சார்ந்த திட்டங்கள், கடனுக்குண்டான வட்டியினை அடைத்தல், அயல்நாட்டுச் செலுத்து நிலை, செலாவணி மதிப்பிறக்கம் போன்ற பிரச்சினைகள் உறுப்பினர் நாடுகளுக்கிருந்தன. இப் பிரச்சினைகளுக்கெலாம் தீர்வு காண்பதற்கும், நிபுணத்துவ ரீதியான ஆலோசனைகள் வழங்குதற்கும் நிதியமைப்பு முனைந்து கணிசமான அளவிற்கு வெற்றி பெற்றுள்ளது. உறுப்பினர் நாடுகளிடையே சிறந்த முறையில் செலாவணியைப் பயன்படுத்துவதில் நிதானமும் கட்டுபாடும் தேவை என்பதை வலியுறுத்தி அதற்கென தனியாக ஒழுங்கு முறையை வகுத்து வென்ற பெருமை நிதியமைப்பிற்கு உண்டு என்று முன்னாள் நிருவாக இயக்குநர் பெர்ஜாகப்சன் (Per Jacobsson) குறிப்பிடுகிறார்.

பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பின் முக்கிய குறைபாடு என்னவென்றால் உறுப்பினர் நாடுகள் மீது வலுக்கட்டாயமாக விதிமுறைகளைத் திணித்திட முடியாது. உறுப்பினர் நாடுகளின் ஒத்துழைப்பு எந்த அளவிற்கு உண்டோ அந்த அளவிற்கே நிதியமைப்பு திறமையுடன் செயல்பட முடியும் தேசிய உணர்வு சர்வதேச உணர்வுக்குள் எந்த அளவிற்கு அடங்கியுள்ளதோ அதனைப் பொறுத்துத்தான் நிதியமைப்பின் செயல் நிறைவேற்றம் அமையும். செலாவணியின் சமன்பாட்டு மதிப்பினை மாற்றுதல் சம்பந்தமான நிதியமைப்பின் விதிமுறைகளைச் சில நாடுகள் காற்றில் பறக்கவிட்டு விட்டன. அளிப்புக்குறைவாக உள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளும் நிதியமைப்பு விதிமுறைகளை மதிக்கவில்லை.

நிதியமைப்பின் சில விதிமுறைகளிலும் குறைகளிருந்தன, உறுப்பினர் நாடு பின்பற்றும் உள்நாட்டு அரசியல், சமூகப் பொருளாதார கொள்கைகளின் காரணமாகப் பணவீக்க மேற்பட்டு, அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பற்றுக்குறை ஏற்பட்டுவிடலாம். அதனைச் சரிசெய்திட பத்து சதவீதத்திற்கு மேல்கூட நாணய மதிப்பிறக்கம் செய்திடும் கட்டாயநிலைக்கு நிதியமைப்பு ஒப்புதல் அளித்திட நேரிடுகிறது. குறிப்பிட்ட உறுப்பினர் நாட்டின் உள்விவகாரத்தில் தலையிட முடியாமையின் காரணத்தினால் பணவீக்கத்தைத் தடுத்து நிறுத்திடும் ஆலோசனையை நிதியமைப்பு வழங்கிட முடியாது.

நாடுகளிடையே நாணயமாற்று கட்டுப்பாடுகள் குறைந்திருப்பதும் இருமுக செலுத்துகைளின் எண்ணிக்கை குறைந்திருப்பதும் நிதியமைப்பின் சாதனைகளின் விளைவுகளே எனலாம். ஆனால், பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சி சார்ந்த பிரச்சினைகளெலாம் தீர்ந்த பின்னரே பன்முக வாணிபமும் செலுத்துகைகளும் (multilateral trade and payments) உலக வாணிப அரங்கில் பெருகிப் படர்ந்து தழைத்து வளர முடியும்.

கூட்டிக் கழித்துப் பார்க்கும்பொழுது பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பின் சாதனை திருப்திகரமானதே. நிதியமைப்பின் உறுப்பினர் நாடுகளின் எண்ணிக்கை ஏறிக் கொண்டிருக்கிறது. ஆப்பிரிக்க நாடுகளும் ஆசிய நாடுகளும் இந்த நிதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து உறுப்பினர்களாவதில் ஆர்வம் காட்டுகின்றன. பின்தங்கிய ஏழை நாடுகளின் எண்ணிக்கை நிதியமைப்பில் ஏறுவது நிதிக்கு ஒரு சவாலே எனலாம். ஏனெனில், நிதியமைப்பின் முதல் குறைவாகவே உள்ளது. பன்னாட்டு நீர்மைப் பிரச்சினை மேலும் சிக்கலுறும்,

நிதியமைப்பில் ஆப்பிரிக்கத்துறை (African Department) ஒன்று ஏற்பட்டுள்ளது. மைய பாங்கு பிரச்சினைகளையும் நிதிசார்ந்த பிரச்சினைகளையும் ஆய்ந்திடும் நிலையங்களையும் ஏற்படுத்தி வளர்க்கின்றது. தாள் பொன் (paper gold) என்று கூறப்படு கின்ற தனித்த எடுப்பு உரிமைகள் (Special Drawing Right) திட்டத்தினைச் செயல்படுத்தி உறுப்பினர் நாடுகளுக்கு எழுகின்ற நீர்மைப் பிரச்சினையைத் தீர்த்திட நிதியமைப்பு முயற்சிக்கிறது.

இந்தியாவின் பங்கு

பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பில் இந்தியநாடு ஒரு நிரந்தர உறுப்பினர் மட்டுமன்று; ஸ்தாபகர்–அங்கத்தினரு மாகும். இயக்குநர் குழுவில் நிரந்தர பிரதிநிதியுமாகும். பெரு மளவு கோட்டாக்களைக் கொண்ட ஐந்து பெரும் நாடுகளில் ஒன்று இந்தியா. கடன் வழங்கிடுவதற்கு வகுத்துள்ள விதி களைத் தளர்த்திட வேண்டும் என்றும் வட்டிவீதத்தை இன்னும் குறைத்திட வேண்டுமென்றும் இந்தியா வளர்ச்சி குறைந்த நாடுகளின் சார்பில் கடுமையாக நிதியமைப்புடன் போரிட்டது.

நிதியமைப்பினைத் துவக்கியபோது இந்திய ரூபாய் நாணயத்தின் சமன்பாட்டு மதிப்பு தூய்மையான பொன்னில் 0.268601 கிராம் எடையாகும்; அல்லது 30.2250 செண்டுகள் ஆகும். 1946–ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ரூபாயின் சமன் மதிப்பு இது. ஆனல் 1949–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ரூபாயின் மதிப்பு தூய பொன்னில் 0.186621 கிராம் ஆகவும் அல்லது 21 அமெரிக்க செண்டாகவும் வீழ்ந்தது. இரண்டாவது முறையாக ரூபாயின் மதிப்பிறக்கம் நிகழ்ந்த போது (1966–ஆம் ஆண்டு ஜூன் திங்களில்) ரூபாயின் மதிப்பு 0.118489 கிராமுக்கும் அல்லது 13.33 செண்டிற்கும் வீழ்ந்தது.

அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்பட்ட பற்றுக் குறையை அகற்ற இந்தியா நிதியிலிருந்து 1948, 1949–ஆம் ஆண்டுகளில் 100 மில்லியன் டாலர்களைப் பெற்றது. 1956–'57-ல் வாங்கிடும் பொறுப்புகள் அனைத்தும் விலக்கப்பட்டன. 1961 ஜூலையில் இந்தியா 110 மில்லியன் அமெரிக்க டாலர் களையும், 65 மில்லியன் டாலர் மதிப்புள்ள மேற்கு ஜெர்மனி மார்க்குகளையும், 45 மில்லியன் டாலர் மதிப்புள்ள பிரெஞ்சு பிராங்குகளையும், 15 மில்லியன் டாலர் மதிப்புள்ள இத்தாலிய லிராவையும், 5 மில்லியன் மதிப்புள்ள ஜப்பானிய யென் நாணயத்தையும் பெற்றது. இந்தியாவிற்கு நிதி தாராளமான

உணர்வுடன் உறுதிமொழி ஒப்பந்த அடிப்படையில் நிறைய நிதியுதவியும் வழங்கியுள்ளது. அன்னியச் செலாவணி நெருக்கடி தீர்வுக்காகவும் நிதியுதவி பெற்றுள்ளது. ஏற்றுமதி ஏற்ற இறக்கங்களுக்கு ஈடுசெய்திடும் நிதியாக்க முறையின் அடிப்படையிலும் நிதியுதவி இந்தியா பெற்றுள்ளது. பொருளா தார வளர்ச்சிக்காகச் சிறப்பு எடுப்பு உரிமைகளின் (Special Drawing Rights-SDR) மூலமாகவும் இந்தியா 126 மில்லியன் டாலர்களைப் பெறுவதற்கு அனுமதி பெற்றுள்து. 1970-ஆம் ஆண்டு ஜூலை வரையில் 41.75 மில்லியன் டாலர்களைக் கொண்ட எஸ். டி. ஆர் என்றிடும் சிறப்பு எடுப்பு உரிமைகளைப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. பொதுவாக, பன்னாட்டுச் செலாவணி நிதியானது இந்தியப் பிரச்சினைகளை அனுதாபத் துடன் நோக்கி, தாராள உணர்வுடன் நிதியுதவியை அளித்து வருகிறது எனலாம்.

16. உலக பாங்கு
(World Bank)

தோற்றம்

மறுசீரமைப்பு-வளர்ச்சிக்கான பன்னாட்டுப் பாங்கு (International Bank for Reconstruction and Development) என்பதே யாவரும் நன்கு தெரிந்து வைத்திருக்கிற உலக பாங்கு ஆகும். வழக்கில் உலக பாங்கு என்ற தொடரே செல்வாக்குடன் நிற்கின்றது. பிரட்டன் உட்ஸ் மாநாட்டில் எடுத்த முடிவுகளின் விளைவே உலக பாங்கு என்று சென்ற அத்தியாயத்தில் படித்தோம்.

இரண்டாம் உலகப் போரில் பன்னாட்டுப் பன்முக வாணிபம் பெரிதும் சீரழிந்துவிட்டது. பெருமளவு உயிர்ச் சேதமும் சொத்து சேதமும் ஏற்பட்டு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் நாசமடைந்துவிட்டது. இங்கிலாந்தின் பொருளாதாரம் உடைந்துவிட்டது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார புனருத்தாரண வேலைகளைத் துரிதமாக நிறைவேற்றிட உலக பாங்கு 1944-ஆம் ஆண்டு டிசம்பர் 25-ஆம் நாள் தோன்றியது. இதுபோலவே யுத்தத்திற்குப் பின்னர் ஒருண்மை தெற்றென வெளிவந்தது. பொருளாதார ரீதியாக முன்னேறிய, வளர்ச்சியுற்ற மேற்கத்திய நாடுகளுக்கும் வளர்ச்சிகுன்றி பின்தங்கிவிட்ட ஆப்பிரிக்க, ஆசிய, லத்தீன், அமெரிக்க நாடுகளுக்குமிடையில் வருமானத்திலும் செல்வத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் பெருத்த பிளவும் ஏற்றத் தாழ்வும் நிலவுகின்றன என்ற உண்மையும், நாடுகளிடையே இத்தகைய ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் உலக சமாதானம் என்பது வெறும் கானல் நீராகிவிடும் என்ற உண்மையும் தெளிவாகிவிட்டன. பின் தங்கிய நாடுகளின் வளர்ச்சியையும் உலக பாங்கு கவனிக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கியது. உலக பாங்கின் நீண்ட பெயரிலேயே அதன் நிறைவான இலட்சியங்கள் பொறிக்கப்பட்டுவிட்டன. போரால் சீர்குலைந்த ஐரோப்பிய

நாடுகளின் மறுசீரமைப்பும் பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியும் உலக பாங்கின் இரட்டை இலட்சிங்களாயின.

குறிக்கோள்கள்

மேலே குறிப்பிட்டுள்ளது போல ஐரோப்பிய நாடுகளின் புனருத்தாரணமும் பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சியுமே உலக பாங்கின் முக்கிய, பொதுவான குறிக்கோள்கள் ஆகும். இக் குறிக்கோள்களை விளக்கிடும் வகையில் ஒப்பந்த விதிகளில் முதல் விதி அமைந்துள்ளது.

(அ) ஆக்கபூர்வமான காரியங்களுக்கு மூலதனத்தை முதலீடு செய்திட வாய்பளிப்பதன் மூலமாக உறுப்பினர் அரசுகள் தங்களுடைய நாடுகளில் மேற்கொள்ளும் வளர்ச்சித் திட்டத்திற்கும் புனருத்தாரணச் சீரமைப்பு வேலைகளுக்கும் உதவிட வேண்டும்.

(ஆ) தனியார் துறை முதலீட்டாளர்கள் மேற்கொள்ளும் முதலீடுகளுக்குப் பாதுகாப்பு அளித்தோ அல்லது அவற்றில் பங்குபெற்றோ வெளிநாட்டுத் தனியார் துறை முதலீட்டினை வளர்த்திட உலக பாங்கு முயற்சிக்க வேண்டும்.

(இ) தனியார் மூலதனம் முன்வராத இடங்களில் உலக பாங்கு தனது இருப்புகளிலிருந்து ஆக்கப்பூர்வ திட்டங்களுக்குக் கடன் வழங்கிட வேண்டும். சில வேளைகளில் கடன் வாங்கிய நிதியிலிருந்து கடனளித்திடவும் வேண்டும்.

(ஈ) உறுப்பினர்களின் ஆக்கபூர்வமான வளன்களை வளர்த்திட பன்னாட்டு முதலீட்டினை மேற்கொள்ள உலக பாங்கு தூண்ட வேண்டும். இதன்மூலம் அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சமநிலைப்படுத்தவும் பன்னாட்டு வாணிபத்தை நீண்டகால நோக்குடன் வளர்த்திடவும் உலக பாங்கு வழிவகுத்திட வேண்டும்.

உறுப்பினர் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கே பாங்கு கடன்கள் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்றன. உலக பாங்கு கடன்களில் மூன்றில் ஒரு பங்கு மின்சார

வளர்ச்சிக்கும், மூன்றில் இரண்டாவது பங்கு போக்குவரத்து வசதிகளைப் பெருக்கவும். மிஞ்சியுள்ள மூன்றாவது பங்கு விவசாயம், தொழில், கல்வி வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தப் படுகின்றன.

அமைப்பு

பாங்கு சாசனத்தை ஏற்றுக் கொண்ட நாடுகளனைத்தும் உறுப்பினர்களாகலாம். எந்த நேரத்திலும் உறுப்பினர் பதவி யிலிருந்தும் விலகலாம். உறுப்பினர் நாடுகள் தங்கள் பொறுப்புகளிலிருந்து நழுவினால் பாங்கு உறுப்பினர் பதவி யைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கலாம். உறுப்பினர் பதவி யிலிருந்து விலகுகின்ற அரசுகள், பாங்கு நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற நஷ்டங்களில் தங்களுக்குரிய பங்கினைப் பாங்கிற்குச் செலுத்திடவேண்டும்.

ஒரு தலைவரையும் நிருவாக இயக்குநர்களையும் ஆளுநர் குழுவையும் மற்ற அலுவலர்களையும் கொண்டதே உலகபாங்கு அமைப்பாகும். பாங்கின் அதிகாரங்கள் முழுதும் ஆளுநர் குழுவிடம் இருக்கும். அக் குழுவில் நிதியமைச்சரான ஒருவர் ஆளுநராகவும், அவருக்கு மாற்றாக ஒரு மைய பாங்கின் ஆளுநர் ஒருவர் இருப்பார். ஐந்து ஆண்டுகளுக்கு அவர்கள் நியமனம் இருக்கும். முதன்மை ஆளுநர் இல்லாதபோது மட்டுமே மாற்று ஆளுநர் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியும். தனது அரசு வழங்கிடும் நிதி குறித்த பிரச்சினை எழும்போது ஒவ்வோர் ஆளுநரும் வாக்குரிமையைப் பிரயோகிக்கலாம். சிறிய உறுப் பினர் நாடுகளுக்குக் கூட குறைந்தபட்ச எண்ணிக்கையுள்ள வாக்குரிமையுண்டு, பெரிய பங்குதாரர்களுடைய வாக் குரிமைகளின் எண்ணிக்கை அதிகம். அமெரிக்கா பெரிய பங்குதாரர். அதனுடைய பங்கு மதிப்புமட்டும் 6,350 மில்லியன் டாலர்களாகும். மொத்தம் பத்தில் மூன்று பங்கு வாக்குரிமைகள் ஐக்கிய அமெரிக்காவிற்குச் சொந்தம், அடுத்து, 2,600 டாலர்கள் மதிப்புள்ள பங்குகளைக் கொண்ட இங்கிலாந்திற்குப் பத்தில் ஒரு பங்கிற்கு மேல் வாக்குரிமைகள் உள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மன், கனடா, இந்தியா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்தால் மற்ற நூறு உறுப்பினர் நாடுகளின் வாக்குரிமைகளை விட அதிகம் பெற்று பெரும்பான்மை பலம் பெறுகின்றன. ஆளுநர்குழு ஆண்டிற்கு ஒரு முறை கூடிட வேண்டும்.

பாங்கின் மொத்த உறுப்பினர் நாடுகள் 1970 மார்ச் முடிய 113 ஆகும். பாங்கின் நிருவாக இயக்குநர்கள் 20 பேர்.

ஐம்பெரும் பங்குதாரர்களாகிய ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, இந்தியா ஆகிய நாடுகள் ஐந்து இயக்குநர்களை நியமிக்கலாம். மீதமுள்ள பதினைந்து பேரை மற்ற உறுப்பினர் நாடுகள் தேர்ந்தெடுக்கும். தனது அரசாங்கத்தின் மொத்த பங்குகளுக்குத் தக்காற் போல ஒவ்வோர் இயக்குநருக்கும் வாக்குரிமையின் அளவு அமையும். மாதமொருமுறை இயக்குநர்கள் கூடுவர். இயக்குநர்கள் தலைவரைத் தேர்ந்தெடுப்பர். பாங்கின் பல்வேறு துறைகளும் தலைவருக்கு உதவியாகப் பணியாற்றுவர்.

மூலதனம்

உலக பாங்கின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் (authorised capital) துவக்கத்தில் 10,000 மில்லியன் டாலர்களாகும். ஒவ்வொன்றும் நூறுயிரம் டாலர் மதிப்புகொண்ட நூறுயிரம் பங்குகளாக அம் மூலதனம் பிரிக்கப்பட்டது. உறுப்பினர் நாடுகள் பாங்கைவிட்டு விலகும்போது பங்குகளைத் திரும்பவும் பாங்கிடமே தந்திட வேண்டும். ஒவ்வோர் உறுப்பினர் நாடும் பாங்கிற்குச் செலுத்த வேண்டிய மூலதனம் மூன்று வகைப்படும். அந் நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மூலதனத் தொகையில் இரண்டு சதவீதம் பொன்னுகவோ டாலராகவோ இருக்க வேண்டும். இத் தொகையினைக் கடன் வழங்குதலில் பாங்கு எவ்விதத் தடையுமின்றி பயன்படுத்தலாம். இது முதல் வகை. இரண்டாவதாக, ஒதுக்கப்பட்ட தொகையில் 18 சதவீத அளவினைச் சொந்த நாட்டுச் செலாவணியிலேயே பாங்கிற்குச் செலத்தலாம். பாங்கு இத் தொகையினைக் கடன் வழங்கப் பயன்படுத்தும்பொழுது குறிப்பிட்ட நாட்டின் இணக்கத்தைப் பெறுதல் வேண்டும். மூன்ருவதாக, மீதமுள்ள 80 சதவீதத் தொகையைக் கடன் வழங்கலுக்குப் பயன்படுத்த முடியாது. பாங்கின் பொறுப்புகளை நிறைவேற்ற அதற்குத் தேவைப்பட்ட நேரத்தில் செலுத்திடவேண்டும். பாங்கிற்குச் செலுத்தப்பெற்ற மூலதனத்திலிருந்து 20 சதவீத அளவு கடன் வழங்கிடப் பயன்படுத்தப்படலாம் என்பது தெளிவு. மேலும் பன்னாட்டு முதலீட்டிற்குத் தனியார் மூலதனத்தை இயக்கிவிடும் தெம்பினைப் பாங்கிற்கு மீதமுள்ள 80 சதவீத உத்தரவாத வளன்கள் (guarantee resources) ஊட்டும்.

பாங்கு மூலதனத்தை மேலும் உயர்த்திட 1958-ல் நிருவாக இயக்குநர்கள் பரிந்துரை வழங்கினர்கள். இதனைத் தொடர்ந்து 1969 ஜூன் 30-ல் பாங்கின் செலுத்தப்பட்ட மூலதனம் 23,036.4 மில்லியன் டாலர்களாக உயர்ந்தது, பொரு

ளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் கடன்நிதி அளித்திடும் வல்லமையைப் பெருக்கிக் கொள்ளவேண்டி பாங்கு தனது மூலதன வளன்களை உயர்த்திக் கொண்டது. பாங்கின் செலுத் தப்பட்ட மூலதனம் (paid-up capital) உயர்த்தப்பட்டது பின் தங்கிய நாடுகளுக்கு நன்மை பயக்கவல்லதே. கடன் வழங்கிடும் பொறுப்பினைப் பாங்கு இன்னும் தெம்புடன் நிறைவேற்ற முடியும்.

நடவடிக்கைகள்

பாங்கு வழங்கிடும் கடன்கள் உற்பத்தியைத் தூண்டு கின்ற முறையிலும் தனியார் முதலீட்டினைப் பெருக்கிடும் முறை யிலும் அமைதல் வேண்டும். சுருங்கக் கூறின் பாங்கு கடன்கள் ஆக்கபூர்வமானவைகளாக இருக்கவேண்டும். சிறந்த நிதி சார்புத் திட்டங்கள், தேவையற்ற தடைகளை நீக்குதல், உற்பத்தி திட்டங்களை வட்டார ரீதியாக இணைத்தல், ஆகிய இன்னபிற துறைகளில் உலக பாங்கு உறுப்பினர் நாடுகளுக்கு உதவலாம். பல்வேறு நாடுகளில் உற்பத்தியைப் பெருக்குகின்ற நோக்கத் துடனும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துகின்ற நோக்கத்துடனும் புதிய, புதிய முதலீட்டு வாய்ப்புகளை உண்டாக்குகின்ற நோக்கத்துடனுமே பாங்கு மூலதனக் கடன்களை வழங்குகிறது. கடன் வழங்கிடும் அளவை விட அதன் பலாபலன்களையே பாங்கு முக்கியமாகக் கருதுகிறது. அரசியல் நோக்கத்துடனோ, வர்த்தக வசதிக்காகவோ பாங்கு கடன் தருவதில்லை.

தனது நிதியிலிருந்து பாங்கு நேரடியாகவே கடன் வழங் கலாம்; அல்லது சந்தையில் திரட்டிய நிதியிலிருந்து வழங்கலாம்; அல்லது தனியார் துறை முதலீட்டாளர்கள் அளித்திடும் கடன் களுக்கு உத்தரவாதம் அளித்திடும் முறையைப் பாங்கு கடை பிடிக்கலாம். பாங்கினல் மொத்தம் வழங்கப்படுகின்ற அல்லது உத்தரவாதம் தரப்படுகின்ற கடன் அளவு, செலுத்தப்பட்ட மூலதனம், வளன்கள், உபரிகள் ஆகியவற்றின் மொத்த அளவில் 100 சதவீதத்தை மிஞ்சிவிடக்கூடாது என்பது விதி.

கடன் உத்தரவாதம் அளிப்பதற்கு முன்னரோ அல்லது வழங்குவதற்கு முன்னரோ பாங்கு சில பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும். எந்தத் திட்டத்திற்கு பாங்கு கடன் வழங்க இருக்கிறதோ அந்தத் திட்டத்தை நிபுணர்குழு ஒன்று நன்கு பரிசீலிக்க வேண்டும். கடன் வாங்கிடும் நாடு அதனைத் திரும்ப அடைத்திடும் நியாயமான வசதி பெற்றுள்ளதா என்ப தனையும் ஆராய வேண்டும். ஆக்கபூர்வமான காரியங்களுக்கே

பாங்கு கடன் வழங்கிடலாம். மறு சீரமைப்பிற்கும் வளர்ச்சிக்கும் தேவைப்படுகின்ற திட்டங்களின் அல்லது ஏதேனும் தனித்த சிறப்புத் திட்டத்தின் அன்னியச் செலாவணித் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் மட்டுமே பாங்கு கடன் அளித்திடலாம். சில முக்கியமான, விதிவிலக்கு போன்ற சூழ்நிலைகளில் இவ் விதிக்குப் புறம்பான முறையில் பாங்கு கடன் தந்திடலாம்.

சாதாரணமாக, பாங்கு நீண்ட காலக் கடன்களையும் அதற்குக் குறைவான காலக் கடன்களையும் வழங்கிடும். எந்தத் திட்டங்களுக்குப் பாங்கு கடன் வழங்குகிறதோ அத் திட்டங்களைப்பற்றிய அறிக்கைகளை அவ்வப்பொழுது கடன் வாங்கிய நாடுகளிடமிருந்தே பாங்கு பெறும். தனது நிபுணத்துவ பிரதிநிதிகளைத் திட்டங்களைப் பார்வையிடவும் அனுப்பிவைக்கும். பணச் சந்தையில் குறிப்பிட்ட காலத்திலேயே கடன் பணத்தின் வட்டி எவ்வளவோ அதனையே பாங்கும் விதிக்கும். வட்டிவீதத்தை விதிப்பதில் பாங்கு வேற்றுமை காட்டுவதில்லை. வட்டிவீதத்திற்கு மேல் எல்லாக் கடன் தொகைகளின் மீதும் இழப்புகளுக்கு எதிராகக் காப்புநிதி ஒன்றினை உருவாக்க ஒரு சதவீதமும் நிருவாகச் செலவுகளை ஈடுசெய்திட அரை சதவீதமும் பாங்கு விதிக்கும்.

விவசாயம், மின்சாரம், போக்குவரத்து, தொழில்துறை, கல்வி முதலான துறைகளைச் சார்ந்த சிறப்பு வளர்ச்சித் திட்டங்களுக்குப் பாங்கு மூலதனக் கடன் வழங்கியுள்ளது. 1969ஆம் ஆண்டு டிசம்பர் 31 முடிய, 85 நாடுகளுக்கு 1,100 திட்டங்களை நிறைவேற்ற 13,136.65 மில்லியன் டாலர் பெறுமானமுள்ள 658 கடன்களைப் பாங்கு வழங்கியுள்ளது. மேலும், 100 மில்லியன் டாலர்கள் கொண்ட இரண்டு கடன்களைப் பன்னாட்டு நிதிக் கழகத்திற்கு பாங்கு வழங்கியுள்ளது.

பாங்கு வழங்கிய கடன்பட்டியலை ஆராயும்பொழுது சில உண்மைகள் கிடைக்கின்றன. 1968–69-ல் வழங்கிய கடன் பட்டியலையே ஆராய்ந்து பார்க்கலாம். ஒரு நாட்டின் மொத்தமான பொருளாதார வளர்ச்சிக்கு முதற்கண் தேவைப்படுகின்ற உள்ளமைப்புத் திட்டங்களுக்கே (infrastructure projects) பாங்கு கடன்களின் பெரும் பகுதி பயன்பட்டுள்ளது. பொதுவாக, உள்ளமைப்புத் திட்டங்களில் தனியார் துறையினர் முதலீடு செய்ய முன்வரமாட்டார்கள். குறிப்பிட்டுள்ள ஆண்டில் மொத்தக் கடன் உதவியில் 25 சதவீதம் நீர்மின்சாரம், அனல் மின்சாரம் ஆகியவற்றின் உற்பத்திக்கே பயன்படுத்தப்

பட்டது. மேலும் 26 சதவீதத் தொகையினை இரயில்வேக்கள், சாலைகள், ஆகாயவிமானப் பாதைகள், விமான நிலையங்கள், பைப் லைன்கள், கப்பல் போக்குவரத்து, நீர்போக்குவரத்து, துறைமுகங்கள் போன்ற போக்குவரத்துச் சாதன வளர்ச்சிக்கே பயன்படுத்தப்பட்டன. மீதமுள்ள 49 சதவீதத் தொகையே தொழிலுக்கும், விவசாயத்திற்கும், காட்டு வளத்திற்கும், மீன் பிடிப்புத் தொழிலுக்கும், தொலை போக்குவரத்திற்கும், கல்விக்கும், குடிநீர் வசதிக்கும், இன்னபிற வளர்ச்சிகளுக்கும் பயன்பட்டன. தொழில் வளர்ச்சிக்குத் தரப்பட்ட கடன்கள் பெரும்பாலும் கனரகத் தொழில்களின் (Heavey industries) வளர்ச்சிக்கே பயன்பட்டன. வேளாண்மைக்குத் தரப்பட்ட கடன்கள் பெரும்பாலும் வெள்ளத்தடுப்பு, நீர்ப்பாசனம், நிலவளப் பாதுகாப்பு, விளைநில வளர்ச்சி, பயிர்களைப் படிமுறைப்படுத்தல் – வகைப்படுத்தல், பயிர்ப் பாதுகாப்பு, பண்ணையை இயந்திரமயமாக்குதல்; கால்நடை வளர்ச்சி, காட்டுவளம் பேணுதல், மீன்வளர்ப்பு போன்ற திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. பாங்கு கடன்கள் பெரும் பகுதி உள்ளமைப்புத் திட்டங்களிலேயே செலவிடப்பட்டன என்பது தெளிவு.

நுட்பத் திறனுதவியும் பரிந்துரை வழங்கலும்

பொருளாதார வளர்ச்சிக்குப் பெருமளவில் கடனுதவி அளிப்பதுடன் கடன் நடவடிக்கைகளைப் பொறுத்த விஷயங்களில்கூட நுட்பத் திறனுதவியையும் (Technical assistance) பாங்கு வழங்குகிறது. வெவ்வேறு திட்டங்களுக்கிடையில் தேவையின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் எத்தகைய திட்டங்கள் முன்னுரிமை பெறுதல் வேண்டும் என்று கண்டு பிடித்திட வேண்டும். செலவைக் குறைத்திடும் வகையிலோ அல்லது திறமையை மேலும் கூட்டும் வகையிலோ திட்டத்திலே திருத்தம் கொண்டுவருதல் வேண்டும். ஒரு திட்டத்திற்குத் தேவைப்படும் நிதியைத் திரட்டிட – குறிப்பாக உள்நாட்டு மூலதனத்தையே கவர்ந்து திரட்டிடத் தேவைப்படும் நிருவாக-அமைப்பு ரீதியான ஏற்பாடுகளைத் திட்டத்திற்கெனச் செய்திட வேண்டும். இவைகுறித்து பாங்கு அளித்திடும் உதவியே நுட்பத்திறன் உதவியாகும். வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகளில் தேசிய வளன்களைப்பற்றிய ஆழ்ந்த ஆய்வுகள் நடத்திட நிபுணர் குழுக்களைப் பாங்கு அனுப்பியுள்ளது. அக் குழுக்கள் நீண்ட கால வளர்ச்சித் திட்டங்களுக்கான பரிந்துரைகளை வழங்கியுள்ளன.

வளர்ச்சியடைந்துவருகின்ற நாடுகளில் திட்டத்தினை உருவாக்கிடும்போது விஸ்தாரமான பகுத்தாய்வினை மேற்கொள்வதற்குரிய நிபுணர்கள் கிடைக்கவில்லை. இப் பிரச்சினைக்கு மாற்றாக உலக பாங்கு நுட்பத் திறனுதவி திட்டத்தினைக் (Technical assistance programme) கொண்டுவந்தது. முதலீட்டினைச் செய்வதற்குமுன் மேற்கொள்ளும் ஆய்வுகளுக்கென 200,000 டாலர்களைப் பாங்கு கடனாக அளித்திடும். ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் (United Nations Development Programme) தரும் நிதியைக்கொண்டு மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு உலக பாங்கு நிருவாக ஏஜென்சியாக உள்ளது உறுப்பினர் நாடுகளுக்கு வளர்ச்சித் திட்டம் குறித்து பாங்கு ஆலோசனைகள் வழங்குகிறது. உறுப்பினர் நாடுகளின் அரசாங்கங்களுக்கு உதவிடவேண்டி அலுவலக அதிகாரிகளை பாங்கு அனுப்பிவைத்துள்ளது. கிழக்கு, மேற்கு ஆப்பிரிக்காவிற்கு நிரந்தரக் குழுக்களையும் இந்தோனேஷியாவிற்கு ரெசிடன்ட் ஸ்டாஃப்பையும் (Resident staff) பாங்கு அனுப்பிவைத்துள்ளது. இவையாவும் பாங்கு மேற்கொண்ட முக்கிய நுட்பத்திறன் உதவியாகும். 1969ஆம் ஆண்டு ஜூன் 30-க்குள்ளாகவே பாங்கு நிதியில் நுட்பத்திறனுதவிக்கென நடத்தப்பட்ட ஆய்வுகள் 38 ஆகும். மேலும் ஆறு ஆய்வுகள் முடிவுறும் தறுவாயில் இருந்தன.

பொருளாதார வளர்ச்சி நிலையம் (Economic Development Institute) என்ற பெயரில் 1955-ல் பாங்கு அலுவலர் கல்லூரி ஒன்றினை பாங்கு துவக்கியது. வளர்ந்துவரும் நாடுகளின் அதிகாரிகளுக்கு வளர்ச்சி முறைகளில் பயிற்சி அளித்திடவே இக் கல்லூரி நிறுவப்பட்டது. 1969 ஜூன் முடிய 150 நாடுகளிலிருந்து கலந்துகொண்ட 1000 அதிகாரிகளுக்கு மேற்பட்ட எண்ணிக்கையினருக்கு இப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

உலக பாங்கு வேறு பல பணிகளையும் மேற்கொண்டது. உறுப்பினர் நாடுகளுக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மிடையில் ஏற்படக்கூடிய விவகாரங்களைத் தீர்த்துவைக்கும் முயற்சியிலும் பாங்கு ஈடுபட்டது. முதலீட்டு விவகாரங்களைத் தீர்த்துவைக்கும் பன்னாட்டு மைய நிலையம் (International Centre for Settlement of Investment Disputes) ஒன்றினை 1966-ல் பாங்கு ஏற்படுத்தியது. மேலும், சூயஸ் கால்வாய் பிரச்சினை, சிந்துநதி நீரை இந்தியாவும் பாகிஸ்தானும் பிரித்துக்கொள்ளும் பிரச்சினை போன்ற தகராறுகளையெல்லாம் தீர்த்துவைத்து, உலக சமா

தானத்தைப் பாங்கு பாதுகாத்துள்ளது. இன்னும் மக்கள் தொகைப் பிரச்சினை, சுற்றுலா பிரச்சினை போன்றவைகளையும் கூடப் பாங்குத் தனது பணிகளுடன் இணைத்துக்கொண்டது.

பின்தங்கிய நாடுகளுக்கு உதவி

கடன்களை வழங்குவதோடு நின்றிடாமல், பின்தங்கிய நாடுகளுக்கு உதவிடும் வகையில் வேறு பல பணிகளையும் பாங்கு ஏற்றுக்கொண்டது. கடனளித்திடும் பன்னிரண்டு மேற்கத்திய நாடுகளைக் கொண்டு இந்திய உதவிக் கிளப்பினை (Aid India Club) ஏற்படுத்த உலக பாங்கின் முழு முயற்சியே காரணம். அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, ஜப்பான், பிரான்சு, கனடா, இத்தாலி, ஸ்வீடன், ஆஸ்திரியா, பெல்ஜியம், நெதர்லண்ட்ஸ், ஹாலந்து ஆகிய பன்னிரண்டு நாடுகளும் இந்தியாவை அன்னியச் செலாவணி நெருக்கடியிலிருந்து காப்பாற்றிடும் நோக்குடனேயே இந்திய உதவிக் கிளப்பினை அமைத்தன. இந்தியாவின் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட நோக்கெல்லைகளை நிறைவேற்றிட இந்திய உதவிக் கிளப் மூன்ருவது திட்ட காலத்தில் 5,472 மில்லியன் டாலர் கொண்ட நிதியுதவியினை இந்தியாவிற்கு அளித்தது. 1969—70-ல் 825 மில்லியன் டாலர்கொண்ட நிதியுதவியினை அளித்தது. 1970—71-ல் 1000 மில்லியன் டாலர் கொண்ட நிதியுதவி இந்தியாவிற்குக் கிடைத்தது. இதில் 700 மில்லியன் டாலர் நிதியினைத் திட்டத்திற்கல்லாத உதவியாக (non-project aid) வழங்கியது. இதுபோலவே பாகிஸ்தான் உதவிக் கிளப்பினையும் பாங்கு ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டது. நிதி வழங்கிடும் பத்தொன்பது நாடுகள் பாங்கின் பல்வேறு குழுக்களுடன் ஏதோ ஒரு வகையில் இணைக்கப்பட்டுள்ளன.

குறைபாடுகள்

உலக பாங்கு விதித்திடும் வட்டி வீதம் அதிகம் என்று குறை கூறப்படுகிறது. பாங்கு வழங்கிடும் கடனுக்குக் கடன் பெறும் நாட்டு அரசாங்கத்தின் உத்தரவாதம் இருக்கிறது. எனவே, கடன் திரும்ப வந்துசேருமோ என்று ஐயப்படத் தேவையில்லை. எனவே, வட்டி வீதம் உயர்ந்திருப்பதில் நியாயமில்லை என்பது வாதம். போரால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்குப் புதுப்பொருளாதார வாழ்வும் பின்தங்கிய நாடுகளுக்குப் பொருளாதார வளர்ச்சி வாய்ப்பும் அளித்திடப் பணிபுரிய தோன்றிய உலக பாங்கு வெறும் ஆதாய நோக்கிற்காக வாணிப மனேபாவத்துடன் உயர்வட்டி விதிக்க வேண்டியதில்லை.

கடன் கொடுக்கும்பொழுதே கடனைத் திருப்பிடும் ஆற்றல் இருந்திடவேண்டும் என்று பாங்கு வலியுறுத்துவது நியாயமன்று. கொடுத்தக் கடனை முழுதும் பயன்படுத்திய பின்னரே, கடனைத் திரும்ப அடைத்திடும் திறனைப்பெறும் வாய்ப்பு கடன் வாங்கிய நாட்டிற்கு ஏற்படுகிறது. கடன் நிதியால் உருவான திட்டம் முழுமைபெற்று கனியும்பொழுது தான் கடனைத் திருப்பிடும் ஆற்றலைக் கடன் வாங்கிய நாடு பெறுகிறது. எனவே, கடனை வழங்கிடும் நேரத்திலேயே கடனைத் திருப்பிடும் ஆற்றலை வலியுறுத்த வேண்டியதில்லை.

பாங்கு அரசியல் சார்பற்ற, கட்சி சேராத ஓரமைப்பு. இது எல்லா உறுப்பினர்களையும் ஒன்றுகவே பாவித்திட வேண்டும். கடன் கொடுப்பதில் உறுப்பினர் நாடுகளிடையே வேற்றுமைப்படுத்துதல் கூடாது. தகுதியின் அடிப்படையிலும் பொருளாதாரக் கணிப்பின் அடிப்படையிலும் பாங்கு கடன் கொடுப்பதிலிருந்து அவ்வப்பொழுது தவறியுள்ளது. பின்தங்கிய நாடுகளின் பக்கம் பாங்கின் கடைக்கண் பார்வை அண்மைக் காலத்தில்தான் விழுந்தது. முன்னேறிய மேற்கத்திய நாடுகளைவிட ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் மொத்தத்தில் அதிகக் கடன் நிதியைப் பெற்றுலும்கூட, மக்கள் தொகை அடிப்படையிலும், பரப்பளவு அடிப்படையிலும், பொருளாதார நிலை அடிப்படையிலும் பார்த்தால் மேற்கத்திய நாடுகள்தாம் அதிகக் கடனைப் பெற்றுக்கொண்டுள்ளன என்று வாதிக்கப் படுகிறது.

உலக பாங்கின் மொத்தக் கடன் அளவு பிரமிக்கத்தக்க அளவிற்குப் பிரம்மாண்டமாகத் தோன்றினுலும் பின்தங்கிய நாடுகளின் பொருளாதாரத் தேவைகளைக் கணக்கிட்டு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது கடலில் புளியைக் கரைத்த மாதிரிதான் உள்ளது. இதனுல் பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி என்பது கானல் நீர்தானே என்ற ஐயப்பாடு வலுப்பெறுகிறது. என்றுலும் பாங்கின் பணி பயனுடையது தான் என்பதனை அறவே மறுத்திட இயலாது.

இந்தியாவும் பாங்கும்

உலக பாங்கின் நிறுவனர்–உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்று. நிருவாக இயக்குநர் குழுவில் இந்தியாவிற்கு நிரந்தர இடம் உண்டு. ஏனெனில், பெருமளவு மூலதனம் வழங்கிய ஐம்பெரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. பாங்கு ஆரம்பித்த அடிநாள்தொட்டு, பல பாங்குக் குழுக்கள் இந்தியாவிற்கு

வந்து நாட்டின் வளர்ச்சித் திட்டங்களை ஆய்ந்துள்ளன. மேலும், எந்தெந்த வகையில் கடனுதவி அளிக்கலாம் என்றெல்லாம் குழுக்கள் ஆய்ந்துள்ளன. பாங்குத் தலைவரும் இந்தியாவிற்கு வந்துள்ளார். தனித்த, சிறப்புத் திட்டங்களைப் பார்வையிட்டு கடனுதவி அளித்திடுவதைக் கருதப் பாங்கு அதிகாரிகளும் வந்துள்ளனர். தனியார்த்துறைத் தொழிலை நவீனமயமாக்கி வளர்த்திட நிதியுதவி அளிக்கக்கூடிய தனியார் சார்பு கார்ப்பரேஷன் ஒன்றினை நிறுவுவதற்குரிய வாய்ப்பினை ஆராய 1954-ல் பாங்குக் குழு ஒன்று இந்தியாவிற்கு வந்தது. இந்திய அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் 1956-ல் பாங்குக் குழு ஒன்று முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியா ஏற்படுத்தியுள்ள முன்னேற்றத்தைக் கணித்து, இரண்டாம் திட்டத்தை ஆய்ந்திட வந்தது. நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து இந்திய அரசுடன் நேரடித் தொடர்புகொண்டிடும் வகையில் பாங்குத் தனது தலப் பிரதிநிதி (Resident Representative) ஒருவரை புது டெல்லியில் நியமனம்செய்தது. தொடர்ந்து 1960, 1961, 1967ஆகிய ஆண்டுகளில் உலக பாங்கு தனது குழுக்களை இந்தியாவிற்கு அனுப்பிக் கொண்டிருந்தது. இன்னும், 1970-ல் மத்தியபிரதேசத்தில் 2. 25 லட்ச ஏக்கர் நிலங்களைச் சீர்ப்படுத்துகின்ற திட்டத்திற்குத் தேவைப்படும் 50 கோடி ரூபாய் கடனுதவி குறித்து ஆராய்ந்திட, அந்த நிலங்களைப் பார்வையிட, பாங்குக் குழு ஒன்று வந்தது. அதே ஆண்டில் உத்தரப்பிரதேசத்து குடும்பநலத் திட்டத்தை ஆய்ந்திட ஏழு உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று வந்தது.

1969ஆம் ஆண்டு ஜுன் மாதம் முடிய இந்தியா பெற்றுள்ள கடன்கள் முப்பத்தெட்டாகும்; கடன் தொகை 147.50 மில்லியன் டாலர்களாகும். இந்தியாவே பாங்கின் மிகப் பெரும் கடனாளி. மொத்தக் கடனில் 42 சதவீதம் போக்குவரத்து வளர்ச்சிக்கும், 17.5 சதவீதம் மின்னியக்க வளர்ச்சிக்கும், 38 சதவீதம் தொழில் வளர்ச்சிக்கும், 0.7 சதவீதம் விவசாய வளர்ச்சிக்கும் கிடைத்தன. பாங்கினுடைய முயற்சினால் ஏற்படுத்தப்பட்ட இந்திய உதவிக் கிளப்மூலம் மூன்றும் திட்ட காலத்தில் இந்தியா பெற்ற பெரும் நிதியுதவியினை முன்னரே குறித்துள்ளோம். இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் 13 ஆண்டுகளாகத் தீராத பிரச்சினையாகவிருந்த சிந்துநதி நீர்ப் பிரச்சினையின் சுமுகமான தீர்விற்கும் உலக பாங்கே காரணம் ஆகும். இந்தியாவிற்குப் பாங்கு வழங்கியுள்ள பெருமளவு கடனுதவி குறித்து முன்னரே விளக்கியுள்ளோம்,

இவ்வாறு பெருமளவு கடனுதவி அளித்ததோடு அமையாது, இந்தியாவில் நிலக்கரி போக்குவரத்துக் குறித்து செய்யப்பட்ட ஆய்விற்குத் தேவைப்பட்ட 862,000 டாலர்களைக் கொண்ட அன்னியச் செலாவணிச் செலவினைப் பாங்கே ஏற்றுக் கொண்டது. இதுபோலவே போக்குவரத்துத் துறை வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களுக்காகும் அன்னியச் செலாவணிச் செலவினைப் பாங்கே ஏற்றுக்கொண்டது. 1970 ஆகஸ்டு மாதத்திற்குள்ளாக 400 இந்தியர்கள் பாங்கு அலுவலர் கல்லூரியாகிய பொருளாதார வளர்ச்சி நிலையத்தில் (EDI) பயிற்சி பெற்றனர். இந்த நிலையம், 1964-ல் கல்கத்தாவிலுள்ள இந்திய நிருவாக நிலையத்துடன் (Indian Institute of Management) சேர்ந்து ஜெய்ப்பூரில் திட்டத்தின் மதிப்பீட்டுப் பயிற்சி அளித்தது. நான்கு ஆசிய நாடுகள் இதில் கலந்துகொண்டன.

பண்ணை உற்பத்தியைப் பெருக்கிடப் பஞ்சாப் விவசாயத் திட்டத்திற்கு உலக பாங்கு 1971, 1972-ல் 39 மில்லியன் டாலர்கள் கொண்ட கடன் கொடுத்திட ஒத்துக் கொண்டது. இவ்வாறு பல்வேறு திட்டங்கள் பாங்கின் கடன் நிதியைப் பெற்று நல்ல பலன்களை விளைத்தன. உதாரணமாக, பாங்கின் கடனுதவிப் பணியின் காரணமாக, ஒரு மில்லியன் கிலோவாட்ஸ்க்கு மேல் மின்சாரம் உற்பத்தி செய்திடும் வல்லமையை இந்தியா பெற்றுள்ளது. திருத்தப்பட்ட பண்ணை நிலமும் நீர்ப்பாசனவசதி பெற்ற நிலமும் சேர்ந்து 1½ மில்லியன் ஏக்கர்களாகும். மேலும், ஒரு மில்லியன் ஏக்கருக்குத் தேவையான தண்ணீர் காப்பும் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறே கனரகத் தொழில்களிலும் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டது. எனவே, உலக பாங்கினல் இந்தியப் பொருளாதார வளர்ச்சி மேலும் தூண்டப்பெற்றது எனலாம்.

17. பன்னாட்டு நீர்மை
(International Liquidity)

முதல் விளக்கம்

அண்மைக் காலத்தில் பல்வேறு நாடுகளும் நிதிவழங்கிடும் பன்னாட்டு அமைப்புகளும், பன்னாட்டு நீர்மைப் பிரச்சினையின் கடுமையை உணரத் தலைப்பட்டன. இது ஒன்றும் புதுப் பிரச்சினை இல்லை. முதல் உலகப் போர் முடியும் போது இப் பிரச்சினை தலைதூக்கியது. பொன் திட்டத்தைப் பின்பற்றிய நாடுகள் பன்னாட்டு நீர்மைப் பிரச்சினையைத் தீர்க்க முடியாத காரணத்தினாலேயே பொன் திட்டம் வீழ்ந்தது. தெளிவாக உரைப்பின், கடனளி நாடுகளிடமும் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பற்றுக்குறை உள்ள நாடுகளிடமும் இருந்த பொன் காப்புகள் (Gold reserves) போதவில்லை. கடனடைப்பதற்கும், பற்றுக்குறையினை அகற்றவும் போதுமான அளவுக்குப் பொன் இருப்புகள் வேண்டும். மறுபுறத்தில், அயல் நாட்டுச் செலுத்து நிலையில் உபரியினையும் காத்து, பொன் இருப்புகளையும் நிறைய வைத்திருந்த செல்வம் கொழிக்கும் நாடுகள் கடன் வழங்கிடவும் முன்வரவில்லை. பொன் இருந்தது; ஆனால், யாருக்குத் தேவையோ அவரிடம் இல்லை; யாரிடமிருந்ததோ அவர் அதனைப் பயன்படுத்திட விரும்பவில்லை. பன்னாட்டு ரீதியாக அமைந்திடும் இந்த அவலநிலை பொன் திட்ட காலத்திலேயே உலக நீர்மைப் பிரச்சினையை உண்டாக்கிவிட்டது எனலாம்.

சமீப காலத்தில் பன்னாட்டு நீர்மைப் பிரச்சினை என்பது கட்டுக் கடங்காமல் வளர்ந்துவிட்டது. பல நாடுகளின் அயல் நாட்டுச் செலுத்து நிலையில் கடுமையான அளவிற்குப் பற்றுக் குறை நிரந்தரம் போலாகிட்டது. பற்றுக் குறை நாடுகளில் பெரும்பாலானவை வளர்ச்சி குறைந்த நாடுகளே! இந்த நிலையின் காரணமாக உலக நீர்மைப் பிரச்சினை ஆழமாகிப் பெரிய வடிவம் எடுத்து நிரந்தரத்தன்மை பெற்றுவிட்டது.

நீர்மைக் கருத்தியல் (Concept of liquidity)

பன்னாட்டுச் செலாவணி அமைப்புச் சீர்திருத்தம் பற்றிய பேச்சுவார்த்தைகளிலெல்லாம் பன்னாட்டு நீர்மை அடிக்கடி அடிபடுகிறது. தற்பொழுதுள்ள செலாவணி யமைப்பு வழங்கிடும் நீர்மை போதுமானதா? அல்லது மிகுதியானதா? என்ற தர்க்கம் நிபுணர்களிடையே உள்ளது. ஊக வாணிபம் சார்ந்த குறுங்கால பண இயக்கங்களின் (Hot-money movements) அதிர்ச்சி அலைகளினூடே இச் செலாவணியமைப்பு நீர்மையைப் போதுமான அளவிற்கு அளித்திட முடியுமா என்பது கேள்வி. மேலும், உலக உற்பத்தியும் அதைவிட வேகமாக உலக வாணிபமும் பெருகிடும்பொழுது போதுமான நீர்மையைச் செலாவணியமைப்பு உருவாக்கி வழங்கிட முடியுமா என்ற கேள்வியையும் ஆராய வேண்டும்.

சில சூழல்களில் பன்னாட்டு நீர்மை என்பது அளந்து பார்க்கக்கூடிய ஓர் அளவு போலவும் வேறு சூழல்களில் அது ஒரு தன்மை (quality) போலவும் தோன்றும். உதாரணமாக, பொன்மாற்றுத் திட்டத்தின் (Gold Exchange Standard) கீழ்ப் பல நாடுகள் டாலர் இருப்புகளைத் (dollar balances) தங்களுடைய செலாவணிக் காப்புகளாக (monetary reserves) வைத்திருந்தன. மைய பாங்குகளில் இவ்விருப்புகள் இருந்தன. பன்னாட்டு நீர்மையினை டாலர் இருப்புகளாகப் பொன் மாற்று திட்டம் வழங்கிடும்பொழுது, இதனால் நீர்மையின் 'தன்மை' (quality) வீணாகிறது என்று குறைபட்டுக் கொண்டனர். ஆனால், அதே வேளையில் வெளிநாட்டு வர்த்தகர்கள் கையிலும் பாங்குகளிடமும் உள்ள டாலர், ஸ்டர்லிங் இருப்புகளுக்கு மதிப்பு இல்லை, நீர்மை குறைந்துவிட்டது என்றாலோ நீர்மை நெருக்கடி (liquidity crisis) உண்டாகிவிடுகிறது. எனவே நீர்மை என்பது அளவையும் (quantity) தன்மையையும் (quality) குறிக்கிறது என்பது குழப்பம் விளைவிக்கிறது.

இப்பொழுதெல்லாம் பொருளாதார நிபுணர்கள் பல காரணங்களுக்காகப் பல தொடர்புகளைச் சுட்டிக்காட்டிட, அடிக்கடி 'நீர்மை' எனும் சொல்லைப் பிரயோகிக்கிறார்கள். ஒருகாலத்தில் சில சொத்துகளின் நீர்மையைப் பற்றியும் கடனாளிகளின் நீர்மையைப் பற்றியும் இன்னும் வர்த்தக பாங்குகளின் நீர்மையைப் பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள். பன்னாட்டு நீர்மைபற்றி அவர்கள் அப்பொழுது நினைத்தே பார்த்திருக்கமாட்டார்கள். பணம், காப்புகள் (reserves), பொன் ஆகியவற்றின் 'அளவு', 'இருப்பு', (stock), 'அளிப்பு'

என்ற சொற்களெலாம் இன்று சாதாரணமாகவே பிரயோகிக்கப் படுகின்றன. இவ்வாறு சாமான்யப்படுத்தப்பட்ட சொற்கள் என்ன பொருளை விளக்குகின்றனவோ அதனையேதான் தற்காலத்து நிபுணர்கள் பயன்படுத்துகின்ற 'நீர்மை' என்ற சொல்லும் விளக்குகிறது என்று ஃப்ரிட்ஸ் மாக்லப் (Fritz Machlup) தமது பன்னாட்டுச் செலாவணிப் பொருளாதாரம் (International Monetary Economics) எனும் நூலில் குறிப்பிடு கிறார். வாணிபத்திற்கும் உற்பத்திக்கும் செலுத்தவேண்டிய செலுத்துகைகளுக்குத் தேவைப்படும் நிதியினை நாட்டுச் செலாவணி மூலமாகக் கடனாக அளித்தலையே நீர்மை என்று பெர் ஜாகப்சன் (Per Jacobsson) வருணிக்கிறார். டச்சு பாங்கு அறிக்கை (Dutch Bank Report) ஒன்றில் நீர்மை என்ற கருத் தியல் இன்னும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. 'ஒரு பொரு ளாதாரத்தில் சுழன்றுகொண்டிருக்கும் மொத்த நீர்மை இரு கூறுகளைக் கொண்டது. ஒன்று, பண அளிப்பாகிய முதன்மை நீர்மை (Primary liquidity); பிறிதொன்று துணைமை நீர்மைச் சொத்துகள் (Secondary liquid assets). இந்த நீர்மைகளில், தல ஆட்சியினர் (Local authorities), அரசாங்கம், பாங்குகள் மீது உடைமையாளர்கள் கொண்டிருக்கிற உரிமைப் (claims) பங்குகள் அடங்கும். கணிசமான அளவிற்கு எவ்விதச் செலவு மின்றி, வட்டி வீதத்தில் இழப்பேதுமின்றி, குறுங்காலத் தெரிவிப்பின் மூலமே இத்தகைய நீர்மைகளை எவ்வளவுக்கு வேண்டுமானாலும் பணமாக (ரொக்கமாக) மாற்றிக்கொள்ள முடியும்.' நீர்மை இவ்வாறு தெளிவாக டச்சு பாங்கு அறிக் கையில் இலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. பொன் திட்ட காலத்தில் பொன் அளிப்புப் போதவில்லை என்ற பிரச்சினை இருந்திருக்கிறது; பொன் இருப்புகள் நாடுகளிடையே சீரான முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்ற குறையும் இருந் திருக்கிறது. இன்னும் மைய பாங்குகள் செல்வாவணிப் புழக்கத் திற்கு, கடன் பண விரிவிற்கு ஏற்ப, பொன் காப்பு (gold cover) அமைத்திட எப்பொழுதும் போராடிக்கொண்டே இருந்திருக் கின்றன. இப் பழைய பிரச்சினைகளே பன்னாட்டு நீர்மை போதாமை என்ற நவீன உரு எடுத்திருக்கிறது என்பதை நினைவில் நிறுத்த வேண்டும்.

பழைய பிரச்சினைகள்தாம் இப்பொழுதும் நிலவுகின்றன. ஆனால், சொல்மட்டும் மாறியிருக்கிறது என்பதானது பன்னாட்டுச் செலாவணியைப் பொறுத்தவரையில் உண்மையே என்று ஃப்ரிட்ஸ் மாக்லப் (Fritz Machlub) போன்றவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். பன்னாட்டுப் பொன் திட்ட முறையில்

இரண்டு முக்கிய அம்சங்களுண்டு. பொன்னின் மொத்த அளிப்பில் கிடைப்பருமை (scarcity) ஓர் அம்சம், குறுகிய பொன் காப்பினை (narrow gold cover) ஒவ்வொரு நாடும் குறைந்த பட்ச அளவிற்குப் பெறுவதற்குப் போராடும் நிலை மற்றோர் அம்சமாகும். இவ்விரு அம்சங்களையும் பணவீக்க எதிரிகள் பாராட்டுவர்; பணவாட்ட எதிரிகள் கண்டிப்பர். பணத்திற்கு ஓரளவுக்கேனும் நிலையான மதிப்பு இருந்திடவேண்டும் என்று கருதுவோர் பொன்னில் கிராக்கி நிலை நிலவுவதையும் செலாவணி நிருவாகிகள் தாராளப்போக்குடன் செலாவணியைப் பெருக்கிடும் நிலைக்குத் தடையேற்படுவதையும் வரவேற்கவே செய்வர். பணப்புழக்கம் பெருகுவது பொருளாதார வளர்ச்சிக்கு நல்லது என்று நினைப்போர் உள்நாட்டுப் பணப் படைப்பிற்குக் கட்டுப்பாடு விதித்தலை வெறுக்கத்தான் செய்வர். பொன் திட்ட காலத்தில் பொன்னின் கிடைப்பருமையின் காரணமாகவும், பொன் காப்புகளைப் (gold reserves) பெறுவதற்கெனப் போராடுவதன் காரணமாகவும் உள்நாட்டுச் செலாவணியைப் பெருக்கிட முடியவில்லை எனக் குறைபட்டுக் கொண்டனர். தற்பொழுது, உலகநீர்மை போதாமையின் காரணமாகவும், ஒவ்வொரு நாடும் போதுமான அளவிற்குப் பன்னாட்டு நீர்மையைப் பெறவேண்டும் எனப் போராடிக் கொண்டிருப்பதன் காரணமாகவும் உள்நாட்டு நீர்மை அளிப்பு கட்டுண்டுவிட்டது. இப்பொழுதும்கூடப் பன்னாட்டு, உள்நாட்டு நீர்மையில் கட்டுப்பாடு இருத்தலை பணவீக்க எதிர்ப்பாளர்கள் வரவேற்கின்றனர். வலிவான தேவையினைத் (effective demand) தொடர்ந்து பெருக்குவதன் மூலம் வளர்ச்சி வேகத்தைத் துரிதப்படுத்த விரும்பிடும் பணவாட்ட எதிர்ப்பாளர்கள் நீர்மை போதாமை கண்டு பொருமுகின்றனர். காலமெலாம் மனித சமூகத்தில் பிரச்சினைகள் ஒன்றே; ஆனால், அவற்றை எடுத்தியம்புவதிலும், அணுகுவதிலும், அவற்றைக் குறித்திடும் சொற்களிலும் மட்டுமே வேறுபாடு தோன்றுகிறது.

நவீனகால நடப்பில் பெரிதும் புழக்கத்திற்கு வந்துவிட்ட 'நீர்மை' எனும் இச் சொல்லின் பொருளை மீண்டும் அணுகுவோம். சொத்து (asset) எனக் கருதப்படும் ஒன்றின் பல அம்சங்களைக் குறிப்பதே நீர்மை எனப்படும். நீர்மை என்பதன் பொருள் எவ்வாறு மாறிக்கொண்டே வந்திருக்கிறது என்பதனை ஹெச். டபிள்யூ. ஆண்ட் (H. W. Arndt) வருணிப்பதை நோக்குவோம். ஒரு சொத்தின் நீர்மை என்ற பொருளிலிருந்து ரொக்கச் சொத்தினை வைத்திருத்தலையே நீர்மை எனப் பொருள்படுத்தி, இறுதியாக ஒரு தனிநபரின்

அல்லது ஒரு குழுவின் அந்தஸ்தினையே நீர்மையாகப் பொருள் கொண்டிடும் அளவுக்கு நீர்மை என்ற சொல்லின் பொருள் தாராளமாகிவிட்டது எனலாம். மாக்லப் அவர்கள், குறிப்பிட்ட காலத்தில் எவ்விதத் தவக்கமுமின்றிச் சரியாகப் பணம் செலுத்திடும் ஆற்றலை–வல்லமையை நீர்மை எனக் கூறுகிருர். கணித ரீதியாக அணுகும்பொழுது தேவைப்படுகின்ற நிதியளவிற்கும் வழங்கப்படுகின்ற நிதியளவிற்கும் உள்ள விகிதத்தினையே நீர்மை எனலாம்.

பன்னுட்டு நீர்மை எந்த அளவிற்குக் கிடைக்கின்றதோ அந்த அளவிற்குத்தான் பன்னுட்டுச் செலாவணியமைப்பு செயல்பட்டு உலக வாணிபம் தழைக்கும். அயல் நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படக்கூடிய பற்ருக்குறைகளைக் களைவதற்கு நாட்டின் பணத் துறையினர் (Monetary authorities) தங்கள் பார்வையில் வைத்திருக்கின்ற நிதிகளையும் உள்ளடக்கியது பன்னுட்டு நீர்மை. ஒரு நாட்டின் சொத்துகளும் பன்னுட்டு ரீதியாகக் கடன் வாங்கிடும் அதன் திறமையும் பன்னுட்டு நீர்மையில் அடங்கும். உடனடியாகக் கிடைக்கக் கூடிய சொத்துகளும் விரிந்த பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகே கிடைக்கக் கூடிய சொத்துகளும் பன்னுட்டு நீர்மையில் இடம்பெறும். மேலும் இதில் அடங்குவன: பொன் இருப்புகள், மாற்றக்கூடிய அன்னியச் செலாவணி, தேவை ஏற்படும் பொழுது எழுப்பக்கூடிய மற்றச் சொத்துகள், பன்னுட்டு அமைப்புகள்மீது கொண்டுள்ள உரிமைப் பங்குகள், அவ்வமைப்புகளிடமிருந்து கடன் வாங்கிடும் உரிமைகள், வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்தோ அல்லது வெளிநாட்டுத் தனியார் துறையினரிடமிருந்தோ கடன் வாங்கிடும் வாய்ப்புகள், உரிமைகள், செலாவணிச் சந்தையில் கடன் வாங்கிடும் வல்லமை போன்றவை.

இவ்வாருகப் பன்னுட்டு நீர்மை என்பது பரந்தும் விரிந்தும் உள்ளது. அண்மைக் காலத்தில் இதனை வகைப்படுத்திடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சொந்தத்திலிருக்கும் காப்புகள் (Owned reserves) என்றும் கடன் வாங்கிடும் வசதிகள் (Borrowing facilities) என்றும் பன்னுட்டு நீர்மையை இரண்டாக வகைப்படுத்துகிருர்கள். எந்தவிதமான நிபந்தனையுமின்றி இயல்பாகவே கிடைத்திடும் நீர்மை என்றும், பேச்சு வார்த்தைகள் நடத்தப்பெற்றுச் சில விதிகளின் அடிப்படையில் கிடைத்திடும் நீர்மை என்றும் வகைப்படுத்துவார்கள். எந்தக் காரியத்திற்குத் தேவைப்படுகிறதோ, எந்தத் திட்டத்தை

நிறைவேற்றப் பயன்படுகிறதோ அந்த அடிப்படையிலும் நீர்மையை வகைப்படுத்தலாம். சில நாடுகளில் சட்டமியற்றி பொன் காப்புகளைப் பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகளை விதிப்பர். மாறாக, கடன் வாங்கிடும் வசதிகள் கிடைப்பின் அவ் வசதிகள் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்ற கேள்வி எழுவதில்லை. மேலும், பன்னாட்டுச் செலாவணி நிதியிலிருந்து கிடைக்கின்ற எடுப்பு வசதிகளை (Drawing facilities) சொந்த நீர்மை (Owned liquidity) என்றோ கடன் வாங்கிடும் வசதிகள் (Borrowing facilities) என்றோ வகைப் படுத்திட முடியாது.

சமீப ஆண்டுகளில் பன்னாட்டு நீர்மைக்கு முக்கியத் துவம் பெருகிவருகிறது. பன்னாட்டு நீர்மை கிடைப்பதைப் பொறுத்து நிலையான மாற்று வீதத்தின்மீது நம்பிக்கை ஏற்படு கிறது. குறுங்கால மூலதன இயக்கத்தின் (ஓட்டத்தின்) அளவின் மீதும் அதன் போக்கின் மீதும் நல்ல விளைவுகளை ஏற்படுத்து கிறது. இறுதியாகப், பன்னாட்டு நீர்மை, அயல் நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் பற்றுக்குறைகளின் அளவின் மீதும் விளைவுகளை உண்டாக்குகிறது. உள்நாட்டுத் தேவை, மாற்றுவீதம், வாணிபம், மூலதன ஓட்டம், உதவித் திட்டங்கள் போன்றவை மூலம் ஒரு நாட்டின் அயல் நாட்டுச் செலுத்து நிலையின் தன்மை விளங்குகிறது. செலுத்து நிலையைப் பொறுத்து அமைகின்ற ஒரு நாட்டின் திட்டங்கள்மீதும் நீர்மையின் விளைவுகள் படிகின்றன.

நீர்மையின் போதாமை

பொன் அளிப்பும் அன்னியச் செலாவணிக் காப்புகளு மாகிய பன்னாட்டு நீர்மை, பன்னாட்டுச் செலுத்துகைகளைச் செலுத்தவேண்டிய தேவையின் அளவிற்கு வளரவில்லை. எனவே, உலக நாடுகள் பல தங்களுடைய அயல் நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் பற்றுக்குறைகளைச் சரிக்கட்டிட முடியவில்லை. பொன்னின் அளிப்பையும் அன்னியச் செலாவணி அளிப்பையும் மொத்தமாக எடுத்துக்கொண்டால், பன்னாட்டுச் செலாவணி நிதியில் உறுப்பினர்களாக இருக்கின்ற நாடுகளின் மைய பாங்குகளில் உள்ள காப்புகள் இரண்டு அல்லது மூன்று சதவீதத்திலேயே உயருகின்றன. ஆனால், இந் நாடுகளிடையே வாணிபம் இரண்டு பங்கு அதிக சதவி தத்தில் உயருகிறது. எனவே பன்னாட்டு நீர்மையின் பற்றுக் குறை என்பது நிலையானது போலாகிவிட்டது. உண்மை யிலேயே, உலகப் பொன் இருப்புகள் 41.9 பில்லியன்

அமெரிக்க டாலர்களின் அளவிற்கு 1965-ல் இருந்தது; ஆனால், 1968-ல் 38.9 பில்லியன் டாலர்களின் அளவிற்குக் குறைந்து விட்டது. ஆனால் இதே ஆண்டுகளில் பன்னாட்டு வாணிப பேரங்கள் நல்லவண்ணம் பெருகிவிட்டன. உலக இறக்கு மதிகளின் அளவிற்கும் பொன் காப்புகளுக்கும் இடையில் உள்ள விகிதமும் 1952 முதல் குறையத் தொடங்கியது. உலக நீர்மை அளிப்பின் மூல ஊற்றாக அமைந்துள்ள 'சரிசெய்யப் பட்ட மொத்தக் காப்புகள்' 1951 முதல் 1968 முடிய உள்ள பதினெட்டாண்டுகளில் 44 சதவீதமே உயர்ந்திருக்கும் அதே வேளையில் இறக்குமதிகள் அதைவிட இருமடங்குகளுக்கு மேல் உயர்ந்துவிட்டன. எல்லா நாடுகளுமே பன்னாட்டு நீர்மை போதாமையால் பாதிக்கப்பட்டுள்ளன.

காப்பு-இறக்குமதி விகிதங்கள், (reserves-imports ratios) வளர்ச்சியுற்ற நாடுகளாயினும் வளர்ச்சிக் குறைந்த நாடுக ளாயினும், எவ்வித வேறுபாடுமின்றி குறைந்துகொண்டே போகின்றன என்பது உண்மையே. துவக்கத்தில் இறக்கு மதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது காப்புகளை (reserves) நிறையப் பெற்றுள்ள நாடுகளிலிருந்து காப்புகளைக் குறைவாகப் பெற்றுள்ள நாடுகளுக்குக் காப்புகள் செல்லத் தொடங்கின. இத்தகைய மறுபகிர்வு ஓரளவிற்கு நன்மை பயக்கக் கூடியதே. ஐக்கிய அமெரிக்காவில்தான் அதனுடைய காப்புகளில் பெருமளவு மறுபகிர்வு ஏற்பட்டது. அமெரிக் காவின் காப்பு-இறக்குமதி விகிதம் 1952-ல் 209.3 சதவீதமாக இருந்தது; 1968-ல் 34.2 சதவீதத்திற்குக் குறைந்துவிட்டது. இரண்டாம் உலகப் போரின்போதும் அதனைத் தொடர்ந்த ஆரம்ப ஆண்டுகளிலும் நிறையக் காப்புகளைச் சேர்த்துவைத்த வளர்ச்சிக் குறைந்த நாடுகளிலும் மறுபகிர்வின் காரணமாகக் காப்புகள் குறையத்தொடங்கின.

பன்னாட்டுச் செலாவணி நிதியும் நீர்மையும்

பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பினை ஏற்படுத் தியதன் நோக்கம், பொன்னையும் நாடுகளின் செலாவணி களையும் சேமித்துவைத்து, பற்றாக்குறையினால் நாடுகள் பாதிக் கப்படும் வேளைகளில் அந் நாடுகளின் காப்புகள் போதவில்லை யெனும்பொழுது உதவிடுவதேயாம். உறுப்பினர் நாடுகளின் மொத்தக் கோட்டா 21.5 பில்லியன் டாலர்களுக்கு மேல் நிதி யமைப்பு வசம் சொந்த இருப்புகளாக உள்ளன. மேலும், வெவ்வேறு திட்டத்தின்கீழ்ப் பல்வேறு காலங்களில் கடன்

வாங்கிய தொகையும் உண்டு. இவையனைத்தும் நிதியமைப்பின் நீர்மையாகும்; உறுப்பினர் நாடுகளுக்கு உதவிடும் நீர்மையாகும். நிதியமைப்பு இரு வகையான நீர்மைகளை உறுப்பினர் நாடுகளுக்கு வழங்கியுள்ளது. உறுப்பினர் நாடுகளின் கோட்டாக்களைப் பொறுத்தே எடுப்பு உரிமைகள் (drawing rights) அமைந்துள்ளன. பொன் இருப்புகளைப் பொறுத்த வரையில் உறுப்பினர் நாடுகள் எடுப்பு உரிமைகளைப் பயன்படுத்தி எவ்வித நிபந்தனையுமின்றி நீர்மையினைப் பெறுதல் ஒரு வகை. உறுப்பினர் நாடுகளுக்கு நிதியிடமிருந்து கடன் வாங்கிடும் வசதிகளும் உண்டு. இவ்வாறு நாடுகள் நிதியமைப்பிடமிருந்து பொன் அடிப்படையை அனுசரித்து நீர்மை பெறுதல் ஒரு வகை. இரண்டாவது வகை எதுவெனில், கடன் அடிப்படையில் நிபந்தனைகளின்பேரில் நீர்மை பெறுதல் ஆகும். கடன் வாங்கிடும் நாடுகளின் சாதனைகளை ஆதாரமாகக் கொண்டே அவை நிதியமைப்பின்மீது எடுப்பு உரிமைகளைப் பயன்படுத்த முடியும்.

நிதியமைப்பு நிபந்தனையின் அடிப்படையில்தான் நிறைய நீர்மையினை வழங்கியுள்ளது. நிபந்தனையற்ற நீர்மை வழங்கியதன் அளவு குறைவுதான். உறுப்பினர் நாடுகள் நிபந்தனையின் அடிப்படையில் நீர்மையினைப் பெறுதல் என்பது அவர்கள் திறமையைச் சுட்டிடும். நிபந்தனையற்ற நீர்மையினை நிதியமைப்பு அளித்திடும் வல்லமை ஏறக்குறைய 6 பில்லியன் டாலர்களாகும்; நிபந்தனையின் பேரில் அளிக்கக்கூடிய நீர்மையின் அளவு 16 பில்லியன் டாலர்களாகும். இது 1970ஆம் ஆண்டுக்குரிய புள்ளி விவரமாகும். 1971ஆம் ஆண்டு நவம்பர் 15-ல் நிபந்தனை சார்ந்த, நிபத்தனையற்ற மொத்த நீர்மை 30 சதவீதம் உயர்ந்துள்ளது. வேறு வகைகளிலும் நிதியமைப்பு உறுப்பினர் நாடுகளுக்கு நீர்மையினை வழங்குகிறது. உத்தரவாத ஏற்பாடுகள் (Stand-by Arrangements) மூலமாகவும், கடன் வாங்கிடும் திட்டத்தின் பொது ஏற்பாடுகள் (General Arrangement to Borrow scheme-GAB) மூலமாகவும் ஏற்றுமதி ஏற்ற இறக்கங்களைச் சரிசெய்திடும் நிதியாக்கத் திட்டத்தின் மூலமாகவும் (Compensatory Financing of Export Fluctuations Scheme) நிதியமைப்பு நாடுகளுக்குத் தேவைப்படும் நீர்மையினை வழங்குகிறது.

சிறப்பு எடுப்பு உரிமைகள் (Special Drawing Rights)

பன்னாட்டுச் செலாவணி நிதியமைப்பின் உறுப்பினர் நாடுகளுக்கு நிதியின்மூலம் கிடைத்திடும் நீர்மை போதாமையின்

காரணமாக சிறப்பு எடுப்பு உரிமைகள் எனும் புதிய ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டது. உறுப்பினர் நாடுகள் மேலும் 9.5 பில்லியன் டாலர்களை நிதியிடமிருந்து நீர்மையாகப் பெறும் வகையில் எடுப்பு வசதிகள் உருவாக்கப்பட்டன. சிறப்பு எடுப்பு உரிமைகளைச் சுருக்கமாக SDR என அழைக்கலாம். இதனைத் தாள் பொன் (Paper gold) எனலாம். பன்னாட்டுச் செலாவணி நிதியின் சாசனத்தின் சில விதிகளில் திருத்தங்கள் செய்து, உறுப்பினர் நாடுகளின் தேவையை நிறைவேற்றுவதற்கான நீர்மையைப் பொறுத்து சில எடுப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு நிருவாக இயக்குநர்கள் முன்வர வேண்டும் என்ற தீர்மானத்தை ஆளுநர் குழு 1967 செப்டம்பரில் ரியோ டீ ஜானிரோவில் (Rio de Janerio) நடைபெற்ற இருபத்து இரண்டாவது ஆண்டுக் கூட்டத்தில் நிறைவேற்றியது. நிருவாக இயக்குநர்களும் அவ்வாறே சாசன விதிகளில் திருத்தங்கள் செய்து 1968 ஏப்ரலில் அறிக்கை ஒன்றினைத் தாக்கல் செய்தனர். ஆளுநர் குழுவும் அவ்வறிக்கையினை ஏற்றுக்கொண்டு 1969 மே மாதத்தில் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியது.

திருத்தப்பட்ட விதிகளின்படி, நிதியமைப்பின் நடவடிக்கைகளனைத்தும் இரண்டு தனித்த கணக்குகளின் கீழே நடைபெற வேண்டும் என்ற நிலைவந்தது. உறுப்பினர் நாடுகளுக்கு அன்னியச் செலாவணியை விற்றிடும் நடவடிக்கை உட்பட நடப்பில் இருந்த எல்லா நடவடிக்கைகளும் பேரங்களும் பொதுக் கணக்கு (General Account) மூலம் நடைபெற வேண்டும். சிறப்பு எடுப்பு உரிமைகளைச் சார்ந்த நடவடிக்கைகளும் பேரங்களும் சிறப்பு எடுப்புக் கணக்கின் (Special Drawing Account) கீழ் வரவேண்டும். சிறப்பு எடுப்பு உரிமைகள் (SDR) திட்டத்தின்படி, ஒவ்வோர் உறுப்பினர் நாடும் விரும்பினால் சிறப்பு எடுப்புக் கணக்கில் கலந்துகொள்ளலாம். அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பற்றுக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ள உறுப்பினர் நாடு SDR திட்டத்தில் கலந்து கொண்டிருக்குமேயானால், அவ்வாறு கலந்து கொண்டிருக்கும் மற்றொரு நாட்டிற்குத் தனது சிறப்பு எடுப்பு உரிமைகளை மாற்றிக் கொடுத்துவிட்டு, அதற்கு ஈடாக மாற்று உடைய செலாவணிகளைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு சிறப்பு எடுப்பு உரிமைகளை மற்ற நாடுகளுடன் மாற்றிக்கொள்வது, அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பற்றுக் குறை நிலவும் பொழுதுதான் அனுமதிக்கப்படும்; அல்லது சேர்த்து வைத்திருக்கும் காப்புகளில் நெருக்கடி ஏற்படும்பொழுது சிறப்பு எடுப்பு உரிமைகளை மாற்றிக்கொள்வது அனுமதிக்கப்படும்.

இருந்தபோதிலும், செலுத்து நிலையிலோ அல்லது காப்புகளிலோ நெருக்கடி ஏதும் ஏற்படாத போதும்கூட உறுப்பினர் நாடு சிறப்பு எடுப்பு உரிமைகளை மற்ற நாடுகளுடன் மாற்றிக் கொண்டால் அது விவகாரம் ஆக்கப்படமாட்டாது. சுருங்கச் சொன்னால், SDR எனப்படும் சிறப்பு எடுப்பு உரிமையானது நிபந்தனையற்ற ஒரு நீர்மையாகும். மேலும் தனது SDR-ஐ ஓர் உறுப்பினர் நாடு இறுதிவரையில் பயன்படுத்தக்கூடும். அது எக் காரியத்திற்குப் பயனாகிறது என்ற கேள்வியை எழுப்பிட வியலாது. என்றாலும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக ஒரு குறிப்பிட்ட சராசரி அளவிற்குமேல் SDR-ஐப் பயன்படுத்தினால், அவ்வாறு பயன்படுத்திடும் நாடு, தனது இருப்புகளின் அளவினை மீண்டும் குறிப்பிட்ட சராசரி மட்டத்திற்கு உயர்த்திட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு நாடு தனது SDR-ஐ மாற்றி வேறொரு நாட்டிற்குத் தந்து, அந்த நாட்டிடமிருந்து மாற்றுக்குரிய செலாவணியைப் பெறலாம் என்று மேலே குறிப்பிட்டுள்ளோம். அச் செலாவணி, SDR-ஐப் பெற்ற நாட்டின் செலாவணியாகவோ அல்லது மற்ற நாடுகளின் செலாவணியாகவோ அமையலாம். எப்படி இருப்பினும், சிறப்பு எடுப்பு உரிமையை மாற்றிக் கொடுத்த நாட்டின் தேவையை அனுசரித்தே மாற்றுக்குரிய செலாவணியை அளித்திடவேண்டும்.

சிறப்பு எடுப்பு உரிமைத் திட்டத்தில் கலந்துகொள்ளும் ஒவ்வோர் உறுப்பினர் நாட்டின் பரப்பளவு, பொருளாதார பலம் ஆகியவற்றைப் பொறுத்துப் புதிய காப்புச் சொத்துகள் ஒதுக்கப்படுகின்றன. 1970ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 3414 மில்லியன் டாலர்கள் முதலில் ஒதுக்கப்பட்டன; 104 உறுப்பினர் நாடுகளுக்கு SDR ஒதுக்கப்பட்டன. இன்னும் 6000 மில்லியன் டாலர்கள் கொண்ட இரண்டு பகிர்வுகள் 1971, 1972ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டன. சிறப்பு எடுப்பு உரிமைகளில் இந்தியாவிற்குக் கிடைத்த பங்கு 126 மில்லியன் டாலர்களாகும். அமெரிக்காவிற்கே மிகப் பெரிய பங்கு அதாவது 866·88 மில்லியன் டாலர்கள் கிடைத்தது. 1969 ஆம் ஆண்டு இறுதியில் ஒவ்வொரு நாட்டிற்கும் கிடைத்த பங்கு 'கோட்டா'வில் 16·8 சதவீதமாகும். சிறப்பு எடுப்பு உரிமைகள் எனும் இப் புதிய திட்டம் நன்கு செயல்பட்டு வருகிறது; உறுப்பினர் நாடுகள் இப் புது உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றனர்.

மேற்கோள் நூற்பட்டியல்

(Bibliography)

(1) *American Economic Association:* 'Readings in International Economics.'

(2) *Caves, Richard, E.:* 'Trade and Economic Structure-Models and Methods.'

(3) *Crump; Norman:* 'The ABC of Foreign Exchange.'

(4) *Ellsworth, P. T.:* 'The International Economy.'

(5) *Einzig, Paul:* 'Exchange Control' (London 1934).

(6) *Enke; Stephen and Salera; Virgil:* 'International Economics' (Third Edition).

(7) *Gupta, K. R.:* 'International Economics.'

(8) *Haberler, Gottfried:* 'The Theory of International Trade.'

(9) *Halm, G. N.:* 'Monetary Theory.'

(10) *Harrod, R. F.:* 'International Economics.'

(11) IMF Annual Reports and Staff Papers.

(12) *Jacobsson; Per:* 'International Monetary Problems 1957-63.'

(13) *Kindleberger, Charles, P.:* 'International Economics.'

(14) *Machlup, Fritz:* 'International Monetary Economics.'

(15) *Meiyer, Gerald, M,:* 'International Trade and Development.'

(16) *Ohlin, Bertil:* 'Interregional and International Trade.'

(17) *Ray, Prasanta Kumar & Kundu, Kunja Bihari:* 'International Economics-Pure Theory and Trade Policy.'

(18) *Scammel, W. M.:* 'International Monetary Policy.'

(19) *Taussig, F. W.:* 'International Trade.'

(20) *Viner, Jacob:* 'Studies in the Theory of International Trade.'

(21) *Wasserman, Max J. & Hultman, Charles, W.:* 'Modern International Economics-A Balance of Payments Approach.'

கலைச்சொற்கள்

A

Absolute price — முழு விலை
Advalorem duty — பெறுமான விகிதத் தீர்வை
Assumption — எடுகோள்; பாவனை
Availability — கிடைப்பு

B

Balance of payments — அயல்நாட்டுச் செலுத்துநிலை; அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை
Balance of trade — அயல்நாட்டு வாணிபநிலை; வாணிபக் கொடுப்பல்நிலை
Balances — இருப்புகள்
Balance sheet — இருப்புநிலை ஏடு
Base year — தள ஆண்டு
Blocked accounts — முடங்கிய கணக்கு வைப்பு
Boom — (பொருளாதாரப்) பூரிப்பு
Bounties — ஊக்கக் கொடைகள்
Business cycle — வாணிபச் சுழல்

C

Capital account — முதல் கணக்கு; மூலதனக் கணக்கு
Capital goods — முதற்பொருள்கள்; மூலதனப் பொருள்கள்; முதன்மைப் பொருள்கள்
Capital intensive industry — மூலதனச்செறிவுள்ள தொழில்
Capital formation — முதலாக்கம்
Cash ratio — ரொக்க விகிதம்
Claims — உரிமைப் பங்குகள்
Classical economists — தொன்மைப் பொருளியலார்
Clearing house — கணக்குத் தீர்வகம்
Comparative advantage — ஒப்புமைத் தகுதி; [illegible] தகுதி

Comparative difference — ஒப்புமைசார் வேறுபாடு; தராதர வேறுபாடு
Conventional tariff — மரபுவழிச் சுங்கவரி
Convertibility — மாற்றுரிமை
Costs of transfer — இடமாற்றுச் செலவுகள்
Credit items — வரவினங்கள்
Current account — நடப்புக் கணக்கு
Current year — நடப்பாண்டு
Customs duties — சுங்கத் தீர்வைகள்

D

Debit items — பற்று; செலவினங்கள்
Deflation — பண வாட்டம்
Demonstration effect — காட்சி விளைவு
Deposits — வைப்புகள்
Disequilibrium — சமநிலையின்மை
Dividend — ஆதாயப்பங்கு
Double-entry accounting — இருமடிப் பதிப்புக் கணக்கு முறை
Dumping — திணிப்பு

E

Equal difference in cost — உற்பத்திச் செலவில் சம அளவு வேறுபாடு
Equilibrium — சமநிலை
Errors and omissions — தவறுதல்களும் விடுபட்டவைகளும்
Excess capacity — எச்ச வல்லமை
Exchange clearing — நாணயமாற்று விடுவிப்பு
Exchange control — நாணயமாற்றுக் கட்டுப்பாடு
Exchange Equalisation Account — மாற்றுச் சமனுக்கல் கணக்கு
Exchange rate — மாற்றுவீதம்
Exchange restrictions — நாணயமாற்றுத் தடைகள்
Exchange Stabilisation Fund — மாற்று நிலையாக்க நிதி
Excise duty — ஆயத் தீர்வை
Export price index — ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்
External diseconomies — புறச் சிக்கன இழப்புகள்
External economies — புறச் சிக்கனங்கள்

F

Factor endowments — உற்பத்திக் காரணிப்பேறு
Factor prices — உற்பத்திக் காரணி விலைகள்
Factor proportions — உற்பத்திக் காரணி வீதாச் சாரங்கள்
Fashion — தினுசு
Foreign exchange — அன்னியச் செலாவணி
Free trade — தடையிலா வாணிபம்
Full employment — வேலை நிறைவு

G

Gold certificates — பொன் பத்திரங்கள்
Gold export point — பொன் ஏற்றுமதி எல்லை
Gold import point — பொன் இறக்குமதி எல்லை
Grants — மான்யங்கள்

I

Imperfect competition — நிறைகுறைப் போட்டி
Import licenses — இறக்குமதி லைசென்சுகள்
Import embargoes — இறக்குமதித் தடைகள்
Import price index — இறக்குமதி விலைக் குறியீட்டெண்
Import substitutes — இறக்குமதிப் பதிலிகள்
Inconvertible paper currency — மாற்றவியலாத் தாள் நாணயம்
Indifference curves — சமநோக்குக் கோடுகள்
Infant industry case — இளம் தொழில் நிகழ்வினம்
Infrastructure project — உள்ளமைப்புத் திட்டங்கள்
Inputs — உள்ளிடுகைகள்
Intensities — செறிவுகள்
Internal economies — அகச் சிக்கனங்கள்
International division of labour — பன்னாட்டு வேலைப் பகுப்பு
International liquidity — பன்னாட்டு நீர்மை
International Monetary Found — பன்னாட்டுச் செலாவணி நிதி
International trade — பன்னாட்டு வாணிபம்
Intervention — இடையீடு
Inventories — இருப்புகள்
Invisible items — புலனாகா உருப்படிகள்

L

Labour content — உழைப்பு உட்கிடை
Labour intensive industry — உழைப்புச் செறிவுள்ள தொழில்
Lobour theory of value — உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாடு
Labour units — உழைப்பலகுகள்
Laissez faire — தலையிடாமை
Law of comparative advantage — ஒப்புமைத் (தராதர) தகுதிக் கோட்பாடு
" comparative returns — ஒப்புமை விளைவு விதி
" constant cost — மாறாச் செலவு விதி
" constant returns — மாறா விளைவு விதி
" diminishing cost — குறைந்துசெல் செலவு விதி
" diminishing marginal utility — குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி
Law of increasing cost — வளர்ந்துசெல் செலவு விதி
Leakage — கசிவு
Licence — வாணிப இணக்க ஆணை; சட்ட ஒதுக்கீடு; அனுமதி
Liquidity, primary — முதன்மை நீர்மை
" , secondary — துணைமை நீர்மை
Local authorities — தல ஆட்சியினர்; உள்ளாட்சியினர்
Lower gold point — கீழ் பொன் எல்லை

M

Macro-economics — தொகுதிப் பொருளாதாரம்
Managed currency system — நிருவகிக்கப்பெறும் நாணய அமைப்பு
Manufactured goods — பொறிவழிப் பண்டங்கள்
Marginal disutility — இறுதிநிலைப் பயன்பாட்டிழப்பு
Marginal rate of substitution — இறுதிநிலைப் பதிலீட்டுவீதம்
Merchandise — வாணிகச் சரக்கு
Mint parity theory — தங்கசாலைச் சமன்பாட்டுக் கோட்பாடு
Model — மாதிரியம்
Multiple column tariff — பலபத்தி சுங்கவரி
Multiple exchange rates — ஒன்றுக்கு மேற்பட்ட (பலவாகிய) மாற்று வீதமுறைகள்

O

Offer curve	—	விருப்பப் பரிமாற்றக் கோடு
Offer price	—	வழங்குவிலை
Open market operations	—	வெளி அங்காடி நடவடிக்கைகள்
Opportunity cost	—	பிறவாய்ப்புப் பெறுமானம்; இழந்த வாய்ப்புக் கிரயம்
Optimum size	—	உத்தம அளவு
Overvaluation	—	மிகைமதிப்பு

P

Paper gold	—	தாள் பொன்; காகிதப் பொன்
Partial equilibrium	—	அரைகுறைச் சமநிலை
Payments	—	செலுத்துகைகள்
Pegging down	—	கீழிறுக்குதல்
Pegging up	—	மேலிறுக்குதல்
Pegging operations	—	இறுக்குதல் நடவடிக்கைகள்
Perfect competition	—	நிறைவுப் போட்டி
Physical conditions of production	—	பருப்பொருள் சார் உற்பத்தி நிலைகள்
Policy of sterilisation of gold	—	பொன்னை விளைவற்றதாக்கிடும் திட்டம்
Positive theory	—	இயல்முறைக் கோட்பாடு
Postulate	—	முற்கோள்
Preference	—	விருப்பத் தேர்வு
Price discrimination	—	விலை வேறுபடுத்தல்
Price mechanism	—	விலைவிசை
Private costs	—	தனியார் செலவுகள்
Process	—	படிமுறை
Production function	—	உற்பத்தி சார்பு
Production pattern	—	உற்பத்தி வடிவமைவு
Production possibility curve	—	உற்பத்தி சாத்தியக்கோடு
Protection	—	காப்பு வாணிபம்
Public utilities	—	பொதுப் பயன்பாட்டுத் துறைகள்
Purchasing power parity theory	—	வாங்கும் சக்தி சமன்பாட்டுக் கோட்பாடு

Q

Quotas	—	'கோட்டாக்கள்'; கிடைப்புப் பங்குகள்

R

Recession — விலைமந்தம்; பின்னிறக்கம்
Reciprocal demand — பரிமாற்றத் தேவை; பரஸ்பரத் தேவை
Reserves — காப்புகள்
Retaliatory tariff — எதிரீட்டுக் காப்புவரி

S

Scarcity — கிடைப்பருமை; கிராக்கி
Scope — நோக்கெல்லை
Securities — கடனீட்டுப் பத்திரங்கள்
Self sufficiency — தன்னிறைவு
Short term treasury obligations — குறுங்கால கருவூலப் பொறுப்புகள்
Single column tariff — ஒற்றைப்பத்தி சுங்கவரி
Special drawing rights — சிறப்பு எடுப்பு உரிமைகள்
Specified duties — தனித்து வரையறுக்கப்பெற்ற வரிகள்
Specialisation — சிறப்புத் தேர்ச்சி; தேர்ச்சித் திறன்
Structure of production — உற்பத்திக் கட்டமைவு
Subsidies — உதவிக் கொடைகள்
Substance — உறுபொருள்
Superior technique — உயரிய நுட்ப வினைமுறை

T

Technical coefficient index — நுட்ப வினைமுறைக் குணகக் குறியீட்டெண்
Technology — தொழில் நுண்ணியல்; தொழில் நுட்பத்திறன்
Terms of trade:
Commodity — பொருள்சார் வாணிப வீதம்
Double factoral — இரட்டைக் காரணி வாணிப வீதம்
Gross barter — மொத்தப் பண்டமாற்று வாணிப வீதம்
Income — வருமான வாணிப வீதம்
Labour — உழைப்புசார் வாணிப வீதம்
Net barter — நிகர பண்டமாற்று வாணிப வீதம்

Terms of trade—

Real cost — உண்மைச் செலவு வாணிப வீதம்

Single factoral — ஒற்றைக் காரணி வாணிப வீதம்

Theory of absolute advantage — முழுமைத் தகுதிக் கோட்பாடு

" comparative cost — ஒப்புமைச் செலவுக் கோட்பாடு; தராதரச் செலவுக் கோட்பாடு

" opportunity cost — பிறவாய்ப்புப் பெறுமான கோட்பாடு; இழந்த வாய்ப்புக் கிரயக் கோட்பாடு

Time lag — காலப் பின்னீடு

Time period — கால நீட்சி

Transfer moratoria — அன்னியச் செலாவணிக் கடன் திருப்புதல் தவணை முறை

Transport cost — கடத்துச் செலவு; போக்குவரத்துச் செலவு

Treasury bills — கருவூல உண்டியல்கள்

U

Undervaluation — குறைமதிப்பு

Upper gold point — மேல் பொன் எல்லை

V

Visible items — புலனாகும் உருப்படிகள்

பொருட்குறிப்பகராதி

அ

அயல்நாட்டுச் செலுத்துநிலை :
- உள் உறுப்புக்கள், 229
- ஒருமுக மாற்றுக் கணக்கு, 232
- சமனாக்கல், 234–239
- நடப்புக் கணக்கு, 230–231, 236–237
- பதிவு செய்யப்படாத பேரங்கள், 232
- பொருள் விளக்கம், 227–229
- முக்கியத்துவம், 233–234
- மூதல் கணக்கு, 231–232, 237–238

அயல்நாட்டு வாணிபநிலை, 235

அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கோட்பாடு, 276–277
- ஈடுசெய் நிதியாக்கம், 246
- சமநிலை மாற்றுவீதம், 259–263
- சமநிலையின்மைக் கோட்பாடுகள் :
  - உற்பத்தித்திறன் வளர்ச்சி வேறுபாட்டுக் கோட்பாடு, 255–256
  - காட்சி விளைவுக் கோட்பாடு, 254–255
  - வருமானக் கோட்பாடு, 253
  - விலைக் கோட்பாடு, 251–253
- சமநிலையின்மை, வகைகள், 248–251
- கட்டுமானம் சார்ந்த, 251
- நெடுங்காலச் சார்புடைய, 250–251
- வாணிபச் சுழல் சார்ந்த, 249–250
- சமநிலை விதிகள், 247–248
- தங்கச்சாலை சமன்பாட்டு மாற்றுவீதக் கோட்பாடு, 263–270
- நாணய மதிப்புக் குறைப்பு, 242–244
- நாணய மாற்றுக் குறைப்பு, 241–242
- நிலையான மாற்றுவீதம், 278
- நெகிழ்வுள்ள மாற்றுவீதம், 278–279
- மூலதன இயக்கம், 245
- வாங்கும் சக்தி சமன்பாட்டுக் கோட்பாடு, 270–276

அரசு வாணிபம், 133–134
- அயல்நாட்டுச் செலுத்துநிலை வாதம், 147–149
- இளநிலைத் தொழில் வாதம், 141–142
- வருமானப் பகிர்வு வாதம், 143–144
- வறிய தொழிலாளர் வாதம், 144–146
- வாணிப வீத வாதம், 143
- விளைவுகள், 134–135
- வேலைவாய்ப்பு வாதம், 151–152
- பிழைநிறைந்த வாதங்கள், 149–151
- பொருளாதார வளர்ச்சி சார்ந்த வாதம், 149
- மனோயிலெஸ்கோவின் வாதம், 137

மிர்டலும் லீவிசும் தந்திடும் வாதம், 137
ஸ்டோல்பர் – சாமுவல்சன் தேற்றம், 146–147
ஹேகன் வாதம், 137–138

இ

இடையீடு : 210-211
பொன்னை விளைவற்றதாக் கிடும் திட்டம், 213
மாற்றுச் சமனுக்கல் கணக்கு, 211
மாற்று நிலையாக்க நிதி 211–212
இந்திய உதவி கிளப், 308

உ

உலகபாங்கு :
அமைப்பு, 302
கடன் வழங்கல், 304–306
குறிக்கோள்கள், 301–303
குறைபாடுகள், 308–309
தோற்றம், 300
நுட்பத்திறனுதவி, 306–308
மூலதனம், 303–304

ஒ

ஒப்புமைச் செலவுக் கோட்பாடு :
உழைப்பு மதிப்பீட்டுக் கோட்பாட்டு மூலம், 10, 12
உற்பத்திச் செலவில் ஒப்புமை வேறுபாடு, 13–14
உற்பத்திச் செலவில் சம அளவு வேறுபாடு, 15–16
உற்பத்திச் செலவில் முழு அளவு வேறுபாடு, 11–13
ஒப்புமைத் தகுதிக் கோட்பாடு, 13–14
கிரகாம் கருத்து, 25–28
முழுமைத் தகுதிக் கோட்பாடு, 12

க

காப்பு வாணிபம் :
இலக்கணம், 123–124
இறக்குமதித் தடை, 127
உதவிக்கொடை, 129–131
கோட்டாக்கள், 126–127
சுங்கவரி முறை, 124–126
திணிப்பு, 133
நாணயமாற்றுக் கட்டுப்பாடு, 127–128
பண்டங்களை விற்பதில் உடன்பாடு காணல், 133
பன்னாட்டுக் கார்ட்டல், 131–132
வகைகள், 124
கோட்டாக்கள் :
இருமுகக் கோட்டா, 186
இலக்கணம், 175–176
ஏற்றுமதி நாடுகளே லைசென்சு வழங்குதல், 184–185
ஒப்பிடுதல், சுங்கத் தீர்வையுடன், 191–192
ஒருமுக இறக்குமதிக் கோட்டா, 179–180, 186
சுங்கத்தீர்வை கோட்டா நிர்ணயம், 178
நிர்ணயித்தல், 176–177
பகிர்தல், ஏலம் எடுப்போருக்கு லைசென்சு வழங்கல், 180–182
பிற முறைகளில் லைசென்சு வழங்கல், 182–184
மறைமுகக் கோட்டாக்கள், 178–179
முழுமைக் கோட்டா, 178
விளைவுகள், 187–190

ச

சிறப்பு எடுப்பு உரிமைகள் : 319-321
சுங்கவரி :
அயல்நாட்டுச் செலுத்துநிலை விளைவு, 166–167

உதவிக் கொடைகள், *172–174*
ஊடு சுங்கவரி, *172*
எட்டு விளைவுகள், *156*
ஏற்றுமதி வரிகள், *169–172*
காப்பு விளைவு, *157, 159–161*
துய்ப்பு விளைவு, *161*
போட்டி விளைவு, *164–165*
மறுபகிர்வு விளைவு, *161–162*
வகைகள், *154–156*
வருமான விளைவு, *165*
வருவாய் விளைவு, *157 –159*
வாணிபவீத விளைவு, *162–164*
விலை விளைவு, *167*

த

தடையிலா வாணிபம் :
ஆடம் ஸ்மித் தரும் விளக்கம், *113–114*
குறைபாடுகள், *118–122*
சிறப்புத் தேர்ச்சியுறல், *114*
திறமையின் உத்தம நிலையினை அடைதல், *116–117*
நன்மைகள், *114–116*
போட்டியின் அடிப்படை, *114–115*

தலையிடாமை, *113*

திணிப்பு :
எதிரிடைத் திணிப்பு, *195*
சொல்பிரயோக விளக்கம், *194–195*
தடுப்பு நடவடிக்கைகள், *202–204*
வகைகள், *197–200*
விளைவுகள், *201–202*

ந

நாணயமாற்றுக் கட்டுப்பாடு :
குறிக்கோள்கள், *207–209*
பொருள் விளக்கம், *205*
வரலாற்றுச் சூழல், *206–207*
வழிமுறைகள், *209–210*

நாணயமாற்றுத் தடைகள், *214*
அன்னியச் செலாவணிக் கடன் திருப்பு தவணை, *223*
ஒன்றுக்கு மேற்பட்ட மாற்று வீத முறை, *215–221*
செலுத்துகை உடன்பாடுகள், *223*
நாணயமாற்று விடுவிப்பு, *222*
முடங்கிய கணக்கு வைப்பு, *214–215*

நீர்மை, அளவும் தன்மையும் :
ஆண்ட் விளக்கம், *315*
இதே பொருளில் வேறு சொற்கள், *313–314*
டச்சு பாங்கு அறிக்கையில், *314*
பன்னாட்டுச் செலவணி நிதியின் பங்கு, *318–319*
பன்னாட்டு நீர்மையில் அடங்குவன, *316-317*
போதாமை, *317–318*
பெர்ஜாகப்சன் விளக்கம், *314*
மாக்லப் விளக்கம், *314–316*

ப

பரிமாற்றத் தேவைக் கோட்பாடு, *77–81*
கிரகாம் விமர்சனம், *90–91*
மார்ஷல்-எட்ஜ்வர்த் விருப்பப் பரிமாற்றக் கோடு, *82–89*

பன்னாட்டுச் செலாவணி நிதி :
அமைப்பு முறை, *287–289*
இந்தியாவின் பங்கு, *298–299*
குறிக்கோள்கள், *286–287*
நிதியமைப்பின் உதவிகள், *295–296*
நிலையான மாற்றுவீதக் குறிக்கோள், *289–291*
பரிணம வளர்ச்சி, *283–285*
பொன் திட்டத்தினின்று வேறுபடுதல், *291–294*
மதிப்பீடு, *296–298*

பன்னாட்டு வாணிபமும் நாட்டு வாணிபமும் :
உற்பத்திச் சாதன இடப் பெயர்ச்சி, 2–3
பிரச்சினைகள், 1–2
வெவ்வேறு நாணயப் புழக்கம், 4–5
பன்னாட்டு வேலைப் பகுப்பு, 8–9
பிறவாய்ப்புப் பெறுமானக் கோட்பாடு :
மாறும் பிறவாய்ப்புப் பெறுமானம், 30–33
வளர்ந்துசெல் பிறவாய்ப்புப் பெறுமானம், 33–38

வ

வாணிப வீதங்கள் : 77, 80, 81
இரட்டைக் காரணி, 98, 103
உண்மைச் செலவு, 103
ஒற்றைக் காரணி, 98–103
நிகர பண்டமாற்று, 98–100
நிர்ணயிக்கும் காரணிகள், 92, 93
பயன்பாட்டு, 104
பண்டமாற்று, 77
புள்ளியியலின்படி அளத்தல்:
உழைப்புசார், 95–97
பொருள்சார், 94–97
ஜீவான்ஸ் கருத்து, 97–98
பொருளாதார முன்னேற்றத்தில், 105–110
வாணிப வீதங்கள்—
மொத்தப் பண்டமாற்று, 98
வருமான, 98

ஹ

ஹெக்ஷர்–ஓலின் கோட்பாடு :
உற்பத்திக் காரணிப்பேறு, 45–46
உற்பத்திச் சார்பு, 52–54
எட்ஜ்வர்த்–பவ்லே பெட்டி வரைபடம், 55
எடுகோள்கள், 43–44
ஒப்பந்தக் கோடு (காரணிப் பகிர்வுக் கோடு), 57
காரணிகளின் தராதரப் பேற்றினைக் கணித்தல், 61–68
காரணிப் பேற்றினைப் பொறுத்து உற்பத்தி, 68
காரணி–விலை சமனுதல், 73–75
காரணி வீதாசாரக் கோட்பாடு, 74
சம உற்பத்திக் கோடு, 52–54
பண்டங்களின் அளிப்பு, 50
பண்டங்களின் தேவை, 49
பன்மடங்குச் சந்தை விலை நிர்ணய, 42
பொதுச்சமநிலைக் கோட்பாடு, 48–50
மதிப்பீடு, 74–75
விஜனேல்ட்ஸ் கருத்து, 51–52